# இந்திய வரலாறு, கி.பி. 1707 வரை

**Unit – I**

இந்தியாவின் புவியியல் அமைப்பு – வேற்றுமையில் ஒற்றுமை – வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்கள் – சிந்து சமவெளி நாகரீகம்

**Unit – II**

வேதகால நாகரீகம் – ரிக் வேத காலம்

ஆரியர்களின் தோற்றம் – வருணாசிரமம் – சாதியமுறை சமயம் – சமுதாயம்

மகாஜனபத அரசுகளின் தோற்றம்

மத இயங்கங்கள் – சமணம் – புத்த மதங்கள் மௌரிய பேரரசு – சந்திரகுப்தர் – அசோகரும் புத்த மதமும் – மௌரிய நிர்வாகம் – கலை கட்டிடக் கலை

**Unit – III**

குப்தப் பேரரசு – முதலாம் சந்திரகுப்தர், சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர், குமாரகுப்தர், ஸ்கந்தகுப்தர்

குப்தர்களின் காலம் பொற்காலம்–கலை கட்டிடக் கலை– குப்தப் பேரரசின் வீழ்ச்சி

ஹர்ஷவர்தனர் – யுவான் சுவாங்

**Unit – IV**

கஜினி படையெடுப்புகள் – டெல்லி சுல்தானிய அரசின் தோற்றம்

அடிமை அம்சம் – கில்ஜி வம்சம் – லோடி வம்சம் – துக்ளக் வம்சம்

சுல்தான்களின் ஆட்சியில் – சமூக பொருளாதார நிலை , டெல்லி சுல்தான்களின் கலை கட்டிடக்கலை

**Unit – V**

முகலாயர்களின் வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்கள், பாபர் படையெடுப்பின் போது இந்தியாவின் நிலை, பாபரின் படையெடுப்பு, முகலாயப் பேரரசின் தோற்றம்,

ஹிமாயூன் செர்ஷா

அக்பரின் மதக்கொள்கை, இரண்டாம் பானிபட் போர், ஜஹாங்கிர், நூர்ஜஹானின் ஆட்சி முறை, ஷாஜகான் – ஔரங்கசீப் – மராட்டியர்களின் எழுச்சி

சிவாஜி – நிர்வாகம், சமூகப் பொருளாதார நிலை – முகலாயப் பேரரசின் நிர்வாகம் – கலை, கட்டிடக் கலை – முகலாயப் பேரரசின் வீழ்ச்சி

## இந்தியாவின் இயற்கை அமைப்பும் வரலாறும்

## (GEOGRAPHICAL FEATURES)

ஒரு நாட்டின் வரலாற்றில் புவியியல் அமைப்பு குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலு.துகிறது. அந்நாட்டின் மனித இனம், மொழி, தேசியம், வீரம், பண்பாடு ஆகியவற்றை ஆராய முற்படும்போது, அவைகள் புவியியல் அமைப்பினால் பாதிக்கப்பட்டிருப்பதை அறியலாம். எனவே, ஒரு நாட்டின் வரலாற்றைக் கற்குமுன் அந்நாட்டின் புவியியல் அமைப்பைத் தெரிந்து கொள்வது முக்கியமானதாகும். புவியியலும் வரலாறும் ஒன்றையொன்று பிரிக்கமுடியாதபடி இணைந்தே காணப்படுகின்றன.

இந்தியா ஒரு மாபெரும் நாடு. இதனை ஒரு ‘துணைக்கண்டம்’ என்கிறோம். ஆசியாவின் தென்கோடியில் அமைந்துள்ள தீபகற்பம்தான் இந்தியா. ஆசியாக் கண்டத்தின் மூன்று தீபகற்பங்களில் நடுநாயகமாக அமைந்துள்ளது இந்தியா. இந்த அமைப்பின் காரணமாக இந்தியாவுக்கும் பல ஆசிய நாடுகளுக்கும் வாணிகத் தொடர்பும், கலைத்தொடர்பும் இருந்து வந்தன. எனவே, இந்தயாவின் புவியியல் அமைப்பு எவ்வகையில் அரசியல் வரலாற்றிலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் பங்கு பெறுகின்றது என்பதை அறியலாம்.

**இந்தியாவின் எல்லைகளும், பரப்பும் :**

இந்தியாவின் வட எல்லையாக இமயமலைத் தொடர்கள் அமைந்துள்ளது. இம்மலைத் தொடர்கள் சீனாவையும் இந்தியாவையும் பிரிக்கின்றன. தீபகற்பத்தின் தெற்கில் இந்து மகாசமுத்திரம், கிழக்கில் வங்கக் கடலும், பர்மாவும், மேற்கில் அரபிக்கடலும், பாகிஸ்தானும் நம் நாட்டின் எல்லைகளாக உள்ளன.

வடக்கே இமயமலைத் தொடரிலிருந்து தெற்கே உள்ள இந்து மகாசமுத்திரம் வரை இந்தியாவின் நிலப்பரப்பு 32,87,263 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். வடக்கு தெற்காக இதன் நீளம் 3,214 கிலோ மீட்டர்கள். கிழக்கு மேற்காக இதன் மிக அதிகமான அகலம் 2,933 கிலோ மீட்டர்கள் ஆகும். பூமியின் பரப்பில் 2.4 சதவிகிதத்தை உள்ளடக்கியது. ஆனால், உலக மக்கள் தொகையில் 16% கொண்டுள்ளது. எனவேதான்

மிக விசாலமான நமது நாடு ஒரு ‘துணைக்கண்டம்’ (Sub-continent) என்று அழைக்கப்படுகிறது.

இந்தியா மிக விவிசத்திரமான புவியியல் கூறுகளை உடையது. பனிமூடிக் கிடக்கும் உயர்ந்த மலைகளும், வளம் பெருகி விளங்கும் சமமவளிகளும், மனித இனத்தன் காலடி காணாக் கடும் பாலைவனங்களும், அடர்ந்த காடுகளும், வெப்பமண்டலங்களும் குறை வெப்ப பகுதிகளும், இந்தியாவின் எல்லைக்குள் அடங்குகின்றன. இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவை நான்கு முக்கிய இயற்கை பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகள் பின்வருமாறு :

1. வடக்கே உள்ள இமயமலைத் தொடர்கள் பிரதேசம்
2. சிந்து–கங்கைச் சமவெளிப் பகுதிகள்
3. தக்காண பீட பூமி
4. தக்காண பீட பூமிக்கு கிழக்கேயும், மேற்கேயும் அமைந்துள்ள கடற்கரைச் சமவெளிகள்.

இவைகளை ஒன்றன் பின் ஒன்றாக விளக்கமாகக் காண்போம்.

**1. இமையமலைத் தொடர்கள் பிரதேசம் :**

இமயமலைத் தொடர்கள் இந்தியாவின் வட எல்லையாக அமைந்துள்ளன. இதன் நீளம் கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 2,500 கிலோ மீட்டர் உள்ளது. அகலம் 200 முதல் 250 கிலோ மீட்டர் வரை உள்ள இமயமலைப் பகுதிகளின் மொத்தப் பரப்பு 5,00,000 ச.கி.மீ. ஆகும். இமயமலை பல கணவாய்களையும், சிகரங்களையும் கொண்டது. இமயமலைத் தொடரின் வட மேற்கில் இந்துகுஷ் சுலைமான் மலைகளுக்கிடையே கைபர், போலன், குர்ரம், கோமல் முதலிய கணவாய்கள் உள்ளன. உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரம் இம்மலைத் தொடரில் உள்ளது. இதன் உயரம் 8,848 மீ ஆகும். மேலும், கஞ்சன் ஜங்கா, மகாலு, தவளகிரி, அன்னபூர்ணா, நந்தா தேவி, நங்கபர்வதம் ஆகிய சிகரங்களும் உண்டு. மேலும், காஷ்மீர் பீடபூமி, நேபாளப் பீடபூமி, ஷில்லாங் பீடபூமி ஆகியவைகளும் அமைந்துள்ளன. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகிய வற்றாத ஜுவ நதிகளின் பிறப்பிடமும் இமயமலைத் தொடரே ஆகும்.

இமயமலைத் தொடர் பிரதேசம் இந்திய வரலாற்றில் பெரும் பங்கு வகிக்கிறது. வரலாற்றின் போக்கிலும், பண்பாட்டு வளர்ச்சியிலும் அதன் தாக்கம் காணப்படுகிறது.

முதலாவதாக, இமயமலைத் தொடர்கள் நம் நாட்டிற்கு இயற்கை அரணாக உள்ளன. வெளிநாட்டினர் தரை மார்க்கமாக எளிதாக இந்தியா மீது படையெடுத்து வர முடியாது. அதே நேரத்தில் இந்தியர்களின் வெளி உலகத் தொடர்புக்கும் தடையாக இருந்து வந்திருக்கிறது.

இரண்டாவதாக, வடமேற்கில் உள்ள கணவாய்கள், நம் நாட்டிற்கும் மத்திய ஆசியாவிற்கும் ஒரு போக்குவரத்து மார்க்கமாக செயல்பட்டு வந்தன. அதன் வழியாக பல இன மக்கள் நம் நாட்டி. வந்து குடியேறினர். ஆனால், வேற்று நாடடினர் இந்தியாவின் மீது போர் தொடுக்கவும் இக்கணவாய்களே காரணமானது.

மூன்றாவதாக, இம்மலைத் தொடர்களிலிருந்து உற்பத்தியாகும் ஆறுகள் நாட்டுவளம் பெருக முக்கியக் காரணமாகும்.

கடைசியாக, நமது நாட்டின் மீது வீசும் பருவக் காற்றுகளை வடக்கேயும் மேற்கேயும் செல்லவிடாமல் தடுத்து இந்தியாவில் நல்ல மழை பெய்யச் செய்கிறது. மேலும் ஆசியாவிலிருந்து அடிக்கும் கடும் குளிர் காற்றை நம் நாட்டின் மீது வீசாதபடி தடுத்து விடுகின்றன.

இவ்வாறு இமயமலைத் தொடர்கள் இயற்கை அரணாக அமைந்ததோடல்லாமல், இந்திதிய அரசியல், பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியிலும், மாற்றங்களிலும் பெரும்பங்கு வகித்து வந்துள்ளது.

**2. சிந்து–கங்கை சமவெளிப் பகுதிகள் :**

சிந்து கங்கை சமவெளிப் பகுதிகள் பஞ்சாப் முதல் அஸ்ஸாம் வரை பரந்துள்ளது. இச்சமவெளி சுமார் 2,500 கிலோ மீட்டர் நீளமும், 200 முதல் 300 கிலோ மீட்டர் அகலமும் கொண்டது. இச்சமவெளியின் மேற்கே உள்ள தார் பாலைவனத்தைத் தவிர மற்ற பகுதிகள் மிகுந்த செழிப்புடையதாகக் காணப்படுகின்றன. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா

ஆகிய நதிகள் பாயும் இப்பிரதேசம், செழிப்பான மண்ணும், வளமும், செல்வமும் மிக்கதாக விளங்குகிறது. இங்கு மக்கள் தொகையும் மக்கள் நெருக்கமும் அதிகம்.

பெரும் நதிகளால் பயனடையும் அகன்ற சமவெளிகள் ஒரு நாட்டின் அரசியல் மேன்மைக்கும், பொருளாதார, கலை, பண்பாட்டு உயர்வுக்கும் சிறந்த காரணங்களாக அமைகின்றன. வரலாற்றில் பெருமை மிக்க நிகழ்ச்சிகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

உதாரணமாக, சிந்து நதிப் பாயும் பிரதேசத்தில்தான் பழமையும் பெருமையும் கொண்ட ‘ஹரப்பா நாகரிகம்’ இருந்து வந்தது. சிந்து கங்கைச் சமவெளிப் பகுதிகளில் தான் ‘ஆரிய நாகரிகம்’ சிறந்து விளங்கியது. பண்டைக்கால பண்பாடுகளின் உறைவிடமாகவும், கல்வி மையங்களாகவும் திகழ்ந்தது. இப்பிரதேசத்தில்தான் இந்திய வரலாற்றில் காணப்படும் பேரரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் காணமுடிகிறது. முக்கியமாக, மகதப் பேரரசு தோன்றியது கங்கை நதிச் சமவெளிப் பிரதேசத்தில்தான் ஆகும். இந்திய வரலாற்றின் போக்கையே மாற்றியமைத்த சிறப்பு மிக்க நகரங்களான டில்லி, வாரனாசி, பாடலிபுத்திரம், சாரனாத், அலகாபாத், காசி, கயா போன்ற நகரங்கள் சிந்து–கங்கை சமவெளிப் பகுதியிலேயே அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**3. தக்காண பீட பூமி :**

தக்காண பீடபூமி முக்கோண வடிவமுள்ளது. இதன் வடக்கே ‘விந்திய சாத்பூரா’ மலைத் தொடர்களும், மேற்கே ‘மேற்குத் தொடர்ச்சி மலைகளும்’, ‘கிழக்கு தொடர்ச்சி மலைகளும்’ அமைந்துள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள மிக உயரமான சிகரம் கேரளாவிலுள்ள ‘ஆணைமுடி’யாகும். இதன் உயரம் 2,695 மீட்டர் ஆகும்.

தக்காண பீடபூமி மிகப் பழமையானதும், மிகக் கடினமான பாறைகளாலும் ஆக்கப்பட்டது. இப்பீடபூமி மேற்கில் உயர்ந்தும், கிழக்கில் தாழ்ந்தும் காணப்படுகிறது. எனவே, மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் கோதாவரி, கிருஷ்ணா, வடபண்ணை, காவிரி, மகாநதி, தாமிரபரணி ஆகிய நதிகள் கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்கக் கடலில் கலக்கின்றன. இப்பீடபூமியின் வடகிழக்குப் பகுதி சற்று உயர்ந்துள்ளது. எனவே, இங்கு தோன்றும் நர்மதை, தபதி ஆகிய நதிகள் மேற்குமுகமாக ஓடி அரபிக் கடலில் கலக்கின்றன.

தக்காண பீடபூமி இந்திய வரலாற்றின் போக்கில் பெரும் பங்கு வகிக்கிறது. பல வகைகளில் சிறப்பித்துள்ளது. விந்திய சாத்பூரா மலைத் தொடர்கள் தென்னிந்திய வரலாற்றை வட இந்தியாவிலிருந்து பிரித்துத் தனிப்பட்ட வரலாறாகச் செய்கின்றன. வட இந்தியப் படையெடுப்பாளர்கள் தென்னாட்டிற்குள் நுழையவிடாமல் தடுத்து தென்னாட்டு வரலாறும், பண்பாடும் தனித்தன்மையுடன் விளங்க அவை மிகவும் உதவின. மேலும், கிருஷ்ணா, கோதாவரி நதிகள் பாயும் பிரதேசத்தில் பாமினி, விஜய நகர அரசுகள் தோன்றின. மேலும், காவிரி, வைகை, தாமிரபரணி, வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு ஆகிய நதிகள், இந்திய கலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன. பல்லவர்கள் இப்பகுதிகளிலே சிறப்பாக ஆட்சி செய்தனர். திராவிடப் பண்பாட்டின் பிறப்பிடமும் இப்பிரதேசமே ஆகும்.

**4. கடற்கரைப் பிரதேசங்கள் :**

இந்திய கடற்கரைப் பகுதிகளின் நீளம் **7516.6** கி.மீ. ஆகும். என்றாலும், இயற்கை துறைமுகங்கள் மிகவும் குறைவு. இந்தியக் கடற்கரை பிளவுகளும் மிகவும் குறைவு. கடலாதிக்கத்திலும், கடற்கரைப் பாதுகாப்பிலும் இந்திய அரசர்கள் எப்போதுமே அதிக கவனம் செலுத்தி வரவில்லை.

தெற்கிலுள்ள திராவிடர்கள் கடல் வாணிபத் துறையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை வரலாறு மூலலாக அறிகிறோம். பண்டைக் கால தமிழகம் கடலாதிக்கம் பெற்றிருந்ததினால் தான் ஈழ நாட்டிலிருந்து கீழ்த்திசை நாடுகள் வரைத் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் கீழ்த்திசை நாடுகளில் குடியேற்றங்கள் அமைக்கவும், பண்பாட்டுப் பரிமாற்றம் செய்து கொள்ளவும், இக்கடற்கரைப் பகுதிகளே பெரிலும் உதவி செய்தன.

**<u>இந்திய வரலாற்றில் புவியியலலின் தாக்கம் :</u>**

உலகிலுள்ள பிற நாடுகளைப் போலவே இந்திய வரலாற்றின் போக்கிலும் புவியியலின் தாக்கம் காணப்படுகிறது.

- முதலாவதாக, இந்தியாவின் பெரும் பரப்பளவு பல காலமாக இந்தியாவின் அரசியல் ஒற்றுமையைப் பாதித்தது. இயற்கையாக பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட

இந்தியா தனித்தனியாகவே இயங்கியது. **1947–ல்** சுதந்திரம் அடையும் வரை இந்தியா ஒரே தனிப்பட்ட அரசின் கீழ் அமைந்ததே இல்லை. அசோகர், அக்பர் போன்ற பேரரசர்கள் இந்திய அரசியல் ஒற்றுமைக்கு ஓரளவு முயற்சி செய்தனர். எனவே சுதந்திரமாக இயங்கிய பல நாடுகள் இந்திய வரலாற்றின் போக்கை பாதித்தது.

- இரண்டாவதாக, வட இந்தியா வட மேற்குப் பிரதேசங்களுடன் எல்லைத் தொடர்பு கொண்டிருந்ததால், அப்பகுதியிலுள்ள கைபர், போலன், டோக்கி ஆகிய கணவாய் மார்க்கமாக பாரசீகர், கிரேக்கர், கூனர், துருக்கியர், மங்கோலியர் மற்றும் முகலாயர் நம் நாட்டின் மீது படையெடுத்தனர். இந்தியாவில் பேரரசுகளை நிறுவினர்.

- மூன்றாவதாக, செழிப்பான சிந்துநதிச் சமவெளிப் பிரதேசத்தில் சிறந்த நாகரிகம் தோன்றியது. பெரிய நகரங்கள் தோன்றி பண்பாடும் கலாச்சாரமும் பரவின.

- நான்காவதாக, விந்திய சாத்பூரா மலைத் தொடர்கள் இந்தியாவை இரு பகுதிகளாக பிரித்துவிட்டதால், வட இந்தியாவுக்கும், தென் இந்தியாவிற்குமிடையே நெருங்கிய அரசியல் பண்பாட்டு தொடர்பு ஏற்படாமல் போயிற்று.

- ஐந்தாவதாக, தென்னிந்திய புவியியல் அமை.பு, சுதந்திரமான அரசுகள் தோன்றி வளரக் காரணமாயின. தென்னிந்திய அரசர்கள் கடல் கடந்து அரசியல் வாணிகத் தொடர்பு கொண்டனர். கலாச்சாரத் தொடர்பும் ஏற்பட்டது. மேலும், புவியியல் அமைப்பே வட இந்தியக் கலாச்சாரம் தெ.னிந்தியாவில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாமல் தடுத்தது.

இவ்வாறு இந்திய புவியியல் அமைப்பானது இந்திய வரலற்றில் பெரும் மாற்றங்களையும், பாதிப்பையும் ஏற்படுத்தியது. எனவே, வரலாறும் புவியியலும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையது. ஒரு நாட்டின் அரசியல் வரலாறு, பண்பாட்டு வளர்ச்சி, பொருளாதார மேன்மை ஆகியவை புவியியலின் அடிப்படையில் தான் அமைகின்றன என்பதில் ஐயமில்லை.

## வேற்றுமையில் ஒற்றுமை

## (UNITY IN DIVERSITY)

இந்தியா உலகின் மிகப் பரந்த நாடுகளில் ஒன்றாகும். இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு **32,87,263** சதுர கி.மீ. ஆகும். சுமார் நூற்றி இரண்டு கோடி மக்கள் வசிக்கும் இந்தியாவில் வேற்றுமைகள் காணப்படுவதில் விசித்திரமில்லை. புவியியல் அமைப்பே இந்தியாவில் காணப்படும் வேற்றுமைகளுக்கு அடிப்படை ஆதாரம் ஆகும். அரசியல், கலாச்சாரம், மொழி, தட்ப வெப்பநிலை, இனம், பண்பாடு, மதம் ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடுகள் புவியியலின் அடிப்படையிலேயே தோன்றின. ஆனால், இவ்வளவு வேற்றுமை நிறைந்த இந்தியாவை உற்று நோக்கினால் ஓர் ஒற்றுமை இருப்பது தெரியவரும். இந்த அடிப்படை ஒற்றுமை உணர்ச்சி மிகவும் தொன்மையானது. இந்தியாவின் பெருமைக்கு சான்று பகருவது இந்த ஒற்றுமை உணர்வே. இதனைத்தான் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்று பண்டிடி ஜவகர்லால் நேரு பெருமைபடக் கூறினார்.

### 1. இந்தியாவில் காணப்படும் வேற்றுமைகள் :

இந்தியாவில் வெவ்வேறு தட்ப வெப்ப நிலைகளைக் கொண்ட பகுதிகள் காணப்படுகின்றன. பனி அதிகமாக உள்ள காஷ்மீரமும், வெயில் அதிகம் உள்ள ராஜபுதனப் பாலைவனமும் உண்டு. அதிகமாக மழை பெய்து ஆறுகள் பெருக்கெடுத்து பயிர்களுக்கும், உயிர்கட்கும் நாசம் விளைவிக்கும் நிலையும் உண்டு. அதே போல் பல ஆண்டுகளாக மழை பெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் அவதிப்படுவதும் உண்டு. இப்படி நேர்மாறான தட்பவெப்ப நிலைப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் வேற்றுமைகள் காணப்படுவது உண்மையே.

### 2. இன வேறுபாடுகள் :

இந்தியாவில் பல மக்களினத்தவர்கள் வாழ்கின்றனர். இந்தோ ஆரிய இனம், திராவிட இனம், மங்கோலிய இனம், ஆரிய–திராவிட இனம், மங்கோலிய திராவிட இனம், துருக்கிய–ஈரானிய இனம் போன்ற இன மக்கள் வாழ்கிறார்கள். இம்மக்களிடையே தனித்து வாழும் மரபுதான் மிகுந்து காணப்படுகிறது. ஒன்றி வாழும் இயல்பு காணப்படவில்லை. எளிதில் கடக்க முடியாத ஆறுகளும், மலைப் பிரதேசங்களும் காணப்பட்டதால் இந்த மக்கள் ஒரே பிரதேசத்தில் தொடர்ந்து வாழும் தன்மை பெற்றனர்.

**3. மொழி வேறுபாடுகள் :**

இந்தியாவில் இப்போது சுமார் **1,652** மொழிகள் பேசப்படுகின்றன. **18** முக்கிய மொழிகள் இந்திய அரசியல் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆரிய மொழிகள், திராவிட மொழிகள், முண்டா மொழிகள் ஆகியவைகளுடன், ஆங்கிலம், பாரசீகம், நேபாளி முதலிய மொழி பேசுவோரும் உண்டு. இவர்களில் பெரும்பாலோர் தாய் மொழி தவிர பிறமொழிகளை அறியமாட்டார்கள். இதனால் கருத்து பரிமாற்றங்கள் எளிதில் நிகழவில்லை. எனவேதான் ஒவ்வொரு மொழி பேசும் சமுதாயமும் பிரிந்தே இயங்கி வருகின்றன.

**4. சமய வேறுபாடுகள் :**

இந்தியா வைதீக இந்து மதம், புத்த மதம், சமண மதம், சீக்கிய மதம், சிவ சமயம், ஆதிக்குடிகளின் கிராமிய மதங்கள் என்று பலவகை மதங்களுக்குத் தாயகம். மேலும், இஸ்லாம், கிறிஸ்துவ சமயங்களும் பரவி உள்ளன. இம்மதங்களைப் பின்பற்றி வாழும் மக்கள் இந்தியாவில் ஒவ்வொரு பகுதிகளிலும் வாழ்கின்றனர். உலகின் பல நாடுகளுள், கிறிஸ்துவ மதம் அல்லது இஸ்லாம் என்று ஒரே மதமே பின்பற்றப்படுகிறது. ஆனால், அவ்வாறில்லாமல் இந்தியாவில் பல சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு சமயத்திலும் மத வெறியர்களும் உண்டு. மக்களிடையே மத உணர்வைத் தூண்டி, இந்த நாட்டை துண்டாட நினைக்கும் புல்லுருவிகளும் உண்டு.

**வேற்றுமையில் ஒற்றுமை :**

இவ்வாறு, இயற்கை அமைப்பிலும், தட்ப வெப்பத்திலும், இனத்திலும், மொழியிலும், சமயத்திலும் பண்பாட்டிலும் இந்தியா பிரிந்து காணப்பட்டாலும், இதற்கே உரித்தான சில தனித்தன்மைகள், பண்புகள் மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா ஒன்றுபட்டுக் காணப்படுகிறது. இதனையே பேராசிரியர் வின்செண்ட் ஸ்மித் ‘‘மேல் நோக்கில் வேறுபாடுகளை நிரம்பி இருப்பது போல் தோற்றும். மிகக் கவனமாக உற்று நோக்கினால் இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமையைத் தெளிவாகக் காணலாம்’’ என்கிறார்.

- முதலாவதாக, இந்தியாவின் புவியியல் அமைப்பு, இதற்குத் தெளிவான எல்லைலளைக் கொடுத்து புவியியல் ஒற்றுமையை ஏற்படுத்தி உள்ளது.

- இரண்டாவதாக, இந்து மதத் தத்துவங்கள் ஒற்றுமையை வளர்க்க உதவி செய்கிறது. இந்து சமயம் பெரும்பாலும் ஒரு சில பொது தார்மீகக் கருத்துக்களை உள்ளடக்கியிருத்தலால் மக்களிடையே பல பொதுவான நம்பிக்கைகள், வாழ்க்கைக் குறிக்கோள்கள் மதிப்பீட்டுப் பாணிகள் என்பவை காணப்படுகின்றன. இந்துக்களின் புனித யாத்திரையில் வட இந்தியப் புனிதத் தலங்களும், தென் இ.தியப் புனிதத் தலங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்து சமயத் தலைவர்கள் இந்தியா முழுவதும் மக்களால் மதிக்கப்படு.ன்றனர். இதனால் இந்தியாவில் சமய ஒற்றுமை நிலவுகிறது.

- மூன்றாவதாக, இந்திய இலக்கியங்களும், உபநிடதங்களும், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் தமிழ் தெலுங்கு பகுதிகளிலிருந்து தட்சசீலம் மேல்கங்கைச் சமவெளி வரை உள்ள மக்கள் அனைவரும் ஒருங்கே விரும்பி ஏற்றுக் கொள்கின்றனர். அதில் காணப்படும் சமயக் கருத்துக்கள் அனைத்து இந்துக்களுக்கு ஏற்புடையதாகி மனநிறைவளித்து வருகின்றன.

- நான்காவதாக, சமயவாதிகளைப் போலவே அரசியல் ஞானிகளும் இவ்வொருமைபாட்டு உணர்ச்சியை கருத்தில் கொண்டிருந்தார்கள், பேரரசர்களான சந்திரகுப்த மௌரியர், சமுத்திரகுப்தர், அக்பர் போன்றோர் அரசியல் ஒற்றுமைக்காக தென்னியந்தியா வரை போர் தொடுத்தார்கள். இந்திய அரசியல் தலைவர்கள் இந்திய மக்கள் எல்லோராலும் மதிக்கப்படுகிறார்கள். இதனால் இந்தியாவில் அரசியல் ஒற்றுமை நிலவுகிறது. ஆனால், சாதி வெறி, சமய வெறி, இன வெறி, மொழி வெறி ஆகியவைகள் இந்திய ஒற்றுமைக்கு தடையாக உள்ளன.

- ஐந்தாவதாக, முகலாயரும் ஆங்கிலேயரும் ஒரே மாதிரியான நிர்வாக முறையை உருவாக்கி இந்தியாவின் ஒற்றுமைக்கு உதவி செய்துள்ளார்கள். ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பித்த காத்திலிருந்தே பொதுவான ஆட்சி நிலையங்கள், கல்வி முறைகள், சட்டங்கள் புகுத்தப்பட்டு இந்தியாவை ஒற்றுமைப்படுத்தினாகள். மேலும்,

ஆங்கில மொழியே ஆட்சி மொழி ஆக்கப்பட்டு, அதன் மூலமே கல்வி கற்பிக்கப்பட்டதால் இந்திய மக்கள் அனைவரும் ஒருவரோடொருவர் எளிதில் பேசவும், கருத்துப் பரிமாற்றம் செய்யவும் வாய்ப்பு ஏற்பட்டது.

- ஆறாவதாக, இந்திய விடுதலைப் போராட்டம் 'இந்தியன்' என்ற உணர்வை ஒவ்வொரு இந்தியனிடத்திலும் தோற்றுவித்தது. அப்போது இந்தியர் அனைவரும் ஒன்றாகவே நினைத்தனர், ஒன்றாகவே செயல்பட்டனர். இதன் மூலம் இந்தியாவில் 'நாம் அனைவரும் இந்தியர்' என்ற ஒற்றுமை எண்ணம் நிலவுகிறது.

இவ்வாறு, இந்தியர்கள் இனம், மொழி, சமயம், பழக்க வழக்கங்கள் முதலிய பல வகைகளிலும் வேறுபட்டுக் காணப்பட்டாலும் தேசிய உணர்வால், பண்பாட்டால் ஒற்றுமையாகச் செயல்படுகின்றனர். இவ்வளவு பெரிய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு இந்தியப் பண்பாடே அடித்தளமாக அமைந்திருந்தது. நாம் அனைவரும் இந்தியர் என்ற நாட்டுப்பற்று மக்களிடையே நிலவி வருகிறது. தேச ஒற்றுமையை சீர்குலைக்கும் தீய சக்திகளும் இல்லாமல் இல்லை. சாதி வெறி, சமய வெறி, இன வெறி, மொழி வெறி ஆகியவைகள் தடையாக உள்ளன. தேச ஒற்றுமைக்கான தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து, தேசிய ஒருமைப்பாடு இந்தியர்களிடையே மென்மேலும் வளர்தல் மிகவும் அவசியம்.

## இந்திய வரலாற்றுச் சான்றுகள் (SOURCES)

ஒரு நாட்டின் வரலாறு அந்த நாட்டில் கிடைக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது. ஆதாரங்களின் துணை கொண்டு பழைய நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் காட்டுவதே வரலாறு ஆகும். இந்தியர்கட்கு முறையான வரலற்று ஆதாரங்கள் கிடையாது என்றும், அவர்களுக்கு வராற்றைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் கிடையாது என்றும் சில மேல் நாட்டு ஆசிரியர்கள் கூறகிறார்கள். இது ஓரளவுக்கு உண்மையாக இருந்த போதிலும் அதன் கடந்த கால வரலாற்றைச் செம்மைப்படுத்தி வரலாற்று ஆதாரங்கள் பலலகைப்பட்டதுமன்றி ஏராளமாகவும் கிடைக்கின்றன.

இந்தியாவின் வரலாற்றைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்கள் கி.மு.650–லிருந்தே நமக்குக் கிடைக்கின்றன. ஆனால், அவை ஒருங்கிணைக்கப்படாது சிதறிக் கிடைக்கின்றன. மேலும் கிடைக்கின்ற சான்றுகளும் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. பொதுவாக வரலாற்று ஆதாரங்கள் இலக்கியச் சான்றுகள், தொல்பொருள் ஆய்வுச்சான்றுகள் என்று இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

**1. இலக்கியச் சான்றுகள் :**

**a) வேதங்கள் :**

இலக்கியச் சான்றுகளில் காலத்தால் முற்பட்டவை வேதங்கள் ஆகும். ரிக் வேதம், யசூர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம் ஆகிய நான்கு வேதங்களில் ரிக் வேதமே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இவைகளின் மூலம் அன்றைய சமுதாய நிலை, பொருளாதார நிலை, அரசியல் நிலை, வாழ்க்கை முறை ஆகியவை பற்றி அறிந்து கொள்ளலாம். 'வேதங்கட்கு உரை நடையில் எழுதப்பட்ட விளக்கங்களே பிராமணங்கள்' ஆகும். இப்பிரமாணங்கள் மூலம் பண்டைய சமயக் கோட்பாடுகளைப் பற்றி அறியலாம்.

**b) இதிகாசங்கள் :**

இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் ஓரளவு வரலாற்றுக்கு உதவுகின்றன. இவ்விரண்டு காப்பியங்களிலிருந்து அக்கால அரசியல் சமுதாய வாழ்வை அறியலாம். ஆரியருக்கும் ஆரியர் அல்லாதாருக்குமிடையே ஏற்பட்ட அரசியல் சமுதாயப் போராட்டங்களைப் பற்றி அறிய உதவுகிறது. இவை அநேகமாக கி.மு. இரண்டு இல்லது மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**c) புராணங்கள் :**

காப்பியங்கள் காலத்திலிருந்து புத்தரின் காலம் வரையிலான இந்திய வரலாற்றைப் புராணங்கள் மூலமாக அறியலாம். புராணங்களின் எண்ணிக்கை பதினெட்டு ஆகும். அவைகளில் முக்கியமானவை, வாயு புராணம், அக்னி புராணம், பிரம்ம புராணம், விஷ்ணு புராணம், ஸ்கந்த புராணம், மத்சய புராணம் ஆகியவை ஆகும். பண்டைய மன்னர்களின் பெயர்களையும், அவர்களின் குலங்களையும், அவர்கள் ஆட்சி புரிந்த ஆண்டுகளையும் புராணங்கள் மூலம் அறிகிறோம். ஆரிய சமயத்தின் வளர்ச்சி, உருவ வழிபாடு, மூட நம்பிக்கைகள் ஆகியவற்றையும் புராணங்கள் மூலம் அறியலாம்.

**d) புத்த சமய இலக்கியங்கள் :**

புத்த சமய இலக்கியங்களும் இந்திய வரலாற்றை எழுத மிகவும் உதவுகின்றன. நம் நாட்டு பௌத்த இலக்கியங்களில் சுமார் **550** 'ஜாதகக் கதைகள்' தொகுக்கப்பட்டுள்ளன. மேலும், பாலி மொழியில் எழுதப்பட்ட பீடகங்கள் வினய பீடகா, சுத்த பீடகா, அபிதம்ம பீடகா, மகாவம்சம், தீபவம்சம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவைகள் மூலம் புத்த சமயம் தோன்றிய வரலாற்றை அறியலாம். அந்த நூற்றாண்டின் **(**கி.மு. **2** அல்லது **3–**ஆம் நூற்றாண்டு**)** நாகரிக வரலாற்றைப் பற்றியும் அறிய முடிகிறது.

**e) ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புகள் :**

ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்புகளில், காலக்கிரமமாக தொகுக்கப்பட்ட மரபு வழி அட்டவணைகளும், வாழ்க்கை சரிதங்களும் அடங்கும்.

பாதஞ்சலி எழுதிய 'மகாபாசியம்', கார்க்கி எழுதிய சம்கிதை, காளிதாசர் எழுதிய இரகுவம்சம் போன்ற வரலாறு அல்லாத நூல்களிலும் வரலாற்றுக்குப் பயனுள்ள செய்திகள் புதைந்து கிடக்கின்றன. விசாகத்தார் எழுதிய 'முத்ரா ராட்சசம்' சந்திரகுப்த மௌரியர் ஆட்சி பீடம் ஏறிய விதத்தை நாடகமாக விளக்குகிறது. சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரம் மௌரியர் கால அரசியல் சமுதாய அமைப்பை விளக்குகிறது. காளிதாசரின் சாகுந்தலம், மேகதூதம், குமார சம்பவம் ஆகியவற்றின் மூலம், குப்தர் கால சமுதாயம், கலை, சமயம், பொருளாதாரம் ஆகியவை பற்றி அறியலாம்.

கல்கணரின், ராஜதரங்கினி ஒரு வரலாற்று நூல் ஆகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காஷ்மீர் வரலாற்றை இதன் மூலம் அறியலாம். பண்டைய இந்தியாவின் காலக்கணிப்புக்கு இது மிகவும் துணை புரிகிறது. பாணம் எழுதிய ஹர்ஷ சரிதம், பேரரசர் ஹர்ஷரின் வாழ்க்கை நிகழ்ச்சித் தொகுப்பு ஆகும். ஹர்ஷரின் வரலாற்றை எழுத இந்நூல் பெரிதும் உதவுகிறது.

மேலும், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, எட்டுத் தொகை பத்துப் பாட்டு, பதினென்கீழ்க்கணக்கு ஆகிய நூல்களும், தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களும் சில வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றன.

**5. அயல் நாட்டவரின் நூல்கள் :**

இந்திய இலக்கியங்களைத் தவிர வெளிநாட்டவர் எழுதியுள்ள நூல்கள் இந்திய வரலாற்றுச் சான்றுகளாக அமைந்துள்ளன. கிரேக்கர்கள், திபெத்தியர்கள், உரோமர்கள், சீனர்கள், முதலியோர் இந்தியாவைப் பற்றிய யல செய்திகளைத் தங்கள் நூல்களில் எழுதி உள்ளனர்.

வரலாற்றின் தந்தை எனப்படும் 'ஹெரடோட்டஸ்' என்ற கிரேக்க வரலாற்றாசிரியர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே வட மேற்கு இந்தியாவின் மீது நடைபெற்ற பாரசீகப் படையெடுப்புகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். தனது 'வரலாறு' என்ற நூலில் இந்திய பாரசீகத் தொடர்பு, வட மேற்கு இந்தியாவின் ஆட்சிமுறை ஆகியவை பற்றி குறிப்பிட்டுள்ளர்.

மேலும் டாலமி, திசயஸ், கார்டியஸ், டியோடோரஸ், அர்ரியன், புளூடார்க் போன்றவர்கள் எழுதியயுள்ள நூல்களிலிருந்து வணிகத் தொடர்பும், அலெக்ஸாந்தரின் இந்தியப் படையெடுப்பு பற்றியும் அறிய முடிகிறது.

மகாவம்சம், தீபவம்சம் ஆகிய இலங்கை புத்தசமய நூல்கள் அசோகர் காலத்திலிருந்து இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றன. மார்க்கோ போலோவின் பயணக்குறிப்புகள் பழங்கால தமிழகத்தின் சமுதாய வாழ்வை தெரியப்படுத்துகின்றன.

கிரேக்க அரசின் செலுக்கஸ் நிக்கேட்டரின் தூதுவனாக சந்திரகுப்த மௌரியனின் அரசவையில் அமர்ந்த 'மெகஸ்தனிஸ்' இண்டிகா என்ற நூலை எழுதினார். அந்த நூல் இப்போது கிடைக்கவில்லை. ஆயினும் அதிலிருந்து பல பகுதிகளை வேறு ஆசிரியர்கள் எடுத்தாண்டுள்ளனர். அவைகள் மௌரியப் பேரரசின் அரசியல் சமூக நிறுவனங்கள் பற்றித் தெளிவான விளக்கம் தருகின்றன.

கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் அடையாளம் தெரியாத கிரேக்க அறிஞரால் எழுதப்பட்ட 'செங்கடல் செலவு' (Pripulus of the Erythrean sea) என்ற நூல் இந்தியத் துறைமுகங்கள் பற்றியும், அங்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பட்டியல்களையும் தெளிவாகக் கூறுகிறது.

அடுத்து சீன யாத்ரீகர்களின் நூல்கள் இந்திய வரலாற்றை எழுதப் பயன்படுகின்றன. பாஹியான் என்ற சீன யாத்ரீகர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சந்திரகுப்த விக்ரமாதித்தர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார். இவருடைய நூர்கள் சமய விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஹர்ஷர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு வந்த மற்றொரு சீன யாத்ரீகர் யுவான் சுவாங் ஆவார். இவர் ஹர்ஷரையும் அவர் கால இதர அரசர்களைப் பற்றியும் ஏராளமான குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளார்.

மேற்கண்ட இலக்கிய ஆதாரங்களில், வரலாற்றுக்குப் பயன்படும் செய்திகளையும், தொடர்ச்சியான வரலாற்றுக் குறிப்புகளையும் காண்பது அரிது. இதைத்தான் பேராசிரியர் ஆக்டன் ‘இலக்கிய மூலங்களிலிருந்து வரலாற்று உண்மைகளைப் பிரித்தெடுப்பது ஆற்றுப்படுகையில், தங்க நூல்களைப் பிரித்தெடுப்பது போலாகும்’’ என்கிறார். மேலும், இலக்கியங்கள் பல நம்பத்தகுந்த உண்மைகளைத் தந்தாலும் பாரபட்சமற்றது என்று கூற முடியாது. வேறு சிறந்த சான்றுகள் இல்லாததால் இவைகளையே வரலாற்று அறிஞ. பயன்படுத்த வேண்டியதாய் உள்ளது.

**II தொல் பொருள் ஆய்வுச் சான்றுகள் :**

இலக்கியச் சான்றுகளை விட சிறந்த சான்றுகளாக ஏற்றுக் கொள்ளப்படுபவை தொல்பொருள் ஆய்வுச் சான்றுகளாகும். தொல் பொருள் ஆய்வுச் சான்றுகளில் கல்வெட்டுகளும், நாணயங்களும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன.

**a) கல்வெட்டுகள் :**

இந்திய வரலாற்று ஆராய்ச்சிக்கு செதுக்கிய சாசனங்களும், கல்வெட்டுகளும் மிகவும் பயனுடையதாகும். வரலாற்றைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளிலும், பசும்பொன், இரும்பு, வெள்ளி, பித்தளை, களிமண், செங்கல், படிகங்கள் முதலியவற்றிலும் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செதுக்கப்பட்டுள்ள எழுத்து சான்றுகள் பாலி, சமஸ்கிருதம், பிராகிரித், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் காணப்படுகின்றன.

கல்வெட்டுகளிலிருந்து அரசர்கள் மக்களுக்கும் மத சார்புள்ள நிலையங்கட்கும் அளித்த நன்கொடைகள், பலவகையான விழாக்கள், அரசியல் சமய நிகழ்ச்சிகள் முதலிய பல செய்திகளை அறிய முடிகிறது. நமக்கு கிடைத்திருக்கும் கல்வெட்டுகளில் மிகவும் பழைமையானவை அசோகரின் கல்வெட்டுகளே அசோகரின் ஆணைகள், அவரது ஆட்சி முறை, சமயக் கருத்துக்கள் முதலிய பல தகவல்கள் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. ரும்மின் டேய் கல்வெட்டுகள் அசோகர் லும்பினிக்கு வருகை தந்ததை குறிப்பிடுகிறது. இதன் மூலம் புத்தரின் பிறப்பிடத்தைச் சரியாக குறிப்பிட முடிந்தது.

சமுத்திர குப்தரின் அலாகாபாத் கற்றூண் கல்வெட்டுகள் அவ்வரசரின் சாதனைகளை விளக்குகின்றன. கலிங்கத்தை ஆண்ட காரவேலரைப் பற்றிய ஹதிகும்பாக் கல்வெட்டும், பிரதிகார மன்னர் போஜரைப் பற்றிய குவாலியர் கல்வெட்டும் இந்திய வரலாற்றை எழுத பெரிதும் உதவுகின்றன. மேலும் உத்தரமேரூர் பட்டயங்கள் பண்டைய தமிழகத்தில் ஸ்தல ஆட்சி செயல்பட்ட விதத்தை விளக்குகின்றன. முதலாம் இராஜேந்திரனின் திருவேங்காட்டுப் பட்டயமும் சோழர்களைப் பற்றிய ஓரளவு செய்திகளைத் தருகின்றன.

**b) பண்டைய நாணயங்கள், முத்திரைகள் :**

பழங்கால இந்திய வரலாற்றை அறிவதற்கு நாணயங்களும், முத்திரைகளும் ஆதாரமாக விளங்குகின்றன. மன்னர்களின் காலத்தைக் கணிப்பதற்கும், அவர்களின் மதச் சமூகக் கோட்பாடுகளை அறிவதற்கும் நாணயங்கள் பெரிலும் உதவுகின்றன. நாணயங்கள் கண்டெடுக்கப்பட்ட இடங்களிலிருந்து அந்த நாட்டு மன்னர்களின் அரசு எல்லைகளையும் பரப்பையும் உணர முடியும். நாட்டின் செல்வம், பொருளாதாரம், கலைப்பண்பு ஆகியவற்றையும் அறியலாம்.

அலக்ஸாந்தரின் படையெடுப்புக்குப் பிறகு வெளியிடப்பட்ட நாணயங்களில் மன்னர்களின் பெயர்களும் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிலிருந்து சுமார் இரண்டு நூற்றாண்டு காலம் இந்தியப் பகுதிகளை ஆண்ட கிரேக்க மன்னர்களின் வரலாற்றை அறிந்து கொள்கிறோம். குஷாணர்களைப் பற்றி அறிய நமக்கு நாணயங்களே சான்று. குப்தர் கால நாணயங்கள் அதிகம் கிடைக்கின்றன. பல குப்த

நாணயங்களில் இந்து சமயக் கடவுள்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் குப்த மன்னர்கள் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், மற்ற மதங்கள் செல்வாக்கு குறைந்து வந்த நிலையையும் அறிய முடிகிறது.

தென்னிந்தியாவில் ‘அரிக்கமேட்டில்’ கண்டெடுக்கப்பட்ட ரோமானிய நாணயங்கள் ரோமப் பேரரசு, இந்தியாவுடன் கொண்ட வர்த்தகத் தொடர்புகளைத் தெளிவுபடுத்துகிறது. பொதுவாக நாணயங்கள், பேரரசுகள் மற்றும் சிற்றரசுகள் பற்றிய மதிப்புமிக்க வரலாற்றுச் செய்திகளைத் தருவதுடன், காலவரன்முறையை நிர்ணயிப்பதற்கு நல்ல ஆதாரமாகவும் பயன்படுகிறது.

**C) புதைபொருள் ஆராய்சி :**

புதை பொருள் ஆராய்ச்சியின் விளைவாக பூமிக்குள் புதைந்து கிடக்கும் கோவில்கள், அரண்மனைகள், உருவங்கள், நாணயங்கள், சிலைகள், ஆபரணங்கள், அழிந்து போன நகரங்கள் ஆகியவை புதை பொருள் ஆராய்ச்சியின் வாயிலாக் கண்டறியப்பட்டு, நாட்டின் கடந்த கால வரலாறு அறியப்படுகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய நாகரிகப் பண்புகளை உணரமுடிகிறது.

இந்திய நாகரிகத்தின் ஆரம்பமே வேதகாலம்தான் என்ற நிலையை **1924–**ல் சிந்து, பஞ்சாப் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சி மாற்றி அமைத்துவிட்டது. சுமார் **2,000** ஆண்டுகட்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிந்தது.

கனிஷ்கர் மன்னருடைய காலத்தை உறுதி செய்வதில் ஏற்பட்ட குழப்பத்தை புதைபொருள் ஆராய்ச்சி பெரும்பாலும் நீக்கிவிட்டது. இதனால் ‘காட்பீஸிஸ்’ மன்னர்கள் கனிஷ்கரது காலத்திற்கு முற்பட்டவர்கள் என்று முடிவு செய்யப்படுகிறது. பிராமணர், பௌத்தர், சமணர் ஆகியோரின் பலவகையான பண்டைய சின்னங்கள், அவரவர்களின் வரலாறுகளையும் நாகரிக முன்னேற்றத்தையும் விளக்குகின்றன. சுருங்கக் கூறின, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறிய யசறப்பான வழிகாட்டியாக இருக்கிறது. .மலும் வரலாற்று அறிஞனுக்கு பலவகைகளில் உதவுகின்றது.

**ஆதிச்சநல்லூர் :**

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலியிலிருந்து தென் கிழக்காக இருபத்தி நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இங்கு ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் சாகர் என்பவர் முதன் முதலாக அகழாய்வு செய்தார். பின்னர் பாரிசு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த லூயிஸ் லாபிக் மற்றும் அலக்சாந்தர் கிரி ஆகியோர் அகழாய்வு செய்து அதிக அளவில் மட்பாண்டங்கள், இரும்புப் பொருட்கள், எலும்புக் கூடுகள், மண்ணை ஓடுகள், வெண்கலப் பொருட்கள், முதுமக்கள் தாழிகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும், வெண்கலத்தால் செய்யப்பட்ட அணிகலன்கள், தங்கத்தால் செய்யப்பட்ட மகுடங்கள் மற்றும் எருமை, வெள்ளாடு, சேவல், புலி, யானை போன்றவற்றின் உருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**தாழிகள் :**

இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள தாழிகள் சிவப்பு நிறமும், கூம்பு வடிவத்தில் மூன்றடி விட்டமும் உடையன. சொர சொரப்பான அமைப்பு உடையவை. இதன் மூடிகள் தட்டையாகவும் கூம்பு வடிவத்துடனும் உள்ளன. சில தாழிகளின் உட்புறக்கழுத்துப் பகுதியில் ஆணி போன்ற அமைப்பு நீட்டிக் கொண்டுள்ளது. தாழிகளுக்குள்ளேயே சில மட்பாண்டங்கள் உள்ளன. ஒரு சில தாழிகளில் முழுமையான எலும்புக் கூடுகளும், சிலவற்றில் மண்டையோடுகள் மட்டும், சிலவற்றில் எலும்புக்கூட்டின் சில எலும்புகள் மட்டுமே காணப்படுகின்றன. இறந்தவர்கள் இந்த தாழிகளில் வைத்து புதைக்கப்பட்டார்கள்.

**மட்பாண்ட வகைகள் :**

ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் நல்ல நிலையில் உள் பல வகையான மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. பல வகையான கிண்ணங்ங்ள், குடுவைகள், ஜாடிகள் கிடைத்துள்ளன.

**வெண்கலப் பொருட்கள் :**

இங்கு கிடைத்துள்ள வெண்கலப் பொருட்கள் மிக உயர்ந்த வேலைப்பாட்டினை உடையவை. வெண்கலத்தில் செய்யப்பட்ட ஜாடிகள், வட்ட வடிவிலான கிண்ணங்கள், குடுவைகள், பல வகைப்பட்ட மிருகங்கள், கழுத்தணிகள், காப்புகள் ஆகியவை கிடைத்துள்ளன.

**இரும்புப் பொருட்கள் :**

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்டுள்ள இரும்புப் பொருட்கள் உயர்ந்த வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. இரும்பினால் செய்யப்பட்ட அம்புகள், வாள்கள், ஈட்டி, உடைவாள், எரிவேல், புல்லரிவாள், பட்டாக் கத்தி, மண்வெட்டி, கோடாரி, விளக்கு, திரிசூலங்கள் ஆகிய பொருட்கள் கிடைத்துள்ளன. இவை தவிர கல்லினால் செய்யப்பட்ட குழவிகள், மாவரைக்கும் கல், தங்கத்தில் செய்யப்பட்ட மகுடங்கள் காணப்படுகின்றன.

**எலும்புக் கூடுகள் :**

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளை ஆராய்ந்த சென்னை அருங்காட்சியகத்தைச் சேர்ந்த தர்சுடன் என்பவர் இங்கு வாழ்ந்த மக்கள் நீண்ட தாடை உடையவர்கள் என்று கூறியுள்ளார். எலியட் மிஸ்த் என்ற ஆராய்ச்சியாளர் ஒரு மண்டை ஒடு தொன்மை ஆஸ்ட்ராய்டு (Proto austraoid) என்றும், மற்றொன்று மண்டை ஒடு மத்திய தரைக் கடலைச் சார்ந்த சீன மக்களுடையது என்றும் கூறுகிறார், சிக்கர்மேன் என்பவர். ஒரு மண்டை ஓட்டை ஆராந்து அது திராவிட இனத்தைச் சேர்ந்தது என்கிறார். இதன் மூலம் இங்கே பல சீன மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்தோ அல்லது அருகாமையிலோ வாழ்ந்திருக்கலாம்.

இவ்வாறு ஆதிச்சநல்லூரில் செய்யப்பட்ட அகழாராய்ச்சியின் வாயிலாக கி.மு.1000–ஆம் ஆண்டின் முற்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் சிறப்பாக வாழ்ந்துள்ளனர் என்று அறிய முடிகிறது.

**அரிக்கமேடு : Arickamadu**

அரிக்கமேடு பாண்டிச்சேரிக்கு தெற்கில் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள காக்கயன் தோப்பு என்ற சிற்றூரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. 1837–ல் ஜி.தூப்ரே (G.Dubrai) என்ற பிரெஞ்சு ஆய்வாளர் இந்த இடத்தின் வரலாற்றுச் சிறப்பினை வெளிப்படுத்தினார். பின்னர் 1945–ல் ல்ப்போது இந்தியத் தொல்லியல் துறையின் இயக்குநராக இருந்த மார்டிமர் வீலர் என்பவர் தலைமையில அறிவியில் முறையில் அகழாய்வு நடைபெற்றது. அரிக்கமேடு என்பதற்கு ‘சிதைவுகளின் மேடு’ என்ற விளக்கத்தைக் கூறியவர் கே.ஆர்.சீனிவாசன் என்பவராவார். மேலும்,

நதிக்கரையின் மீதுள்ள மேடு என்றும், அறுகன் குன்று (Hills Arugan) என்றும் பல்வேறுபட்ட பொருள் கொள்ளப்படுகிறது. இங்கு நடைபெற்ற அகழ்வாய்வில் பல கட்டிடங்கள், ரோம், கிரேக்கப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்ப்ட்ட மட்கலங்கள், சங்கு, எலும்பு, கண்ணாடி, இரும்பு மற்றும் தங்கத்தினால் செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**கட்டிடங்கள் :**

அகழாய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்ட கட்டிடங்களில் முக்கியமானது பண்டகசாலை (Ware House) ஆகும். இது தடித்த சுவர்களை உடையது. வலிமையான செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன. மண்சாந்து கொண்டு கட்டப்பட்டுள்ளது. வெளிப்புறங்களின் மீது சுண்ணாம்புக் காரை பூசப்பட்டுள்ளது. சுவர்கள் நல்ல அடித்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளது. பிற கட்டிடங்களில் சாயம் தேய்க்கும் தொட்டிகள் காணப்படுகின்றன. இந்த தொட்டிகளும் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. தொட்டியிலிருந்து நீரை வெளியேற்ற தனி வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த தொட்டிகள் மெல்லிய துணிகளை சாயம் தேய்க்கப் பயன்பட்டிருக்கலாம்.

**மட்பாண்டங்கள் :**

பலவகையான மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து முக்கியமாக கிரேக்க, ரோமானியப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மட்கலங்கள் கிடைத்துள்ளன. முக்கியமாக ‘ஆம்போரா’ எனப்படும் இரு கைபிடி உள்ள ஜாடிகள், ரௌலட்டட் (Roulotted) என்ற வகை வட்டில்கள், அரிட்டைன் எனப்படும் சிவந்த மண்பூச்சு கொண்ட மட்கலங்கள் கிடைத்துள்ளன. இவைகள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் உபயோகத்தில் இருந்தவையாகும். இவை தவிர உள்நாட்டில் செய்யப்பட்ட கருப்பு, சிவப்பு மற்றும் சாம்பல் நிற மட்கலங்களும் அகழாய்வில் கிடைத்ததுள்ளன. இந்த மட்கலங்கள் மணல், களிமண், மைக்கா, உமி ஆகியவற்றைக் கொண்டு பிசைந்து செய்துள்ளனர்.

**மணிகள் : Beads**

அரிக்க மேட்டு அகழாய்வில் இருநூறுக்கும் அதிகமான மணிகள் கிடைத்துள்ளன. இவை சங்கு, எலும்பு, தங்கம், கண்ணாடி ஆகியவற்றால்

செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் நவரத்தின் சுகற்களால் ஆன மணிகளும், தங்கத்தினால் செய்யப்பட்ட முன்று மணிகளும், சுடுமண்ணால் செய்யப்பட்ட பல மணிகளும் கிடைத்துள்ளன.

**பிற பொருட்கள் :**

பல்வேறு நிலைகளில் சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவங்கள் கிடைத்துள்ளன. இவைகளில் சிறப்பானதாக ஒரு பெண் உருவத்தைக் குறிப்பிடலாம். இது கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். மேலும் சிவபெருமானின் தலைப்பகுதி, சதுரங்கக் காய்கள், வட்டமான விளையாட்டு வில்லைகள், காதணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளன.

இரும்புப் பொருட்களில் ஒரு மோதிரம், கத்தி, ஆணிகள் ஆகியவையும் தாமிரத்தால் ஆன ஒரு கிலுகிலுப்பையும், அம்மிக்கற்களும், குழவிக்கற்களும் கிடைத்துள்ளன.

பிராமி எழுத்துக் கீரல்களைக் கொண்ட மட்கல ஓடுகள் பல முதன் முதலாக இந்த அகழாய்வில் கிடைத்துள்ளன. இவை கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளின் எழுத்துமுறைப் பற்றி தெரிவிக்கின்றன. இந்த எழுத்துக்கள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

அரிக்க மேட்டு அகழாய்வினால் பல சிறப்பான முடிவுகள் தமிழ் நாட்டு வரலாற்றில் ஏற்பட்டுள்ளன. கிழக்குக் கடற்கரையில் ரோமானியர்களுடன் வாணிக உறவை மேற்கொண்டிருந்த ஒரு வாணிக மையமாகவும், வாணிபர்கள் தங்கியிருந்த இடமாகவும் அரிக்கமேடு இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது. இங்கு கி.மு.23–ல் ரோமானியக் குடியேற்றம் நடந்திருக்கலாம் என்று தெரிய வருகிறது. இதன் மூலம் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்படும் ரோமானியர் வணிகத் தொடர்புகளில் நிலவி வந்த கட்டிடக் கலையின் தன்மைகளையும் அறிய முடிகிறது. அரிக்கமேடு ஒரு சிறந்த வாணிப மையமாகவும், மணிகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடங்கள் இருந்த இடமாகவும், மெல்லிய துணிகளை உற்பத்தி செய்யும் மையமாகவும் இருந்துள்ளது என்பது அகழாய்வு மூலம் தெரியவருகிறது.

**III கால விளக்க முறை :**

“நிலநூலறிவம், தொடர்ச்சியான கால வரலாறும் வரலாற்றின் இரு கண்கள்” என்று கூறப்படுகிறது. நிகழ்ச்சிகளின் காலம் எத்துணை அளவு குழப்பமின்றி திட்டமாக அறிய முடிகிறதோ, அத்துணை அளவு வரலாற்றின் அடிப்படையான அமைப்பு உறுதியாகவும், அதன் பிற்கால வளர்ச்சி திண்மையாகவும் அவைகள் ஒன்றுக்கொன்று மாறுபடாமல் உள்ள நிலைமையையும் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

உதாரணமாக, அசோகச் சக்கரவர்த்தி புத்தருக்கு முன் உள்ளவர் என்று ஊகித்தால் வரலாறு எவ்விததாகப் பாதிக்கப்படும் என்று நாம் அறிவோம். காலக் கணிப்பு கடினமாயினும் வரலாற்று ஆராய்ச்சிக்கு அது இன்றியமையாதது. திட்டமான காலம் கிடைக்கப் பெறாததால் வட இந்திய வரலாறு மௌரியர் காலம் வரைத் தெளிவாக இல்லை என்பதை உணர வேண்டும்.

முதலாம் சந்திரகுப்தன் காலத்தில் அலெக்சாந்தருடைய பெயரும் செலுகஸ் நிகேட்டருடைய பெயரும் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருப்பதால் மௌரியரின் வரலாற்றுக் காலத்தைக் கணிப்பதற்கு ஏதுவாகிறது. அலெக்சாந்தரின் இந்திய வருகை கி.மு.326 என்று தெளிவாகக் கூறுவதால் சந்திரகுப்தரின் காலமும் அதையொட்டியே இருக்கவேண்டுமென்பதில் ஐயமில்லை.

இதேபோல சிரியநாட்டு மன்னனான அன்டியகஸ்தியாஸுக்கும், அசோகருக்கும் தொடர்பு இருந்ததின் காரணமாக அசோகரின் கால அளவு கணிப்பது எளிதாகிறது (கி.மு.261–246). மற்றும் சாதவாகனருடன் மேற்கு சத்ரபரும், சேரன் செங்குட்டுவனுடன் ஈழவேந்தனான முதலாம் கயவாகும், சமுத்திர குப்தருடன் ஈழநாட்டு மேகவர்ணனும் காலத்தால் ஒருமைப்படுவதால் அவர்களது வரலாற்றுக் காலங்களைக் கணிப்பது மிகவும் எளிதாகிறது. எனவே காலம் சரிவரக் கணிக்கப்படாவிடில் வரலாறு கண்ணிழந்து முகுகெலும்பு இல்லாததைப் போன்று தோற்றமளிக்கும்.

## சிந்து சமவெளி நாகரிகம் (INDUS VALLEY CIVILIZATION)

**முன்னுரை :**

நைல் நதிக்கரையில் எகிப்திய நாகரிகம், டைகீரிஸ், யூப்ரட்டீஸ் நதிகளின் கரைகளில் சுமேரிய, பாபிலோனிய, அசிரிய நாகரிகங்கள் தோன்றியது போல சிந்து நதியில் வலக்கரையில் மொகஞ்சதாரோவிலும், மேற்கு பஞ்சாபிலுள்ள ராவி நதிக்கரையிலுள்ள ஹரப்பா என்னுமிடத்திலும் சுமார் கி.மு.3000 ஆண்டுகட்கு முன் தோன்றியது சிந்து சமவெளி நாகரிகம் என்பதை புதை பொருள் ஆராய்ச்சியின் மூலம் அறிகிறோம். சிந்து சமவெளி நாகரிகத்தின் காலம் செம்புக்காலமாகும்.

**ஆதாரங்கள் : Sources**

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை நாம் இந்த நாகரிகத்தைப் பற்றி அறியவில்லை. கி.பி.1921–ஆம் ஆண்டு முதல் 1928–ஆம் ஆண்டு வரை நம் நாட்டின் தொல்பொருள் ஆராய்ச்சி இலாகா அதிகாாகள் அங்கு பூமியைத் தோண்டி ஆராய்ச்சி நடத்தினா். அப்போது புதையுண்ட நகரங்களை.ம் மக்கள் உபயோகித்த பாண்டங்களையும், கருவிகளையும், முத்திரைகளையும் கண்டெடுத்தனா். இந்த நாகரிகத்தைக் கண்டுபிடிக்க உதவிய பெருமை சா்.ஜான் மாா்ஷல், ஆா்.பி.தயாராம் சகானி, எம்.எஸ். வாட்ஸ், ஆா்.டி.பானா்ஜி, இ.ஜே. மேகே, சா் மாா்டிமா்வீலா் முதலிய சரித்திர ஆராய்ச்சியாளர்களையே சாரும். இவர்களின் கண்டுபிடிப்புகள் பற்றிய கட்டுரை London News என்ற செய்தித்தாளில் ஜாண் மாா்ஷல் என்பவரால் எழுதப்பட்ட பின்னரே எல்லோருக்கும் தெரியவந்தது. 1934–ல் மீ.எ.மஜும்தாா் என்பவர் அகழ்வராய்ச்சி செய்யப்பட்ட பதினைந்து இடங்களைப் பற்றி எழுதி நூலாக வெளியிட்டாா்.

**பரப்பும் தன்மையும் : Extent and nature**

சிந்து சமவெளி நாகரிகம், ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கதிரயக்கமுள்ள காா்பன் முறையை வைத்து காலத்தைக் கணிக்கும் புதிய தொழில் நுட்பத் துறையைப் பயன்படுத்தி சிந்து சமவெளி நாகரிக காலத்தை கி.மு.3250–க்கும் கி.மு.2750–க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைந்துள்ளாா்கள். வடக்கே பஞ்சாபிலிருந்து அரபிக்கடல் வரையிலும், தெற்கே தப்தி நதி, குஜராத் வரையிலும் இந்த நாகரிகம் பரவியிருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மொகஞ்சதாரோ, ஹரப்பா தவிர சிந்து மாநிலத்தில் சான் ஹுதாரோ, லொஹம் சொதாரோ, பலுசிஸ்தானிலுள்ள நல்கெலட், குஜராத் மாநிலத்தில் ரங்பூர், லோத்தால், (Lothal) ராஜஸ்தானிலுள்ள காலிபங்கள் ஆகிய இடங்களிலும் சிந்து சமவெளி நாகரிகச் சின்னங்கள் காணப்பட்டன.

மொத்தத்தில் சிந்து சமவெளி நாகரிகம் மேற்கிலிருந்து கிழக்காக 1600 கி.மீட்டர், வடக்கிலிருந்து தெற்காக 1100 கி.மீட்டர் பரப்பில் பரவியிருந்தது. இது திட்டமிட்டு அமைக்கப்பட்ட சிறந்த நகர நாகரிகம். இது, ஆரிய நாகரிகம் அல்லாதது. ஆரிய நாகரிகத்திற்கு முற்பட்டது ஆகும். திராவிட நாகரிகம் என்று வேறு ஒரு சில வரலாற்று வல்லுநரும், இது தனித்தன்மையுள்ள தனி நாகரிகம் என்று சில வல்லுநரும் கருதுகின்றனர். இதன் தன்மையும் சிறப்பும் அக்காலத்தில் சிறந்திருந்த எகிப்து, மெஸபடோமியா நாகரிகங்கட்கு ஒப்பானது எனச் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

சிந்து சமவெளிப் பகுதியில் மொத்தம் 900–க்கும் அதிகமான பகுதிகளில் தோண்டப்பட்டது. சிறியதும் பெரியதுமான பல நகரங்களும் கிராமங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளில் முக்கியமானவை ஹரப்பா, மொகஞ்சதாரோ, காலிபங்கன், லோத்தால், சுர்கோட்டா, ரங்பூர், ரூபார், சான்குதாரோ, லொகும்ஜாதாரோ ஆகியவை ஆகும்.

**ஹரப்பா : Harappa**

ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பெரும் நாகரிகத்தனைக் கண்ட நகரம் இது. பாகிஸ்தானின் மேற்கு பஞ்சாப் மாநிலத்தில் மாண்ட் கோமரி மாவட்டத்தில் சட்லஜ் ஆற்றங்கரையிலுள்ள ஒரு சிற்றூராகும். ஹரப்பா நகரின் சுற்றளவு நான்கு கி.மீ. ஆகும். இங்கு மொத்தம் ஆறுமண் மேடுகள் உள்ளன. இந்த மேடுகளில் தான் இந்திய தொல்லியல் துறையின் முதல் இயக்குநரான அலக்சாந்தர் கன்னிங்காம் என்பவர் கி.பி. 1853, 1856, 1872 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை ஆய்வுகளை மேற்கொண்டார். பின்னர் 1921–ல் தயாராம் சாகானி என்பவர் ஆய்வை மேற்கொண்டார். அதன் பின்னர் தொடர்ந்து பல அகழாய்வுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. 1946–ல் சர்.மார்டிமர் வீலர் என்பவர் மீண்டும் ஒரு அகழாய்வை மேற்கொண்டார். போஷி (Posschi)

என்பவர் ஹரப்பா நாகரிகத்தை விளக்கும் Harappan Civilization என்ற மிகச் சிறந்த நூல் ஒன்றை எழுதியுள்ளார்.

இந்த அகழாய்வுகளின் மூலம் ஹரப்பா நகரின் தொன்மைப் புலப்பட்டது. இந்த நகரின் அமைப்பும், மொகஞ்சதோரா நகரின் அமைப்பும் ஒரே போலுள்ளது. இரண்டு நகர மக்களும் ஒரே நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது ஆராய்ச்சி மூலம் தெளிவாயின. இங்கு செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகள் பல அறைகளைக் கொண்டும், குழியலறை, கழிவு நீர்வதி, குப்பைத் தொட்டி வசதி முதிலியன கொண்டு அமைக்கப்பட்டு விளங்கின. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட உணவு களஞ்சியம் குறிப்பிடத்தக்கது. இந்த நகரம் திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரமாக இருந்திருக்கக்கூடும்.

ஹரப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முத்திரைகள் பெரும்பாலும் மாவுக்கல்லால் செய்யப்பட்டது ஆகும். எல்லா முத்திரைகளிலும் சித்திர எழுத்துக்கள் காணப்படுகின்றன. மேலும் வளையல்கள், துணி வகைகள், பொம்மைகள், காளை மாட்டு உருவங்களான மட்பாண்ட வகைகள் பல கிடைத்துள்ளன. ஹரப்பா நாகரிகம் ஏறக்குறைய கி.மு3500 – கி.மு.2750–ஆம் ஆண்டுகளில் உச்ச நிலையை எட்டியிருக்கக்கூடும். சிந்து வெளி நாகரிகத்தின் பழைய நகரங்களில் ஹரப்பாவே முதலில் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்த நாகரிகத்தை ஹரப்பா நாகரிகம் என்றும் தொல்லியலாளர் குறிப்பிடுகின்றனர்.

**மொகஞ்சதாரோ : Mohenjo - daro**

‘சிந்துவின் தோட்டம்’ என்று புகழப்படும் லர்கானா என்ற நகரிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது மொகஞ்சதாரோ. டோக்ரி (Dokri) என்ற ரயில் நிலையத்திலிருந்து 11 கி.மீ. தூரம் உள்ளது. R.D.பானர்ஜி, D.R.சகானி ஆகியோர் 1922 முதல் இங்கு அகழ்வாராய்ச்சி செய்தார்கள். இரண்டு பெரிய மண்மேடுகள் தோண்டப்பட்டபோது இந்த நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. மொகஞ்சதாரோ என்பதற்கு புதையுண்ட நகரம் என்று பெயர். இங்கு தான் திட்டமிட்டு அமைக்கப்பட்ட தெருக்களும், வீடுகளும் காணப்படுகின்றது. பொதுக்குளில் குளம், தானியக்கூடம், குருமார்கள் கல்லூரி, வர்த்தகக் கட்டிடங்கள் ஆகியவை காணப்படுகின்றன.

**காலிபங்கன் : Kalibangan**

இந்த நகரம் ஹரப்பாவுக்கு தென்கிழக்கே 160 கி.மீ. தூரத்தில் உள்ளது. காகர்(Ghaggar) நதியின் வலது கரையில் உள்ளது. இங்கும் இரண்டு மண் மேடுகள் B.K.தாபர் என்பவர் தலைமையில் 1960 தோண்டப்பட்டன. இங்கு காணப்படும் சுட்ட செங்கல்களின் அளவு 30 X 20 X 10 செ.மீ. ஆகும். இங்கு இரண்டு பெரிய தெருக்கள் காணப்படுகின்றன. திட்டமிட்டு கட்டப்பட்ட பல வீடுகள் உள்ளன. ஆனால், இங்கு தெருக்களில் கழிவுநீர் செல்லும் சாக்கடை வசதி காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இங்கு பல அக்னி குண்டங்கள் (Fire alters) காணப்படுகிறது. ஆனால் அதன் அருகே வழிபாட்டுப் பொருட்கள் எதுவும் காணப்படுகிறது. ஆனால், அதன் அருகே வழிபாட்டுப் பொருட்கள் எதுவும் காணப்படுகிறது. ஆனால், அதன் அருகே வழிபாட்டுப் பொருட்கள் எதுவும் காணப்படுகிறது. ஆனால், அதன் அருகே பாண்டங்கள், எடைக்கற்கள், செப்புத்தகடுகள், மீன் பிடிக்கும் தூண்டில் முள்கள் கண்டெடுக்கப்பட்டன. பல உருவங்களைக் கொண்ட ஏராளமான முத்திரைகள் இங்கு கண்டெடுக்கப்பட்டன. காலிபங்கன் இராஜஸ்தானில் கண்டறியப்பட்ட ஹரப்பா நாகரிகம் ஆகும்.

**லோத்தால் : Lothal**

சிந்து சமவெளி நாகரிகத்தைக் கொண்ட லோத்தால் குஜராத் மாநிலத்தில் அகமதாபாத்திலிருந்து தெற்காக 38 கி.மீ. தொலைவில் சரக்வால் என்று சிற்றூரின் பகுதியாக அமைந்துள்ளது. அரபிக்கடல் அருகே சபர்மதி ஆற்றின் துணை ஆறான பொகோவோவின் (Bhogavo) கரையிலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு அகழ்வாய்வுகள் 1955 – 56 ஆண்டுகளில் எஸ்.ஆர்.ராவ் (S.R.Rao) என்பவர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

சிந்து சமவெளி நாகரிகத்தின் கூறுகள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டதின் விளைவாக, இந்த நாகரிகம் இந்தியாவில் குஜராத் வரை பரவியிருந்தமை வெளியிடப்பட்டது. லோத்தால் என்பதற்கு இறந்தவர் மேடு என்பது பொருள். இது ஒரு வணிக நகரமாக இருந்திருக்கவேண்டும். இங்கு நடைபெற்ற அகழாய்வு மூலம் இங்கு மூன்று பண்பாட்டுக்கால மக்கள் வாழ்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஹரப்பாவில் கிடைத்தது போன்ற எழுத்துப் பொறிப்புகள் கொண்ட முத்திரைகள் இங்கும் கிடைத்தன. மற்றும் செம்பால் செய்யப்பட்ட தூண்டில்கள், பல எடைக்கற்கள், வண்ணம் பூசப்பட்ட மட்கலன்கள், கிண்ணங்கள், ஜாடிகள், தொட்டிகள், குவளைகள் கிடைத்தன. மாக்கல்லினால் செய்யப்பட்ட மணிகளும், சங்கினாலும் தந்தத்தினாலும் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்களும், செம்புப் பாத்திரங்களும் இங்கு பெருமளவில் கிடைத்தன. லோத்தாலில் கிடைத்த தொன்மைச் சின்னங்களுள் குறிப்பிடத்தக்கது சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட கப்பல் துறையாகும். சரக்குகளை ஏற்றவும், இறக்கவும் கப்பல்கள் தாங்கவும் ஏற்ற செயற்கையான துறையாக இத்துறைமுகம் கட்டப்பட்டது. இக்கப்பல் துறை 219 மீ. நீளமும் 33 மீ. அகலமும் கொண்ட செவ்வக அமைப்புடையது.

காம்பே வளைகுடா வழியாக வரும் கப்பல்கள் பொகாவா ஆற்றினுள் நுழைந்து அங்கிருந்து ஒரு கால்வாய் வழியாக இத்துறையை வந்தடைந்தன. லோத்தால் மிகப் பழங்காலத்திலேயே வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்ட நகரமாக விளங்கியதைத்தான் இந்த கப்பல் துறை காட்டுகிறது. இங்கு கிடைத்த பாரசீக வளைகுடா முத்திரை இதனை உறுதி செய்கிறது. மேலும் உர், சோசா (Ur.Sosa) ஆகிய தொன்மை நகரங்களுடன் தொடர்பு கொண்டு விளங்கிருத்தல் வேண்டும். கரிமம் 14 (Carbon 14) முறைப்படி லோத்தால் கி.மு. 2200க்கும் கி.மு.1700க்கும் இடைப்பட்ட காலத்தில் செழிப்பாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த லோத்தால் நகரத்தை வெள்ளப் பெருக்கு அழிந்துள்ளதை அகழ்வாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர சுர்கோட்ட டாகு என்ற பகுதி குஜராத்திலுள்ள கட்சி மாவட்டத்தில் உள்ளது. இங்கு 1964–ல் ஜெகபதி ஜோஷி என்பரால் அகழ்வாராய்சி மேற்கொள்ளப்பட்டது. இங்குதான் குதிரையின் எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. ராங்பூர் என்ற இடத்தில் S.R. ராவ் என்பவரால் 1953–ல் அகழ்வாய்வு செய்யப்பட்டது.

**சிந்து சமவெளி நாகரிகத்தின் சிறப்பு அம்சங்கள் :**

**1. நகர அமைப்பு : City**

மொகஞ்சதாரோ உலகிலேயே முதன் முதலில் திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரமாகும். இந்த நகரத்தில் கோட்டைப் பகுதி (Citadal) நகரப் பகுதியென இரண்டு

பகுதிகள் காணப்படுகின்றன. கோட்டை பகுதியில் அரசர்களும், நகரப் பகுதியில் மக்களும் வாழ்ந்தனர். நகரம் விஸ்தீரணமாகவும் பல வசதிகளைக் கொண்டதாகவும், சுற்றுச் சுவர் உள்ளதாகவும் காட்சி அளிக்கிறது. குடியிருக்கும் வீடுகள் பெரிதும் சிறிதுமாக அனேகம் உள்ளன. இரண்டு அறைகள் உள்ள வீடுகளும் மேல் மாடிகளைக் கொண்ட வீடுகளும் இருந்தன. ஜன்னல்களும் கதவுகளும் பொருத்தப்பட்டதாகவும் இருந்தன. ஒவ்வொரு வீட்டின் நடுவிலும் திறந்த முற்றம் இருந்தது. தெருவோரச் சுவர்களில் ஜன்னல்கள் இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் கிணறும், குளியலறையும் உள்ளது. கழிவு நீர் தெருவிலுள்ள சாக்கடையுடன் கலந்தன.

கட்டிடங்கள், தெருக்கள், சாக்கடை போன்றவை கட்டுவதற்கு செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. அரண்மனை போன்ற பெரிய கட்டிடங்கள் பல இருந்தன. இதன் உபயோகத்தைப் பற்றித் தெளிவான கருத்துக்கள் இல்லை. ஹரப்பாவில் மிகப் பெரிய தானியக் களஞ்சியம் உள்ளது. ஹரப்பாவின் கண்டுபிடிப்புகளில் இது முக்கியமானது ஆகும். இது 169 அடி நீளம் 135 அடி அகலமும் உள்ளது. எலிகள் புகுந்து தானியங்களைச் சேதப்படுத்தாவண்ணம் கட்டப்பட்டுள்ளது. தானியக் களஞ்சியம் வரியாக பொருள் சேமித்து வைக்கப்பட்ட இடமாகும். வாழ்க்கை வசதி நிரம்பிய இது போன்ற நகரம் ஒன்றை பண்டைக் காலத்தில் காண்பது அரிது. சிந்து வெளி நகர அமைப்பு லங்காஷயர், மான்செஸ்டர் ஆகிய நகரங்களின் அமைப்பைப் போல் உள்ளது என்று சர்.ஜாஸர் மார்ஷல் கூறியுள்ளார்.

**2) தெருக்கள் : Streets**

தெருக்கள் தெற்கு வடக்காகவும், கிழக்கு மேற்காகவும் அமைந்திருந்தன. அவை ஒன்றை ஒன்று செங்கோணத்தில் சந்தித்தன. பெரிய தெருக்களும் சிறய தெருக்களும் உண்டு. நகரத்தின் முக்கியத் தெரு 33 அடி அகலம் உள்ளதாக இருந்தது. தெருக்களின் இரு பக்கங்களிலும் மூடப்பட்ட பாதாள சாக்கடை காணப்படுகிறது. பாதாளச் சாக்கடை இந்நாகரிகத்தின் சிறப்பு அம்சமாகும். பூமிக்கடியில் இரண்டு அடி ஆழத்தில் சாக்கடை குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தன. வீட்டிலிருந்து கழிவு நீர் சிறிய குழாய்கள் மூலமாக தெருச்சாக்கடைக்கு வந்து சேர்ந்தன. தெருச்சாக்கடை சுத்தம் செய்வதற்கு ஏற்ற வகையில் மனிதன் நுழையும் அளவில் துவாரங்கள் இருந்தன. அத்துவாரங்கட்கு மூடிகள் போடப்பட்டிருந்தன.

**3) பொதுக்குளியல் குளம் : Great Bath**

மொகஞ்சதாரோவின் கண்டுபிடிப்புகளில் பொதுக்குளியல் குளம் மிகச் சிறப்பபாக கருதப்படுகிறது. நீண்ட சதுர வடிவமானது. இது 180 அடி நீளம் 108 அடி அகலம் கொண்டது. இதைச் சுற்றிலும் தாழ்வாரங்கள் உள்ளன. தாழ்வாரத்தல் சிறு சிறு அறைகள் உள்ளன. குளத்தின் அடிப்பாகம் நன்றாக பூசப்பட்டிருக்கிறது. வெளியேயிருந்த கிணற்றிலிருந்து சுத்தமான குழாய்கள் மூலம் நீர் வரவும் குளத்து அசுத்த நீர் வேறு குழாய் மூலம் வெளியேற்றவும் ஏற்பாடுகள் இருந்தன. இக்குளத்திற்கு ஆறு நுழைவு வாயில்கள் உள்ளன. இக்குளத்தைப் பார்க்கும்போது அந்நகர மக்கள் தண்ணீருக்கும், குளிப்பதற்கும் தூய்மைத் தன்மை அளித்திருந்தார்கள் என்று தெரிகிறது.

**4) உணவு வகைகள் : Food**

சிந்து சமவெளி மக்கள் கோதுமை ஆகாரத்தை சிறந்த உணவாகக் கருதினர். பார்லி, பீன்சு, பட்டாணி, காய்கனிகள் ஆகியவற்றை விரும்பி உண்டனர். மேலும், ஆடு, மாடு, கோழி, பன்றி, புறா, வாத்து, ஆமை, மீன், ஆகியவற்றின் இறைச்சியையும் உண்டனர்.

**5) உடைகளும், அணிகலன்களும் : Dress and ornaments**

சிந்து சமவெளி மக்களின் ஆடைகள் பருத்தியாலும் கம்பளியாலும் நார்பட்டினாலும் நெய்யப்பட்டிருக்கவேண்டும். எகிப்தில் கூட அக்காலத்திதில் பருத்தி உபயோகிக்கப்படவில்லை. சால்வை போன்ற நீண்ட ஆடைகள் அணிந்தனர். சிந்து சமவெளி மக்கள் அணிந்த ஆபரணங்கள் கழுத்துப் பட்டையுயை சட்டைகளையும், பொத்தான் தைத்த சட்டைகளையும் அணிந்தனர். பெண்கள் இடுப்பில் பாவாடையும் மேலாடை ஒன்றும் அணிந்தனர். தலையில் ஆண் பெண் இருவரும் முண்டாசு கட்டிக் கொண்டனர். ஆண்களும் பெண்களும் அணிகலன்களை அணிவதில் ஆர்வமுடையவர்களாக இருந்தனர். காதணி, கைவளையல், மோதிரம், காலில் காப்பு, கழுத்தில் அட்டிகை, மூக்குத்திகள் போன்ற பல அணிகலன்களை அணிந்தனர். அணிகலன்கள் தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம் ஆகிய உலோகங்களால்

செய்யப்பட்டன ஆகும். இந்த ஆபரணங்கள் மிகச் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. தற்கால நகைகட்கு அவைகள் எவ்விதத்திலும் குறைவானது என்று கூறமுடியாது.

**6) வீட்டிற்குத் தேவையான பொருட்கள் :**

பல வகையான மட்பாண்டங்கள் சக்கரத்தின் உதவியால் செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்டன. சில மட்பாண்டங்களில் வர்ணம் பூசப்பட்டும், ஓவியம் வரையப்பட்டும் பளபளப்பாக இருக்கின்றன. வெண்கலம், தாமிரம், வெள்ளி, பீங்கான் இவைகளினால் செய்யப்பட்ட தட்டு, கிண்ணம், கோப்பை, அகப்பை, ஜாடி, போன்றவை கிடைத்துள்ளன. இரும்பினால் செய்யப்பட்ட பொருள் ஒன்றுமே காணப்படவில்லை. எனவே இந்த மக்களுக்கு இரும்பைப் பற்றிய அறிவு இல்லையெனத் தெரிகிறது. எலும்பினாலும் தந்தத்தினாலும் செய்யப்பட்ட ஊசிகளும், சீப்புகளும், தாமிர வெ.கல கோடாரிகள், அரிவாள், கத்திகள், உளிகள், ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன. நாற்காலி, கட்டில், மேஜை ஆகியவற்றையும் உபயோகித்து வந்தார்கள். சிந்துவெளி மக்கள் அறிந்திராத உலோகம் இரும்பு ஆகும்.

**7) வாணிபம் : Trade and Commerce**

சிந்து வெளிமக்கள் பொருளாதார வாழ்க்கை மிகவும் சீராக நடைபெற்று வந்ததற்கு அவர்கள் நடத்திய உள்நாட்டு வெளிநாட்டு வாணிபமே தக்க சான்று ஆகும். வெளிநாடுகளிலிருந்து தானியங்கள் இறக்குமதி செ்யது பெரிய களஞ்சியங்களில் சேமித்து வைத்திருந்தனர். தற்போதைய பாக்கிஸ்தான் எல்லைப்புறத்தில் சுற்றியிருந்த நாடுகளிலிருந்து நவரத்தினங்களும், பிற மணிகளும், உலோகங்களும் இறக்குமதியாயின. சிந்து சமவெளி முத்திரைகள் மேற்கு ஆசியாவில் காணப்படுவதும் இரண்டு பகுதிகளுக்குமிடையே வாணிபம் நடைபெற்று வந்தது என்பதற்குச் சான்றாகும்.

இந்தியா முழுவதிலும் இவர்களது உள்நாட்டு வாணிபம் பெருகியிருந்தது. காஷ்மீர், ஆப்கானிஸ்தான், பர்மா, தமிழகம் ஆகிய பகுதிகளுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தனர். இங்கு கிடைத்துள்ள முத்திரைகள் அயல்நாட்டு வாணிபத் தொடர்பால் கிடைத்ததாகும். ஈளம், சுமேரியா, மெசபடோமியா, ஈராக், எகிப்து, அபிசீனியா போன்ற நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். இவ்வாறு

சிந்து மக்களின் வளமான வாழ்க்கை உள்நாட்டு வாணிபத்தினால் மட்டுமேயன்றி அயல்நாட்டு வாணிபத்தாலும் வளம் பெற்றது.

**8) பொழுதுபோக்குகள் :**

சிறு பிள்ளைகள் கோலிக்குண்டுகள், பந்துகள், பகடைகள் விளையாடியிருக்கிறார்கள். ஊதுகுழல், சிறு வண்டிகள், ஆண், பெண், பறவை, விலங்கு ஆகிய பொம்மைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவைகள் சிறுவர்கட்கான விளையாட்டுப் பொருட்கள் ஆகும். சிந்து வெளி மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். கோழிச்சண்டை, காளைச் சண்டை, கௌதாரிச் சண்டை முதலியவற்றைக் கண்டுகிழித்தார்கள். வேட்டையாடுதலும் இவர்களின் பொழுதுபோக்காக இருந்தன. சதுரங்கம் இவர்களது சாதாரண பொழுதுபோக்கு விளையாட்டாகும்.

**9) பழக்கப்பட்ட விலங்குகள் : Dokestic Animals**

அழிந்து போன மிருகங்களின் எலும்புக் கூடுகளிலிருந்து அக்கால மக்கள் விலங்குகளைப் பயன்டுத்தியதை அறிய முடிகிறது. தமிழ் பருத்த மாடுகள், எருமை, ஆடு, யானை, ஒட்டகம், பன்றி முதலிய விலங்குகளை அறிந்திருந்தனர். குதிரைகளின் உபயோகத்தை அவர்கள் அறியவில்லை. குழந்தைகளின் விளையாட்டு பொருட்களில் நாயின் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதால் அம்மக்கள் நாய்களை வளர்த்தார்கள் எனத் தெரிகிறது. காண்டாமிருகம், புலி, குரங்கு, கரடி, முயல், மான் ஆகியவற்றை அவர்கள் அறிவார்கள்.

**10) முத்திரைகள் : Seals**

சதுரமானதும் சற்று நீளமானதும், உருண்டையானதுமான ஐநூறுக்கும் மேற்பட்ட முத்திரைகள் கிடைத்துள்ளன. அவைகள் களிமண்ணும், மணலும் சேர்ந்த கலவையினால் ஆனவை. இம்முத்திரைகள் பலவற்றில் விலங்கின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒற்றைக் கொம்பு விலங்கு, எருது, யானை, பலசெடி கொடிகள், மக்கள், ஆண், பெண், கடவுள் வடிவங்கள் காணப்படுகின்றன. இம்முத்திரைகளில் ஒரு வகையான எழுத்துக் குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் அந்த எழுத்துக் குறிப்புகள் அறிஞர்களால் இதுவரை தெளிவாக்கப்படவில்லை. ஒரு முத்திரையில் கப்பல் உருவம் உள்ளது. இம்முத்திரைகளில் சில மெசபடோமியாவிலும்,

ஈரானிலும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இந்த முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் ஆய்வு செய்து தெளிவாக்கப்பட்டால் சிந்து சமவெளியின் அரசியல் வரலாற்றையும் பண்பாடுகளையும் தெளிவாக அறிய இயலும். இம்முத்திரைகள் ஹரப்பாவின் கலைத்திறனை வெளிப்படுத்தும் சான்றுகளாகும்.

**11) எழுத்து : Writing**

மொகஞ்சதாரோவில் விளங்காத பொருள் அவர்களின் எழுத்து ஆகும். இந்த எழுத்துக்கள் சித்திர எழுத்து வகையைச் சார்ந்தது ஆகும். ஒரு வரி இடப்புறம் இருந்து வலப்புறம் போவதும், அடுத்த வரி வலப்புறம் இருந்து இடப்புறம் செல்வதுமாகக் காணப்படுகின்றன. ஏறக்குறைய 396 குறிகள் எண்ணப்பட்டுள்ளன. வரிகள் குறுகியே உள்ளன. இக்குறிகளில் ஒலியை அறிய முடியவில்லை. இதுவரை பிராணநாத், ஹண்டர், ஹரான்சி, ஹிராஸ், T.N.இராமச்சந்திரன் (Prananath, Hunter, Hronzy, Heras) ஆகியோர் இந்த எழுத்தை அறிய முயன்றுள்ளனர். ஹிராஸ் பாதிரியார் மொகஞ்சதாரோ மக்களின் எழுது திராவிட மொழியின் முன்னுருவம் (Pdroto-Dravidian) என்று கருதுகிறார். ஒரே விதமான குறிகள் மீண்டும் மீண்டும் தோன்றுவதால் மொகஞ்சதாரோ எழுத்து சித்திர முறையும், ஒலிமுறையும் (Pictographic and Phoenetic) இணைந்தது என்று கூறலாம். மேலும் இந்த எழுத்துக்கள் சுமேரிய, எகிப்து, ஹிட்டைட் ஆகிய எழுத்துக்களுக்கு தொடர்புடையன போல காணப்படுகின்றன.

**சிந்து வெளி எழுத்துக்கள்** – (வலமிருந்து இடமாக படிக்க வேண்டும்)

ரஷ்ய அறிஞர்கள் சிந்து வெளி எழுத்துக்களை கம்ப்யூட்டர் உதவியுடன் அறிந்து அவை திராவிட மொழியைச் சார்ந்தவையே என்று உறுதிபடக் கூறுகின்றனர். சிந்துவெளி எழுத்துக்களை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன் என்பவர், அவை திராவிட மொழியைச் சேர்ந்தவை என்றும் தமிழ் அதிலிருந்து தோன்றியது என்றும் கூறுகிறார். காலைக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது சிந்து வெளி எழுத்துக்கள் மிக அழகாக உள்ளன. சவர்கார கல்லின் மீது சுண்ணாம்பைத் தடவிச் சுட்டு, அதன் மீது எழுத்துக்களை எழுதும் கலையை சிந்துவெளி மக்கள் அறிந்திருந்தனர்.

**12) நுண்கலைகள் : Fine Arts**

மொகஞ்சதாரோ மக்களின் கலைத்திறமை அங்கு கிடைத்த முத்திரைகளில் காணப்படும் விலங்குகளின் உருவங்கள் செதுக்கப்ப ட்டதிலிருந்து தெரிகிறது. இந்திய வரலாற்றில் அசோகர் காலத்து கலைஞர்கள் தவிர வேறு யாரும் மொகஞ்சதாரா கலைஞர்கள் போல விலங்குகளின் உருவங்கள் இயற்கை சிறிதும் மாறாமல் செதுக்கியதில்லை. ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள கற்சிலைகள் சில அழகில் கிரேக்கர் சிலைகளை ஒத்தவையாக தென்படுகின்றன. வெண்கலத்தில் செதுக்கப்பட்ட நடனமானது, தாடியுள்ள யோகி மற்றும் பல சிற்பங்கள் ஆகியவற்றைப் பார்க்கும்போது சிந்து சமவெளி மக்களின் அழகுணர்ச்சியும், கலையார்வமும் தெரிய வருகிறது.

**13) ஓவியக்கலை : Painting**

சிந்து வெளியில் கிடைத்துள்ள முத்திரைகளில் பல திறப்பட்ட புடைப்போவியங்கள் காணப்படுகின்றன. மூன்று முகங்களை உடைய உருவம், கொம்புள்ள தேவதைகள், புலி, ஆடு, மாட்டுக்கொம்பும் வாலுமுடைய மாந்தனின் உருவம் போன்ற விந்தையான ஓவியங்கள் இம்முத்திரைகளில் காணப்படுகின்றன. இவை சிந்து மக்களின் ஓவியக் கலைத் திறனைக் காட்டுகின்றன. சிந்து வெளியில் கிடைத்துள்ள சுடுமண் சிற்றுருவங்களிலும் பல அழகிய ஓவியங்கள் காணப்படுகின்றன. இங்கு கிடைத்துள்ள மட்பாண்டங்களின் மீது தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் மிகவும் சிறப்பானவை. இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய மிகவும் சிறப்பானவை. இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்ய பயன்படுத்தப்பட்ட தாழிகளின் மேல் பறவைகள், மயில்கள், மீன், ஆமை, இலை, கொடி போன்ற ஓவியங்கள் உள்ளன. இந்த ஓவியங்களில் உயிரோட்டம் காணப்படுகிறது.

**14) அளவைகள் : Measurements**

சிந்து சமவெளி மக்கள் நிறுத்தலளவையும் முகத்தலளவையும் நன்கு அறிந்திருந்தனர். ஒரு சிப்பியில் 0.64 அங்குல அளவுக்கு ஒன்றாக வரைகள் காணப்படுகின்றன. ஒன்பது அலகும், ஐந்தாவது அலகில் ஒரு புள்ளியும் காணப்படுவதால் அம்மக்கள் தசம முறையைப் பற்றி அறிந்திருந்தார்கள் என்று எண்ண இடமிருக்கிறது. அவர்களது ஒரு அடி (one foot) என்பது 13.2 அங்குலமுடையதாக

உள்ளது. இந்த அலகுதான் எகிப்து உட்பட மத்திய கிழக்கு நாடுகளில் எல்லாம் காணப்படுகிறது. சிந்து வெளி மக்களின் எடைக்கற்கள் 13.64 கிராம்களே உள்ளன. சிறிய தராசுகளும் பெரிய தராசுகளும் கிடைத்துள்ளன. நீளத்தை அளக்கும் வெண்கலத்தினாலான அளவுகோல் ஒன்றும் கிடைத்துள்ளன.

### 15) சவ அடக்கம் : Cremation

இறந்தவர்களின் உடல்களை மூன்று வழிகளில் அடக்கம் செய்தனர். முழு உடலையும் அப்படியே புதைத்தனர். உடலை பறவைகளுக்கும் விலங்குகட்கும் தின்னக் கொடுத்து எஞ்சிய எலும்புகளை ஜாடியில் வைத்துப் புதைத்தனர். உடலை எரித்துப் பின் கிடைக்கும் சாம்பலை தாழிகளில் வைத்துப் புதைத்தனர். இவர்களது சவக்குழிகளை ஆராயும்போது மறுமையில் இவர்கள் நம்பிக்கையுடையவர்கள் என்பது தெளிவாகிறது.

### 16) சமயம் : Religion

ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளின் மூலமாகவே மக்களின் சமயத்தைப் பற்றி ஓரளவு அறிய முடிகிறது. மறறப்படி அவர்களின் சமயத்தைப் பற்றி அறிய போதிய சான்றுகள் இல்லை. கோவில்கள் சிந்து வெளியில் இருந்ததற்கான அறிகுறிகள் இல்லை. பல தேவதைகளை சிந்து வெளி மக்கள் வணங்கினர். நரபலியிட்டு சக்தியை அவர்கள் வணங்கியதாகத் தெரிகிறது. கடவுளுக்கு ஆடுகளையும் பலியிட்டனர்.

ஒரு முத்திரையில் காணப்படும் உருவம் தவக்கோலம் அல்லது யோக நிலையில் அமைந்துள்ளது. அதன் இரு பக்கங்களிலும் யானை, புலி, காண்டாமிருகம், காளை ஆகிய மிருகங்கள் உள்ளன. அந்த உருவத்திற்கு மூன்று தலைகள் உள்ளன. தலையிலிருந்து இரு கொம்புகள் போன்ற வடிவம் உள்ளது. இந்த உருவத்தை சர் ஜான் மார்ஷல் போன்றவர்கள் சிவனின் உருவமென்று கருதுகிறார்கள். இதனை பசுபதி, அல்லது விலங்குகளின் தலைவன் என்று கூறுகிறார்கள். இதனால் சிந்து மக்கள் சைவத்தைப் பின்பற்றினர் என்று கூறப்படுகிறது. இந்து மத சம்பிரதாயங்கள் பல அன்றே மக்களால் கடைப்பிடிக்கப்பட்டன. உதாரணமாக லிங்கம், மரம், நீர், பாம்பு, நெருப்பு, காடு, மலை, ஆறு, ஆகியவற்றை வணங்கினார்கள். எருதையும் புனிதமாகக் கருதினார்கள். ஆகவே சிந்து சமவெளி மக்களின் சமயக் கருத்துக்கட்கும், இன்றைய

இந்துக் கோட்பாடுகட்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம். இதுவரை கோவில் இருந்ததாக ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை.

சிந்து சமவெளி நாகரிகத்தின் சிறப்பை அறிவிக்கவல்ல இலக்கிய சான்றுகளோ பிற எழுத்து ஆதாரங்களோ இல்லை என்பது வருத்தத்தக்கது. பிற நாடுகளில் இக்குறைபாடுகள் இல்லை. இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள முத்திரைகளிலுள்ள எழுத்து வடிவங்கள் இன்று வரை முழுமையாக அறியப்படாமல் இருப்பதால் அந்நாகரிகத்தைப் பற்றி திட்டவட்டமாக அறிந்துகொள்ள முடியவில்லை. அதன் காரணமாகவே அரசியல் முறைகள் பற்றியும், மக்கள் பண்புகள், மதம் ஆகியவை பற்றியும் திட்டமான ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.

**சிந்து சமவெளி நாகரிகத்தின் அழிவுக்குக் காரணங்கள்**

உயர்ந்த வசதிகளையும், நாகரிக வாழ்க்கையையும், போக்குவரவு வசதிகளையும் பெற்றிருந்த இவ்வளவு மேம்பட்ட நாகரிகம் எப்படி அழிந்தது என்பது பற்றி வரலாற்று ஆசிரியர்களிடையே கீழ்க்கண்ட பல விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

1) ஆரியர்கள் படையெடுத்து வந்து இந்த நாகரிகத்தை அழித்தனர் என்று மார்டிமர் வீலர் போன்ற ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

2) நாகரிகமற்ற ஒரு முரட்டு ஜாதியினர் வந்து சிந்து மக்களுடன் போரிட்டிருக்க வேண்டும். ஏனெனில் மொகஞ்சதாரோவில் புதைக்கப்படாமல் சிதைக்கப்பட்ட எலும்புக் கூடுகள் ஒரே இடத்தில் காணப்படுகின்றன. பகைவர்களின் தாக்குதல்களை இந்த எலும்புக் கூடுகள் நிரூபிக்கின்றன.

3) இம்மக்கள் தங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்தவில்லை. அருகிலுள்ள சிந்து நதியைப் பயன்படுத்தி விவசாய வளர்ச்சியை மேற்கொள்ளவில்லை. மேலும் வறட்சியின் காரணமாகவும் இந்த நாகரிகம் அழிந்திருக்கலாம். கடைசியாக, வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அதன் விளைவாக நதியின் போக்கு அடிக்கடி மாறுபட்டு இந்த நாகரிகத்தை அழித்திருக்கக் கூடும் என்று லேம்பரிக் (LAMEBRICK) என்ற வல்லுநர் கருதுகிறார். புத்த பிரகாஷ் என்பவர் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் இந்த நாகரிகம் அழிந்திருக்கலாம் என்று கருதுகிறார். ஆனால், பொதுவாக சிந்துவெளி நாகரிகத்தின் அழிவு ஒழுங்கற்ற முறையிலும்

நீண்டகாலமாகவும் நடைபெற்றது என்று கருதப்படுகிறது. பல இடங்களில் பல்வேறு காரணங்களால் சிந்து சமவெளி நாகரிகம் அழிந்தது.

**சிந்து வெளி நாகரிக்த்தை உருவாக்கியவர்கள் :**

மிக உயர்ந்த சிந்து வெளி நாகரிகத்தை உருவாக்கியவர்களை பற்றித் திட்டமாக கூற இயலாது. சில ஆசிரியர்கள் சிந்துவெளி மக்கள் சுமேரியாவிலிருந்து வந்த சுமேரியர்கள் என்கிறார்கள். வேறு சில கருத்துபூபடி இந்நாகரிகத்தைத் தோற்றுவித்தவர்கள் திராவிடர்கள் எனப்படுகிறது. திராவிடர் எனப்பட்டவர் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்றும் முக்கியமாக சிந்து, பலுசிஸ்தான், பஞ்சாப் முதலிய இடங்களில் பரவலாக இருந்தனர் என்றும் கூறப்படுகிறது. சிந்து வெளியில் கிடைத்துள்ள மண்டை ஓடுகள், திராவிடர்களின் மண்டை ஓடுகளை ஒத்து உள்ளது. மேலும் வேதங்களில் கூறப்பட்ட தஸ்யூக்கள் திராவிடராக இருக்கலாம் என்று கருதப்படுவதால் இந்நாகரிகத்தை உருவாக்கியவர்கள் அவர்களே என்று கருத இடமுண்டு.

வேறு சில ஆசிரியர்களே சிந்துவெளி நாகரிகத்தின் தந்தையாரென்றும், தங்கள் நாடு நகரங்கள் சிந்துவில் அழிந்தபின் அவர்கள் மேற்கு ஆசியாவுக்கு சென்றுவிட்டனர் என்றும் கூறகின்றனர். ஆனால் சிந்துவெளி மக்கள் ஆரியராகவோ, திராவிடராகவோ இல்லாமல் வேறு ஒரு வகுப்பினராக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஆனால் இந்நாகரிகம் ஆரியரல்லாததும், அவர்களுக்கு முற்பட்டது எனவும், ஆரிய நாகரிகத்தை விட மேலானது எனவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஹிராஸ் பாதிரியார் இதைத் திராவிட நாகரிகம் என்று கருதுகிறார்.

**சிந்து சமவெளி நாகரிகம் பிற நாகரிகங்களுடன் ஒப்பிடப்படல் :**

சிந்துவெளிப் பண்பாடுகளுக்கும் எகிப்திய, சுமேரிய மெசப்பட்டோமியப் பண்பாடுகட்கும் ஒற்றுமை இருக்கிறது. இவைகள் அனைத்தும் வரலாற்றுக்கு முந்திய காலத்தவை. நகர வாழ்க்கை, பாண்டங்கள் செய்தல், சுட்ட செங்கற்களில் உபயோகம், போர்ககருவிகள் போன்றவற்றில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாகரிகமும் தனித்தனி எழுத்து முறையைக் கொண்டிருக்கின்றன. சிந்துவெளி மக்கள் பருத்தி ஆடைகள் உபயோகித்தனர். எகிப்திலும் சுமேரியாவிலும் கோவில்களும்

அரண்மனைகளும் உண்டு. சிந்து வெளியில் அவைகள் இல்லை. சுமேரிய மக்கள் குடிசைகளில் வாழ்ந்தார்கள். சிந்து வெளி நாகரிகம் எகிப்து சுமேரிய பண்பாடுகளை விட உயர்ந்தது என்று சர்.ஜான் மார்ஷல் கருதுகிறார்.

சிந்து சமவெளி நாகரிகம் வேதகால நாகரிகத்தை விட வேறுபட்டதும், காலத்தால் முற்பட்டதும், சிறப்பானதுமாகும் என்பது பெரும்பான்மை வரலாற்றாசிரியர்களின் கருத்து. இந்த இரண்டு நாகரிகங்களையும் இனி ஒப்பீடு செய்யலாம்.

1) சிந்துவெளி மக்கள் வெண்கலம், செம்பு ஆகியவற்றையே பயன்படுத்தினர். ஆனால் இரும்பின் பயன் தெரியாது. குதிரைகளையும் அறிந்திருக்கவில்லை. ஆனால் ஆரியர்கள் இரும்புக் கருவிகளையும், குதிரைகளையும் பயன்படுத்தினர்.

2) சிந்து வெளி நாகரிகம் நகர நாகரிகம் ஆகும். மக்கள் சுகபோக வாழ்வை மேற்கொண்டிருந்தனர். ஆனால், வேதகால நாகரிகம் கிராம நாகரிகம் ஆகும். சிந்து வெளி மக்களுக்கும் சமஸ்கிருத மொழிக்கும் தொடர்பு இல்லை. ஆனால் ஆரியர்கள் சமஸ்கிருத மொழியைப் பயன்படுத்தினர்.

3) சிந்துவெளி மக்கள் வேளாண்மையை மேற்கொண்டு நிலையான ஒரு இடத்தில் வாழ்க்கை நடத்தினர். ஆனால் ஆரியர்கள் ஆடு மாடு மேய்த்து இடம் விட்டு இடம் பெயரும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தனர்.

4) சிந்துவெளி மக்கள் எருதுகளையும், சிவன், லிங்கம் ஆகியவற்றையும் வணங்கினர். ஆனால் ஆரியர்கள், பசு, சூரியன், வர்ணன் ஆகியவற்றையும் வணங்கினர்.

5) சிந்துவெளி மக்கள் கலை நோக்கு உடையவர்கள், நடை உடை, பாவனைகளில் நாகரிமாக விளங்கினார்கள். போர் செய்வதில் நாட்டமில்லை. நீண்ட தலையையும், குட்டை உருவதும், சுருட்டை முடியையும் உடையவர்கள். ஆனால் ஆரியர்கள் சாதாரண வாழ்வையே வாழ்ந்தனர். வேலைப்பாடு இல்லாத சாதாரண மட்பாண்டங்களையே பயன்படுத்தினர். ஆரியர்கள் போர் செய்வதில் நாட்டம் கொண்டவர்கள். நெடிய உருவமும் சிவந்த மேனியும் கொண்டவர்கள் ஆரியர்கள்.

இதனால் சிந்து வெளி நாகரிகம், வேதகால நாகரிகத்தினின்று மாறுபட்டது என்றும், மேம்பட்டது என்றும், காலத்தால் முற்பட்டது என்றும் கூறலாம். மேலும், அது தற்கால இந்திய நாகரிகத்தின் அடிப்படையை அமைத்தது என்று கூறினால் மிகையாகாது.

## முந்திய வேதகால நாகரிகம் (அல்லது) ரிக் வேதகால நாகரிகம்

## (RIG VEDIC CIVILIZATION)

ஆரியர்களின் ஆரம்பகால வரலாறு புரியாத புதிராகவே இருந்தபோதிலும், அவர்களின் வருகைக்குப் பின்னரே இந்தியா வரலாற்றுக் காலத்திற்குள் நுழைகிறது. சிந்து வெளி நாகரிகத்திற்குப் பின்ா் இந்தியாவில் சிறப்புமிக்க நாகரிகத்தைத் தந்தவர்கள் ஆரியர்கள் ஆவர். வேதங்களில் சிறந்த வேதமாகிய ரிக் வேதம் ஆரியர்களின் புனித நூலாகும். இது வேதங்களிலே மிக முக்கியமானதும் மிகப் பழமையானதுமாகும். ஆரியர்கள் பேசிய முதல் வார்த்தை ரிக் வேதமாகும் என்கிறார் ஜெர்மானிய அறிஞர் மாக்ஸ் முல்லர். ரிக் வேதத்திலிருந்தே ஆசிரியர்களின் நாகரிகம் பற்றி இந்திய வரலாற்றில் வேதகாலம் கி.மு.1500 முதல் 500 ஆண்டு வரையிலான காலம் ஆகும். ரிக் வேதகால அரசியல், சமுதாய, பொருளாதார சமயநிலை பற்றி இனி ஆய்வோம்.

### அரசியல் நிலை : Political Condition

**அரசன் :**

ரிக் வேதகால ஆரியரிடையே மன்னராட்சி முறை வழக்கிலிருந்து அரசனே ரிக் வேத மக்களின் உயர்ந்த தலைவனாவான. மன்னர் மரபு வழியில் நியமிக்கப்பட்டார். சில நேரங்களில் தகுதிவாய்ந்த மன்னரை மக்கள் தேர்ந்தெடுத்தனர். மன்னரின் முக்கியமான கடமை மக்களை பாதுகாப்பது ஆகும். அதனால் அவனை ‘பாதுகாவலன்’ என்று அழைத்தனர். எதிரிகளுடன் போரிட்டு நாட்டு எல்லையைக் காப்பதும் உள்நாட்டுக் குழப்பங்களை அடக்குவதும் அவன் கடமையாகும்.

மன்னருக்கு உதவியாக பலர் இருந்தனர். ‘புரோகிதர்’ அல்லது மதகுரு இவர்களுள் முக்கியமானவர். மன்னனுக்கு அவ்வப்போது அறிவுரை கூறுவதும், போரில் வெற்றி பெறுவதற்கு பிரார்த்தனை செய்வதும், வெற்றி பெற்ற மன்னரை வாழ்த்துவதும் புரோகிதரின் பணியாகும். விசுவாமித்திரர், வஸிட்டர் போன்றோர் அக்காலத்தில் சிறந்த புரோகிதர்களாக அரசனுக்குப் பணிபுரிந்தனர் என்று ரிக் வேதத்தின் வாயிலாக அறிகிறோம். அடுத்த மன்னருக்குச் செய்திகளைத் திராட்டிக் கொண்டு வர ‘ஒற்றர்கள்’ இருந்தார்கள். தவறு செய்த மக்கள் ஒற்றர்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டார்கள். ‘சேனானி’ என்றும் படைத்தலைவர் மற்றுமொரு முக்கிய அதிகாரி ஆவார்.

படையெடுப்பை மேற்கொள்வது சேனானியின் கடமையாகும். ''கிராமணி'' என்பவர் கிராமங்களின் அரசியலையும், பாதுகாப்பு வேலைகளையும் மேற்கொண்டார். கோட்டை கொத்தளங்கள் 'பூர்பதி' என்பவரின் பாதுகாப்பில் இருந்தன.

சட்டத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றிற்கும் மன்னரே தலைவராகத் திகழ்ந்தார். தன்னுடைய ஆலோசகர்களின் துணையுடன் மன்னர் நீதி வழங்கினார். பொதுவாக குற்றங்கட்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டாலும் மரண தண்டனை கொடுக்கும் முறை வழக்கத்தில் இல்லை.

மன்னருக்கு ஆலோசனை கூற இரண்டு மன்றங்கள் இருந்தன. அவை 1) சபா 2) சமிதி ஆகும். இந்த சபைகளின் பணிகள் குறித்து ஒவ்வொரு அறிஞரும் ஒரு கருத்தைச் சொல்கின்றனர்.

**சபா :**

சபாவினைப் பொருத்தமட்டில் அது அரசன், உயர்குடியில் பிறந்த செல்வந்தர்கள், அறிஞர்கள் ஆகியோர் அடங்கிய பொது அமைப்பு என்று தெரிகிறது. இதில் பெண்களுக்கு இடமில்லை. பொதுப் பிரட்சனைகட்கு முடிவு காண்பது சபாவின் முக்கியமான கடமையாக இருந்தது. அரசனுக்கு ஆலோசனையும் கூறி வந்தது. பிற்கால இலக்கியக் குறிப்புகளிலிருந்தது சபா நீதிமன்றமாகவும் செயல்பட்டது என்று கருத இடமுண்டு.

**சமிதி :**

''சபாவை விட சமிதியே மிகவும் முக்கியமானது என்றும் அது மக்கள் அனைவரையும் அல்லது மக்கள் சார்பாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பு'' என்றும் டாக்டர் கே.பி.ஜெயஸ்வால் கூறுகிறார். இதில் பொதுப் பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டது. இது சட்டங்கள் இயற்றவும், போர் மற்றும் சமாதானம் பற்றி முடிவு செய்யவும் அதிகாரம் கொண்டது. மன்னரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் இதற்கு இருந்ததாக ரிக் வேதம் கூறுகிறது.

போர்க்காலங்களில் மன்னரும், பிற தலைவர்களும் குதிரை பூட்டிய தேர்களில் ஏறிச் சென்றனர். மற்றவர்கள் காலாட்படையினராகப் போரிட்டனர். ஈட்டிகள், கோடாரிகள், வாள்கள் ஆகியவை முக்கியப் போர் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. விஷம் தேய்க்கப்பட்ட அம்புகளும் பயன்படுத்தப்பட்டன. தற்காப்பிற்காக மார்புக் கவசத்தையும், பச்சை தோலினாலான கேடயங்களையும் போர்க்களத்தில் பயன்படுத்தினர். குதிரைப்படை குறித்து ரிக்வேதத்தில் செய்தி காணப்படவில்லை.

**சமுதாய நிலை :**

**குடும்பம் :**

ரிக்வேத காலத்தில் அரசியல், சமுதாய வாழ்க்கையின் அடிப்படையாக விளங்கியது ‘குடும்பம்’ ஆகும். ஆரியர்கள் கூட்டுக் குடும்ப முறையை அமைத்துக் கொண்டார்கள் என்று வரலாற்றறிஞர் வின்செண்ட் ஸ்மித் கூறுகிறார். குடும்பத்தனர் யாவரும் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தனர். குடும்பத்தின் தலைவர் தந்தை ஆவார். இவருக்கு தன் சொத்துக்கள் மீதும், குடும்பத்தில் இருந்த மற்றவர்கள் மீதும் தடையில்லா அதிகாரம் இருந்தது. இவர் ‘கிருஹபதி’ அல்லது ‘தம்பதி’ என்று அழைக்கப்பட்டார். குடும்பத்தலைவனான தகப்பனுக்கும் குடும்பத்தில் அனைவரும் கட்டுப்பட்டு நடந்தனர்.

**பெண்களின் நிலை :**

குடும்பத்தில் தகப்பன் வழியாக ஆண் வாரிசுரிமை இருந்து வந்தது. எனவே மக்கள் ஆண் மகனுக்காக கடவுளை வேண்டினர். பெண் குழந்தையை மக்கள் விரும்பவில்லை. ஆயினும் பிறந்த பெண் குழந்தைகளிடம் அன்பும் பரிவும் காட்டப்பட்டன. குழந்தை திருமண முறை வழக்கத்தில் இல்லை.

சமுதாயத்தில் பெண்களுக்கான சிறப்பான இடம் இருந்தது. பெண்கள் ஆடவருடன் சமமாக மதிக்கப்பட்டனர். வாழ்க்கைத் துணை நலத்தைத் தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம் இருந்தது. பொதுவாக ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையே பரவலாகப் பின்பற்றப்பட்டது. சீதனங்களையும், பரிசுப் பயணங்களையும் அளிக்கும் முறை இருந்தது.

திருமணங்கள் அக்னியை சாட்சியாக வைத்து நடைபெற்றன. திருமணம் தெய்வீகத் தன்மையுடையதாகக் கருதப்பட்டது. விதவைகள் மறுமணம் ஆதரிக்கப்பட்டது. சதியெனும் உடன்கட்டையேறும் முறை இல்லை. மனைவியில்லா வேறு மாதருடன் உண்டாகும் கூடா நட்பை சமுதாயம் ஆதரிக்கவில்லை. பெண்களுக்கு கல்வியறிவு அளிக்கப்பட்டது. லோபா, முத்திரை, அபாலா போன்ற சில பெண்கள் கல்வியறிவு மிக்கவர்களாகத் திகழ்ந்தனர்.

**ஆடை ஆபரணங்கள் :**

வேதகால ஆண்களும் பெண்களும் ஆடை, ஆபரணங்களில் விசேஷ கவனம் செலுத்தினர். ஆரியர்கள் மூன்று ஆடைகளை அணிந்தனர். உள்ளாடை, மேலாடை, மேலாடை மீது போர்வையாக ஒன்றும் அணிந்தனர். பொதுவாக பருத்தி, கம்பிளி ஆடைகளை அணிந்தனர். பல நில ஆடைகள் வழக்கத்திலிருந்தன. ஆடைகளில் சித்திர வேலைப்பாடுகள் காணப்பட்டன.

ஆரியர்கள் கழுத்து அட்டிகை, காப்பு, ஒட்டியாணம், காதணி, ஹாரம் முதலிய அணிகலன்களை அணிந்தனர். தங்க நகைகளையும் பூமாலைகளையும் சாதாரண காலங்களிலும் அணிந்தனர். பெண்கள் தங்கள் கூந்தலை அழகுபடுத்திக் கொண்டார்கள். ஆண்களில் சிலர் தாடி வைத்துக்கொள்வதை விரும்பினார்கள். ஆண்கள், பெண்கள் இரு பாலரும் தலைப்பாகை வைத்துக் கொள்வது வழக்கம்.

**உணவு :**

ஆரியர்கள், இறைச்சி, பால், வெண்ணெய், நெய், காய்கனிகள், பார்லி ஆகியவைகளை உணவுப் பொருள்களாக உட்கொண்டனர். பசு இவர்கட்கு புனிதமான விலங்கு. எனவே அதன் இறைச்சியை உண்ணவில்லை. உப்பைப் பற்றிய குறிப்பு ரிக்வேதத்தல் காணப்படவில்லை. சோமபானம், சுராபானம் அருந்தும் வழக்கம் இருந்தது. சோமபானம் செல்வந்தர்கள் அருந்தும் பானம். அது இமயமலைச் சாரலில் விளையும் சோமம் என்ற செடியிலிருந்து தயாரிக்கப்பட்டது. சுராபானம் பார்லியிருந்து வடிக்கப்பட்டது. இதனை சாதாரண பொதுமக்கள் அருந்தினர்.

**விளையாட்டுகள் :**

நடனம், இசை, தேர்ப்பந்தயம் ஆகியவை ஆரியர்களின் சிறந்த பொழுதுபோக்காக விளங்கின. புல்லாங்குழல், முரசு, தாரை, யாழ், மத்தளம் ஆகிய இசைக்கருவிகளை அவர்கள் பயன்படுத்தினர். உணவுக்காகவும், பொழுது போக்குக்காகவும், மிருகங்களையும், பறவைகளையும் வேட்டையாடினர். சொக்கட்டான் காய்களைக் கொண்டு விளையாடும் சூதாட்டமும் சிறந்த பொழுதுபோக்காகக் காணப்பட்டது.

**சாதிமுறை :**

பொதுவாக ரிக்வேத காலத்தில் சாதி முறை காணப்படவில்லை. பிறப்பின் அடிப்படையில் அமைந்த சாதிமுறை காணப்படவில்லை. ரிக் வேதத்தல் சாதியைப் பற்றிக் காணப்படும் குறிப்பு புருஷ சுத்தம் என்ற சுலோகத்தில் மட்டுமே காணப்பட்டது. அச்சு லோகத்தில் பிராஜாபதி என்ற படைப்புக் கடவுளின் தலையிலிருந்து பிராமணரும், தோளிலிருந்து சத்திரியரும், தொடையிலிருந்து வைசியரும், பாதத்திலிருந்து சூத்தரரும் தோன்றியதாகக் குறிப்பு காணப்படுகிறது (ஆனால், இதனை இடைச் செருகல் என்று வரலாற்றாசிரியர் கருதுகின்றனர்). தாஸ்யூக்கள் என்ற பழங்குடியினர் ரிக் வேதத்தில் கேவலமாகப் பேசப்பட்டாலும், அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்படவில்லை.

**பொருளாதார நிலை :**

ரிக் வேத கால ஆரியர்கள் கிராமங்களில் வாழ்ந்தனர். எனவே விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பார்லி, பீன்ஸ் போன்றவைகளைப் பயிரிட்டனர். ஆனால், நெல் உற்பத்தி செய்யவில்லை. நிலத்தை உழுவதற்கு எருதுகளைப் பயன்படுத்தினர். விவசாயத்திற்கு கிணற்றுப் பாசனம், கால்வாய்ப் பாசனம், ஏரிப்பாசனம் ஆகியவற்றால் தண்ணீர் பெறப்பட்டது. ஆடு வளர்ப்பும் ஆரியர்களின் முக்கியத் தொழில் ஆகும். தோல் பதனிடும் தொழிலும், நெசவுத் தொழிலும் சிறந்திருந்தன. கொல்லர் படைக் கருவிகளையும், ஆயுதங்களையும் படைத்தனர். பொற்கொல்லர்கள் தங்கத்தாலும், வேறு உலோகத்தாலும் நகைகளும்,அணிகலன்களும்

செய்தனர். கோரைப்புல் மற்றும் நாணல்களைக் கொண்டு பாய்முடையும் கலையில் பெண்கள் சிறந்து விளங்கினர்.

வாணிபத்தையும் ஆரியர் புறக்கணிக்கவில்லை. பண்டமாற்று முறையில் வாணிபம் நடைபெற்று வந்தது. அச்சிட்ட நாணயம் வழக்கத்தில் இல்லை. பண்டங்கட்கு மாற்றாக பசுக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. 'நீட்கம்' என்று வழங்கப்பட்ட தங்கத்துண்டு ஒன்று நாணயமாக பயன்படுத்தப்பட்டது. தரகர்களும் தரகு முறையும் இருந்தன. பாணி எனப்படும் மூத்தவர் பெரும்பாலும் வணிகர்களாக இருந்தனர். ஆரியர்கள் கடல் கடந்து அயல்நாட்டு வாணிபமும் செய்து வந்தனர் என்று கூறவும் இடமிருக்கிறது.

**சமயநிலை :**

ரிக் வேதகால ஆரியர்களுடைய சமயத்தன் அடிப்படை இயற்கை வணக்கமாகும். இயற்கை சக்திகளைத் தெய்வமாக வழிபட்டனர். அக்கினி, இந்திரன், வாயு, வருணன், சாவித்ரி (தீய சக்திகளை விலக்கும் தெய்வம்) ஆகியவற்றை வழிபட்டனர். ஆனால் கோவில்களோ, உருவ வழிபாடோ இல்லை. வருணன் கடவுளுக்கு முதல் சிறப்பையும், அடுத்தபடியாக இந்திரனுக்கும் சிறப்பு தந்தனர். ரிக்வேத ஆரியர்கள் இறைவனிடம் தங்களுக்கு வேண்டிய பொருட்களை வேண்டி அதற்காக பல பொருட்களைப் பலியாகப் படைத்தனர். பால், நெய், தானியம், சோம பானம், இறைச்சி ஆகியவைகளைப் படைத்தனர். பலிகள் சடங்காச்சாரங்களுடன் செய்யப்பட்டதால் மத குருமார்களின் பெருமை அதிகரித்தது. மரணத்திற்குப் பின்னர் ஒரு வாழ்க்கை உண்டு என்று நம்பினர்.

உலகத்தைப் படைத்துக் காக்கும் கடவுளான 'பிரஜாபதி' என்ற தெய்வம் முதன்மைத் தெய்வமாகக் கருதப்பட்டது. மக்களுக்கு ஒரே கடவுள் என்ற தத்துவம், உலகில் உயிரினங்கள் வாழ்வதற்கு பிரம்மன்தான் காரணம் போன்ற நம்பிக்கைகள் ஏற்பட்டது. சொர்க்கம், நரகம், பிரம்மனின் படைப்புக் கொள்கை. பிறப்பு, மறு பிறப்பு, கர்ம வினைப்பயன், மோட்சம் போன்றவற்றில் தளராத நம்பிக்கை ஏற்பட்டது. யாகங்கட்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது. யாகங்களை நடத்தும் முறை கடினமாகக் காணப்பட்டதால் மக்கள் சமயத்தையே கடினமாகவும், இயந்திரத் தன்மை பெற்றதாகவும்,

எண்ண ஆரம்பித்தனர். ரிக் வேதம் கால இறுதியில் ரிக் வேதம் கால இறுதியில் மக்களுக்குத் துறவு வாழ்க்கையில் கடுமையான நம்பிக்கை ஏற்பட்டது.

**கலைகளும் விஞ்ஞானமும் :**

ரிக்வேத காலத்தில் எழுத்துக்கலை அறிவு இருந்தது என்று பலர் கருதுகின்றனர். குருவிடம் வாய்மூலம் பாடம் கேட்கும் முறை நிலவி வந்தது. வேத இலக்கியங்கள் நீண்ட காலத்தற்குப் பின்னரே எழுதப்பட்டது. கட்டிடக்கலையும், சிற்பக்கலையும் வளர்ந்து காணப்பட்டது. மிகப்பெரிய மாளிகை ஒன்று ஆயிரம் தூண்களையும், கதவுகளையும் கொண்டதாகவும், இது போல மேலும் பல மாளிகைகள் இருந்ததாகவும் குறிப்புகள் கிடைத்துள்ளன. பல மாளிகைகள் கல்லால் கட்டப்பட்டன. இந்திரனைப் போன்ற உருவச் சிலை இருந்ததாகக் கூறும் குறிப்புகள் உண்டு. இது சிற்பக்கலை வளர்ச்சி பற்றி சான்று பகருகிறது.

விஞ்ஞான அறிவும் ஆரியர்களிடம் வளர்ந்திருந்தது. விண்மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் நகர்வு பற்றி ஓரளவு அறிந்து வைத்திருந்தனர். வான சாஸ்திர அறிவு ஆரம்ப நிலையிலேயே இருந்தது. ஆரியர்கள் மருத்துவத் துறையில் அதிக முன்னேற்றம் அடையவில்லை. மருந்துகள் மூலம் மட்டுமல்லாது, மந்திரங்கள் மூலமும் பிணிகளைப் போக்கும் சக்தி பெற்றிருந்தார்கள். இரண சிகிக்சையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.

இவ்வாறு ஆரியர்கள் வேதகாலத்தின் முற்பகுதியில் சிறப்பான ஒரு வாழ்க்கையை பின்பற்றி வந்தனர் என்று அறிகிறோம்.

## வேதகால இலக்கியங்கள் (VEDIC LITERATURE)

ஆரியர்களைப்பற்றி அறிய உதவும் ஆதாரங்கள் அவர்களுடைய இலக்கியங்களேயாகும். ஆனால் வேதகால இலக்கியங்களின் காலம் மிகவும் சர்ச்சைக்கு இடமான ஒன்று. வேதகால இலக்கியங்களின் மேல்மட்ட கால எல்லை ரிக் வேதம் என்றும் கீழ்மட்ட கால எல்லை கி.மு. 600–ஆம் ஆண்டு என்றும் கணக்கிடப்படுகிறது. ரிக் வேத காலம் கி.மு.2000–ஆம் ஆண்டு என்று கணக்கிடப்படுகிறது. நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள்

ஆகியவை ஆக்கப்பட்ட காலம் வேதகாலமாகும். வேதங்கள் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப்படும். வரலாற்றைப் பொருத்தவரையில் ரிக், யஜுர், சாமம் ஆகியவை சிறப்பாகக் கருதப்படுகின்றன. அதர்வணத்தை வேதமாகவே சிலர் கருதுவதில்லை. ரிக், யஜுர், அதர்வண வேதங்கள் வேதகால முற்பகுதியையும், சாமவேதம், பிராமணங்கள், உபநிடதங்கள் வேதகால பிற்பகுதியையும் குறிக்கும். வேதகால இலக்கியங்களைக் கீழ்க்கண்ட தலைப்புகளில் ஆராயலாம்.

**1. ரிக்வேதம் :**

வேதங்களில் மிகப் பழமையானது ரிக் வேதமாகும். வேதகால இலக்கியங்களில் மிகச் சிறப்பான இடத்தை வகிக்கிறது. இது ஆரியர்களின் அரசியல், சமுதாய, பொருளாதார, சமய நிலைகளைப் பற்றி அறிய உதவுகிறது. ரிக் வேதத்தின் பாடல்கள் பெரும்பாலும் வழிபாட்டுக்காக இயற்றப்பட்டவையாகும். நீண்ட ஆயுள், செல்வம், மக்கள் பேறு முதலிய உலகியல் நலன்களைப் பெற கடவுளைப் போற்றி வழிபடும் முறையில் அவை அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் ‘சூக்தம்’ எனப்படும். பத்தாவது மண்டலத்திலுள்ள ‘புருஷசூக்தம்’ என்ற பாடலில்தான் சாதி வேற்றுமை காணப்படுகிறது.

**2. சாமவேதம் :**

இதில் புதிய கருத்துக்கள் மிகவும் குறைவு. அனேக பாடல்கள் ரிக் வேதத்தில் இருந்து எடுக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளன. சாமவேதப் பாடல்கள் இசை நயத்துடன்பாடப்–படுபவையாகும். ஆரியர்கட்கு இசையின் மீது உள்ள விருப்பத்தைப் புலப்படுத்துவது சாம வேதமாகும். இப்பாடல்களை இசையுடன் பாடுவதற்கென்றே தனியாக இசைப்பயிற்சி பெற்ற பிராமணர்கள் இருந்தனர்.

**3. யசூர் வேதம் :**

வேள்விகள் செய்வதற்கான விதிமுறைகளை விளக்குவதே யசூர் வேதமாகும். எனவேதான் இதன் பாடல்கள் வேள்விப் பாடல்கள் என்று அழைக்கப்படுகிறது. வேள்விகளில் ஓதப்படும் துதிப்பாடல்கள் இவையாகும். ஏறத்தாழ பாதிக்கு மேற்பட்டப் பாடல்கள் உரைநடையிலுள்ளது. மீதி செய்யுள் வடிவில் உள்ளது.

**4. அதர்வண வேதம் :**

அதர்வண வேதத்தில் மந்திரம், மருந்து ஆகியவற்றைக் கையாளும் முறை கூறப்பட்டு உள்ளது. பொதுவான கருத்துக்களே அதிகம் காணப்பட்டாலும், பழைய கருத்துக்களும் நிரம்பி உள்ளன. இதன் பாடல்களில் சில புவியன்னையின் கொடைத் தன்மையையும், எல்லாம் உணர்ந்த கடவுளின் தன்மையையும் சித்தரிக்கின்றன. ஆனால், அதர்வண வேதத்தல் தெய்வீகத் தன்மையில்லையென்று பிராமணர்கள் இதனை ஏற்க மறுக்கிறார்கள். இந்த வேதத்திலுள்ள 731 பாடல்கள் இருபது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**5. பிராமணங்கள் :**

பிராமணங்கள் மற்றொரு வகையான வேத இலக்கியங்களாகும். ரிக், யசூர், சாமம், அதர்வண வேதங்களில் காணப்படும் உட் பொருட்களைக் கொண்டது பிராமணங்கள். அதன்படியே இது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வேள்விச் சடங்குகள் செய்யும் முறைகளும், வழிபடும் முறைகளையும் கூறி, அவற்றின் விளக்கங்களையும் தருகிறது. மேலும், ஆரியர்களின் அரசியல், சமுதாய ஏற்றத்தாழ்வு, வேதங்களை ஓதும் பூசாரிகளின் கடமைகள் ஆகியவை பற்றியும் விளக்கிக் கூறுகிறது.

**6. ஆரணியங்கள் :**

ஆரணியங்கள் காடுகளில் ஆக்கப்பட்டவை. இதில் உள்ள பாடல்களை காட்டுப் பாடல்கள் என்பர். இப்பாடல்களிலுள்ள கட்டளைகளை காடுகளில் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், ஆகவே இவைகள் வனவாசிகட்கும், முனிவர்கட்கும், மிகுந்த பயன் அளிக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது. வீட்டுப் பேற்றை அடையும் அளிய வழிகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. சடங்குகளின் உட்கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. ஆரணியங்கள் பிரமாணங்களின் பிற்பகுதியாகும். மொழியும், நடையும், கருத்துக்களும் கூட பிராமணங்களில் உள்ளது போன்று காணப்படுகிறது.

**7. உபநிடதங்கள் :**

உபநிடதங்களின் காலம் கி.மு. 800–லிருந்து 500–க்குள் இருக்கும் என்று கூறப்படுகிறது. மொத்தம் 108 உபநிடதங்கள் உள்ளன. ‘‘உபநிடதங்கள் ஒரு சிலருக்கு மட்டும் அறிவிக்கப்பட்ட இரகசிய கோட்பாடுகள்’’ எனப்படுகின்றன. உபநிடதம் என்ற

தொடரிலிருந்து ‘‘இதிலடங்கிய உண்மைகள் ஒரு மாணவன் தகுந்த குருவை தேர்ந்தெடுத்து பயபக்தியுடன் கற்றுணர வேண்டும்’’ என்று கருதுவர். உபநிடதங்கள் ஆரணியங்களில் அடங்கியவைகளாகவோ அல்லது அவற்றிற்கான துணை செய்யுட்களாகவோ அமைகின்றன. இவை சமய தத்துவ உண்மைகளை ஆராய்ச்சி செய்து முடிவு செய்ய முயன்றோரின் கருத்துக்களை அறிவிக்கிறது. உபநிடதங்களில் ஒரு சிலவே புத்தர் காலத்திற்கு முற்பட்டவை.

உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்று நூல்களும் பிரஸ்தானத்திரயம் என அழைக்கப்படுகின்றன. பிற்காலத்தில் சங்கரரும் மாதவரும் இதற்கு உரை எழுதி உள்ளனர். ஷோபர் ஹோவர் என்பவர் உபநிடதங்களை வியந்து கூறுகிறார். ‘ஈடு இணையற்ற அந்நூல்கள் மிக ஆழ்ந்த முறையில் ஆத்ம சக்தியைத் தட்டி எழுப்புகிறது. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்திருக்கின்றன. அது என்னுடைய வாழ்க்கைக்கு அமைதி அளிக்கக்கூடியதாக இருக்கிறது’ என்கிறார். அல்பரூனி என்பவர் உபநிடதங்களைப் பாராட்டி உள்ளார். ஷாஜஹானின் மூத்த மகன் தாராஷுக்கோ என்பவர் அவற்றைக் கற்று பாரசீக மொழியில் மொழி பெயர்த்துள்ளதாகவும் அறியலாம். வேதாந்த தத்துவத்தின் வேரே உபநிடதங்கள் எனலாம்.

இவை தவிர வேதங்களும், சூத்திரங்களும், தர்மசாத்திரங்களும் மிகவும் முக்கியத்துவம் பெற்றவை. வேதங்களின் இலக்கணம் அவைகளை உச்சரிக்கும் முறை ஆகியவற்றை விளக்குவதே வேதங்கள். வேதங்களில் வரும் பொருள்களைச் சுருக்கிக் கூறுவதே சூத்திரங்கள். ஆரியர்கள் தங்களுக்காகவும், பிறருக்காகவும் கட்டுப்பாடான உலக தர்மசாத்திரங்களாகும். இந்த சாத்திரங்கள் உலக அனுபவம் கொண்ட பெரியோர்களால ஆக்கப்பட்டது. மனுதர்ம சாத்திரம், விஷ்ணு சாத்திரம், நாரத சாத்திரம், யஜன வால்க்கியர் சாத்திரம் ஆகியவை முக்கியமானவைகள்.

**வேதகால இலக்கியங்களின் சிறப்பு :**

வேத கால இலக்கியங்கள் நன்கு போற்றப்பட்டு பாதுகாக்கப் பட்டுள்ளதாகவும், ஒரே காலத்தவையாகவும் உள்ளது. வேத சான்றுகள் மிகுதியாக நம்பத் தகுந்தவை. இவைகளின் பழைமை, உலக வரலாற்றில் இதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

நாகரிகம் படிப்படியாக மாறுதலடைந்த காட்சிகளையும் வேத இலக்கியத்தில் நாம் காண்கின்றோம். அவைகளில் காணப்படும் செய்திகளைக் கொண்டு ஆரியர் இந்தியாவில் பரவியதை அறிய முடிகிறது. ஆனால் இந்த இலக்கியங்களில் தெளிவான கால விளக்க முறை காணப்படவில்லை.

## பிந்திய வேதகால நாகரிகம் (LATER VEDIC CIVILIZATION)

பிந்திய வேதகால மென்பது ரிக்வேத காலத்திற்கு பிற்பட்ட காலமாகும். கி.மு.1000 முதல் 600–ஆம் வருடம் வரையுள்ள காலம். சாமவேதம், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள் ஆகியவை தோன்றிய காலமே பிந்திய வேதகாலம் ஆகும். இவைகளின் மூலம் இக்கால அரசியல், பொருளாதார, சமுதாய, சமய நிலைகளைப் பற்றி அறிய முடிகிறது. கி.மு. 1500 முதல் 1000 வரையில் ஆரியர்கள் சிந்து சமவெளியிலிருந்து கங்கைச் சமவெளிக்கு பரவினார்கள். அவர்களுடைய நாகரிகத்தைப் பற்றி இனிக் காணலாம்.

### அரசியல் நிலை : Political Condition

பரந்த சாம்ராஜ்யங்களைப் பற்றியும், கம்பீரமான நகரங்களைப் பற்றியும், பிந்திய வேதகால இலக்கியங்களில் முதல் தடவையாகக் காண்கிறோம். மன்னர்களின் அதிகாரம் வளர்ந்தது. மன்னர் தெய்வத்தன்மை மிக்கவராகக் கருதப்பட்டார். மக்களை தன் விருப்பப்படி ஆண்டு வந்தார். குடிமக்கள் அரசனுக்குத் திறை செலுத்தினர். படை நடத்தும் தளபதியாகவும், பகைவர்களை வேரருக்கும் காவலனாகவும் விளங்கினார். வலிமைமிக்க மன்னர்கள் தங்களுக்கு ஏக்ராட், சாம்ராட், ஸ்வராட், ராஜவிஸ்வஜனன், ஏகாதன் ஆகிய விருதுகளைச் சூடிக் கொண்டனர்.

மன்னர்கள் தங்கள் கௌரவத்திற்கு ஏற்ப ‘ராஜசூயம்’ ‘வாஜபேயம்’ ‘அசுவமேதம்’ போன்ற பல யாகங்களைச் செய்து வந்தார்கள். மன்னர்கள் பொதுவாக சத்திரிய குலத்தைச் சார்ந்தவர்களாக இருந்து வந்தார்கள். வாரிசு உரிமைப்படி மன்னர்கள் பதவி ஏற்றனர்.

மன்னருக்குத் துணைபுரிய இரத்தினங்கள் எனப்பட்ட குழு இருந்தது. மேலும் பொக்கிஷதார், வரி வசூலிப்பவர், கட்டியக்காரன், அரண்மனை முதல்வன், பயண

உதவியாளன், வேட்டை உதவியாளன் போன்ற புதிய அலுவலர்கள் பற்றி பிந்திய வேத இலக்கியங்களில் காண்கிறோம். சபா, சமிதி, போன்ற மன்றங்கள் தொடர்ந்து இருந்து வந்தன.

மன்னரே தலைமை நீதிபதியாகச் செயல்பட்டார். பார்ப்பனரைக் கொலை செய்தல், சுரா என்னும் துபானத்தை அருந்துதல், தங்கத்தைத் திருடுதல், அரசனுக்குத் துரோகம் செய்தல் ஆகியவையே தலையாய குற்றங்களாகக் கருதப்பட்டன. இக்காலத்தில் ஒருவன் குற்றவாளியா இல்லையா என்று ஆராயும் முறையும் இருந்தது. தண்டனைகள் கடுமையாக்கப்பட்டன. அபராதம் வசூல் செய்யப்படும் முறையும் இருந்தது. சூத்திரங்கள், ஜாதி, பால் பகுப்பை வைத்து அபராதம் பணம் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் மன்னர் கடமை தவறும் போது அவரை பதவி விலக்கிவிட்டு புதிய மன்னரைத் தேர்ந்தெடுக்கும் முறை இருந்ததாகவும் அறியலாம்.

**சமுதாய நிலை : Social Conditon**

பிந்திய வேதகால சமுதாயத்தில் சாதிப்பிரிவுகள் கடினமாயின, தொழில் அடிப்படையில் எழுந்த சாதி முறையானது மெதுவாகப் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு மாறியது. பிராமணன் வேதம் ஓதவும், சத்திரியன் போர் புரியவும், வைசியன் வாணிகம் செய்யவும், சூத்திரர் ஏவல் புரியவும் என்ற விதி உறுதியாக்கப்பட்டது. இந்த நான்கு பிரிவினர்களுக்குடையே ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது. தெய்வத்துக்கு அடுத்தபடியாக பிராமணர்கள் வைத்து கருதப்பட்டார்கள். தூய்மையின் சிகரமாகக் கருதப்பட்டனர் பிராமணர்கள். நாளடைவில் இந்த சாதி முறை இந்தியாவெங்கும் பரவியது.

பிந்திய வேதகாலத்தில் வீடு கட்டும் முறையிலும் ஆடை அணிகலன்களிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் இல்லை. பெண்கள் துன்பம் உண்டாக்கக்கூடியவர்கள் என்று கருதப்பட்டனர். பெண்களுக்குச் சொத்துரிமை கிடையாது. பாலிய விவாகம் நடைமுறையில் இருந்தது. பெண்கள் வீட்டிலேயே அடைபட்டு இருக்காமல், பல தொழில்களில் ஈடுபட்டனர். கல்வி கற்றனர்.

சமுதாய அமைப்பில் மட்டுமல்லாது, பழக்க வழக்கங்களிலும் பல மாறுதல் ஏற்பட்டன. மாமிச உணவை மக்கள் வெறுக்கத் தொடங்கினர். மரக்கறி உண்பவர்கள் உயர்வாக மதிக்கப்பட்டனர். மது அருந்தாதவர்களும் உயர்வாக மதிக்கப்பட்டனர்.

**பொருளாதார நிலை : Econimic Condition**

கிராமங்களில் உழவுத் தொழில் சிறப்பாக நடைபெற்றது. கனமான இரும்பால் ஏர்கள் செய்யப்பட்டன. வயல்கட்கு நீர் பாய்ச்சவும் உழுவதற்கும் மாடுகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் தோல் பதனிடுதல், மீன் பிடித்தல், தச்சுத் தொழில், கூடை முடைதல் போன்ற தொழில்கள் இருந்தன. தொழிலாளர் வர்க்கங்கள் தோன்றின. வாணிபமும் விருத்தியடைந்தது. பண்டமாற்று முறையிலேயே வாணிபம் நடந்தது. வணிகர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் அமைத்து இருந்தனர். பாபிலோனியாவுடன் கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படுகிறது. கடல் பற்றிய அறிவு இவர்களிடம் மிகுந்து காணப்பட்டது.

மக்கள் நகரங்களைப் போன்ற வாழ்க்கை வசதிகளுடன் கிராமங்களில் வசித்து வந்தனர். பொதுவாக வீடுகள் மரத்தாலேயே கட்டப்பட்டன. பல அறைகள் கொண்டவைகளாகக் காணப்பட்டன. பல மாளிகைகளும் இருந்தன. உலோகங்களில், இரும்பு, தகரம், ஈயம், தங்கம், வெள்ளி, பித்தளை, வெண்கலம் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. இரும்பால் பல தரப்பட்ட ஆணிகளும் ஆயுதங்களும் செய்யப்பட்டன.

**சமயநிலை : Religious Condition**

பிந்திய வேதகாலத்தில் ஆரியர்களின் சமயத்தில் குறிப்பிடத்தக்க பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இந்திரன், சூரியன், போன்ற கடவுள்களுக்கு இருந்த மதிப்பு குறைந்து, பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் உயர்ந்த இடத்தை அடைந்தனர். பலவித வழிபாட்டு முறைகளும், பலியிடும் முறையும் தோன்றியதால் மதம் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாதபடி சிக்கலாக தோன்றின. மரங்கள் ஆறுகள் போன்ற இயற்கை தன்மைகளை தொடர்ந்து வணங்கினர். கொடிய தேவதைகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மந்திர சக்திகளை உருவாக்கினர்.

பிந்திய வேதகாலத்தில் வேள்விகளும் சடங்குகளும் பெருகின. வேள்வி செய்தல் அரசனுக்குரியது. வேள்விகளின் பயன் அதிகமாகப் புகழப்பட்டன. வேள்வி நடத்தும் 'பிராமணர்கள் தனித்திறமையும் பயிற்சியும் பெற்றிருந்தார்கள். யாகத்தில் மிருகங்களைப் பலியிடுதல் இடம் பெற்றது. வேள்வி முறைகள் ஒரு கலவையாகவே மதிப்பு பெற்றது.

பிந்திய வேதகாலத்தில் பிறப்பு, இறப்பு, இறந்த பின்னர் தொடரும் வாழ்க்கை பற்றி சில முனிவர்கள் சிந்திக்க முற்பட்டனர். பூர்வகர்ம வினைகள் பற்றிய கொள்கையும், அவற்றின் விளைவான மறு பிறப்பு பற்றிய கொள்கையும் இக்காலத்தில் தான் உருவாயின. மோட்சம், நரகம் பற்றிய கொள்கைகளும் சமுதாயத்தில் தலையெடுத்தன. துறவு நிலையை பிற்பட்ட வேதகால மக்கள் மிகவும் போற்றினர். நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையையும், அவ்வாழ்க்கை அளிக்கின்ற இன்பத்தையும் முழுக்க உதறிவிட்டு, பற்றத்துறவி நிலையை ஏற்றுக்கொண்டவனால் தான் நிலையான இன்பம் அளிக்கும் 'வீடுபேறு' அல்லது 'பிரம்மனை' அடைய முடியும் என்று நம்பினர்.

மேற்கண்டவைகளை நாம் நோக்கும்போது, பிந்திய வேத காலம், அரசியல், சமுதாய, பொருளாதார அடிப்படையில் ரிக்வேத காலத்திலிருந்து ஓரளவு மாறுபட்டு இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. நகர வாழ்க்கை முறையும், பல்வேறு அரசியல் அமைப்புகளின் தோற்றமும், வளர்ச்சியும் அம்மாறுதல்களில் மிக முக்கியமானவைகளாகும்.

## அரசுகளின் தோற்றம்

கி.மு. ஆறாம் நூற்றாண்டு இந்திய வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நூற்றாண்டாகும். இந்த நூற்றாண்டில் இந்தியா ஒரு நிலையான ஆட்சியால் ஒன்றுபட்டு இருக்கவில்லை. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த அரசர்கள் தங்களது மேலாண்மையை நிலைநாட்டுவதற்காகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். வட இந்திய அரசியல் நிலை கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டு வரை குழப்பம் நிறைந்ததாகவே இருந்தது. ஆனால் இதே சமயத்தில் தான் இந்தியாவில் இரு பெரும் சமயங்களை தோற்றுவித்த மகாவீரரும் புத்தரும் தோன்றினார்கள்.

இந்த நூற்றாண்டில் வட இந்திய நிலைமையைப் பற்றி நாம் அறிந்து கொள்வதற்கு ஆதாரமான நூல்கள் சமய நூல்களான மகாவம்சம், தீபவம்சம், ஆகியவனவும் புத்தநூல்களான பீடகங்களும் ஜாதக கதைகளும் ஆகும். புத்தரைப் பற்றியும், சமணரைப் பற்றியும் கூறுகின்ற அநேக நூல்களும், பர்குத், சாஞ்சி, அமராவதி போன்ற இடங்களில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளும் கி.மு. ஆறாம் நூற்றாண்டைப் பற்றி அறிய உதவுகின்றன.

**அரசியல் நிலைமை : Political Condition**

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இமய மலைக்கும், நர்மதை நதிக்கும் இடைப்பட்ட பகுதியில் பதினாறு பேரரசுகள் இருந்தன. இவைகள் 'மகாஜனபதாக்கள்' என்று அழைக்கப்படுகிறது. இவை யாவும் தற்காலத்தில் பீகார் மாநிலத்தையும், மத்தியப் பிரதேசத்தையும் உட்பட்ட நிலப்பரப்பில் இருந்தன. சில பேரரசுகளில் முடியாட்சியும், சிலவற்றில் குடியாட்சியும் நிலவியது. பதினாறு மகாஜனபதாக்கள் வின்வருமாறு :

**1. வங்கதேசம் :** இது தற்போது பகல்பூர் என்ற பகுதியைக் குறிக்கும் இதன் தலைநகர் 'சம்பா' ஆகும். பிம்பிசாரர் காலத்தில் இது மகத நாட்டுடன் இணைக்கப்பட்டது.

**2. மகதநாடு :** பதினாறு மகாஜனபதாக்களின் இது மிகவும் பெரியது ஆகும். இதன் சுற்றளவு முன்னூறு மைல் ஆகும். இதன் தலைநகரம் ராஜகிரகம். இதுவே பின் பாடலிபுத்திரமானது. இந்த நாட்டை தோற்றுவித்தவர் பிரகத்திரதா என்பவர் ஆவார். இந்த நாடு பிம்பிசாரா, அஜாதசத்ரு என்பவர்களுடைய காலத்தில் மிகவும் புகழ் பெற்று விளங்கியது. தன் அருகில் இருந்த பல சிறு பகுதிகளை வென்று பலம் பொருந்தியதாக விளங்கியது மகதநாடு.

**3. காசி :** காசி தற்கால வாரனாசியைக் குறிக்கும். புத்தர் காலத்திற்கு முன்பு ஒரு வலிமையுள்ள நாடாகத் திகழ்ந்தது. காசிக்கும் கோசலை நாட்டிற்கும் அடிக்கடி போர்கள் நடந்தன. ஹம்சா என்ற கோசலை அரசர் காலத்தில் காசி தோற்கடிக்கப்பட்டு கோசலை நாட்டுடன் இணைக்கப்பட்டது.

**4. கோசலம் :** கோசலை நாடு தற்போது உத்திரப் பிரதேசத்திலுள்ள 'ஆவாத்' என்ற பிரதேசத்தைக் குறிக்கும். இதன் தலைநகரமாக விளங்கியது 'சரஸ்வதி' ஆகும்.

புத்தர் காலத்தில் கோசலை நாட்டிற்கும் மகத நாட்டிற்கும் அடிக்கடி போர் ஏற்படுவதுண்டு. அப்போது கோசலை நாட்டு மன்னராக இருந்தவர் பிரஜெயின்ஜித் என்பவராவார். இவர் ஒரு பெரிய கொடைவள்ளல். இரு முக்கிய பிராமணர்களுக்கு நகரங்களைத் தானமாக வழங்கினார். அஜாத சத்ருவுக்கும் இவருக்கும் பகைமை ஏற்பட்டது. பிரஜெயின் காலத்திற்குப் பிறகு காசோலை மகத நாட்டுடன் இணைக்கப்பட்டது.

**5. வஜ்ஜி :** வஜ்ஜி நாட்டில் 'லிச்சாவி' வம்சத்தினரும் 'வித்திலர்' வம்சத்தினரும் பெயர் பெற்றவர்கள். ஜகை மன்னர் காலத்தில் வித்திலர்கள் பெருமையடைந்தனர். லிச்சாவி வம்சத்தினரின் தலைநகரம் வைசாலி, மகாவீரரின் தாய் லிச்சாவி அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

**6. மல்லா :** மல்லா நாட்டில் குடியாட்சி காணப்பட்டது. இவர்களின் தலைநகரம் குஸி ஆகும். குஸி நகரமும் பாவாவும் புத்த மார்க்கத்தில் புகழ்ப் பெற்றவை. புத்தர் தனது இறுதி உணவை பாவா என்ற இடத்தில் உண்டு முடித்து முக்தயடைந்தார் என்று கூறப்படுகிறது.

**7. சேதி :** தற்காலத்தில் பந்தல்கன்ட் என்ற இடத்தைக் குறிக்கிறது. இது யமுனை நர்மதை நதிகளுக்கிடையே உள்ள பகுதியாகும். இதன் தலைநகரம் சுத்தமதி ஆகும்.

**8. வத்சா :** இங்கு முடியாட்சி நிலவியது. இதன் தலைநகரம் கௌசாம்பி ஆகும். இதனை கி.மு. ஆறாம் நூற்றாண்டில் உதயனன் என்ற மாமன்னர் ஆட்சி புரிந்தார். இவரிடம் மிகப்பெரிய படை ஒன்று இருந்தது. இவர் முதலில் புத்த மதத்தின் கொடிய எதிரியாக இருந்தாலும் பிற்காலத்தில் புத்தமதத்தை ஆதரித்தார்.

**9. குருநாடு :** தற்காலத்தில் டெல்லி, மீரட் ஆகிய இடங்கள்தான் அக்காலத்தில் குருநாடாக விளங்கியது. வேத காலத்தில் குருநாடு சிறப்பு பெற்று விளங்கியது. ஆனால் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் அதன் புகழ் மங்கியது.

**10. பாஞ்சாலம் :** தற்போது உள்ள ரோகில் கண்ட்டைக் குறிக்கும் குருநாட்டைப் போன்ற இதுவும் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் அதன் சிறப்பை இழந்தது. இதன் தலைநகரம் கம்பில்லா ஆகும்.

**11. மத்சயநாடு :** இது தற்போதைய ஜெய்பூரைக் குறிக்கும். இதன் தலைநகரம் விராத் ஆகும்.

**12. சூரசேனநாடு :** இது மத்சய நாட்டின் தென்பகுதியில் அமைந்திருந்தது. இதன் தலைநகரம் மதுரா ஆகும்.

**13. அசாக்கா :** அவந்தியின் அருகாமையில் அமைந்திருந்தது அசாக்கா. இதன் தலைநகரம் பாட்லியா ஆகும்.

**14. அவந்தி :** மாளவ நாட்டைக் குறிப்பிடுவது அவந்தியாகும். இதன் தலைநகர் உஜ்ஜயினி ஆகும். புத்தர் காலத்தில் அவந்தியை ஆண்ட மன்னர் பிரதியோட்டா என்பவராவார். அவந்தி புத்தமத வளர்ச்சிக்கு முக்கியமான இடமாகக் கருதப்படுகிறது.

**15. காந்தாரம் :** தற்காலத்தில் காஷ்மீர், தட்சசீலம் போன்ற இடங்களே அக்காலத்தில் காந்தாரம் என்று அழைக்கப்பட்டது. இதன் தலைநகரம் தட்சசீலம் ஆகும். காந்தாரம் கல்வி வளர்சிக்குப் பெயர் பெற்ற இடமாகக் கருதப்பட்டது.

**16. காம்போசா :** இது துவாரகையைத் தலைநகரமாகக் கொண்டது. இதன் தலைநகர் தொர்க்கா ஆகும். இந்த நாடு வடமேற்கு எல்லைப் புறத்தில் அமைந்திருந்தது. இதைப்பற்றி யுவான்சுவாங் குறிப்பிட்டுள்ளார்.

**அரசன் (முடியாட்சி) : Monarchy**

மேற்கூறப்பட்ட நாடுகளில் அனேக மன்னர்கள் சத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவர்களாகத் தெரிகிறது. ஆனால், சத்திரியர் அல்லாதவர்களும் அரசர்களாக இருந்தனர். அரசன் பரம்பரையாக பட்டத்தற்கு வந்தான். அரசன் பல சலுகைகளைப் பெற்று எதேச்சதிகார ஆட்சி செலுத்தி வந்தான். நிலத்தின் விளைச்சலில் அரசனுக்கு பத்தல் ஒரு பங்கு கொடுக்கப்பட்டது. ஒரு அரசனுக்கு ஆண் குழந்தை பிறந்தால் அந்த பிறப்பு நாள் பொது விழாவாகக் கொண்டாடப்படும். அப்போது குடிமக்கள் ஒவ்வொருவரும் அரசனுக்கு ‘பால்பணம்’ என்ற ஒரு சிறிய தொகையைக் கொடுப்பார்கள்.

அரசன் நீதிக்குத் தலைவனாகக் கருதப்பட்டான். அவனிடம் பல அலுவலர்கள் இருந்தனர். பல வகைப்பட்ட நீதிமன்றங்கள் காணப்பட்டன. அரசனது தீர்ப்பே முடிவாகக் கருதப்பட்டது. அரசயடம் நிலையான படை ஒன்று இருந்தது. அப்படை நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. போர்களில் வில், அம்பு, ஈட்டி, வாள்

போன்றவைகள் உபயோகிக்கப்பட்டன. யானைப்படை மீது அரசன் அதிக நம்பிக்கை வைத்திருந்தான். அரசனுக்கு வேட்டையாடும் வழக்கம் இருந்தது.

**குடியாட்சி முறை :**

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் குடியாட்சி முறையும் சில நாடுகளில் காணப்பட்டது. உதாரணமாக வஜ்ஜி நாட்டைச் சொல்லலாம். குடியாட்சி முறையில் மக்கள் தாங்களாகவே நேரடியாக ஆட்சியை நடத்துவார்கள். எல்லோரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடுவார்கள். அந்த இடத்தற்குப் பொது இடம் அல்லது போதி அல்லது சங்கா என்று பெயர். குடியாட்சி நடைபெற்ற நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நாடாளுநர் அல்லது இராஜன் என்று பெயர். உதாரணமாக லிச்சாவிநாடு பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இராஜன்களால் ஆளப்பட்டது. ஆயினும் எதிரி தங்கள் நாட்டின் மீது போர் தொடுக்கும் போது எல்லாக் குடியாட்சிகளும் ஒன்று கூடி எதிரியைத் தாக்கும் அப்பொழுது போர்த்தலைவனாக ஒரு பொதுத் தலைவனைத் எல்லாக் குடியாட்சிகளும் சேர்ந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

**நாட்டின் வருமானம் : Income**

நாட்டின் வருமானம் முக்கியமாக நிலவரி மூலம் கிடைத்தது. நிலவரி ஆறில் ஒரு பகுதியாகும். இதனைத் தவிர சிற்றரசர்கள் கொடுக்கும் பணமும் அரசரது வருமானத்துடன் சேர்க்கப்பட்டது. வியாபாரிகள் சில வரிகளைச் செலுத்தினர். மக்கள் அரசனுக்கு நன்கொடை வழங்கினர். இப்படி சேர்ந்த பணம் படை, அரசாங்க அலுவல்கள், அரச குடும்பம், சமுதாய வளர்ச்சி ஆகியவைகட்கு உபயோகப்படுத்தப்பட்டன.

**பொருளாதார நிலை : Economic Condition**

மக்கள் பலர் கிராமங்களில் வாழ்ந்து வந்தனர். விவசாயம் அவர்களின் முக்கிய தொழிலாகும். வீடுகள் நெருக்கமாக அமைந்திருந்தன. வீட்டைச் சுற்றியும் விவசாயம் நடைபெற்றது. நிலங்கள் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வேலிகள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. ஒரு கிராமத்தில் முப்பது முதல் ஆயிரம் வரை வீடுகள் இருந்தன. குடும்பத்தில் தந்தையே தலைவன். குடும்பம் சிறப்பாகக்

காணப்பட்டது. நிலவரி கிராமத் தலைவன் மூலமாக வகுக்கப்பட்டது. கிராமத்தில் ஒரு சபா இருந்ததாகத் தெரிகிறது.

கிராம வாழ்க்கை எளிமையாகவும், மகிழ்ச்சிகரமாகவும் காணப்பட்டது. குற்றங்கள் அதிகமாக இருந்ததாகத் தெரியவில்லை. கிராம முன்னேற்றத்துக்கு மக்கள் மிகவும் ஒத்துழைத்தனர். கிராமங்களில் காடுகளும், புல்வெளிகளும் காணப்பட்டன. நீர்ப்பாசன வசதி இருந்தது. நெல் முக்கியப் பயிராகவும் மற்றும் காய்கனிகள், பூக்கள், கரும்பு ஆகியவை பயிரிடப்பட்டன. மீன் பிடித்தல் வேட்டையாடுதல், பானை சட்டி செய்தல், மரம் ஏறுதல் ஆகிய தொழில்கள் நடைபெற்றன. வெளிநாடுகளுக்கு கம்பளி, பட்டு, வாசைனத் திரவியங்கள் அனுப்பப்பட்டன. பண்டமாற்று முறை கைவிடப்பட்டு நாணயமுறை பழக்கத்தில் இருந்தது.

**சமுதாய நிலை : Social Condition**

இந்திய சமுதாயமானது பல ஜாதிகளால் பிரிக்கப்பட்டிருந்தது. பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்ற பாகுபாடு காணப்பட்டது. சூத்திரர்கள் சண்டாளர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். ஜாதி வேற்றுமை சமுதாய முன்னேற்றைத் தடுத்தது. அவரவர்கள் ஜாதிக்கேற்ற தொழில்களைச் செய்தனர். சமுதாயத்தில் அடிமைகள் இருந்தனர். சிலர் தவ வாழ்க்கையை மேற்கொண்டனர். பெண்களின் நிலை திருப்திகரமாக இல்லை. மணமாகாத சில பெண்கள் சந்தையில் விற்கப்பட்டதாக கிரேக்க எழுத்தாளர்கள் கூறுகின்றனர். உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

இக்காலத்தில் மாமிச உணவு மிகவும் குறைக்கப்பட்டது. சைவ உணவு மிகவும் விரும்பப்பட்டது. பசுவதை நிறுத்தப்பட்டதாக அறிகிறோம். மக்கள் பருத்தி ஆடையையே விரும்பி அணிந்தனர். செல்வந்தர்கள் பட்டாடை அணிந்தனர். பெண்கள் ஆபரணங்கள் அணிந்தனர்.

**சமயநிலை : Religious Condition**

கி.மு. ஆறாம் நூற்றாண்டில்தான் உலக மேதைகளான ஹெராளிட்டஸ், கன்பூசியஸ் ஆகியோா வாழ்ந்து வந்தனர். இந்தியாவிலும் சிறந்த மதங்கள் புத்தராலும்,

மகாவீரராலும் தோற்றுவிக்கப்பட்டன. இந்த நூற்றாண்டில் இந்து மதக் கோட்பாடுகளான ஆத்மா அழியாதது, உயிர் கூடு விட்டு கூடு பாயும், கரும வினை தொடர்ந்து வரும் ஆகிய மூன்றும் நாடெங்கிலும் பரவி நின்றன. இந்த உயர்ந்த கொள்கையை படித்தவர்களும், துறவிகளும் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. மற்றவர்கள் உருவ வழிபாட்டைத் தழுவி வந்த இந்து சமயத்தைப் பின்பற்றி வந்தனர். மேலும் ஜாதிகளுக்கேற்ற வழிபாட்டு முறையும் காணப்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளில் தான் சமணமதமும் புத்த மதமும் இந்தியாவில் தோன்றின.

## புத்த சமயம் (BUDDHISM)

கி.மு. ஆறாம் நூற்றாண்டு, இந்திய வரலாற்றில் மிக முக்கியமான காலமாகும். அது இந்தியாவில் சமய எழுச்சி ஏற்பட்ட காலமாகும். சீனாவில் கன்ஃபூசியசும், ஈரானில் சொரஸ்டிரரும், கிரீசில் பெர்மைசும், கிரேக்க அயோனிய தீவில் ஹெராக்கிளிடசும் புதிய தத்துவக் கருத்துக்களை வெளியிட்ட காலமாகும். இந்தியாவில் புத்தர், மகாவீரர் ஆகியவர்கள் தோன்றி தங்கள் சமயக் கருத்துக்களை மக்களிடம் எளிய முறையில் போதித்து, புத்த சமயம், சமண சமயம் போன்ற புத்த சமயங்களைத் தோற்றுவித்தனர். இந்து சமயத்தில் இருந்து சில கண்மூடித்தனமான வழக்கங்களைக் களையத் தோன்றிய ஓர் சீர்திருத்த இயக்கமே புத்த சமயமும், சமண சமயமுமாகும்.

### புதிய சமயங்கள் தோன்றக் காரணங்கள் :

### 1. இந்து சமயக் கருத்துக்களின் புரியாத தன்மை :

இந்து சமுதாயத்தில் ஒரு சாதாரண மனிதனுக்கு, வேதங்கள் மற்றும் சமய நெறி நூல்களில் கூறப்படும் சடங்குகளும், சம்பிரதாயங்களும் அப்பாற்பட்டே இருந்தன. பிராமணர்களுக்கு மட்டுமே விளங்கக்கூடியதாக, சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாத சமயமாக இந்து மதம் காணப்பட்டது. ஆரிய இலக்கியங்கள் அனைத்தும் சமஸ்கிருத மொழியிலேயே இருந்ததால் அவை சாதாரண மக்களால் உணர முடியவில்லை.

**2. இந்து மதத்தில் காணப்பட்ட மூடப்பழக்கங்கள் :**

இந்து சமயத்தில் மூடப்பழக்கங்களும் ஆடம்பரச் சடங்குகளும் அதிகமாக வளர்ந்தது. உயிர் பலியிடுதல் வளர்ந்து வந்தது. மனித இனத்தற்கு மிகவும் தேவையான விலங்குகளான ஆடு, பசு, காளை மாடு போன்றவற்றை கடவுள்களுக்குப் பலியிட்டது இளகிய மனம் படைத்த இந்துக்களாலேயே வெறுக்கப்பட்டது.

**3. மந்திரங்களின் மீது கோபம் :**

வேதங்களில் காணப்பட்ட கருத்துக்களை மறந்து மந்திரங்களின் மீது மக்கள் மோகம் கொண்டனர். மந்திரத்தினால் நோயைப் போக்கவும், போரில் வெற்றி பெறவும், உற்பத்தியை அதிகரிக்கவும் முடியும் என்று மக்கள் நம்பினர். எனவே வேதங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மந்திரங்கள் முக்கியத்துவம் பெற்றது. இந்த அறிவற்ற எண்ணத்திலிருந்து மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பினர்.

**4. வேள்விகளின் கடினத்தன்மை :**

வேள்விகள் பிராமணர்களால் செய்யப்பட்டால்தான் கடவுளால் ஏற்கப்படும் என்றதால் பிற இனத்தவர் வெறுத்தனர். அத்துடன் வேள்விகள் நடத்தும் செலவும் அதிகரித்தது. அது செல்வந்தர்களால் மட்டுமே முடியும் என்ற நிலை ஏற்பட்டது. வேள்விகளில் காளை, பசு, குதிரை ஆகியவைகளைப் பலியிடுதல் மக்களை வெறுப்படையச் செய்தது. எனவே எளிமையான சமயத்தை நோக்கி ஏங்க ஆரம்பித்தனர். வேள்வி மூலம் அல்லாமல் வேறு வழிகளில் முக்தி பெறுவதற்கு மாற்று வழிகளைக் காண முற்பட்டனர்.

**5. பிராமணர்களின் ஆதிக்கம் :**

பிராமணர்கள், சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் ஆதிக்கம் செலுத்தினர். அவர்கள் வரி விலக்கும், மரண தண்டனைகளிலிருந்து விலக்கும் பெற்றவர்கள். அரசியலில் மன்னர்கட்கு ஆலோசகர்களாக வழிகாட்டிகளாக இருந்தனர். அவர்கள் தனித்தன்மையும் உயர்வையும் கொண்டவர்களாக மதிக்கப்பட்டனர். அதே சமயத்தில் சமுதாயத்தில் ஒழுக்கக் கேடான முறையிலும் சிலர் வாழ்ந்தனர். இந்து சமயம், அரசியல், சமுதாயம் ஆகியவற்றில் காணப்பட்ட பிராமண ஆதிக்கம் புதிய சமயக் கருத்துக்கள்

தோன்றக் காரணமாயின. பிராமணர்களை எதிர்த்து சத்திரியர்களால் ஆரம்பிக்கப்பட்ட சமயமே சமண சமயம், புத்த சமயம் ஆகியவை ஆகும்.

**6. சமுதாயத்தில் காணப்பட்ட சாதிமுறை :**

இந்து சமயத்தில் சாதிக் கொடுமை உச்ச நிலை அடைந்தது. சூத்திரர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் ஆகியோர் பிராமணர்களால் குறைவாக மதிக்கப்பட்டனர். சாதிக்கட்டுப்பாடுகள் அதிகரித்தன. இந்த சாதிக் கட்டுப்பாட்டுத் தளைகளிலிருந்து மீண்டு சுதந்திரமாக இயக்க மக்கள் விரும்பினர். புதிய சமயக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் இக்கட்டுப்பாடுகளை களைய முற்பட்டனர்.

மேற்கண்ட சூழ்நிலைகளின் காரணமாக புத்த சமயம், சமண சமயம் தோன்றியது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்திய மக்களின் ஆன்மீக தேவையை நிறைவு செய்யவே இச்சமயங்கள் தோன்றின.

புத்த சமயமானது இஸ்லாம், கிறிஸ்தவ மதம் போன்று ஒரு பெரும் உலக மதமாகத் திகழ்கின்றது. இந்த சமயம் தோன்றியது, தோன்றி வளர்ந்தது இந்தியாவில். ஆனால், தற்சமயம், தென் கிழக்கு ஆசிய நாடுகளான ஜப்பான், சீனா, பர்மா, இந்தோனேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் பல இலட்சக்கணக்கான மக்கள் இம்மதத்தைப் பின்பற்றுகின்றனர். சமண சமயத்தைப் போன்று, இந்து மதத்திலிருந்த சில கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களைக் களைத் தோன்றிய ஓர் சீர்திருத்த இயக்கமே புத்த சமயம் ஆகும். கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட புத்த சமயம், மக்களுக்கு புதிய சமயக் கருத்துக்களைப் போதித்து அவர்களை நல்வழிப்படுத்தியது. கௌதம புத்தரின் கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டது புத்த மதம் ஆகும்.

**புத்தரின் பிறப்பு :**

இமயமலை அடிவாரத்திலுள்ள நேபாள நாட்டில் கபிலவஸ்துவின் (Kapilavastu) சிற்றரசரான சாக்கியகுலத்தலைவர் சுந்தோதனருக்கும் (Shuddhodhana) மாயாதேவிக்கும் மகனாக கி.மு. **563–**ல் புத்தர் பிறந்தார். புத்தரின் பிறப்பைப் பற்றி ஜாதகக் (Jataka)கதைகளில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌர்ணமி அன்று கபிலவஸ்துவே விழாக்கோலம் பூண்டிருந்தது. அரசி மாயாதேவி பௌர்ணமிக்கு ஏழு நாட்களுக்கு முன்பாகவே விரதம் பூண்டு வந்தார். பௌர்ணமி அன்று காலையிலேயே நீராடி, நறுமணம் பூசி உணவுண்ட பின்பு இரவில் துயில் கொண்டார். தூக்கத்தில் ஒரு கனவு வந்தது. தெய்வீக மணம் பரப்பும் மலர்களுக்கு நடுவே ஒரு கட்டிலில் மயாதேவி படுத்திருந்தார். அப்போது போதிச்சத்துவர் (Bodhi sathva) ஒரு வெள்ளை யானையாக மாறினார். ஒரு அழகான வெள்ளிமலையிலிருந்து இந்த யானை தனது துதிக்கையில் ஒரு தாமரை மலருடன் மாயாவதி படுத்திருந்த கட்டிலை நோக்கி வந்தது. கட்டிலை மூன்று முறை சுற்றி மாயாவதி வயிற்றுக்குள் சென்றது யானை.

மறுநாள் தான் கண்ட கனவை அரசரிடம் கூறினார் மாயாவதி. அரசர் புகழ்ப் பெற்ற அறுபத்தி நான்கு பிராமணர்களை அழைத்து வந்து கனவுக்கு விளக்கம் கேட்டார். பிராமணர்கள் கூறியதாவது : ‘அரசே, பயம் வேண்டாம். பிறக்கப்போவது ஆண்மகன் தான். அவர் வீட்டிலேயே வாழ்ந்து வந்தால் புகழ் பெற்ற அரசனாவார். வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டால் உலக துன்பங்களை போக்கும் புத்தராக மாறிவிடுவார்’ என்றார்.

அரசி மாயாவதி பத்து மாதங்கள் போதிசந்துவரை தனது வயிற்றில் சுமந்து வந்தார். குழந்தைப் பிறப்புக்காக தனது நாடான தேவதகாவுக்கு (Devadaha) ஆயிரம் பேருடன் புறப்பட்டுச் சென்றார். போகும் வழியில் சால் (Sal) மரங்கள் அடர்த்தியாக இருந்த லும்பினி தோட்டத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். அங்கு சென்று ஒரு சால் மரக் கிளையைப் பிடித்து வளைத்தபோது பிரசவ வலி உண்டாகிவிட்டது. உடனே பாதுகாப்பு செய்யப்பட்டது. அந்தக் கிளையைப் பிடித்தவாறே நின்று கொண்டிருக்கும்போதே குழந்தை பிறந்தது. புத்தர் பிறந்தபோது மாயாதேவியின் உடம்பிலிருந்து எவ்வித அசுத்தமான நீரும் வெளிவரவில்லை. புத்தரின் உடம்பில் எவ்வித அசுத்தமும் இல்லை. பட்டுத்துணியில் போடப்பட்ட ஆபரணம் போன்று புத்தர் ஜொலித்தார்.

**புத்தரின் வாழ்க்கை வரலாறு :**

புத்தரின் இயற்பெயர் சித்தார்த்தர். இவரை இவரது குடும்பப் பெயரான கௌதமர் என்ற பெயரைச் சேர்த்து கௌதம சித்தார்த்தர் என்று அழைத்தனர். இவர் பிறந்த ஏழு நாட்களில் இவரது தாய் இறக்கவே, மாயதேவியின் சகோதரி மகாபிரஜாபதி என்பாள் இவரை வளர்த்து வந்தார். சோதிடர் கூறிய கூற்றிற்கு அஞ்சி தன் மகன் எங்கே துறவியாகிவிடுவானோ என்று பயந்த சுத்தோதனர் அவரை துன்பம் தீண்டா இன்பச் சூழலில் வளர்த்தார்.

மதிநுட்பமும், திறமையும் கொண்ட சித்தார்த்தர் தனது பதினாறாம் வயதில் தனது முறைப் பெண்ணான யாசோதரை என்ற இளவரசியை மணந்தார். இவர்களுக்கு இராகுலன் என்ற அழகிய ஆண்மகன் பிறந்தான். சித்தார்த்தரின் ஆடம்பரமான சுகபோக வாழ்க்கை மெல்ல மெல்ல சலிப்புறலாயிற்று. அரண்மனை வாழ்க்கை வெறுத்தது. இந் நிலையில், பிணி, மூப்பு, மரணம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகள் இவர் பார்வைக்கு வந்தன. மனது உருகினார். துன்பம் வாழ்க்கையின் ஒரு பெரும் பகுதி எனக் கண்ட சித்தார்த்தர் இப்பிடியிலிருந்து மனித இனத்தை மீட்க வழிகாண முற்பட்டார். தனது **29–**ஆம் வயதில் ஒரு நாள் நள்ளிரவில் தன் அன்பு மனைவியையும், மகனையும் விட்டுப் பிரிந்து, அரண்மனையை விட்டு வெளியேறி மெய்யறிவு தேடிச் சென்றார்.

அரச பாரத்தையும், இல்லற இன்பத்தையும் துறந்து காட்டிற்குச் சென்ற புத்தர், எவ்விதமான குறிக்கோளுமின்றி உண்மையைத் தேடி அலைந்தார். காட்டில் இரண்டு பிராமண குருக்கள் கூறிய சமய விளக்கமும் அவருக்கு திருப்தி அளிக்கவில்லை. எனவே, தொடர்ந்து ஆறாண்டுகள் கடும் தவம் புரிந்தார். உடல் இளைத்து மெலிந்தார். பலன் ஏதும் இல்லை. முடிவில் தாம் கைக்கண்ட வழிகள் சரியானவை அல்ல எனத் தெரிந்துகொண்டார். அதன் பின் நைரஞ்சனா என்ற ஆற்றின் கரையிலிருந்த உருவெலா என்ற கிராமத்திற்கு வந்தார். அங்கு சுஜாதை என்ற இடைப்பெண் அன்போடு அளித்த உணவை அருந்திவிட்டு ஓர் அரசமரத்தடியில் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டார். மெய்யறிவு பெறும் வரை இவ்விடத்தை விட்டு விலகேன் என்று உறுதி பூண்டார். மசா என்ற காதல் தேவதை இவர் கவனத்தை சிதைக்க

முயன்று தோற்றது. நாற்பத்தி ஒன்பது நாட்கள் கடுந்தவத்திற்குப் பிறகு தாம் தேடிய மெய்யறிவை மிகத் தெளிவாகக் கண்டுகொண்டார். துன்பங்களுக்கான காரணங்களையும் அவைகளைக் களைய வழிவகைகளையும் கண்டுகொண்டார். இவர் மெய்யறிவைப் பெற்றமையால் புத்தர் எனப்பட்டார். புத் என்றால் அறிவு, புத்தர் என்றால் அறிவோர் எனப் பொருள்படும். இவர் எந்த மரத்தின் அடியில் ஞானஒளி பெற்றாரோ, அம்மரம் போதிமரம் என வழங்கப்படலாயிற்று. அவர் மெய்யறிவைப் பெற்ற இடம் புத்தகயா என்றும் பெயர் பெற்றது. அது பௌத்தர்களுக்கு புண்ணியஸ்தலம் ஆனது.

மெய்யறிவைப் பெற்ற பின்னர் காசிக்கு அருகிலுள்ள சாரநாத் என்னுமிடத்திலுள்ள மான்வனத்தில் (Dear Park) தனது முதல் சமயச் சொற்பொழிவை நிகழ்த்தினார். மொகலானர், ஆனந்தர், வேதத்தர், அனுருந்தர், உபாலி ஆகியோர் புத்தரின் சீடர்களானார்கள். தன்னுடைய கருத்துக்களை மக்களின் தாய்மொழியான பாலி மொழியிலேயே போதித்தார். சுமார் 45 ஆண்டுகள் தமது சமயத்தைப் பரப்பிய புத்தர், தனது என்பதாவது வயதில் உத்திரப் பிரதேசத்திலுள்ள குசி நகர் தற்கால கோரக்பூர் என்ற இடத்தில் மறைந்தார்.

**புத்தரின் காலம் : கி.மு. (567 – 487)**

புத்தரின் காலத்தைப் பொறுத்த வரையில் வரலாற்று ஆசிரியர்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். டாக்டர் ஸ்மித், புத்தர் கி.மு. 487–ல் மறைந்தார் என்று கூறிகிறார். டாக்டர் கீகர் என்பவர் கி.மு. 483 என்றும், திவான் பகதூர் சுவாமிக் கண்ணு பிள்ளை கி.மு. 478 என்றும் கூறுகின்றனர். ஆனாலும், இறுதியாக கி.மு. 487–ஆம் ஆண்டை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

**புத்தரின் போதனைகள் :**

புத்தர் நான்கு சிறந்த உண்மைகளைப் போதித்தார். அவை வருமாறு :

**1. துன்பம்** : வருத்தம், நோய், மூப்பு, சாவு முதலியவை நிறைந்த மக்கள் வாழ்க்கை எளிதில் விலக்க முடியாத துன்பம் நிறைந்தது.

**2. அதன் தோற்றம்** : இந்த துன்பங்களுக்குக் காரணம் சிற்றின்ப ஆசையே.

**3.** இத்தகைய துன்பங்களை ஒழிக்க வேண்டுமென்றால், ஆசை ஒழிக்கப்படவேண்டும்.

**4. அட்டசீலம் :** ஆசை ஒழிக்கப்பட வேண்டும் என்றால் அட்டசீலம் என்ற எட்டு நன்னெறிகளைக் கடைபிடிக்க வேண்டும். அவை வருமாறு :

**1. நன்னமிக்கை** : மேற்கண்ட நான்கு உண்மைகளில் முழு நம்பிக்கையுடன் திகழ வேண்டும்.

**2. நல்லெண்ணம்** : சிற்றின்பத்தை அகற்றவும் கோபத்தைத் தடுக்கவும், மற்றவர்க்குத் தீமை செய்யாதிருக்கவும் தீர்மானிக்க வேண்டும்.

**3. நல்வாய்மை** : பயனற்றதும், கடுமையானதும், பொய்யானதுமான கடுஞ் சொற்களைக் கூறாதிருக்க வேண்டும். இன்சொல்லே பேச வேண்டும்.

**4. நற்செய்கை** : பிறரைத் துன்புறுத்தாமலும் களவு செய்யாமலும் நன்னெறியுடன் நடத்த வேண்டும். அதாவது திருட்டு தீயொழுக்கம் கூடாது.

**5. நல்வாழ்க்கை** : சிறந்ததோர் இலக்குக்குத் தக்கவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

**6. நன்முயற்சி** : தீமையை அகற்றி நற்குணங்களை நம்மிடம் வளர்க்க முயற்சி செய்யவேண்டும்.

**7. நற்கவனம்** : சிற்றின்ப ஆசையும், துன்பமும் தன்னை வந்து அடையா வண்ணம் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்.

**8. நல்யோகம்** : (தியானம்) தன்னுடைய குறிக்கோளை அடைய மனதை ஒருவழிப்படுத்தி தியானம் செய்ய வேண்டும்.

**பத்துக்கட்டளைகள் :**

புத்தர் ஆசையை வென்று ஆனந்த நிலையை அடைவதற்கு தன்னுடைய பத்துக் கட்டளைகளை முறையாகப் பின்பற்ற வேண்டுமென்றார். அவைகளாவன : உயிர்களைக் கொல்லாமை, களவு செய்யாமை, பிறன்மனை நோக்காமை, பொய் சொல்லாமை, புறங் கூறாமை, குற்றம் கூறாமை, மது அருந்தாமை, முதியோரைப் போற்றல், பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், தர்மம் செய்தல் ஆகியவையாகும்.

**புத்தசங்கம் :**

புத்தர் தமது கொள்கையைப் பரப்பவும் தன்னுடைய மதத்தற்குப் பிறரை மாற்றம் செய்யவும் தன்னுடைய மாணவர்கள் அடங்கிய ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். அது பிற்காலத்தில் புத்த மதம் வெற்றியடைவதற்கு உதவிய ஒரு கருவியாக விளங்கியது. அச்சங்கத்தில் ஆண், பெண் துறவிகள் சேர்ந்தனர். சங்கத்தைச் சார்ந்த துறவிகள் எளிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென புத்தர் எதிர்பார்த்தார். இவர்கள் அளவாகவே உண்ண வேண்டும். மிருதுவான படுக்கைகளில் உறங்கக் கூடாது. பணம் வைத்துக் கொள்ளக்கூடாது. இன்னிசை பாடக்கூடாது. மேலும், இவர்கள் தலையை முழுமையாக மழுக்கிக் கொள்ள வேண்டும். இவர்கள் மஞ்சள் ஆடை அணிந்து புத்தம், சங்கம், தர்மம் என்ற இம்மூன்று நிறுவனங்கட்கும் உண்மை உள்ளவராக நடந்துகொள்ள வேண்டும்.

**புத்த சமயத்தின் வளர்ச்சி :**

புத்தரின் வாழ்நாளிலேயே புத்த சமயத்திற்கு பேராதரவு கிடைத்தது. இதற்கு முக்கியக் காரணம் புத்தரின் போதனையின் எளிமையே ஆகும். மேலும், அரசர்களின் ஆதரவும், எளிதில் புரிந்து கொள்ளும் எளிமையான கொள்கைகளும், மக்களின் கருத்துகட்கு மதிப்பளிக்கும் தன்மையும், புத்தரின் வசீகரத் தன்மையும் புத்த சமய வளர்ச்சிக்கு பெரிதும் காரணம் ஆனது.

புத்தர் மறைந்த பின் முதல் புத்த சமய மாநாடு கி.மு. 483–ல் ராஜகிரிஹாவின் அருகில் மகாகஷ்யப் (Mahakashap) என்பவர் தலைமையில் கூடியது. புத்தரின் கொள்கைகட்கும், போதனைகட்கும், முழுமையான உருவம் கொடுக்கப்பட்டது. புத்தரின் மாணவர் ஆனந்தா என்பவர் சுத்தபீடகம் என்ற நூலைத் தொகுத்தார். இப்புத்தகம் புத்தான் போதனைகளையும் கோட்பாடுகளையும் விளக்குகிறது. உபாலி என்ற மற்றொரு மாணவர் வினய பீடகம் என்ற நூலைத் தொகுத்தார். (பீடகம் என்றால் சட்டப்பேழை என்று பொருள்). இது புத்த பிட்சுக்கள் பிக்குணிகள் பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்களை விளக்குகிறது.

மன்னர்கள் புத்த சமயத்தைப் பரப்புவதற்கு முயற்சி எடுத்தனர். இதனால் புத்தசமயம் வளர்ச்சியடைந்தது. இரண்டாம் புத்தசமய மாநாடு புத்தர் இறந்த நூறு

ஆண்டுகள் கழித்து சபக்கமி (Sabakami) என்பவர் தலைமையில் கி.மு. **383–ல்** வைசாலியில் கூடியது. கி.மு. **250–ல்** மூன்றாம் புத்தசமய மாநாடு பாடலிபுத்திரத்தில் அசோகரின் அரவணைப்பில் கூடியது. மொஹலி புத்ததிஸ் என்பவர் தலைமை தாங்கினார். புத்த சமயத்தில் காணப்பட்ட பல பிரிவுகள் இணைக்கப்பட முயற்சி செய்யப்பட்டது. புத்த தத்துவ விளக்கங்களைக் கூறும் அபிதாமபீடகம் என்ற நூல் தொகுக்கப்பட்டது. தெரவாடின் முறைப் புத்த தத்துவங்களே உண்மையானவை என்று ஏற்கப்படடு ஹுனயானம் என்றழைக்கப்பட்டது. புத்த சமயத்தின் பேரறிஞர்களான வசுமித்திரர், அஸ்வகோசர் தலைமையில் கனிஷ்கர் ஆட்சியில் காஷ்மீரத்தில் குந்தலவாணா என்ற இடத்தில் நான்காம் புத்த சமய மாநாடு கி.பி. **72–ல்** கூடியது. விபஷாஸ் என்ற நூல் தொகுக்கப்பட்டது. ஹர்ஷர் ஆட்சியில் புத்த சமயமே நாட்டின் ஆட்சி சமயமாக விளங்கியது. நாளந்தா பல்கலைக்கழகம் புத்த பிட்சுகளை பயிற்றுவித்தது. இது மகாலான பல்கலைக்கடினமாகும். வல்லாபியில் ஹுனயான பல்கலைக்கழகம் ஒன்று செயல்பட்டு வந்தது.

மேலும் புத்த சமயம் இந்தியாவில் மட்டுமின்றி அண்டை நாடுகளான இலங்கை, பர்மா, சயாம், லாவோஸ், கம்போடியா, சீனா, ஜப்பான், இந்தோனேஷியா, ஆகிய நாடுகளிலும் பரவியது. அசோகர் காலத்தில் புத்த சமயம் இந்தியாவிலிருந்து மத்திய ஆசியாவிற்குப் பரவியது. அசோகர் காலத்திற்குப் பிறகுதான் புத்த சமயப் பரப்பாளர்கள் சீனாவிற்குச் சென்றனர் என்று சீன மரபுரைகள் தெரிவிக்கின்றன. மத்திய ஆசியாவின் மீது படையெடுத்த சீன தளபதி ஒருவர் கி.மு. **121–ஆம்** ஆண்டில் புத்தான் தங்கச் சிலையுடன் திரும்பி வந்ததாக சீனக் குறிப்பு தெரிவிக்கிறது.

ஆனால் கி.பி. முதலாம் நூற்றாண்டில்தான் புத்த சமயம் சீனாவில் பரவியிருக்க வேண்டுமென்று பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் கருதுகிறாகள். சீனப் பேரரசின் அழைப்பிற்கிணங்க தாமரரத்னா, கஷ்யப்ப மாதங்கா (Kashyappa Matanga) என்ற இரு புத்த துறவிகள் சீன அவைக்குச் சென்றனர். அவர்களுக்காக தலைநகர் பீகிங்கில் மடம் ஒன்று கட்டுமாறு ஆணையிட்டார் பேரரசர். அந்த மடம் ‘வெண் புரவி மடம்’ என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அந்த இரு துறவிகளும் புத்த சமய நூல்களையும் திருச் சின்னங்களையும் வெள்ளைக் குதிரை மீது வைத்து எடுத்துச் சென்றதால் இப்பெயர் பெற்றது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்த கோசர் (Budha Gosha) என்பவரும் புத்த சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டார். ஆந்திரா அல்லது பீகாரில் பிறந்த இவர், வடமொழி வேதங்களைக் கற்று பின்னர் பௌத்த மதத்திற்கு மாறினார். அக்காலத்தில் பிரபலமாக இருந்த பாலி மொழியில் இவர் பெரும்புலமை பெற்றிருந்தார். இவர், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கை சென்றார். புத்த சமயத்தை நன்கு கற்ற இவர், திரிபீடகம் என்ற நூலுக்கு பிரிவுரை வழங்கினார். மேலும் விசுத்தி மார்க்கம் என்ற தத்துவ நூலையும் எழுதினார். சிங்கள மொழியில் இருந்த பல பௌத்த பிரிவுரைகளை பாலி மொழியில் மொழி பெயர்த்துள்ளார். பௌத்த வேதப் பிரமாண நூல்களுக்கு புத்தகோசர் எழுதிய விரிவுரைகள் பத்துப் பெருந் தொகுதிகளாக உள்ளன. இலங்கையில் இன்று நிலவும் பௌத்த மதத்தை உருவாக்கித் தந்த புத்தகோசர் தன் நூல்களில் பலவற்றை இந்தியாவிலேயே எழுதினார். புத்தகோசர் தனது இறுதிக் காலத்தில் புத்தகயா சென்று அங்கேயே காலமானார் என்று கூறப்படுகிறது.

புத்தசமயம் தோன்றிய புனித பூமியான இந்தியாவைக் காணவும், புத்த சமய நூல்களைத் திரட்டவும் பல சீனத் துறவிகள் பெரிதும் விரும்பினர். அவ்விதம் இந்தியாவிற்கு வந்தவர்களுள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் வந்த பாகியான், ஏழாம் நூற்றாண்டில் வந்த யுவான்சுவாங், இட்சிங் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த துறவிகள் தாங்கள் கண்ட இந்தியாவைப் பற்றிய பல குறிப்புகளையும் எழுதி வைத்துள்ளார்கள்.

**மகாயானம் : Mahayanam**

புத்த சமயம் ஆரம்ப காலத்தில் ஹுனயானம் (தேரவாதம்) எனப்பட்டது. ஆனால் இதன் பிற்கால வளர்ச்சியே மகாயானம் எனப்பட்டது. அது முற்றிலும் கடவுளைப் பற்றியோ கடவுள் வழிபாட்டினைப் பற்றியோ புத்தர் வழிபாட்டைப் பற்றியோ கூறவில்லை. இதன் போதனை ஒவ்வொருவரும் தமது சுயமுயற்சியால் நற்கதியடைய வேண்டும் என்பதேயாகும். மேலும், மகாயானம் புத்தரால் பயன்படுத்திச் சென்ற சில பொருட்களை வழிபட அனுமதித்தது. புத்தர் பயன்படுத்திய குடை, காலணிகள், புத்தரின் பூத உடல் எரிக்கப்பட்ட சாம்பல் வைக்கப்பட்ட இடமான ஸ்தூபி மற்றும் போதிமரம் ஆகியவற்றை வழிபாடு செய்ய இச்சபை அனுமதித்தது. ஆனால் காலப் போக்கில் புத்த சமயத்தனர் புத்தரின் உருவச்சிலைகளை வணங்க முற்பட்டனர்.

புத்தசமயம் மகாயான புத்தமாக உருமாறியதனால் ஏற்பட்ட விளைவுகளில் மிகச் சிறந்ததெனக் கருதப்படுவது காந்தாரச் சிற்பக்கலையின் (Gandhara Sculpture) தோற்றமாகும். வட மேற்கு இந்தியாவில் பெஷாவர் நகரைச் சுற்றியிருக்கும் காந்தாரம் என்ற பகுதியில் தோன்றி வளர்ந்ததனால் இந்த சிற்பக் கலைக்கு காந்தாரக்கலை என்ற பெயர் நிலைத்தது. கிரேக்கக் கடவுளை மாதிரியாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட புத்தரின் முழு உருவச் சிலைகள் கனிஷ்கர் காலத்தில் செதுக்கப்பட்டன. இந்திய கிரேக்கக் கலைகளை இணைத்து உருவான கலையே காந்தாரக்கலை. இச்சிலைகளின் அமைப்பு அதாவது சிற்பங்களை வடிக்க எடுத்துக்கொண்ட கருப்பொருள் இந்தியத் தன்மையானதாகவும் வடிக்கும் முறைகளில் கிரேக்க பாணியையும் கொண்ட கலப்பாக காந்தாரக்கலை அமைத்தது.

புத்த ஆலயங்கள் பல கட்டப்பட்டன. புத்த பிரானுக்குத் திருவிழாவும் ஊர்வலமும் நடத்தப்பட்டது. பூவகைகள் மற்றும் பழங்கள் புத்தருக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நறுமணப் புகைகள் புகைக்கப்பட்டன. புத்தரை வழிபட்டதோடன்றி போதி சத்துவர்களையும் (கடவுள் தன்மையில் பாதி பெற்றவர்கள் – Semi-divine) புனிதராகக் கருதி மக்கள் வழிபட்டனர். மக்களின் பாவங்களைப் போதி சத்துவர்கள் எடுத்துக் கொள்வதாகவும் அதனால் மக்கள் எளில் பாவநிவாரணம் பெறமுடியும் எனவும் எண்ணி அவர்களை வழிபட்டனர். இவ்வாறு தன்னம்பிக்கையை (Self-relinnce) விடுத்து இடைத்தரகர்களைச் சார்ந்து நிற்கும் நிலைமை (Dependence) ஏற்பட்டது. இது புத்தான் போதனைகளுக்கே எதிரானது. இந்து முறையைப் போல சொர்க்கம், நரகம், ஆகியவை வழக்கத்தில் வந்தன. சமயச் சடங்குகளிலும் மந்திர தந்திரங்களிலும் மக்களுக்கு நாளுக்கு நாள் நம்பிக்கை பெருகியது.

மகாயானப் பிரிவினர் மேலும் இருபிரிவாகப் பிரிந்தனர். அவர்கள் மத்திய மிகா (Madhyamikas) எனவும், யோகாச்சாரா (Yogachara) எனவும் இரு பிரிவாளர்கள் தோன்றினர். மத்யமிகாக்கள் உலகும் முக்தியும் நிலையற்றவை என்ற கொள்கையை உடையவர்கள். ஆனால், யோகாச்சாரர்கள் உலகுதான் நிலையற்றது முக்தி (Nirvana) நிலையானது என்றனர்.

**ஹீனயானம், மகாயானம் – வேறுபாடுகள் :**

1. புத்தர் கூறிய கூற்றுக்களை அப்படியே பின்பற்ற வேண்டும் என்றவர்கள் ஹீனாயானவதிகள். மகாயானப் பிரிவினர் புத்தர் கூற்றுகளுக்குப் புது விளக்கம் கொடுத்து ஏற்றுக் கொண்டனர்.

2. ஹீனயானவதிகள் (தேரவாதிகள்) புத்தரையும் அவர் கூறிய அறங்களையும் அவர் ஏற்படுத்திய அமைப்பான சங்கத்தையும் முதன்மையானவைகளாகக் கருதிப் போற்றினர். ஆனால், மகாயானப் பிரிவினர் புத்தருக்கு முன்னிருந்த எண்ணில்லா புத்தர்களையும் போற்றி கௌதம புத்தரை அவர்களுள் ஒருவராகக் கருதினர். ஒவ்வொருவரும் அவரவர் வாழ்ந்த காலத்திற்கேற்ப அறக்கோட்பாடுகளை மக்களுக்கு வழங்கினர் என்று கருதினர்.

3. ஹீனயானப் பிரிவினர் புத்தர் கூறிய எண்வகைத் தூய நெறிகளையும் வழுவாது பின்பற்ற வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். இல்லறத்தார் அந்த நெறிகளை இயன்ற மட்டும் பின்பற்ற வேண்டும். துறவிகள் உயர்நிலையாம் முக்தி நிலை அடைவதற்குரிய நன்னெரிகள் அனைத்தையும் பின்பற்றி அன்பு நிறைந்தவர்களாக விளங்க வேண்டும் என்று ஹீனயானம் கூறுகிறது.

ஆனால் மகாயானப் பிரிவு போதி சத்துவரே உண்மையான பௌத்தர் என்று கூறுகிறது. மேலும் ஒவ்வொருவரும் புத்தராகத் தம் தகுதியை உயர்த்திக் கொள்ளவேண்டும். அதற்குத்தான் எப்போதும் பிறர்மீது அன்புடையவர்களாகவும் பிறர் நலனுக்காக உழைக்கும் மனம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். பெருந்தன்மை, ஒழுக்கம், பொறுமை, விழிப்புணர்வு, தியானம், அறிவுடமை, ஆகிய ஆறு பெருங்குணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் கூறுவர் மகாயானப் பிரிவினர்.

4. ஹீனயானக் கோட்பாட்டின் படி ஒவ்வொருவரும் தத்தம் வீடு பேற்றிற்காக புத்தர் கூறிய நெறிகளைப் பின்பற்றி வாழ வேண்டும். ஆனால் மகாயானக் கோட்பாடடின்படி பௌத்தர்கள் அனைவரும் அறிவு, கருணை, எப்பொழுதும் உதவும் பெருந்தன்மை ஆகிய குணங்களைக் கொண்ட புத்தர் மற்றும் போதிசத்துவர்களின் உதவியினை எதிர்நோக்கி அவர்களைச் சார்ந்திருக்கலாம்.

5. ஹீனயான தத்துவ இலக்கியங்கள் நீதிகளையும், உளவியலையும் கொண்டு பகுத்தாயும் தன்மை கொண்டவை. ஆனால், மகாயானர்களின் தத்துவ நூல்கள்

பெரிதும் உரையாடல்களாகவும், அற்புதச் செயல்களைப் பற்றிய செய்திகளைக் கூறுவனவாயும் இருக்கும்.

6. ஹ ீனயானவாதிகள் கௌதம புத்தா கூறிய அறவுரைகளிலும் தம் அனுபவத்தில் கண்ட உண்மைகளிலும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். மகாயானர்கள் போதி சாத்துவர்களும் புத்தர்களும் வழங்கும் அருளில் நம்பிக்கை வைத்தனர்.

இவ்வாறு பல வேறுபாடுகளைக் கொண்டு வளர்ந்த புத்த மதத்தில் படிப்படியாக ஒவ்வொரு பிரிவிலும் பல்வேறு உட்பிரிவுகள் தோன்றின.

**புத்த சமய நூல்கள் :**

புத்த சமயத்தின் தோற்றத்தற்குப் பின்னர் புத்தசமயக் கோட்பாடுகளை விளக்கும் பல நூல்கள் வெளியிடப்பட்டன. திரிபீடகங்கள் (tripetakas) என்று அழைக்கப்பட்ட மூன்று நூல்கள் புத்த சமயத்தின் ஆரம்ப நூல்களாகும். சுந்தபீடகம், வினைய பீடகம், அபிதம்ம பீடகம் (Suta Pitaka, Vinay Pitaka, Abhidamma Pitaka) என்பவையே திரிபீடகங்களாகும். இந்த நூல்கள் பண்டைய பிராகிருத மொழியின் இலக்கிய வழித் தோன்றலான பாலமொழியில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூல்களாகும்.

சுத்த பீடகத்தில் புத்தக் கோட்பாடுகளின் விளக்கமும் புத்தர் ஆரம்ப காலத்தில் தமது மிக முக்கிய மாணாக்கர்களுக்குப் போதித்த கருத்துக்களின் விளக்கங்களும் காணப்படுகின்றன. வினய பீடகத்தில் பிட்சுகளின் நன்னடத்தை, வாழ்க்கை முறை அனைத்தும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. அபிதம்ம பீடகத்தில் புத்த தம்மா (Dhamma) பற்றிய விளக்க நுணுக்கங்களும் உயர் தத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளன.

திரிபீடகங்களைத் தவிர தம்மபாதங்கள், திரகதா, தேரிகதா, ஜாதகக் கதைகள் (Dhammapada, Therahatha, Jataka Tales) போன்ற பல்வேறு இலக்கியங்களும் புத்த சமயக் கோட்பாடுகளை வலியுறுத்துகின்றன. ஜாதகக் கதைகள் புத்தரின் முற்பிறவிகளைப் பற்றிக் கூறுகின்றன. புத்த வம்சா என்ற நூல் புத்தரின் 24 வாழ்கூகையைக் குறித்த மரபுவழி கதைகளை கூறுகிறது. தம்மபாதம் என்ற நூல் புத்தான் 423 பொன்மொழிகளை விவரிக்கிறது.

புத்த ஜாதகக் கதைகள் பாலி மொழியில் உள்ள தீரிபீடகங்களுள் இரண்டாம் பீடகமான சுத்த பீடகத்தில் உள்ள குத்திகநியாயம் (KhuddakaNikaya) என்ற பிரிவில் பத்தாம் நூலாக உள்ளது. இந்த நூலில் மொத்தம் 547 கதைகள் உள்ளன. ஒவ்வொரு கதையும் இடையிலோ இறுதியிலோ பாடல்களைக் கொண்ட உரைநடையாகவோ உள்ளது. ஒவ்வொரு கதை தொடங்குவதற்கு முன்னும் புத்தர் வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றும் கூறப்பட்டுள்ளது. இக்கதைகள் அனைத்தும் அவைப்பயன் ஒன்றையே கருத்தில் கொண்டவை அல்ல. கதைக்குப் பின்னால் ஆழமான படிப்பினைகளும் உள்ளன. அவை சிந்தனையைத் தூண்டுவன. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் கூறுகின்றன.

ஜாதகக் கதைகள் புத்த மதக் கோட்பாட்டினை வலியுறுத்துவனவாகவும் உள்ளன. புத்தரின் முற்பிறவிகளைப் பற்றிய செய்திகள் உள்ளன. புத்தர் சாக்கியமுனி கௌதம புத்தராக பிறப்பதற்கு முன்பு போதி சத்துவராகப் பல்வேறு பிறவிகள் எடுத்துள்ளமையும் இக்கதைகள் கூறப்பட்ட சூழல்களின் காணப்படும் செய்திகளும் இந்திய வரலாற்றுக் கருபூலமாக மட்டுமின்றி அக்கால சமுதாயத்தன் பண்பாட்டினைக் காட்டும் விளக்கமாகவும் அமைகின்றன.

**புத்தரின் சிறப்பு :**

புத்தர் பேரன்பினர் என்றும், அடக்க முடியாத உள்ளங்களை அடக்குபவர் என்றும் புகழப்பட்டிருக்கிறார். அறிவுரை கூறுவதில் திறமை பெற்றிருந்தார். சிறு கதைகளுடனும், உவமான உவமேயங்களுடனும் நகைச்சுவை மிக்க முறையில் தனது கருத்துக்களை கூறினார். பேசும் பேச்சிலும் எண்ணும் எண்ணத்திலும் செய்யும் செயலிலும் அஹிம்சை இருக்க வேண்டுமென்றார் புத்தர். இக் கொள்கையே காந்தி அடிகளின் வாழ்வில் அடிப்படைத் தத்துவமாக இருந்து வந்தது.

புத்தர் ஒரு சிறந்த நன்னெறியாளர். தன்னைப் பின்பற்றிய மக்களிடம் சமய வெறுப்புணர்ச்சியின்றி பல சமயத்தினருக்கும் அறம் செய்யவேண்டுமென்றார். வீட்டுப்பேறு எவ்வாறு அடையப் பெற வேண்டுமென்று கூறினாரே தவிர மக்களை

விடுவித்து விடுவதாக நடிக்கவில்லை. வினையை நடத்தி வைக்கும் ஒரு பரம்பொருள் கிடையாது என்றும், அது தானாகவே இயங்குகிறது என்றும் புத்தர் நம்பினார். எல்லாம் வல்லமை நிறைந்த ஒரு பொருளைப் பற்றிய அவர் ஐயம் தெளிவுற விளக்காததால், அவர் மறைவிற்குப் பின்னர் அவருடைய அறிவுரைக்கு மாறாக அவரையே ஒரு கடவுளாகக் கருதும் நிலை ஏற்பட்டது. இவருடைய போதனைகள் பெரும் பயனை விளைவித்தன. இவர் புதிய சமயத்தையோ, புதிய இயக்கத்தையோ தோற்றுவிக்கவில்லை. ஒரு சமுதாய சீர்திருத்தவாதியாகவே திகழ்கிறார்.

புத்தரின் குணநலன்களையும் பண்புகளையும் போற்றி சர். எட்வின் அர்னால்டு என்பவர் ‘புத்தர் ஓர் ஆசிய ஜோதி’ என்று புகழ்ந்துள்ளார். மற்றும் நிஸ் டேவிட்ஸ் என்பவர் ‘புத்தர் ஆசியாவின் ஜோதி மட்டுமன்று, உலகின் ஜோதியாவார்’ என்று புகழ்ந்துள்ளார். புத்தர் இயேசு கிறிஸ்துவுடன் ஒப்பிடப்படுகிறார். விரோதிகளை அன்பால் வெல்ல முடியும் என்றும், அறிவு, மனத் தூய்மை ஆகியவை ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது என்று கூறும் புத்தர், இயேசு கிறிஸ்துவைப் போன்று உயர்ந்து நிற்கிறார்.

ஒவ்வொரு ஆண்டும் புத்தரின் பிறந்த தினம் புத்த பூர்ணிமா தினமாகக் கொண்டாடப்படுகிறது. நேபாளத்தல் அவர் பிறந்த இடமான லும்பினியில் கொண்டாடப்பட்டு வருகிறது. இங்குள்ள மாயாவதி கோயிலிலும் வருடா வருடம் வழிபாடு நடந்து வருகிறது. கௌதம புத்தான் போதனைகள் ஜாதி, மத பேதமின்றி அனைத்துத் தரப்பினருக்கும் பொருந்தக் கூடியது ஆகும். எனவே அவற்றை அனைவரும் பின்பற்றி நடக்க வேண்டும். புத்தரின் போதனைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்தாலொழிய உண்மையான அமைதியைப் பெற முடியாது.

**புத்த சமயத்தின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் :**

அயல் நாடுகளில் மக்களின் ஆதரவைப் பெற்ற புத்தசமயம் அது தோன்றிய மண்ணில் வீழ்ச்சியைக் கண்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. புத்த சமயம் மன்னர்களுடைய ஆதரவுடன் வளர்ந்த சமயம். எனவே மன்னர்களின் ஆதரவு குறைந்த போது தனது முக்கியத்துவத்தை இழந்தது. அசோகர்,

கனிஷ்கர், ஹர்ஷர் போன்ற பேரரசர்கட்குப் பின்வந்த அரசர்கள் இந்து மதத்திற்கே ஆதரவு அளித்தனர். புஷ்யமித்திர சுங்கன், ஹுன அரசன் மிகிரகுலன், வங்க அரசன் சசாங்கன் ஆகியோர் இந்து மதத்தை ஆதரித்ததுடன் புத்த மதத்தை சார்ந்தவர்களை அழிக்கவும் செய்தனர்.

**2.** புத்த சமயம் புத்த துறவிகளைக் கொண்டு பரவிய சமயம் காலப் போக்கில், புத்த மடாலயங்கள் நெறியற்ற செயல்கட்கு இருப்பிடமாக மாறின. புத்த துறவிகள் தவறுகளின் மொத்த உருவமாக விளங்கினார்கள். புத்த மதத்தின் புனிதக் கோட்பாடுகளை மறந்து அதன் வீழ்ச்சிக்கு அடிகோலினார்கள்.

**3.** புத்த சமயத்தில் காணப்பட்ட உட்பூசல்கள் அதன் வீழ்ச்சிக்குக் காரணமானது. ஹுனயானம் என்றும், மஹாயானம் என்றும் இரண்டாகப் புத்த சமயம் பிரிந்தது. மகாயானப் பிரிவினர், மத்திய மிகா, யோகாச்சாரா (Madhyaikas, Yogachara) என மேலும் இரு பிரிவாகப் பிரிந்தனர். இதனால புத்தசமயக் கொள்கைகளில் குழப்பம் ஏற்பட்டது.

**4.** புத்த சமயம் வரவர தன்னுடைய சிறப்புத் தன்மையை இழந்தது. இந்து சமயத்தைப் போலவே, சமயச் சடங்குகள், உருவ வழிபாடு, சொர்க்கம், நரகம் போன்ற கருத்துக்கள் காணப்பட்டன. மஹாயான புத்த மார்க்கத்திற்கும் இந்து சமயத்தற்கும் வேறுபாடுகளே இல்லாத நிலை ஏற்பட்டது. எனவே புத்த சமயத்தில் உள் ஒவ்வொரு கோட்பாடுகளையும் இந்து சமயம் தனதாக்கிக் கொண்டது. எனவே இந்துக்கள் புத்த மதத்தைத் தழுவுவதை நிறுத்திக் கொண்டனர்.

**5.** தென்னிந்தியாவில் தோன்றிய பக்தி இயக்கம் புத்த சமயத்தைச் செல்வாக்கு இழக்கச் செய்தது. ஆதிசங்கரர், இராமானுஜர் போன்றவர்கள் இந்து மதத்தின் தத்துவ மேன்மையை நிலைநாட்டினர். இதனால் புத்தசமயம் வீழ்ச்சியைக் கண்டது.

**6.** இந்தியாவின் ஒரு சில பகுதிகளிலேயே எஞ்சிய புத்த சமயம், கி.பி. **12–**ஆம் நூற்றாண்டில் முகமது பின் பக்தியார் கில்ஜியின் செயலால் மேலும் வலுவிழந்தது. புதிய சமயத்தினரை அவர் வேட்டையாடினார். வங்கத்திலிருந்த புத்த துறவிகள் நேபாளம் திபெத் ஆகிய நாடுகளில் அடைக்கலம் புகுந்தனர். இந்தியாவை விட்டே புத்தசமயம் மறைந்தது.

**இந்தியப் பண்பாட்டிற்கு புத்த சமயம் ஆற்றிய தொண்டுகள் :**

இந்தியாவில் வீழ்ச்சியடைந்த புத்த சமயம் இந்தியப் பண்பாட்டிற்கு பெருந் தொண்டாற்றியது. அது, அன்பு, அரவணைப்பு, பிற உயிர் இனங்களுக்குத் துன்பம் விளைவிக்காமை ஆகிய உன்னதக் கருத்துக்களை அறிவித்தது. இந்து சமயத்தில் பல நல்ல மாற்றங்கள் ஏற்பட்டன. கடவுளை மக்கள் மனித வடிவில் வணங்கினர். விலங்குகளைப் பலியிடும் கொடிய வழக்கத்தை நிறுத்தினர்.

1. புத்த சமயம் இந்தியாவிற்குச் சிறந்த நீதிநெறி முறையினைத் தந்தது. புத்த சமயத்தினால் இந்தியப் பண்பாட்டிற்கு அன்பு, அரவணைப்பு, உயிர் வாழ் இனங்களுக்கு மனத்தால், எண்ணத்தால், செயலால் தீங்கு செய்யாமை ஆகிய சிறப்புத் தன்மைகள் கிடைத்தன.

2. அர்த்தமற்ற சடங்குகள் சம்பிரதாயங்களை விட பரிசுத்தமும் நேர்மையுமே சிறந்ததென்றது புத்த சமயம். இது போன்ற உயர்ந்த சிறந்த கருத்துக்களே அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர் போன்ற பேரரசர்களை இந்தியாவுக்குத் தந்தது. அசோகர், பொறுமை, கனிவு, சகிப்புத்தன்மை ஆகிய புத்த மதக் கொள்கைகளை உலகில் பரப்பினார்.

3. அசோகரின் கொள்கையான பொறுமை, சகிப்புத்தன்மை ஆகிய இரண்டும் இந்திய சமுதாயத்தின் கலாச்சாரத்திற்கே புத்துயிர் அளித்தன. மேலும் இக்கொள்கையே இன்றைய இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையாக விளங்குகிறது.

4. இந்து மதத்தில் சில சிறந்த மாற்றங்கள் ஏற்பட புத்தசமயம் காரணமானது. இந்துக்கள் புத்த சமயக் கட்டிடக் கலையைப் பின்பற்றியதுடன் புத்த சமயத்தினரைப் போன்றே கடவுளை மனித வடிவில் வணங்கினர். இந்து சமுதாயத்தில் உயர் பிரிவினர் எனப்படுவோரின் புலால் உண்ணாமை என்ற வழக்கம் புத்த சமயத்திலிருந்து பெறப்பட்ட சிறப்பேயாகும்.

5. புத்த விகாரங்களின் பிரதிபலிப்பே சைவ வைணவ சமயத்தாரின் மடாலயப் பணிகளாகும். அசோகரின் வழியைப் பின்பற்றியே பிற்காலத்தில் சத்திரம், ஓய்வு விடுதி, பிணி நீக்கும் நிலையங்கள், வழிப்போக்கர்கள் தங்கும் இடங்கள் ஆகியவை இந்தியாவில தோன்றின. புத்தரின் போதனையால்தான் இந்து கடவுள்களுக்கு விலங்குகளைப் பலியிடும் கொடிய பழக்கத்தை விட்டொழித்தனர்.

**6.** புத்த பிட்சுகள் புத்த சமயத்தைத் தாய்மொழி மூலமாகவே பரப்பினார்கள். இதனால் தாய்மொழிக் கல்வியும், தாய் மொழியும் வளர்ச்சியடைந்தன. தாய்மொழி வளர்ச்சிக்கு அடிகோலிய பெருமை புத்த சமயத்தையே சாரும்.

**7.** புத்த சமயத்தால் இந்தியாவின் கட்டிடக்கலையில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. சாஞ்சி, சாரநாத் பர்ஹூத், அமராவதியில் உள்ள அசோகர் ஸ்தூபிகள், தூண்கள், கனிஷ்கரின் தேர்க்கோயில், கார்லி, நாசிக் ஆகிய இடங்களிலுள்ள கலைச்சிறப்பு மிக்க கட்டிடங்கள் இந்தியக் கலையின் உச்சகட்டமாகும். அஜந்தா ஓவியம், பாக் (Bagh) மற்றும் சிகிவியா (Sigevia-ceylon) ஓவியங்கள் உலகப் புகழ்ப் பெற்றவை.

**8.** புத்த காயாவில் புத்த கோவில் ஒன்றும் உள்ளது. இந்தக் கோவில் பௌத்த மதக்கலை வரலாற்றில் முக்கியமானதாகும். புத்தகயா பீகார் மாநிலத்தில் நாளந்தாவிற்கு அருகில் அமைந்த நகரமாகும். யுவான் சுவாங் தம்முடைய குறிப்புகளில் புத்தகயா பற்றிக் குறிப்பிடுகிறார். புத்தருக்காக இங்கு கோவில் எடுக்கப்பட்டுள்ளது என்றும் இதிலுள்ள தேவ கோட்டங்களில் தங்கத்தாலான புத்தரின் உருவச் சிற்பங்கள் இருந்தன என்றும் குறிப்பிடுகிறார். இங்கு அசோகர் சிறிய விகாரத்தைக் காட்டினர் என்றும் பின்னர் பெரிய கற்கோவிலாக மாற்றப்ட்டது என்றும் கூறப்படுகிறது.

புத்தர் தனது **35**–ஆம் வயதில் இங்குள்ள போதி மரத்தன் கீழ் ஞானம் பெற்றார். அதன் நினைவாகவே போதி மரத்தின் அருகில் கோவில் எழுப்பப்பட்டது. இந்த கோவில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்களும் இக்கோவிலில் உள்ளது. இந்தக் கோவில் **53** மீ. உயரம் உள்ளது. இதன் மேல் கூம்பு போன்று எழுப்பப்பட்டுள்ள விமானத்தில் ஒன்பது தளங்கள் உள்ளன. ஒவ்வொரு தளத்திலும் ஆமலகம் என்ற நெல்லிக்கனி அமைப்பு காணப்படுகிறது. இந்தக் கோவிலின் ஒவ்வொரு பகுதியிலும் சிற்ப வேலப்பாடுகள் மிகுந்த அளவில் உள்ளன. மதிலின் மேல்பகுதியில் மீன்வாலுடன் கூடிய அரக்க உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் புத்தசமய அறத்தைப் போதிக்கும் சின்னங்களும் உருவங்களும் காணப்படுகின்றன. எருமை மாட்டின் உருவம், ஆணும் பெண்ணும் அமர்ந்துள்ள காதல் காட்சி போன்றவை வனப்புடையன. துமிளியாலும் மற்ற பகுதிகளிலும் தாமரை

மலர்களும் பல்வேறு வடிவங்களும் வனப்புடன் வடிக்கப்பட்டுள்ளன. இறகுடன் கூடிய சிங்கம், எருது, குதிரை முகத்துடன் கூடிய பெண், சின்னரர்கள், கந்தர்வர்கள், பாதிராகமும் பாதி முதலையுடன் கூடிய உருவம் ஆகியவை வடிக்கப்பட்டுள்ளன. ஆனால், இப்பொழுதுள்ள பெரும்பாலான சிற்பங்கள் பர்மாவின் கலைப்பாணியைச் சேர்ந்தவை. இந்தக் கோவிலினால் புத்தகயா பெரும் சிறப்புடன் விளங்குகிறது.

புத்த சமயம் இன்று வரை தெற்கு, தென் கிழக்கு ஆசியாவில் நிலைத்து நிற்கின்றது. பர்மா, இலங்கை, தாய்லாந்து, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளில் அதிக அளவிலும், இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் சிறிதளவிலும் புத்த சமயம் நிலவுகிறது. கம்போடியா, லாவோஸ், திபெத்து, பூடான் ஆகிய நாடுகள் புத்த சமய நாடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. தென் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பௌத்தர்கள் உள்ளனர். **1995**–ஆம் வருட கணக்குப்படி உலகம் முழுவதிலும் புத்த மதத்தவரின் எண்ணிக்கை **32,38,94,000** ஆகும். இது உலக மக்கள் தொகையில் **5.6** சதவிகிதம் ஆகும். இந்தியாவில் **47,19,900** புத்த சமயத்தினர் வாழ்கிறார்கள். இது இந்திய மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்துக்கும் குறைவானதாகும். இந்தியாவிலுள்ள புத்த சமயத்தினரில் **85** சதவிகிதத்தினர் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளனர். மற்றவர்கள் அருணாசலப் பிரதேசம், இமயமலைப் பகுதி போன்ற இடங்களில் அதிகமாக உள்ளனர். இவ்வாறு உலகம் முழுவதும் இன்று மக்களுக்கு புத்துணர்வை ஊட்டிக் கொண்டிருக்கிறது புத்தசமயம்.

## சமண சமயம் (JAINISM)

## மகாவீரர், கி.மு. 539 – 467

சமண சமயம் இந்தியாவின் தொன்மை மிகு சமயமாகும். இதனைத் தோற்றுவித்தவர் 'வர்த்தமான மகாவீரர்' என்று செர்ல்லப்படுகிறது. ஆனால், இச்சமயத்தின் தோற்றம் பற்றி வேறு சில கருத்துக்களும் உண்டு. ஆனால், இச்சமயத்தின் தோற்றம் பற்றி வேறு சில கருத்துக்களும் உண்டு. மகாவீரருக்கு முன்பு 23 தீர்த்தங்காரர்கள் இருந்தார்கள் என்றும் 'ரிஷபர்' என்பவர் முதல் தீர்த்தங்கரர் என்றும் கூறப்டுகிறது. ரிஷபரே சமண சமயத்தைத் தோற்றுவித்தவர். இருபத்தி மூன்றாவது தீர்த்தங்கரரான பர்சவநாதர் மகாவீரருக்கு 250 ஆண்டுகட்கு முன்பு தோன்றினார். இவர் கடுந்தவம் செய்து ஞானம் பெற்றார். கொல்லாமை, பொய்யாமை, களவு செய்யாமை, பொருள் விரும்பாமை, ஆகிய தனது கொள்கைகளைப் போதித்தார். மகாவீரர் பர்வநாதரின் போதனைகளைப் பின்பற்றினார். இவர் இருபத்தி நான்காவதும் கடைசியுமான தீர்த்தங்கரராக மதிக்கப்படுகிறார். தீர்த்தங்கரர் என்றால் ''மக்கள் தங்கள் வாழ்க்கை என்ற பெருங்கடலைக் கடக்க உதவும் தோணி போன்றவர்'' என்று பொருளாகும்.

**மகாவீரரின் வாழ்க்கை வரலாறு :**

மகாவீரரின் இயற்பெயர் வர்த்தமானர். இவர் கி.மு. 539–ல் வைசாலி (விதேக நாடு) என்ற நகரின் அருகே உள்ள குண்ட கிராமத்தில் சத்திரிய வம்சத்தைச் சேர்ந்த சித்தார்த்தர் என்பவருக்கும் திரிசலை என்பாளுக்கும் மகனாகப் பிறந்தார். இளமையில் சிறப்பாக கல்வி பயின்றார். யசோதா என்ற பெண்ணை மணந்தார். **அனோஜா** என்ற பெயர் உடைய பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தார். பெற்றோர் இறந்த பின் தன்னுடைய முப்பதாவது வயதில் இல்லறத்தை வெறுத்து துறவறத்தை மேற்கொண்டார். சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து உண்மை அறிவை நாடித்திரிந்தார். பதிமூன்றாவது ஆண்டு ஜிம்பரிக் கிராமம் அருகில் உள்ள ராஜுபாலிகா நதிக்கரையிலிருந்த சால் என்னும் மரத்தடியில் தனது 42–வது வயதில் ஞானஒளியைப் (உண்மை அறிவு) பெற்றார். அதிலிருந்து அவர் மகாவீரர் என்றும் ஜுனர் அல்லது ஆசை, துன்பம் ஆகியவற்றை வெற்றி கண்டவர் என்றும் அழைக்கப்படுகிறார். தன்னுடைய கொள்கைகளை கோசலம், மகதம், விதேகம், அங்கம், நிதிலம், சம்பா ஆகிய நாடுகளில்

போதித்தார். ஜமேலி என்பவர் இவரது முதலாவது சீடர் ஆனார். மகாவீரரைப் பின்பற்றியவர்கள் 'நிர்க்கிரந்தரர்கள்' அல்லது பற்றற்றவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர் தனது **72–**ஆம் வயதில் கி.மு. **467–**ல் ராஜ்கிருகத்தின் அருகிலுள்ள பாவா என்னுமிடத்தில் உயிர் நீத்தார்.

**மகாவீரரின் போதனைகள் :**

மகாவீரர் இவ்வுலகில் பிறப்பு இறப்பு என்னும் சுழலிருந்து விடுபட்டு மோட்சம் அடைவதே வாழ்வின் இலக்காக இருக்க வேண்டுமென்றார். நீதி நெறிமுறைகளை வழி தவறாமல் பின்பற்றுவதின் மூலமே இவ்வீடு பேற்றை அடைய முடியும் என்றார். சமணர்கள் கீழ்க்கண்ட 'திரிரத்தினம்' அல்லது 'மும்மணிகள்' எனப்படும் மூன்று கொள்கைகளில் நம்பிக்கை கொள்ள வேண்டும் அவை :

1) தன்னம்பிக்கை, **2)** நல்லறிவு, **3)** நன்னடத்தை ஆகியவையாகும்.

**நன்னம்பிக்கை :**

நன்னம்பிக்கை என்பது, மகாவீரரின் சக்தி, தூய்மை, மாசற்றத் தன்மை ஆகியவற்றிலும், உண்மை அறிவிலும் ஒருவர் உண்மையான, உறுதியான நம்பிக்கை கொள்ள வேண்டும்.

**நல்லறிவு :**

நல்லறிவு என்பது முழு முதற்கடவுள் இல்லை என்பதிலுமூ இயக்குபவர் இல்லாது உலகம் இயங்குகின்றது என்ற கோட்பாட்டையும் சம உரிமை பெற்ற எண்ணற்ற உயிர்கள் நிலைத்துள்ளன என்பதையும் கருமதத்துவத்தையும், உயிர்கள் பல்வேறு உடலில் மாறி மாறி பிறக்கிறது என்பதையும் பற்றற்ற துறவர வாழ்க்கை கருக வினையை ஒழிக்கும் ஆற்றல் பெற்றது என்பதையும் உணர்வதே நல்லறிவு ஆகும்.

**நன்னடத்தை :**

நன்னடத்தை என்பது கொல்லாமை, பொய் கூறாமை, களவாடாமை, காமமின்மை, தன்னலம் கருதாமை, பற்றின்மை, ஆகியவற்றை மனம், மொழி மெய்களால் அனுஷ்டிப்பதாகும்.

சமண மதத்தில் கீழ்க்கண்ட கோட்பாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**1. சமண மதத்தின் அறநெறிக் கொள்கை :**

அற நெறிகள், வினைப்பயன் நம்மை அணுகாமல் வீடுபேறு அடைவதற்கு வழிவகுக்கின்றன என்பது சமணர்களின் நம்பிக்கை இல்லறத்தற்குரிய அறவொழுக்கம் ''அனுவிரதம்'' என்றும், துறவிகளுக்குரிய அறவொழுக்கம் 'மகாவிரதம்' என்றும் சொல்லப்பட்டது. இன்னா செய்யாமை (அகிம்சை), வாய்மை (சத்தியம்), கள்ளாமை (அசதேயம்), சிற்றின்பம் விழையாமை (பிரமசாரியம்), கவராமை (அபரிக்கிரகம்) முதலிய நற்பண்புகளை இல்லறத்தார் வரம்புகட்குட்பட்டும், துறவிகள் வரம்பின்றியும் கடைப்பிடிக்க வேண்டும்.

சமண அறநெறிகள் வேதத்தையும் வேள்வியையும் எதிர்க்கிறது. வருணாசிர தர்மத்திற்கு இங்கு இடமில்லை. 'எல்லா உயிர்களும் சமம்' என்ற கருத்தைக் கொண்டதால் இதை 'மக்கள் பண்புக் கொள்கை' (Humanism) எனலாம். இதை அடிப்படையாகக் கொண்டே இன்னா செய்யாமை, சொல்லாலும் மனத்தாலும் செயலாலும் கூடாத தீங்கு செய்யக்கூடாது என்பது கடுமையாக வற்புறுத்தப்பட்டது. நம் இன்ப துன்பங்களுக்கு நாமே பொறுப்பு, நம் கருமங்களை நம் முயற்சியினால் நாமே களைந்து விடுதலை பெற வேண்டும். அவ்வாறு அறவழியொழுகி மனத்தால் தூய்மையுடையோர் அனைவரும் கடவுளர்களே என்பது சமணர்களின் கருத்து.

**2. துறவறம் :**

சமணர்கள், பற்றற்ற துறவறமே மனிதனை கர்ம வினையிலிருந்து காப்பாற்றுமென்க் கருதுகின்றனர். கட்டுப்பாடுடைய துறவறத்தை ஆதரிக்கின்றனர். சமணத் துறவிகள் தங்கள் தலைமுடியை ஒவ்வொன்றாக முழுவதையும் பிய்த்து எடுத்து விட வேண்டும். அடிக்கடி உண்ணா நோன்பிருந்து இறுதியில் முழுப்பட்டினி கிடந்தே உயிர் துறக்க வேண்டும். உடையேதும் அணியாமல் நிர்வாணமாகத் திரிதல் வேண்டும். நீராடல் கூடாது. தரையிலேயே படுத்து உறங்குதல் வேண்டும். நின்றபடியே சாப்பிட வேண்டும்.

**3. கொல்லாமை :**

கொல்லாமைக்கு சமண சமணயம் முக்கியத்துவம் கொடுக்கிறது. அதி தீவிரமாகப் பின்பற்றப்படுகிறது. உயிரற்ற பொருட்களுக்கும் (கல், மண், உலோகம்)

உயிர் உண்டு என்று கருதுகிறார்கள். இதன் விளைவாக உழவுத் தொழிலே குற்றமாகக் கருதப்படுகிறது. தண்ணீரைக் காய்ச்சினால் அதிலுள்ள உயிரினங்கள் இறந்துவிடும். எனவே தண்ணீரைக் காய்ச்சல் கூடாது. சுவாசிக்கும் போது உயிரினங்கள் மூக்கு வழியே சென்று இறந்து விடும். எனவே மூக்கை திரையிட்டு மூட வேண்டும். நடக்கும் போது தரையை சுத்தம் செய்து உயிானங்களை அகற்றி விட்டே நடக்க வேண்டும். கொசுக் கடித்தால் தாங்கிக் கொள்ள வேண்டும். கொசுவைக் கொல்லக் கூடாது. எவன் ஒருவன் கொல்லாமையைக் கடைபிடிக்கிறானோ அவன் பேரறிவைப் பெறுகிறான்.

**14. தன்னைத் தானே துன்புறுத்தல் :**

சமணர்கள் தன்னைத் தானே துன்புறுத்திக் கொண்டு, துறவு கொண்டு கர்ம வினையை நீக்க வேண்டும். இவைகளையே மகாவீரர் வாழ்வின் உயர்ந்த தத்துவங்களாகப் போதித்தார்.

‘‘இவ்வுலகானது அழியக்கூடிய பொருளாலும், அழியாத் தன்மை உடைய தான ஆத்மாக்காளாலும் ஆனதே. மனிதன் இறந்த பின்பு ஆவி மற்றொரு உடலில் புகுந்து கொள்கிறது. இதனால் முடிவற்ற பிறப்பு இறப்பை தவிர்க்க முக்தி அடை யவேண்டும். கடுமையான தவம், மெய்யுணர்வு ஆகியவற்றால் மட்டுமே முக்தியடைய முடியும். தன்னைத்தானே உண்மையில் உணர்ந்தவனே முக்தியடைந்தவன் ஆவான்’’ என்று மகாவீரர் கூறினார்.

மகாவீரர் கடவுள் நம்பிக்கையற்றவர். எனவே ஒருவன் வாழ்க்கை கடவுளின் அருளால் ஏற்படுவதில்லை யென்றும், மனிதன் நற்செயல் தீச்செயல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைகிறது என்றும் கூறினார். மேலும், இவர் வேதங்களின் மேன்மையையும், கட்டளையையும், பிராமணர்களின் மேலதிகாரத்தையும் அறவே வெறுத்தார்.

**சமண சமயத்தின் வளர்ச்சி :**

மகாவீரரின் சமண சமயம் அவர் காலத்திலேயே வேகமாகப் பரவியது. எளிய தூய்மையான கருத்துக்களும், துறவிகளின் முயற்சிகளும் சமண சமயம் வேகமாகப்

பரவக் காரணமாக அமைந்தது. மேலும் மக்கள் பேசும் மொழியிலேயே இச்சமயக் கருத்துக்கள் போதிக்கப்பட்டது.

மகாவீரருக்கு பதினொரு முக்கிய சீடர்கள் இருந்தார்கள். அவர் மறைக்குப் பின்னர் சம்புத விஜயா, பத்ரபாகு ஆகிய இருவரும் தலைமைக் குருக்களாக இருந்தார்கள். இவர்கள் சமண சமயக் கோட்பாடுகளை பதினான்கு இயல்களாகப் பிரித்து வெளியிட்டார்கள்.

கி.மு. நான்காம் நூற்றாண்டில், சந்திரகுப்த மௌரியர் ஆட்சிக் காலத்தில் மகதப் பேரரசில் கொடிய பஞ்சம் நிலவியது. எனவே, பத்திரபாகுவின் தலைமையின் கீழ் ஒரு சமணத் துறவியர் குழு சந்திர குப்த மௌரியருடன் தெற்கே மைசூர் மாநிலத்தில் சரவண பெல்கோலா சென்று குடியேறினர். கொடிய பஞ்ச்த்தைப் போக்க கடுந்தவமிருந்து உயிர் நீத்தனர். சந்திரகுப்த மௌரியரும் தவமிருந்து உயிர் நீத்தார். இதற்கிடையில் சம்புத விஜயரின் மாணவரான ஸ்துலபத்ரா எஞ்சியிருந்த சமண துறவிகளைக் கூட்டி ஒரு மாநாடு நடத்தனார். மைசூரிலிருந்து திரும்பி வந்தவர்கள் வட இந்தியாவிலேயே இருந்த சமணர்களுடன் கருத்து வேறுபாடுகள் கொண்டனர். இதனால் சமண சமயத்தில் பிளவு ஏற்பட்டது. முதலாவது சமண மாநாடு பாடலிபுத்திரத்தில் நடைபெற்றது.

பத்திரபாகுவின் தலைமையில் மைசூர் சென்று திரும்பியவர்கள் 'திகம்பரர்கள்' (Digembaras - sky clad – total nudity) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் மகாவீரரின் கோட்பாடுகளை ஏற்று ஆடை அணியாது வாழ்ந்தனர். சம்புத விஜயரின் ஆதரவாளர்கள் 'ஸ்வேதம்பரர்கள்' (Shvetambaras – white clad) என்றழைக்கப் பட்டனர். இவர்கள் சமண சமயத்தின் கோட்பாடுகளை பன்னிரெண்டு அங்கங்களாகத் தொகுத்தனர். வெள்ளை ஆடையை அணிந்தனர்.

காலப்போக்கில் சமண சமயம் இந்தியா முழுவதும் பரவியது. கி.மு. முதலாம் நூற்றாண்டில் உஜ்ஜயினி சமண சமயத்தின் தலைமை இடமாக விளங்கியது. மகத நாட்டில் நந்தர்களும், கலிங்கத்தின் காரவேலரும் இச்சமயத்தைப் பரப்பினர். குஷாணர்களும், குப்தர்களும், சமண சமய மதத்தை ஆதரித்தனர். கி.பி. 512–ஆம்

ஆண்டு இரண்டாவது சமண சமய மாநாடு வல்லாபியில் தேர்வதிஷாமசர்மனா என்பவர் தலைமையில் கூடியது. இதில் சமய இலக்கியங்கள் முறையாக எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டன. ஹர்ஷரின் ஆட்சிக் காலத்தில் சமண மதம் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பரவியது. கங்கர்கள், கடம்பர்கள், சாளுக்கியர்கள் மற்றும் இராஷ்டிரக்கூடர்கள் சமண சமயத்திற்குப் பேராதரவு அளித்தனர். முகலாயர்கள் ஆட்சிக்காலத்திலும் சமண சமயம் செழித்தோங்கியது.

**சமண சமயத்தின் வீழ்ச்சி**

வேகமாகப் பரவிய சமண சமயம் படிப்படியாக மக்களிடையே செல்வாக்கை இழந்தது. அதற்கான காரணங்கள் :

**1.** மக்கள் சமண சமயத்தின் கொள்கையான தீவிர அஹிம்சை, கடுந்துறவறம் ஆகியவற்றை வெறுத்தனர்.

**2.** சமண சமயம் பல பிரிவுகளாகப் பிரிந்ததும், அதில் சாதி முறைகள் நுழைந்ததும், அதன் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது.

**3.** புத்த சமயத்தன் போட்டியால் இச்சமயத்தின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டது.

**4.** இந்து சமயத்தற்கும், சமண சமயத்திற்கும் இடையே வேறுபாடுகள் குறைந்து ஒன்றுபோல் காணப்பட்டது. உதாரணம் அகிம்சை, மறுபிறவி. அதே சமயம் இல்லறத்தல் இருந்துகொண்டே வீடு பேற்றை அடைய உதவும் இந்து மதத்தை மக்கள் ஆதரித்தனர்.

**5.** அரசர்களின் ஆதரவு சிறிது சிறிதாக குறைந்துவிட்டது. இது சமணசமய வளர்ச்சியைத் தடுத்துவிட்டது.

**6.** பக்தி இயக்கத் தலைவர்களின் பெரு முயற்சியால், சமண சமயத்தில் சேர்ந்தவர்கள் மீண்டும் இந்து மதத்திற்கே திரும்பினர்.

**7.** அலாவுதீன் கில்ஜி போன்றவர்கள், சமண சமயத்திற்கு எதிராகச் செயல்பட்டனர். பல சமணக் கோயில்களை அழித்தார் அலாவுதின்.

**8.** சமண சமயத் துறவிகள், ஒழுக்க நிலை தவற ஆரம்பித்தனர். இதனால் சமண சமயம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. தற்சமயம் இந்தியாவில் இராஜஸ்தானிலும் குஜராத்திலும் சில பகுதிகளில் சமண சமயம் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்தியாவில் **34** இலட்சம் சமணர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இது இந்திய மக்கள் தொகையில் **0.4** சதவிகிதமாகும்.

**இந்திய கலாச்சார வளர்ச்சியில் சமணர்களின் பங்கு :**

இந்திய கலாச்சார வளர்ச்சியில் சமணர்களின் தொண்டு மிகவும் குறிப்பிடத்தக்கது. அவர்களது சேவை அழிவற்ற உயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டன.

முதலாவதாக, இந்தியாவின் பல்வேறு மொழிகள் வளர்ச்சி அடையக் காரணமாக இருந்தனர். எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மக்களிடையே அவரவர் மொழிகளிலேயே பிரச்சாரங்கள் செய்தனர். இதற்காக இப்பகுதி மொழிகளைப் பயின்றனர். இதனால் பல மொழிகள் இலக்கிய வடிவம் பெற்றன. பிராக்கிருத மொழியும், சமஸ்கிருத மொழியும் இவர்கள் காலத்தில் ஏற்றமடைந்தன. தமிழ் மொழியும் வளர்ச்சியடைந்தது.

இரண்டாவதாக, இறவாத் தன்மை கொண்ட பல இலக்கியங்களை உருவாக்கினர். தமிழில் தலைசிறந்த இலக்கண நூல்களான தொல்காப்பியம், நன்னூல், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய நூல்களைப் படைத்தனர். மிகப் பழைய கன்னட இலக்கியத்தை சமணர்களே படைத்தனர். வட மொழியிலும் இலக்கணம், உரைநடை, தத்துவக் கருத்துக்கள், அகராதி, குறியிட்டு முறை, கணிதம் போன்ற நூல்கள் வெளியிடப்பட்டன.

மூன்றாவதாக, சமணர்களுக்கு இந்தியக் கலை வளர்ச்சியிலும் பெரும் பங்கு உண்டு. இவர்களது கட்டிடக் கலை சிறப்பு வாய்ந்தது. பல ஸ்தூபிகள், கோயில்கள் ஆகியவற்றைக் கட்டினார்கள். சமணரது ஸ்தூபிகள் கற்கூரையுடனும், அலங்கரிக்கப்பட்ட வாயில் கதவுடனும், கல்லால் செதுக்கப்பட்ட குடை போன்ற அமைப்புடனும், வளைவுகள் நிறைந்த தூண்களுடனும் காணப்படுகிறது. இவ்வகை ஸ்தூபிகள் மதுராவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சமணர்கள் பல கோவில்களைக் கட்டினர். பாறைக் குகைக் கோவில்களையும் அமைத்துள்ளனர். சரவண பெல்கோலாவில் கி.பி. **934**–ல் கட்டப்பட்ட கோமதீஸ்வரர் ஆலயமும், மைசூரிலுள்ள கார்கால்பதியின் ஆலயமும், மத்தியப் பிரதேசத்தில் காஜுராகோ ஆலயமும், பாவபுரியிலுள்ள கோயிலும், இராஜஸ்தானிலுள்ள அபுகுன்று சலவைக் கோவில்களும் சமண சமயத்தாருடைய கலைத் திறனுக்குச் சான்றாக உள்ளன. இந்தக் கோவில்களில் காணப்படும் சிற்பங்கள் ஒவ்வொன்றும் கலையம்சம்

பொருந்தியதாகக் காணப்படுகின்றன. கிழக்கு வங்காளத்தில் கண்டெடுக்கப்பட்ட ரிஷபநாதர் சிலையும், கோமதீஸ்வரர் ஆலயத்திலுள்ள 21.5 மீட்டர் உயரமுள்ள கோமதீஸ்வரர் உருவச் சிலையும், மிகப் பிரமாண்டமான கலை அம்சத்துடன் காட்சியளிக்கின்றன.

குவாலியருக்கு அருகிலுள்ள பாறைகளில் மிகப் பெரிய அளவில் செதுக்கப்பட்ட சிற்பங்களும், மகாராஷ்டிராவில் எல்லோராவிலுள்ள குகைக் கோவிலும், ஒரிசாவிலுள்ள ஹதிகும்பாக் குகைக் கோவிலும் மத்தியப் பிரதேசத்தில் உதயகிரி மலையில் காணப்படும் குகைக் கோயில்களும் அங்கே காணப்படும் சிற்பங்களும் சமணர்களின் சிற்பக்கலை ஆர்வத்திற்கு உதாரணங்களாகும். மற்றும் ஜுனார், ஆஸ்மானபாத் ஆகிய இடங்களிலும் குகைகளைக் குடைந்து சிற்பங்களை வடிவமைத்துள்ளார்கள் சமணர்கள்.

பர்சநாதர் மலை, ராஜகிரி, பாவபுரி, கிர்நார் ஆகிய மலைகள் இருக்கும் பகுதிகள் சமணர்களின் புனிதத் தலங்களாக விளங்குகின்றன. இந்தப் புனிதத் தலங்களிலுள்ள தீர்த்தங்கரர்களின் தலைமுடிகள் விலை உயர்ந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கோவில்களைச் சுற்றி பல கோபுரங்கள் கட்டப்பட்டுட்ளன. இவை பலஅடுக்குகளையும் பல இணைப்புகளையும் ஒரே சீரான முறையில் பெற்றிருக்கிறது. உயரமான, கூர்மையான, வெண்மையான அமைப்பு, குவிந்த அமைப்பு, உட்புறம் பல பிரார்த்தனைக் கூடங்கள் ஆகியவை சமணர்களின் கோவில் அமைப்பு கலையின் சிறப்புத் தன்மையாகும்.

நான்காவதாக, சமணர்கள் உயர்ந்த கோபுரங்களைக் கட்டுவதிலும், தர்மசாலைகளை அமைப்பதிலும் ஆர்வம் காட்டினர். அவர்களின் சித்தூர் சமணக் கோபுரம் இன்றளவும் சமணத்தின் கலைத்திறனை பறைசாற்றி நிற்கிறது. ஓவியக் கலையிலும் சமணர்கள் பிரசித்தி பெற்றவர்கள். அவர்களின் கையெழுத்துப் பிரதிகள் பல பொன்னிறம் அல்லது ஆழ்ந்த வண்ணங்களுடன், தீர்த்தங்கரர்கள், துறவிகள் ஆகியோரின் சிறு வண்ணப்படங்களும் வரையப்பட்டன. சமணர்களின் பெருந்தன்மையான கொடைச் செயல்கள் இந்திய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

**புத்த மதத்திற்கும், சமண மதத்திற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் :**

**ஒற்றுமை :**

1. புத்தரும் மகாவீரரும் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இருவரும் வேதங்கட்கும், வேள்விகட்கும், சடங்காச்சாரங்கட்கும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

2. இவ்விரு மதங்களும் சமஸ்கிருத மொழியை தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்கு உபயோகிக்காமல் அனைவருக்கும் தெரிந்த 'பாலி' மொழியில் தங்கள் ககத்துக்களைப் பரப்பினர்.

3. இவ்விரு மதங்களிலும் சாதி வேறுபாடு இல்லாமலும் ஆண்களும் பெண்களும் சமமாக சீடர்களாக இருக்க அனுமதிக்கப்பட்டனர்.

4. இரண்டு சமயங்களும் கர்ம வினைகள் ஏற்றுக் கொண்டும் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டும் இருந்தன. மறுபிறவியை ஒழிப்பதே முக்திக்கு வழி என்ற கொள்கைகள் கொண்டிருந்தன. வேள்விகளினால் முக்தியடைய முடியாது என்று திட்டமாக நம்பின.

5. இவ்விரு சமயங்களும் நன்னடத்தை, நல்லறிவு, நல்லெண்ணம் ஆகியவற்றை வற்புறுத்தின.

6. இரண்டு சமயங்களும் இல்லற வாழ்க்கையை விரும்பாமல் துறவற வாழ்க்கையையேப் போற்றின.

**வேறுபாடுகள் :** புத்த சமயம் கடவுளைப் பற்றி ஒன்றும் கூறாவிடினும் கடவுள் இல்லையென்று கூறவில்லை. ஆனால், சமண சமயமே கடவுள் இல்லையென்றும், இயக்குகிறவன் இல்லாமலேயே உலகம் தானாக இயங்குவதாகக் கூறுகிறது. புத்த சமயம் தன்னுடைய கொள்கைகளைப் பரப்ப துறவிகளையே முக்கியமாக நம்பியது. ஆனால், சமண சமயத் துறவிகளுடன் சாதாரண மனிதர்களையும் சமய பிரச்சாரத்திற்கு நம்பியது. புத்தர், தான் மெய்யறிவைப் பெறுவதற்கு தனது உடல் துறவறத்திலும், உண்ணா நோன்பிலும் வருத்திக் கொண்ட போதிலும் தன்னைப் பின்பற்றுகிறவர்களை துறவறத்தைப் பின்பற்றவும் நோன்புகளினால் தங்களை வருத்திக் கொள்ளவும் வற்புறுத்தவில்லை.

ஆனால், மகாவீரர், பற்றற்ற துறவறமே முக்தியடைவதற்கு சிறந்த வழி என்று கூறி, அதனை வற்புறுத்தினர். முக்தி அடைய எல்லோரும் தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார். புத்த சமயம் கொல்லாமை கொள்கையை தீவிரமாக கடைப்பிடிக்கவில்லை. ஆனால், சமண சமயமோ கொல்லாமைக் கொள்கையை தீவிரமாகக் கடைபிடித்தது. புத்தர் தம் சமயத்தைப் பரப்புவதற்காக சங்கங்களை ஏற்படுத்தி சட்ட திட்டங்களையும் வகுத்தார். ஆனால், இவ்வித சங்க அமைப்பு ஏதும் சமண மதத்தில் இல்லை. இந்து மதக் கோட்பாடுகளை அனேகமாக புத்த சமயம் ஏற்றுக்கொண்டு விட்டதால், இந்தியாவில் இந்து மதம் .த்த மதத்தைத் தனதாக்கிக் கொண்டது. எனவே, புத்த சமயம் இந்தியாவில் நிலை பெறவில்லை. ஆனால் சமண சமயமோ, இந்து மதத்தை விட்டு விலகி தனக்காக சில கொள்கைகளை வகுத்துக் கொண்டதால் ஓரளவு இந்தியாவில் நிலைபெற்றுவிட்டது.

## மௌரியப் பேரரசு – வரலாற்றுச் சான்றுகள்
## (MAURYAN EMPIRE – SOURCES OF HISTORY) (கி.மு. 325 – 188)

கி.மு. ஆறாம் நூற்றாண்டின் வட இந்தியாவில் இருந்த பதினாறு மகாஜன பதங்களில் மகத நாடும் ஒன்று. இந்த நாடு தான் வலிமை வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது. நந்தர்கள் காலத்தில் மகத நாடு ஒரு பேரரசாக உருவெடுத்தது. செல்வச் செழிப்பு மிக்க பேரரசாகக் காட்சியளித்தது. நந்த குல வம்சத்தின் கடைசி மன்னர் தனநந்தர் ஆவார். அலக்சாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்த போது மகத பேரரசை ஆண்ட மன்னர் தனநந்தர் ஆவார். ஆனால் இவர் மோசமான ஆட்சி நடத்தி வந்ததால் மக்கள் இவரை வெறுத்தனர். சந்திரகுப்த மௌரியர் என்பவர் தனநந்தரை வீழ்த்தி மௌரியப் பேரரசை ஏற்படுத்தினார். இந்தியாவில் மௌரியர் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து ஒரு சகாப்தமே தொடங்கியது என்று கூறலாம். மௌரியப் பேரரசின் வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்ள கீழ்க்கண்ட சான்றுகள் நமக்கு உதவுகின்றன.

### 1) கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் : (The Arthasastra of Kautilya)

மௌரிய வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் ஆதாரங்களில் முதலிடம் வகிப்பது கௌடில்யர் என்பவர் எழுதியுள்ள அர்த்த சாஸ்திரம் ஆகும். இதனை எழுதிய கௌடில்யர் மௌரியப் பேரரசை நிறுவிய முதலாம் சந்திரகுப்த மௌரியரின் அமைச்சர்

ஆவார். கௌடில்யர், சாணக்கியர் என்றும் அழைக்கப்படுகிறார். அர்த்த சாஸ்திரம் என்ற நூலுக்கு 'தண்ட நீதி' என்ற வேறொரு பெயரும் உண்டு. கௌடில்யர் இந்த நூலில் தனக்கு முன் உள்ள பல பூர்வாச்சாரியர்களின் கருத்துக்களை மேற்கோள்களாகக் காட்டி, அவைகளை ஆராய்ந்து தனது கருத்துக்களை திட்டவட்டமாகக் கூறுகின்றார். இந்த நூல் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது. இது 1905–ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

**பொருளடக்கம் :**

அர்த்த சாஸ்திரம் பதினைந்து பிரிவுகளையும் 150 அதிகாரங்களையும் கொண்ட நூலாகும். ஆனால் நாம் இதனை மூன்று பெரிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதற் பகுதி, அரசனைப் பற்றியும், அவனது ஆராய்ச்சிக் குழு மற்றும் அரசியல் நிர்வாகம் பற்றியும் கூறுகிறது. இரண்டாம் பகுதி, சமூகம், குற்றவியல் ஆகியவை பற்றிக் கூறுகிறது. மூன்றாம் பகுதி சட்டம் அரசியல் சூழ்ச்சித் திறன், போர் ஆகியவை பற்றிக் கூறுகிறது.

கௌடில்யரின் சில கருத்துக்களை இங்கே காணலாம். "ஒரு நாட்டில் முழுமையான சமாதானம் ஏற்படுத்துவது என்பது இயலாத ஒன்று. எனவே போருக்கு எல்லா நாடுகளும் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். அரசன் போருக்குப் புறப்பட எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். யாரையும் நம்புதல் கூடாது. ஆட்சியை அரசாங்க ஒற்றர்களின் உதவியுடன் நடத்த வேண்டும்" என்று கூறுகிறார் கௌடில்யர். இந்த நூலானது அரசியல் கலைக்கும், செயல் முறைப் பயிற்சிக்கும் வழி காட்டும் ஒரு சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. இது பகைவர்களை அழிக்கும் பல செய்திகளை அறிவிக்கும் ஓர் விளக்க நூலாகும். இது சமஸ்கிருத நூல்களில் மிகச் சிறந்த நூலாகக் கருதப்படுகிறது.

மௌரியர்கள் ஏற்படுத்தியிருந்த நீதி நிர்வாகம், ஒற்றர் முறை, வரி வசூலித்தல், அரசின் பலவகைப்பட்ட துறைகள், அமைச்சர்களது ஆலோசனைகளைப் பெற்று அரசர் நிர்வாகம் நடத்திய முறை, அக்காலத்து சமுதாய நிலை முதலியவற்றை நாம் அர்த்தசாஸ்திரத்தின் மூலம் அறிகிறோம். கௌடில்யர் சந்திரகுப்த மௌரியர், பிந்து சாரா ஆகியோர்களது ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்தார் என்பதற்கான

ஆதாரங்கள் பல உள்ளன. இவரது காலம் சுமார் கி.மு. 350 முதல் கி.மு. 270 வரையிலான ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகும்.

கௌடில்யர் 'இந்தியாவின் மாக்கியவல்லி' என்று அழைக்கப்படுகிறார். ஏனெனில் இவர் அரசியலில் வெற்றிக்காக இலஞ்சம் கொடுத்தல், ஏமாற்றுதல், கொலை செய்தல் போன்ற செயல்களைக் கடைப்பிடிக்கலாம் என்ற கொள்கையுடையவர், தர்மத்துக்கு விரோதமாக இவ்வித அதர்ம முறைகளை இவர் குறிப்பிட்டாலும், இவரது அரசியல் விவேகமும் ஆற்றலும் அனைவராலும் போற்றப்படுகிறது.

**2) விசாகதத்தர் எழுதிய முத்திரராட்சசம் : (The Mudrarakshasa of Visakhadatta)**

முத்திரராட்சசம் என்ற நாடக நூலை எழுதியவர் விசாகத்தர் என்பவராவார். இது சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட நூலாகும். இதில் சந்திரகுப்தரின் மரபு பற்றியும், அவர் எவ்வாறு நந்தர்களை வென்றார் என்ற குறிப்புகளும் காணப்படுகிறது. அர்த்த சாஸ்திரத்தல் கூறப்பட்டுள்ளது போன்ற அரசியல் நெறிமுறைகளும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நாடகத்திலிருந்து மௌரியப் புரட்சியானது ஒரு ஆண்டு காலம் நீடித்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இந்த நூலானது மௌரியரின் சமகால நூல் அல்ல. குப்தர்கள் காலத்தில் எழுதப்பட்டது ஆகும். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும்.

மௌரியப் புரட்சியே இந்த நாடகத்தின் மையக்கருத்து ஆகும். இந்த நாடகத்தில் வருகின்ற இராட்சதன் என்ற உறுப்பினர், சந்திரகுப்தரை தாழ்ந்த குலத்தவன் என்றும், தனது தலைவர்களாகிய நந்தர்களின் சிறந்த குலத்திலிருந்து வேறுபட்டவன் என்றும் கூறுகிறான். சந்திரகுப்தரை ஆட்சியை முடியாட்சி என்று குறிப்பிடாமல் அமைச்சராட்சி என்று கூறுவது அரசனின் ஆற்றலின்மையைக் காட்டுவதற்கேயாகும். இந்த நாடகம் போரில் தேர்கள் பயன்படுத்தப்படும் வழக்கம் வரலாற்றில் மறைந்த காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**3) மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா : (The Indika of Megasthenes)**

மௌரியர் காலத்தைப் பற்றி அறிய உதவும் அடுத்த முக்கியமான சான்று மெகஸ்தனிஸ் என்பவர் எழுதிய இண்டிகா என்ற நூலாகும். மெகஸ்தனிஸ் என்பவர்

மாசிடோனிய அரசர் செலுகஸ் நிகேடர் என்பவரால் சந்திரகுப்த மௌரயரின் அரண்மனைக்கு அனுப்பப்பட்ட கிரேக்க இந்தியத் தூதுவர் ஆவார். இண்டிகாவை மேற்கோள்களாகக் காட்டிய செய்திகளே நமக்குக் கிடைக்கின்றன. இந்த நூல் மூலம் மௌரியர்களின் அரசியல், பொருளாதார, சமுதாய நிலை பற்றி நாம் அறிய முடிகிறது.

மெகஸ்தனிஸ் தனது நூலில் ஒரு கால் உடையவர்கள், உள்ளங்கால் வரை நீளமான காது உடையவர்கள், வாய் இல்லாதவர்கள், மூக்கு இல்லாதவர்கள், பாண்டிய நாட்டில் ஏழு வயதுடைய தாய்மார்கள், இறகு முளைத்த பாம்புகள் போன்ற நம்ப முடியாத செய்திகளைக் கூறுகிறார். இவ்வாறு எழுதியதற்கு இந்திய மக்களே காரணம் என்கிறார். மேலும், மெகஸ்தனிஸ் பிற நாடுகளின் சூழ்நிலைகள் இந்தியாவில் இருந்ததாகக் கூறுகிறார். தத்துவ ஞானிகள், உழவர், இடையர், தொழிலாளர், போர்வீரர்கள், ஒற்றர்கள், அமைச்சர்கள் ஆகிய பிரிவினர் இருந்ததாகக் கூறுகிறார். ஆனால், இப்படிப்பட்ட பிரிவுகள் அப்போது இருந்ததாகத் தெரியவில்லை.

எவ்வாறு இருப்பினும் மெகஸ்தனிஸ் எழுதிய நூல் மௌரிய ஆட்சியைப் பற்றி அறிவதற்கு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இவர் பாடலிபுத்திரத்தைப் பற்றி திட்டவட்டமாகவும், விபரமாகவும் குறிப்பிட்டுள்ளார். ‘‘பாடலிபுத்திரம் ஒரு பாதுகாப்பான நகரமாக அமைக்கப்பட்டது. அது இந்தியாவின் மிகப் பெரிய நகரமாகும். 91/2 X 13/4 மைல் பரப்பளவுடையது. இந்த நகரம் மரச் சுவர்களினாலும் பெரிய பள்ளங்களினாலும் பாதுகாக்கப்பட்டது. பாடலிபுத்திரம் முப்பது உறுப்பினர்கள் கொண்ட சபையால் நிர்வகிக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவிலும் ஐந்து பேர்கள் உண்டு. நீர்ப்பாசனம், சாலைகள், ஆறுகள், நிலம், வரிவசூல் போன்ற ஐந்து நிர்வாகப் பிரிவுகள் உண்டு’’.

ஆயுதம் தாங்கிய பெண்கள் அரசனுக்கு பாதுகாப்பு அளித்தார்கள். அரசன் வேட்டைக்குச் செல்லும்போது உடன் சென்றனர். அரண்மனை சதிகளை முறியடிக்க அரசனின் படுக்கை அறை அடிக்கடி மாற்றப்பட்டது.

‘‘போர் நடைபெறுவது பொதுமக்கள் செலவில்தான். மௌரியப்படை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவையும் ஐந்து பேர்கள் அடங்கிய குழு கண்காணித்து வந்தது. அக்காலத்தில் குற்றங்களுக்குக் கடுமையான

தண்டனைகள் வழங்கப்பட்டன'', இவ்வாறு மெகஸ்தனிஸ் கூறுகிறார். இண்டிகாவும் அர்த்த சாஸ்திரமும் ஒன்றுக்கொன்று உதவியாக நின்று சந்திரகுப்தரன் வரலாற்றை அறிய உதவுகிறது.

**4. புராணங்கள் :**

சந்திரகுப்த மௌரியரும், கௌடில்யரும் நந்த வம்சத்தை வென்று ஆட்சிக்கு வந்த நிகழ்ச்சியை இந்து சமயப் புராணங்கள் கூறுகின்றன. சந்திரகுப்த மௌரியர் இருபத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்ததையும் தெரிவிக்கின்றன.

**5. இலக்கியங்கள் :**

தீப வம்சமும், மகா வம்சமும் இலங்கையைச் சேர்ந்த பௌத்த சமய நூல்களாகும். தீபவம்சம் கி.பி. நான்காம் நூற்றாண்டையும், மகா வம்சம் கி.பி. ஆறாம் நூற்றாண்டையும் சார்ந்த நூல்களாகும். மகாவம்சத்தை எழுதியவர் 'மகாநாமன்' என்பவராவார். இந்த நூல்கள் மூலம் மௌரியரைப் பற்றி நாம் அறிய முடிகிறது. சமணம் சார்ந்த மரபுச் செய்திகள், சந்திரகுப்த மௌரியர் சமண மதத்திற்கு மாறிய செய்திகளை கூறுகின்றன. மேலும் அசோகர் புத்த சமயத்திற்கு மாறியது, மாறுவதற்கான காரணம், புத்த சமயத்தைப் பரப்பியது, பாடலிபுத்திரத்தில் கூடிய மாநாடு ஆகியவை பற்றியும் கூறுகின்றன.

புத்தரின் பிறப்பை விவரிக்கும் ஜாதகக் கதைகள் மௌரியர் கால வட இந்திய பொருளாதார சமய நிலை பற்றிக் கூறுகின்றன. 'பரிசிஷ்ட பர்வன்' என்ற சமண இலக்கியம் சந்திர குப்த மௌாயரின் இறுதிக்காலம் பற்றி விளக்கமாகக் கூறுகிறது. மேலும், கல்கணர் எழுதிய ராஜரங்கினியும் ஒரு சில தமிழிலக்கியங்களும் மௌரிய வரலாற்றைப் பற்றி கூறுகின்றன. மினாண்டர் என்ற கிரேக்க மன்னர் எழுதியுள்ள 'மிலந்த பன்ஹா' என்ற நூல் மௌரியர் – நந்தர் போராட்டம் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. தாரநாதர் எழுதிய 'திபெத்திய வரலாறு' என்ற நூலும் மௌரியர்கள் பற்றிய செய்திகளைத் தருகிறது.

**6. வரலாற்றாசிரியர்களின் குறிப்புகள் :**

கிரேக்க நூலாசிரியர்களான ஜஸ்டின், டாலமி, டயோனிசியஸ், புளூடார்க் போன்றவர்கள் மௌரியர்களைப் பற்றிய குறிப்புகளை தங்கள் நூல்களில் ஆங்காங்கே

எழுதி வைத்துள்ளனர். சீன யாத்ரிகர் பாஹியான் தனது பயணக் குறிப்புகளில் அசோகரைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். யுலான்சுவாங்கும் மௌரியர்களைப் பற்றிய பல தகவல்களைத் தருகிறார்.

**7. கல்வெட்டுகள் :**

அசோகரின் கல்வெட்டுகள் மௌரிய வரலாற்றைப் பற்றி அறிய உதவும் ஆதாரங்களில் முக்கியமானது ஆகும். மௌரியப் பேரரசு பற்றி அதிகச் செய்திகளை அவை தருகின்றன. கல்தூண்களிலும், பாறைகளிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்து அசோகரைப் பற்றிய முழுமையான செய்திகளை நாம் அறிய முடிகிறது. சுருக்கமாகக் கூறினால் அவை அசோகரின் வரலாறாகவே காட்சியளிக்கின்றன. மேலும், ரூத்திரதாமனின் ஜுனகாத், கிர்னார் கல்வெட்டுகள் மூலமும் ஓரளவு நாம் மௌரியரைப் பற்றி அறிய முடிகிறது.

இவை தவிர அகழ்வாராச்சி மூலமாகவும் மௌரியப் பேரரசின் எல்லையை நாம் அறிய முடிகிறது. இவர்களது எல்லைக்குள் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் மூலம் பல உண்மைகளை நாம் அறிய முடிகிறது. மௌரியர் காலக் கட்டிடங்களும், கலைப் பொருட்களும் அக்கால கலைகளின் மேன்மையை உணர்த்துவதுடன் சமுதாய நிலையையும் காட்டுகிறது.

மேற்கண்ட சான்றுகள் மௌரியப் பேரரசைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் நாம் அறிந்து கொள்வதற்கு பெரிதும் உதவுகின்றன.

## சந்திரகுப்த மௌரியர் (CHANDRAGUPTA MAURYA, B.C. 325 – 301)

சந்தரகுப்தர் மௌரியப் பேரரசை தோற்றுவித்த நிகழ்ச்சி இந்திய வரலாற்றில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. இதிலிருந்து இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியது. கிரேக்கர்களை இந்தியாவை விட்டு விரட்டி இந்தியாவிற்கு சுதந்திரத்தைத் தேடித்தந்தவர் சந்திரகுப்த மௌரியர் ஆவார். இவர் காலத்தில்தான் சிற்றரசர்களின் கீழ் இருந்து ஆட்சிப் பகுதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டது. வட இந்தயாவில் ஒரு மாதிரியான ஆட்சி முறை அமைக்கப்பட்டது. தற்கால அரசியல் மேதைகளும் வியந்து பாராட்டும் சிறந்த ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவின்

அரசியல் ஒற்றுமைக்கு வித்திட்டவர் சந்திரகுப்த மெரியர் ஆவார். மௌரியப் பேரரசின் பேரரசர்களில் முக்கியமானவர் சந்திரகுப்த மௌரியர், பிந்துசாரார், அசோகர் ஆகியோர் ஆவர்.

**சந்திரகுப்த மௌரியரின் பூர்வீகம் :**

சந்திரகுப்த மௌரியரின் பூர்வீகத்தைப் பற்றி அறிந்து கொள்வது சிக்கலான ஒன்று ஆகும். அவர் ‘‘மூரா’’ என்ற தாய்க்குப் பிறந்ததன் காரணமாக அவரது வம்சம் மௌரிய வம்சம் என்று பெயர் பெற்றது என்று சிலர் கூறுவர். மற்றும் சிலர் அவர் மயில்களைப் பிடித்து அதைப் பழக்கப்படுத்தும் ஒருவருக்கு மகனாகப் பிறந்ததின் காரணமாக அவரது வம்சம் மௌரிய வம்சம் என்றும் கூறுவர். அக்காலத்தில் மயில்களைப் பழக்குபவாகளை ‘மயூரபோஷகர்’ (Mayura Poshaka) என்றழைத்தனர். சந்திரகுப்தர் சத்திரிய குலத்தில் மோரியா (Moria) என்ற வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறுகிறது. எனவே, அவர் தோற்றுவித்த அரசு மௌிரியப் பேரரசு என்று அழைக்கப்பட்டது. இது மற்ற சிறந்த கருத்துக்களை விட சிறந்த கருத்தாகத் தெரிகிறது.

எவ்வாறு இருப்பினும் சந்திரகுப்தர் மௌரிய வம்சத்தைச் சேர்ந்தவர் என்றும், அவரே மௌரியப் புரட்சியை நடத்தி நந்தவம்சத்தை வீழ்ச்சியடையச் செய்து அரச பதவியடைந்தார் என்பதிலும் சிறிதும் ஐயமில்லை.

**மகதப்புரட்சி (The Magadhan Revolution) :**

மகத நாடு அக்காலத்தில் நந்த வம்ச மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்களில் கடைசி மன்னர் தனநந்தர் ஆவார். இவர் சீர்கேடாக ஆட்சி செய்து வந்ததால் மக்கள் இவரது ஆட்சியை வெறுத்தனர். எனவே, பேரரசில் பணிபுரிந்து வந்த சந்திரகுப்தனும் நந்தர்குல மன்னர் மீது வெறுப்படைந்தார். அப்போது பஞ்சாபில் முகாமிட்டிருந்த அலக்சாந்தரிடம் தனநந்தரை ஒழித்துக்கட்ட உதவி கேட்டார். ஆனால், சந்திரகுப்தரின் பேச்சும் நடவடிக்கைகளும் பிடிக்காத அலக்சாந்தர் அவரை விரட்டியடித்தார். அப்போது கௌடில்யர் என்ற அந்தணரைச் சந்தித்தார். அவரது ஆலோசனையின் படி தனநந்தரைக் கொன்று நந்த ஆட்சிக்கு முடிவு கட்டினார். இவ்வாறு சந்திரகுப்தர் ஒரு புரட்சியை ஏற்படுத்தி அரச பதவி ஏற்றார். இதற்கு மகதப்

புரட்சி என்று பெயர். இந்த புரட்சியைப் பற்றி வரலாற்றாசிரியர் சத்திய நாதய்யர், "The Maurya Revolution was Brahmanical and popular, protracted and bloody" என்று கூறுகிறார்.

**சந்திரகுப்த மௌரியரின் படையெடுப்புகள் :**

**1) கிரேக்கர்களை நாட்டை விட்டு விரட்டுதல் :**

அலக்சாந்தரின் படையெடுப்பின் விளைவாக வடமேற்கு இந்தியாவில் கிரேக்கர்களின் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. கி.மு. 325–ல் அலக்சாந்தர் இந்தியாவை விட்டு புறப்பட்டார். வட இந்தியாவின் பல பகுதிகளில் கிரேக்க, மாசிடோனித் தலைவர்களை ஆட்சி புரியுமாறு ஏற்பாடு செய்து விட்டே சென்றார். ஆனால், இந்த தலைவர்கள் இந்திய மக்களிடம் அதிகமாக வரி வசூலித்து செல்வத்தைச் சுரண்டினார்கள். எனவே, வேற்று நாட்டவரின் இந்த ஆட்சியை மக்கள் வெறுத்தனர். எனவே இந்த அந்நியர்களைத் தாய் நாட்டை விட்டு வெளியேற்றும் பணியில் ஈடுபட்டார் சந்திரகுப்த மௌரியர்.

கி.மு. 324 முதல் 317 வரை கிரேக்கர்களுக்கெதிராகப் பல போர்களை நிகழ்த்தினார். இதற்காக தனது படையை வலிமைப் படுத்தினார். வீரம் மிக்க பஞ்சாபிய வீரர்களைச் சேர்த்துக் கொண்டார். பன்னாட்டைச் சேர்ந்த கூலிப்படையினரையும் சேர்த்துக் கொண்டார். சிந்துப் பகுதி மீட்கப்பட்டது. அங்கிருந்த மாசிடோனிய ஆளுநர் யூடிமாஸ் (Endemos) என்பவர் கி.மு. 317–ல் இந்தியாவை விட்டு ஓடிவிட்டார். இவ்வாறு கி.மு. 317–ஆம் ஆண்டில், இந்தியாவிலிருந்த மாசிடோனியர் அனைவரும் சந்திரகுப்தரின் திறமையால் இந்தியாவை விட்டு விரட்டப்பட்டார்கள். இது சந்திரகுப்த மௌரியரின் ஓர் சிறந்த சாதனையாகும்.

**2. செலுகஸ் நிகேடருடன் போர் : (War with Selukos Nikator)**

அலக்சாந்தரின் மரணத்திற்குப் பிறகு மாசிடோனியப் பேரரசின் கிழக்குப் பகுதியை ஆண்டு வந்த செலுகஸ் நிகேட்டர், கிரேக்க ஆட்சியை மீண்டும் சிந்து பகுதியில் ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் கி.மு. 305–ல் இந்தியாவிற்கு வந்தார். அப்போது இந்தியா ஒற்றுமையாகவும், வலிமையாகவும் இருந்தது. போர் நிகழ்ந்த காலம், அதன் விளைவுகள் பற்றி நாம் திட்டமாக ஏதும் அறிந்துகொள்ள

முடியவில்லை. ஆனால், போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை சந்திரகுப்த மௌரியருக்கு சாதகமாக இருப்பதை நாம் அறிய முடிகிறது. அந்த உடன்படிக்கையின்படி,

a) ஐந்தாறு யானைகளை செலுகஸ் நிகேட்டர் பெற்றுக்கொண்டார். அதற்குப் பதிலாக ஆரியா, அரகோஷியா கெட்ரோஷியா, பரபானி சடாய் (Aria, Arachosia, Gedrosia and Paropanisadai) ஆகிய சத்ரப்புகளை சந்திரகுப்தருக்குக் கொடுப்பதாக செலுக்கஸ் நிகேட்டர் ஒத்துக்கொண்டார்.

b) செலுகஸ் நிகேட்டரின் மகளை மணம் முடித்துக்கொள்ளும் திருமண உடன்பாடு ஏற்பட்டது. (சந்திரகுப்தர் அல்லது பிந்துசாரர் செலுகஸ் நிகேட்டரின் மகளை மணந்து கொண்டிருக்கலாம்).

இந்த உடன்படிக்கைக்குப் பிறகுதான் மேலும் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்காக மெகஸ்தனிஸ் என்ற தனது தூதுவரைப் பாடலிபுத்திரத்திற்கு அனுப்பி வைத்தார் செலுகஸ் நிகேட்டர்.

### 3. குஜராத், கத்தியவார் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றுதல் :

குஜராத்தையும், கத்தியவார் பகுதியையும் வென்றார் சந்திரகுப்த மௌரியர். கிரேக்கப்படைகளை இந்தியாவை விட்டு வெளியேற்றிய பின்பு இந்தப் படையெடுப்புகளை அவர் மேற்கொண்டார். படையெடுப்பின் காலம் திட்டமாகத் தெரியவில்லை. உருத்திரதாமனின் கீர்நார் கல்வெட்டில் (Girnar inscription) சந்திரகுப்தனின் மாகாண ஆளுநரான வைஷ்யபஷ்ய குப்தா (Vaisya Poushyagupta) என்பவர் சுதர்சனம் (Sudarsana) என்ற ஏரியை தோற்றுவித்தார் என்று தெரிவிக்கிறது. எனவே குஜரத்தும் கத்தியவார் பகுதியும் சந்திரகுப்தரின் ஆட்சிப் பகுதியினுள் அடங்கியிருந்தது என்று தெரிகிறது.

### 4. சந்திர குப்த மௌரியர் முடிதுறத்தல் : Abdication

சந்திரகுப்த மௌரியரின் இறுதிக்காலம் பற்றி சமண இலக்கியங்கள் மூலம் நாம் அறிய முடிகிறது. செலுகஸ் நிகேட்டருடன் வெற்றி பெற்ற பின்பு சந்திர குப்த மௌரியரின் இறுதிக்காலமும் நெருங்கியது. வட இந்தியாவில் கடும் பஞ்சம் இப்போது

நிலவியது. எனவே, பத்திரபாகு (Bhadrababu) என்ற சமண துறவியின் தலைமையில் பன்னிரெண்டாயிரம் சமணர்கள் மைசூரிலுள்ள சரவண பெல்கோலா (SaravanaBelgola) என்ற இடத்தை அடைந்தனர். சந்திரகுப்தரும் முடிதுறந்து இவர்களுடன் தென்னிந்தியா வந்தார். அங்கு பத்திரபாகு இறந்த பின் பன்னிரெண்டு ஆண்டு காலம் வாழ்ந்தார். அதன்பின் சமண மரபுப்படி சந்திரகிரி என்ற இடத்தில் வடக்கிருந்து உயிர் நீத்ததாகக் கூறப்படுகிறது. சந்திரகுப்த மௌரியர் இறக்கும்போது அவருக்கு நாற்பத்தைந்து வயது இருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.

**5. சந்திரகுப்தரின் தக்காணப்படையெடுப்பு :**

சந்திரகுப்த மௌரியர் தக்காணத்தின் மீது படையெடுத்தார் என்றும் ஒரு சில தக்காண அரசுகளை கைப்பற்றினார் என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் தக்காணத்தின் மீது படையெடுத்தவர் சந்திரகுப்தராக இருக்க முடியாது என்றும், அவருக்கு முற்பட்ட நந்தர்கள் தக்காணத்தின் மீது படையெடுத்திருக்க வேண்டும் என்றும் பல ஆதாரங்கள் மூலம் தெரிய வருகிறது. மைசூர் கல்வெட்டுகள் சிலவற்றில் நந்தர்கள் மைசூரின் வடஎல்லையிலுள்ள குண்டல நாட்டை ஆண்டார்கள் என்ற குறிப்பு காணப்படுகிறது. அடுத்து சங்கத் தமிழ்ப் புலவரான மாமூலனார் தனது அகநாநூற்றின் மூன்று செய்யுள்களில் மௌரியர்கள் தென்னிந்தியா வரை படையெடுத்ததாகவும், சோழன் இளஞ்சேட் சென்னி அவர்களை விரட்டியடித்ததாகவும் கூறுகிறார்.

அகநானூற்றில் கூறப்படும் இந்த மௌரியப் படையெடுப்பை சந்திரகுப்தரின் மகன் பிந்துசாரன் தான் மேற்கொண்டிருக்க வேண்டும் என்று கே.கே. பிள்ளை, நீலகண்ட சாஸ்திரி, ராய் சௌத்திரி போன்றோர் குறிப்பிடுகிறார்கள். சந்திரகுப்தர் தனது பதினான்கு ஆண்டு கால ஆட்சியின் போது, மாசிடோனியப் படைகளை விரட்டுவதிலும், செலுகஸ் நிகேட்டருடன் போரிலும், உள்நாட்டு குழப்பங்களை அடக்குவதிலுமே ஈடுபட்டார் என்றும், எனவே தக்காணப் படையெடுப்பிற்கு அவருக்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை என்று வின்சென்ட் ஸ்மித் கருதுகிறார்.

ஆனால் புளூடார்க் என்பவர் சந்திரகுப்தர் தனது ஆறிலக்கம் படைவீரர்களுடன் இந்தியா முழுவதையும் வென்றார்' என்று குறிப்பிடுவதால் இந்தியாவின் ஒரு பகுதியான தக்காணத்தையும் வென்றார் என்று அறியப்படுகிறது. இந்தப் படையெடுப்பு நந்தர்களின்

வீழ்ச்சிக்குப் பின்பும் செலூக்கா படையெடுப்புக்கு முன்பும் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். மேலும் பிந்துசாரர் தென்னாட்டின் மீது படையெடுத்தார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அத்துடன் பிந்துசாரர் தக்காணத்தின் மீது பெரிய படையெடுப்பை மேற்கொள்ளும் அளவுக்கு துணிச்சல உடையவர் அல்ல. சந்திர குப்தர் சரவண பெல்கோலாவில் தவமிருந்து உயிர் நீத்தார் என்று ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவரங்கப்பட்டினத்து கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. அசோகர் தன் வாழ்நாளில் முதலும் முடிவுமாக கலிங்க நாட்டின் மீது போர் தொடுத்து அந்த தேசத்தைத் தன் ஆட்சியுடன் சேர்த்துக்கொண்டார்.

எனவே, பிந்து சாரரும் அவரது மகன் அசோகரும் தக்காணத்தின் மீது படையெடுக்கவில்லை என்பது புலனாகிறது. ஆனால், தென்னிந்தியா மீது நந்தர்களும் மௌரியர்களும் படையெடுத்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. அத்தகைய படையெடுப்புகளை மேற்கொண்டவர் சந்திரகுப்த மௌரியராகத்தான் இருக்க வேண்டும். இவர் நந்தர்களை அழித்துவிட்டு தக்காணத்தின் மீது படையெடுத்தார். இவரது இறப்பும் தக்காணத்திலே நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### 6. பேரரசின் பரப்பு : Extent of the Empire

சந்திரகுப்த மௌரியர் ஒரு பேரரசை ஆண்டு வந்தார் என்பது உறுதியாகத் தெரிகிறது. சந்திரகுப்தர் இந்தியா முழுவதையும் வென்று தனது ஆணையின் கீழ் கொண்டு வந்ததாக புளுடார்க் கூறியுள்ளார். கலிங்க நாடு அவரது பேரரசுக்கு உட்படவில்லை. சந்திரகுப்த மௌரியரின் பேரரசு வடக்கே இமயத்தலிருந்து தெற்கே நர்மதை நதி வரைப் பரவியிருந்தது. கிழக்கே வங்காளம் முதல் வட மேற்கே ஆப்கானிஸ்தானம் வரையும் பரவியிருந்தது. பஞ்சாப் சிந்து உத்திரப் பிரதேசம், பீஹார், கத்தியவார் பிரதேசம் முதலானவை இவரது பேரரசில் அடங்கியிருந்தன. தென்னிந்தியாவில் சந்திரகுப்த மௌரியரின் பேரரசு பரவியிருந்ததா என்பதைக் கூற ஆதாரங்கள் போதாது.

### மதிப்பீடு : Estimation

இந்தியாவில் பெரும் பேரரசுகளை நிறுவியவர்களில் முதலிடம் வகிப்பவர் சந்திரகுப்த மௌரியர் ஆவார். இவர் சிறந்த பேரரசர். திறமையான போர்வீரர்.

அந்நியரை இந்திய மண்ணிலிருந்து விரட்டிய பெருமை இவருக்கு உண்டு. இவ்வாறு முதல் சுதந்திரப் போரை நடத்தி இந்தியாவிற்குப் பாதுகாப்பைக் கொடுத்தார். சிதறிக்கிடந்த இந்தியர்களை ஒன்று சேர்த்து நாட்டு ஒற்றுமைக்கு வழிகோலினார். வட இந்தியாவையும், தென் இந்தியாவையும் ஒன்றாக இணைத்த முதல் மன்னர் இவர்.

சந்திரகுப்த மௌரியர் திறமையாக ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட ஒரு ஆட்சி முறையை இந்த நாட்டிற்கு அளித்தார். இவரது ஆட்சி முறை பிற்கால ஆட்சி முறைக்கு முன்னோடியாக விளங்கியது. இவரது ஆட்சியில் நாடு பல வழிகளில் முன்னேறியது. பண்பாட்டுத் துறையில் நல்ல வளர்ச்சியடைந்தது. இந்திய வரலாற்றில் பெரிய வெற்றி வீரர்களாகவும், மாமன்னர்களாகவும் குறிக்கப்படும் பட்டியலில் சந்திரகுப்த மௌரியரும் இடம் பெறுகிறார்.

### பிந்து சாரர் (கி.மு. 301 – 273) (Bindusara)

சந்திரகுப்த மௌரியருக்குப் பிறகு அவரது மகன் பிந்து சாரர் மௌரியப் பேரரசரானார். இவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அதிகமான சான்றுகள் நமக்கு கிடைக்கவில்லை. எனவே, இவரது வெற்றிகள் பற்றியும், இவர் கைப்பறிய இடங்கள் பற்றியும் ஒன்றும் அறிய முடியவில்லை. கௌடில்யர் பிந்துசாரர் காலத்திலும் தொடர்ந்து பணியாற்றினார். தந்தையிடமிருந்து வாரிசாகப் பெற்றுக் கொண்ட பரந்த நிலப்பரப்பைக் கொண்ட பேரரசை பிந்துசாரர் சிதைவுறாது காத்துக் கொண்டார். தட்சசீலத்தில் புரட்சி ஒன்று ஏற்பட்டபோது தனது மகன் அசோகரை அனுப்பி அடக்கினார். இவரது காலத்தில் இவரது மகனான அசோகர் தட்சசீலம் உஜ்ஜயினி ஆகிய மாநிலங்களின் ஆளுநராகப் பணியாற்றினார். உலகப் புகழ்ப் பெற்ற அரசர் அசோகரை உலகிற்கு ஈந்த பெருமை பிந்து சாரரை சாரும்.

#### பிந்துசாரரின் வெற்றிகள் :

அசோகரது பேரரசில் தீபகர்ப்ப இந்தியாவின் பெரும் பகுதி இணைக்கப்பட்டிருந்தது. ஆனால், அசோகரைப் பொறுத்த வரையில் அவர் செய்த போர் கலிங்கப் போர் ஒன்றே ஆகும். எனவே, சந்திரகுப்த மௌரியர் அல்லது அவரது மகனான பிந்துசாரர் பேரரசின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றியிருக்க வேண்டும். தென்னிந்தியாவின் பெரும் பகுதிகளை பிந்துசாரர் கைப்பற்றியிருக்க வேண்டும்.

**பிந்துசாரரின் தென் இந்திய வெற்றி :**

தாரநாதன் (Taranatha) என்ற திபெத்திய புத்தமத வரலாற்றாசிரியர் தனது நூலில் ‘பிந்துசாரர் கௌடில்யரின் உதவி பெற்று பதினாறு ராஜ்யங்களிலுள்ள அரசர்களையும், அமைச்சர்களையும் அழித்து அவ்விடங்களையும், மேற்கு கிழக்கு கடல்களுக்கு இடைப்பட்ட பகுதிகளையும் கைப்பற்றினார்’ என்று கூறியுள்ளார். தாரநாதன் குறிப்பிட்ட பதினாறு நாடுகளும் வட இந்தியாவில் இருக்க முடியாது என்று ஊகிக்கலாம். ஏனென்றால், தட்சசீலத்தில் மாத்திரம் இரண்டு புரட்சிகள் நடந்து அவை அடக்கப்பட்டன. வேறு கலவரம் அல்லது போர்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை. எனவே இந்த பதினாறு நாடுகளும் தென்னிந்தியாவைச் சார்ந்ததாகத் தான் இருக்க வேண்டும்.

சங்க கால தமிழ் இலக்கியத்தில் மௌரியர்களைப் பற்றி நான்கு குறிப்புகள் உண்டு. அவைகளில் இரண்டு மாமூலனாரின் குறிப்புகள். அக்குறிப்புகளில் மாமூலனார் ‘மௌரியர்கள் தென்னிந்தியா மீது படையெடுத்து மதுரை வரை முன்னேறினார்கள்’ என்று கூறுகிறார். மற்றொரு குறிப்பில் ‘வம்பமௌரியர்’ (Vambamoriyar) என்று மௌரியர் அழைக்கப்படுகின்றனர். இதற்கு ‘புதிதாக அரச பதவிக்கு வந்தவர்கள்’ என்று அர்த்தம். இந்த ஆதாரங்களின் அடிப்படையில் தென்னிந்தியா மீது மௌரியர்கள் படையெடுத்திருப்பர் என்று கூறுகிறார்கள். மேற்கூறியவற்றிற்குச் சான்றாக புத்த நூலான ஆரிய மஞ்சூரி மூலகல்பா(Arya Manjuri Mulakalpa)–வின் ஆசிரியர் கூறுவதாவது : “Kautilya the bad Brahmin served during three reigns including that of Bindhusara, who ascended the throne as a minor and became, bold, eloquent and sweet-tongued’ இதிலிருந்து பிந்துசாரர் பதினாறு நாடுகளைப் பிடிப்பதற்கு ஏற்ற வலிமைப் பெற்றவர் என்று தெரிகிறது. மேலும் கிரேக்கர்கள் பிந்துசாரரை ‘அமித்ரசுதா’ (Amitragatha) என்று குறிப்பிடுகின்றனர். அமித்ரசுதா என்றால் எதிரிகளை அழிப்பவன் என்று பொருள் ஆகும். எனவே, பிந்துசாரர் தென் இந்தியப் படையெடுப்பை தன் காலத்தில்தான் நடத்தியிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

கலிங்க நாட்டு அரசன் காரவேலன் கி.மு. **176**–ல் பதவி ஏற்றியிருக்க வேண்டும். ஹதிகும்பா கல்வெட்டு இவனது **11**–வது ஆண்டைக் குறிப்பிடும் போது **113** ஆண்டுகளாக இருந்த தமிழ் மன்னர்களின் கூட்டணி ஒன்று காரவேலனை

அச்சுருத்தியதாகக் கூறுகிறது. ஆகவே **176 – 11 = 165 + 113 = 278.** இந்த **278–**ஆம் வருடம் பிந்துசாரரின் காலத்தைச் சேர்ந்தது. ஆகையால், இந்த தென்னிந்தியப் படையெடுப்பு பிந்துசாரர் காலத்தில்தான் நடந்திருக்க வேண்டும். மேலும், தென்னிந்திய மன்னர்கள் ஒன்று சேர்ந்து பொதுப் பகைவர்களான மௌரியருக்கு எதிராக ஒன்று சேர்ந்து அவர்களது ஆதிக்க உரிமையைத் தடுத்தனர் என்பது உறுதியாகிறது.

**மேலை நாடுகளுடன் தொடர்பு :**

மேலை நாடுகளுடன் தனது தந்தை சந்திரகுப்த மௌரியர் ஏற்படுத்தியிருந்த ராஜதந்திர மற்றும் வாணிபத் தொடர்புகளைத் தொடர்ந்து நிலைநாட்டி வந்தார் பிந்துசாரர். மெகஸ்தனிசுக்குப் பிறகு சிரியாவின் தூதுவராக தெமாக்கஸ் (Demachos) என்பவர் வந்தார். செலுகஸ் நிகேட்டருக்குப் பின் வந்த அரசர் முதலாம் ஆன்ட்டியோகஸ் (Antiochos I) பிந்துசாரனிடம் நட்புறவு கொண்டிருந்தார். எனவே ஆன்ட்டியேகசிடம் பிந்துசாரர் திராட்சை ரசமும் உலர்ந்த அத்திப் பழங்களையும், ஒரு கிரேக்க அறிஞரையும் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆனால், அந்த கிரேக்க அரசர் முதலிரண்டு பொருட்களையும் அனுப்பிவிட்டு அவர்கள் நாட்டுச் சட்டப்படி அறிவாளிகளை அனுப்ப இயலாது என்று சொல்லி அனுப்பினார்.

மேலும் இரண்டாவது டாலமி (Ptolemy II) என்ற எகிப்திய அரசர் 'டயோனிசியஸ்' (Dionysius) என்ற தூதுவரை மௌரிய அவைக்கு அனுப்பி நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார். இவ்வாறு சிரியா, எகிப்து நாட்டு மன்னர்கள் ஏற்படுத்திய தொடர்புகள் பிந்துசாரரை அவர்களுக்கு இணையான மன்னர் என்ற நிலைக்கு உயர்த்தின.

**முடிவுரை :**

பிந்துசாரர் பதினாறு மனைவிகள் மூலம் **101** பிள்ளைகள் பெற்றார் என்று மகாவம்சம் கூறுகிறது. ஆனால், இது தவறான செய்தி என்று அறிஞர்கள் கருதுகின்றனர். எவ்வாறெனினும் இவருக்குப் பல மைந்தர்கள் இருந்தார்கள் என்பதும் அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள் என்றும் தெரிகிறது. கி.மு. **273–**ல் பிந்துசாரர் இருந்திருக்க வேண்டும். வாரிசுரிமைப் போரில் அசோகர் வெற்றி பெற்றது கி.மு. **273–**ல் மௌரியப் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார்.

## அசோகர் (ASOKA, B.C. 273 – 236)

மௌரிய பேரரசை ஆண்ட மன்னர்களுள் அசோகர் மிகச் சிறந்தவர் ஆவார். பிந்துசாராருக்குப் பின் இவர் கி.மு. 273–ல் மௌரியப் பேரரசின் மன்னரானார். இவர் பிந்துசாரரின் இரண்டாவது மகனாக இருந்தபடியால் சகோதரர்களுடன் போரிட்டே பதவியைப் பிடித்தார். இவருக்கு தந்தையின் முக்கிய அமைச்சரான இராமகுப்தனின் ஆதரவு இருந்தது. பேரரசராவதற்கு முன் அசோகர் உச்சயினி அல்லது தட்சசீல மாகாண ஆளுநராக இருந்தார். அசோகர் ஒரு மாமன்னர். புத்தர் தோற்றுவித்த புத்த சமயத்தை உலக சமயமாக்கிய மாவீரர். வாய்மை, தருமம், தன்னடக்கம், நன்றி மறவாமை, அன்புடைமை, கொல்லாமை ஆகியவற்றை மக்களுக்குப் போதித்தார். தாம் கூறிய அறிவுரைகளை தாமே கடைப்பிடித்த பெருமை அசோகருக்கு உண்டு. இந்திய வரலாற்றில் உன்னதமான இடத்தைப் பெற்றிருக்கும் அசோகரின் தர்மச் சக்கரம் நமது நாட்டின் தேசியக் கொடியை அலங்கரிக்கிறது.

### அசோகர் பட்டத்தற்கு வருதல் :

அசோகர் அரச பதவியை அடைந்தது பற்றி பௌத்த நூல்கள் பல கதைகளைக் கூறுகின்றன. சிங்கள பௌத்த நூலான வம்சத்தபகாசினி அசோகர் அரியணையை அடைவதற்காக நம் உடன் பிறந்தோரில் ஒருவனைத் தவிர எஞ்சிய தொன்னூற்றி ஒன்பது பேரையும் கொன்று விட்டார் என்று கூறுகின்றது. மேலும் அசோகரை 'சந்தசோகர்' (கொடிய அசோகர்) என்று தூற்றுகின்றது. ஆனால், திவ்வியாவாதனம் என்ற நூல், பிந்துசாரர் இறக்கும் தருவாயில் தன் மூத்த மகன் சுசீமனை அரியணையில் அமர்த்த விரும்பினார். ஆனால், அமைச்சர்கள் அசோகரையே அரசனாக்கினார் என்ற செய்தியைக் கூறுகிறது. திபெத்திய லாமா நாரநாதன், அசோகர் தம் உடன்பிறந்தோர் அறுவரைக் கொன்று அரியணை அடைந்ததாகக் கூறுகின்றார். இவைகளை நோக்கும்போது சோகர் அரியணையை அடைவதற்கு எதிர்ப்பு இருந்தது என்றும் பட்டத்திற்கு வந்த பின், நான்கு ஆண்டுகள் முடிசூட்டிக் கொள்ளாமல் இருந்ததற்கு உடன்பிறந்தோருடன் போரிட்டுக் கொடிருந்ததே ஆகும் என்பது நன்கு புலப்படுகின்றது. மேலும் அசோகர் இயற்கையாக அரசுரிமையைப் பெற்றிருக்கவில்லை என்று பல சான்றுகளிலிருந்து புலப்படுகிறது.

அசோகர் தேவநரிம்பிரியர், பிரியதர்சினி என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். அசோகர் உச்சயினி மகாகாணத் தலைவராக இருந்தபோது விதிசா நகர வணிகன் ஒருவனின் மகளான தேவி என்பவளிடம் காதல் கொண்டு அதன் விளைவாக அவர்கட்கு மகேந்திரன், சங்கமித்திரை என்ற இரு குழந்தைகள் பிறந்ததாக தீபவம்ஸம் கூறுகின்றது. அசோகருக்குப் பல மனைவியர் இருந்தனர் என்பது அவரது கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது. அசந்திமித்தா என்பவள் நீண்ட நாள் அசோகரின் பட்டத்தரசியாக விளங்கினாள் என்று மகாவம்சம் கூறுகிறது.

**கலிங்கப்போர் : கி.மு. 261**

அசோகர் இளமைப் பருவத்திலேயே போர்வன்மையும் ஆட்சித் திறனும் பெற்றிருந்தார். ஆட்சி தொடங்கிய முதல் பதின்மூன்று ஆண்டுகள் வரையில் நாட்டை பிரிவடையச் செய்வதிலும், அண்டை நாட்டாருடனான சுமுகமான உறவை ஏற்படுத்துவதிலுமே கவனம் செலுத்தினார் அசோகரின் பேரரசு இந்தியாவின் பெரும்பகுதியிலும் மத்திய ஆசியா வரையிலும் பரவியிருந்தது. ஆனாலும், இந்தியாவின் தென்பகுதியும், தென்கிழக்குப் பகுதியும் உட்படாமல் இருந்தது. எனவேதான் இந்தியா முழுவதையும் தன்கீழ் கொண்டு வர வேண்டும் என்று முடிவெடுத்தார். அசோகரின் இந்த மண்ணாசையே கலிங்கப் போருக்குக் காரணம் ஆகும்.

கலிங்கம் என்பது கிழக்குக் கடற்கரையில் கோதாவரியாற்றிற்கும் மகா நதிக்கும் இடையே இருந்த நாடாகும். (இக்கால ஒரிசா மற்றும் ஆந்திராவின் ஒரு பகுதி) இந்த நாடு தன்னுரிமையுடன் இருந்ததால தனது பிடியில் வைத்துக் கொள்வே போர் தொடுத்தார். அப்பொழுது கலிங்க நாட்டை ஆண்ட அரசன் யார் என்பது தெரியவில்லை. உலக வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது கலிங்கப்போர்.

அசோகரின் பெரும்படை கி.மு.261–ல் கலிங்கப்படையுடன் மோதியது. கடுமையான போர் நடைபெற்றது. 1.5 இலட்சம் கலிங்க வீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர். ஒரு இலட்சம் வீரர்கள் கொல்லப்பட்டனர். போர்க்களத்தில் இரத்த ஆறு ஓடியது. கலிங்கப்படை தோற்றது. அசோகர் வெற்றியடைந்தார். கலிங்கம் மௌரியப் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

ஆனால், போர்க்களத்தில் அசோகர் கண்ட காட்சி அவரது மனப்போக்கினை மாற்றிவிட்டது. உயிரிழந்தோர், உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்தவர்கள், உறுப்புகளை இழந்தோர், உற்றாரை இழந்து கதறிக் கொண்டிருந்தோர், இவர்களை எல்லாம் பார்த்ததும் அசோகர் மனத்தில் திடீரென்று மாறுதல் ஒன்று ஏற்பட்டது. போரினால் பிறருக்கு ஏற்படும் துன்பங்களை நன்குணர்ந்த அவர் இனி போர் செய்வதில்லை என சபதம் பூண்டார். கலிங்கப் போரே அசோகரின் முதல் போரும் இறுதிப் போரும் ஆகும்.

கலிங்கப் போருக்குப்பின் அசோகரின் போக்கில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. அசோகர் பெற்ற மனமாற்றத்தை பதிமூன்றாம் பாறைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. கொல்லாமைக் கோட்பாட்டை தம் உயிர் நாடியாகக் கொண்டார். போரில் காணும் வெற்றியை மறந்தார். எஞ்சியதன் வாழ்நாள் முழுவதும் தர்மத்தின் வெற்றிக்காக அயராது பாடுபட்டார். இவ்வாறு அசோகரிடம் ஏற்பட்ட மாறுதலே அவர் புத்த சமயத்தைப் பின்பற்றியதற்கும், பின்னர் அதைப் பரப்புவதற்கும் காரணமானது. புத்த சமயத்தால் அசோகருக்கும், அசோகரால் புத்த சமயத்திற்கும் சீரும் சிறப்பும் ஏற்பட்டன.

**அசோகரின் கல்வெட்டுகள்**

அசோகரின் கல்வெட்டுக்கள் அசோகரின் வரலாற்றைப் பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளாகும். அவை யாவும் அசோகரின் ஆணைகளேயாகும். இக்கல்வெட்டுகள் பேரரசின் பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. அவை காணப்படும் இடங்களிலிருந்து அசோகரின் பேரரசின் பரப்பினை ஓரளவு அறிய முடிகிறது. இக்கல்வெட்டுகள், பாலி, பிராமி, அராபிக், சுரோஷ்டி மற்றும் பிராக்கிருத மொழிகளில் செதுக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து வடிவம் பிராமி (Brami) ஆகும். வட மேற்கு பகுதிகளில் உள்ள கல்வெட்டுக்களில் 'க்ரோஸ்தி' எழுத்து வடிவம் காணப்படுகிறது. பேரரசனுக்குரிய கம்பீரமான நடையில் அசோகரின் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சில கல்வெட்டுக்களில் அசோகரின் பெயர் காணப்படுகிறது.

அசோகரின் கல்வெட்டுக்கள் மண்மூடிப்போன புராதன இடங்களிலும் காடுகளின் நடுவிலேயும், புதர்களிலும் மறைந்து கிடந்ததால் இவற்றை வேட்டைக்காரர்களும், வனத்துறையினரும், நில நூல் ஆராய்ச்சியாளர்களுமே

கண்டுபிடித்துள்ளார். முதன் முதலில் கி.பி. 1750–ல் தைப் பெந்தாலர் என்பவர் டில்லி, மீரட் கல்வெட்டைக் கண்டுபிடித்தார். கி.பி. 1879–ல் தளபதி கன்னிங்காம் என்பவர் அசோகரின் கல்வெட்டுக்களைத் தொகுத்து இந்திய சாசனங்களின் முதல் தொகுப்பை வெளியிட்டார். 1925–ல் ஹிதச் (Hutzech) என்பவர் இதனைத் திருத்தியமைத்து வெளியிட்டார். இக் கல்வெட்டுகளில் சுமார் 5000 சொற்கள் உள்ளன. இக் கல்வெட்டுக்கள் V.A.ஸ்மித், D.R.பண்டர்கார், R.K. முகர்ஜி, ரொமிலா தாபர் ஆகிய வரலாற்றறிஞர்களால் மொழி பெயர்க்கப்பட்டுட்ளன. அசோகரின் கல்வெட்டுக்கள் இந்திய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன.

அசோகரின் கல்வெட்டுக்களை அவை செதுக்கப்பட்ட கால வரன்முறை, அவை குறிப்பிடும் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட வகைகளாகப் பிரிக்கலாம்.

i) சிறிய கற்பாறை ஆணைகள்,
ii) கற்பாறை ஆணைகள்,
iii) கற்றூண் ஆணைகள்,
iv) சிறிய கற்றூண் ஆணைகள்,
v) சாஞ்சி ஸ்தூபி

**I சிறிய கற்பாறை ஆணைகள் :**

சிறிய கற்பாறைக் கல்வெட்டுகள் கி.மு. 258 அல்லது 257–ஆம் ஆண்டில் செதுக்கப்பட்டிருக்க வேண்டும். இக்கல்வெட்டுகள் இந்தியா முழுவதிலும் காணப்படுகிறது. மைசூரிலுள்ள சித்தப்புரா, பராமகிரி, ஹைதராபாத்திலுள்ள மாஸ்கி, பிகாரிலுள்ள சகஸ்ரம், ஜபல்பூரிலுள்ள ரூப்நாத், ராஜஸ்தானிலுள்ள பைராத் ஆகிய இடங்களிலும், கோபிமாத், பகிகுண்டா ஆகிய இடத்திலும் கிடைத்துள்ளன. 1961–ல் உத்திரப் பிரதேசத்திலுள்ள அரவுரா நகருக்கருகிலும், 1966–ல் டில்லிக்கருகிலுள்ள காரி (Garhi) என்ற ஊரிலும் சிறிய பாறைக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முதலாவது சிறிய கற்பாறை ஆணை அசோகர் சமயத் துறையில் படிப்படியாக அடைந்த முன்னேற்றத்தைக் கூறுகிறது. கலிங்கத்துப் போர் கி.மு. 261–ல் நிகழ்ந்ததாக அறியப்படுகிறது. இப்போருக்குப் பின்னர் அசோகர் புத்தமார்க்கத்தைத் தழுவினார்.

போர் முடிந்த பின்னர் கி.மு. 261–ன் இறுதியில் ‘புத்தபிட்சு’வாக மாறினார் அசோகர். இரண்டரை ஆண்டு காலத்திற்குப் பிறகு (கி.மு. 259) அவர் ‘பிட்சுகட்டிகா’வாக மாறினார். பிட்சுகட்டிகா என்ற சொல் ஒரு துறவியின் பல நிபந்தனைகட்கும், கட்டுப்பாடுகட்கும் இணங்கியவர் என்று பொருள்படும்.

இரண்டாவது சிறிய கற்பாறை ஆணை அசோகருடைய நல்வழியை விளக்குகிறது. பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ளல், உண்மை பேசுதல், ஆசிரியருக்கு அடி பணிதல், உறவினரை உபசரித்தல் முதலியன வற்புறுத்தப்படுகின்றன. இதே கல்வெட்டில் அசோகர் உபாசகனாக மாறினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உபாசகன் என்பதற்கு புத்தம், தர்மம், சங்கம் என்ற மூன்று இரத்தினங்களிடையேயும் புகலடைந்தவன் என்று பொருள்படும். இதிலிருந்து அசோகர் புத்த மதத்தை முழு நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டவர் என்பது புலப்படுகிறது.

மாங்கி கல்வெட்டு அசோகரைப் பற்றிக் குறிப்பிடும் போது ‘சாக்கிய உபாசகா’ என்று கூறுகிறது. இது ஃசோகர் சாக்கிய முனிவனான புத்தரின் மதத்தை தீவிரமாகப் பின்பற்றியவர் என்று தெரியப்படுத்துகிறது.

**பாப்ரு ஆணை :**

பாப்ரு ஆணை ‘அசோகர் புத்த சமயத்தைச் சேர்ந்தவர், அதில் மிக்க ஈடுபாடு கொண்டவர்’ என்பதை ஐயமறக் காட்டுகின்றது. எனவே இது ஒரு முக்கியமான அசோகரின் கல்வெட்டென்று கூறலாம். இது 1840–ல் பைராத் என்ற இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது. மேலும், அதில் அசோகர் புத்த வேதத்தின் சில பகுதிகளைக் குறிப்பிட்டு அவற்றைத் துறவிகளும் சாதாரண பௌத்தாகளும் நன்கு கற்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார். புத்த தர்மத்தைப் பற்றிக் கூறும்போது ‘சாதம்மா’ (மிகச் சிறந்த) எஙனறு கூறுகிறார். மேலும், புத்தா ஒருவரைப் பற்றிக் குறிப்பிடும் போது மாத்திரம் பகவான் என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறார். அசோகர் புத்த மதத்தைத் தழுவியவர் என்பதற்கு இந்தக் கல்வெட்டே சான்று ஆகும். இக் கல்வெட்டு தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.

**II) கற்பாறை ஆணைகள் :**

கற்பாறைக் கல்வெட்டுகள் மொத்தம் பதினான்கு ஆகும். கி.மு. 257–க்கும் 256–க்கும் இடையே உள்ள காலத்தில் இவை செதுக்கப்பட்டிருக்க வேண்டும். இக் கல்வெட்டுகள் யாவும் எல்லைப்புற மாநிலங்களில் காணப்படுகின்றன. வட மேற்கு எல்லைப் புறத்திலுள்ள மன்சோராவிலும், பெஷாவருக்கு அருகிலுள்ள சபாஷ்கரிலும் மற்றும் சித்தபுரம், பிரம்மகிரி, மாஸ்கி, சகஸ்ரம், ரூப்நாத், பைராத், இர்நார், தெலி, கால்சி, சோப்ரா ஆகிய பன்னிரெண்டு இடங்களில் இந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன. ஜவுடா, எர்ரகுடி ஆகிய இடங்களிலுள்ள இரு கல்வெட்டுகள் சுரோஷ்டி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுட்ளன. இவை இடமிருந்து வலமாக உள்ளன. மற்ற பன்னிரெண்டு கல்வெட்டுகளும் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இவைகள் அசோகரின் ஆட்சி முறை, நீதி, அறம் முதலியவை பற்றி தெரிவிக்கின்றன.

முதலாவது கற்பாறைக் கல்வெட்டு அசோகர் மக்கள் நலத்திலும், விலங்குகள் நலத்திலும் காண்பித்த அன்பை எடுத்துக் காண்பிக்கிறது. உணவிற்கோ வேள்விகட்கோ விலங்குகளை கொல்லக்கூடாது என்று ஆணையிட்டார் அசோகர்.

இரண்டாவது பாறைக் கல்வெட்டில், மனிதர்கட்கும் விலங்குகட்கும் ஏற்படும் நோயை நீக்குவதற்கு மூலிகைகளைப் பயிரிட்டும், சாலைகளில் நிழல் தரும் மரங்களை நட்டும், கிணறுகளை வெட்டி வைத்தும் உயிர்கள் இன்புறும்படி தாம் செய்வதைக் கூறுகிறார்.

மூன்றாவது கல்வெட்டில் அரசாங்க நிர்வாக அதிகாரிகள், நிர்வாகக் காரணத்திற்காகவும் தம் நல்வழிக் கோட்பாட்டை பரப்பும் பொருட்டும் ஐந்து ஆண்டிற்கு ஒரு முறை இடமாற்றம் செய்யப்பட்டதைப் பற்றி காணப்படுகிறது.

நான்காவது கல்வெட்டு அரசரின் அகிம்சைக் கொள்கையினை விளக்குகிறது. ஐந்தாவது கல்வெட்டு தர்மமகா மாத்திரர்களின் பணிகளை விளக்குகிறது. ஆறாவது கல்வெட்டு அசோகர் மக்களின் நன்மைக்காக அரசாங்க அதிகாரிகட்கு அனுப்பிய கட்டளைகளைக் குறிக்கிறது. ஏழாவது கல்வெட்டில் அசோகர் புலனடக்கத்தையும்,

மனத் தூய்மையையும், நன்றியையும், தர்மத்தில் நிலையான ஈடுபாட்டையும் வற்புறுத்துகிறார்.

எட்டாவது கற்பாறை கல்வெட்டில் புத்தகயா போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்வதின் சிறப்பையும் பயனையும் போற்றுகிறார். அசோகர் தனது ஒன்பதாவது கல்வெட்டில் பிறப்பு, திருமணம் போன்றவற்றிற்கு நிகழ்த்தும் சடங்குகள் பயனற்றவை என்றும், ஒழுக்கத்துடன் கடமை செய்வதே சிறந்தது என்றும் கூறுகிறார்.

பத்தாவது பதினொன்றாவது கல்வெட்டுகளில் அசோகர் தாம் கூறும் தர்மத்தைக் கடைபிடிப்பதே உண்மையான புகழும் அறமும் ஆகும் என்கிறார். பன்னிரெண்டாவது கல்வெட்டு அசோகரது சமயப் பொறையையும், பரந்த உள்ளத்தையும் காட்டுகிறது.

பதிமூன்றாவது கல்வெட்டில், அசோகர் கலிங்கப் போரின் வருந்தத்தக்க நிகழ்ச்சிகளைக் கூறுவதுடன் தர்மத்தின் வெற்றியே தலையாய வெற்றி என்கிறார்.

பதினான்காவது கல்வெட்டில் தனது தர்ம வழியை மக்கள் கடைபிடித்து நல்வாழ்வு வாழ்வதற்காகவே நமது ஆணைகளை கல்லில் வெட்டியதாக அசோகர் கூறுகிறார். மேலும் இதில் கலிங்க நாட்டு மக்களை துன்புறுத்தா வண்ணம் அதிகாரிகள் எவ்வாறு ஆட்சி செய்யவேண்டுமென்று அவர் விடுத்த செய்தி காணப்படுகிறது.

**III) கற்றூண் ஆணைகள் :**

அசோகரின் கல்தூண்கள் பல்வேறு வகைப்படும். ஒரு கல்லில் செதுக்கப்பட்ட அவைகளின் உயரம் நாற்பதிலிருந்து ஐம்பது அடியாகும். அசோகர் காலத்தில் நிறுவப்பட்ட கற்றூண்கள் அனைத்தும் ஒரே வெண்ணிறக் கல்லில் உருவாக்கப்பட்டு சிற்பியின் கைவண்ணத்தால் பளபளப்பாக்கப்பட்டு காண்பதற்கு உலோகத்தால் ஆனது போல தோற்றமளிக்கின்றன. மொத்தம் ஏழு கற்றூண் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவை அம்பாலாவிலுள்ள தோப்பூரா, மீரட், அலகாபாத், சாரநாத், சாஞ்சி, கொளசாம்பி ஆகிய இடங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

முதல் மூன்று கற்றூண் ஆணைகளில் தர்மத்தைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நான்காவது கற்றூண் ஆணை ஆளுநர்கள் எவ்வாறு ஆட்சி புரிய

வேண்டுமென்று கூறுகிறது. ஐந்தாவது கல்வெட்டில், அசோகர் அகிம்சையின் வளர்ச்சிக்காக தாம் எடுத்துகூ கொண்ட நடவடிக்கைகளை விளக்குகிறார். ஆறாவது கற்றூண் ஆணை பன்னிரெண்டாவது பாறைக் கல்வெட்டின் கருத்தையே வலியுறுத்துகிறது. அசோகரின் கல்வெட்டாணைகளில் மிகவும் நீண்டதும் முக்கியமானதும் ஆனது ஏழாவது கற்றூண் ஆணையே ஆகும். இதை 'அசோகரின் மறைநூல்' என்று கூறலாம். தம் ஆட்சியின் பெரும் பகுதியில் தாம் போதித்து வந்த தர்மத்தின் வளர்ச்சிக்காக தாம் செய்த பணிகளை இதில் தொகுத்துரைக்கிறார்.

**IV) சிறிய கற்றூண் ஆணைகள் :**

**சாரநாத் ஆணை** : சாரநாத் என்ற இடத்திலிருக்கும் தூண் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்தத் தூணின் உச்சியில் அமைந்திருக்கும் தர்ம சக்கர அமைப்பை அடித்தளமாகக் கொண்டு முதுகைத் தொட்டுக் கொண்டு அமைந்திருக்கும் நான்கு சிங்கங்கள் இப்போது இந்திய அரசின் சின்னமாக விளங்குகிறது. இந்த சிறிய கற்றூண் ஆணையில் அசோகர் சங்கத்தைப் பிளவுபடுத்த முயலும் உறுப்பினர் வெள்ளாடை அணிந்து வெளியில் வாழவேண்டிய கடுமையான தண்டனைக்கு ஆளாவார் என எச்சரிக்கிறார். இக் கல்வெட்டு அசோகரின் சமயத்தை விளக்குவதற்குப் பெரிதும் பயன்படுகிறது. மேலும் சங்கம் அவர் கட்டுப்பாட்டில் இருந்ததும் புலப்படுகிறது.

மேலும் சாஞ்சி ஆணையிலும், கௌசாம்பி ஆணையிலும் சங்கம் பிளவுபடாமல் இருப்பதே தமது விரும்பபம் என்று தெரிவிக்கிறார். அரசியின் ஆணை, அசோகரின் இரண்டாவது அரசியின் அறச்செயல் பற்றியது. இதில் அசோகரின் மகன் தீவிரவன் பெயர் காணப்படுகிறது. ரும்மிண்டி சிறிய கற்றூண் ஆணை, அசாகர், புத்தர் பிறந்த இடத்திற்கு யாத்திரை சென்றதையும் அங்கு வசூலிக்கப்பட்டு வந்த நிலவரியை எட்டில் ஒன்றாகக் குறைத்ததையும், சமயத் தீர்வைகளைத் தவிர்த்ததையும் குறிப்பிடுகிறது.

**V) சாஞ்சி ஸ்தூபி :**

புத்தரின் உருவச்சிலையை வணங்கும் முறையைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அவருடைய சின்னங்கள் மீது கட்டப்பட்டிருந்த ஸ்தூபிகளுக்குச் சென்று பௌத்தர்கள் வழிபட்டனர். அரைக்கோள வடிவில் செங்கற்கள் அல்லது கற்களைக் கொண்டு கட்டப்பட்டு நிற்கும் வடிவங்களே ஸ்தூபிகள் ஆகும். இந்த ஸ்தூபிகள் அனைத்தும்

புத்த சமயத்தினருக்குக் கோவில்களாகவே தென்பட்டன. மத்திய பிரதேசத்தில் போபால் நகருக்கருகில் இருக்கும் சாஞ்சி என்ற இடத்திலிருக்கும் ஸ்தூபி ஒன்றினைத் தவிர ஏனைய ஸ்தூபிகள் அனைத்தும் படையெடுப்புகளின் போது அழிந்துவிட்டன.

அசோகர் காலத்தில் உருவாக்கப்பட்ட சாஞ்சி ஸ்தூபி மட்டும் அழியாமல் கிடைத்திருப்பது வியப்பிற்குரியது ஆகும். இதன் நான்கு நுழைவாயில்களும் பண்டைக்கால சிற்பக்கலையின் கவின்மிகு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. புத்தரின் வாழ்க்கையை விளக்கும் சிறபங்களும் ஜாதகா கதைகளும் நுழைவாயில்களில் சிற்பங்காளக செதுக்கப்பட்டு உள்ளன. மிக நுண்ணிய சிற்ப வேலைகத்திறன் சாஞ்சி ஸ்தூபியில் காணப்படுகிறது.

**அசோகரின் பிற கல்வெட்டுகள் :**

மேலும் நிக்லீவா கற்றூண் கல்வெட்டு, பராபர் குகை கல்வெட்டுகள், காண்டகார் கல்வெட்டுகள், ஏற்றக்குடி சிறிய கற்பாறை ஆணைகள் ஆகியவைகளை அசோகரைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

**a) பராபர் குகைக் கல்வெட்டுகள் : கி.மு. 257 – 250**

இந்த குகைக் கல்வெட்டுகள் கயாவிற்கு அருகிலுள்ள பராபர் மலைக்குன்றுகளில் மூன்று குன்றுகளைக் குடைந்தெடுத்து அவற்றின் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அசோகரின் பதினேழாவது, இருபத்தி நான்காவது ஆட்சி ஆண்டுகளில் பொறிக்கப்பட்டவையாகும். இக்கல்வெட்டுகளில் அறிவிக்காத் துறவிகளுக்கு (Ajivika) ஆற்றிய பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்குகைகள் மூன்றும் அந்த சமணத் துறவிகளுக்குப் படைக்கப்பட்டனவாக அசோகர் குறிப்பிடுவதிலிருந்து அவரது சமயம் பொறையை நாம் அறிய முடிகிறது.

**b) இரு கலிங்கக் கல்வெட்டுகள் : கி.மு. 256**

இக் கல்வெட்டுகளை பதினான்கு பாறைக் கல்வெட்டுகளின் துணைக் கல்வெட்டுகள் என்று கூறுகிறோம். இக் கல்வெட்டுகள் போரில் தோல்வியடைந்த கலிங்கத்திற்குச் செய்ய வேண்டிய நன்மைகளைப் பற்றி விவரிக்கின்றன. கலிங்கத்தைத் தர்மத்தின் அடிப்படையில் ஆள வேண்டும் என்று இக் கல்வெட்டுகள்

ஆளுநர்களுக்கு கட்டளையிடுகின்றன. இந்த இரண்டு கல்வெட்டுகள் தௌலி, ஜவுடா ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இவை சமாபா, தோசாலி ஆகிய நகரங்களிலுள்ள உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிடுகின்றன.

**c)இரண்டுதராயித் தூண் கல்வெட்டுகள் : கி.மு. 249**

இந்த இரண்டு கல்வெட்டுகளும் நேபாளத்திலுள்ள 'ருமிண்டி தராய்ககாட்டிலுள்ள நிக்கிலிவா என்னுமிடத்திலும் கிடைத்துள்ளன. இக் கல்வெட்டுகளைக் கொண்டு புத்தர் பிறந்த இடத்திற்கும் அவருடைய வாழ்கூகையுடன் தொடர்புடைய இடங்களுக்கும் அசோகர் புனிதப் பயணம் மேற்கொண்டதை அறியலாம். 'ருமிண்டி' என்பது புத்தரின் பிறப்பிடமான 'லூம்பினித் தோட்டம்' ஆகும். இக் கல்வெட்டுகளில் அசோகர் தாம்புத்த உபதேசங்களில் கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கைகளை விளக்குகிறார். புத்தரின் பிறப்பிடமான லூம்பினி தோட்டத்தை தரிசித்த பின்பு அந்த இடத்திலுள்ள மக்களுக்கு அசோகர் நிலவரியைக் குறைத்து எட்டில் ஒரு பங்காகப் பெற்றார் என்று இக்கல்வெட்டிலிருந்து அறியலாம்.

அசோகருடைய கல்வெட்டுகள் சமயத்தைப் பற்றி அவர் வெளியிட்ட ஆணைகளே ஆகும். ஆயினும் அவற்றில் அவருடைய வாழ்க்கை, ஆட்சி முறை, போர் முதலியவற்றைப் பற்றிய செய்திகள் உள்ளன. கல்வெட்டுகள் அசோகருடைய வரலாற்றிற்குமிக முக்கியமான சான்றுகளாக இருக்கிறது. இத்தகைய காரணங்களால் இக் கல்வெட்டுகள் 'பேசும் சமயக் குரவர்கள்' என்றும் 'மறைநூல்' என்றும் போற்றப்படுகின்றன.

**அசோகரின் சமயம் :**

அசோகரது சமயத்தைப் பற்றிய பல கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு சில நூலாசிரியர்கள் அசோகர் இந்து மார்க்கத்தைச் சேர்ந்தவர் என்றும், மற்றும் சிலர் அவரை சமன மார்க்கத்தைச் சார்ந்தவர் என்றும் கூறுகின்றனர். ஆனால், அசோகரின் கல்வெட்டுகள் ஒன்றன் பின் ஒன்றாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொழுது இந்த ஐயத்திற்கே இடமில்லாமல் போய்விட்டது. அசோகர் பௌத்த சமயத்தைச் சாந்தவர் என்பதை முதலாவது சிறிய கற்பாறை ஆணையும், பாப்ரு ஆணையும் தெளிவாகக் கூறுகின்றன. வரலாற்றில் பௌந்த்த சமயம் பரவிடக் காரணமானவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக

விளங்குகிறார் அசோகர். ஆச்சார்ய உபகுப்தர் என்பவரே அசோகரை இந்து சமயத்திலிருந்து பௌத்த சமயத்திற்கு மாற்றியவர் என்றும் கூறப்படுகிறது.

**அசோகருடைய தர்மம் :**

அசோகரினால் போதிக்கப்பட்ட தர்மக் கோட்பாடு எது என்பது குறித்து வரலற்று அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது. பௌத்த சமயச் சான்றுகள் அசோகர் பௌத்தராகவே வாழ்ந்தார் என்றும், பௌத்த தர்மத்தையே பரப்பினார் என்றும் கூறுகின்றன. ஆனால், புத்தரின் அடிப்படைக் கோட்பாடுகளான 'நான்கு உயர் உண்மைகள்' 'எண்வழிப்பாதைகள்' மற்றும் 'பத்துக் கட்டளைகள்' பற்றி அசோகரின் கல்வெட்டு எதிலும் நேரடிக் குறிப்பு காணப்படவில்லை. ஆனால், வி.ஆர். இராமச்சந்திர தீட்சதர் போன்ற அறிஞர்கள் அசோகர் போதித்த கோட்பாடு 'அவருடைய தர்மக் கோட்பாடே' என்று எடுத்துரைத்தனர். ஆனால், எளிதில் புரிந்து பின்பற்ற முடியாமல் இருந்த பௌத்த சமயத்தை எளிமைப்படுத்தி எல்லா மக்களும் கடைப்பிடிக்கும் வண்ணம் தர்மக் கோட்பாடுகளை வழங்கினார் அசோகர் என்பர் சிலர்.

ஆனால், அசோகர் பௌத்தராக மாறினார் என்றும், பௌத்தம், தாமம், சங்கம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்றும் ஆதாரப்பூர்வமாக அறிகிறோம். எனவே, அசோகரின் தர்மக் கோட்பாட்டிற்கும், புத்தரின் தர்மக் கோட்பாட்டிற்கும் ஒற்றுமை உள்ளது. பௌத்த சமயத்தற்குப் புத்துயிர் அளித்து மக்களின் முழுக்க நெறி உயரவேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டார். நடைமுறையில் எல்லோராலும் ஏற்கப்பட்ட, செயல்முறைக்கு ஏற்ற அறக்கோட்பாடுகளையே வலியுறுத்தினார். பதிமூன்றாவது பாறைக் கல்வெட்டில் தர்மம் என்றால் என்ன என்பது குறித்து சுருக்கமான விளக்கம் உள்ளது.

அசோகரின் கல்வெட்டுகளில் காணப்படும் தர்மக் கோட்பாடு எந்த ஒரு சமயத்தின் தர்மமோ அல்லது சமயமுறை சார்ந்ததோ அல்ல. அவை ஒழுக்க நெறிகளே ஆகும். அனைத்து சமயங்கட்கும் பொதுவானது. அசோகரின் எல்லாக் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்ற தர்மக் கோட்பாடு பின்வருமாறு :

தாய்தந்தை சொற் கேட்டல், ஆசிரியருக்கு அடிபணிதல், எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டல், உண்மையைப் பேசுதல், விலங்குகளைப் பலியிடாதிருத்தல், அந்தணர்கட்குத் தானம் வழங்குதல், வேலையாட்கள், அடிமைகளை நல்ல முறையில் நடத்துதல், புலனடக்கம், மனத்தூய்மை, நன்றி, சமயப் பொறையுடைமை, பயனற்ற சடங்குகளை நீக்குதல், பாவத்தை நினைத்து அஞ்சுதல், முரட்டுத்தனம், கொடுமை, சினம், பொறாமை ஆகீயவை இல்லாதிருத்தல் தர்மயாத்திரை செல்லுதல், தர்மதானம் ஆகியவையாகும். இவைகளைப் பார்க்கும்போது பொதுவாக, பணிவுடைமை, மரியாதை, அறப்பண்பு, வாய்மை, தூண்மை, சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், நன்றியுடைமை போன்ற அறக்கோட்பாடுகளை வலியுறுத்துகிறார் அசோகர்.

அசோகரின் இந்த தாமக் கோட்பாடு, வெறும் செயல்பமுறை சார்ந்ததாக அமையாமல் அசோகரின் ஒழுக்க நெறியை வலியுறுத்தக்கூடிய தனித்தன்மையினை வெளிப்படுத்தக் கூடியவையாக உள்ளது. இவை எல்லா சமயங்கட்கும் பொதுவான, நிலையான, அறவழி, நேர்வழி ஆகியவற்றின் மறுபதிப்பு என்று கூறலாம். இவ்வாறு அனைத்து மக்களும் பொதுவாக எண்ணிப் பின்பற்றக்கூடிய சமயம் ஒன்று உருவாவதற்கான அடிப்படையினை முதன் முதலில் வரலாற்றில் வழிகாட்டியவர் அசோகர் எனலாம்.

மொத்தத்தில் அசோகரின் தர்மம் என்பது பௌத்த சமயத்தின் தாக்கத்தனால் பகுத்தறிவு அடிப்படையில் செயல்முறைக்கு உகந்ததாக அமைக்கப்ட்ட ஒன்று. அதனை அசோகர் தம் வாழ்க்கை முழுவதற்குமான உரைக்கல்லாக உருவாக்கினார்.

R.K. முகர்ஜி என்பவர், ‘‘அசோகரின் தர்மம் ஒரு நன்னெறி விதிமுறைகளேயன்றிச் சமய முறையன்று, அது எல்லாச் சமயங்களின் சாரம்’’ என்று கூறுகிறார்.

ரொமிலாதாபர் என்பவர், ‘‘அசோகரின் தர்மம் உயர்ந்த குறிக்கோளையும், நற்பழக்கங்களையும் கொண்ட நடைமுறைக்கேற்ற வாழ்கூகை முறையே’’ என்று கூறுகிறார்.

K.A.நீலகண்ட சாஸ்திரியார், ‘‘அசோகரின் தர்மம் செயல்முறைக்கேற்ற ஒரு சமூக நன்னெறியே. அது எந்த சமயத்தையும் சார்ந்ததல்ல’ என்கிறார்.

டாக்டர் பிளீட் என்பவர், ‘‘அசோகரின் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ள தர்மம் பௌத்த தர்மம் அல்ல, அது அரச தர்மமே‘‘ என்று கூறுகிறார்.

செனார்ட் என்ற பிரெஞ்சு அறிஞர், ‘‘அசோகரின் போதனைக்கும், பௌத்த வேதமான தம்ம பாதத்திற்கும் தொடர்பு உண்டு. அசோகரின் கல்வெட்டுக்கள் அக்காலத்தல் இருந்த பௌத்த சமயத்தை முழுமையாகக் காட்டுகின்றன’’, என்று கருதுகிறார்.

**புத்த மதத்தைப் பரப்ப அசோகர் எடுத்துக் கொண்ட முயற்சி**

அசோகர் தாம் போதித்த தர்மத்தைப் பரப்ப பல முயற்சிகளை எடுத்துக் கொண்டார். அவர் பின்பற்றிய வழிகள் பின்வறுமாறு :

**1) புனித யாத்திரைகள் மூலமாக :**

கலிங்கப் போருக்குப் பிறகு புத்த சமயத்தைப் பரப்புவதற்காக அசோகர் பல புனித யாத்திரை அல்லது தர்ம யாத்திரை (Dharma Yatras) களுக்கு ஏற்பாடு செய்தார். புத்தரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய புனித இடங்களான லும்பினி கபிலவஸ்து, சாரநாத், குஷிநகர், கயா ஆகிய இடங்களுக்கு யாத்திரைகளை மேற்கொண்டார் அசோகர். இதன் விளைவாக புத்த சமயக் கருத்துக்கள் மீது மக்கள் அதிக ஆர்வம் கொண்டு அதனை பின்பற்ற ஆரம்பித்தனர்.

**2) புத்த சமயம் தேசிய சமயமாக அறிவிக்கப்படல் :**

புத்த சமயத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்பணித்துக் கொண்ட அசோகர் அதனை தனது பேரரசில் ‘தேசிய சமயமாக’ அறிவித்தார். இதனால் பேரரசில் வாழ்ந்து வந்த மக்கள் புத்த சமயத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். அசோகரை கடவுளின் பிரதிநிதி என்றே நம்பினர். இவ்வாறு புத்தரின் அறிவிப்பால் புத்த சமயம் அதிகமாகப் பரவி வளர்ச்சியடைந்தது.

**3) சமய பரப்புக் குழுக்களின் மூலமாக :**

அசோகர் புத்த மார்க்கத்தைப் பரப்புவதற்காக பல சமயக்குழுக்களை அனுப்பினார் என்று 13–ஆவது பாறைக் கல்வெட்டு கூறுகிறது. சிரியா, எகிப்து, சைரீம்,

எபிரஸ், மாசிடோனியா முதலிய வெளிநாடுகட்கும் சோழ, சேர, பாண்டிய நாடுகட்கும் சமயக் குழுக்களை அனுப்பினார். மராத்திய, ஆந்திர நாடுகளுக்கும் அனுப்பப்பட்டது. சுவர்ண பூமி என்ற இடத்திற்கும் சமயக்குழு அனுப்பப்பட்டது. ஆனால், இந்த சுவர்ணபூமி என்பது, பர்மாவைக் குறிக்கிறதா அல்லது தக்காணத்தைக் குறிக்கிறதா என்று அறிய முடியவில்லை. புத்த நூல்களில், சமயக்குழு ஈழ நாட்டிற்கும் அனுப்பப்பட்டதாகக் காணப்படுகிறது. அந்தக் குழு அசோகரின் மகன் மகேந்திரன் மகள் சுங்கமித்திரை தலைமையில் சென்றது. போதி மரத்தின் ஒரு கிளையை அவகள் எடுத்து இலங்கையின் நடுப் பாகத்திலுள்ள அனுராதபுரம் என்னுமிடத்தில் நாட்டினர். சிங்கள மன்னர் திச்சா பௌத்தராக மாறினார். அவர் ஆட்சியின் போதுதான், சிங்களத்தில் பௌத்தம் வேகமாகப் பரவியது. இவ்வாறு உலகம் முழுவதும் பௌத்த சமயம் பரவிட வழி செய்தார் அசோகர். இவரது முயற்சி புனிதபாலும், பேரரசர் அகஸ்டினும் கிறிஸ்தவ சமயம் பரவிட மேற்கொண்ட செயலுக்கு ஒப்பிட்டுக் கூறகிறார் கென்னத் சாண்டர்ஸ் என்பவர்.

**4. ஆணைகளின் மூலமாகப் பரவச் செய்தல் :**

அசோகர் தனது முப்பத்தாறு கல்வெட்டுகன் மூலம் புத்தமார்க்க அறிவுரைகள் மக்களை அடையுமாறு செய்தார். சிறிய பாறை கல்வெட்டுகள், பதினான்கு பாறை கல்வெட்டுகள், ஏழுதூண், கல்வெட்டுகள் ஆகியவற்றில் புத்தமார்க்க அறிவுரைகள் கூறப்பட்டுள்ளது. (மேலும் விபரங்களுக்கு அசோகரின் கல்வெட்டுகள் பார்க்க) இந்த ஆணைகள் மூலம் சாதாரண மக்களும் புத்த சமயக் கருத்துக்களை அறிந்து கொள்ளும்படி செய்தார்.

**5. அதிகாரிகளின் உதவியுடன் பரப்புதல் :**

அசோகர் புத்த மதத்தைப் பரப்ப அரசாங்க அதிகாரிகளை நன்கு பயன்படுத்தினார் என்று அவர் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். மூன்றவாது கற்பாறை கல்வெட்டில் ‘‘தர்மத்தைப் பரப்புவது எல்லா அதிகாரிகளின் கடமை என்றும், அதன் பொருட்டு அவர்கள் ஐந்து ஆண்டிற்கு ஒரு முறை இடம் மாறி செல்லுதல் வேண்டும்’’ என்றும் அசோகர் கட்டளையிடுவதாக உள்ளது.

‘ஏற்றக்குடி’ சிறிய கற்பாறை ஆணையில் மன்னன் புத்த சமய அறிவுரைகளை முதலில் இராஜுகர்கட்கு அதிகாரப்பூர்வமாக அனுப்ப வேண்டுமென்றும் அவர்கள் அதனை மக்களுக்கு அறிவிப்பர் என்றும் கூறப்பட்டுள்ளது. கி.மு.256–ல் ‘‘தர்ம

மகாமாத்திரர்கள், தர்மயுக்தர்கள்'' என்ற தனிப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டு புத்த சமயத்தை பரப்ப ஏற்பாடு செய்தார். இவர்கட்குரிய அலுவல்களைப் பற்றி ஐந்தாம் பாறைக் கல்வெட்டு அறிவிக்கிறது. விலங்குகட்கு துன்பம் ஏற்படுவதையும் மக்கள் தீய வாழ்க்கை வாழ்வதையும் இந்த அதிகாரிகள் தடுத்து வந்தனர்.

இராஜுகர்கள், பிரதேசிகர்கள், யுக்தர்கள் ஆகிய அதிகாரிகள் நாடெங்கிலும் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் ஏழைகள் பணக்காரர்கள் மத்தியில் தங்கள் பணிகளைச் செய்தார்கள். பன்னிரெண்டாவது பாறைக் கல்வெட்டின் படி, குற்றம் கண்டுபிடிக்கும் 'பெண் மகாமாத்திரர்கள்' நியமிக்கப்பட்டார்கள் என்று அறிகிறோம்.

**6. மூன்றாவது புத்த மாநாடு :**

அசோகர்தான் அரியணை ஏறிய பதினேழாவது ஆண்டு காலத்தில் மூன்றாவது புத்த மாநாடு கி.மு. 242–ல் பாடலிபுத்திரத்தில் கூடினதாகச் சான்றுகள் கிடைக்கிறது. ஆனால், ஒரு சிலர் கி.மு. 240–ல் கூட்டப்பட்டிருக்கலாம் என எண்ணுகின்றனர். தீப வம்சத்தில் இந்த மாநாடு பற்றிய செய்திகள் கிடைக்கிறது. இம் மாநாடு முகலிபுத்ததிசாவின் தலைமையில் நடைபெற்றது. சுமார் ஒன்பது மாதங்கள் வரை நடைபெற்றது. இந்த மாநாட்டில் புத்த மார்க்கத்தில் கொள்கைகளும், அதற்குரிய சட்டங்களும் உறுதி செய்யப்பட்டன. தவறான கோட்பாடுகளைப் பரப்பிக் கொண்டு புத்த மடங்களில் வாழ்ந்து வந்தவர்கள் புத்த சங்கத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். நீக்கப்பட்டவர்கள் வெள்ளாடையே உடுக்க வேண்டும். புத்த தர்மத்தைப் பரப்ப தேரர்களைப் பல நாடுகளுக்கும் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

**7. அசோகர் தானே ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்தல் :**

மக்கள் தர்மத்தையும் நல்லொழுக்கத்தையும் பின்பற்றுவதற்கு ஏற்றவாறு, அசோகர்தானே ஓர் உதாரணமாகத் திகழ்ந்தார். சொல்லொன்று செயல் வேறாக அவர் இல்லை. தனக்கு எது முடியுமோ அதனையே பிறருக்குப் போதித்தார். தாம் போதித்ததைத் தனிப்பட்ட வாழ்வில் செயல்படுத்தியும் வந்தார்.

நாடுகளைப் பிடிப்பதற்கான போரைக் கைவிட்டார். புத்த மார்க்க புண்ணிய ஸ்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்டார். அரண்மனையில் விருந்துக்காக விலங்குகள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டது. மிருகங்களைக் கொன்று வேள்வி புரிவது பாடலி புத்திரத்தில் நிறுத்தப்பட்டது. விலங்குகட்கு மருத்துவ சாலைகள்

ஏற்படுத்தப்பட்டன. கிளி, வாத்து, குரங்கு போன்ற உயிரினங்களை எந்த நேரத்திலும் கொல்லக்கூடாது என்றார். மிருகங்கட்கு சூடு போடுதல் தடுக்கப்பட்டது.

இவ்வாறு அசோகர் செய்த பெரு முயற்சியால் பௌத்த சமயம் இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளில் வேகமாக வளர்ச்சியடைந்தது. அது ஒரு உலக மதமாக வளர ஆரம்பித்தது. பௌத்த சமயத்தற்கு ஆற்றிய தொண்டுகளால் அசோகர் புகழ் ஓங்கியது. பௌத்த சமயத்தில் புத்தருக்கு அடுத்த இடத்தை அசோகர் அடைந்தார். அசோகர் பௌத்த தாமத்தைப் போதித்ததாலேயே இப்புகழை அடைந்தார். வரலாற்றாசிரியர் அர்னால்ட் டாயின்பி அசோகரை ''மெஞ்ஞானப் பேரரசர்'' என்று புகழ்கிறார்.

**அசோகரின் சமயக் கொள்கை பற்றி ஓர் ஆய்வு :**

**1.** ஒரு சில வரலாற்றாசிரியர்கள் அசோகருடைய புத்த மார்க்கக் கொள்கைகளும், அதனை பரவச் செய்ய எடுத்த முயற்சியுமே பௌத்த சமயமும், மௌரியப் பேரரசும் அழிவதற்குக் காரணம் என்று கூறுகின்றனர். அவர் புத்த சங்கத்திற்கு அளித்த சலுகைகளும், பண உதவியும் சங்கங்களின் கட்டுப்பாடுகளைக் குறைத்தது. சங்க பண உதவியும் சங்கங்களின் கட்டுப்பாடுகளைக் குறைத்தது. சங்க உறுப்பினர்கள் ஊக்கமின்றி வீணாகப் பொழுதைக் கழித்தனர் என்று கூறுகின்றனர். ஊக்கமின்றி வீணாகப் பொழுதைக் கழித்தனர் என்று கூறுகின்றனர். ஆனால், இது தவறு. புத்த சங்கங்களை அசோகர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் என்று நாம் அறிகிறோம்.

**2.** மேலும் இவரது புத்த மார்க்க பிரச்சாரம், மற்றும் அகிம்சைக் கொள்கை, மக்களின் வீரத்தன்மையைக் குறைத்தது என்றும், இதனால் போர் வலிமையிழந்து நாடு அழிந்தது என்ற குற்றச்சாட்டையும் ஏற்க முடியாது. அசோகர் போதித்த தர்மம் பௌத்த இல்லற தர்மமே ஆகும். மேலும், அசோகர் போரைக் கைவிட்டாரே தவிர, தனது படைகளையோ, படைக் கருவிகளையோ இறுதிக் காலம் வரை குறைந்தததே இல்லை. வெற்றி பெற்ற கலிங்கத்தைத் திருப்பிக் கொடுக்கவேயில்லை. எனவே அசோகருக்குப் பின் வந்தவர்களின் ஆற்றலின்மையே மௌரியப் பேரரசு வீழ்ச்சியடையக் காரணமாகும்.

**3.** அசோகர் தனது புத்தமதப் பிரச்சாரம் மூலம் இந்துக்கட்கு எதிரியானார் என்றும் அதன் காரணமாக 'பிராமண புஷ்யமித்தர சுங்கன்' மௌரிய ஆட்சியை வீழ்த்தினான்

என்ற குற்றச்சாட்டும் பொருத்தமுடையதாக இல்லை. ஏனெனில், அசோகர் பிற மதத் தலைவர்களை மதித்துப் போற்றினார். எல்லா மக்களின் நன்மைக்காகவே அரசாட்சி செய்தார். ஆறாவது கற்றூண் ஆணையில் தான் எல்லா சமயத்தினரையும் போற்றி வருவதாக அறிவிக்கிறார். ஒருவன் தன் சொந்த மதத்தைப் பின்பற்றுவதே முக்கியமானது என்று தனது கல்வெட்டுகளில் மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து அசோகர் எல்லாச் சமயங்களையும் போற்றினார் என்பதை அறியலாம். அவருடைய சமயப் பொறையுடைமைக் கொள்கை இக்காலத்திற்கும் எக்காலத்திதற்கும் பொருத்தக்கூடிய ஒன்றாகும்.

**அசோகரின் இறுதிக்காலம் :**

அசோகர் தம் வாழ்நாள் முழுவதும் ஒரு பௌத்த துறவியாகவே வாழ்ந்தார் என்று கூறப்படுகிறது. நாடடின் பெருஞ்செல்வத்தை சமயத்துக்காவே செலவு செய்தார். அசோகரின் இறுதிக்காலம் மகிழ்ச்சிகரமானதாக இல்லை. சில மரபுச் செய்திகள் அசோகர் நிர்வாகத்தின் மீதிருந்த பிடிப்பினை வரவ ர கைவிட்டுவிட்டார் என்று கூறுகின்றன. எனவே , நிர்வாகச் சீர்கேடுகள் சிறிது சிறிதாகத் தலைதூக்கின. இறுதிக் காலம் வரையிலும் பேரரசராகவே விளங்கிய அசோகர் கி.மு. 232–ல் உயிர் நீத்தார் என்று கூறப்படுகிறது.

**மதிப்பீடு :**

இந்தியாவில் ஆட்சி புரிந்த புகழ்ப்பெற்ற பேரரசர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார் அசோகர். உலக வரலாற்றிலும் அவருக்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு. உயர்ந்த கொள்கைகளைப் பின்பற்றிய அசோகர், மக்களின் சமய, ஆன்மீக அந்தஸ்த்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். உலக மக்கள் அனைவருமே உண்மை, அன்பு, அகிம்சை ஆகிய கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார்.

அசோகர் ஆட்சி செய்த நாற்பதாண்டு காலமும் இந்திய வரலாற்றில் இணையற்ற காலமாகும். செல்வ செழிப்பிலும், சமய ஒழுங்கிலும் நிர்வாகத்திலும் இக்காலம் மிகவும் ஏற்றம் பெற்றதாக அமைந்திருந்தது. அரச கடமைகளை மக்களுக்கு ஆற்றும்

பணியாகவே அவர் கருதினார். சாதாரண சமயமாக இருந்த பௌத்த சமயத்தை நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க சமயமாக்கினார்.

**புகழ் பெற்ற வரலாற்றாசிரியர் ராய்ஸ்டன் பைக் (**Royston Pike) கூறுவதாவது :

''கலிங்கப் போருக்குப் பிறகு இனி போரே செய்வதில்லை என்று உறுதி பூண்டு தன் எஞ்சிய வாழ் நாளை அன்பு வழியில் ஆட்சி புரிந்த அசோகரை இந்திய வரலாற்றிலிருந்து நீக்க இயலாது. இந்தியக் குடியாட்சி முறையை ஏற்படுத்திய பெரியவர்களும் அசோகர் மேற்கொண்ட அறநெறியை முன்னோடியாக வைத்துள்ளனர்''.

ஏ.எ.வெல்ஸ் என்ற ஆசிரியர் தன் "Outline of History"என்ற நூலில் கூறுவதாவது :

''வரலாற்றை அணி செய்கின்ற பல ஆயிரக்கணக்கான மன்னர்களின் பெயர்களில் அசோகரின் திருப்பெயர் ஒன்றே விண்மீன் போன்று பிரகாசிக்கின்றது. ஒல்கா (Volga) விலிருந்து ஜப்பான் வரையிலுள்ள நாடுகளில் இன்றும் அவர் பெயர் போற்றப்படுகிறது. சீனா, திபெத், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகள் இன்றும் அவரது மேன்மையைப் போற்றி வருகின்றன. கான்ஸ்டன்டைனையும், சாசுலிமன்னையும் தெரிந்து வைத்துள்ள பெரும்பாலான மக்களும் அசோகரின் நினைவையும் மனதில் வைத்துள்ளனர்''.

## பிற்கால மௌரியர்கள்

அசோகர் காலத்தற்கு பின்பு பதவிக்கு வந்த பிற்கால மௌரியர்களின் வரலாற்றை நாம் தெளிவாக அறிய முடியவில்லை. புராணங்கள், சமண சமய நூல்கள் ஆகியவற்றின் ஆதாரங்கள் மூலம் சில தகவல்கள் கிடைக்கின்றன. அசோகருக்கு பின்பு கலிங்கம், விதர்ப்பம் மற்றும் சில எல்லைப்புற மாநிலங்கள் விடுதலை பெற்றுவிட்டன. அசோகர் இறந்தவுடனேயே காஷ்மீரமும், காந்தாரமும் விடுதலைப் பெற்றுவிட்டன. அசோகரின் இறப்புக்கு பின்பு அவரது நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு அவரது பேரப் பிள்ளைகளால் ஆளப்பட்டது. கிழக்குப் பாகத்தை தசரதன் என்பவரும், மேற்குப் பாகத்தை சம்பரகி என்பவரும் ஆட்சி செய்தனர் என்று அறிகிறோம்.

கிரேக்க அரசர் டெமட்ரியஸ் என்பவர் கி.மு. 188–ல் இந்தியா மீது படையெடுத்தார். டாக்டர் தார்ன் (Dr.Tarn) என்பவர் 'டெமட்ரியசின் படையெடுப்பால் மௌரியப் பேரரசு நிலைகுலைந்தது' என்று கூறுகிறார். கி.மு. 185–ல் ளெரிய பேரரசின் கடைசி அரசனான பிரகத்திரதன் புஷ்யமித்திரசுங்கனால் கொல்லப்பட்டார். இத்துடன் மௌரிய வம்சம் முடிவடைந்து சுங்க வம்சத்தினர் ஆட்சி செய்ய ஆரம்பித்தனர்.

## மௌரிய ஆட்சி முறை

## (MAURYAN ADMINISTRATION)

மௌரியப் பேரரசின் ஆட்சி முறை பற்றி தெளிவாக அறிந்து கொள்ள கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா, அசோகரின் கல்வெட்டுகள் ஆகியவை பெரிதும் உதவுகின்றன. மேலும் முத்திராட்சசம் என்ற நூலும், அர்ரியன், ஸ்ட்ராபோ போன்ற கிரேக்க ஆசிரியர்களின் குறிப்புகளும் மௌரிய ஆட்சி முறையின் பொதுப் பண்புகளை அறிய துணை புரிகிறது. மௌரியர்களின் ஆட்சி முடியாட்சி என்று திட்டமாகத் தெரிகிறது. அவர்களது ஆட்சிமுறையைப் பற்றி கீழ்க்கண்ட பல தலைப்புகளில் காணலாம்.

### 1. மத்திய ஆட்சி :

**அரசன் :** மௌரியர்களின் ஆட்சித் தலைவன் அரசன் ஆவார். அரசன் வரம்பற்ற அதிகாரங்களைப் பெற்றிருந்தான். அவனே நிர்வாகத்தின் உயிர் நாடி. கௌடில்யரின் விதிப்படி அரசன் ஒழுக்கத்தற்கு விசேஷ மதிப்பு காண்பித்தான். தர்ம சாஸ்திரங்களைப் பின்பற்றி தர்மத்தை நிலை நிறுத்த ஆட்சி புரிய வேண்டும். மௌரிய அரசர்கள் அதிக அறிவு படைத்தவர்கள். அதிகமான நேரம் வேலை செய்தனர். ஓய்வு குறைவு.

மௌரிய அரசன் சேனாதிபதி உதவி கொண்டு போர் சம்பந்தப்பட்ட காரியங்களை நடத்தி வந்தார். அக்கால நீதித் துறையின் தலைவன் அரசனே. அனேக வழக்குகளில் அவனே நீதி வழங்கினான். சட்டங்கள் சாசனங்கள் மூலமாக வெளியிடப்பட்டது. அரசனுக்குப் பொறுப்புகள் அதிகமாக இருந்தது. குடிமக்களின் உயிரையும் உடமையையும் பாதுகாத்தல், நாட்டில் கொடியவர்களைத் தண்டித்து அமைதி எற்படுத்துதல், வேளாண்மை, வணிக வளர்ச்சிக்கு பாடுபடுதல், மக்களுக்கு விருப்பமானதையே செய்தல் ஆகியவை அரசனின் முக்கிய கடமைகளாகும். மௌரிய

அரசர்கள் எதேட்சை அதிகாரங்களை விரும்பவில்லை. மேலும் அவர்களின் அதிகாரங்கள் மந்திரிசபையால் கட்டுப்படுத்தப்பட்டு வந்தது.

மௌரியர்களின் ஆட்சியில் அரசுரிமை பாரம்பரியமானது. என்றாலும் முடிசூட்டு விழா நடைபெறுவதற்கு முன்னர் இளவரசர் ஒருவர் தம்மை மன்னர் என்று கூறிக் கொள்ளமுடியாது. முடிதுறத்தலும் நடைமுறையில் இருந்தது. மன்னருக்கு சிறந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அரசர் பவனி வரும் காலங்களில் அவரது பாதுகாப்பிற்கு முழுக்கவனம் எடுக்கப்பட்டது. சாலையின் இரு பக்கங்களிலும் ஆயுதம் தாங்கிய வீரர்கள் காவல் புரிந்தனர். அரசன் அல்லது அரசியை இழிவுபடுத்துபவர்கள், அரசவை சூழ்ச்சியில் ஈடுபடுபவர்கள் ஆகியோர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. அரண்மனையைச் சுற்றிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மன்னர் பேரரசின் தலைநகரான பாடலிபுத்திரத்தில் அரண்மனை கட்டி அங்கு வசித்து வந்தார். பாடிலிபுத்திரம் சோனை நதியின் வடக்கு பாகத்தில் அமைந்திருந்தது. கிரேக்க எழுத்தாளர்கள் பாடலிபுத்திர அரண்மனைகள் அமைப்பிலும், அழகிலும், வலிமையிலும் பாரசீக அரண்மனைகளையும் மிஞ்சுவிட்டது என்கின்றனர். அரண்மனையின் தூண்கள் தங்கமுலாம் பூசப்பட்டு மளிர்ந்தன. சீன யாத்ரிகள் பாகியான் பாடலிபுத்திர அரண்மனையின் அழகையும், வண்ண படிவங்களையும் வியந்து பாராட்டுகிறார்.

**2) மந்திரி பரிஷத் அல்லது அமைச்சர் குழு :**

'வண்டியின் ஒரு சக்கரம் மட்டும் எவ்வாறு வண்டியை இழுக்க முடியாதோ அதே போல அரச நிாவாகத்தையும் மன்னர் ஒருவரால் மட்டும் நடத்த முடியாது'' என்று கௌடில்யர் தெரிவிக்கிறார். எனவேதான் மௌரிய அரசர்களுக்கு உதவி செய்வதற்காக மந்திரி பரிஷத் அல்லது அமைச்சர் குழு அமைக்கப்பட்டிருந்தது. இவர்களைப் பற்றி அசோகர் தனது மூன்றாவது, ஆறாவது கற்பாறை ஆணைகளில் குறிப்பிட்டுள்ளார். அரசர் நான்கு நிரந்திர ஆலோசகர்களை வைத்துகூட கொண்டார். தலைமை அமைச்சர், சேனாதிபதி, புரோகிதர், யுவராஜா ஆகியோர் அந்த நான்கு பேர் ஆவர். மௌரிய அமைச்சர் குழுவில் இவர்களையும் சேர்த்து மொத்தம் பதினெட்டு மந்திரிகள் இருந்தனர். இவர்கள் அனைவரும் வெகு திறமைசாலிகள். மந்திரிகளின்

குணநலன்கள் குறித்து அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. நாட்டின் முக்கியமான துறைகளுக்கு அவர்களே தலைவர். மன்னர் அவசர காலங்களில் மந்திரி பரிஷத் உறுப்பினர்களைக் கலந்து ஆலோசிப்பார். மந்ரி பரிஷத்தின் கூட்டங்கள் ரகசியமாகவே நடைபெறும். அமைச்சர்கள் அனைவரும் அரசனால் நியமிக்கப்படுவர். கௌடில்யர் தலைமை அமைச்சராக இருந்தார்.

அரசரின் நான்கு நிரந்தர அலோசகர்கள் தவிர மற்றவர்கள் ‘அமாத்தியர்’ அல்லது துறைத் தலைவர்கள் என்று அழைக்கப்பட்டனர். மத்திய ஆட்சியிலுள்ள பதினெட்டு துறைகள் ஒவ்வொரு அமாத்தியரின் கீழ் இருந்தது. அமாத்தியருக்குக் கீழ் அத்தியகர்’ அல்லது மேற்பார்வை அதிகாரிகள் இருந்தனர். பல உட்பிரிவு அதிகாரிகளும் இருந்தனர். முக்கியமான துறைகளின் அதிகாரிகள் வருமாறு :

a) தௌகாரிக் – வாயிற்பாதுகாப்பு (Douwarik)

b) அண்டார்வெஷக் – உள்துறை அதிகாரி (Antarveshik)

c) பிராஷஸ்து – சிறை அதிகாரி (Peashasta)

d) சாமார்தர் – வருவாய்த் துறை (Samaharta)

e) சன்னிதத்தர் – கருவூலத் துறை (Sannidhata)

f) நாயக் – நகரப் பாதுகாப்புத் துறை (Nayak)

g) விவாரிக் – தலைமை நீதிபதி (Vyavahari)

h) தண்ட்பால் – தலைமை கோலீஸ் அதிகாரி (Dandpal)

i) பிரதேஷ்தா – ஆணையர் (Predeshta)

j) அண்டபால் – எல்லைப் பாதுகாப்பு அதிகாரி (Antapal)

மேலும், வேளாண்மை, போதுப்பணித் துறை, பொதுப்பணித் துறை, சுரங்கத் தொழில், கப்பல் போக்குவரத்து, வாணிபம், அளவைத் துறை, சுங்கவரித் துறை போன்றவை குறிப்பிடத்–தக்கவைகளாகும்.

மேற்கூறப்பட்ட அமைச்சரவையுடன் வேறு இரண்டு அவைகளும் இருந்தன. நகர மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ‘பவுரா’ என்பதும், ஊர் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ‘ஜனதா’ என்பதும் ஆகும். இந்த அவைகளின் உறுப்பினர்கள் ‘சிரோத்தியர்’ என்றும், சபைத் தலைவர் சிரஸ்தார் என்றும் அழைக்கப்பட்டனர். சில சமயங்களில் இந்த

இரு அவைகளும் ஒன்றிணைந்து முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றுவது உண்டு. புதிய வரிகளைப் போடுவதற்கு முன்பு அரசின் இந்த இரு அவைகளையும் கலந்து ஆலோசித்து அதன் அனுமதியைப் பெறுவார். அரசன், அமைச்சர்கள், துறைத் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோாகளின் குறைகளைக் கண்டிக்கும் உரிமை இந்த இரண்டு அவைகளுக்கும் உண்டு. இவ்வாறு மைய ஆட்சி முறை சிறப்பாக நடைபெற்றது.

**3) மகாகாண ஆட்சி : (Provincial administration)**

மௌரியப் பேரரசு பரந்து விரிந்து காணப்பட்டதால், நிர்வாக வசதிக்காக பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்த மாநிலங்களுக்கு 'இராஷ்டிரங்கள்' என்று பெயர். ஒவவொரு மாநிலமும் ஒரு ஆளுநரின் கீழ் வைக்கப்பட்டது. ஆளுநருக்கு 'இராஷ்டிரபாலர்' என்று பெயர். ஆளுநர்களுக்கு வருடத்திற்கு பன்னிரெண்டாயிரம் பணம் ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. பொதுவாக இந்த ஆளுநர்கள் அல்லது அரச பிரதிநிதிகள் அரசனுக்கு உறவினராகவே இருந்தனர். இவர்கள் குமாரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். ஆளுநர்கள் அரசனுக்குக் கீழ்ப்படிந்து உண்மை ஊழியராக நடந்து கொள்ள வேண்டும். மக்களின் நன்மைக்காகவே பாடுபட வேண்டும். அரசாணைகளை உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும். அரசனின் அனுமதியின்றி வந்த செயலிலும் ஈடுபடக்கூடாது.

அசோகரின் கல்வெட்டுகள் நான்கு மாகாணங்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. மௌரியப் பேரரசில் கீழ்க்கண்ட மாகாணங்கள் இருந்தன. அவை :

**a) பிரச்யா : (Prachya) மகத மாநிலம்**

இந்த மாநிலத்தின் தலைநகர் பாடலிபுத்திரம் தற்கால உத்திரப் பிரதேசம், பீகார், வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகள் இந்த மாநிலத்தில் அடங்கும். இந்த மாநிலத்தில் அரசனின் நேரடிக் கட்டுப்பாடு நிலவியது.

**b) உத்திரபாத் : (Uttarapath) வட மேற்கு மாநிலம்**

இந்த மாநிலத்தின் தலைநகரம் தட்சசீலம் ஆகும். தற்கால ஆப்கானிஸ்தானம், பலுசிஸ்தானம், பஞ்சாப், காஷ்மீர் ஆகியவை இந்த மாநிலத்தின் அடங்கிய பகுதிகளாககும்.

**c) அவந்தி பாத் : (Avantipath) மேற்கு மாநிலம்**

இதன் தலைநகரம் உஜ்ஜயினி ஆகும். தற்கால மாளவம், குஜராத், இராஜஸ்தான் ஆகியவை இந்த மாநிலத்திற்குள் அடங்கும் பகுதிகளாகும்.

**d) தட்சண பாத் : (Dakshinapath) தெற்கு மாநிலம்**

இதன் தலைநகரம் அவர்ணகிரி என்பதாகும். மாகாண ஆளுநர்கள் மாகாண ஆட்சியில் முழு அதிகாரத்தைப் பெற்றிருந்ததாகக் கூற முடியாது. அவர்கள் அரசனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தனர். மாகாண ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்த தலைவர்களை ஒற்றர்கள் மூலம் அரசன் பெற்றுக் கொண்டார். ஒற்றர்களால் திரட்டப்படும் செய்திகளை 'குழூஉக்' குறிகளால் (ரகசிய) அரசர்களுக்கு எழுதி அனுப்பும் எழுத்தர்களுக்கு 'பிரதிவேதகர்கள்' என்று பெயர்.

**a) ராஜுகர் :** இவர் மாநிலங்களின் தலைமை அலுவலர் ஆவார். இவர்களை இன்றைய வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு ஒப்பிடலாம். இவர்கள் நிலங்களை அளந்து எல்லைகளை நிர்ணயம் செய்வர். இவர்களுக்குக் கீழ் நூற்றுக் கணக்கான அலுவலர்கள் இருந்தனர்.

**b) பிரதேசிகர் :** இவர் கோட்டாட்சித் தலைவர் ஆவார். தனது கோட்டத்தின் வருவாய் மற்றும் அமைதி, பாதுகாப்பு ஆகிய பணிகளைச் செய்வது இவர்களது கடமையாகும்.

**c) வச்சபூமிகர் :** அரசுக்குச் சொந்தமான விருந்தினர் மாளிகைகள், பண்ணைகள் குளங்கள் போன்றவற்றை நிர்மானிப்பது இவர்களது கடமையாகும்.

**d) புருஷர்கள் :** இவர்கள் அரசரின் அந்தரங்க அதிகாரிகளாவர். அரசரின் விருப்பப்படி வரது ஆணைகளை செயல்படுத்துமாறு ராஜுகர்களை நடத்திச் செல்வர்.

ஒவ்வொரு மாநிலமும் பல மாவட்டங்களாகவும், மாவட்டங்கள் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. மாவட்டத் தலைமை அதிகாரிகளுக்கு 'ஸ்தானர்கள்' என்று பெயர். ஊர் அதிகாரிகளுக்கு 'கோபாக்கள்' என்று பெயர். மாவட்ட ஸ்தானிகர்களுக்கு உதவி செய்ய பல துணை அதிகாரிகள் இருப்பர். அதிகாரிகள் பதவியிலமர்த்தப்பட்ட பின்பு அவர்களின் திறமை, நடத்தை, நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலேயே பணியில் நிரந்தரமாக்கப்படுவர். இவ்வாறு மாகாண ஆட்சி முறையும் சிறப்பாக நடைபெற்றது.

**4. ஸ்தல ஸ்தாபன ஆட்சி :**

மௌரிய ஆட்சி ஸ்தல ஸ்தாபன ஆட்சி முறைக்குப் புகழ் பெற்றது. இவர்களது நகர ஆட்சி பற்றி மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா பிரிவாகக் கூறுகிறது. இவர்களது ஆட்சியில் பல நகரங்கள் தோன்றின. அந்த நகர ஆட்சி முறை வெகுவாக சிறப்பிக்கப்படுகிறது. அக் காலத்தில் சிறந்த பட்டிணங்களுள் ஒன்றான பாடலிபுத்திரம் எவ்வாறு ஆட்சி செய்யப்பட்டது என்பதை மெகஸ்தனிஸ் கூறுகிறார்.

பாடலிபுத்திரம் நகர் முப்பது பேர் அடங்கிய குழு ஒன்றினால் ஆளப்பட்டு வந்தது. இக் குழு ஆறு வாரியங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வாரியத்திலும் ஐந்து உறுப்பினர்கள் இருந்தார்கள். முதலாவது வாரியம் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனித்துக் கொண்டது. இரண்டாவது வாரியம் அயல் நாட்டவர்களின் பாதுகாப்பு, தேவை ஆகிய பணிகளைக் கண்காணித்தது. மூன்றவாது வாரியம், பிறப்பு, இறப்பு, ஆகியவற்றைப் பதிவு செய்தது. நான்காவது வாரியம், வாணிபத்தையும், வர்த்தகத்தையும் கவனித்துக் கொண்டது. ஐந்தாவது வாரியம் பொருள் உற்பத்தி, அதன் விற்பனை பற்றி மேற்பார்வையிட்டது. ஆறாவது வாரியம் விற்பனை வரி வசூலித்தது. நகராண்மைக் கழகத்தின் தலைவன் ‘நகரக்கா’ என்று அழைக்கப்பட்டார்.

மௌரியர் காலத்தில் கிராம நிர்வாக முறை சிறப்பாக நடைபெற்றது. கிராம மக்களின் ஆதரவுடனேயே நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முடியும் என்று நினைத்தார் சந்திரகுப்த மௌரியர். எனவே தான் கிராமங்களில் பஞ்சாயத்துராஜ் முறையை ஏற்படுத்தனார். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் கராம நிர்வாக முறை பற்றி விரிவாகக் கூறுகிறது. நிர்வாகத்தின் கடைசிப் பிரிவாகக் கருதப்படுவது கிராமமே ஆகும். கிராமத்தின் தலைவர் ‘கிராமிக்கா’ (Gramika) என்று அழைக்கப்பட்டார். நல்ல அனுபவம் கொண்டவராக இருந்தார். அரசிடமிருந்து இவர் ஊதியம் பெறவில்லை. ஒரு வேளை கிராம மக்களால் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடும். ஐந்து அல்லது பத்து கிராமங்களுக்கு பொறுப்பாக விளங்கிய அதிகாரிக்கு கோபன் (Gopa) என்று பெயர். கோபரின் எல்லா நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தவர் (Sthanika) என்பவர் ஆவார். ஸ்தானிகர் ஆளுநருக்குக் கட்டுபட்டவர். ஆளுநர் அரசருக்குக் கட்டுப்பட்டவர். இவ்வாறு மௌரிய ஆட்சி முறை வெகு சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

**5. நீதித்துறை : Judicial System**

அரசனே நீதித்துறையின் தலைவராகக் கருதப்பட்டார். இவரது மேற்பார்வையின் கீழ் நீதித்துறை இயங்கி வந்தது. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் நீதித்துறை பற்றி வரிவாகக் கூறப்பட்டுள்ளது. நாட்டில் கீழ்க்கண்ட இரண்டு வகையான நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்தன.

**a) தர்மஸ்தி நீதிமன்றம் : Dharmasthiya**

இது சிவில் நீதிமன்றமாகும். இதன் நீதிபதி விவாரிக்கா (Vyvaharika) என்று அழைக்கப்பட்டார். இவருக்குத் துணையாக அமாத்தியர்களும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய மூன்று பிராமணர்களும் உதவி செய்தனர். திருமணம், சீதனம், விவாகரத்து, வீடு, நிலம், கடன், சேமிப்பு, தொழில், விற்பனை ஆகியவை சம்பந்தமான வழக்குகள் விசாரிக்கப்பட்டன. வழக்குகளில் வாதம் பிரதிவாதம் நடைபெற்றது.

**b) கண்டகசோதனா நீதிமன்றம் : Kantakshodhaw**

இது கிரிமினல் நீதிமன்றமாகும். இதன் நீதிபதி பிதேஷ்டா (Pradeshta) என்று அழைக்கப்பட்டார். களவு, திருட்டு, நஞ்சு கலத்தல், எடை, அளவு ஆகியவற்றில் மோசம் செய்தல், போன்ற வழக்குகளை விசாரித்தது. இவை தவிர நகர நீதிமன்றங்களும், மாவட்ட நீதிமன்றங்களும் இருந்தன. நவர நீதிபதிகள் மகாமாத்திரர்கள் என்றும், மாவட்ட நீதிபதிகள் ராஜுகர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். கிராம நீதிமன்றங்களும் செயல்பட்டன. அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப சில சிறப்பு நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டன.

நீதி வழங்குதல் முறை சிறப்பாகக் காணப்பட்டது. நீதி வழங்குவதிலும் நீதிமன்ற நடைமுறையிலும் ஒரே வகை இருந்தது. கொடமை மிக்க பழைய குற்றவியல் சட்டங்கள் அப்படியே இருந்தன. கட்டாய உழைப்பு, சாட்டையடி, சித்திவதை செய்தல், மரண தண்டனை போன்ற தண்டனைகள் நடைமுறையில் இருந்தன. மரண தண்டனைக் கைதிகளுக்கு சலுகைகள் வழங்கப்பட்டன. குற்றமற்றவர்கள் தண்டனை பெற்றுவிடக்கூடாது என்பதற்காக அசோகர் பல முயற்சிகள் எடுத்தார். நீதி முறை விஷயங்களில் அரசனுக்கு உதவியாக தர்ம சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த மந்திரிகள் பணியாற்றினர்.

**6. நிதி நிர்வாகம் : Finance**

மௌரியர்கள் காலத்தில் அரசாங்கம் நிலத்திலிருந்து வருகின்ற வருமானத்தில் ஆறில் ஒரு பகுதியைப் பெற்றது. இது தவிர, மாநில அரசாங்கங்கள் மூலமும் சுங்க வருவாய் மூலமும் வருமானம் கிடைத்தது. வியாபாரிகள் தொழிலாளர்கள் லைசென்ஸ் பெற கட்டணத் தொகை செலுத்தினார்கள். மதுபான உற்பத்தியாளர்கள் அதற்கென தனி வரி செலுத்த வேண்டும். விற்பனைப் பொருட்கள் மீது வரி விதிக்கப்பட்டது. மிருகங்கள் வெட்டப்படும்போது தனி வரி போடப்பட்டது. இது தவிர மக்கள் அளித்த நன்கொடைகள் மூலமும் அரசாங்கத்தற்குப் பணம் கிடைத்தது.

இந்த வருவாயிலிருந்து அரச குடும்பம், அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொது நலன்கள், ஏழை மக்கள், மதம் ஆகியவற்றிற்கான செலவுகள் செய்யப்பட்டன. வரவு செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன.

**7. படை நிர்வாகம் : Army Administration**

மௌரியரின் படை நிர்வாகம் பற்றி மெகஸ்தனிஸ் விரிவாகக் கூறுகிறார். ‘‘மௌரியர்கள் பரம்பரையாக வந்த சதுரங்கப் படையை வைத்தருந்தனர். யானை, தேர், குதிரை, காலாட் படையுடன் கப்பற் படையும் உண்டு. முப்பது பேர்கள் கொண்ட ஒரு பெருங்குழு எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இருந்தது. அது ஐந்து உறுப்பினர்களைக் கொண்டு ஆறு சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டது. முதல் நான்கு குழுக்கள் யானை, தேர், குதிரை, காலாட் படையை நிர்வகித்தன. ஐந்தாவது குழு கப்பற் படையைக் கண்காணித்தது. ஆறாவது குழு படைகளுக்கான உணவுப் பொருள்கள், வாகனங்கள், தளவாடங்கள் பற்றி கவனித்தது’’.

‘‘போர் முறையில் ஒழுக்கம் சிறப்பாகக் கடைபிடிக்கப்பட்டது. அரசாங்கமே படைக்கு வேண்டிய ஆயுதங்களைத் தயாரித்தது. போக்காலம் தவிர மற்ற நேரத்தில் போர் வீரர்களின் ஆயுதங்கள் படை அலுவலகத்தில்தான் இருக்க வேண்டும். போர் வீரர்கட்கு சம்பளம் அளிக்கப்பட்டது. நிலம் மானியமாக கொடுக்கப்படவில்லை. நாட்டின் பாதுகாப்பிற்காகப் பல கோட்டைகள் கட்டப்பட்டு நன்கு பாதுகாக்கப்பட்டன.

**8. மக்கள் தொகை கணக்கெடுப்பு : Census**

மௌரியரின் ஆட்சியில் சென்சஸ் எடுக்கும் முறை துவங்கியது. மௌரிய அரசர்கள் பல காரணங்களுக்காக இம்முறையை ஆரம்பித்தனர். நாட்டின் செழிப்பையும், படை வலிமையும் அறிந்து திட்டங்கள் தீட்டுவதற்கும் சென்சஸ் உதவியது. ஆண், பெண், வாலிபர், முதியவர், அவர்களின் ஜாதி, தொழில் மற்றும் அடிமைகள் முதலியோரைப் பற்றி தனித்தனியே கணக்கு எடுக்கப்பட்டது. மக்களுடைய வரவு செலவுத் திட்டங்களைத் தீட்டுவதற்கு இது உபயோகமாக இருந்தது. மௌரிய ஆட்சி முறையின் பெருமைக்கு அவர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பு முறை பெரிதும் காரணமாகும்.

**9. ஒற்றர் முறை : Spy System**

மௌரிய ஆட்சி முறையில் ஒற்றர்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டனர். இந்த ஒற்றர்கள் மக்களிடமிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் ஒற்றர்கள் பணி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள், சன்னியாசிகள், பெண்கள், தாசிகள், பாம்பாட்டிகள் ஆகியோர் ஒற்றர்கள் வேலையைச் சிறப்பாகச் செய்தனர். ஆனால், இந்த ஒற்றர் படை மௌரிய அரசாட்சியின் கொடுமையை அதிகப்படுத்தியது என்றும் கூறப்படுகிறது.

அரசன் இந்த ஒற்றர் முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். மெகஸ்தனிசும், கௌடில்யரும் ஒற்றர் முறை செயல்பட்டு வந்த விதம் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். ஒரே இடத்திலிருந்து உளவு பார்க்கும் ஒற்றர்களுக்கு ‘சாந்தகர்கள்’ (Santhak) என்று பெயர். ஓரிடத்திலும் தங்காமல் நாடு முழுவதிலும், அயல் நாடுகளிலும் அலைந்து கொண்டே வேவு பார்ப்பவர்களுக்கு கஞ்சாரகர்கள் (Sanchara) என்று பெயர். வின்சன்ட் ஸ்மித் சந்திரகுப்த மௌாயரின் ஒற்றர் முறையை வெகுவாக பாராட்டிக் கூறுகிறார்.

சுருக்கமாக் கூறினால் மௌரிய ஆட்சி முறை மக்களின் நலன் நாடும் ஆட்சி முறையாகவே விளங்கியது. இது வலிமையான மைய ஆட்சி முறையைக் கொண்டதாகக் காணப்பட்டது. கி.மு. நான்காம் நூற்றாண்டில் மௌரியர்கள் அமைத்திருந்த இந்த ஆட்சி முறை அவர்களின் அரசியல் திறனுக்கு ஓர் உலக

எடுத்துக்காட்டாகும். அவர்களது மந்திரிசபை, ஸ்தல ஆட்சி முறை, குழுக்கள் முறை, சென்சஸ் முறை ஆகியவை அவர்களின் பெருமையை எடுத்துக் காட்டுகிறது. மௌரியர்களின் அரசியல் சூழ்ச்சியும், குற்றங்களுக்கு அவர்கள் வழங்கிய கொடுமையான தண்டனைகளும், கொடுமை நிறைந்த ஒற்றர் படையும், மௌரிய ஆட்சியைக் கொடுமையான ஆட்சியாகக் காண்பிக்கிறது என்று கூறுவதும் உண்டு. குறைகள் பல இருப்பினும், மௌரியரின் ஆட்சி முறை சிறப்பானது, வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பிடித்துள்ளது என்பதில் மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை.

## மௌரியர் காலச் சமுதாயம், பொருளாதாரம், சமயம், பண்பாடு

மௌரியரின் ஆட்சிக் காலம் செல்வம் நிறைந்த வளமாக காலமாகும். இவர்கள் காலத்தில் பல்வேறுபட்ட துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டது. மௌரியப் பேரரசர்கள் நாட்டின் அரசியலில் அமைதி நிலவச் செய்தனர். நாட்டு நிர்வாகம் செவ்வனே நடைபெற்றது. இச் சூழ்நிலையில் கலையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டது. மௌரியர் கால சமுதாய, பொருளாதார நிலைப் பற்றியும் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிப் பற்றியும் விளக்கமாகக் கீழே காணலாம்.

### I) சமுதாய நிலை

**சாதி முறை :**

மௌரியர் காலத்தில் சமுதாயத்தில் சாதி கட்டுப்பாடுகள் அதிகமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு சாதிக்கும் உரிய கடமைகள் வரையறுக்கப்பட்டிருந்தன. ஓதுதல், ஈதல், பெறுதல் ஆகியவை அந்தணர்களின் கடமை ஆகும். நாட்டையும், நாட்டு மக்களையும், பகைவரிடமிருந்து காப்பது சத்திரியர்களின் கடமை ஆகும். வைசியர்களின் கடமை, விவசாயம், ஆடு, மாடுகள் வளர்த்தல், வியாபாரம் செய்தல் ஆகியவையாகும். இந்த மூன்று சாதியினருக்கும் பணிபுரிதல் சூத்திரர்களின் கடமை ஆகும். பிராமணர்கள் சமுதாயத்தில் முதல் இடம் வகித்தார்கள். அவர்களுக்கு சிறப்புரிமை அளிக்கப்பட்டது. அவர்கள் எவ்வித வரியும் செலுத்த வேண்டியதில்லை. எவ்வித குற்றம் செய்த போதிலும் அவர்களுக்கு மரண தண்டனையோ, கடும் தண்டனையோ கிடையாது.

மௌரிய சமுதாயத்தில் ஏழு வகுப்பினர் இருந்ததாக மெகஸ்தனிஸ் கூறுகிறார். ஒரு சாதியைச் சாரந்தவர் மற்ற சாதியில் திருமணம் செய்து கொள்வது தடை செய்யப்பட்டு இருந்தது. தன் சாதித் தொழிலை விட்டு வேறு தொழில் செய்ய தடை இருந்தது என்றும் அவர் கூறுகிறார். மேலும், இந்தியர்கள் எளிமையான உடை உடுத்தினர். தங்கத்தினால் ஆன ஆபரணங்கள் அணிந்தனர். மெல்லிய தோலினால் செய்யப்பட்ட செருப்புகளை அணிந்தனர். பல மனைவியரை மணந்து கொண்டனர். இறந்தவர்களை ஆடம்பரமில்லாமல் புதைத்தனர் என்று மெகஸ்தனிஸ் கூறுகிறார்.

**திருமணங்கள் :**

மௌரியர் காலத்தில் எட்டு விதமான திருமணங்கள் இருந்ததாக அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. தாய் தந்தையின் சம்மதத்தின் பேரில் நடைபெறும் திருமணங்கள், காதலித்து திருமணம் செய்தல், வலுக்கட்டாய திருமணம், கடத்திச் சென்று திருமணம், ஒரு பெண் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது திருமணம் செய்தல் ஆகியவை அக்கால வழக்கத்தில் இருந்தன. குழந்தை இல்லாமல் இருந்தாலோ, ஆண் பிள்ளை இல்லாமல் இருந்தாலோ ஒரு பெண் விவாகரத்துச் செய்யப்படலாம். ஆண்மையற்றக் கணவனை மனைவி விவாகரத்து செய்யலாம். கணவன் இறந்த பிறகு ஒரு பெண் தன் கணவரின் சகோதரனை மணக்கும் மறுமணம் சமுதாயத்தில் அனுமதிக்கப்பட்டது. கணவன் நிண்ட காலமாக வெளிநாட்டிலிருக்கும் போது கணவரின் உறவினரால் கவனிக்கப்டாமலிருந்தால் மறுமணம் செய்து கொள்ளலாம். கணவன் சன்னியாசியாகப் போய்விட்டாலும் மறுமணம் செய்துகொள்ளலாம்.

**விலை மகளிர் :**

மௌரியர் காலத்தில் அரசாங்கமே விலை மகளிரை (Ganikas) அனுமதித்து இருந்தது. அதற்கான கட்டணத்தை பெற்றுக் கொண்டு அவர்களை பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொண்டது. அவர்களுக்கு தீங்கு செய்வோர் தண்டிக்கப்பட்டனர். அவர்கள் ஈட்டிய வருமானத்தின் மீது அரசு வரி விதித்தது. விலை மகளிர் கல்வி, இசை, நாட்டியம், ஓவியம், ஒப்பனை ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சிலர் அரசு ஒற்றர்களாகப் பணியாற்றினர். விலை மகளிர் தங்கள் கவர்ச்சியையும், அழகையும் இழந்தபோது அரண்மனை சமையற்காரிகளாகவும்,

செவிலியப் பெண்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் பிள்ளைகள் நடிகர்களாக வேலை செய்வதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அரசாங்கம் விலை மகளிருக்கு மருத்துவ பரிசோதனை செய்ததா என்பது தெரியவில்லை.

**அடிமை முறை :**

விலைமகளிரைப் போன்று அடிமை முறையும் நடைமுறையில் இருந்தது. இது நூல்களால் மட்டுமின்றி கல்வெட்டுகளாலும் உறுதி செய்யப்படுகிறது. அசோகர் தம் கல்வெட்டுகளில் அடிமையும் கூலிவேலை செய்பவர்களும் வெவ்வேறானவர் என்று குறிப்பிட்டு அனைவரையும் அன்பாக நடத்த வேண்டும் என்பதற்காக அறைகூவல் விடுகிறார்.

**மக்கள் :**

மௌரியப் பேரரசில் மக்கள் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்தனர். களவு சில நேரங்களில் மட்டுமே நடந்தது. மௌரியர் காலத்தில் பொய் கூறியதற்காக எவரேனும் தண்டிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. விழாக்காலத்தைத் தவிர ஏனைய சமயங்களில் மக்கள் மதுபானங்களைத் தொடுவதில்லை. மக்களின் முக்கிய உணவு அரிசியாகும்.

**II) பொருளாதார நிலை**

**விவசாயம் :**

மௌரியர் காலத்து பொருளாதார நிலை சிறப்புற்று விளங்கியது. மக்கள் எவ்விதக் கவலையில்லாமல், பயமுமில்லாமல் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். நாட்டில் விவசாயம் நல்ல முறையில் கவனிக்கப்பட்டது. நாட்டு நிலம் அனைத்தும் மன்னருக்கே சொந்தமானதாக இருந்தது. நிலங்களில் உழவர்கள் மன்னர்களின் சார்பாளர்களாக இருந்து பயிரிட்டனர். நெல், எள், மிளகு, ஆமணக்கு, கோதுமை, கரும்பு ஆகியவை பயிரிடப்பட்டது. விளைச்சலில் நான்கில் ஒரு பகுதி வரியாக விதிக்கப்பட்டது. மேலும், அரசாங்கத்தின் பாதுகாப்பில் மாட்டுப் பண்ணைகள் செயல்பட்டன.

**தொழில் :**

மௌரியர் காலத்தில் தொழில்கள் செழித்து வளர்ந்தன. நெசவுத் தொழில் முக்கியமான தொழில் ஆகும். மேலும், தச்சுத் தொழில், செருப்புத் தொழில், மீன் தொழில், மண் பாண்டங்கள் செய்தல், எண்ணெய் தொழில் ஆகியவை காணப்பட்டன. நாட்டில் சில தொழில்களை அரசாங்கமே நடத்தியது. அவை சுரங்கத் தொழில், உப்புக் காய்ச்சுதல், மதுபானம் தயாரித்தல், போர்க்கருவிகள் செய்தல், கப்பல் கட்டுதல் ஆகியவையாகும்.

மௌரியர் காலத்தின் போது இந்தியா வெளிநாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது. ஏற்றுமதி வரி, சுங்க வரி ஆகியவற்றைப் பற்றி அர்த்த சாஸ்திரம் குறிப்பிடுகிறது. வெளி நாட்டுக்கு காசியில் செய்யப்பட்ட ஆடைகள் மற்றும் கம்பளி ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. உள்நாட்டு வர்த்தகத்திற்கு நதிகள், ஆறுகள், சாலைகள் பயன்பட்டன. மௌரியர் காலத்தில் தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் பழக்கத்தில் இருந்தன. நாணயங்கள் வட்ட வடிவமாக இல்லாமல் சதுரமாக இருந்தன. நாணயங்கள் மீது பொறிக்கப்பட்ட புனித மரம், வளர்பிறை, மயில் ஆகிய சின்னங்கள் மௌரியர் காலத்தைப் பற்றித் தெரிவிக்கின்றன.

**III) சமய நிலை**

மௌரியர் காலத்தில் இந்து சமயம், சமண சமயம், பௌத்த சமயம் ஆகியவை நடைமுறையில் இருந்தன. இவை தவிர 'அஜுவர்கள்' என்ற சிறிய சமய அவைகள் இருந்ததாகத் தெரிகிறது. மௌரிய அரசர்கள் சைவ சமயத்தைப் பின்பற்றியவர்களாகத் தெரிகிறது. ஆனால், அசோகரும் அவருக்குப் பின் வந்தோரும் புத்த சமயத்தைப் பின்பற்றினார்கள். சமுதாயத்தில் அந்தணர்கள் தூய இனத்தவர் என்றும், தெய்வீக ஒளி பொருந்தியவர் என்றும் கருதப்பட்டனர். ஆனால், பொதுவாக பௌத்த சமயம் தழைத்தோங்கியது. சமய அடிப்படையில் தோன்றிய அசோகரின் தர்மம் நாடு முழுவதும் பரப்பப்பட்டது. மக்களின் வாழ்க்கை நெறிமுறைப் படுத்தப்பட்டது. கௌடில்யர், சிவன், குபேரன், லட்சுமி ஆகிய தெய்வங்களுக்கு கோவில் கட்டி எழுப்பப்பட்டது. மந்திரம், சோதிடம், சகுனம் ஆகியவற்றில் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். தீ, வணக்கத்திற்குரிய பொருட்களாயின. புனித ஸ்தலங்களுக்குச் சென்று வருதலு.,

கோவில்களுக்கு பாம்பு படங்கள் செய்து வைப்பதும் மேற்கொள்ளப்பட்டன. கனவுகளுக்குப் பலன் பார்ப்பது சாதாரண மக்களிடம் அதிகமாகக் காணப்பட்டது.

மௌரிய மன்னர்களுள் அசோகர் ஒருவரே பௌத்த சமயத்தின் ஆதரவாளராக இருந்தார். அசோகர் பௌத்த மதத்தைத் தழுவியதே இக்காலத்தின் உன்னத நிகழ்ச்சியாகக் கருதலாம். சமய அடிப்படையில் தோன்றிய அசோகரின் தர்மம் ம்றுகிய மனப்பான்மை உள்ள சமய நோக்கைச் சீர்திருத்தும் தன்மை வாய்ந்தது. அஜுவர்கள் அசோகரிடமிருந்தும் அவரது பேரன் தசரதனிடமிருந்தும் கயா பக்கமுள்ள குன்று ஒன்றிலுள்ள குகைக் கோவிலைப் பெற்றனர்.

**IV) பண்பாடு**

**மொழியும் இலக்கியமும் :**

மௌரியர் காலத்தில் பேசப்பட்ட மொழிகளில் முக்கியமானது பாலி, சமஸ்கிருதம், பிராக்கிருதம் ஆகியவையாகும். பிராக்கிருத மொழியே அரசு மொழியாக விளங்கியது. மௌரியர் காலத்து எழுத்துக்கள் அசோகரின் கல்வெட்டுக்கள் மூலமாக நமக்குக் கிடைக்கின்றன. அவைகள் நல்ல வளர்ச்சியடைந்த எழுத்துக்களைப் போன்று காட்சியளிக்கின்றன. எனவே மௌரியர் காலத்து மக்கள் கல்வியறிவு மிக்கவர்கள் என்று அறியலாம். மேலும், அசோகரின் கல்வெட்டுக்களில் காணப்படும் இலக்கிய நடை அக்கால கல்வி வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

மௌரியர் காலத்தில் சிறந்த இலக்கியங்கள் தோன்றின. அவைகளில் தலைசிறந்தது கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமே ஆகும். இந்த நூலுக்கான உரையையும் அவரே எழுதியுள்ளார். மேலும், மெகஸ்தனிஸ் கிரேக்க மொழியில் எழுதிய ‘‘இண்டிகா’’ இக்காலத்திலேயே எழுதப்பட்டது. பத்திரபாகு எழுதிய ‘‘கல்ப சூத்திரமும்’’ இக்காலத்திலேயே எழுதப்பட்டது என்பர்.

**கல்வி :**

மௌரியர் காலத்தில் கல்வி பெரும் வளர்ச்சியடைந்தது. பேரரசின் பல இடங்களில் மக்களிடம் கல்வியைப் பரப்புவதற்காக குருகுலங்களும் (Gurukulas), மடாலயங்களும் அமைக்கப்பட்டன. குருவின் வீடுகளிலேயே தங்கிப் படித்தனர்.

புராணங்கள், வானவியல், கணிதம், அரசியல் போன்ற பாடங்கள் சொல்லித்தரப்பட்டன. இந்த குருகுலங்களுக்கு மௌரிய அரசர்கள் தாராளமாக நிதி உதவி செய்தனர். இதனால் கல்வி வளர்ச்சியடைந்தது.

**தட்சசீலப் பல்கலைக்கழகம் :**

மௌரியர் காலத்தில் உயர் கல்வியும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்தது. உயர் கல்விக்கான புகழ்ப் பெற்ற இரண்டு பல்கலைக்கழகங்கள் இருந்தது. அவை 'தட்சசீலப் பல்கலைக்கழகம்', பெனாரஸ் பல்கலைக்கழகங்களாகும். பண்டைய இந்தியாவின் புகழ்பெற்றதும் மிகப் பழைமையானதுமானது தட்சசீலப் பல்கலைக் கழகமாகும். தற்போது ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்கள் எந்த மதிப்பிலும் தரத்திலும் உள்ளனவோ அதே போன்று விளங்கியது தட்சசீலப் பல்கலைக்கழகம். இங்க இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்து தங்கி படித்தனர். அறிவியல், கைவினை, மற்றும் கலைப்பாடங்களின் புகழ்ப் பெற்ற மையமாக விளங்கியது. புகழ் பெற்ற பலரை உருவாக்கியது இந்த பல்கலைக்கழகம். மகத அரசர் பிரசஞ்சித், சாணக்கியர், சந்திரகுப்த மௌரியர் ஆகியோர் இந்த பல்கலைக்கழகம் உருவாக்கிய தலைவர்கள் ஆவர். இதே போல பனாரஸ் பல்ககலக்கழகம் பிராமணீய பண்பாட்டின் மைய இடமாக விளங்கியது. இதுவும் கல்வி வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கியது.

**விழாக்கள் :**

மௌரியர் காலத்தியக் கல்வெட்டுக்கள் உத்சவம், சமாஜம் (Utsava, Samajam) என்ற பெயர் கொண்ட களியாட்டங்களையும் குதூகலமான மக்கள் கூட்டங்களையும் குறிப்பிடுகின்றன. இந்த விழாக்களில் நாட்டியம் பாட்டு வாத்திய இசை முதலியவை பங்கு பெற்றிருக்க வேண்டும். ததலநகராகிய யாடலிபுத்திரத்தில் எருதுகளும், குதிரைகளும் பூட்டிய தேரோட்டப் போட்டிகளும், யானைகளுடனும், பிற மிருகங்களுடனும் மல்லர்கள் போரிடுவதும் நடைபெற்றது.

**பொழுது போக்குகள் :**

மௌரியர் காலத்தில் மக்கள் வேட்டையாடுதல், மற்போர் செய்தல், குதிரை, யானை– ஏற்றம் போன்ற பொழுதுபோக்குகளை மேற்கொண்டார்கள். மேலும், இசை,

ஆடல் முதலிய கேளிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். இக்கால மக்கள் மேற்காசிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு உலகியல் வாழ்வை ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கவே பிறந்தான் என்ற தத்துவத்தை உணர்ந்து கொண்டனர்.

**III) மௌரியக் கலை**

மௌரியக் காலத்தில் கலை உன்னத நிலையை அடைந்து இருந்தது. சந்திரகுப்தர், பிந்துசாரர் ஆகியோரின் கலைப் பொருட்கள் முழுவதுமாக அழிந்துவிட்டன. ஆனாலும், அவர்களின் கலைப் பண்புகளை கிரேக்க இலக்கியங்களிலிருந்து அறியலாம். இன்றைக்கும் உலகப் புகழ்பெற்று விளங்கும் பண்டைக் கால கலைச் செல்வங்கள் அசோகரது கட்டிடங்களும், கல்தூண்களும், கல்வெட்டுகளும் ஆகும். பாடலிபுத்திரத்தில் தோண்டி கண்டு–பிடிக்கப்பட்டுள்ள பல கல்தூண்களைக் கொண்ட ஒரு பெரிய கூடத்தைக் கொண்டு மௌரியர் காலத்து கலைத்திறனை அறியலாம். அசோகரின் தூண்களும், படிமங்களும் கலை உலகில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி உள்ளன என்று பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.

**a) கட்டிடங்கள் : Buildings**

மௌரியர்கள் பிரமாண்டமான அழகுமிக்க அரண்மனைகளைக் கட்டினர். இவைகள் மௌரியக் கட்டிடக் கலையை வெளிப்படுத்தும் சின்னங்களாக விளங்கின. இவைகளின் அழகிற்கும், கம்பீரத்துக்கும் ஈடு இணையில்லை. அக்கால கிரேக்க எழுத்தாளர்கள் மௌரியக் கட்டிடங்களைப் பற்றி விவரித்துள்ளார்கள். தலைநகர் பாடலிபுத்திரத்தில் அநேக கட்டிடங்களையும், அரண்மனையையும் சந்திர குப்த மௌரியர் கட்டினர். மெகஸ்தனிஸ் இக் கட்டிடங்களை விவரித்துள்ளார். இவைகள் மரத்தால் கட்டப்பட்டவை. இந்த மாளிகையில் செய்கை ஏரி, பறவைகள், பல வகையான மரங்கள் காணப்பட்டதாக மெகஸ்தனிஸ் கூறுகிறார். இவைகளில் பெரும்பாலும் மரத்தினாலான பொருட்களே உபயோகப்படுத்தப்பட்டதால் நெருப்பினால் அழிந்திருக்கக்கூடும். பின்னர் வந்த அசோகர் பளபளப்பாக்கப்ட்ட கற்களை உபயோகித்து கட்டிடங்கள் கட்டி கட்டிடக்கலையில் புதிய சகாப்தத்தை ஆரம்பித்தார். சந்திரகுப்த விக்கிரமாதித்தியர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த பாகியான் பாடலிபுத்திரத்திலிருந்த அசோகரின் அரண்மனையைப் பார்த்து வியந்து கூறுகிறார்.

**b) ஸ்தூபிகள் : Stupas**

புத்த சமயத்தன் பண்பாடுகளே மௌரியரின் கலைக்கு அடிப்படையாக அமைந்துவிட்டன. புத்தர் ‘‘தாம் இறந்த பின்பு தனது எச்சங்களைப் புதைத்து அவற்றின்மீது மடாலயங்களையும், ஸ்தூபிகளையும் எழுப்ப வேண்டும்’’ என்று தனது சீடர்களிடம் கூறியதாக புத்த சமய நூலான ‘மகாபரி நிப்பனசுந்தா’ (Mahapari nibbana sutta) என்ற நூல் கூறுகிறது. எனவேதான் கலிங்கப் போருக்குப் பிறகு புத்த மதத்தைத் தழுவிய அசோகர் நாடு முழுவதிலும் சுமார் 84,000 ஸ்தூபிகளை எழுப்பினார்.

அரைக்கோள வடிவில் செங்கற்கள் அல்லது கற்களைக் கொண்டு கட்டப்பட்டு நிற்கும் வடிவங்களே ஸ்தூபிகள். இது ஒன்று அல்லது பல வாயில்களைக் கொண்டிருக்கும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த பாகியான், தட்சசீலம், ஸ்ரீநகர், கபிலவஸ்து, பனாரஸ், அயோத்தியா, பிரயாகை, கன்னோசி ஆகிய இடங்களில் முப்பது மீட்டர் உயரமான ஸ்தூபிகளைப் பார்த்ததாக கூறுகிறார். அசோகர் காலத்தில் உருவாக்கப்பட்ட ஸ்தூபிகளில் மத்தியப் பிரதேசம் போபாலுக்கு அருகிலுள்ள சாஞ்சி ஸ்தூபி மட்டும் அழியாமல் இருப்பது வியப்பிற்குரியதாகும். இது 23.25 மீட்டர் உயரமும், 36.50 மீட்டர் சுற்றளவும் உடையது. இதனைச் சுற்றி 2.30 மீட்டர் உயரத்தில் கல்லினால் சுற்றி வேலி போடப்பட்டுள்ளது. இதன் பிறகு நான்கு நுழைவாயில்களும் பண்டைக்கால சிற்பக் கலையின் கவின்மிகு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. புத்தரின் வாழ்க்கையை விளக்கும் சிற்பங்களும், ஜாதக கதைகளும் நுழைவு வாயில்களில் சிற்பங்களாக உருமாறி உள்ளன. மிக நுண்ணிய சிற்ப வேலைத்திறன் சாஞ்சி ஸ்தூபியில் காணப்படுகிறது.

**c) தூண்கள் : Pillars**

அசோகரால் கட்டப்பட்ட அரண்மனைகள், புத்த மடாலயங்கள் முதலியவை அழிந்துவிட்ட பின் எஞ்சியிருப்பவை அவரது கல்தூண்களேயாகும். இந்த தூண்களில் புத்தசமயக் கருத்துக்களும், அசோகரின் ஆணைகளும் பொறிக்கப்பட்டுள்ளன. அசோகரின் இந்தத் தூண்கள் மௌரியக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் அமைப்பு சிற்பக்கலைக்கும், கலைநுட்பத்தற்கும், பொறியியல் தறனுக்கும் சான்றாக உள்ளது. அசோகரின் கல்தூண்கள் ஒவ்வொன்றும் பதினைந்து மீட்டர் உயரமும் ஐம்பது

டன் எடையும் கொண்டவை. இவை ஒரே கல்லினால் ஆனவை. ஒவ்வொரு தூணும் ஒரு உலோகத் தகட்டைப் போலும், கண்ணாடியைப் போலும், பளபளப்பாக இழைக்கப்பட்டுள்ளது.

இரும்புத்தூணின் அடிப்பகுதி 90 சென்டிமீட்டரிலிருந்து 125 சென்டி மீட்டர் விட்டம் உடையது. அதில் மயில் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் நீண்ட தண்டுப்பகுதி (Shaff) 56லிருந்து 88 சென்டிமீட்டர் விட்டம் உடையது. தண்டுப்பகுதி மட்டும் 15 மீட்டர் உயரம் உள்ளது. இந்தப் பகுதி மிகவும் பளபளப்பாக்கப்பட்டுள்ளது. தூண்களின் உச்சியில் (the capital) மூன்று வகையான உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை, சிங்கம், யானை, எருரு பேபன்ற வடிவம் கொண்டதை 'பாரசீக மணி வடிவம்' (Persian Bell Shape) என்று ஹேவல் என்பவர் கூறுகிறார். இதன் மூலம் இணை பாரசீகக் கலை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அசோகரின் கல்தூண்கள் அனைத்திலும் மிக அழகு மிக்கதும் சிறப்பானதுமாக உள்ளது சாரநாத்திலுள்ள கல்தூண் ஆகும். பழபழப்பான இந்த தூணின் உச்சியில் தாமரை போன்ற பீடத்தின் மேல் மட்டத்தில் நான்கு திசைகளை நோக்கியபடி நான்கு சிங்கங்கள் உள்ளன. 'இந்த சிங்கங்களின் சிலைக்கு ஒப்பான அழகுமிக்க விலங்கின் சிலை உலகின் எந்தப் பண்டைக்கால கலைகளிலும் காண முடியவில்லை' என்று வின்சன்ட் ஸ்மித் கூறுகிறார். இந்தத் தூணின் நடுவில் பொறிக்கப்பட்டுடள்ள தர்மச்சக்கரம் அசோகரால் ஆணையிடப்பட்ட அறநெறியின் சின்னமாக விளங்குகிறது. இதில் காணப்படும் மணி, சிங்கம், போன்ற உருவங்கள் அவற்றின் கருத்தாழங்களாலும் கலையழகாலும் நம்மை வியப்படையச் செய்கின்றன. இத்தகை அழகு வாய்ந்த படிமங்கள் இன்றும் உருவாக்கப்படவில்லையென்றும் பண்டைய கலைப் பொருட்களாலும் இவற்றின் அழகை மிஞ்ச முடியாது என்றும் மார்ஷல் கூறுகிறார். இவ்வாறு அசோகரின் கலைகள் வெளிநாடு கலைகளிலிருந்து வேறுபட்டதாகவும், அவற்றை மிஞ்சியதாகவும் காணப்படுகிறது.

**குகைகள் : Caves**

அசோகர் கால குகைக் கல்வெட்டுகளும், பாறைக் கல்வெட்டுகளும் கல்தூண்களை விட அழகில் சிறிது குறைந்து காணப்பட்டாலும், அவற்றிலுள்ள

எழுத்துக்கள் மிக அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. அசோகராலும், அவரது பேரன் தசரதனாலும் குடையப்பட்ட பல குகைகள் காணப்படுகிறது. இவைகள் 'சைத்தியங்கள்' என்று அழைக்கப்பட்டன. கதமாரிஷி குகை, லோமாரிஷி குகை போன்றவை குறிப்பிடத்தக்க குகைக் கோவில்களாகும். கயாவுக்கு அருகிலுள்ள பராபர் மற்றும் நாகர்ஜுனா குகைகள் கரடுமுரடான கற்களை குடைந்து ஆக்கப்பட்டவையாகும். ஆனாலும், அவைகளின் பக்கச்சுவர் பளிங்குபோல் மெருகிடப்பட்டுடள்ளது. இவைகளும் மௌரியக் கலைக்குச் சிறந்த சான்றுகளாக உள்ளன. தசரதன் கட்டிய 'கோபிகா குக பவன்' (Gopika Kuha Bhavan) என்ற கோவிலும் மௌரியக் கலையை பறைசாற்றுகிறது.

இவ்வாறு மௌரியக் காலத்து கலைகள் மிகப் பெரிய கல்தூண்களிலிருந்து, மிகச் சிறிய மலர்க்கொடிகள் போல் செதுக்கப்பட்ட கலைகள் வரை வியத்தகு பொறியியல் திறமையுடனும், கலை நுணுக்ககததுடனும் காட்சியளிக்கின்றன. இவை கம்பீரமும், எளிமையும், அபாரமான கலைத் திறமையும், நுண்ணிய வேலைப்பாடும் கொண்டு அமைந்திருக்கின்றன என்று கர்ஜாண் மார்ஷல் கூறுகிறார். தூண்களுக்கான நீண்ட பெரும் பாறைகளை வெகு தொலைவிலிருந்து கொண்டு வந்து, அவற்றில் தம் கைத்திறனைக் காட்டி பத்தரமாக எடுத்துக்காட்டியுள்ள மௌரியர் காலத்துபூ பொறியாளர்களின் திறமையும் பாராட்டப்படக்கூடியது ஆகும். மௌரியர் காலத்து கலைகளுக்கு அடிப்படையாக அமைந்தது புத்த சமயத்தின் பண்பாட்டுகளேயாகும். மௌரியர் காலக் கலைச் சின்னங்களில் பாரசீக, கிரேக்கத் தன்மைகள் காணப்படுகின்றன என்ற கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

## மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

## (CAUSES FOR THE DECLINE OF MAURYAN EMPIRE)

இந்திய வரலாற்றில் புகழ் வாய்ந்த பெரும் பேரரசாகித் திகழ்ந்த மௌரியப் பேரரசு அசோகர் காலத்தற்குப் பிறகு வெகு வேகமாக வீழ்ச்சியடைந்துவிட்டது. இறுதியில் அது மறைந்துவிட்டது. மிகக் குறுகிய காலத்தில் வீழ்ச்சியடைந்ததற்கு பல காரணங்கள் சொல்லப்படுகிறது. பேரரசின் வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணங்களைக் கீழே காண்போம்.

**1. அசோகருக்குப் பின் வந்த திறமையற்ற அரசர்கள் :**

மௌரியப் பேரரசு அசோகருக்குப் பின் சுமார் அரை நூற்றாண்டு காலம் வரை நீடித்தது. ஆனால், அக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களைப் பற்றி நமக்குத் தெளிவான செய்திகள் கிடைக்கவில்லை. ஆனால், அவர்களுக்கு முந்திய காலத்து மௌரிய அரசர்களைப் போல இல்லாது மிகத் திறமையற்றவர்களாக இருந்தார்கள். அசோகருக்குப் பின் அவருடைய மூத்த மகன் குணாளன் திட்சரட்சதா என்ற அசோகரின் மனைவியின் சூழ்ச்சியின் காரணமாக ஆட்சியிழந்தார். ஆனால், ஒரு சில காலம் தன்னுடைய மகன் தசரதன் உதவிக் கொண்டு ஆண்டதாக சொல்லப்படுகிறது. குணாளனின் மறைவிற்குப் பிறகு அவரது மூத்த மகன் தசரதன் பட்டத்திற்கு வந்தார். தசரதனுக்குப் பின் சம்பிர தீ பட்டத்திற்கு வந்தார். அச்சமயத்தில் காஷ்மீரில் 'ஜலுக்கன்' என்பவரும் காந்தாரத்தில் வீரசேனனும் ஆட்சி புரிந்தார்கள். இந்த மன்னர்கள் யாவரும் சிறந்தவர்களாகக் கருதப்பட வாய்ப்பில்லை. எனவே இவர்கள் யாவரும் சிறந்தவர்களாகக் கருதப்பட வாய்ப்பில்லை. எனவே இவர்கள் காலத்தில் கிளர்ச்சியும், அன்னியப் படையெடுப்பும் நடைபெற்றது. இதனால் மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

**2. பேரரசில் ஏற்பட்ட பிளவு :**

மௌரியப் பேரரசில் வழிவழியாக அரசுரிமை பெறும் முறை வழக்கத்தல் இருந்து வந்தது. இம் முறையைப் பின்பற்றும்போது புகழ் மிக்க, திறமையான மன்னர்கள் தோற்றுவது அரிது. மேலும் தந்தையைப் போல மகன் இருப்பான் என்றும் சொல்ல முடியாது. இவ்வாரிசுரிமை கொள்கையின் காரணமாக பேரரசில் குழப்பம் ஏற்பட்டது. மேலும் அசோகருக்குப் பிறகு பேரரசு இரண்டாகப் பிங்கிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதுவும் பேரரசை வலிமை குன்றச் செய்தது.

**3. பரந்த பேரரசு :**

மௌரியர்களின் பேரரசு மிகப் பரந்ததாக இருந்தது. அதன் காரணமாக மத்திய ஆட்சிக்கு மாகாணங்களின் மேல் உள்ள கண்காணிப்பு குறைந்தது. தூரத்தின் காரணமாக ஆட்சியாளர்களின் கட்டளைகள் சரியாக நிறைவேற்றப்படவில்லை.

செய்திப் போக்குவரத்தும் சரியாக நடைபெறவில்லை. இக் காரணங்களால் ஆட்சி முறை வலிமை இழந்து பேரரசு சீர்குலைய ஆரம்பித்தது.

**4. மௌரியர்களின் மைய ஆட்சிக் கொள்கை :**

மௌரிய ஆட்சி முறையில் மைய அரசின் கீழ் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருந்தன. மாநில ஆளுநர்கள் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டி இருந்தது. வலிமையான மன்னர்களான பிந்துசாரன், அசோகர் ஆகியோர் இருந்த வரை ஆட்சி நல்ல முறையில் நடைபெற்று வந்தது. ஆனால், அவர்களுக்குப் பின் வந்த ஆற்றலற்ற அரசர்களின் காலத்தில் மாநிலங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதன் காரணமாக மௌரிய ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

**5. அசோகரின் சமயக் கொள்கை :**

மௌரியரின் வீழ்ச்சிக்கு அசோகரின் புத்தமதக் கொள்கை ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. அசோகருடைய அகிம்சைக் கோட்பாடும், அவருடைய வேள்வி தடையும் பேரரசை வலிமை குன்றச் செய்தது. அகிம்சைத் தத்துவத்தன் காரணமாக மக்கள் வீரத் தன்மையை இழந்தார்கள். படை வீரர்கள் போர் உணர்ச்சி அற்றவர்களாக மாறினார்கள். இதனால் மௌரியப்படை வலிமை இழந்தது. பின்னர் நடைபெற்ற கிரேக்கர்களின் தாக்குதலில் இருந்து நாட்டைக் காப்பாற்ற முடியாமல் போயிற்று. ஆனால், இந்தக் காரணம் மறுக்கப்படுகிறது.

அசோகர் மிருகங்களை மதச் சடங்குகளுக்குப் பலியிடுவதை தடை செய்தார். இது வைதிக இந்துக்களுக்கிடையே மனக்குறையை ஏற்படுத்தியது. இதனால் இந்துக்கள் கொதித்தெழுந்து புரட்சியாக வெடித்து மௌரிய ஆட்சி வீழ்ந்தது என்று கூறப்படுகிறது.

**6. திறமையற்ற அரசாங்க அலுவலர்கள் :**

மௌரிய அரசர்கள் உயர் பதவிகளில் திறமைக்கு மதிப்பு கொடுக்காமல் தனக்குப் பிடித்தவர்களையே நியமித்தனர். இதனால் தகுதியற்றவர்களும், திறமையற்றவர்களும் அரசாங்க அலுவலர்களானார்கள். இவர்கள் ஊழல் நிறைந்தவர்கள், இவர்களால் நாட்டை திறம்பட நிர்வகிக்க இயலவில்லை. அத்துடன்

மாநில ஆளுநர்கள் மக்களைக் கொடுமைப்படுத்தனர். எனவே, பேரரசு வீழ்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றது.

**7. பிரகத்திர மௌரியன் :**

இவர் கடைசி மௌரிய மன்னர். இவர் ராஜதந்திரியல்ல. மக்களிடம் நல்ல மதிப்பைப் பெற்றவருமல்ல. இவரது சீர்கேடான ஆட்சியே மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. இவர் "புஷ்ய மித்திர சுங்கனால்" கொலை செய்யப்பட்டார். இக்கொலை அவரது கேவலமான ஆட்சியை காண்பிக்கிறது.

**8. நிர்வாகக் குறைபாடுகள் :**

ஒரு பேரரசில் காணப்படும் நிர்வாகக் குறைபாடுகள் மௌரியப் பேரரசிலும் காணப்படுகிறது. சிற்றர்சர்களின் விடுதலை உணர்ச்சி மண்டலத் தலைவர்களின் மனக்குறைகள், அரண்மனைச் சூழ்ச்சிகள் ஆகியவை மௌரியப் பேரரசில் காணப்பட்டது. முக்கியமாக மண்டலத் தலைவர்களின் பேராசையும், விடுதலை உணர்ச்சியும் பேரரசின் அழிவுக்குக் காரணமாயின. இளவரசிகள் நிறைந்த அந்தப்புரம் சூழ்ச்சிக்கும், வஞ்சகத்தற்கும் பிறப்பிடமாகக் காணப்பட்டது.

**9. கிரேக்கப் படையெடுப்பு :**

கிரேக்கர்களின் படையெடுப்பு மௌரியர்களின் வீழ்ச்சிக்கு உடனடி காரணமாகும். கிரேக்கப் படை மதுரா, பாஞ்சாலம், பாடலிபுத்திரம் ஆகிய இடங்களை தாக்கியது. மேலும் சிந்து சமவெளியையும், சௌராஷ்டிரத்தையும் கிரேக்கர்கள் தாக்கினர். இதனை வெற்றிகரமாக மௌரியப்படை எதிர்த்துப் போரிடவில்லை. இதனால் மக்கள் ஆதரவு இழந்த மௌரிய அரசு வீழ்ச்சியடைந்தது.

மேற்கண்ட காரணங்களை ஆராயும் போது மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு உள்நாட்டுக் காரணங்களே அதிகமாகும். வெளிநாட்டினரின் படையெடுப்பு அல்ல. இருப்பினும் மௌரிய வம்சத்தைப் பதவியிலிருந்து நீக்கிய 'புஷ்ய மித்திரசுங்கனுக்கு' வைதீக இந்துக்களின் ஆதரவு இருந்ததை மறுக்க முடியாது. அசோகரின் அகிம்சைக் கொள்கையும், அமைதிக் கோட்பாடும் பேரரசின் வலிமையை அழித்தாக் கூறுவது தவறாகும். வேறு பொருளாதார நெருக்கடியால் பேரரசு அழிந்தது

என்று கருதுவதற்கும் சான்றுகள் இல்லை. சுருங்கக் கூறினால் அசோகருக்குப் பின் வந்த மன்னர்களின் ஆற்றலின்மையும் மத்திய அரசில் காணப்பட்ட அதிகாரக் குவிப்பு முறையுமே மௌரியப் பேரரசு அழிவதற்கு முக்கியக் காரணமாகும்.

## குப்தப் பேரரசு – சான்றுகள் (THE GUPTA EMPIRE SOURCES)

குஷாணப் பேரரசு வீழ்ச்சிக்குப் பின்னர் வட இந்திய அரசியலில் சிறியதும், பெரியதுமான பல்வேறு அரசுகள் தோன்றின. சில முடியரசுகள், சில குடியரசுகள் காணப்பட்டது. பொதுவாக அரசியலில் ஒரு மந்த நிலை காணப்பட்து. இந்த நிலை கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை நீடித்திருந்தது. குப்தர்கள் குலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தோறி, நான்காம் நூற்றாண்டில் வலிமை பெற்றிருக்கலாம். குடியரசுகளும், முடியரசுகளும் போக எஞ்சியுள்ள பகுதிகளும் சிறு இராஜ்ஜியங்களாகப் பிரிந்து சுயாட்சியுடன் செயல்பட்டு வந்தன. இந்தச் சூழ்நிலையில்தான் குப்தர் குலத்தல் வலிமைமிக்க வீரர் சந்திரகுப்தர் தோன்றி, அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்த குப்தப் பேரரசை தோற்றுவித்தார். குப்தப் பேரரசு இந்திய வரலாற்றில் புகழ்மிக்க காலமாகக் கருதப்படுகிறது. குப்தர் காலம் இந்தியாவின் பொற்காலமாகும். குப்தர்கன் வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்குக் கீழ்க்கண்ட சான்றுகள் நமக்குத் துணை புரிகின்றன.

### 1) இலக்கியச் சான்றுகள் :

**1. புராணங்கள்** : இலக்கியச் சான்றுகளில் புராணங்கள் பெரிதும் பயன்படுகின்றன. அவை குப்த மன்னர்கன் பட்டியலைத் தருவதுடன், அவர்களின் தாயகம், உறவு முறைகள் ஆகியவற்றைத் தெளிவாகக் காண்பிக்கின்றன. புராணங்கள் மொத்தம் பதினெட்டு ஆகும். K.P.ஜெயசுவால், பார்ஜுடர், கிர்பெல் போன்ற வரலாற்றறிஞர்கள் இவைகளை நன்கு பிரித்து, அவைகளில் உள்ள கருத்துக்களைத் தொகுத்து வரலாற்று மாணவர்கட்கு பெரும்பணி செய்தனர். இந்த பதினெட்டு புராணங்களில், வாயு புராணம், மத்சய புராணம், விஷ்ணு புராணம், பிரமானந்த புராணம், பாகவத புராணம் ஆகியவைகள் குப்தர்களைப் பற்றி அறிய மிகவும் உதவுகின்றன. குப்த அரசர்களின் பெயர்களும், சாதனைகளும் இதில் காணப்படுகிறது. புராணங்களிலிருந்து முதலாம் சந்திரகுப்தர் அயோத்தியையும், மகதத்தையும் ஆண்டார் என்று

அறியப்படுகிறது. மேலும் சமுத்திர குப்தர் காலத்தில் இருந்த வாக்காடகர்கள், நாகர்கள், சாகர்கள், முதலியோரைப் பற்றியும் அறிய உதவுகிறது.

**2. தர்ம சாஸ்திரங்கள் :** அக் காலத்தில் தர்ம சாஸ்திரங்களும் குப்தர் காலத்திய நிகழ்ச்சிகளைப் பற்றி அறிய உதவுகிறது. வியாசர், நாரதர், பிரகபதி, அரிதர், புலத்தியன் முதலியோர் எழுதிய ஸ்மிருதிகள் குப்தர் காலத்தவை ஆகும். வியாசர் எழுதிய ஸ்மிருதி, ஹரிதா, பீத்தமஹா முதலிய நூல்களிலிருந்தும் பயனுள்ள செய்திகள் கிடைக்கின்றன.

**3. காமாந்தக நீதிசாரம் :** இதன் நூலாசிரியர் இரண்டாம் சந்திரகுப்தரின் பிரதமரான சிகாரா என்பவராவார். இந்த நூலில் அவர் அரசனுக்கு ஏற்ற ஆலோசனைகளைக் கூறுகிறார். கொடுங்கோலன் ஒருவனை மாறுவேடம் தாங்கி கொலை செய்வது நன்னெறிக்கு இசைந்ததாகும் என்று கூறுகிறார். ராமகுப்தனின் மனைவி சாக்க அரசன் உருத்திரசிம்மனால் விரும்பப்பட்டதால் சந்திரகுப்தன் பெண் வேடம் தாங்கி அவனுடன் சாகசம் செய்து கொலை செய்ததைப் பற்றி அறிய முடிகிறது.

**4. கௌமோதி மகோத்சவம் :** இது ஓர் காவிய நாடாகும். இதன் ஆசிரியர் யார் என்று திட்டமாகக் கூறமுடியவில்லை. சிலர் இந்நூலின் ஆசிரியர் கிசோரிகா என்றும், வேறு சிலர் விச்சிகா என்றும் கூறுகின்றனர். இந்த நூல் குப்தர்களின் துவக்க கால வரலாற்றைப் பற்றிய கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துவைக்க பெரிதும் உதவுகிறது. இந்த நாடகத்தின்படி, சுந்தரவர்மன் என்பவன் மகதத்தை ஆண்டு வந்தான். அவனுக்குப் பிள்ளை இல்லாததால் சந்திரசேனன் என்பவனை வளர்ப்பு மகனாக எடுத்து வளர்த்தான். இப்படியிருக்க சுந்திரவர்மனுக்கு ஆண்மகன் பிறந்தான். அவன் பெயர் கல்யாணவர்மன். சேனாதிபதியும் பிரதம மந்திரியும் ஒன்று சேர்ந்து கல்யாண வர்மனுக்குத் தீங்கு நேராதபடி மறைத்து வைத்தனர். தன் மீது அன்பு காட்டாத சுந்தரவர்மனுடன் போரிட்டான் சந்திரசேனன். போரில் சுந்தரவர்மன் இறந்தான். அதன் பின் சந்திரசேனன் அரசனாக முடிசூட்டிக் கொண்டான். ஒரு சமயம் சந்திரசேனன் நாட்டின் எல்லைப்புரத்தில் ஏற்பட்ட புரட்சியை அடக்கச் சென்றபோது, தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்த கல்யாணவர்மன், மந்திரிகளின் உதவியால் சந்திசேனனை நீக்கிவிட்டு அரசனாக ஆனான். இந்த நாடகத்தில் வரும் சந்திரசேனனை நீக்கிவிட்டு அரசனாக ஆனான். இந்த நாடகத்தில் வரும் சந்திரசேனனே முதலாம் சந்திரகுப்தர்

என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆனாலும் நிச்சயமமகக் கூறுவதற்குச் சான்றுகள் போதாது.

**5. தேவி சந்திரகுப்தம் :** இது ஓர் அரசியல் நாடகமாகும். இதனை எழுதியவர் விசாகதத்தராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த நாடகம் முழுவதும் கிடைக்கவில்லை. இதனை மேற்கோளாக பயன்படுத்திய பல ஆசிரியர்களின் நூல்களிலிருந்தே அறிய முடிகிறது. இதில் ராமகுப்தன், துர்வதேவி, இரண்டாம் சந்திரகுப்தன் முதலிய பெயர்கள் காணப்படுகிறது. மேலும் இரண்டாம் சந்திரகுப்தர், சாக்க மன்னர் உருத்திர சிம்மனை கொன்ற செய்தியும் காணப்படுகிறது.

**6. முத்திராட்சசம் :** இதனை எழுதியவர் விசாகதத்தர். இந்த நூலில் மௌரியப் பேரரசைப் பற்றியும், சாணக்கியரைப் பற்றியும் குறிப்புகள் கிடைக்கின்றன. குப்தப் பேரரசு ஏற்படுத்தப்பட்டது பற்றியும், அக்கால அரசியல், ராஜதந்திரம் பற்றிய ஏராளமான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அரசரது சமயம் பற்றியும், அக்கால சமயப் பொறை தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது. இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில்லுள்ள பலதரப்பட்ட மக்களான சாகர்கள், யவனர்கள், கிராதர்கள், காம்போசர்கள், பாலிகர்கள் ஆகியோரைப் பற்றிய செய்திகள் கிடைக்கிறது.

### II) கல்வெட்டுச் சான்றுகள் : (Inscriptions)

குப்தப் பேரரசைப் பற்றி அறிய கல்வெட்டுகள் பெரிதும் உதவியாக இருக்கின்றன. குப்தல் கால கல்வெட்டுகள் அனைத்தையும் திரட்டி, தொகுத்து புதுப்பித்தவர் டாக்டர் பிளிட் என்பவர் ஆவார். குப்த மன்னர்களின் போர்கள், வெற்றிகள், ஆட்சி முறை ஆகியவை பற்றி இந்த கல்வெட்டுகள் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

### 1. அலகாபாத் தூண் கல்வெட்டு :

இது சமுத்திர குப்தரால் உண்டாக்கப்பட்டது ஆகும். இது வட மொழியில் எழுதப்பட்டது. சமுத்திரகுப்தரைப் பற்றி அறிவதற்கு மிகச் சிறந்த நேரடிச் சான்றாகும். இது குப்த ஆட்சியின் பரப்பு, சமுத்திரகுப்தரின் பல்வேறு படையெடுப்புகள், பல இந்திய அரசர்களின் பெயர்கள் ஆகிய செய்திகளை அறிய முடிகிறது. இக் கல்வெட்டிலுள்ள குறிப்புகளை எழுதியவர் ஹரிசேனர் என்ற சமுத்திர குப்தரின் பிரதம

படைத்தளபதியாவார். இவர் ஓர் சிறந்த சமஸ்கிருத அறிஞர். கல்வெட்டில் ஒரு சில பகுதிகள் கவியாகவும், மற்றும் சில இடங்களில் உரைநடையாகவும் அமைக்கப் பட்டுள்ளது. இது ஓர் கல்லில் வடித்த காவியமாகும். வின்சன்ட் ஸ்மித் என்பவர், ‘‘அலகாபாத் தூண் கல்வெட்டு சமுத்திரகுப்தனின் சாதனைகள் பற்றியும், அவன் காலத்தைப் பற்றியும் அறிவதற்கு மிகச் சிறந்த வரலாற்றுதவி புரியும் கல்வெட்டாகும்’’, என்று கூறுகிறார். ஒரு காலத்தில் கோசாம்பி என்ற இடத்திலிருந்தது தற்பொழுது இது அலகாபாத் கோட்டையில் உள்ளது.

**2. மேகரௌலி இரும்புத் தூண் :**

பியாஸ் நதிக்கரைப் பகுதியிலுள்ள ஒரு குன்றிலிருந்து எடுக்கப்பட்டு தற்சமயம் டில்லிக்கு அருகிலுள்ள மேகரௌலியில் வைக்கப்பட்டுள்ளது. இது ஓர் இரும்புத் தூண் கல்வெட்டு ஆகும். இதில் ‘சந்திரா’ என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இந்த சந்திரன் சிந்து நதியின் ஏழு முகத்துவாரத்தையும் வெற்றியுடன் கடந்து வக்கலிகரைத் தோற்கடித்து தனது படை வலிமையாலும் தொடர்ந்த முயற்சியாலும் நில உலகின் மீது ஆட்சியை ஏற்படுத்தினான்’’ என்று இத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள சந்திரன் யார்? ஒரு சிலர் முதலாம் சந்திரகுப்தன் என்றும், ஆனால் மற்ற அறிஞர்கள் இரண்டாம் சந்திரகுப்தன் என்றும் எண்ணுகின்றனர். இதற்குச் சான்றாக இரண்டாம் சந்திரகுப்தனின் நாணயங்களில் ‘சந்திரா’ என்று குறிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காண்பிக்கின்றனர். மற்றும் இரண்டாம் சந்திரகுப்தன் தன் ஆதிக்கத்தை மேற்கு கடல் வரை ஏற்படுத்தினான் என்பது திட்டமாக அறியப்படுவதால் அவனே இந்த சந்திரனாக இருக்கக்கூடும் என்று எண்ணுகின்றனர். ஆனால், இந்த ஒற்றுமைகளை நிரூபிக்க போதுமான சான்றுகள் இல்லை.

இவை தவிர உதயகிரிக்குகைக் கல்வெட்டு, மதுரா பாறைக் கல்வெட்டு, காஞ்சிப் பாறைக் கல்வெட்டு, கத்துவாப் பாறைக் கல்வெட்டு ஆகியவை இரண்டாம் சந்திரகுப்தனின் சமயக் கொள்கை பற்றிக் குறிப்பிடுகின்றன.

**III) முத்திரைகள் :**

குப்தர்களின் காலத்தைப் பற்றி அறிய முத்திரைகள் மிகவும் உதவி செய்கிறது. முஸபர்பூர் மாவட்டத்தில் உள்ள வைசாலியில் ஏராளமான முத்திரைகள் கண்டு

எடுக்கப்பட்டுள்ளன. இந்த முத்திரைகள் யாவும் குப்தர்கள் காலத்தைச் சார்ந்தவை. இந்த முத்திரைகள் மூலம் சிவில் இராணுவ அதிகாரிகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. இரண்டாம் சந்திரகுப்தரின் மனைவியான மகாதேவி துருவ சாபினி என்பவருடைய முத்திரை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இம் முத்திரையிலிருந்து துருவ சாபினி என்பவள் கோவிந்த குப்தனின் தாய் என்பதையும், கோவிந்தகுப்தன் தன் தந்தையான இரண்டாம் சந்திரகுப்தனின் காலத்தில் வைசாலியின் ஆளுநராகப் பணியாற்றினார் என்று அறியப்படுகிறது.

**IV) நாணயங்கள் (Coins) :**

குப்தர்கள் காலத்தில் குப்த அரசர்கள் செய்து வெளியிட்ட அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த தல நாணயங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. செம்பு, வெள்ளி, தங்கம் ஆகிய உலோகங்களால் இந்த நாணயங்கள் செய்யப்பட்டிருந்தன. குப்தர்கள் காலத்து நாணயங்களை ஆராய்ந்து வகைப்படுத்திய பெருமை J.ஆலன் என்பவரையே சாரும். சமுத்திரகுப்தரால் வெளியிடப்பட்ட நாணயங்களில் அவரது தந்தை முதலாம் சந்திரகுப்தரின் நாணயங்களை எட்டு வகையாகப் பிரித்து அறியலாம். அவைகளில் புலி உருவம் பதித்தவை, யாழ் உருவம் பதித்தவை, குதிரை உருவம் பதித்தவை, வேடன் உருவம் பதித்தவை ஆகியவை முக்கியமானது ஆகும். இந்த நாணயங்கள் யாவும் இந்திய முறைப்படியே அச்சிடப்பட்டுள்ளன. இந்த நாணயங்கள் கிடைக்கும் இடங்ககளக் கொண்டு குப்தப் பேரரசின் பரப்பளவை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், பேரரசர்களின் .விரு பெயர்களையும் அரசர்களின் கலை ஆர்வத்தையும், பேரரசின் பொருளாதார நிலையையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

**V) நினைவுச் சின்னங்கள் :**

குப்தர்கள் கால நினைவுச் சின்னங்கள் சிறந்த வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. அஜந்தா குகைகளில் காணப்படும் ஓவியங்கள் மூலம் குப்தர்கள் கால சமய, பொருளாதார சமூக நிலைகளை அறிந்து கொள்ள முடிகிறது. மதுரா, காசி, நாலந்தா முதலிய இடங்களில் உள்ள கட்டிடங்களும், கோயில்களும் குப்தர் கால கலைத்திறனை அறிவிக்கின்றன. குப்தர்கள் கால சிவன், துர்க்கை, விஷ்ணுவர்த்தமானர், புத்தர் ஆகியோரின் உருவச் சிலைகளும் ‘‘பாததம்’’ குகைச் சிற்பங்களும் குப்தர்கள் காலத்து பண்பாட்டு இயல்புகளை அறியப் பயன்படுகிறது.

**VI) சீனப் பயணிகளின் குறிப்புகள் :**

**1. பாகியானின் “போகோகி’’:** இரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில் இந்தியாவில் பயணம் செய்த சீன நாட்டு அறிஞன் பாகியானின் குறிப்புகள் குப்தர்கள் பற்றி அறிய மிகவும் உதவுகிறது. “போகோகி’’ என்ற பாகியானின் குறிப்புகள் சீன மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. போகோகி என்றால் “புத்தகத்தின் ஆவண குறிப்பு’’என்ற அர்த்தமாகும். இந்த நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதில் நம்ப முடியாத பல கருத்துக்கள் இடம் பெற்றிருந்தாலும் குப்தர்கள் கால சமூக, சமயம் பற்றிய செய்திகளை இக்குறிப்புகள் நமக்குத் தருகிறது.

**இத்சிங்கின் ஆவண குறிப்பு :** ஹர்ஷர் இறந்த பிறகு இந்தியாவிற்கு வந்த சீனப்பயணி “இத்சிங்’’ ஆவார். தான் இந்தியாவிற்கு வந்தபோது அழிந்துவிட்ட நிலையில் காணப்பட்ட ஒரு சீனக் கோயில் ஒன்றைக் கண்டதாகக் குறிப்பிடுகிறார். அந்தக் கோயில் ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு சீகுப்தனால் கட்டப்பட்டது என்று குறிப்பிடுகிறார். இதை வைத்து இத்சிங் கி.பி. 800–ல் இந்தியா வந்திருக்க வேண்டுமென்றும் அதற்கு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கிகிபி. 300–ல் சீகுப்தன் ஆட்சி செய்திருக்க வேண்டும் என்றம் அறிந்து கொள்ளலாம். மேற்கண்ட சான்றுகள் குப்தர்கள் காலத்தைப் பற்றி அறிய நமக்கு பெரிதும் உதவுகிறது.

## குப்த அரசர்கள்

**சீகுப்தன் (கி.பி. 240 – 280) :**

சீகுப்தன் எனப்படுபவன் குப்த வம்சத்தைத் தோற்றுவித்தவன் என்று கூறப்படுகிறது. இந்த சீகுப்தரைப் பற்றி இத்சிங் என்ற சீன யாத்திரிகர் குறிப்பிடுகிறார். சீகுப்தன் மகாராஜா என்ற பட்டத்தை உபயோகப் படுத்தியதிலிருந்து அவருடைய புகழ் தெரிகிறது.

**கடோத்கச குப்தன் (கி.பி. 280 – 310) :**

இவர் சீகுப்தரின் மகன் என்று சான்றுகளின் மூலம் அறியப்படுகிறது. ஆனால், சந்திரகுப்தனின் மகளான பிரபாவதி குப்தா இவரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது இவரே குப்த வம்சத்தைத் தோற்றுவித்தவர் என்று குறிப்பிடுகிறார். ஆனால், இவர் எந்தப் பகுதியை ஆண்டு வந்தார் என்று தெளிவாகத் தெரியவில்லை. கடோத்கசன்

தன்னை மகாராஜா என்றே அழைத்துக் கொண்டார். இவர் கி.பி. 310 வரை ஆண்டிருக்கக் கூடும் என்று தெரிகிறது.

**முதலாம் சந்திரகுப்தன் (கி.பி. 320 – 330) :**

குப்த மன்னர்களில் முதலாவது சிறந்த மன்னர் இவராவார். இவர் மகாராஜாதி ராஜா என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். இவர் குப்த சகாப்தத்தைத் தோற்றுவித்திருக்கக் கூடும். இவர் பழமை மிக்க ''லிச்சாவி'' மன்னர் குலத்து இளவரசியான குமார தேவியை மணந்து கொண்டதால் பெரும் புகழும் வலிமையும் பெற்றார். இந்த மண உறவின் விளைவாக பாடலிபுத்திரத்தின் அருகில் குறுநில மன்னராக இருந்தவர் தன்னுடைய ஆதிக்கத்தை அயோத்தியிலும், மகத்திலும், பிரயாகை வரையிலான கங்கைப் பகுதியிலும் ஏற்படுத்தினார். ''விச்சிகா'' என்பவர் எழுதிய ''கௌமோதி மஹோத்சவம்'' என்ற நூலில் குறிப்பிடப்படும் சந்திரசேனன் இவரே'' என்று கே.பி. ஜெயசுவால் என்பவர் குறிப்பிடுகிறார். மேலும், மேகரௌலி இரும்புத் தூணில் காணப்படும் சந்திரா என்பவரும் இவரே என்றும் சொல்லப்படுகிறது.

**சமுத்திரகுப்தர் (SAMUDRA GUPTA A.D. 330 – 380)**

முதலாம் சந்திரகுப்தர் இறந்த பின்னர் அவருடைய மகனான சமுத்திர குப்தர் பட்டத்திற்கு வந்தார். சுமார் நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்த சமுத்திர குப்தர் இந்திய வரலாற்றில் புகழ்ப்பெற்ற மன்னர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவரைப் பற்றி அறிவதற்கு அலாகாபாத் தூண் கல்வெட்டு அதிகமாகப் பயன்படுகிறது. அதில் சந்திரகுப்தரின் வெற்றிகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், மத்தியப் பிரதேசத்திலுள்ள எரான் செப்பேடு, கயை செப்பேடு, நாளந்தா செப்பேடு ஆகியவையும் இவரைப் பற்றிய செய்திகளைத் தருகிறது. மேலும், இவர் காலத்திய நாணயங்கள் மூலமாகவும் பல செய்திகளை அறிய முடிகிறது. சமுத்திரகுப்தர் அசோகருக்குப் பிறகு இந்தியா முழுவதையும் ஆண்ட ஒரு மாபெரும் அரசராகத் திகழ்கிறார்.

**அரியணை ஏறுதல் :**

சமுத்திரகுப்தர் முதலாம் சந்திரகுப்தனின் இளைய மகனாவார். ஒரு சிலர் முதலாம் சந்திரகுப்தருக்குப் பிறகு அவரது மூத்த மகன் கச்சர் என்பவர் பதவி ஏற்றதாக எண்ணுகின்றனர். ஆனால், சந்திரகுப்தர் சமுத்திரகுப்தரை அரசனாக தேர்ந்தெடுத்தார்

என்று கூறப்படுகிறது. தனது தம்பி அரியணை ஏறியதை விரும்பாத கச்சர் சமுத்திரகுப்தருக்கு எதிராக கலகம் செய்தார். இது எந்த அளவுக்கு உண்மை என்று கூறமுடியாது. ஆனால், சமுத்திரகுப்தர் பதவி ஏற்றபோது குழப்பம் நிலவியது என்பதும் அதனை அவர் அடக்கினார் என்பதும் உண்மை என்று தெரிய வருகிறது.

**சமுத்திரகுப்தரின் குண இயல்புகள் :**

அலகாபாத் தூண் கல்வெட்டு சமுத்திரகுப்தரை சிறந்த அரசனாகவும், கவியாகவும் சிறப்பிக்கின்றனது. அவரின் திறமையின் காரணமாகவே அரசனாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். இவர் எல்லா சாஸ்திரங்களையும் கற்றறிந்த நிபுணர். அறிவாற்றல், நல்லொழுக்கம், போா செய்யும் ஆற்றல், அறம் செய்தல் முதலிய சிறந்த பண்புகளைப் பெற்றிருந்தார். இவரது மாபெரும் வெற்றிகளின் காரணமாகவே வின்சென்ட் சுமித் சந்திரகுப்தரை ‘‘இந்திய நெப்போலியன்’’ என்று சிறப்பித்துக் கூறுகிறார். ஆனால், நெப்போலியனை விட சமுத்திரகுப்தர் புகழ் பெற்றவர். காரணம் நெப்போலியன் ‘‘நைல்’’ ‘‘வாட்டர்லு’’ போர்களில் தோல்வியடைந்தார். ஆனால், சமுத்திரகுப்தர் எந்தப் போரிலும் தோல்வியடையவில்லை.

**சமுத்திரகுப்தரின் படையெடுப்பு :**

**தென்னிந்தியப் படையெடுப்பு :**

1. கோசலத்தின் மகேந்திரன்
2. மகாகாந்தாரத்தின் வியாக்கிர ராசன்
3. கேரளாவின் மந்தராசன்
4. பிஸ்தாபுரத்தின் மகேந்திரகிரி
5. கோட்டுராவின் சுவாமிதத்தன்
6. ‘‘எறந்தபள்ளி’’யின் தம்மண்ணா
7. காஞ்சியின் விஷ்ணு கோபவன்
8. அவமுக்தாவின் நீலராஜன்
9. வெங்கியின் ஹஸ்திவர்மன்
10. பாலக்காவின் உக்கிரசேனன்
11. துவரஸ்திராவின் குபேரன்
12. குஸ்தாலபுரத்தன் தனஞ்சயன்

இந்த மன்னர்களைத் தோற்கடித்து அவர்களிடம் கப்பம் பெற்றுக் கொண்டு அவரவர்களின் அரசுகளை அவரவர்களிடமே ஒப்படைத்துவிட்டு தலைநகரம் திரும்பினார். சமுத்திர குப்தர் இவரது தென்னிந்திய வெற்றிகள் தர்மவிஜயம் என்று கூறப்படுகிறது. சமுத்திர குப்தரின் படை எழுச்சி தென்னிந்தியா முழுவதும் பரவியது.

**வட இந்தியப் படையெடுப்பு :**

சமுத்திரகுப்தன் வட இந்தியாவில் ஒன்பது மன்னர்களைத் தோற்கடித்தார் என்று அலகாபாத் கல்வெட்டு கூறுகிறது. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு :

1. வாக்காட மன்னர் உருத்திரதேவர்
2. உத்திரப்பிரதேசத்து சிற்றரசர் மடிலர்
3. நாக வம்சத்து மன்னர் நாகநந்தர்
4. மேற்கு வங்க அரசர் சந்திரவர்மர்
5. மதுராபுரி அரசர் கணபதி நாகர்
6. பத்மாவதி அரசர் நாகசேனர்
7. உத்திரப்பிரதேச சிற்றரசர் அர்ச்சுதர்
8. அஸாமின் மன்னர் பாலவர்மர்
9. நந்தன்

இந்த மன்னர்கள் அனைவரையும் வென்று அவர்களின் பகுதிகளை தன் பேரரசோடு இணைத்துக் கொண்டார். பல ஆரிய மன்னர்களையும் சமுத்திர குப்தர் அடியோடு அழித்ததாகக் கூறப்படுகிறது.

**மலை ஜாதியினரை அடக்குதல் :**

சமுத்திரகுப்தர் மலை ஜாதியினரான மாளவர்கள், அர்ஜுனாயாணர்கள், யெ.தேயர்கள், மாத்திரர்கள், அபிரர்கள், காக்கர்கள், பரிகர்கள், சனகானிகர்கள் ஆகியோர்களை அடக்கினார். அவர்கள் சமுத்திரகுப்தரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டார்கள்.

**எல்லைப்புற அரசுகளை அடக்குதல் :**

அலாகாபாத் கல்வெட்டின் படி சமுத்திரகுப்தரிடம் எல்லைப் புறத்திலிருந்த பல நாடுகளின் அரசர்கள் அடிபணிந்து பயமும் பரிசும் கொடுத்து அவரை கௌரவித்ததாக

அறியப்படுகிறது. அவைகள், சாமநத்தா, காமரூபம், நேபாளம், தேவகா, கார்த்தரிபூர் ஆகியவை ஆகும். இவர்கள் தவிர முருண்டர்கள், தேவிபுத்திரர்கள் ஆகிய அன்னியர்களும் இவரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு இந்தியா முழுவதையும் வெற்றி கண்ட சமுத்திரகுப்தரை ‘‘இந்திய நெப்போலியன்’’ என்று அழைப்பது பொருத்தமே.

**அசுவமேத யாகம் :**

பல வெற்றிகளைப் பெற்ற சமுத்திரகுப்தர் தன் வெற்றிகளைக் கொண்டாடுவதற்கும், பிராமணர்களக்கு பொருட்களை ஈகை செய்வதற்கும் அசுவமேத யாகம் செய்தார். இவர் வெளியிட்ட பல நாணயங்களில் குதிரை உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த நாணயத்தின் பின்பக்கத்தில் ‘‘அசுவமேத பராக்கிரமன்’’ என்ற சொல்லும் காணப்படுகிறது. எனவே சமுத்திரகுப்தரின் வெற்றிகளும் அவருடைய அசுவமேத யாகமும் அவர் புகழுக்கு முக்கியக் காரணங்களாகும்.

**இலங்கை – இந்திய உறவு :**

சமுத்திரகுப்தர் காலத்தில் இந்தியாவுடன் இலங்கை தொடர்பு கொண்டிருந்தது. அலகாபாத் தூண் கல்வெட்டில் சிங்கள மக்கள் தனக்கு விலை உயர்ந்த பொருட்களைப் பரிசாக அனுப்பியதாக சமுத்திரகுப்தர் குறிப்பிடுகிறார். மேலும் இலங்கை மன்னன் ஸ்ரீமேகவர்மன் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வரும் பௌத்த துறவிகள் தங்குவதற்கு ஒரு மடாலயம் கட்ட சமுத்திரகுப்தரின் அனுமதியைப் பெற்றார். அதன்படி போதிமரத்திற்கு வடக்கில் ஒரு பெரிய அழகிய மடாலயம் கட்டப்பட்டது.

**நாணயங்கள் :**

சமுத்திரகுப்தர் பல விதமான நாணயங்களை வெளியிட்டார். அவை எட்டு வகையாக பாகுபடுத்தப்பட்டிருக்கிறது. சமுத்திரகுப்தரின் உருவம், அம்பு, வில், வாள் ஆகியவையும் சமுத்திரகுப்த.ன் பெற்றோர்களின் உருவங்களும், இலட்சுமி தாமரையில் அமர்ந்திருக்கும் உருவமும், சமுத்திரகுப்தர் வீணை வாசிப்பது போன்ற உருவமும் நாணயங்களில் காணப்படுகிறது. நாணயங்கள் சமுத்திரகுப்தரின் பேரரசின்

எல்லையைக் கண்டுபிடிக்கப் பெரிதும் பயன்படுகிறது. ஆர்.சி.மஜூம்தார் என்பவர் சமுத்திரகுப்தரின் பேரரசு வட இந்தியா முழுவதும் ஒரிசா மற்றம் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளைக் கொண்டதாகவும், தெற்கே செங்கற்பட்டு வரை பரவியிருந்ததாகவும் கூறுகிறார். முகர்ஜி என்பவர் சமுத்திரகுப்தரின் பேரரசு வடக்கே இமயம் முதல் தெற்கே நர்மதை வரையிலும், கிழக்கே பிரம்மபுத்திரா நதியிலிருந்து மேற்கில் யமுனை மற்றும் சாம்பல் பகுதி வரையிலும் பரவி இருந்ததாகக் கூறுகிறார்.

**சமுத்திரகுப்தரின் பெருமை :**

குப்த அரசர்களிடையே மிகச் சிறந்தவராக சமுத்திரகுப்தர் கருதப்படுகிறார். இவரது வட இந்திய தென்னிந்திய வெற்றிகள் இவரது புகழை அதிகரிக்கிறது. சமுத்திரகுப்தர் ஒரு சிறந்த கவிஞர். இவரை ''கவிராஜ் சமுத்திரகுப்தர்'' என்று அழைத்தனர். சிறந்த கவிகளை இயற்றினார். மேலும், சிறந்த சங்கீத ஞானம் பெற்றவர். சமுத்திரகுப்தர் சிறந்த கற்றறிஞர்களின் நண்பராகவே இருந்தார். ஈகை குணத்தில் சிறந்தவர். ஏழைகள் மற்றும் தகுதியுடையோர் யாவருக்கும் தாராளமாக வாரி வழங்கினார். 'பொன்னையும், பொருளையும், ஆநிரையும் அள்ளிக் கொடுத்த வள்ளல்' என்று வைணவராக இருந்தாலும் மற்ற சமயங்களை அடக்கி ஒடுக்கவில்லை. எனவேதான் 'குப்த அரசை உண்மையில் நிறுவியவர் சமுத்திரகுப்தர்' என்று பேராசிரியர் சத்தியநாதய்யர் குறிப்பிடுகிறார்.

## இரண்டாம் சந்திரகுப்தர் (CHANDRAGUPTA II)
## (சந்திரகுப்த விக்கிரமாதித்தியா, கி.பி. 380 – 415)

சமுத்திரகுப்தருக்குப் பிறகு இராம குப்தர் என்பவர் பட்டத்திற்கு வந்தார் என்று சில இலக்கியச் சான்றுகளின்படி அறிகிறோம். இதனைப் பற்றி தேவி சந்திகுப்தத்தில் அறியலாம். அந்த நூல் ஆசிரியர் ராமகுப்தன் என்ன்வர் சாக்க அரசன் ஒருவனால் தோற்கடிக்கப்ட்டார் என்றும், தன் மக்கள் நலன் கருதி மனைவியை சாக்க அரசனுக்கு தானம் செய்ய முன்வந்தார் என்று கூறுகிறார். இதனை விரும்பாத இராமகப்தரின் சகோதரன் சந்திரகுப்தர் மாறுவேடம் பூண்டு அந்த சாக்க அரசனைக் கொன்று அரச பதவி எய்தினார் என்றும் கூறுகிறார். அராபிய நூல் ஒன்றிலும் இச்சம்பவம் குறிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு டாக்டர் அல்டேகர் 'சமுத்திரகுப்தருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் இராமகுப்தரே' என்று கூறுகிறார்.

ஆனால், இதனை வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அக்கால ஆவணங்களிலோ, கல்வெட்டுக்களிலோ, நாணயங்களிலோ, மரபு வழியிலோ இராமகுப்தனின் பெயர் காணப்படவில்லை. எனவே சமுத்திரகுப்தருக்குப் பிறகு இரண்டாம் சந்திரகுப்தரே பட்டமேற்றார் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

**சான்றுகள் :**

இரண்டாம் சந்திரகுப்தரைப் பற்றி அறிந்து கொள்ள, மதுரா கல்வெட்டுகள், நாணயங்கள், சீன யாத்ரீகர் பாகியானின் குறிப்புகள், உதயகிரி கல்வெட்டு மேகவல்லிக் கல்வெட்டு ஆகியவைகள் உதவுகின்றன. இவரை பரம்பரை விக்கிரமாதித்தன் என்று கருதுவோரும் உண்டு. இவரது திறமையைக் கருதியே இவரை சமுத்திர குப்தர் அரச பதவிக்குத் தேர்ந்தெடுத்ததாகத் தெரிகிறது.

**இரண்டாம் சந்திரகுப்தரின் வெற்றிகள் :**

**1. மேற்கு இந்தியாவை வெல்லுதல் :**

இரண்டாம் சந்திரகுப்தர் வீரமும், விவேகமும் படை வலிமையும் உடையவர். போர் செய்வதில் ஆர்வம் மிக்கவராகக் காணப்பட்டார். இவர் தனது நாட்டை அரபிக் கடல் பிரிவுபடுத்தினார். கத்தியவார் என்ற மேற்கு பகுதியில் இருந்த மேலைச் சத்ரபர்களைத் தோற்கடித்தார். உருத்திர சிம்மன் தோற்கடிக்கப்பட்டார். இதன் விளைவாக மேற்கு இந்திதிா முழுவதும் அவர் ஆதிக்கத்திற்குட்பட்டது. பின் மாளவம் கைப்பற்றப்ட்டது. இவ் வெற்றிகளின் விளைவாக தன்னை 'விக்கிரராதித்தன்' என்று அழைத்துக் கொண்டார். இவர் அசுவவேத யாகம் ஒன்றைச் செய்தார்.

பின்னர் புரோச், சோப்ரா போன்ற துறைமுகப் பட்டிணங்கள் பிடிக்கப்பட்டது. உஜ்ஜயினி நகரமும் கைப்பற்றப்பட்டது. இந்தத் துறைமுகப் பட்டிணங்கள் மூலம் மேற்கு நாடுகளுடன் வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. குப்தப் பேரரசின் வளம் பெருகியது. தனது வெற்றிப் பெருமிதத்தால் எத்தகைய தடையுமின்றி ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். மேலும் இவர் சாக மன்னரான மூன்றாம் உருத்திரசிம்மனைத் தோற்கடித்து மேற்கு சத்ரபர்ரின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்தார். இதனால் சாகாரி என்ற சிறப்பு பெயர் பெற்றார். இந்த வெற்றியால் மேற்கு கடற்கரை துறைமுகங்கள் கிடைத்தன.

**2. வாக்காடகர்களுடன் திருமண உறவு :**

மேலைச் சத்ரபர்களைத் தோற்கடிக்கும் முன்பு பண்டேல் கண்ட் பகுதியை ஆட்சி செய்து வந்த வாக்காடக மன்னனுடன் நட்பு கொண்டார் இரண்டாம் சந்திரகுப்தர். தனது மகளான பிரபாவதி தேவியை வாக்காட மன்னன் இரண்டாம் உருத்திர சேனருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். இந்த மண உறவின் மூலம் தனது வலிமையை அதிகப்படுத்திக் கொண்டார். உருத்திரசேனரின் மறைக்குப் பின் பிரபாவதி தேவி வாக்காடக அரசின் தலைவியாக இருந்து ஆட்சி நடத்தி வந்தார். குப்த வாக்காடகர்களின் நட்பு மேலைச் சத்ரபர்களின் தோல்விக்கு முக்கியக் காரணமாகும்.

**3. முக்கிய நகரங்கள் :**

பாடலிபுத்திரம் குப்தர்களின் தலைநகரமாக இருந்த போதிலும் உஜ்ஜயினி நகரம் பெருஞ்சிறப்பு பெற்றது. மேலும், அயோத்தியும் சிறப்பு மிக்க நகரமாக விளங்கியது.

**4. பாகியான்**

சீன யாத்ரீகரான பாகியான் இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் நில மார்க்கமாக இந்தியா வந்து கடல் மார்க்கமாக தன் நாடு சென்றார். சுமார் ஒன்பது ஆண்டுகள் இந்தியாவில் தங்கினார். அதில் ஆறு ஆண்டுகள் குப்தப் பேரரசில் இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சியின் போது தங்கினார். புத்த ஏடுகளைச் சேர்க்கவும், அவைககள நூல்களாக எழுதி தன் நாடு கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே அவர் எண்ணம். தனது குறிப்பில் கங்கைச் சமவெளியை வர்ணித்துள்ளார். புத்த மதம் தழைத்த இடங்களையும் அது குன்றிப் போன இடங்களையும் குறிப்பிடுகிறார். அயோத்தி, கபிலவஸ்து, காசி, புத்தகயா, பாடலிபுத்திரம் ஆகிய இடங்களுக்குச் சென்றார். தனது பயணத்தில் சுமார் முப்பது தேசங்களைக் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

**இரண்டாம் சந்திரகுப்தரின் பெருமை :**

தனது தந்தை சமுத்திரகுப்தர் தொடங்கிய செயற்கரிய செயலைச் செய்து முடிப்பதில் வெற்றி கண்டார்ர் தந்தை உருவாக்கிய பேரரசை வலிமையையும் தின்மையும் கொண்டதாகச் செய்தார். இவர் வீர மகனாகவும், காவியத் தலைவனாகவும் மக்களால் போற்றப்பட்டார். விக்ரமாதித்தர், பரமபாகவதர், மகாராஜாதி ராஜா, தேவகுப்தர், தேவராஜர் போன்ற பட்டங்களைப் பெற்றிருந்தார்.

இவர் ஓர் வைணவராக இருந்தாலும், பிற மதங்களையும் ஆதரித்தார். இலக்கியத்தற்கும் கலைக்கும் அளித்த ஆதரவினால் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றார். ‘‘இரண்டாம் சந்திரகுப்தரைப் போல சிறப்பாக எவரும் ஆட்சி செய்யவில்லை’’ என்ற வின்செண்ட் ஸ்மித் புகழுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

## முதலாம் குமாரகுப்தர் (KUMARA GUPTHA – I, கி.பி. 415 – 455)

இரண்டாம் சந்திரகுப்தருக்குப் பிறகு அவரது மகன் குமாரகுப்தர் பட்டத்திற்கு வந்தார். குப்த பேரரசு அப்போது புகழின் உச்சக்கட்டத்தல் இருந்தது. போர்க்களம் பல புகுந்து வெற்றிகள் பெறாவிட்டாலும் தனது தந்தையிடமிருந்து பெற்ற பேரரசை நல்ல முறையில் பாதுகாத்தார் என்பதில் ஐயமில்லை. இவர் காலத்தில் பேரரசு பல துறைகளிலும் முன்னேற்றம் பெற்றது. பேரரசில் அமைதி நிலவியது. செல்வம் பெருகியது. இவரது நாற்பது ஆண்டுகால ஆட்சியில் நிர்வாகம் செவ்வனே நடைபெற்றது. முதலாம் குமாரகுப்தரைப் பற்றி பில்சாத் பட்டயத்திலிருந்து அறியலாம். இவர் சிம்ம மகேந்திரன், அசுவ மகேந்திரன், மகேந்திரசிம்மன், மகேந்திர ஆதித்தன் போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார்.

### குமாரகுப்தரின் நாணயங்கள் :

குமாரகுப்தர் பல நாணயங்களை வெளியிட்டார். இவர் அசுவமேத யாகம் நடத்தினார் என்பதை இவர் வெளியிட்ட நாணயங்கள் மூலமாக அறிய முடிகிறது. தங்க நாணயங்களை வெளியிட்டார். அதில் ஒரு பக்கம் கார்த்திகேயக் கடவுள் மயிலின் மீது அமர்ந்த கோலமும், மறுபக்கத்தில் மனனர் மயிலுக்கு உணபூட்டுவது போன்ற தோற்றமும் காணப்படுகிறது. இவரது வெள்ளி நாணயங்களில் பருந்துக்கு பதில் மயில் உருவத்தை அச்சிட்டார்.

குமாரகுப்தரின் நாணயங்களில் வில்லாளன், வாளாளன், பரிவேள்வி, குதிரைவீரன், புலிக்குத்தி, மயில், யானைப்பாகன் முதலிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவரது செப்பு நாணயங்களும், வெள்ளி நாணயங்களும் மேற்கிந்தயப் பகுதியில் காணப்படுகின்றன. சதாரா மாவட்டத்தல் மட்டும் இவரால் வெளியிடப்பட்ட **1395** நாணயங்கள் கிடைத்துள்ளன. இவரால் வெளியிடப்பட்ட நாணயங்கள் பரந்து காணப்படும் பரப்பைக் கொண்டு இவரது பேரரசின் பரப்பை

அறியலாம். குப்த பேரரசை இவர் மேலும் பிரிவடையச் செய்திருக்கலாம் என்று வரலாற்றாசிரியர் வின்சன்ட் ஸ்மித் கருதுகிறார்.

**குமார குப்தரின் படையெடுப்புகள் :**

நமக்கு கிடைத்துள்ள பல்வேறு கல்வெட்டுகளும் குமாரகுப்தரின் ஆட்சியின் இறுதியில் நடபெற்ற பல்வேறு படையெடுப்புகளைப் பற்றி குறிப்பிடுகின்றன. குப்தப் பேரரசின் மீது படையெடுத்த அன்னியர்கள் யார் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. பிளீட் என்ற ஆசிரியர் புஷ்யமித்திரர்களாக இருக்க வேண்டும் என்று கருதுகிறார். நர்மதைக்கு அருகிலுள்ள மேகலா நாட்டை ஆண்ட புஷ்யமித்திரர்கள் படை பலமும், பணபலமும் மிக்கவர்கள். இந்த புஷ்யமித்திரர்கள் குமாரகுப்தனின் காலத்தில் மகத நாட்டின் மீது படையெடுத்தனர். இந்த படையெடுப்பைப் பற்றி வாக்காடக அரசன் இரண்டாம் பிரிதிவி சேரனின் பாலகாட் பட்டயமும் ஸ்கந்த குப்தரின் ஜூனகாட் கல்வெட்டும் குறிப்பிட்டுள்ளன.

இந்த பகைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற இளவரசர் ஸ்கந்த குப்தர் போர்க்களம் புகுந்தார். போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஓர் இரவு முழுவதும் இளவரசர் ஸ்கந்தகுப்தர் வெறுந்தரயில் அவர் படுத்திருந்ததாக கல்வெட்டு ஒன்று கூறுகிறது. பெருந்துன்பங்களுக்கிடையில் ஸ்கந்தகுப்தர் பகைவர்களுடன் போராடி வெற்றி பெற்றார். இதனால் அவர் புகழ் உயர்ந்தது. இவை தவிர நர்மதைக்கப்பால் உள்ள நாடுகளையும் வெல்ல முயன்றதால் வியாக்கிரபால பராக்கிரமன் என்ற விருதுப் பெயர் பெற்றார்.

**குமாரகுப்தரின் சமயக் கொள்கை :**

குமாரகப்தரது ஆட்சி குப்த மன்னர்களின் சமயப் பண்பாட்டு சகாப்தத்தின் உச்ச நிலையைக் காட்டுகிறது. குமார குப்தர் கார்த்திகேயன் என்ற புதிய கடவுளை வழிபட்டார். ஆயினும், விஷ்ணு, சிவன், சக்தி, சூரியன் போன்ற பிராமணீய தெய்வங்களை வணங்கும் வழக்கத்தை விடவில்லை. குமாரகுப்தர் பிற சமயத்தவர்களையும் ஆதரித்தார் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. இவர் பௌத்த, சமண சமயத்தை ஆதரித்தார். புத்தரது சிலையையும், பர்சவநாதரது சிலையையும்

நிறுவுவதற்கு ஏற்பாடு செய்தார். அற நிலையங்களுக்கும் கோவில்களுக்கும் நன்கொடைகள் வழங்கினார்.

பொதுவாக குமாரகுப்தரின் கட்சிக் காலம் படிப்பதற்கு ஆர்வமும், முக்கியத்துவமும் அற்றதாகக் காணப்படுகிறது. ஆனால், உண்மையில் அவரது குணநலன்களையும், சாதனைகளையும் மதிப்பிடும்போது அவரது சாதனைகள் தெரிய வருகிறது. ஆளுநர்கள், திரை செலுத்துவோர் பற்றிய ஆவணங்கள் அதிக அளவில் நமக்கு கிடைத்துள்ளது. இவை குமாரகுப்தரின் நிர்வாகத் திறமையினையும் நிலையான அரசையும் வெளிப்படுத்துகின்றன. குமாரகுப்தரின் ஆட்சிக் காலத்தில் பட்டு நெசவாளர்கள் இவரது ஆட்சிப் பரப்பில் குடியேறி வளம் பெற்றனர். குமாரகுப்தரது ஆட்சி வளமானது, வலிமையானது என்று பேராசிரியர் சத்தியராதய்யர் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமே ஆகும்.

## ஸ்கந்த குப்தர் (SKANDA GUPTA, கி.பி. 455 – 467)

குமாரகுப்தருக்குப் பிறகு அவரது மகன் ஸ்கந்தகுப்தர் அரியணையில் ஏறினார். ஆனால், குமாரகுப்தரின் இன்னொரு மனைவி ஆனந்ததேவி என்பவருக்குப் பிறந்த புருகுப்தர் என்பவரும் அரியணைக்குப் போட்டியிட்டதாகவும் இதனால் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், அரியணைக்கு உரிமை கோரியவர்களை வென்று ஆட்சியில் அமர்ந்தார் ஸ்கந்தகுப்தர். ஸ்கந்தகுப்தரின் ஆட்சி அமைதி நிறைந்ததாக இல்லை. ஆட்சிக்கு வந்தவுடன் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அந்நியர்களிடமிருந்தும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஹூணர்களின் படையெடுப்பையும் அவர் சமாளிக்க வேண்டியிருந்தது.

### ஸ்கந்தகுப்தரின் வெற்றிகள் :

### 1) புஷ்யமித்திரர்களுடன் போர் :

ஸ்கந்தகுப்தர் இளவரசனாக இருக்கும்போதே தனது தந்தையின் ஆட்சியின் இறுதியில் மகத நாட்டின் மீது படையெடுத்த புஷ்யமித்திரர்களை வரட்டியடித்தார். இதனை காசிப்பூர் மாவட்டத்திலுள்ள சையத்பூருக்கு வட கிழக்கே ஐந்து மைல் தொலைவில் பிதாரி என்ற ஊரிலுள்ள சந்தனக் கல்லால் செய்யப்பட்ட தூண் கல்வெட்டிலிருந்து அறியலாம். எதிரிகளைக் கொன்று குவித்துவிட்டு வெற்றியோடு

திரும்பியபோது இவரது தாய் தேவகி மகிழ்ச்சியால் கண்ணீர் வடித்தாராம். இந்த வெற்றியின் மூலம் மகத நாட்டைக் காத்ததுடன் மட்டுமல்லாது தனது தந்தையின் பெருமையையும் செல்வாக்கையும் நிலைநிறுத்தினார்.

**2) ஹுணர்களுடன் போர் :**

மத்திய ஆசியாவைச் சேர்ந்த நாடோடிகளான ஹுணர்கள் ஐரோப்பாவையும் ஆசியாவையும் கதிகலங்க வைத்தார்கள். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அவர்களில் ஒரு பகுதியினர் ஆக்ஸஸ் பள்ளத்தாக்கைக் கைப்பற்றி பாரசீகத்தையும் இந்தியாவையும் அச்சுறுத்தி வந்தனர். ஸ்கந்த குப்தர் இந்த ஹுணர்களுடன் போரிட்டு வென்றதாகக் கூறப்படுகிறது. ஜுனகாத் கல்வெட்டில் ஸ்கந்த குப்தர் மிலேச்சர்களுடன் போரிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த மிலேச்சர்கள் ஹுணர்களாக இருக்கலாம்.

ஹுணர்கள் காந்தாரத்தைக் கைப்பற்றி மிகவும் நாகரிகமற்ற முறையில் ஆட்சி செய்து வந்தனர். இந்தியாவின் பல பாகங்களில் ஊடுருவி குப்தப் பேரரசுக்குப் பெருந்தொல்லை கொடுத்தனர். ஸ்கந்த குப்தர் கி.பி. 465–ல் படையெடுத்து வந்த ஹுணர்களுடன் போரிட்டு வெற்றியடைந்தார். இந்த நாகரிகமற்ற ஹுணர்களைத் தோற்கடித்து இந்தியாவுக்கு பாதுகாப்பு அளித்த பெருமை ஸ்கந்தகுப்தருக்குக் கிடைத்தது. ஆனால், இந்தப் போரினால் கட்டுக்குலையாத மகதநாடு கட்டுக் குலைந்துவிட்டது. அரசரின் பலம் குறைந்துவிட்டது. தொழிலும், வாணிகமும், வேளாண்மையும் சீர்குலைந்தன. இதனால் ஸ்கந்த குப்தர் தனது முன்னோர்களைப் போலல்லாது எடையில் குறைந்த தங்க நாணயங்களையே வெளியிட்டார்.

**ஸ்கந்தகுப்தரின் பொதுப்பணி :**

ஸ்கந்தகுப்தர் நாட்டு மக்கள் நலன் கருதி பல பொதுப்பணிகளை மேற்கொண்டார். நீர்ப் பாசனத்தற்காகப் பல குளங்கள் வெட்டினார். கீர்நாரிலுள்ள புகழ்ப் பெற்ற சுதர்சனா ஏரிக்கு கரையமைத்தவர் சந்திரகுப்த மௌரியர் ஆவார். ஸ்கந்தகுப்தர் காலத்தில் கி.பி. 455–ல் இந்த ஏரியின் கரைகள் பழுதடைந்தது. இதனை பழுது பார்க்க ஸ்கந்தகுப்தர் உத்திரவிட்டார். .கர்நார் நகரத் தலைவர் சக்கரபாலிதா என்பவர்

உடனடியாக நடவடிக்கை எடுத்தார். இரண்டு மாதங்களில் முழுவதுமாக கீர்நார் ஏரி பழுது பார்க்கப்பட்டது. இச் செய்தியை கீர்நார் கல்வெட்டு மூலம் அறியலாம்.

**ஸ்கந்தகுப்தரின் பெருமை :**

புஷ்யமித்திரர்களையும் ஹுணர்களையும் வெற்றி கண்ட ஸ்கந்தகுப்தர் திக்விஜயம் மேற்கொண்டிருக்க வேண்டும் என்று ஆர்.கே.முகர்ஜி கருதுகிறார். இவர் தனது நாட்டிலுள்ள பல புத்திகளுக்கும் ஆளுநர்களை நியமித்து சிறப்புற ஆண்டார். இவருடைய ஆட்சி முறையும் இவரால் அமர்த்தப்பட்ட ஆளுநர்களின் திறமையும், குப்தப் பேரரசு தனது கட்டுக்கோப்பிலிருந்து அழியாமல் காத்தன. ஸ்க்ந்தகுப்தர் ஒரு விஷ்ணு பக்தர். ஆனாலும், தனது முன்னோர்களைப் போலவே சமய பொறைக் கொள்கையைப் பின்பற்றினார். எனவே, இவரது ஆட்சியின் கீழ் நாடெங்கும் அமைதியும், பாதுகாப்பும் நிலவியது.

ஸ்கந்தகுப்தர் பன்னிரெண்டு ஆண்டு காலமே ஆட்சி புரிந்தார். இவர் காலத்தில் குப்தப் பேரரசில் வீழ்ச்சி ஏற்படுவது தடுக்கப்பட்டது. காரணம் ஸ்கந்த கப்தரின் காலத்திற்குப் பிறகு இநத் ஹுணர்களால்தான் குப்தப் பேரரசு அழிவுற்று இந்திய வரலாற்றில் திருப்பம் ஏற்பட்டது. ஸ்கந்த பேரரசு அழிவுற்று இந்திய வரலாற்றில் திருப்பம் ஏற்பட்டது. ஸ்கந்தகுப்தருக்குப் பிறகு புரு குப்தர் (467 – 473), இரண்டாம் குமார குப்தர் (473 – 476), புத்த குப்தர் (477 – 495) ஆகியோர் ஆட்சி புரிந்தனர். இவர்கள் திறமையற்றவர்கள். இவர்களுக்குப் பிறகும் பல குப்த மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்கள் காலத்தில்தான் குப்தப் பேரரசு நலிந்து சிதைவுற்றது.

முகலாயப் பேரரசர்களுள் ஔரங்கசீப் என்பவரே பேரரசர் பட்டியலில் இறுதியாக ஆட்சி புரிந்தவர் என்பதைப் போல குப்தப் பேரரசர்களில் கடைசி பேரரசர் ஸ்கந்த குப்தரே ஆவார் என்று வின்ஸ்டன் ஸ்மித் குறிப்பிடுவது முற்றிலும் உண்மையே!

**குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்**

**1. ஹுணர்களின் படையெடுப்பு :**

இரண்டாம் சந்திரகுப்தருக்குப் பின் அவர் மகன் குமாரகுப்தன் பட்டத்திற்கு வந்தான். அவனது நீண்ட கால ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் குப்தப் பேரரசு

கொடூரமான ஹுணர்களின் படையெடுப்பிற்குள்ளாக்கியது. ஆனால், அவனது ஆற்றல் மிகுந்த மைந்தனும் பட்டத்து இளவரசனுமான ஸ்கந்தகுப்தன் ஹுணர்களை முறியடித்து விரட்டினான். ஹுணர்களின் தலைவன் தோராமானன் கி.பி. 500–ல் தனது ஆட்சியை மாளவத்தில் நிலை நாட்டினான். அவனது மகன் மிகிரகுலன் பாலாதித்திய குப்தனால் விரட்டியடிக்கப்பட்டான். இப்படி அடுக்கடுக்காக நடைபெற்ற ஹுணர்களின் கொடுஞ் செயல்கள் நாட்டினை சீர்குலையச் செய்தது. படையெடுப்பின் காரணமாக நாட்டின் செல்வம் குறைந்தது. ஹுணர்கள் உண்டாக்கிய சிக்கல்களைப் பின்வந்த குப்த அரசர்களால் தீர்க்க முடியவில்லை. இது குப்தப் பேரரசின் வீழ்ச்சியை துரிதப்படுத்தியது.

**2. கடைமூன்று குப்தர்களின் பௌத்த மதப்பற்று :**

கடைசி மூன்று குப்த மன்னர்கள் புத்த சமயத்தை ஆதரித்தனர். இச் செயலானது குப்த ஆட்சியின் அழிவுக்குக் காரணம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் புத்த மதம் சமாதானத்தை விரும்பும் மதம். பாலாதித்திய குப்தன் தன் தாயின் வேண்டுகோளுக்கிணங்கி சிறை செய்யப்பட்ட ஹுணர் தலைவன் மிகிரகுலனை விடுதலை செய்தார்.

**3. வாரிசுரிமைப் போர் :**

குப்த ஆட்சியில் மூத்த மகன் அரசு பொறுப்பை ஏற்றதை ஒரு சில மன்னர்கள் பின்பற்றினர். ஆனால், முதலாம் சந்திரகுப்தர் தனது இரண்டாவது மகனான சமுத்திரகுப்தரைத் தேர்ந்தெடுத்ததாகவும் இதனால் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டதையும் நாம் அறிவோம். அது போல இராமகுப்தனுக்கும் இரண்டாம் சந்திரகுப்தனுக்குமிடையே வாரிசுரிமைப் போர் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இப்படி வாரிசுரிமை திடீர் திடீர் என மாறியதால், குப்தப் பேரரசு வலிமையிழந்து அழிவதற்கு மூலகாரணமாக அமைந்தது.

**4. குப்த – வாக்காடகர்களின் நட்பு முறிவு :**

இரண்டாம் சந்திரகுப்தரின் மகளான பிரபாவதி வாக்காடக மன்னரான இரண்டாம் உருத்தினசேனருக்கு மணமுடிக்கப்பட்டு அதன் மூலம் இரு நாடுகட்கும் நட்பு வளர்ந்தது. இது குப்தப் பேரரசின் வலிமையைக் கூட்டியது. ஆனால், பின்னர் இந்த நட்பு முறிந்ததால் குப்த அரசின், வலிமை குன்றியது. அது வீழ்ச்சிக்கு இழுத்துச் சென்றது.

**5. குப்த ஆட்சியின் கீழ் இருந்த நாடுகள் சுயாட்சி அடைதல் :**

பேரரசு வலிமை இழந்ததால் பேரரசின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டிருந்த சிறிய நாடுகள் சுயாட்சி அடைந்தன. மாளவத்தல் யாசோதவர்மன் குப்தர் ஆட்சிக்கு எதிராக தன் சுதந்திர ஆட்சியை நிறுவினான். இது போலவே மைத்திரேயர்கள் வல்லாபியில் தங்கள் சுதந்திர ஆட்சியை நிறுவனர். கன்னோசியும், வங்காளமும் குப்த ஆட்சியைவிட்டு நீங்கியது. இக் காரணங்களால் குப்தர் ஆட்சி விழ்ச்சியடைந்தது.

**6. மோசமான நிதிநிலை :**

குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு மோசமான நிதிநிலை முக்கியக் காரணமாகும். பிற்கால குப்தப் பேரரசர்கள் வரிவிதிப்புக் கொள்கைகய சரியானபடி வகுத்துக்கொள்ள முடியவில்லை. சமுத்திரகுப்தரும், இரண்டாம் சந்திரகுப்தரும் தங்க நாணயங்களை வெளியிட்டனர். ஆனால், அதே தரத்தினாலான தங்க நாணயங்களை பிற்கால குப்த மன்னர்கள் வெளியிட முடியவில்லை. செப்பு நாணயங்களையே வெளியிட்டனர். தங்கள் கஜானாவில் போதிய அளவு பணம் இல்லாததால் நிர்வாகச் சீர்கேடு ஏற்பட்டது. நிர்வாகச் செலவுகளுக்காகப் பணம் இல்லாத குப்த அரசு வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

**7. தவறான எல்லைப்புறக் கொள்கை :**

முற்கால குப்த மன்னர்கள் எல்லைப்புற நாடுகளுடன் நட்புறவு கொண்டு தங்கள் நிதிநிலயைப் பயன்படுத்திக் கொண்டார்கள். முதலாம் சந்திரகுப்தர் லிச்சாவிகளுடன் மணஉறவு ஏற்படுத்தினார். சமுத்திர குப்தரும் எல்லைப்புரத்தில் இருந்த அந்நிய வம்சத்தினருடன் நட்புறவுடன் இருந்தார். இரண்டாம் சந்திரகுப்தர் நாகர்கள், வாக்காடகர்கள், கடம்பர்களுடன் மண உறவு கொண்டார். இவைகள் இராஜதந்திர மிக்க நடவடிக்கைகளாகும். ஆனால், பிற்கால குப்த அரசர்கள் எல்லைப்புற நாடுகளுடன் நட்புறவுடன் நடக்கவில்லை. இது அவர்களது ராஜதந்திரமற்ற நடவடிக்கையாகும். எனவேதான் அந்நிநித் தாக்குதல் நடைபெற்றபோது எல்லைப்புற நாடுகளின் ஆதரவை குப்தர்களால் பெறமுடியவில்லை.

மேற்கண்ட பல காரணங்களால் குப்த பேரரசு வீழ்ச்சியடைந்தது. ஒரு பேரரசு வீழ்ச்சியடைவற்குரிய எல்லாக் காரணங்களும் குப்தப் பேரரசிலும் காணப்பட்டது என்று கூறுகிறார் டாக்டர் R.G. மஜிம்தார்.

## குப்தரின் காலம் பொற்காலம் (GOLDEN AGE OF GUPTAS)

குப்தர்களின் காலம் இந்திய வரலாற்றில் மிகச் சிறப்பாகக் கருதப்படுகிறது. இதனை ஓர் பொற்காலமாகவும், பண்டைய கிரீசின் பெரிக்ளீசின் காலத்துடன் ஒத்ததாகவும் கருதுகின்றனர். சிலர் இக் காலத்தைக் கலையின் மறுப்பிறப்புக் காலம் என்கின்றனர். குப்தர்கள் காலத்தில் சிறந்த அரசர்களான முதலாம் சந்திரகுப்தர், சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர் ஆகிய சிறந்த மன்னர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணமானவர்கள். அவர்கள் போர்த் திறமையில் மட்டுமின்றி நிர்வாகச் சீர்திருத்தங்கள், கலை நுணுக்கங்கள் ஆகியவற்றிலும் சிறந்து விளங்கினர். இக் காலத்தில் இந்து மதம் சிறப்புற்று விளங்கியது. எனவே இக்காலத்தை 'இந்து மறுமலர்ச்சிக் காலம்' என்று கூடக் கூறலாம். நாடெங்கிலும் சமுதாயத்தில் அமைதியும் செழிப்பும் நிலவியது.

### குப்த மன்னர்களின் நிர்வாகம் :

மிகவும் சிறப்பான அரசாட்சி குப்தர்கள் காலத்தில் நடைபெற்றது. மத்திய அரசின் தலைவர் மன்னரே. மக்கள் நலன் பேணுதலே அஅரது முக்கியக் கடமையாக இருந்தது. குப்த மன்னர்கள் சர்வாதிகாரிகளாக விளங்கவில்லை. மன்னர்களின் நிர்வாக இலக்கணத்தை நன்கு உணர்ந்தவர்களாகவும், மூத்தோர் சொற்படிக் கேட்டு நடப்பவர்களாகவும் காணப்பட்டார்கள். மன்னரின் மூத்த மகனே அரசுரிமையைப் பெறுவது என்ற சாதாரண நியதி இந்தியாவில் எல்லாக் காலத்திலும் பின்பற்றப்பட்டாலும் குப்த மன்னர்கள் பின்பற்றவில்லை. இவர்கள் தங்களுக்கு 'பரமேஸ்வரம்', 'மகா ராஜாதி ராஜா' போன்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர்.

பேரரசின் நிர்வாகம் அமைச்சர் குழுவின் உதவியுடன் நடத்தப்பட்டு வந்தது. இதில் பெரும்பாலும் இளவரசர்கள், அதிகாகள் செல்வந்தர்கள் ஆகியோர்களே இருந்தனர். நிதி அமைச்சர், சட்ட அமைச்சர், அயல்நாட்டு அமைச்சர் போன்றோர் இருந்தனர். அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகள் அமாத்தியா என்றழைக்கப்பட்ட அலுவலரால் மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. சிவில் நிர்வாகத்திற்கென்று பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். மகாபிரத்திகாரர் என்ற வரவேற்பாளர், இராஜமத்தியர் என்ற ஆலோசகர், உகாரிகர் என்ற பிரதேச நகர அதிகாரிகள் இருந்தார்கள். இராணுவ நிர்வாகம் சேனாதிபதி, மகாசேனாதிபதி, தண்டநாயகர், சந்திவிக்ரர், கோப்தர்

போன்றோர்களால் கவனிக்கப்பட்டு வந்தது. நீதித்துறையை மகாதண்ட நாயகர், மகாக்ஷ படாலிகர் போன்றோர் மேற்பார்வையிட்டனர். கடுமையான தண்டனைகள் வழங்கப்படவில்லை.

குப்தப் பேரரசு உபரிகள் என்ற பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. மாநிலங்கள் மாவட்டங்களாகவும், மாவட்டங்கள் சிற்றூராகவும் பிரிக்கப்பட்டன. நகர ஆட்சியின் தலைவர் ''நகர ரட்சகர்'' என்று அழைக்கப்பட்டார். கிராமத்தின் தலைவர் 'கிராமிக்கா' எனப்பட்டார். கிராமத் தலைவருக்கு உதவியாக கணக்கர், எழுத்தர் ஆகியோர் இருந்தனர்.

இவ்வாறு குப்தர்களின் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்றது. தனிப்பட்டவர் வாழ்க்கையில் அரசினர் தலையீடு இல்லை. நிர்வாகம் மனிதாபிமானத்துடன் செயல்பட்டது. மக்களின் பொருளாதார சமய நல்வாழ்வில் நாட்டங்கொண்டு அரசாங்கம் செயல்பட்டது. மக்கள் பயமின்றி எங்கும் பயணம் செய்தனர். எனவே மக்கள் மகிழ்ச்சியுடனும், சுதந்திரத்துடனும், அமைதியான வாழ்க்கை வாழ்ந்தனர்.

**சமுதாய நிலை :**

குப்தர் கால சமுதாயம் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்ற நான்கு பிரிவைக் கொண்டிருந்தது. சூத்திரர்கள் சமூகத்தில் இழிநூதவர்களாகக் காணப்பட்டார்கள். பிராமணர்கள் சமுதாயத்தில் உயர்நிலை வகித்தார்கள். ஒரு சாதியினர் மற்றொரு சாதியினருடன் உறவு கொள்ளவில்லை. ''நாடு முழுவதிலும் எந்த உயிரினங்களும் உயிர்வதை செய்யப்படவில்லை. மது அருந்துதல் காணப்படவில்லை. வெங்காயம், பூண்டு யாரும் உண்பதில்லை'' என்று பாஹியான் கூறுகிறார். மேலும் சமுதாயத்தில் 'சண்டாளர்கள்' என்ற ஒரு பிரிவினர் மக்களிடமிருந்து தள்ளியே வசித்து வந்தனர். தீய செயல்களின் பிறப்பிடமாகவே இவர்கள் காணப்பட்டார்கள். நாட்டில் பன்றிகள் காணப்படவில்லை. கசாப்புக் கடைகளோ, மதுபானக் கடைகளோ காணப்படவில்லை என்றும் கூறுகிறார் பாஹியான். குப்தர் ஆட்சியின் போது 'பலதார முறை' நடைமுறையிலிருந்தது. திருமணங்கள் பெரும்பாலும் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டன. ஆண்களும் பெண்களும் திருமண வயதை அடையுமுன்பே திருமணம் செய்து கொண்டனர்.

சமுதாயத்தில் பெண்கள் முக்கிய இடம் வகித்தனர். அவர்கள் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்று விளங்கினர். அதே சமயம் பெண்கள் மிகவும் கடுமையாக அடக்கி வைக்கப்பட்டனர் என்றும் தெரிகிறது. இருகரம் கூப்பி பெண்கள் தங்கள் கணவரை வணங்க வேண்டும் !

நகரங்களில் வாழ்நூது வந்த வசதிபடைத்த மக்கள் மிகவும் ஈகைக் குணம் கொண்டவர்களாகவும், மற்றவர் துன்பப்படும் போது உதவி செய்யும் குணம் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். மாவட்ட தலைநகரங்களில் இவர்கள் தர்ம ஆஸ்பத்திரிகளை நிறுவினார்கள். உதவியற்ற ஏழை நோயாளிகள், அனாதைகள், உடல் ஊனமுற்றவர்கள் அங்கு வந்து மருத்துவ சிகிக்சை பெற்றுச் சென்றனர். மருத்துவர்கள் மிகவும் கவனமுடனும், இரக்கத்துடனும் சிகிக்சை அளித்தனர்! இச்செய்திகளையும் பாகியானே தருகிறார்.

**பொருளாதார நிலை :**

குப்தப் பேரரசில் பொருளாதார வளர்ச்சியும் காணப்பட்டது. பேரரசின் செல்வச் செழிப்பிற்கு நாட்டில் நடந்துவந்த வர்த்தகமே காரணம். முக்கியமாக அயல்நாட்டு வாணிகம் சிறப்படைந்தது. ரோம், கம்போடியா, இலங்கை, சீனா, அபிசீனியா போன்ற நாடுகளுடன் வாணிப உறவை ஏற்படுத்தியிருந்தனர். இதனால் மக்கள் வளத்தோடு வாழ்ந்தனர்.

விவசாயமே மக்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. நெல், கோதுமை, பார்லி, பட்டாணி, கரும்பு முதலியவை பயிரிடப்பட்டன. மதுரா நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்ற இடமாக இருந்தது. தங்கம், வெள்ளி ஆகியவை உள்நாட்டிலிருந்தே கிடைத்தன. செம்பு, ஈயம் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு கூட்டு வணிகக் கழகங்களும், தொழிற் கழகங்களும் ஏற்படுத்தப்பட்டது. நாட்டில் ‘உபரிகா’ என்ற நிலவரியும் ‘பாகா’ என்ற வருமானவரியும் வசூலிக்கப்பட்டன. இவ்வாறு குப்த சமுதாயத்தில் ‘மக்கள் செழிப்புடனும், மகிழ்ச்சியுடனும்’ வாழ்ந்து வந்தனர்.

**இந்துமத மறுமலர்ச்சி : Hindu renaissance**

குப்தர்கள் காலத்தில் இந்து சமயம் மறுமலர்ச்சியடைந்தது. குப்த மன்னர்கள் இந்து மதத்தை ஆதரித்தனர். இதனால் அது பழைய சிறப்பை அடைந்தது. இந்து சமய விழாக்கள் கொண்டாடப்பட்டன. இந்து சமயக் கடவுளர்ககள வணங்குவதற்கென ஆலயங்கள் பல கட்டப்பட்டன. விஷ்ணுவின் பத்து அவதாரங்கள் முக்கிய இடம் பெற்றன. விஷ்ணுவுக்கு பல கோவில்கள் கட்டப்பட்டது. குப்தர்கள் காலத்தில் சிவ வழிபாடு சிறப்படைந்தது. சிவனுக்கும் சக்திக்கும் பல கோவில்கள் கட்டி அவர்களை வழிபட்டனர். கோவில்களில் விழா எடுப்பதும், அப்போது சமயக் கதைகளை பஜனை மூலம் மக்களுக்குத் தெரிவிப்பதும் வழக்கமானது. இந்த விழாக்களில் மக்கள் எந்த வேறுபாடுமின்றி சமய உணர்ச்சியின் அடிப்படையில் ஒன்றிணைந்தார்கள். இந்த கோவில்கட்கு மானியமும், விழாகட்குப் பொருளுதவியும், புனிதப் பயணிகட்கு உணவும், உறைவிடமும் அரசர்களே கொடுத்து உதவினர். இவ்வாறு குப்தர் காலத்தில் சமயமும் சமயத்தோடு தொடர்புள்ள விழாக்களும் நோன்புகளும், மக்களின் அன்றாட வாழ்வில் இன்றியமையாத சாதனங்களாகிவிட்டன.

என்றாலும் குப்த ஆட்சியின் காலத்தில் எல்லா மதங்களுக்கும் ஆதரவு கிடைத்தது. இந்து சமயத்தைப் போலவே வழிபாட்டு முறையையும், மற்ற விழாக்களையும் புத்த மதம் பின்பற்றியதால் குப்த அரசர்கள் அந்த சமயத்திற்கு ஆதரவும் அந்த சமய ஆலயங்களுக்கும், மடாலயங்கட்கும் மானியமும் அளித்தார்கள்.

**இலக்கிய வளர்ச்சி : Literature**

'குப்தர்களின் காலம் இலக்கியத்தின் பொற்காலம்' எனக் கருதப்படுகிறது. ஸ்மித் என்பவர் குப்தர் காலத்து இலக்கிய வளர்ச்சியை ராணி எலிசபெத் கால இலக்கிய வளர்ச்சியோடு ஒப்பிடுகிறார். குப்தர்கள் காலத்தில் சமஸ்கிருத மொழி பெரிதும் வளர்ச்சியடைந்தது. அந்த மொழியில் ஏற்றமிகு பல இலக்கியங்கள் தோன்றின. அது ஆட்சி மொழியாகவும், சமயப் பண்பாட்டு மொழியாகவும் புத்துயிர் பெற்று மலர்ந்து காணப்பட்டது. இந்த மொழியில் பூத்த இலக்கியங்களை இனி காணலாம்.

a) நவரத்தினங்கள் என்றழைக்கப்பட்ட தலைசிறந்த ஒன்பது அவைகளைப் புலவர்கள் குப்தர்கள் காலத்து இலக்கிய வளர்ச்சிப் பணியை மேற்கொண்டனர்.

அவர்களில் தலைசிறந்தவர் காளிதாசர் ஆவார். மகாகவி காளிதாசர் குப்தர் காலத்தை அலங்கரித்தார். இவர் ஒரு சிவ பக்தர். சமஸ்கிருத இலக்கியத்தின் சிறந்த கவிஞராகவும், நாடக ஆசிரியராகவும் கருதப்படுகிறார். இவர் எழுதிய சாகுந்தலம் என்ற நாடகம் உலகின் சிறந்த நூறு புத்தகங்களின் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. இவர் எழுதிய பிற நூல்கள் வருமாறு : மாளவிகாக்னிமித்திரம், விக்ரம ஊர்வசியும், இரகுவம்ஸம், குமாரசம்பவம், ருதுசம்சாரம், மேகதூதம் ஆகியவை ஆகும்.

b) சூத்திரகன் என்பவர் மிருச்சடிகா (மண்ணியல் சிறு தேர்) என்ற நாடக நூலை இயற்றினார். இந்த நாடகத்தின் கதாநாயகன் சாருதத்தன் என்பவராவார். பணக்கார பிராமணரான சாருதத்தன், வசநத்சேனா என்ற பெண்ணைக் காதலிப்பதையும், இதன் மூலம் காதலின் ஆழத்தையும் இந்த நூல் விவரிக்கிறது. மேலு பல திடுக்கிடும் சம்பவங்களையும் சிரிக்க வைக்கும் காட்சிகளையும் கொண்டுள்ளது. இந்த நூலின் மூலம் அக்கால சமுதாய வாழ்க்கையை நாம் அறிய முடிகிறது.

c) விசாகதத்தர் என்பவர் முத்தி ராட்சசம் என்ற நாடக நூலை எழுதினார். இந்த நூலின் கதாநாயகன் கௌடில்யர் திறமையும் அரச பக்தியும் கொண்ட ஒரு அமைச்சரின் குணநலன்களுடன் காணப்படுகிறார். இந்த நாடகத்தில் கதாநாயகி இல்லை. ‘தேவிசந்திர குப்தம்’ என்ற நாடக நூலையும் இவர் எழுதியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

d) பாரவி என்பவர் ‘கிராதார் ஜுனியம்’ என்ற நூலை எழுதினார். இதில் இயற்கை வர்ணனைகள் காணப்படுகிறது. அர்ஜுனருக்கும் சிவனுக்குமிடையே உள்ள மோதலை விவரிக்கிறது. தண்டி என்பவர் காவியதரிசனம், தசக்குமார சரித்திரம் என்ற நூல்களை எழுதினார். இதில் காதல், வீரம், மற்றும் சமுதாய நிலை விளக்கப்பட்டுள்ளது. சுபந்து என்ற ஆசிரியர் ‘வாசவதத்தம்’ என்ற சிலேடைச் சிறப்பு நிறைந்த புதுமைக்கதை ஒன்றை எழுதினார். மேலும் வாமனர், சந்திரர் ஆகிய இலக்கண நூல் ஆசிரியர்களும், அமரா என்ற அகராதி தயாரித்த ஆசிரியரும் இக்காலத்தில் வாழ்நூத சிறந்த அறிஞர்களாவர்.

e) பஞ்ச தந்திர நூல் கி.பி. **300–**க்கும் **500–**க்கும் இடைப்பட்டக் காலத்தில் இயற்றப்பட்டது. இதனை குப்தர் காலத்தில் வெளியிட்டவ. விஷ்ணு சர்மன் என்பவராவார். உலகத்திலேயே சிறந்த நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நூல்

சுமார் ஐம்பது இந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இந்த நூலில் உள்ள இலக்கிய நயம் மிகச் சிறப்பானது.

f) பல காலங்களில் திருத்தியும், பெருக்கியும் அமைக்கப்ட்ட ‘‘புராணங்கள்’’ குப்தர் காலத்தில் தொகுக்கப்பட்டு இன்றைய நிலையை அடைந்தது. அவைகள் பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற சமயநூல்களாக மாறின. வாயு புராணம், பாகவத புராணம், விஷ்ணு புராணம் முதலியவை மக்களைக் கவர்ந்தவை.

g) இவை தவிர, எண்ணற்ற நூல்கள் வெளிவந்தன. வியாசர் என்பவர் ‘யோகபாஸியம்’ என்ற நூலை எழுதினார். வத்சாயினர் ‘நியாபாஷ்யா’ என்ற தத்துவ நூலை எழுதினார். காமாந்தகன் என்பவர் ‘நிதிசாரம்’ ‘கீதோபதேசம்’ ஆகிய நூல்களை எழுதினார். அமர்சிங் என்பவர் அமரகோஷா என்ற நூலைத் தொகுத்தார். சஸ்வர் கிருஷ்ணா என்பவர் சங்கியகரிகா என்ற நூலையும் தண்டின் (Dandin) என்பவர் காவியதர்ஷன், தஷகுமாரசரிதா ஆகிய நூல்களையும் எழுதினார். புத்த கோஷர் என்பவர் திரிபீடகத்திற்கு உரை எழுதினார். பக்தி என்பவர் ‘இராவணவதம்’ என்ற நூலை எழுதினார். சமுத்திரகுப்தரின் தானைத் தலைவர் அரிசேனன் ‘பிரசஸ்தி’ என்ற கவிதை நூலை எழுதினார். அசங்கன் என்பவர் எழுதிய ‘யோகாச்சார பூமி சாத்திரம்’ ‘மகாயான சம்பரிகிரகம்’ ஆகிய நூல்கள் முக்தி அடையும் தத்துவக் கருத்துக்களைக் கூறுகிறது.

**அறிவியல் வளர்ச்சி : Science**

குப்தர்கள் காலம் கணிதம், வானசாஸ்திரம், மருத்துவம், பொறியியல், சோதிடம் ஆகிகிவற்றில் புகழ் பெற்றிருந்தது.

இந்தியக் கணிதமுறை குப்தர்கள் காலத்தில் நவீன முறையில் வளர்ந்தது. பல கணித நூல்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டன. இக் காலத்தில் வாழ்ந்த ‘ஆரியபட்டர்’ என்பவர் சிறந்த கணித மேதையாகவும் வான இயல் வல்லுனராகவும் விளங்கினார். எண் கணக்கு, இயற் கணிதம் ஆகியவற்றில் புதிய முறையைக் கண்டுபிடித்தார். இதனால் இப்பாடங்களில் முன்னேற்றம் காணப்பட்டது. இவர் கி.மு. 499–ல் எழுதிய ‘ஆரியபட்டியம்’ என்ற வானயியல் நூல் இன்றும் உலகம் வியக்கும் நூலாகத் திகழ்கிறது.

குப்தர் காலத்தில் வானவெளியைப் பற்றிய அறிவு வளர்ந்தது. 'வராகமிகிரா' எழுதிய 'பஞ்சசித்தாந்திகா', 'மிரிஹத் சம்கிதா' ஆகிய நூல்கள் விண்கோள்களைப் பற்றிய உண்மைகளை கூறுகின்றன. மேலும் இவர் எழுதிய பிரிகஜாதகம், லகுஜாதகம் ஆகிய நூல்கள் வானவியலின் முக்கிய நூல்களாகும். பிரம்ம குப்தர் என்ற அறிவியலறிஞர் பூமி தனது ஈர்ப்பு விசையால் பொருள்களைத் தன்னகத்தே ஈர்க்கிறது என்ற தத்துவத்தைக் கண்டுபிடித்தார்.

மருத்துவத்திதிம் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. வாசுபட்டர் என்பவர் எழுதிய 'அஸ்தாங்க சம்கிரகம்' என்ற நூல் சிறந்த மருத்துவ நூலாகும். 'சரக சம்கித்தா' 'சுகருட்டா சம்கித்தா' ஆகிய நூல்களும் புகழ் பெற்ற மருத்துவ நூல்களாகும். 'தன்வந்தரி' என்ற மருத்துவர் மருத்துவ உலகில் தலைசிறந்து விளங்கினார். கால்நடை மருத்துவமும் வளர்ச்சியடைந்தது. ஹஸ்தியாயூர்வேதம் என்ற புகழ்ப் பெற்ற மருத்துவ நூல் குப்தர் காலத்தில்தான் எழுதப்பட்டது.

**சிற்பக்கலை வளர்ச்சி : Sculpture**

குப்தர் காலத்தில் இந்திய சிற்பக்கலை முழு வளர்ச்சி பெற்றுச் சிறந்து விளங்கியது. பண்டைய சிற்பக்கலை முழு வடிவம் பெற்று பரவ ஆரம்பித்தது. தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பரவிய சிற்பக் கலைக்கும் மட்டுமல்லாது, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பரவிய சிற்பக் கலைக்கும் முன்மாதிரியாக அமைந்தது. கலையழகு மிளிரும் புத்தரின் உருவச் சிலைகளும், இந்துக் கடவுளர்களின் சிலைகளும், குப்தர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டன.

மதுராவிலுள்ள நின்ற நிலையிலிருக்கும் புத்தர் சிலையில் சிறிய அளவு கிரேக்கப் பண்பாடு தெரிகிறது. சாரநாத்தில் காணப்படும் சிறைந்த 128 அடி உயரமுள்ள புத்தர் சிலையில் குப்தர் கால சிற்பக்கலையின் சிறப்பைக் காணலாம். சுல்தான்கஞ்ச் என்னுமிடத்தில் காணப்பட்ட செம்பால் ஆன புத்தர் சிலை 71/2 அடி உயரமும் 1 டன் கனமும் கொண்டது. அதில் இக்கால சிற்பக்கலையின் சிறப்புத்தன்மையைக் காணலாம். மெகரௌலி இரும்புத்தூண் தேனிரும்பால் செய்யப்பட்டது. அதன் உயரம் 23.8 அடி, எடை 6 டன், குறுக்களவு 16.4 அங்குலம் ஆகும். பல நூற்றாண்டு ஆயினும் இன்றும்

துருப்பிடிக்காமல் இருப்பது அக்கால உலோகத் தொழிலின் சிறப்பைக் காட்டுகிறது. இவை தவிர சிவனின் சிற்பங்களும், வட மதுராவில் காணப்படும் திருமாலின் சிற்பமும், உதயகிரி மலையிலுள்ளவராக அவதாரமும், தேவகார் என்ற இடத்திலுள்ள விஷ்ணு சிலையும், காஷி என்ற இடத்திலுள்ள கார்த்திகேயன் சிலை, சௌசாம்பியிலுள்ள ஆரிய கடவுளின் சிலை ஆகியவை குப்தரின் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**கட்டிடக்கலை : Architechture**

மிகப்பெரிய அளவில், கலைச்சிறப்பு மிக்க பெருங் கோயில்கள் ஏராளமாக குப்தர்கள் காலத்தில் கட்டப்பட்டன. சாஞ்சியிலும், தியோகாரிலுள்ள கற்கோயிலும், 'பித்தர்கானில்' காணப்படும் செங்கற் கோவிலுமே குப்தர்களின் கட்டிடக் கலையின் பெருமையினை விளக்கும் வண்ணம் நிலைபெற்று நிற்கின்றன. மற்ற கோவில்கள் அனைத்தும் படையெடுப்புகளின் போது அழிக்கப்பட்டுவிட்டன. குப்தர்கால கோயில்கள் கலையழகில் தனித்தன்மை வாய்ந்தவை ஆகும்.

திகாவா (Tigwa) என்ற ஊரில் அமைந்த திருமாலின் கோயில், பூமரா என்னுமிடத்திலுள்ள சிவன் கோவில், நச்சன்குதரா என்னுமித்திலுள்ள பார்வதி கோயில், தேவகார்க் என்ற இடத்திலுள்ள தஷவத்ரா கோவில் ஆகியவை சிறப்பானவை. இராஜகிருகம், சாரநாத் ஆகிய இடங்களிலுள்ள புத்த ஸ்தூபிகளும் குப்தர்களால் கட்டப்பட்டவையே. அஜந்தா குகைகளில் காணப்படும் எண்ணற்ற கற்றூண்கள், வெவ்வேறு கலையழகுடன் காணப்படுகிறது.

**ஓவியக்கலை : Painting**

குப்தர்கள் காலம் ஓவியக் கலையின் பொற்காலம் எனப் புகழப்படுகிறது. குப்தர் கால சிறந்த ஓவியங்களை சிகிரியாவிலும், அஜந்தா குகையிலும், குவாலியரிலுள்ள ''பாக்'' (Bagh) குகைகளிலும், எல்லோராவிலும் காணலாம்.

அஜந்தா வண்ண ஓவியங்கள் இந்தய ஓவியனின் கைவண்ணத்தையும், காலத் திறமையையும் காட்டுகிறது. அந்த ஓவியங்களின் வண்ணங்கள் பல நூறு ஆண்டுகள் ஆன பின்னரும் மங்காமல் புதியவை போன்றே காணப்படுவது காண்போருக்கு வியப்பை அளிக்கிறது. கண்களுக்கு விந்தையும் உள்ளத்திற்கு உவகையும்

கொடுக்கிறது. அச்சம், வெறுப்பு, அன்பு, ஆத்திரம், காதல் போன்ற மனித உணர்ச்சிகள் ஓவியங்க மூலமாக அப்படியே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. விலங்குகள், பறவைகள், மலர்கள், ஆகியவை உயிரோவியமாத் தீட்டப்பட்டுள்ளன. அஜந்தாவிலுள்ள 1, 2, 9, 6, 17, 19–ஆம் நம்பர் குகைகளில் புத்தரின் வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியங்கள் காணப்படுகின்றன. ‘சாவின் மடியில் இளவரசி’, ‘தாயும் சேயும்’ ஆகிய இவ்விரண்டும் அஜந்தா ஓவியங்களிலேயே சிறந்ததெனக் கருதப்படுகிறது.

குவாலியர் பகுதியிலுள்ள ‘பாக்’ குகைகளிலும் சிறப்பு மிக்க ஓவியங்கள் காணப்படுகின்றன. 2, 3, 4, 5, 7–ஆம் நம்பர் குகைகளில் பலவிதமான ஓவிய வகைகள் மிகச் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன என்று கலை ஆராய்ச்சியாளர்கள் பாக் குகை ஓவியங்களின் சிறப்புத் தன்மையைப் புகழ்கின்றனர். இந்த ஓவியங்களில் காணப்படும் கருப்பொருள் ஜாதகக் கதைகளில் விவரிக்கப்பட்டுள்ள புத்தரின் வாழ்கூகை வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகும். நடனமாடும் நங்கையர் கூட்டம், ஊர்வலம் செல்லும் யானைகள் கூட்டம், பாடகர்களின் முழு ஒன்று ஆகிய ஓவியங்கள் காண்பவரைக் கவர்ந்திருக்கின்றன. இவை தவிர தக்காணத்திலுள்ள பாதாமியில் இருக்கும் 2–ஆம் 3–ஆம் எண் குகைகளில் பழங்கால பிராமணிய ஓவியங்களைக் காணலாம்.

இலங்கைத் தீவில் ‘சிகிரியா’(Sigiriya) என்ற இடத்தில் காணப்படும் ஓவியங்கள் யாவும் குப்தரின் வரலாற்றைச் சித்தரிக்கின்றன. அதில் காணப்படும் ‘பெண்கள் மலர்களை ஏந்திக் கொண்டு பௌத்த கோயில்கட்கு செல்லும் காட்சி’ வியக்கத்தக்கது ஆகும்.

**நாணயங்கள் : Coins**

குப்தர்கள் தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகியவற்றால் செய்யப்பட்ட நாணயங்களை வெளியிட்டார். சமுத்திரகுப்தர் எட்டு வகையான தங்க நாணயங்களை வெளியிட்டார். குப்த நாணயங்களில் எல்லாமே தங்கத்தினால; ஆனவை. புலி உருவம், இசை பாடகர் (Lytist type) வகை தவிர பிற நாணயங்களை பரம்பரை செய்திகள் காணப்படுகின்றன. இவர் வெள்ளி நாணயங்களை வெளியிடவில்லை. இரண்டாம் சந்திரகுப்தர் வெள்ளி மற்றும் பித்தளை (Copper) நாணயங்களை வெளியிட்டார். மேலை சத்ரபர்களை வென்ற

பின்பு வெள்ளி நாணயங்களை வெளியிட்டார். முதலாம் குமாரகுப்தர் மயிலை வாகனமாகக் கொண்டு அமர்ந்துள்ள கார்த்திகேயா வகை நாணயங்களை வெளியிட்டார். கருடா உருவம் மாற்றப்பட்டு மயில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஸ்கந்த குப்தர் மூன்று வகையான தங்க நாணயங்களை வெளியிட்டார். அவை வில் அம்பு (Cercher type) இலட்சுமி, குதிரைவீரன் ஆகிய வகைகளாகும். முத்திரை அழகும், உலோக வார்ப்பழகும் கலையழகுடன் காட்சியளிக்கின்றன. இவர்களுடைய நாணயங்களைப் பின்பற்றியே தோரமானரும் மிகிரகுலரும், ஹர்ஷரும் வெளியிட்டனர். குப்தர் கால நாணயங்களில் காணப்படும் உருவங்கள், வார்ப்புக் கலையின் திறமையினையும், முத்திரையின் பெருமையையும், உலோகக் கலவையின் அறிவையும் நமக்கு விளக்குகின்றன. நாணயங்களில் காணப்படும் எழுத்துக்கள் எழுத்துக் கலையின் சிறப்பினை விளக்குகிறது. எந்தக் காலத்தில் மக்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவுகிறதோ, கலைகள் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருக்கிறதோ ாந்தக் காலம் பொற்காலம் என்று அழைக்கப்படும். குப்தர்களின் காலத்தில் நாட்டில் அமைதி, ஒருமைப்பாடு, செழிப்பு, நிலையான அரசு, நல்ல நிர்வாகம் முதலியன உச்சநிலை அடைந்தது. நாகரிகச் சின்னங்களான கலைகளும், இலக்கியமும், சமய வளர்ச்சியும், அறிவியலும் குப்தர்கள் காலத்தில் சிறந்தோங்கி வளர்ந்தது. எனவே ‘குப்தர் காலம் பொற்காலம்’ என்றால் அது மிகையாகாது !

## குப்தரின் ஆட்சி முறை (Administration of Guptas)

குப்த அரசர்களான சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர், ஸ்கந்தகுப்தர் ஆகியோர் பெரிய வெற்றியாளர்கள் ஆவர். அவர்கள் பல பகுதிகளை வென்று குப்த சேரரசை விரிவுபடுத்தினார்கள். ஆனால் அவர்கள் சிறந்த வெற்றியாளர்களாக மட்டுமல்லாது சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கினார்கள். அவர்களது ஆட்சி முறை அறிவியல் பூர்வமான கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. மௌயரியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு சிதறிக் கிடந்த சிறிய அரசுகளை இணைத்து தங்கள் ஆட்சிமுறையின் மூலம் அரசியல் ஒற்றுமைக்கு மீண்டும் வித்திட்டவர்கள் குப்தர்கள் ஆவர்.

குப்தர்களின் ஆட்சி முறை மௌரியர் ஆட்சிமுறையைப் போன்று உள்ளது என்று சில ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஆனால், ஆர்.டி.பானர்ஜி என்பவர் குப்தரின் ஆட்சி முறை தனித்தன்மை வாய்ந்தது என்று கருதுகின்றார். குப்தரின் ஆட்சி முறையில் இந்திய ஆட்சியின் மரபு முறைகள் எல்லாம் காணப்படுகின்றன.

## குப்தர் ஆட்சி முறையின் சிறப்பு அம்சங்கள் :

### 1) குடியரசுகள் : Republics

குப்தர்கள் காலத்தில் முடியாட்சி முறை முக்கியமாக காணப்பட்டாலும், பஞ்சாப், இராஜஸ்தானம் போன்ற பகுதிகளில் பல குடியரசுகள் காணப்பட்டன. அவைகளில் முக்கியமானவை மாளவம், அர்ஜினாயானா, சனக்காரிகா, யெவ்தேயா, பிரார்ஜினா, குனிந்தா, காரப்பரிகா, அபிரா போன்றவைகள் ஆகும். இந்த குடியரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் குப்த அரசர்கள் தலையிடவில்லை. நிர்வாக வசதிக்காக ஒவ்வொரு குடியயசிலும் மைய மன்றம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. காலப் போக்கில் இந்தக் குடியரசுகளின் தலைவர்கள் தங்களை ராஜா என்றும் மகாராஜா என்றும் அழைத்துக் கொண்டார்கள்.

### 2) அரசன் : The King

குப்தர் காலத்தில் மன்னராட்சி முறையே பரவலாகக் காணப்பட்டது. இது ஒரு சாதுரியமிக்க வல்லாட்சி ஆகும். அரசர் கடவுளின் பிரதிநிதி என்று கருதப்பட்டார். தெய்வீக அரசுரிமைக் கோட்பாடு நடைமுறையில் இருந்தாலும் மன்னர் என்றுமே ஒரு வல்லாட்சியாளராக விளங்கவில்லை. குப்தப் பேரரசில் பரம்பரை உரிமைப்படி அரசரின் மூத்த மகனே பதவிக்கு வருவது வழக்கம். அரசர் உயிரோடு இருக்கும் போதே இந்த மூத்த மகனை இளவரசனாக நியமித்து அரசியல் பயிற்சியளிக்கப்படும். சிவில் மற்றும் படைத் துறைகளில் இளவரசருக்கு உயர் பதவி அளிக்கப்படும். சில சமயம் மாநிலங்களின் ஆளுநராகவும் நியமிக்கப்படுவார்.

குப்த அரசர்கள் அதிக அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். அரசரே மாநில ஆளுநர்களையும், சிவில், இராணுவ அதிகாரிகளையும் நியமித்தனர். இந்த அதிகாரிகள் அரசருக்கே பொறுப்புடையவர்கள் ஆவர். குப்த மன்னர்கள் மக்களின் உள்ளங்களை உணர்ந்து அவர்களது எண்ணங்களுக்கு மதிப்பளித்து அவர்களது

நலன்களைப் போற்றி வந்தார்கள். அரசரே அயல் நாட்டுக் கொள்கைகளை வகுத்தார். போர் பிரகடனம் செய்தல், முக்கியப் போர்களில் படைகளுக்குத் தலைமை தாங்கி போர் முனைக்கு நடத்திச் செல்வதும் அரசரே. நாட்டிலுள்ள நிலம் அனைத்தும் அரசருக்கே சொந்தமானது.

நீதியின் உறைவிடம் அரசரே! சட்டத்தை மீறியவர்களைத் தண்டிப்பது அரசரே. குற்றவாளிகளின் தண்டனைகளைக் குறைப்பதும் மன்னிப்பு அளிப்பதும் அரசருக்குரிய சிறப்புரிமைகளாகும். நாட்டில் கொள்ளை நோய், பஞ்சம் போன்றவை ஏற்பட்டபோது மன்னர்கள் மக்களுக்கு உதவியளித்தனர். விவசாயம், நீர்ப்பாசனம் ஆகியவற்றிற்கு ஊக்கம் அளித்தனர். குப்த மன்னர்கள் வரைமுறையற்ற அதிகாரங்கள் கொண்டிருந்தாலும் தங்களது எல்லாச் செயல்களையும் அமைச்சரவையின் ஒப்புதல் பெற்ற பின்பே செயல்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

குப்த மன்னர்கள் பல்வேறு வகையான விருதுப் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். பரமதேவன், பரம பட்டாரகன், இராஜாதி ராஜா, மகாராஜாதி ராஜா, பரமேஸ்வரன், பிருதிவி பாலன், சம்பிரதன், ஏகராஜன், சக்கரவர்த்தி, நரபதி, தேவன் போன்ற விருதுப் பெயர்களைக் கொண்டு குப்த மன்னர்களின் பண்புகளையும், ஆட்சித் தன்மைகளையும் அறிந்து கொள்ளலாம்.

**3) அமைச்சரவை : Council of Ministers**

அரசர் அமைச்சரவையின் ஆலோசனையின்படியே நிர்வாகத்தை நடத்தி வந்தார். இந்த அமைச்சரவைக்கு மந்திரி பரிஷத் என்று பெயர். அமைச்சரவை உறுப்பினர்களாக அரசியல் அறிவும், படைத் திறமையும், நன்னடத்தையும் உடையவர்களே நியமிக்கப்பட்டனர். இந்த அமைச்சரவையில் பேரரசின் அனைத்து விவகாரங்களும் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டன. மந்திரிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளுக்கு பொறுப்பானவர்கள். அமைச்சரவை எடுக்கும் எந்தத் தீர்மானமும் அரசனின் கையொப்பம் பெற்ற பின்னரே செயல்படுத்தப்படும். அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகள் ‘அமாத்தயா’ என்றழைக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் அரசருக்குத் தெரிவிக்கப்பட்டன. அமைச்சரவையில் கீழ்க்கண்ட மந்திரிகள் இருந்தனர்.

**1. சர்வாதியக்ஷா** என்பவர் மத்திய நிர்வாகத்தில் பொது மேலாளர் ஆவார். இவர் மைய அரசின் ஆணைகளை மாநிலங்களுக்கும், மாவட்டங்களுக்கும் தனி தூதுவர் மூலம் தெரிவிக்கும் மந்திரி ஆவார்.

**2. மகா சேனாபதி** என்பவர் இராணுவத்தின் தலைமைத் தளபதியாவார்.

**3. மகாதண்ட நாயகர்** என்பவர் தலைமை நீதிபதி ஆவார்.

**4. மகா பாலாதிகரனா** என்பவர் இராணுவ நிர்வாகத் துறையின் தலைவர் ஆவார்.

**5. தாண்டோபாஷிகா** என்பவர் காவல் துறையின் தலைவர் ஆவார்.

**6. மகாசந்திவிக்ரகிகா** என்பவர் வெளியுறவுத் துறை அமைச்சர் ஆவார்.

**7. மகாபிரதிகாரா** என்பவர் அரசம ாளிகையில் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார்.

**8. மகாஷபாட்டலிகா** என்பவர் அரச ஆவணப் பாதுகாப்பு மந்திரி ஆவார்.

மேற்கண்ட மந்திரிகளைத் தவிர மேலும் பல அதிகாரிகள் குப்தப் பேரரசில் செயல்பட்டு வந்தார்கள். குமாரமாத்தியா என்ன் மாவட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இராஜபுருஷா, இராஜநாயகா, மகாசமந்தா, மகா பிரதிகாரா, கஞ்சுகி போன்ற சிவில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். வரித் துறை மற்றும் காவல் துறைகளில் உபாரிகா, தசம்பரதிகா, தண்டிகா, கெணல்மிகா, ராஜினா போன்ற அதிகாரிகள் இருந்தனர். இதில் உபாரிகா என்ற அதிகாரி நகர்மன்றங்களின் தலைவராகவும், ஆட்சி நீதி ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். இந்த அதிகாரிகள் அனைவரும் ஆட்சி முறை திறமையாக நடைபெற முக்கியக் காரணமாக இருந்தார்கள்.

**4. மாகாண ஆட்சி முறை : Provincial Government**

நாட்டின் நிர்வாக வசதிக்காகவும் தங்கள் கட்டுப்பாட்டை பேரரசு முழுவதிலும் ஏற்படுத்தவும் அரசர் தனது நாட்டை தேதம் அல்லது புக்தி என்ற பல மாநிலங்களாகப் பிரித்தார். தேசம் பல விஷயாஸ்களாகவும், பிஷயாஸ் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. பேரரசின் சில பாகங்களில் புரா என்ற நகரங்கள் காணப்பட்டன. மாநிலங்களின் நிர்வாகப் பொறுப்பு உபாரிகா என்ற ஆளுநரிடம் கொடுக்கப்பட்டிருந்தது. பொதுவாக மாநில ஆளுநர்கள் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவே இருப்பர். இவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுவர். மாநில ஆளுநர் தன் மாநிலத்திற்குட்பட்ட படைத் துறை, பொதுத் துறை, நீதித் துறை ஆகியவற்றையும்

கண்காணித்து வந்தார். ஆளுநர்களுக்குக் கீழ் பல்வேறு அலுவலர்கள் பணிபுரிந்தனர். அவர்கள் தத்தர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் மக்களின் நல்வாழ்வுக்காக பணிபுரிந்தனர். நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டினர். மாநிலங்கள் விஷயாஸ் என்ற மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இதன் தலைமை அதிகாரி விஷ்யபதி எனப்பட்டார். இவரும் ஐந்தாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டார். நிர்வாக வசதிக்காக முப்பது பேர்களைக் கொண்ட ஆலோசனை வாரியம் ஒன்று ஒவ்வொரு விஷயாஸிலும் அமைக்கப்பட்டது. இந்த வாரியத்திற்கு விஷய மகாத்தாரா என்று பெயர். இதன் உறுப்பினர்கள் விஷயபதியினால் நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு மாகாண நிர்வாகமானது குப்தர் காலத்திய முடியாட்சி அரசாங்கத்தில் முக்கிய பங்காற்றியது. மாகாண ஆளுநர்களும், மாவட்ட அதிகாரிகளும் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் முக்கிய பங்காற்றினர்.

### 5. தல ஆட்சி நிர்வாகம் : Local Self Adminsitration

#### a) நகர நிர்வாகம் : Town Adminsitration

தல ஆட்சி நிர்வாகமும் குப்தர் காலத்தில் வளர்ச்சியடைந்திருந்தது. அது நகர நிர்வாகம், கிராம நிர்வாகம் என்று இரு வகையாகச் செயல்பட்டு வந்தது. குப்தப் பேரரசில் உள்ள பெரிய நகரங்களான பாடலிபுத்.ரிம், உஜ்ஜயினி, தட்சசீலம், அயோத்தியா, கிரி நகரம் ஆகியவற்றில் நகர நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வந்தது. புரபாலர் அல்லது நகர ரட்சகர் என்பவர் நகரத்தின் நிர்வாகத்தை நடத்தி வந்தார். அவர் மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டார். மக்கள் மன்றம் புரபாலருக்கு ஆலோசனை வழங்கி நிர்வாகத்தை நடத்துவதற்கு துணை நின்றது. மக்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், தண்ணீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை இந்த மக்கள் மன்றம் கவனித்து வந்தது. புரபால உபாரிகா என்ற பேரதிகாரி பல நகர நிர்வாகங்களுக்கு மேலதிகாரியாக இருந்தார். நகர ஆட்சியதிகாரியின் கீழ் பரிஷத், அவாஸ்திகா போன்ற அதிகாரிகள் இருந்தனர்.

#### b) கிராம நிர்வாகம் : Village Administration

கிராமமே பேரரசின் மிகச் சிறிய நிர்வாகப் பிரிவாகும். கிராமத்தின் நிர்வாகத் தலைவர் ‘கிராமிக்கா’ எனப்பட்டார். கிராமத்தின் பாதுகாப்பிற்கும், சட்ட ஒழுங்கிற்கும்

அவரே பொறுப்பாவார். கிராமிக்காவின் உதவிக்காக கிராமத்திலுள்ள வயது முதிர்ந்தவர்களைக் கொண்ட பஞ்சமண்டலா என்ற கிராம சபை அமைக்கப்பட்டிருந்தது. கிராம நிர்வாகப் பிரச்சனைகளை விவாதிப்பதற்காக இந்த கிராம சபை அடிக்கடி கூடியது. இந்த கிராம சபை பல குழுக்களாகப் பிரிந்து நிர்வாகப் பணியாற்றியது. கிராமிகாவுக்குக் கீழ் சமேகரர்கள், தூதர்கள், மந்தை கண்காணிப்பாளர்கள் போன்ற அலுவலர்கள் இருந்தார்கள். இவ்வாறு குப்தர்களின் நகர நிர்வவகமும் கிராம நிர்வாகமும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தது.

**6. நீதி நிர்வாகம் : Justice**

நீதி நிர்வாகத்தின் உயர் அதிகாரம் கொண்டவர் அரசரே ஆவார். அவர் நீதியின் உறைவிடமாகக் கருதப்பட்டார். அவரது தீர்ப்பே இறுதியானது ஆகும். கிராம அமைப்புகளிலிருந்து தலைமை நீதிமன்றம் வரை நீதித் துறை சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. தலைமை நீதிபதி ‘மகாதண்டநாயகர்’ என்று அழைக்கப்பட்டார். குப்தர்களின் நீதித் துறையைப் பற்றி பாஹியான் விரிவாக விவரித்துள்ளார். பொருளியல் குற்றவியல் வழக்குகளை விசாரிக்க தனித்தனி அதிகாரிகள் இருந்தனர். இந்த அதிகாரிகள் சட்டங்களையும் மறை நூல்களையும் நன்கு அறிந்து வைத்திருந்தார்கள். அறங்கூறுபவர்கள் வழக்குகளை நன்கு விசாரித்து தீர்ப்பு கூறினர். எந்த வழக்கிலும் துறவிகள் நிதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

குப்தர்கள் காலத்தில் குற்றவாளிகளுக்கு கொடிய தண்டனைகள் வழங்கப்படவில்லை என்று பாகியான் கூறுகிறார். பெரும்பாலான குற்றவாளிகள் அபராதத் தொகை செலுத்திவிட்டு மன்னிப்பு பெற்றார்கள். திருடர்களை ரட்சிணா என்ற அதிகாரி விசாரித்து தீர்ப்பளிப்பார். மரண தண்டனை பெற்ற குற்றவாளிகள் தூக்கிலிடப்பட்டனர். தேசத் துரோகம் செய்த குற்றவாளிகள் சின்னாபின்னமாக வெட்டி கொலை செய்யப்பட்டனர். குப்தர் காலத்தில் சட்டம் ஒழுங்கைக் காக்கவும் குற்றங்கள் நடக்காமல் தடுக்கவும் காவலாளிகள் முக்கிய இடங்களில் ரோந்து சுற்றி வந்தனர். இவ்வாறு நீதித்துறை குப்தர் காலத்தில் சிறப்பாக செயல்பட்டு வந்தது.

**7. வருவாய்த் துறை : Revenue**

குப்த அரசர்களின் கல்வெட்டுகளிலிருந்து பேரரசுக்கு கிடைத்த பலதரப்பட்ட வருவாய்களை நாம் அறிய முடிகிறது. பேரரசுக்கு முக்கிய வருவாய் நிலவரியிலிருந்தே கிடைத்தது. விவசாயிகள் தங்கள் நிலத்தின் விளைச்சலில் ஆறில் ஒரு பகுதியை வரியாகக் கட்டினர். வரியைத் தானியமாகவோ பணமாவோ செலுத்தலாம். பொதுவாக நிலவரிக்கு ‘உத்ரங்கா’ என்று பெயர். குத்தகைக்கு பயிரிடுவோரிடமிருந்து பெரும் வரிக்கு ‘உபரிகா’ என்று பெயர். நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மீதும், வெளியிலிருந்து கொண்டு வரப்படும் பொருட்கள் மீதும் வரி விதிக்கப்பட்டது. காடுகள், தரிசு நிலங்கள், சுரங்கங்கள் ஆகியவை நாட்டின் சொத்தாகக் கருதப்பட்டது. இவைகளைக் குத்தகைக்கு விட்டு அதன் மூலம் வருவாய் கிடைத்தது. குப்தர் காலத்தில் வரிகள் எளிமையாகவே விதிக்கப்பட்டன. எனவே மக்கள் கஷ்டமில்லாமல் வரி செலுத்தினர். வரி வசூலிப்பதில் அரசாங்க அதிகாரிகளுக்கு எந்த சிரமமும் ஏற்படவில்லை.

**8. படை நிர்வாகம் : Army Administration**

குப்தர்கள் வலிமையான படை ஒன்றை வைத்திருந்தார்கள். படையில் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய பிரிவுகள் இருந்தன. தேர்ப்படை சில சமயம் பயன்படுத்தப்பட்து. பாலைவனப் பகுதியில் நடக்கும் போர்களில் ஒட்டகப்படை பயன்படுத்தப்பட்டது. மகாசேனாதிபதி என்பபர் தலைமைப் படைத்தளபதி ஆவார். இராணுவச் செலவுகளைக் கவனிக்க தனி அதிகாரி ஒருவர் இருந்தார். யானைப் படையின் தலைவர் ‘சமுகா’ என்றும், குதிரைப் படையின் தலைவர் ‘பதஷ்வபதி’ என்றும் அழைக்கப்பட்டனர்.

போர் வீரர்களுக்கு கவசமும், ஆயுதங்களும் வழங்கப்பட்டன. போரில் வில், அம்பு, வாள், ஈட்டி, போர்க் கோடாரி ஆகியவை உபயோகப் படுத்தப்பட்டதாக அலகாபாத் கல்வெட்டு விவரித்துக் கூறுகிறது. படை நிர்வாகத்தில் பாலதிகிரிதா, மகாபாலதிகிரிதா, தண்டநாயகா, சாந்திவிகரிகா, கோப்தா போன்ற பலதரப்பட்ட அதிகாரிகள் பணியாற்றினர். படை நிர்வாகம் அரசரின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு மூலம் சிறப்பாக நடைபெற்று வந்தது.

**முடிவுரை :**

இவ்வாறு குப்தர்கள் நன்கு ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட சிறப்பான நிர்வாகத்தை அமைத்திருந்தனர். முடியாட்சியின் அடிப்படையிலேயே நிர்வாகம் அமைக்கப்பட்டிருந்தாலும் ஸ்தல ஆட்சி நிறுவனங்கள் வளர்ச்சியடைய வழிவகை செய்யப்பட்டிருந்தது. நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் குப்தர்கள் நிர்வாகத்தில் எவ்வித புது முறைகளையும் அறிமுகம் செய்யவில்லை என்பதும், மௌரியரின் ஆட்சி முறையை அப்படியே பின்பற்றினர் என்பதும் உண்மையாகும். தங்கள் நிர்வாகத் திறமையின் மூலம் மிகப் பெரிய பேரரசை அவர்களால் கட்டிக்காக்க முடிந்தது.

குப்த அரசர்களின் ஆட்சி முறையை எல்லா வரலாற்றாசிரியர்களும் புகழ்கின்றனர். அரசர்கள் கல்வி, கலை, இலக்கியம் ஆகியவற்றை ஆதரித்தனர். பல மக்கள் நல நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களை சந்தோஷமாகவும் வசதியாக வாழவும் வழி செய்து கொடுத்தனர். குப்தர்களின் சட்ட திட்டங்கள் இரக்கத் தன்மையுடன் விளங்கியது. எந்த மதமும் தேசிய மதமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எல்லா மதங்களுக்கும் அரசு ஆதரவு காட்டியது. குப்தர்களின் வலிமையான படையே அந்நியர்களின் படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாதுகாத்தது. இவ்வாறு குப்தர்களின் ஆட்சி முறை பிற்கால அரசுகளுக்கு முன்னோடியாக விளங்கியது.

## கஜினி மாமூது

கி.பி. 712-ல் ஏற்பட்ட அரேபியரின் சிந்து படையெடுப்பு செழித்தோங்கவில்லை. கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கஜினி மற்றும் கோர்-ஐச் சேர்ந்த துருக்கி அரசர்கள் இந்தியா மீது படையெடுத்து இந்தியாவில் முஸ்லீம் பேரரசு உருவாக அடிகோலினர். அவ்வரசர்களுள் கஜினியைச் சேர்ந்த மாமூதும் கோரைச் சேர்ந்த முகமதும் குறிப்பிடத்தக்கவர்கள்.

கஜினியை ஆண்ட மன்னர்களுள் முதன்மையானவர் அலப்தஜன். அவருக்குப் பின் சபுக்தஜின் ஆட்சிக்கு வந்தார். அவர் தன் மகன் மாமூதிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு கி.பி. 997-ல் இறந்தார். மாமூதே முகமது கஜினி எனப்பெயர் பெற்றார்.

முகமது கஜினி: கி.பி. 997 முதல் 1030 வரை ஆட்சிய செய்த முகமது கஜனி, இந்தியா மீது படையெடுத்தவர்களுள் தனி இடம் வகிக்கிறார். போர்திறன்களிலும் ஆட்சி முறையிலும் முகமது நல்ல பயிற்சி பெற்றிருந்தார். அவரை மன்னராக அங்கீகரித்து அப்பாசிது கலீஃபர், ஒவ்வோர் ஆண்டும் இந்திய மீது படையெடுக்குமாறு கேட்டுக் கொண்டார் எனப்படுகிறது. இதற்காக இந்தியா மீது 17 முறை முகமது கஜினி படையெடுத்தார். ஆனால் இப்படையெடுப்புகளைக் கொண்டு நிலையான அரசை அமைக்காததுடன் இஸ்லாம் மதத்தையும் அவர் திணிக்கவில்லை.

முகமது கஜினி பற்றிஅறிய, அவருடைய அரசவையை அலங்கரித்த அறிஞர் அல்பெரூனியின் தஹக்கிக்-இ-ஹிந் என்ற நூல் பெரிதும் உதவுகிறது. அதன் மூலம் கஜினியின் படையெடுப்புகள், இந்திய அரசியல் நிலைமை, சமூக, சமய நிலைமை ஆகியன பற்றி அறியலாம். அல்பெரூனியே இந்தியாவிற்கு வந்த முஸ்லீம் பயணிகளில் முன்னவர் எனலாம்.

**முகமது கஜினியின் படையெடுப்புகள்:**

கி.பி. 1000 முதல் 1027-க்குள் முகமது மேற்கொண்ட படையெடுப்புகள் பதினேழு கி.பி. 1000-ல் செய்த முதல் படையெடுப்பில் இந்தியாவின் எல்லைப்புற நகரங்களை அவர் கொள்ளைடியடித்தார். இரண்டாம் படையெடுப்பில் தன் தந்தையின் எதிரியான ஜெயபாலரை பெஷாவர் போரில் தோற்கடித்தார். கி.பி. 1004 முதல் 1023 வரை செய்யப்பட்ட 15 படையெடுப்புகளுக்குள் பீரார், முல்தான், நாகர்கோட், நாராயண்பூர், தானெஷ்வரம், காஷ்மீரம், வடமதுரை, கன்னோசி, லாகூர், குவாலியர் ஆகிய பகுதிகள் மீது படையெடுத்து இந்துக்களைக் கொன்றதுடன் நிறைய பொருள்களைக் கொள்ளையடித்தார்.

**சோமநாதபுரப் படையெடுப்பு:** முகமது கஜினியின் 16-ஆவது படையெடுப்பான சோமநாதப்புரப் படையெடுப்பு அவர் படையெடுப்புகளுள் முக்கியமானது. இது 1024-ல் மேற்கொள்ளப்பட்டது. குஜராத்தில் சோமநாதபுரம் எனும் ஊரில் பிரசித்திபெற்ற சிவன் கோயில் இருந்தது. கடலோரத்தில் பெரும்பாறையின் மீது கட்டப்பட்ட இக்கோயிலில் லிங்கத்திற்கு அடியில் பல தங்க, வெள்ளி சிலைகளும், விலையுயர்ந்த அணிகலன்களும் வைக்கப்பட்டிருந்தன. சோமநாதபுரக் கோயில் பற்றிய விபரங்களை அறிந்த முகமது கஜினி, அதைக் கைப்பற்ற கி.பி. 1025-ல் பெரும்படையுடன்

புறப்பட்டார். 50,000 இந்துக்களைக் கொன்று, இரண்டு நாட்கள் போரிட்டு சோமநாதபுரத்தை முகமது கைப்பற்றினார்.

கோயில் தீ வைக்கப்பட்டது. சிலைகள் உடைக்கப்பட்டன. விலைமதிப்பற்ற விக்ரகங்களுடன் அணிகலன்கள், பிற செல்வங்கள் ஆகியவற்றை கைப்பற்றினார். அவர் பெற்ற செல்வத்தின் மதிப்பு இரண்டு கோடி திர்ஹாம்கள் எனப்படுகிறது. இவ்வெற்றியை கொண்டாடிய கலீஃபா, முகமதுக்கும் அவன் சந்ததியினர்க்கும் பல விருதுகளை வழங்கி பெருமைப்படுத்தினார். சோமநாதபுரம் கோயிலைக் கொள்ளையிட்டு கஜினி திரும்பும் வழியில் ஜாட் இனத்தவர்கள் அவரை எதிர்த்தனர். அவர்களை பழிவாங்க கி.பி. 1027-ல் செய்ய பதினேழாம் (கடைசி) படையெடுப்பிலும் முகமது வெற்றி பெற்றார்.

**மதிப்பீடு:**

அலெக்சாண்டரைப் போல மன உறுதி, அலாவுதீன் கில்ஜியைப் போன்ற பொருளாதார அறிவு, அவுரங்கசீப்பின் இஸ்லாமியப் பற்று இவை கொண்ட முகமது கஜினியின் படையெடுப்புகள் வரலாற்றில் அவருக்கு தனி இடத்தைத் தந்துள்ளன. முப்பதாண்டுகள் போரில் கழித்த இவரை தோல்வியே காணாத வெற்றி வீரர் என்பர்.

## முகமது கோரியின் படையெடுப்புகள்

முகமது கஜினிக்குப் பின்னர் திறமையற்றவர்கள் கஜினியின் அரசாயினர். இதனால் கி.பி. 1173-ல் கஜினி, கோர் அரசின் பகுதியாயிற்று கி.பி. 1173-ல் கோர் அரசர் கியாசுத்தீன் இறந்ததும் அவருடைய தம்பி "முகமது கோரி" அரசரானார். முயிசுத்தீன் முகமது பின் சாம் என்றும் அழைக்கப்படும் முகமது கோரியின் படையெடுப்புகளே இந்தியாவில் முஸ்லீம் பேரரசை உருவாக்கின.

மூல்தானைக் கைப்பற்றினால் இந்தியா மீது படையெடுப்பது எளிது. எனவே கி.பி. 1175-ல் முல்தானையும் அடுத்த ஆண்டில் உச் பகுதியையும் முகமது கோரி கைப்பற்றினார்.

**இந்தியப் படையெடுப்புகள்:**

கி.பி. 1178-ல் முகம்மது கோரி முதலில் குஜராத்தை தாக்கினார். அதில் இரண்டாம் பீமனிடம் அவர் தோல்வி அடைந்தார். அடுத்த ஆண்டில் பெஷாவரைத் தாக்கி கைப்பற்றினார். இதன் மூலம் இந்தியாவிற்குள் நுழைய முகமது கோரி வழி

செய்து கொண்டார். கி.பி. 1185-ல் பஞ்சாபைத் தாக்கி சியால் கோட்டைக் கைப்பற்றினார். இதனால் கோர் பேரரசின் எல்லையை அடுத்து இருந்த பிரிதிவிராஜனை அவருடைய அடுத்த இலக்கானார்.

**முதல் தரைன் போர் (கி.பி. 1191):** இந்தியப் பகுதிகளை முகமத கோரி கைப்பற்றுவதைத் தடுக்க வேண்டுமென டெல்லி, அஜ்மீர் இவற்றின் அரசரான பிரதிவிராஜ் சௌகான் விரும்பினார். இதற்காக 2 லட்சம் குதிரைகள், 3000 யானைகளுடன் பிரிதிவிராஜ் புறப்பட்டார்.

கி.பி. 1191ல் பிரிதிவிராஜின் படைகள், முகமதுவின் படைகளை பதீந்தாவிற்கு அருகிலுள்ள தரைன் எனுமிடத்தில் சந்தித்தன. கடும் வீரத்துடன் இராஜபுத்திரர்கள் போரிட்டனர். போரில் காயமுற்ற முகமது கோரி படுதோல்வி கண்டார். இதனால் முகமது கைப்பற்றிய பதிந்தா கோட்டை பிரிதிவிராஜிடம் வீழ்ந்தது.

இரண்டாம் தரைன் போர் (கி.பி. 1192): முதல் தரைன் போரில் தோல்வியுற்றாலும் இந்தியப் படையெடுப்பை முகமது கோரி கைவிட்டுவிடவில்லை. அடுத்த ஆண்டே பெரும் படையுடன் தரைன் நோக்கி முகமது கோரி புறப்பட்டார். இவ்வாறு தோல்வி கண்ட அதே தரைன் போர்க்களத்தில் பிரிதிவிராஜை அவர் எதிர்த்தார். இப்போரில் பிரிதிவிராஜின் தளபதி காந்தராய் கொல்லப்பட்டார். இதனால் மனமுடைந்த பிரிதிவிராஜ் போர்க்களத்திலிருந்து தப்ப முயன்று, முகமதுவின் படைகளிடம் கைதானார். தலைவனை இழந்த இராஜபுத்திரப் படைகளை துருக்கிய படைகள் சின்னபின்னமாக்கின.

இந்திய வரலாற்றின் ஒரு திருப்பு முனையாக இரண்டாம் தரைன் போர் கருதப்படுகிறது. பிரிதிவிராஜனின் தோல்வியால் சர்சுதி, சமானா, பூரம், ஆஜ்மீர் ஆகியவை கைப்பற்றப்பட்டு ஆயிரக்கணக்கான இந்துக்கள் கொல்லப்பட்டனர். இந்திய மண்ணில் துருக்கிய ஆட்சிக்கும் இஸ்லாமிய சமயத்திற்கும் இவ்வெற்றி அடிகோலியது.

**கன்னோசிப் போர்:** கி.பி. 1194-ல் கண்ணோசி அரசர் ஜெயச்சந்திரா மீது முகமது கோரி படையெடுத்தார். இதனால் ஏற்பட்ட சன்ட்வாரா போரில் ஜெயச்சந்திரா கொல்லப்பட்டார். இவ்வெற்றியால் ஆஸ்னி, வாரணாசி மற்றும் சில சிறிய நகரங்கள் முகமதுவிடம் வந்தன. இதன் பின்னர் துருக்கியர்களிடம் போரிட வேண்டிய குத்புதீன்

ஐபக்கை தன் இந்தியத் தளபதியாக அவர் நியமித்தார். ஏனைய இந்தியப் படையெடுப்புகள் யாவும் ஐபக்கால் மேற்கொள்ளப்பட்டன.

**கஜினி கோரி படையெடுப்பு - ஒரு ஒப்பு நோக்கு**

வரலாற்றாசிரியர்கள், முகமது கஜினியையும் முகமது கோரியையும் ஒப்பிடுவதுடன் இருவரது படையெடுப்புகளுக்கிடையேயும உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை எடுத்துச் சொல்கின்றனர்.

வீரத்திலும் வெற்றியிலும் கோரியை விட கஜினியே சிறந்தவர். முகமது கஜினியைப் போல முகமது கோரியை சிறந்த தளபது என்று சொல்ல முடியாது. தன் படையெடுப்புகளில் பெரும்பாலும் கஜனி வெற்றி பெற்றார். ஆனால் கோரி பலவற்றில் தோல்வி கண்டார். கஜனி சமய வெறியன். கோரி அரசியல் நோக்கத்தை பெரிதாகக் கருதியவர்.

முகமது கஜினி இந்தியா மீது படையெடுப்புகள் பதினேழு, முகமது கோரி எடுத்த படையெடுப்புகள் சிலவே. கஜினியின் படையெடுப்புகளின் முக்கிய நோக்கம் கொள்ளையடிப்பதும், கோயில்களை உடைப்பதுமே. புத்தி கூர்மை படைத்த கோரி, வெற்றியை எப்படியும் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதில் குறியாயிருந்தார்.

இந்தியக் கோவில்களைச் சுற்றி கஜினியின் படையெடுப்புகள் நடத்தப்பட்டன. நாடுகளைச் சுற்றி கோரியின் படையெடுப்புகள் இருந்தன. கைப்பற்றிய இடங்களில் நிலையான அரசை ஏற்படுத்துவது கஜினியின் நோக்கமல்ல. ஆனால் பிடித்த பகுதிகளில் நிலையான ஆட்சியைத் தர கோரி விரும்பினார்.

கஜினியின் படையெடுப்புகள் திடிர்த் தாக்குதல்கள், குறைந்த படைகளுடன் வேகமாகப் போரிடுவது அவரது வழக்கம். திட்டமிட்டு பெரும் படையுடன் போரிட்டு நிலப் பகுதிகளைக் கைப்பற்றுவது கோரியின் வழி. கஜினியின் படையெடுப்பு வெற்றிகள் நிலைக்கவில்லை. கோரியின் வெற்றிகள் நிலையானவை. கஜினியின் வெற்றியால் அவரது பேரரசே நிலைக்கவில்லை. கோரியின் நிலையான அரசை உருவாக்கின. தொடர் வெற்றிகள் மூலம் வரலாற்றின் பெயர் பெற்றவர் முகமது கஜினி. சில வெற்றிகளில் மூலம் நிலையான அரசை உருவாக்கி வரலாற்றில் நிலைத்தவர் முகமது கோரி தோல்விகளைக் கண்டு துவளாத இவ்விருவரின் வாழ்க்கை வரலாறும் பல பாடங்களைப் புகட்டுகின்றன.

**முஸ்லீம் மன்னர்களின் வெற்றிக்கான காரணங்கள்:**

வீரமும் ஆற்றலும் நிறைந்த இராஜபுத்திரர்கள் துருக்கியருடன் செய்த போர்களில் தோல்வி கண்டனர். இந்துக்களின் தோல்விக்கும் முஸ்லீம்களின் வெற்றிக்கும் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. வெப்பமான நாட்டில் வாழந்த இந்தியரிடம் ஆற்றல் குறைந்திருந்தது. குளிர்ப்பிரதேசத்தில் இருந்து வந்த புலால் உண்ணும் துருக்கியரிடம் உடலுரம் மிகுந்திருந்தது. இதனால் துருக்கியர் வென்றனர் என்பது ஸ்மித், லேன்பூல் போன்றோரின் கருத்து.

இவை பொதுவான காரணங்கள் உண்மையான காணங்களை சமூகக் காரணங்கள், பொருளாதாரக் காரணங்கள், அரசியல் காரணங்கள், படைக் காரணங்கள் பிற காரணங்கள் எனப் பிரித்து அறியலாம்.

**I) சமூகக் காரணங்கள்:**

**1) சாதிப் பிரிவினைகள்:** இந்திய சமூகத்தில் நிலவிய சாதிப் பாகுபாடுகள் தோல்விக்கு முக்கிய காரணம். அந்நியரை எதிர்ப்பதும் போர் புரிவதும் தம் கடமை அல்ல: சத்திரியரின் கடமை எனக் கருதிய பிற குலத்தவர் போர்களில் கலந்து கொள்ளவில்லை. அடிமைகளைப் போல உரிமையற்றிருந்த பிற இந்திய இனத்தவரும் துருக்கியரை வரவேற்க உதவி புரிந்தனர். இஸ்லாமியர்கள் சகோதர உணர்வுடன் வேறுபாடின்றி ஒன்றுபட்டு செயலாற்றினர்.

**2) சமூக சீர் குலைவு:**

இந்திய மன்னர்களும் நிலமானியப் பிரபுக்களும் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தனர். மது, மாது, சூதாட்டம், வேட்டையாடல் ஆகியவற்றில் பொழுதைக் கழித்தனர். இதனால் ஒழுக்கக் கேடு அதிகரித்து போரிடும் தன்மையை அவர்கள் இழந்தனர்.

**3) இராஜபுத்திரரின் தனித்தன்மை:**

தங்கள் இனத்தவர் தவிர மற்றவர்களை இராஜபுத்திரர்கள் இழிவாகக் கருதினர். பிறருடைய பண்புகளையும் கலாச்சாரத்தையும் ஏற்கவில்லை. தனித்தன்மையுடன் வாழந்த அவர்களுக்கு மக்களின் முழு ஆதரவும் கிடைக்கவில்லை.

**4) சோதிடம், சாத்திரத்தில் அதிக நம்பிக்கை:**

தன் முயற்சி என்பதை மறந்து கரும விதி என்பதை இந்தியர் கண் மூடித்தனமாக நம்பினர். சோதிடமும் சாத்திரமும் அவர்கள் நம்பிக்கையை தகர்த்தன.

எடுத்துக்காட்டாக, துருக்கயரிடம் தோல்வி அடைவது உறுதி என்று சோதிடன் கூறியதை நம்பி இக்தியாருதீனை எதிர்க்காமல் ஓடி ஒளிந்தான் வங்க மன்னன் இலக்குமணசேனன்.

**5) உயர்ந்தோர் என்ற மனப்பாங்கு:**

தம்மைப் பற்றி உயர்வாகக் கருதிய இந்தியர்கள் தங்களைப் போல சிறந்தவர் எவருமில்லை. தங்கள் பண்பாடும் கலையும் சிறந்தவை என இறுமாந்தனர். அதே சமயம் இஸ்லாமியரை தாழ்வாக எண்ணி குறைத்து மதிப்பிட்டனர்.

**II. பொருளியல் காரணங்கள்:**

1) இந்திய செல்வம்: இந்தியக் கோயில்களில் இருந்த விக்ரங்களும் பிற அணிகலன்களும் முகமது கஜினியைப் பெரிதும் கவர்ந்தன. இச்செல்வத்தைக் கொண்டு தன் பேரரசை நிலை நாட்டமுடியும் என்று கருதிய அவர் இந்தியா மீது படையெடுத்தார்.

2) வளமான இந்தியா: செல்வங்களை கோயில்களின் சேமித்து வைத்திருக்கும், இந்தியப் பகுதிகள் வளமானவையாயிருக்கும் அவற்றைக் கைப்பற்றி முஸ்லீம் பேரரசை நிறுவலாம் என முகமது கோரி எண்ணினார்.

**III. சமயக் காரணம்**

போருக்கு மதப் பூச்சு: இந்துக்களை எதிர்த்து செய்யப்படும் போர்களை புனிதப் போர்களாக முஸ்லீம்கள் கருதினர். சிலை வழிபாடு செய்வோரை அழிப்பதை கடமையாகக் கருதினர். எனவே சமய வைராக்கியத்துடன் இந்துக்களை எதிர்த்துப் போரிட்டனர்.

**IV. அரசியல் காரணங்கள்:**

1, அரசியல் ஒற்றுமையின்மை: இந்திய அரசர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையே முஸ்லீம்களிடம் இந்துக்கள் தோற்றதற்கு முக்கிய காரணம். பல சிறு அரசுகளாக இந்தியா பிளவுபட்டிருந்தது. அச்சிற்றரசர்களிடையேயும் சமூக உறவில்லை. பொது எதிரியை எதிர்த்துப் போரிட வேண்டிய தருணத்திலும் அவர்கள் ஒன்றுபடவில்லை.

2. இந்தியரின் குறுகிய மனப்பாண்மை: பகைமை உணர்வுடன் பொறாமை கொண்டு இந்திய அரசர்கள் ஆட்சி செய்தனர். தேசிய சிந்தனையின்றி குறுகிய பிரதேசப் பற்றே அவர்களிடம் இருந்தது. தங்கள் நலனில் மட்டும் குறியாயிருந்த

அவர்கள், நெருக்கடியான நேரத்திலும் இந்தியாவின் பொது நன்மையை எண்ணிப் பார்க்க மறந்தனர்.

**V படைக்காரணங்கள்:**

1. இராணுவ அமைப்பு: இந்தியரின் இராணுவ அமைப்பும் அவர்களது தோல்விக்கும் முஸ்லீம்களின் வெற்றிக்கும் முக்கிய காரணம். இராணுவ அமைப்பு, போர்க் கருவிகள், போரிடும் முறை ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை இந்தியா அறியவில்லை. அதே சமயம் ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் போர் முறைகளை அறிந்த முஸ்லீம்கள் சிறப்பாக போரிட்டனர்.

2. படைப்பிரிவுகள் : இருப்புப் படை (Reserve force) வைத்துக் கொள்ளாததுடன் யானைப் படையை நம்பி இந்தியர்கள் ஏமாந்தனர். அப்படைகளுக்கு போதிய ஆயுதங்களோ, சரியான பயிற்சியோ இல்லாமலிருந்தன. துருக்கியரின் படைகளில் சிறந்த குதிரைகள், குறைந்த அளவு யானைகள், தலை சிறந்த ஈட்டி வீரர்கள் இருந்தனர். இதில் சிறந்தது வெற்றி பெற்றது.

3. போர் அணி வகுப்பு: இந்திய படையில் அரசரும் தலைமைத் தளபதியும் முன்னே செல்ல மற்ற படைகள் அவர் பின்னே அணி வகுத்துச் செல்லும். அம்பாரி கட்டிய உயரமான யானை மீது அமர்ந்து அரசர் போருக்குச் செல்வார். இதனால் அவரை எதிரிகள் எளிதாக அடையாளம் கண்டு வீழ்த்தி விட்டு, அவர் படைகளை சிதறடிக்க செய்வர்.

போருக்கு முன் போர்க் களத்தின் நில அமைப்பு, எப்படி தாக்கினால் எதிரியை வீழ்த்தலாம் என்பதில் முஸ்லீம்கள் நாட்டம் செலுத்தினர். இதில் கவனம் செலுத்தாத இந்தியர், வஞ்சகமாக மறைந்து தாக்கும் முறைகளையும் கையாளவில்லை.

4. போர்த் திறமை: போர்க் களங்களை தங்கள் வீரத்தை வெளிப்படுத்தும் இடமாக இந்தியர் கருதினர். வெற்றி பெறுவதை முக்கிய நோக்கமாகக் கருதவில்லை. ஆனால் துருக்கியரோ, எப்படியும் வெற்றி பெற வேண்டும் என நினைத்தனர். சாகசமாகப் போரிடுவதிலும் வல்லவராயிருந்தனர்.

ஒரே நோக்கத்துடன் ஒரு கொடியின் கீழ் ஒரு தளபதியின் தலைமையில் துருக்கிப் படைகள் போரிட்டன. தனித் தனி தலைவன், தனிக்கொடி இவற்றின் கீழ் பிரிந்து போரிட்ட இராஜப்புத்திரப் படைகள் எளிதில் தோற்றன.

5. போர் ஆயுதங்கள்: நேருக்கு நேர் போரிடப் பயன்படும் வாள், வேல், ஈட்டி, கதை ஆகியவற்றைக் கொண்டு இந்தியப்படைகள் போரிட்டன. நீண்ட ஈட்டிகள்,

நஞ்சு தோய்த்த அம்பகள், கவுண்டுக்கல் இவற்றை கொண்டு மறைந்து தாக்கினர் துருக்கியர்.

**VI. பிற காரணங்கள்:**

1) இந்தியரின் தவறான கணிப்பு: சாகர், குஷாணனர், கிரேக்கர்களைப் போல முஸ்லீம்களும் பஞ்சாப் பகுதியுடன் நின்ற விடுவர், பிற பகுதிகளில் பரவமாட்டார்கள் என தவறாகக் கணித்த இந்தியர், முஸ்லீம்களின் படையெடுப்பை தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை.

2) இந்தியரின் தவறுகள்: முகமது கஜினியிடம் தோற்ற ஜெயபாலன், படை பலத்தைப் பெருக்கி மீண்டும் போரிட்டிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் போர்த் தோல்வி மாளாது தீயில் குதித்து உயிர் நீத்தார். சிந்து அரசர் தாகீரும் இறுதிவரை போரிடாமல் தற்கொலை செய்து கொண்டார்.

தன் தளபதியில் மரணத்தால் மனமுடைந்த பிரிதிவிராஜன், போர்க்களத்திலிருந்து தப்பிக்க முயன்று எதிரிகளிடம் பிடிபட்டான்.

கி.பி. 1194-ல் வெற்றி பெரும் தருவாயிலிருந்த கன்னோசி அரசர் ஜெயச்சந்திரன் கண்ணில் பாய்ந்த அம்பு, போரின் முடிவை மாற்றியது. இவ்வாறு இந்தியரின் தவறுகளும் சந்தர்ப்பங்களும் முஸ்லீம்களுக்கு வெற்றியை அளித்தன.

வீரச் செயல்களையும் போரையும் தொழிலாகக் கொண்ட இராஜபுத்திரர்கள் தோல்வியடைந்ததற்கான காரணங்களை அறிந்தோம். அவர்களது குறைகளும் சாதகமற்ற சூழ்நிலைகளும் முஸ்லீம்களை வெற்றி பெறச் செய்தன.

**அடிமை வம்சம் -குத்புதின் ஐபக்**

கி.பி. 1206 முதல் 1290 வரை இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லீம் ஆட்சியாளர்கள், அடிமைகளாகவோ (அ) அடிமைகளின் வாரிசுகளாகவோ இருந்தனர். எனவே அவர்களை அடிமை வம்சம் என்கின்றனர். அவ்வம்சத்தின் முதல் ஆட்சியாளரே குத்புதீன் ஐபக்.

குத்புதீனின் இளமைப் பருவம்: துருக்கியப் பெற்றோர்களுக்குப் பிறந்த சிறுவனாக இருந்த போதே நிஷாபூரில் ஒரு காஜிக்கு விற்கப்பட்டார். காஜியின் மகன்கள், அவரை முகமது கோரியிடம் விற்றனர். அவர் தன் விசுவாசத்தாலும் வீரத்தாலும் படைத்தலைவர் ஆனார். இரண்டாம் தரைன் போருக்குப் பின்னர், இந்தியாவில் தான் வென்ற பகுதிகளை குத்புதீனின் பொறுப்பில் முகமது கோரி

விட்டர். 1192 முதல் 1202க்குள் மீரட், டெல்லி, அன்கில்வாட், பதௌன், சந்த்வார், கன்னோசி, கஜீராஹோ முதலிய பகுதிகளை குத்புதீன் கைப்பற்றினார்.

சுல்தானாக குத்புதீன்: ஆண் குழந்தை இல்லாத முகமது கோரி, 1206-ல் குத்புதீனுக்கு "மாலிக்" என்ற பட்டம் அளித்தார். மார்ச் 1206ல் முகமது கோரி இறந்ததும். குத்புதீனைத் தம் தலைவராகும்படி லாகூர் மக்கள் வேண்டினர். அதை ஏற்ற அவர், 1206-ஜீன், 24-ஆம் நாளன்று சுல்தானாக முடி சூட்டிக் கொண்டார். தன் மகளை இல்துத்மிஷிக்கும் தங்கையை நசீருத்தீன் சூபாச்சாவிற்கும் மணம் செய்து கொடுத்தார். தாஜீதீன் இல்தூஸின் மகளை அவர் மணந்தார். இவற்றால் தன் நிலையை அவர் வலுப்படுத்திக் கொண்டார்.

நான்கு ஆண்டுகள் (1206-10) மட்டுமே சுல்தானாக குத்புதீன் இருந்தார். அந்தக் காலம் முழுவதும் வடமேற்குப் பிரதேசத்தின் விவகாரங்களிலும் வங்காளத்தின் சிக்கல்களிலும் அவர் மூழ்கியிருந்தார். எனவே புதிய படையெடுப்புகளை மேற்கொள்ளவோ, தன் ஆட்சியை நிலை நிறுத்தவோ அவரால் முடியவில்லை. குதிரை மீதமர்ந்து சௌகான் (Polo போன்ற விளையாட்டு) விளையாடி போது கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தால் நவம்பர்-1210ல் குத்புதீன் ஐபக் இறந்தார்.

மதிப்பீடு: குத்புதீன் ஐபக்கிடம், துருக்கியருக்குரிய அஞ்சா நெஞ்சமும் பாரசீகர்க்குரிய தாராள குணமும் இருந்தன. அவரது தயாள குணம் லாக் பக்ஷா என்ற பட்டத்தை அவருக்கு பெற்றுத் தந்தது. கட்டிடக் கலையில் நாட்டம் கொண்டிருந்த அவர், டெல்லியில் குவ்வத்-துல்-இஸ்லாம் மசூதியையும் அஜ்மீரில் ஒரு மசூதியையும் கட்டினார். இஸ்லாமிய ஞானி குவாஜா குத்புதீன் பக்தியார் காகியின் நினைவாக 1199-ல் அவர் கட்டத் தொடங்கிய ஸ்தூபி 1220-ல் இல்துத்மிஷ்-ஆல் கட்டி முடிக்கப்பட்டு குதுப்மினார் எனப்பட்டது.

முஸ்லீம்களின் தொழுகைக்கு அழைப்பதற்காகக் கட்டப்பட்ட அது, பின்னர் வெற்றி கோபுரமாக மாற்றப்பட்டதாம். நான்காவது மாடியை மின்னல் தாக்கி சேதப்படுத்தியதால், நான்காவது மாடியை இடித்துவிட்டு இரண்டு சிறிய மாடிகளை ஃபெரோஸ் துக்ளக் கட்டினார். இதனால் குதுப்மினாரின் உயரம் 240 அடி ஆயற்று. அடிமை வம்ச சுல்தான்களின் கட்டிடக் கலையைப் பறைசாற்றும் சிறந்த சான்று குதுப்மினார்.

## இல்துத்மிஷ்

குத்புதீன் ஐபக்கிற்கு பின் அவரது மகன் "ஆராம்ஷா" அடிமை வம்சத்தின் சுல்தான் ஆனார். ஆனால் அவரை விரும்பாத டெல்லி பிரபுக்கள், குத்புதீனின் அடிமையையும், மருமகனும், பதௌன் ஆளுநரும் ஆன இல் துத்மிஷ்-ஐ அரியணையின் அமர அழைத்தனர். அவ்வழைப்பை ஏற்ற அவர், 1211-ல் ஆராம்ஷாவைத் தோற்கடித்து டில்லி சுல்தான் ஆனார்.

**இல்துத்மிஷின் இளமை வாழ்க்கை:**

இல்பரி துருக்கிய இனத்தில் பிறந்த இல்துத்மிஷை அவரது சகோதரர்கள் ஒரு வணிகரிடம் விற்றனர். வணிகரிடமிருந்து வாங்கிய பிரபு ஒருவர், அவரை குத்புதீனிடம் விற்றார். அழகிய தோற்றம், புத்தி கூர்மை, வீரம் ஆகியன கொண்ட இல்துத்மிஷ், அடிமை வாழ்வில் தொடங்கி பல பதவிகளை வகித்தார். இவரது நேர்மையும் திறமையும் கண்ட குத்புதீன், தன் மகளை இவருக்கு மணமுடித்தார். முடிவில் 1211 முதல் 1236 வரை அடிமை வம்சத்தின் சுல்தானாக அவர் ஆட்சி புரிந்தார்.

**இல்துத்மிஷின் வெற்றிகளும் முக்கிய நிகழ்ச்சிகளும்**

அரியணை ஏறியதும் பல பிரச்சினைகள் இல்துத்மிஷைச் சூழ்ந்தன. ஆனால் வீரமும் தீரமும் புத்தி சாதுர்யமும் நிறைந்த இல்துத்மிஷ், அவற்றை எல்லாம் திறம்பட சமாளித்தார்.

1) டெல்லி அமீர்கள் அடக்கப்படல்: டெல்லியிலுள்ள குத்பி, முயிஸ்ஸி அமீர்கள், இல்துத்மிஷின் மேலாண்மையை ஏற்றக் கொள்ள மறுத்து கிளர்ச்சி செய்தனர். டில்லிக்கு அருகில் உள்ள ஜீட் சமவெளியில் அவ்வமீர்களைத் தோற்கடித்து, அவர்களின் கிளர்ச்சியை இல்துத்மிஷ் அடக்கினார்.

2) இல்தூரஸ் தோல்வி: இல்துத்மிஷிக்கு எதிரான வலிமையான போட்டியாளர்களுள் முக்கியமானவர் தாஜீத்தின் இல்தூரஸ், கஜினியின் அரசரான இல்தூரஸ், 1214-ல் குபாச்சாவிடமிருந்து பஞ்சாபைக் கைப்பற்றிய பின் டெல்லி நோக்கி முன்னேறினார். இல்தூரசுக்கெதிராகப் படையெடுத்த இல்துத்மிஷ், வரலாற்றுச் சிறப்புமிக்க தரெய்ன்-ல் அவரைத் தோற்கடித்தார். சிறைபிடிக்கப்பட்ட இல்தூரஸ், பதௌன் கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டார்.

3. குபாச்சா தோற்கடிப்பு: மூல்தான், உச் பகுதிகளை நசீருத்தின் குபாச்சா ஆண்டு வந்தார். முஸ்லீம்கள் திரண்டு குபாச்சா தலைமையில் தனக்கெதிராகப்

புரட்சி செய்வர் என்று இல்துத்மிஷ் கருதினார். எனவே வருமுன் காக்க, 1217-ல் குபாச்சா மீது இல்துத்மிஷ் படையெடுத்தார். அதில் குபாச்சா தோற்றாலும் முழுவதுமாக நசுக்கப்படவில்லை. எனவே 1227-ல் மீண்டும் குபாச்சா மீது இல்துத்மிஷ் படையெடுத்தார். தோற்ற குபாச்சா தப்பி ஓடவே, அவரைப் பின் தொடர்ந்தார். இல்துத்மிஷ், கடைசியில் சிந்து நதியில் மூழ்கி குபாச்சா இறந்தார். அத்துடன் இல்துத்மிஷின் எதிரிகள் முழுவதுமாக ஒழிந்தனர்.

4. வங்கப் புரட்சி: குத்புதீன் ஐபக் இறந்ததும் வங்க ஆளுநராக அலி மர்தன் கான் நியமிக்கப்பட்டார். அவருக்குப் பின் ஆளுநரான ஹிசாமுத்தீன் இவாஸ், பீகாரைக் கைப்பற்றினார். 1225-ல் அவரைத் தோற்கடித்து தன் மேலாண்மையை ஒப்புக் கொள்ளச் செய்தார். இல்துத்மிஷ் மீண்டும் கிளர்ச்சி செய்த இவாஸை, தன் மகன் நசிருத்தீனை அனுப்பி தோற்கடித்து கொல்லச் செய்தார். இவாஸீக்குப் பின் பல்கா கில்ஜி என்பவர் வங்கத்தில் சுதந்திரக் கொடியை உயர்த்தினார். அவரை இல்துத்மிஷே படையெடுத்துச் சென்று, தோற்கடித்துக் கொன்று, அவரது பகுதியை சுல்தானியத்தடன் இணைத்தார்.

5. மங்கோலிய அச்சுறுத்தல் (கி.பி. 1221): தெமுஜின் என்றழைக்கப்பட்ட செங்கஸ்கான் தலைமையில் கிளம்பிய மங்கோலியர்கள் படையெடுப்பு, டில்லி சுல்தானியத்திற்கு பேரிடியாக இருந்தது.

முதலில் மத்திய ஆசிய நகரங்களைச் சூறையாடிய மங்கோலியர்கள், பிறகு குவாரிசம் ஷாவைத் தாக்கினர். தோற்ற ஷா, பஞ்சாப் நோக்கி ஓடினார். இந்தியாவிற்குள் அவர் தப்பி ஓடிவிடாதபடி, இந்திய எல்லையில் மங்கோலியர் காத்திருந்தனர். இவ்விக்கட்டான சூழ்நிலையில் தனக்கு உதவுமாறு இல்துத்மிஷிடம் ஷா வேண்டினார். ஆனால் ஷாவிற்கு உதவுவதன் மூலம் தன் சுல்தானியத்திற்கு மங்கோலிய ஆபத்தை தேடிக்கொள்ள இல்துத்மிஷ் விரும்பவில்லை. எனவே ஷாவிற்கு உதவ அவர் மறுத்துவிட்டார். நடுநிலையான டில்லி அரசைத் தாக்க விரும்பாத செங்கிஸ்கான் திரும்பிச் சென்றார். இவ்வாறு மங்கோலிய ஆபத்திலிருந்து டில்லி சுல்தானியம் காப்பாற்றப்பட்டது.

6. கலீஃபாவால் அங்கீகாரம்: கி.பி. 1228-ல் இந்திய முஸ்லீம் அரசின் ஆட்சியாளரான இல்துத்மிஷை, பாக்தாதில் இருந்த அப்பாசிது கலீஃபா அங்கீகரித்தார். இதன் மூலம் இல்துத்மிஷின்பதவி, சட்ட அளவில் உறுதியாயிற்று. இதனால் அவரை எதிர்த்து புரட்சி செய்வோர் செயலிழந்தனர்.

7. ராஜபுத்திர அரசுகள் மீது வெற்றி: தன் அரசியல் எதிரிகளைச் சமாளித்து பெரும் பெயர் பெற்ற இல்துத் மிஷ் ராஜபுத்திர அரசுகள் மீது தன் பார்வையை செலுத்தினார். அவரால் முதலில் தாக்குண்டானது குவாலியர். பெரும் முற்றுகைக்குப் பின் 1231-ல் குவாலியர் வீழ்ந்தது. தொடர்ந்து பில்ஸா, உஜ்ஜயினி, ரான்தாம்பர், மண்டு, களிஞ்சர் ஆகிய ராஜபுத்திர சிற்றரசுகளும் இல்துத்மிஷிடம் வீழ்ந்தன. ஆனால் குஜராத்தைக் கைப்பற்ற அவர் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை.

**மதிப்பீடு:**

ஜாக்கிரதையான வீரரும் வெற்றிகரமான தளபதியுமான இல்துத்மிஷ், சுமார் 25 ஆண்டுகள், டில்லி சுல்தானாக இருந்தார். இதுவரை ஆண்ட அடிமை வம்ச அரசர்களுள் சிறந்தவர் இல்துத்மிஷ். கோரிக்கு மகனாக ஐபக் இருந்தது போல் ஐபக்கிற்கு இல்துத்மிஷ் இருந்தார். சுல்தான்-இ-ஆலம் என்ற பட்டம் பெற்றிருந்த இவரை வரலாற்றாசிரியர்கள் ஒருமித்த குரலில் புகழ்கின்றனர். "முஸ்லீம் இந்தியாவின் வரலாறு இவருடன் தான் தொடங்குகிறது" என்கிறார் திரிபாதி". கி.பி. 1290 வரை நீடித்த டில்லி சுல்தானியத்தின் தலை சிறந்த ஆட்சியாளராக இல்துத்மிஷைக் கருதலாம்" என்பது மஜீம்தாரின் கருத்து.

## பால்பனின் ஆட்சி

இல்துத்மிஷ்-க்குப் பின் டெல்லி அரியணையில் அமர்ந்த முதல் இந்தியப் பெண்மணி சுல்தானா ரஸியா, 1236 முதல் 1240 வரை டெல்லி சுல்தானியத்தை ஆட்சி செய்தார். தந்தை (இல்துத் மிஷ்)யைப் போல திறமையாக ஆட்சி செய்தார். தன் முகத்திரையை அகற்றிவிட்டு ஆண் வேடமிட்டு ஆட்சி புரிந்தார். ஜமாலுதீன் யகூத் என்ற அபிசீனிய அதிகாரிக்கு அவர் காட்டிய சலுகை அவரது வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. புரட்சியாளர்களால் சிறை வைக்கப்பட்ட, ரஸியாவை விடுவித்த மலீக் அல்தூனியாவை, ரஸியா மணந்து கொண்டார். ஆனால் 1240-ல் இருவருமே கொல்லப்பட்டனர். அவரைத் தொடர்ந்து பஹ்ராம்ஷா (1240-1242) அலாவுதீன் மசூத்ஷா (1242-1246) மற்றும் நசீருதீன் மகமூத் (1246-1265) ஆகியோர் டெல்லி சுல்தான்களாயினர். நசீருதின் காலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த பால்பன், 1266-ல் தானே சுல்தான் ஆனார்.

அடிமையாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கிய பால்பன், குடிநீர் தூக்கி, வேட்டைக்காரன், படைத்தளபதி, அரசியல் மூதறிஞர், அமைச்சர் ஆகிய பதவிகளைக் கடந்து அரியணையிலும் அமர்ந்தார். நாற்பதாண்டுகள்

சுல்தானியத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த அவர், சுல்தானியத்தை நிலைப்படுத்தியதுடன், சுல்தானின் அதிகாரத்தையும் நிலை நாட்டினார். இதனால் தான் அடிமை வம்சத்தின் சிறந்த அரசர்" என பால்பன் போற்றப்படுகிறார்.

**பால்பனின் வாழ்க்கை**

பஹாவுத்தீன் என்ற இயற்பெயர் கொண்ட பால்பன், இல்பாரி துருக்கிய இனத்தில் பிறந்தார். சிறுவயதில் மங்கோலியரால் சிறைபிடிக்கப்பட்டு, பஸ்ராவைச் சேர்ந்த ஜமாலுதீனிடம் விற்கப்பட்டார். அவர் பால்பனை இல்துத்மிஷிடம் விற்றார். அவரால் "நாற்பதின் மரில்" ஒருவரான பால்பன், ரஸியா காலத்தில் தலைமை வேட்டைக்காரர் ஆனார். பஹ்ராம் காலத்தில் படைமானியத் தலைவராகவும் நசீருதின் மகமூதிடம் தலைமை ஆலோசகராகவும் பணியாற்றினார்.

அமைச்சராக பால்பன்: நசீருத்தீன் மகமூத் பெயரளில் மட்டுமே சுல்தானாக இருந்தார். உண்மையில், அதிகாரங்கள் அனைத்தும் பால்பனிடமே இருந்தன. சதிகாரர்கள் வலையில் வீழ்ந்த நசீருதீன், 1253-ல் பால்பனை பதவி நீக்கம் செய்தார். ஆனால் 1254-ல் மீண்டும் பதவிக்கு வந்தார் பால்பன். அதுமுதல் 1260 வரையிலான காலத்தில் பல கலகங்களையும், அவுத்தைச் சேர்ந்த குத்லுகான், மேவாட் சிற்றரசர் ஆகியோரையும் பால்பன் அடக்கினார்.

**சுல்தான் பால்பனின் சாதனைகள்**

1265-ல் சுல்தான் நசீருத்தின் மகமூத் இறந்ததும், கியாசுத்தீன் பால்பன் என்றப் பட்டப் பெயரில் பால்பன் அரியணை ஏறினார். இருபது ஆண்டுகள் சுல்தானாக இருந்த அவர் பல சாதனைகளை புரிந்தார்.

முடியாட்சியின் மதிப்பை உயர்த்துதல்: அரசின் பெருமையையும், அரியணையின் அதிகாரத்தையும் நிலை நாட்டுவதை தன் முதல் பணியாக பால்பன் கருதினார். இதற்கென பல புதிய வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் நடைமுறையில் அவர் கொண்டு வந்தார்.

சுல்தானின் புகழை உயர்த்த துருக்கியின் புராதன நாயகன் அஃப்ரசியூப் வழியில் வந்தவர் என்று தன்னை கூறிக் கொண்டார். அரண்மனையில் ஆடம்பரமும் அலங்காரமும் புகுத்தப்பட்டது. உயர்குடியினரிடம் நெருங்கிப் பழகாமல் அவர்களிடமிருந்து விலகியே இருந்தார். மது அருந்துவதை கைவிட்டதுடன் உயர்குடி

மக்களும் அதிகாரிகளும் மது அருந்துவதை தடை செய்தார். எத்தகைய களியாட்டங்களிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. தன் மகனின் இறப்புச் செய்தி கேட்டு பிறர் மத்தியில் அவர் அழவில்லை. இவ்வாறு சுல்தான் மற்றும் அரியணையின் புகழை அவர் உயர்த்தினார்.

**நாற்பதின்மர் குழு அழிப்பு:** இல்துத்மிஷ் காலத்தில் உருவான "நாற்பது துருக்கிய உயர்குடி மக்கள் கொண்ட குழுவே "நாற்பதின்மர் குழு" எனப்பட்டது. பதிமூன்றாம் நூற்றாண்டு முழுதும் டில்லி சுல்தான்களின் இறப்புக்குப்பின் அடுத்த சுல்தானை நிர்ணயிப்பதும் அந்த சுல்தான்கள் காலத்தில் அரசின் அதிகாரமும் நாற்பதின்மரிடமுமே இருந்தது. குத்புதீனுக்குப் பின் இல்துத்மிஷ், பின்னர் ருக்னிதீன் ஃபிரோஸ், பஹ்ராம் ஷா, மசூத் ஷா, நசீருதீன் மகமூத் ஆகியோரை இக்குழுவே சுல்தான் ஆக்கியது. இக்குழுவின் தலைவராக இருந்த பால்பனே 1265-ல் சுல்தான் ஆனார். இவ்வாறு அரியணை என்பத நாற்பதின்மரின் கொடையாக இருந்தது.

அதிகாரம் மிக்க நாற்பதின்மர் குழுவின் கைப்பாவையாக சுல்தான் இருந்தார். சுல்தானின் அதிகாரத்தை பெருமளவில் குறைத்தவிட்ட இக்குழு, பின்னர் தனக்கெதிராகவும் செயல்படும் என பால்பன் கருதினார். எனவே நாற்பதின்மரின் அதிகாரத்தை குறைக்க, அக்குழுவிற்குள் இளம் துருக்கியர்களை பதவி உயர்த்தினார். தவறும் செய்யும் நாற்பதின்மர் குழு உறுப்பினர்க்கு கடும் தண்டனை அளித்தார். இவற்றால் நாற்பதின்மரின் நச்சுப் பற்கள் பிடுங்கப்பட்டன. ஆனால் நாற்பதின்மர் வீழ்ச்சியால் துருக்கியரிடமிருந்த ஆட்சி கில்ஜிக்களிடம் மாறியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**இராணுவச் சீர்திருத்தங்கள்:**

நாட்டின் அமைதிக்கு வலிமையான இராணுவம் தேவை என பால்பன் உணர்ந்திருந்தார். இராணுவத்தை சீர்திருத்த முதலில் இராணுவ வீரர்கள் பணி பற்றிய வரலாற்றை ஆராயச் செய்தார். இராணுவ சேவைக்காக போர் வீரர்களுக்கு நிலங்களை மானியமாகத் தருவதை நிறுத்தினார். அதற்கு முந்தைய ஆட்சியில் போர் வீரர்களுக்குத் தரப்பட்ட நிலங்களை திரும்பப் பெற்றார். சிறந்த போர் வீரர்களை ஏராளமான அளவில் இராணுவத்தில் சேர்த்து, அவர்களின் திறமையை அதிகரிக்கச் செய்தார்.

இராணுவத் துறைக்கென இமாதுல் முல்க் என்பவரை இராணுவ அமைச்சராக நியமித்தார். போர் வீரரைத் தேர்ந்தெடுத்தல், அவர்களுக்கு போர்ப் பயிற்சி, சம்பள பட்டுவாடா ஆகியவற்றை அவ்வமைச்சர் கவனித்துக் கொண்டார்.

**ஒற்றர் முறை:** தன் வல்லாட்சியை பாதுகாத்துக் கொள்ள சிறந்த ஒற்றர் முறையை பால்பன் அமைத்தார். கணிசமான ஊதியம், சரியாக ஊழியம் செய்யாதோர்க்கு கடுமையான தண்டனை இவற்றை அளித்ததன் மூலம் நாட்டின் மூலை முடுக்குகளில் நிகழும் நடப்புகளும் பால்பனுக்குத் தெரிய வந்தன.

**புரட்சிகள் ஒடுக்கல்:** நாட்டில் தலைதூக்கிய புரட்சிகளையும் குழப்பங்களையும் இரும்புக்கரம் கொண்டு பால்பன் அடக்கினார். இராணுவத்தின் உதவி கொண்டு டில்லியின் சுற்றுப்புறங்களில் உள்ள காட்டை அழித்து விளை நிலமாக்கினார். அதன் மூலம் அப்பகுதியில் திருடர் பயம் ஒழிந்தது.

தோ ஆப் எனப்படும் கங்கை, யமுனை பள்ளத்தாக்குப் பகுதியில் இருந்த கொள்ளையர்களை பால்பனே நேரில் சென்று அடக்கினர். தனக்கெதிராகக் கலகம் செய்த ரோஹில்கந் கொள்ளையரை ஒடுக்கி அப்பகுதியில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டினார்.

தீய ஆலோசகர்களின் ஆலோசனையால் பேராசை கொண்ட வங்க ஆளுநர் துக்ரில்கான் 1280-ல் கிளர்ச்சி செய்தார். அவரை அடக்க அவுத் ஆளுநர் அமீர்கான் தலைமையில் அனுப்பிய படை துக்ரில்கானிடம் தோல்வி கண்டது. துக்ரில் கானை அடக்க பால்பன் மேற்கொண்ட அடுத்த இரு படையெடுப்புகளும் வெற்றி பெறவில்லை. எனவே அவரை அடக்க பால்பன் தாமே புறப்பட்டார். இதை அறிந்த துக்ரில், கிழக்கு மாவட்டங்களுக்கு தப்பி ஒடினார். முடிவில் பிடிபட்ட அவர், தலை துண்டிக்கப்பட்டு இறந்தார்.

**மங்கோலிய அச்சுறுத்தல்:** தன் ஆட்சிக்காலம் முழுதும் மங்கோலிய பயத்திலேயே பால்பன் வாழ்ந்தார். எனவே மங்கோலிய ஊடுறுவலைத் தடுக்க பால்பன் பெரும் முயற்சி செய்தார். வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களில் இருந்த திறமையற்ற ஆளுநர்களை நீக்கினர். எல்லைப் புறத்தில் வரிசையாக பல கோட்டைகள் கட்டினார். அவற்றில் ஆப்கானிய வீரர்களை காவலுக்கு நியமித்தார்.

எனினும் சட்லெஜ் நதியைக் கடந்து நாட்டுக்குள் நுழைவதில் மங்கோலியர் வெற்றி பெற்றனர். 1279-ல் மங்கோலியரை விரட்டுவதில் பால்பனின் இருபுதல்வர்கள் வெற்றி கண்டனர். ஆனால் 1286-ல் மங்கோலியருடன் நடந்த மோதலில் பால்பனின் மூத்த மகன் முகமதுகான் இறந்தார்.

பால்பன் மரணம்: சிறந்த ஆட்சியாளரும் கல்விமானும் ஆன மகன் முகமது கானின் மரணம், பால்பனை பேரதிர்ச்சிக்குள்ளாகியது. இதனால் உடல் நலம் பாதிக்கப்பட்ட பால்பன், தன் பேரன் காய் குஸ்ரூவைத் தன் வாரிசாக நியமனம் செய்துவிட்டு, 1287-ல் இறந்தார்.

**மதிப்பீடு:**

நாற்பதாண்டுகள் வட இந்திய அரசியலை ஆக்கிரமித்திருந்த பால்பன், முடியாட்சியின் பெருமையை உயர்த்தினார். சுல்தானுக்கு மக்கள்கீழ்படியச் செய்தார். மங்கோலியப் படையெடுப்பை முறியடித்தார். சுல்தானிய அரசை நிலைநிறுத்தி நீண்ட காலம் நாட்டை அமைதியாக ஆட்சி செய்ததால், அடிமை வம்சத்தின் சிறந்த அரசராக பால்பன் போற்றப்படுகிறார்.

## அலாவுதின் கில்ஜி

பால்பன் இறந்ததும் கைகோபாத் (1287-1290) என்பவர் டெல்லி சுல்தான் ஆனார். அவரைக் கொலை செய்துவிட்டு ஜலாலுதீன் ஃபெரோஸ் கில்ஜி என்ற பெயரில் மலீக் ஃபெரோஸ் என்பவர் டெல்லி சுல்தான் ஆனார். 70 வயதான ஜலாலுதீன் கில்ஜி 1290 முதல் 1296 வரை டெல்லி சுல்தானாக இருந்தார். அவரைக் கொன்று விட்டு அக்டோபர் 1296-ல், அவரது மருமகனான அலாவுதீன் கில்ஜி டெல்லி சுல்தான் ஆனார்.

கி.பி. 1316 வரை (இருபது ஆண்டுகள்) ஆட்சி செய்த அவர், இந்தியா முழுவதையும் சுல்தானியத்தின் கீழ் கொண்டு வந்தார். தன் தளபதில்கள் (குறிப்பாக மாலிக் காபூர்) மூலம் தென்னிந்தியாவை வென்ற முதல் ஆட்சியாளர் இவரே. பல சீர்திருத்தங்களையும் கொண்டு வந்தார். இவற்றால்தான் "இரத்த வெறி பிடித்த இரக்கமற்ற கொடுங்கோலராக இருந்தாலும், அவர் சக்தி வாய்ந்த திறமையான ஆட்சியாளர் என்பதை யாரும் மறுக்க முடியாது" என்கிறார் லேன்பூல், அலாவுதீன் கில்ஜியின் வட, தென்னிந்திய படையெடுப்புகள், மங்கோலியருடன் போர், இராணுவ,

பொருளாதாரச் சீர்திருத்தங்கள், அங்காடிக் கட்டுப்பாடுகள் ஆகியன பற்றிக் காண்போம்.

**வட இந்தியப் படையெடுப்புகள்**

அலெக்சாண்டரின் இராணுவ வெற்றிகளைப் பொன்ற வெற்றிகள் பெற்று, இந்தியாவின் சிறந்த அரசர் என்று பெயர் பெற விரும்பினார். அலாவுதீன் கில்ஜி. தமது வட, தென்னிந்தியப் படையெடுப்புகளில் வெற்றி பெற்ற அவரை இரண்டாம் அலெக்சாண்டர் என சிலர் குறிப்பிடுகின்றனர்.

குஜராத் (கி.பி. 1297): குஜராத்தை கைப்பற்ற தன் தளபதிகள் உலுக் கான் மற்றும் நஸ்ரத் கானை கி.பி. 1297-ல் அனுப்பினார் அலாவுதீன். சுல்தானியப் படைகளைக் கண்ட குஜராத் அரசர் ராஜா காரான், தேவகிரிக்கு தப்பி ஓடினார். சுல்தானியப் படையிடம் பிடிபட்ட அவரது மனைவி ராணி கமலாதேவி, அலாவுதீனின் அபிமான ராணியானார் குஜராத் முழுவதுமாக கொள்ளையடிக்கப்பட்டது. அலாவுதீனின் சிறந்த தளபதியாக உருவான மாலிக் காபூர், இங்கிருந்துதான் அடிமையாக நஸ்ரத் கானால் வாங்கப்பட்டார்.

ராந்தாம்பூர் (கி.பி. 1299-1301): ராந்தாம்பூரை ராணா ஹமீர் தேவ் ஆண்டு வந்தார். இதன் மீதும் படையெடுக்க உலுக்கானும் நஸ்ரத் கானும் அனுப்பப்பட்டனர். முற்றுகையின் போது நஸ்ரத்கான் கொல்லப்பட்டார். உலுக்கான விரட்டியடிக்கப்பட்டார். சுல்தானியப் படைகளின் தோல்வியை அறிந்த அலாவுதீன் கில்ஜி, தானே போர்க்களம் புகுந்தார். ஹமீர்தேவ் வலிமையாக அலாவுதீனை எதிர்த்தார். போரில் வெல்ல முடியாத, அரணை, ராணாவின் தளபதி ராணா மால்-ஐ கைக்குள் போட்டு, கி.பி. 1301-ல் பிடித்தார் அலாவுதீன். ஹமீர் தேவும், பிற இராஜ புத்திரரும் போரில் உயிரிழந்தனர். நயவஞ்சக தளபதி ராணா மால் கொல்லப்பட்டார். ராந்தாம்பூரின் ஆட்சிப் பொறுப்பை உலுக்கானிடம் ஒப்படைத்துவிட்டு டில்லி திரும்பினார் அலாவுதீன்.

மேவார் (கி.பி. 1303): அலாவுதீனின் அடுத்த தாக்குதலுக்கு இலக்கான மேவாரை ராணா ரத்தன்சிங் ஆண்டுவந்தார். பெரும் படையுடன் கி.பி. 1303-ல் மேவார் மீது அலாவுதீன் படையெடுத்தார். நீண்ட முற்றுகைக்குப் பின் மேவாரின் சித்தூர் கோட்டை வீழ்ந்தது. 30,000க்கும் மேற்பட்ட இராஜபுத்திரர்கள் உயிரிழந்தனர். ராணாவின் மனைவி ராணி பத்மினி உட்பட பல இராஜபுத்திரப் பெண்கள், ஜௌகார்

முறைப்படி தீயில் பாய்ந்து உயிர்விட்டனர். ராணி பத்மினியை அடைவதற்காகவே மேவார் மீது அலாவுதின் படையெடுத்தார்.

**மாளவம்:** மாளவத்தை கைப்பற்ற முல்தான் ஆளுநர் ஜனுல் மூல்க் தலைமையில் ஒரு படையை கி.பி. 1305-ல் அலாவுதீன் அனுப்பினார். மாளவ அரசர் தோற்கடிக்கப்பட்டு, மாளவத்தின் ஆளுநராக்கப்பட்டார் ஜனுல் முல்க். 1308-ல் மார்வாரின் கோட்டை சிவானவும் ஜேலர்-ம் கைப்பற்றப்பட்டன. பின்னர் மாண்டு, உஜ்ஜயினி, தார், சந்தேரி ஆகிய இராஜபுத்திர நகரங்களும் அலாவுதீனிடம் வீழ்ந்தன.

**தென்னிந்திய படையெடுப்புகள்**

பெரும் செல்வத்தைப் பெறவும் பல இடங்களைக் கைப்பற்றவும் தன் படைகளுக்கு வேலை தரவும் தென்னிந்தியா மீது அலாவுதீன் கில்ஜி படையெடுத்தார் எனப்படுகிறது. கி.பி. 1305 வாக்கில் வட இந்தியா முழுவதையும் வெற்றி கொண்டு விட்ட அலாவுதீன், பின்னர் தென்னிந்தியா மீது தன் பார்வையை செலுத்தினார்.

தேவகிரி (கி.பி. 1307-08): சுல்தான் ஜலாலுதீன் கில்ஜி காலத்திலேயே யாதவ அரசான தேவகிரி மீது அலாவுதீன் படையெடுத்தார். அவரிடம் தோல்வி கண்ட தேவகிரி அரசர் இராமச்சந்திர தேவ், கப்பம் செலுத்துவதாக ஒப்புக் கொண்டார். ஆனால் அவர் முறையாக கப்பம் செலுத்தவில்லை. எனவே கப்பத்திற்காகவும், குஜராத்திலிருந்து தப்பி ஒடிவந்து தேவகிரியில் தங்கியிருக்கும் தேவலதேவி (குஜராத் அரசர் ராஜாகாரனின் மகள்)யை டில்லிக்கு கொண்டு செல்லவும் தேவகிரி மீது படையெடுக்குமாறு மாலிக் காபூரை அலாவுதீன் கில்ஜி பணித்தார்.

(குஜராத்தில் நஸ்ரத் கான்-ஆல் 1000 தினார்களுக்கு வாங்கப்பட்ட இந்து அடிமை, டெல்லிக்குக் கொண்டு வரப்பட்டு மாலிக் கபூர் என்று பெயரிடப்பட்டார். அலாவுதீன் கில்ஜியின் வசீர் ஆசி, பின்னர் தளபதி ஆக உயர்ந்த அவர், அலாவுதீன் கில்ஜிக்காக தென்னிந்திய அரசுகளை வென்றார். அலாவுதீனுக்குப் பிறகு டெல்லி சுல்தானாக அவர் முயன்றதால், அவரும் அவரது உதவியாளர்களும் (அலாவுதீன் இறந்த 36-வது நாளில்-பிப்ரவரி-6, 1316) கொலை செய்யப்பட்டனர்.

மாலிக் காபூரிடம் தோற்ற இராமச்சந்திர தேவ், டில்லி சென்ற அலாவுதீன் கில்ஜியின் மேலாண்மையை ஒப்புக்கொண்டார். அலாவுதீன் மகன் கிஸிர் கானுக்கு தேவலதேவியை மண முடிக்கப்பட்டது.

**வாரங்கல் (கி.பி 1309-10):** வாரங்கால்-ஐத் தலைநகராகக் கொண்டிருந்த காகத்திய அரசுக் கெதிராக, தன் அடுத்த படையெடுப்பை மாலிக் காபூர் 1309-ல் மேற்கொண்டார். கடுமையாக எதிர்த்த பின் வேறு வழியின்ற காகத்திய அரசர் இரண்டாம் பிரதாபருத்திரர் அடி பணிந்தார். பெரும் செல்வத்தை கப்பமாகக் கட்டி, அலாவுதீன் மேலாண்மையை அவர் ஒப்புக் கொண்டார்.

**துவார சமுத்திரம் (கி.பி. 1310-11):** ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரு பள்ளாளர், துவாரசமுத்திரத்தை ஆண்டு கொண்டிருந்தார். அதன் மீது படையெடுக்க மாலிக்காபூர், குவாஜா ஹாஜி ஆகியோர் தலைமையிலான படையை அலாவுதீன் கில்ஜி அனுப்பினார். இத்திடீர்ப் படையெடுப்புபில் வீரப்பள்ளாளர் தோல்வியுற்றார். அதிக தங்கத்தையும் வெள்ளியையும் கொடுத்து அலாவுதீனக்கு அடிபணிவதாக அவர் ஒப்புக் கொண்டார்.

**மதுரை:** வீரபாண்டியர், சுந்தர பாண்டியர் இடையிலான வாரிசுரிமைப் போரால், மாலிக் காபூரின் தாக்குதலுக்கு பாண்டிய அரசான மதுரை இலக்காயிற்று. வாரிசுரிமைப் போரில் தோற்ற சுந்தர பாண்டியர், டில்லி சென்று அலாவுதீனிடம் தன் வழக்கை முறையிட்டார். இதை ஒரு காரணமாகக் கொண்டு பாண்டிய அரசில் புகுந்து மதுரை நகர் மற்றும் பல இடங்களில் உள்ள ஆலயங்களை மாலிக் காபூர் கொள்ளையிட்டார். தப்பி ஒடிய வீரபாண்டியரைப் பிடிக்க இராமேஸ்வரம் வரை காபூர் சென்றார். அங்கு ஒரு மசூதியை அவர் கட்டுவித்தார்.

**மீண்டும் தேவகிரி:** தேவகிரி அரசர் இராமச்சந்திர தேவின் மகன் சங்கர தேவ், டில்லிக்கு ஒழுங்காக கப்பம் செலுத்தவில்லை. அவர் மீது கி.பி. 1312-ல் படையெடுத்து மாலிக் காபூர், அவரை போர்க்களத்தில் கொன்றார். அலாவுதீன் கில்ஜிக்காக தான் மேற்கொண்ட படையெடுப்புகளில் மாலிக் காபூர் பெரும் வெற்றி பெற்றார். அவ்வெற்றிகள் மூலம் அலாவுதீனின் அதிகாரமும் பேரரசின் பெருமையையும் உயர்ந்ததுடன் பெரும் செல்வமும் கிடைத்தது. தன் மேலாண்மையை ஒப்புக் கொண்ட தக்கான அரசுகளை டில்லி சுல்தானியத்துடன் அலாவுதீன் கில்ஜி இணைத்துக் கொள்ளவில்லை.

**மங்கோலியருடன் போர்**

ஜலாலுதின் கில்ஜியின் மரணத்தை (கி.பி. 1296) இந்தியா மீது படையெடுக்க தக்க தருணம் எனக்கருதினார் மங்கோலியத் தலைவர் தாவூத்கான். எனவே 1297

முதல் 1306 வரை பலமுறை இந்தியா மீது மங்கோலியர் படையெடுத்தனர். 1297-ல் காதர் தலைமையில் நிகழ்ந்த முதல் மங்கோலிப் படையெடுப்பை அலாவுதீனின் தளபதிகளான உலுக்கானும் ஜபார்கானும் இணைத்து முறியடித்தனர். 1299-ல் ஏற்பட்ட இரண்டாவது மங்கோலியப்-படையெடுப்பை ஜபார்கான் முறியடித்தார். பின்னர் குத்லுக் குவாஜா தலைமையில் வந்த மங்கோலியர், சுல்தானியத் தலைநகரை பிறபகுதிகளிடமிருந்து துண்டித்தனர். பிரச்னையை ஜபார்கான் மீண்டும் சமாளித்தார்.

நான்காவது படையெடுப்புக்குப் பின் எல்லைப் புறக்கோட்டைகளையும் காவல் நிலையங்களையும் அலாவுதீன் வலுப்படுத்தினார். எனினும் 1305-லும் மீண்டும் வந்த மங்கோலியரை அலாவுதீனின் தளபதிகள் திறமையாக சமாளித்து, சுல்தானியத்தை காப்பாற்றினார்.

**அலாவுதீன் சீர்திருத்தங்கள்**

அலாவுதீன் சீர்திருத்தங்கள் அவர் புகழை நிலைத்து நிற்கச் செய்தனர். அதை உள்நாட்டுக் கொள்கை என்றும் சிலர் சொல்வர்.

முடியாட்சிக் கோட்பாடு: தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் அலாவுதீன் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அரசுக் காரியங்கில் உலேமாக்கள் (சமயவாதிகள்) தலையிடுவதை அவர் அனுமதிக்கவில்லை. முப்படைகள், நீதித்துறை, ஆட்சித்துறை ஆகியவற்றிற்கு சுல்தானே தலைவர். அவரே நாட்டின் ஒப்பற்ற ஒரே தலைவர்.

"சுல்தானின் எண்ணமே நாட்டின் சட்டம்: பிறர் யாரும் அவருக்கு ஆலோசனை மட்டும் சொல்லாம்: நாட்டுக்குத் தேவையானதை சுல்தான் மட்டுமே ஆணையிடலாம்" என்பதே அலாவுதீனின் முடியாட்சிக் கோட்பாடாம்.

**இராணுவச் சீர்திருத்தங்கள்:** தன் முடியாட்சிக் கோட்பாட்டைக் காக்கவும், பல இடங்களை வெல்லவும் மங்கோலியப் படையெடுப்பில் இருந்து நாட்டைக் காக்கவும் சக்தி வாய்ந்த படை தேவைப்பட்டது.

ஃபெரிஷ்டாவின் கூற்றுப்படி, அலாவுதீனின் இராணுவத்தில் 475000/- குதிரை வீரர்கள் இருந்தனர். இராணுவத்தின் திறமையை அதிகரிக்கச் செய்ய அடிக்கடி இராணுவ வீரர்கள். ஆயுதங்கள் மற்றும் குதிரைகள் ஆய்வு செய்யப்பட்டன. அத்துடன் இராணுவ அமைப்பிலும் நிர்வாகத்திலும் பல சீர்திருத்தங்களை அலாவுதீன் புகுத்தினார். அவை:

சுல்தானியத் தலைநகரில் நிலையான இராணுவத்தை ஏற்படுத்தினார். அரசுக் கருவூலத்தில் இருந்து நேரடியாக இராணுவ வீரர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. சுல்தானுக்காக, சுல்தானால் ஐந்தர்கள் எனப்படும் பாதுகாவலர்கள் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். துருக்கிய மாதிரியிலான எண்ணிக்கை முறையில் இராணுவம் அமைக்கப்பட்டது. போலி இராணுவ வீரர்கள் உருவாவதைத் தடுக்க போர் வீரர்கள் பற்றிய தனிக் குறிப்புகள் தயாரிக்கும் வழக்கம் கொண்டு வரப்பட்டது. ஆய்வுச் சமயத்தில் வேறு குதிரைகளைக் காட்டுவதை நீக்க, போர் வீரரின் குதிரைகளுக்கு சூடு போடும் முறையைக் கொண்டு வந்தார். மொத்தத்தில் இராணுவத்தின் பண்பும் ஒழுங்குணர்வும் உயர்ந்த தரமுடையதாக இருக்கும் வண்ணம் இராணுவ அமைப்பு முறையில் தனிக்கவனம் செலுத்தினார் அலாவுதீன்.

**அங்காடிக் கட்டுப்பாடுகள்:** பெரும் படையைப் பேணவும் இராணுவச் சீர்திருத்தங்களை அமுலாக்கவும் அரசு ஊழியரின் ஊதியத்தை உயர்த்தாமல் இருக்கவும் பொருள்களின் விலையை கட்டுப்படுத்துவதுடன் பல அங்காடிக் கட்டுப்பாடுகளையும் செய்ய வேண்டியது அலாவுதீன் கில்ஜிக்கு அவசியமாக இருந்தது. அதற்காக அத்தியாவசியப் பண்டங்கள் துணி மற்றும் பல முக்கியமான பொருள்களுக்கு அங்காடிகளில் உள்ள விலையை விட குறைந்த விலையை நிர்ணயித்தார்.

விவசாயிகளிடமிருந்து தானியங்களை நேரடியாக வாங்கி குறிப்பிட்ட விலைக்கு விற்க சில வியாபாரிகளுக்கு மட்டும் தனி உரிமை வழங்கப்பட்டது. பொருள்களைப் பதுக்குவோர், கருப்புச் சந்தைக்காரர்கள் எடையிலும் அளவிலும் குறைத்து ஏமாற்றுவோர் ஆகியோருக்கு கடுமையான தண்டனைகள் தரப்பட்டன. விளைபொருள்கள் விளையும் இடங்களிலேயே விற்கப்பட வேண்டும்: விலை உயர்ந்த பொருள்களை வாங்கும் முன் பிரபுக்களும் உயர் அதிகாரிகளும் அரசிடமிருந்து முன் அனுமதி பெறவேண்டும் எனப்பட்டது.

இவ்வணிகச் சட்டங்களை அமுல்படுத்த திவானி - ரியாசத் - ஷானி மண்டி என்ற இரு உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அடிமைச் சிறுவர்களை கடைக்கு அனுப்பி பொருள்கள் வாங்கி வரச் செய்து விலைகளை சுல்தான் கண்காணித்தார். எடை குறைவாக பொருள்களை விற்கும் கடைக்காரரின் உடம்பிலிருந்து எடையைக் குறைத்துக் கொடுத்த அளவு சதை எடுக்கப்பட்டது.

இக்கட்டுப்பாடுகளால் தானியங்கள், துணிமணிகள், அத்தியாவசியப் பொருள்கள், குதிரைகள், அடிமைகள் ஆகியவற்றின் விலை குறைவாக இருந்தது. வறட்சிக் காலத்திலும் மக்களுக்கு தானியங்கள் கிடைத்தன என பரணி குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார சீர்திருத்தங்கள்: வருவாய்த் துறையைச் சீரமைத்த முதல் டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியே. அதற்காக பல பொருளாதாரச் சீர்திருத்தங்களை அவர் கொண்டு வந்தார். மானியங்களாக, நன்கொடையாக மற்றும் பரிசாக தரப்பட்ட நிலங்களை அரசு மீண்டும் எடுத்துக் கொண்டது. இத்தகைய முறையில் நிலம் தருவது நிறுத்தப்பட்டது.

கிராம அதிகாரி, வரி வசூல் செய்வோர் மற்றும் வருவாய் அதிகாரிகளுக்குத் தரப்பட்டிருந்த சலுகைகள் நீக்கப்பட்டன. நிலங்கள் சரியாக அளக்கப்பட்டன. விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு, விளைச்சலில் 50 சதவீதம் நிலவரியாக விதிக்கப்பட்டது. நிலவரியுடன் வீட்டுவரி, மேய்ச்சல் வரி, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரி, போரில் கிடைத்த கொள்ளைப் பொருள்கள் மீது வரி, இந்துக்கள் மீது ஜிஸியா வரி, முஸ்லீம்கள் மீது ஜகாத் வரி ஆகிய வசூலிக்கப்பட்டன. இச்சீர்திருத்தங்களைச் செயலாக்க நேர்மையான அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இதனால் வருவாய் அதிகரித்து கருவூலம் நிரம்பியது.

**மதிப்பீடு**

நிலையான இராணுவம், கடுமையான சட்டங்கள், சிறந்த அங்காடி நிர்வாகம், விந்தியத்தைக் கடத்தில் ஆகியன செய்த முதல் இந்திய ஆட்சியாளர் இவரே. அலாவுதீன் கில்ஜி இறந்ததும், ஏற்பட்ட வாரிசுரிமைப் போரில் அவரது மகன்களில் ஒருவரான முபாரக் குத்புதீன் முபாரக் என்ற பெயரில் சுல்தான் ஆனார். 1316 முதல் 1320 வரை ஆட்சி செய்த அவரே கடைசி கில்ஜி அரசர். அவரைக் கொன்றுவிட்டு (ஏப்ரல் 15, 1320) நசீருத்தீன் குஸ்ரூஷா என்பவர் டில்லி சுல்தான் ஆனார்.

## துக்ளக் வம்சம்

கடைசி கில்ஜி சுல்தானைக் கொன்றுவிட்டு சுல்தான் ஆன குஸ்ரூஷா, ஐந்து மாதங்கள் (ஏப்ரல்-செப். 1320) மட்டுமே ஆட்சி செய்தார். இடையராக இருந்து இஸ்லாமியரான அவருக்கு டெல்லியில் இருந்து துருக்கியரிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட காஸி மாலிக்,

குஸ்ரூஷாவைக் கொன்றுவிட்டு (செப்டம்பர்-1320) கியாசுதீன் துக்ளக் காஸி என்று பெயரில் டெல்லி சுல்தான் ஆனார். துக்ளக் வம்சத்தை நிறுவியரும் காஸி என்ற பட்டப்பெயர் வைத்துக் கொண்ட முதல் டெல்லி சுல்தானும் இவரே.

1320 முதல் 1325 வரை ஆட்சி செய்த கியாசுத்தீன் துக்ளக் இறந்ததும், உலுக்கான் என்ற பட்டம் பெற்ற முகம்மத் ஜவ்னா கான், முகமது பின் துக்ளக் என்ற பெயரில் டெல்லி சுல்தான் ஆனார்.

எளிய சிந்தனை, உயர்ந்த நோக்கங்கள், சிறந்த குணநலன்கள் இவை கொண்டிருந்த முகமது பின் துக்ளக் ஒரு ஒப்பற்ற தலைவர். "தொலைநோக்கு மட்டும் இல்லாதிருந்தால் அவரும் அவரது திட்டங்களும் தோல்வி கண்டன" என்பர். ஜியாவுத்தீன் பரணியின் "தரிக்கி ஃபெரோஸ்ஷாஹி என்ற நூலும், இப்ன்-பதூதாவின் பயணக் குறிப்புக்களும் துக்ளக் என்று அழைக்கப்படும் முகமது பின் துக்ளக் பற்றியும் அவரது சாதனைகள் பற்றியும் தெளிவாக உரைக்கின்றன.

**துக்ளக்கின் இளமைக் காலம்:** "பக்ருதீன் முகமது ஜீனாகான்" என்ற இயற்பெயர் கொண்ட முகமது பின் துக்ளக், சிறுவயதிலிருந்தே புத்தி கூர்மை உடையவராக இருந்தார். கில்ஜி வம்ச கடைசி அரசர் குஸ்ரூவின் லாயத்தில் குதிரை லாயத் தலைவராக துக்ளக் நியமிக்கப்பட்டார். இவரது தந்தையும் துக்ளக் வம்சத்தை ஸ்தாபித்தவருமான "சியாசுதீன் துக்ளக்", இவரை தன் அரியணை வாரிசாக நியமித்ததுடன் உலுக்கான் என்ற பட்டமும் கொடுத்தார். 1323-ல் வாரங்கல் அரசர் இரண்டாம் பிரதாபருத்திரருக்கு எதிராகவும் ஒரிசா மீதும் படையெடுத்து உலுக் கான் வெற்றி பெற்றார்.

வெற்றி வாகை சூடி வரும் பட்டத்து இளவரசரை வரவேற்க அமைக்கப்பட்ட பந்தல் சரிந்ததில் சிக்குண்டு சுல்தான் கியாசுதீன் துக்ளக் இறந்தார். அதன் மூலம் தந்தைக்கு பிறகு 1325-ல் முகமது பின் துகள்க் சுல்தான் ஆனார்.

**முகமது பின் துக்ளக்கின் ஆட்சிமுறை:**

1325 முதல் 1351 வரை சுல்தானாக இருந்த முகமது பின் துக்ளக், பேரரசின் வருவாயைப் பெருக்கவும் தலைநகரத்தைக் காப்பாற்றவும், நாணய முறையில் மாற்றம், செய்யவும் விரும்பினார். இவ்வாட்சி முறை நடவடிக்கைகள் யாவும் வீண் முயற்சியாயின.

**தோவாப் மீது வரி விதிப்பு:** சுல்தான் துக்ளக்கின் வள்ளல் தன்மையால் அரசுக் கருவூலம் காலியாயிற்று. எனவே கருவூலத்தை நிரப்பவும் தன்திட்டங்களுக்கும் படையெடுப்புகளுக்கும் தேவைப்படும் நிதியைத் திரட்ட வேண்டியது அவசியமாயிற்று. இதற்காக தோவாப் பகுதி (கங்கை-யமுனை நதிகளுக்கு இடையே உள்ள செழிப்பான பகுதிக்கு தோவாப் என்று பெயர்) மீது, 1325-27ல், நிலவரியை அதிகப்படுத்தியதுடன் பல புதிய வரிகளை விதித்தார். துக்ளக் வரிகள் இரட்டிப்பாக்கப்பட்டன என பதௌனியும் பத்து மடங்கு அதிகமாக விதிக்கப்பட்டன என பரணியும் கூறுகின்றனர்.

வரி அதிகரிக்கப்பட்ட அதே காலத்தில் துரதிருஷ்டவசமாக பஞ்சமும் மக்களை வாட்டியது. ஆனாலும் வரி கடுமையாக வசூலிக்கப்பட்டது. வரி கொடாதோர் தண்டிக்கப்பட்டனர். எனவே குடியானவர் அழுது புலம்பினர். செல்வந்தர்கள் அரசை எதிர்க்கத் துணிந்தனர். சில இடங்களில் கலகமும் ஏற்பட்டது. இதனால் மக்களிடம் மதிப்பிழந்தார் துக்ளக்.

வளமான தோவாப் பகுதி மீது வரி விதித்தது சரியே. ஆனால் திடீரென ஏற்பட்ட பஞ்சத்தால் சுல்தானின் திட்டம் தவிடு பொடியாயிற்று. பஞ்சத்தைப் போக்க கடன் வழங்கல், குடிநீர் வசதி செய்தல் போன்ற பல நிவாரண நடவடிக்கைகள் செய்ய வேண்டியதாயிற்று. எனவே வருவாய் கிடைப்பதற்கு பதிலாக செலவே அதிகமாயிற்று.

**தலைநகரை மாற்றுதல்:** டில்லியிலிருந்து தௌலதாபாத் என்றழைக்கப்பட்ட தேவகிரிக்கு சுல்தானியத்தின் தலைநகரை மாற்ற துக்ளக் முயற்சி செய்தார். அடிக்கடி நிகழும் மங்கோலியப் படையெடுப்புகளிலிருந்து தலைநகரைக் காப்பாற்றவும், சுல்தானியத்தின் மையத்தில் தலைநகர் இருக்கவும், தலைநகராக தௌலதாபாத் இருப்பது தென்னிந்தியப் படையெடுப்புகளுக்கு உதவியாக இருக்கும் என்பதற்காகவும் தலைநகரை மாற்றலாம் என துக்ளக் நினைத்தார் எனப்படுகிறது.

1326-27ல் தலைநகரத்தை டில்லியிலிருந்து 700 மைல் தூரத்திலுள்ள தேவகிரிக்கு மாற்றி அதற்கு தௌலதாபாத் என்று துக்ளக் பெயரிட்டார். டில்லியிலுள்ள அரசின் தலைமையகம், செயலகங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றை மாற்றியதுடன் அங்கு வசித்த எல்லா மக்களையும் புதிய தலைநகருக்கு செல்லுமாறு கட்டளையிட்டார். குருடர், செவிடர், உடல் ஊனமுற்றோர், நாய்கள், இவை கூட

டில்லியில் தங்க அனுமதிக்கப்படவில்லை. டில்லியில் உள்ள எந்த வீட்டிலிருந்தாவது அடுப்புப் புகை வருகிறதா என்று உப்பரிகையிலிருந்து சுல்தான் கண்காணித்தார் என்று கூட சொல்லப்படுகிறது.

கலிங்கப் போருக்குப் பின் ஞானம் பெற்ற அசோகரைப் போல மக்களின் துன்பங்களைக் கண்ட துக்ளக், தௌலதாபாத்தை விட்டு பழையபடி டில்லிக்கே செல்லுமாறு மக்களை பணித்தார். இதனால் மக்கள் மேலும் துன்பமுற்றனர். புதிய தலைநகர் மக்களற்ற காடாயிற்று. தன் பழைய பெருமையை டில்லி மீண்டும் அடைய பல ஆண்டுகள் ஆயிற்றாம். தலைநகர் மாற்றம் என்பது புதியதோ, முட்டாள்தனமானதோ அல்ல. ஆனால் அதைச் செய்த முறை மட்டுமே தவறானது அதனால் அரசம் மக்களும் அதிக நஷ்டமடைந்தனர்.

அடையாள நாணய முறை வெளியீடு: தோவாப் மீது வரி விதிப்பு தலைநகர் மாற்றம் இவற்றால் மக்களிடம் மதிப்பிழந்திருந்த துக்ளக், மேலும் மதிப்பிழக்க அடையாள நாணய முறைத் திட்டம் வழி வகுத்தது.

பரிசோதனைகள் செய்து பார்ப்பதில் ஆர்வம் கொண்ட துக்ளக், பாரசீக மற்றும் சீன மன்னர்களைப் போன்று, நாணய முறையில் சீர்திருத்தம் செய்ய விரும்பினார். அதற்காக அடையாள நாணய முறையை அவர் புகுத்தினார். போர்களாலும் கலகங்களாலும் காலியாவிட்ட கருவூலத்தை நிரப்ப அவர் செய்த முயற்சியே அது என்றும் சொல்வர்.

1329-30-ல் செப்பு நாணயங்களை அச்சிட்டு, அவற்றை சட்டப் பூர்வமான நாணயங்கள் தங்கம் வெள்ளி நாணயங்களுக்கு ஈடானவை என சுல்தான் அறிவித்தார். இப்பரிசோதனையும் படுதோல்வி கண்டது. நாணயம் அச்சிடுவது அரசின் தனி உரிமையாக்கப்பட்டதால் மக்களும் நாணயங்களை அச்சிட்டுக் கொண்டனர். ஒவ்வொரு இந்துவின் வீடும், நாணய அச்சுக் கூடமாயிற்று” என்றார் பரணி. தங்கம், வெள்ளி, நாணயங்கள் பதுக்கப்பட்டுவிட்டன. புதிய நாணயங்களை அயல் நாட்டு வணிகர்கள் வாங்கவில்லை. இதனால் வாணிகம் ஸ்தம்பித்தது. பொருளாதாரம் சீர்குலைந்தது. பொருளாதாரத்தை சீரமைக்க செப்பு நாணயங்களை திரும்பப் பெற்று அவற்றிற்கு பதிலாக தங்கம், வெள்ளி நாணயங்களை அரசு கொடுத்தது. அதற்காக மீண்டும் கள்ள நாணயங்களை மக்கள் அச்சிட்டனர். அரசுக் கருவூலம் முழுவதும் காலியாயிற்று.

படையெடுப்புக் கனவுகள்: உலகின் மன்னராக வேண்டுமென விரும்பிய துக்ளக், டிரான்சாக்கியானா, குராசான், ஈரான் ஆகிய பகுதிகளை வெற்றி கொள்வதற்கான திட்டத்தை தீட்டினார். 375000/- போர் வீரர்கள் கொண்ட படையைத் திரட்டினார். அப்படைக்கு ஓராண்டுக்குரிய ஊதியத்தை முன்னதாக கொடுத்தார். படையெடுப்புக்கான வேறு பல ஏற்பாடுகளையும் செய்தார். ஆனால் உலகை வெற்றி கொள்ள முடியாது என்பதை தாமதமாக உணர்ந்த சுல்தான், முடிவில் அப்படையைக் கலைத்துவிட்டார்.

1337-ல் பஞ்சாபில் கங்கார மாவட்டத்திலுள்ள நாகர்கோட் கோட்டையை வெற்றிகரமாக துக்ளக் கைப்பற்றினார். இமயமலை அடிவாரத்தில் இருந்ததாகக் கருதப்படும் குராஜல் மீது படையெடுக்க பெரும்படையொன்றை 1338-ல் அனுப்பினார். குராஜலை வென்றாலும் பருவ மழையால் ஏராளமான ஆட்சேதமும் பொருட்கள் சேதமும் ஏற்பட்டது.

மங்கோலியப் படையெடுப்பு: தமாஷிரின் தலைமையில் வந்த மங்கோலியர், லாகூர் முதல் முல்தான் வரையிலான பகுதிகளை நாசப்படுத்தியதுடன் மக்களுக்கு துன்பம் உண்டாக்கினர். மங்கோலியருக்கு வெகுமதிகள் அளித்து அவர்களுடனான போரை சுல்தான் தவிர்த்தார். இது சுல்தானின் இராணுவத்திற்கு இழுக்கை உண்டாக்கியது.

**சுல்தானின் மரணம்:**

குஜராத்தில் தோன்றிய கலகத்தை அடக்க சுல்தான் அங்கு விரைந்தார். கலகம் அடக்கப்படவே, கலகத் தலைவர் தகி, சிந்துவிலுள்ள தட்டாவிற்கு ஓடினார். அவரைப் பின் தொடர்ந்து தட்டா சென்ற சுல்தான் அங்கேயே நோய் வாய்ப்பட்டு கி.பி. 1351-ல் இறந்தார். சுல்தானின் மரணம் பற்றிக் கூறும் போது, "மக்களிடமிருந்து மன்னரும், மன்னரிடமிருந்து மக்களும் விடுதலையாயினர்" என்கிறார் பரணி.

**நிர்வாகக் குறைகள்:**

டில்லி சுல்தான்களுள் தனி இடம் வகிக்கும் முகமது பின் துக்ளக் தன் ஆட்சி முறை நடவடிக்கைகளில் தோல்வி கண்டார். அத்தோல்வி ஏன் ஏற்பட்டது என்று அறிவது அவசியம். தோவாப் பகுதி மீது வரி விதித்தது சரியான முடிவே. ஆனால் சுல்தானின் துரதிஷ்டம் வரி விதித்தகாலத்தில், பஞ்சம் ஏற்பட்டது. இதனால்

விதிக்கப்பட்ட வரி வசூலாகாததுடன் நிவாரண நடவடிக்கைகளுக்காக அதிக தொகை செலவிட வேண்டியதாயிற்று.

தலைநகர் மாற்றுதல் முகமது பின் துக்ளக்கின் மிக புத்திசாலித்தனமான செயல். தன் எண்ணத்தை மக்கள் அப்படியே ஏற்றுக் கொள்வார்கள் என சுல்தான் எதிர்பார்த்தார். அவருடைய எண்ணம் ஈடேறியிருந்தால் தென்னிந்திய நகரமொன்று வரலாற்றில் முதல் முறையாக இந்திய அரசின் தலைநகராகி -யிருக்கும். ஆனாலும் அரசு அலுவலகங்களை மட்டும் அவர் மாற்றி இருக்கலாம். மக்களின் கஷ்டங்களையும் அரசின் நஷ்டங்களையும் கணக்கிட கவனிக்க சுல்தான் மறந்தார். அடையாள நாணய முறையைப் புகுத்துவதன் மூலம் நாணயவரலாற்றில் ஒப்பற்ற இடம் பெற சுல்தான் நினைத்தார். மக்கள் நேர்மையானவர்கள் என்று நினைத்த அவர்,கள்ள நாணயங்களை மக்கள் அச்சிடுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

ஆட்சிமுறை நடவடிக்கைகளால் இழந்த பெயரை, படையெடுப்புகள் மூலம் பெறலாம் என நினைத்தார் துக்ளக். ஆனால் படையெடுத்த இடத்தின் புவியியலறிவு, இயற்கைத் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ளத் தவறியதால் அதிலும் வெற்றி பெறவில்லை. இவ்வாறு இயற்கையும் மக்களும் அவருக்கெதிராக சதி செய்தனர். அத்துடன் அவருடைய சரியான திட்டமிடாமை, தொலைநோக்கின்மை ஆகியன இணைந்து அவரை தோல்வி அடையச் செய்தன.

**சுல்தானின் குணநலன்கள்:**

வேறு எந்த இந்திய ஆட்சியாளர் பற்றியும் இல்லாத அளவிற்கு துக்ளக்கின் குணநலன்கள் பற்றி மட்டும், வரலாற்றாசிரியர்களும் அறிஞர்களும் வித்தியாசமான கருத்தைக் கொண்டுள்ளனர். கிறுக்கர், இரத்த வெறிபிடித்த கொடுங்கோலர் எனச் சிலரும், அத்தகைய அடைமொழிகள் அவருக்குப் பொருந்தாது. அவர் சிறந்த அறிஞர் எனச் சிலரும் கூறுகின்றனர். இக்கருத்துக்களை ஆராய்வது நல்லது. பல வகைத் திறமைகள் கொண்டிருந்த துக்ளக்கிற்கு இணையான டில்லி சுல்தான்கள் யாருமே இல்லை. பாரசீக மொழி, அரபி மொழியும் இலக்கியமும், இஸ்லாமிய மதக் கோட்பாடுகள், சட்ட திட்டங்கள் உட்பட கல்வி கேள்விகளில் சிறந்திருந்தார். தர்க்கம், தத்துவம், இயற்பியல், வேதியியல், மருத்துவம், கணிதம், வானவியல், ஆகியவற்றையும் அறிந்திருந்த அவரை, "அவர் கால அரிஸ்டாட்டில்" என்பர். வள்ளல் தன்மை, நடுநிலை பிறழாமை, மத நம்பிக்கை ஆகியவற்றிலும் சிறந்திருந்தார். எளிய

வாழ்க்கை, அதிக தன்னம்பிக்கை நல்ல சிந்த இவை கொண்டிருந்த அவரிடம் எந்த கெட்ட பழக்கமும் இல்லை.

**மதிப்பீடு:**

இத்தகைய சிறந்த குணநலன்கள் கொண்டிருந்த அவரை கிறுக்கர் என்றோ, மாறுபட்ட குணங்களைக் கொண்டவர் என்றோ, இப்ன் பதூதா தவிர எந்த வரலாற்றாசிரியரும் குறிப்பிடவில்லை. மேம்போக்காகப் பார்க்கும் போது எந்த மனிதனும் மாறுபட்ட குணங்களைக் கொண்டவனாகத் தான் தோன்றும் ஆனால் ஆராய்ந்தே தீர்ப்பளிக்க வேண்டும்.

நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கும் போது மனிதாபிமானத்துடன் சுல்தான் இருப்பார். அளிக்கப்பட்ட தீர்ப்பில் உள்ள தண்டனையை நிறைவேற்றுவதில் கட்டாயமாக இருப்பார். மனித இனத்தை அழிக்க வேண்டும். யாரையும் பயமுறுத்த வேண்டும் என்பதற்காக குரூரமாகவோ, கொடூரமாகவோ, அவர் நடந்து கொள்ளவில்லை. அவரது ஆட்சிமுறை நடவடிக்கைகளும் நீங்கானவை பிறரை புண்படுத்தியவை என்று கூற முடியாது.

ஆனாலும் சபல புத்தி, எதையும் விரைந்து செய்யாமை, தன் கருத்துக்களே சரி என்ற பிடிவாதம், மிதமிஞ்சிய தன்னம்பிக்கை முதலிய தீய குணங்கள் மட்டும் அவரிடமிருந்தன. இதற்காக மட்டும் அவரை குறைகூடுவது சரியல்ல. குணநலன்களுக்கும், சாதிக்கும் மனப்பான்மைக்காகவும் மறக்க முடியாத நபர் முகமது பின் துக்ளக்.

**லோடி வம்சம்**

முகமது பின் துக்ளக்கைத் தொடர்ந்து டெல்லி சுல்தான் ஆன ஃபெரோஸ் துக்ளக், 1351 முதல் 1398 வரை ஆட்சி செய்தார். 1398-99ல் ஏற்பட்ட தைமூர்படையெடுப்பால் துக்ளக் ஆட்சி நிலை குலைந்தது. துக்ளக் வம்சத்தின் கடைசி சுல்தான் நசீருத்தீன் மஹ்மூத்-ன் மரணத்துடன் (பிப்ரவரி 1413) துக்ளக் வம்ச ஆட்சி முடிவுற்றது. அது முதல் 1526-ல் டெல்லியில் மொகாலயர்களின் ஆதிக்கம் உருவாவதற்குள், சைய்யதுகள், லோடிக்கள் என்ற இருவம்சங்கள் டெல்லியை ஆட்சி செய்தன.

**சைய்யதுகள் (1414-1450)**

மே, 28-1414-ல் டெல்லி சுல்தான் ஆன கிஸ்ர் கான் சைய்யது, சைய்யது வம்சத்தின் ஆட்சியை துவக்கினார். 1414 முதல் 1450 வரையிலான 37 ஆண்டுகளில் கிஸ்ர் கான் (1414-1421) முபாரக் ஷா (1421-1434) முகம்மத் ஷா (1434-1445) அலாவுதீன் ஆலம் ஷா (1445-1450) என்ற நான்கு சைய்யது சுல்தான்கள் டெல்லியை ஆட்சி செய்தனர்.

**லோடிக்கள் (1451-1526)**

சைய்யது வம்சத்தின் கடைசி சுல்தான் அலாவுதீன் ஆலம். ஷாவைக் கொன்று, லோடி வம்சத்தை 1451-ல் பஹ்லால் லோடி தோற்றுவித்தார். இதன் மூலம் பட்டாணியரின் ஆட்சியை முதல் முதலாக அவர் நிறுவினார். 1451 முதல் 1485 வரை அவர் ஆட்சி செய்தார். அவருக்குப் பிறகு அவரது மூன்றாவது மகனான நிசாம் கான், சிக்கந்தர் ஷா என்ற பெயரில் டெல்லி சுல்தான் ஆனார். அவரே சிக்கந்தர் லோடி என்றும் அழைக்கப்பட்டார்.

சிக்கந்தர் லோடி, 1489 முதல் 1517 வரை ஆட்சி செய்தார். இஸ்லாமிய மத வெறியாளர் என்று சொல்லப்படும் இவர், லதுரா, உத்கிர், மண்ட்ரேல் ஆகிய இடங்களில் இருந்த கோயில்களை இடித்து அவ்விடங்களில் மசூதிகள் கட்டினார். கங்கை நதியில் இந்துக்கள் புனித நீராடுவதை தடை செய்தார். இந்துக்களுக்கெதிரான அவரது நடவடிக்கைகள் இந்துக்களின் மனதை புண்படுத்தின.

இவரது அண்ணன் பர்பக்ஷா, சிக்கந்தரின் ஆளுமையை ஏற்க மறுத்து ஜான்பூரில் புரட்சி செய்தர். அதை இரும்புக் கரம் கொண்டு சிக்கந்தர் லோடி அடக்கினார். சந்தேரி, நாக்பூர் ஆகியவற்றையும் அவர் கைப்பற்றினார். வேளாண்மையை ஊக்குவித்தார். 1504- ஆம் ஆண்டில் ஆக்ரா நகரை தோற்றுவித்ததும் இவரது சாதனை. 1517-ல் சிக்கந்தர் லோடி இறந்தார்.

இப்ராகீம் லோடி: சிக்கந்தர் லோடிக்குப் பின் அவரது மூத்த மகன் இப்ராகீம் லோடி, 1517 முதல் 1526 வரை டெல்லி சுல்தானாக இருந்தார். இணங்கிப் போகும் இயல்பில்லாத இவர், தன்னை ஆதரித்த ஆப்கானியப் பிரபுக்களையே துன்புறுத்தினார். பிரபுக்களின் சிறிய குற்றங்களுக்கும் கடும் தண்டனை வழங்கினார். இதனால் வெறுப்புற்ற சில பிரபுக்கள், இப்ராகீமின் சகோதரர் ஜலால்

லோடியை ஜான்பூர் அரசராக்கினார். பெரும் படையுடன் ஜான்பூர் சென்ற இப்ராகீம், ஜலாலைத் தோற்கடித்து கொன்றார். சந்தேகத்தின் பேரில் காரா ஆளுநர் ஆஸாம் ஹீமாயூனையும் அவரது மகனையும் சிறையிலடைத்தார் இப்ராகீம், அதை எதிர்த்து புரட்சி செய்த ஆஸாம் ஷீமாயூனின் மகனும் தோற்கடித்து கொல்லப்பட்டார்.

இப்ராகீம் லோடியின் கொடுமைகளைப் பொறுக்க முடியாத உயர் குடிப் பிரபுக்கள், இப்ராகீமின் சித்தப்பா ஆலம் கான் மற்றும் பஞ்சாப் ஆளுநர் தௌலத்கான் மூலம் இந்தியா மீது படையெடுக்குமாறு பாபருக்கு அழைப்பு விடுத்தனர். அவ்வழைப்பை ஏற்ற பாபர், 1526-ல் நடைபெற்ற முதல் பானிபட் போரில் இப்ராகீம் லோடியைத் தோற்கடித்து கொன்றார். இதனால் லோடி வம்ச ஆட்சி முடிவுற்றது: டெல்லி சுல்தானியம் வீழ்ந்தது: இந்தியாவின் ஆளுகை பாபரின் கரங்களில், மொகலாயரிடம் வந்தது”.

**சுல்தானியர் கால ஆட்சி முறை (Administration under Delhi Sulatante)**

டில்லி சுல்தானியரின் ஆட்சி கடவுள் சார்புடையதாகவே இருந்தது. அரசு தன்கென்று இஸ்லாமிய சமயத்தையே தேசிய சமயமாக வைத்துக் கொண்டிருந்தது. அரசாங்கமும் மதமும் தனித்தனியாக இயங்காமல் இரண்டும் ஒன்றாகவே இணைந்திருந்தன. குரான் கோட்பாடுகளே நாட்டின் உயர் சட்டமாக இருந்தது. சமய ஞானிகளான உலாமாக்கள் (Ulama) அதன் காவலர்களாகவும் விளக்க உரையாளர்களாகவும் விளங்கினர். இந்த டில்லி சுல்தானிய அரசு இந்தியாவை உருவ வழிபாட்டிலிருந்து ஒரே கடவுளாகிய அல்லா வழிபாட்டிற்கு மாற்றுவதையே (from dar-ul-harb to dar-ul-islam) அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**1. சுல்தான் (Sultan)**

உலகம் முழுவதிலுமுள்ள இஸ்லாமியர்களின் சமய தலைவராக முஸ்லீம் மன்னரே இருந்து வந்தார். அவர்தான் காலிப் அல்லது காலிபா (Caliph) என்று அழைக்கப்பட்டார். அந்த கலிபாவின் பிரதிநிதிதான் சுல்தான். எனவே கொள்கை அளவில் சுல்தான் கலிபாவிற்கு கட்டுப்பட்டே இருந்தார். கலிபாவிடமிருந்தே ஆட்சி சின்னங்களை பெற்று வந்தார். தம்மை காலிபின் பிரதிநிதி என்றும் தளபதி என்றும் நாணயங்களில் குறிப்பிட்டுக் கொண்டார். ஆனால் நடைமுறையில் முழுசுதந்திரத்துடனும், தனது விருப்பப்படியுமே ஆண்டார் தனது அரசைப் பொறுத்த அளவில் போப்பாகவும், சீராகவும் திகழ்ந்தார். கடவுளின் நிழலாக, பிரதிநிதியாக

தம்மைக் கருதிக் கொண்டார். உயர் நிர்வாக அதிகாரம், நீதித்துறை தலைமை, படைத்தலைமை அனைத்தும் அவர் கரங்களிலே இருந்தது. சுல்தான் ஒரு ராணுவ சர்வாதிகாரி போலவே ஆட்சி புரிந்தார்.

டில்லியில் சுல்தானாக அரசாட்சியை ஏற்கும் உரிமை எந்த ஒரு சட்டத்தினாலும் சரியாக வரையறுக்கப்படவில்லை. வாரிசு நிர்ணயம் செய்வதில் வலுவுள்ள துருக்கியப் பிரபுக்களே பங்கு பெற்றனர். பொதுவாக நோக்கும் பொழுது அடுத்த சுல்தானாக வரும் வாய்ப்பு காலஞ்சென்ற சுல்தானின் குடும்பத்தில் இருப்பவர்களுக்கே ஏற்படுவது வழக்கமாக இருந்தது. பிறப்பினால் கிடைக்கும் முதன்மை, நிர்வாகத்திறமை, இறந்த அரசரின் நியமனம் இவை எல்லாம் அடுத்துவரும் சுல்தானின் தகுதிகளாகக் கருதப்பட்டன. ஆனாலும் இறுதியில் வாளின் வலிமையே வாரிசுரிமை நிர்ணயிக்கும் சக்தியாக விளங்கியது!.

## 2. மத்திய அரசு (Central Government)

டில்லி சுல்தானிய அரசு ஒருமுகப்படுத்தப்பட்ட மைய ஆட்சி முறையை அடிப்படைகயாகக் கொண்டது. நிர்வாகத்தில் சுல்தானுக்கு உதவி செய்ய பல அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

a) திவானி வாசரத் (Diwan-i-Wazarat): இவர்தான் பிரதம மந்திரி. சுல்தானுக்கு அடுத்தப்படியாக உயர் அதிகாரம் படைத்தவர். நாட்டின் எல்லா துறைகளுக்கும் பொறுப்பானவர்.

b) திவானி அரிஸ் (Diwan-i-ariz): இவர் படை நிறுவனங்களின் பொதுக் கட்டுப்பாடு அமைச்சர் படைவீரர்களைத் தேர்ந்தெடுப்பது, அவர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியலை தயார் செய்வது, படைத்தளவாடங்களைக் கவனிப்பது இவர் பொறுப்பு.

c) திவானி ரசலத் (Diwan-i-Rasalat): அரசு ஆணை செய்திகளைப் பதிவு செய்து உரியோர்களுக்கு அனுப்புவது இவர் பொறுப்பு. இவருக்குக் கீழ் ஏராளமான தபிர்கள் (Dabris) பணியாற்றினார்

d) திவானி ரசலத் (Diwan-i-Rasalat): இவர் சமயத்துறை அமைச்சர் ஆவார். கல்வி வளர்ச்சிக்கு இவரே பொறுப்பாவார். நாட்டிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள் இவர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கின.

e) சாதர் உஸ்ஸீதூர் (Sadar us Sudur): இவர் அறநிலைய நீதித்துறை அமைச்சர் ஆவார்.

மேற்கண்ட அமைச்சர்களுள் வாசிர்தான் அதிகச் செல்வாக்குடன் விளங்கினார். பிற அமைச்சர்கள் அரசுச் செயலாளர்கள் போலவே நடந்து கொண்டனர். அமைச்சர் குழு முறை கிடையாது. அமைச்சர்களைத் தவிர தனிப்பட்ட நண்பர்கள், நம்பிக்கைக்குரிய உயர் அலுவலர்கள், உலாமாக்கள் அடங்கிய மஸ்லிஸ் இ கால்வட் (Majlis-I-Khalwat) என்ற ஆலோசானைக் குழு ஒன்று இருந்தது. நாட்டின் முக்கிய கொள்கை முடிவுகளை சுல்தான் இந்தக் குழுவில் வைத்து விவாதித்தார். அரண்மனை நிர்வாகத்தைக் கவனிக்க ஓர் உயர் அதிகாரி நியமிக்கப்பட்டார். அவரே அரசரின் மெய்காப்பாளர். அவர் அடிமைகளைக் கண்காணித்ததுடன் அரண்மனை லாயம், வாகனங்கள், போர்க்கருவிகள் செய்யும் கர்கான என்ற தொழிற்கூடங்களையும் மேற் பார்வையிடும் அதிகாரம் பெற்றிருந்தார்.

### 3. படை (Army)

டில்லி சுல்தான்கள் ஆட்சி மக்களின் சம்மதத்தை அல்லாமல் படை பலத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் மாற்று சமயத்தினருடைய நாட்டில் படைபலம் ஒன்றே உற்ற துணையாக இருந்தது. மேலும் அடிக்கடி நடைபெறும் மங்கோலியப் படையெடுப்புகளைச் சமாளிக்கவும் பெரும்படை ஒன்று தேவைப்பட்டது. எனவே டில்லி சுல்தான்கள் படைபலத்தைப் பேணுவதில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.

சுல்தானியரின் படைகள் நான்கு வகைகளாலானது 1) சுல்தானின் நேரடிக் கண்காணிப்பிலுள்ள நிலைப்படை 2) மாநில ஆளுநர்களும் பிரபுக்களும் வைத்திருந்த படை 3) போர்க் காலத்தில் மட்டும் உருவாக்கப்படும் படை 4) சுயேச்சையாகச் செயல்பட்டு வந்த முஸ்லீம் படை வீரர்கள் ஆகியவை ஆகும். சுல்தானியர்கள் படை ஓர் தேசியப் படையாக அமையவில்லை. அதில் துருக்கியர், ஆப்கானியர், பாரசீகர், அபசீனியர், இந்தியர் ஆகியோர் அடங்கியிருந்தனர். துருக்கியப் பிரபுக்களே படைத் தலைமையை ஏற்றனர். பெரும்பாலும் சுல்தான் தானே படைகளுக்குத் தலைமை தாங்கி போர்களத்திற்கு நடத்திச் செல்வதுண்டு. படையில் அமிர், கான், மாலிக் போன்ற பதவிகள் மூலம் படை அதிகாரிகள் தரம் பிரிக்கப்பட்டனர்.

படையில் வில்பயிற்சி பெற்ற காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகிய மூன்று பிரிவகள் இருந்தன. சுல்தானியப் படையில் குதிரை வீரர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். அலாவுதீன் கில்ஜி 4,75,000/- குதிரைப் படையினரை வைத்திருந்தார். போர்க் குதிரைகளைப் பிற பணிகளுக்குப் பயன்படுத்துவதை தடுக்க

சூடுபோடும் முறையே (Dagh system) அமுல் நடத்தினார். யானைப் படையைப் பேணுவதிலும் சுல்தான்கள் அக்கறை காட்டினர். முகமது பின் துக்ளக் மூவாயிரம் யானைகள் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. படை அமைப்பில் முக்கிய அதிகாரிகளாகக் கருதப்பட்டவர்கள் அரிஸ்-இ-மாலிக், நாயக் அரிஸ் மாலிக் ஆவார்.

படைவீரர்களுக்கு முதலில் சம்பளம் கொடுக்கும் முறை இருந்து வந்தது. ஆனால் பிரோஸ்ஷா துக்ளக் படை வீரர்களுக்கு மானியமளிப்பதையும், ஜாகிர் கொடுப்பதையும் வழக்கத்திற்குக் கொண்டு வந்தார். இது படைத்துறையில் பரம்பரை பாத்தியதை முறையைப் புகுத்தியது. இதனால் படையின் திறமை குறைந்ததுடன் அரசின் நேரடிக் கட்டுப்பாடும் தளர்வதற்குக் காரணமானது. சுல்தானியர் பீரங்கிப் படைமுறையை அறியவிட்டாலும் தானே இயக்குவதும், பலவகைப்பட்ட எந்திரங்களை உடையதுமான ஒருவகைக் குண்டு எறியும் எந்திரங்கள் கோட்டைப் போரில் பயன்படுத்தப்பட்டன அவை மஞ்சினிக்கு, மங்கோனல், மங்கோன் என அழைக்கப்பட்டன. அவை தீக்குண்டுகள், தீயம்புகள், பெருங்கற்கள், பாறைத் துண்டுகள், மண் அல்லது இரும்பிலான குண்டுகள், இரசக்கற்பூரம் அடங்கிய புட்டிகள், தேள்கள், பாம்புகள் முதலியவற்றை பகைவர் மீது எறிவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

கோட்டைகள் நாட்டின் வலிமைக்கு அடையாளமாக விளங்கின. ஒவ்வொரு கோட்டையும் கொத்தவாசல் (Kotawal) என்பவர் தலைமையில் வைக்கப்பட்டது. கோட்டை வாசல் சாவி அவரிடமே இருந்தது.

### 4. நிதி, வருவாய்த்துறைகள்: Finance

நிதித்துறையில் சுல்தானிய அரசு முஸ்லீம் ஜீரிகளில் ஹனபி (hanafi) என்ற பிரிவினர் கொண்டிருந்த பொருளாதாரக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. டில்லி சுல்தானியர்களுக்கு பொருள் வருவாய் மூலங்கள் ஐந்து ஆகும் 1) உஷர் (Usher): முஸ்லீம்களின் நிலங்களில் மொத்த விளைச்சலில் பத்தில் ஒரு பங்கு 2) கராஜ் (Kharaj): முஸ்லீம் அல்லாதார் மீது விதிக்கப்படும் நிலவரி 3) காம்ஸ் (Khams) போரின் போது கிடைக்கும் கொள்ளைப் பொருட்களில் ஐந்தில் ஒரு பகுதி 4) ஸாகத் (Zakat) : முஸ்லீம்கள்மீது விதிக்கப்படும் வரி, இவ்வருவாய் மசூதிகள் கட்டுவதற்கும், அறப்பணிகளுக்கும், சமய ஞானிகளுக்கு அன்பளிப்புக் கொடுக்கவும் பயன்படுத்தப்படும் 5)ஜிஸியா (Jizyal): இந்த வரி முஸ்லீம் அல்லாதவர்

களிடமிருந்து அவர்களின் உயிரையும் பொருளையும் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் படைத்துறை பணியிலிருந்து விலக்கு அளிக்கப் படுவதற்காகவும் ஈடாகத் தரப்பட வேண்டிய வரியாக வசூலிக்கப்பட்டது. பொதுவாக வரிகள் பணமாகவும் தானியமாகவும் கொடுக்கப்பட்டன.

இவை தவிர வீட்டு வரி, மேய்ச்சல் வரி, தண்ணீர் வரி, இறக்குமதி வரி, கனிப் பொருட்கள் மீதான வரி, வாரிசு இல்லாமல் இறப்பவர்களின் சொத்து, அன்பளிப்புகள் ஆகியவை அரசின் பிற வருவாய் இனங்களாகும்.

## டில்லி சுல்தானியர் கால சமூக, பொருளாதார பண்பாட்டு நிலை (Social, economic and cultural condition under Dehli sulatanate)

சுல்தானியர்கள் கால சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலை பற்றி அறிந்து கொள்வதற்கு அமிர்குஸ்ருவின், நூல்கள் மற்றும் அக்காலத்தில் எழுதப்பட்ட கதைகள், வெளிநாட்டுப் பயணகளின் குறிப்புகள், தனி மனிதர்கள் எழுதிய கடிதங்கள் நமக்கு மிகவும் உதவியாக உள்ளன. சுல்தானியர் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள், எழுதப்பட்ட இலக்கியங்கள் அவர்களின் பண்பாட்டு நிலையை நமக்கு தெரிவிக்கிறது. அவைகளைப் பற்றி விரிவாக நாம் இனி காணலாம்.

### 1. சமூக நிலை (Social condition)

#### a) அடிமை முறை:

டில்லி சுல்தானியர் ஆட்சிக்காலத்தல் முக்மதியர் வாழ்க்கை வசதிகளை அதிகமாகப் பெற்றிருந்ததின் காரணமாக அவர்களிடையே பல சமுதாயச் சீர்கேடுகள் காணப்பட்டன. சுல்தான்களும், பிரபுக்களும் ஆண், பெண் இருபாலரையும் அடிமையாக வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. அலாவுதீன் கில்ஜி ஐம்பது ஆயிரம் அடிமைகளை வைத்திருந்தான். பிரோஸ்ஷா துக்ளக்கின் அடிமைகளின் எண்ணிக்கை இரண்டு லட்சமாக இருந்தது. இதனால் அரசாங்க நிதி தேவைக்கு அதிகமாக செலவிடப்பட்டு நிதி குறைந்தது. மேலும் சீனா, துருக்கிஸ்தான், பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்தும் அடிமைகள் ஆண்களும் பெண்களுமாக வாங்கப்பட்டனர். போர் அல்லது பஞ்ச காலத்தில் நிலைமைக்கேற்ப அடிமைகளின் விலை மாறுபட்டது. ஆட்சியாளர்களுக்கும், பிரபுக்களுக்கும் அடிமைகளால் சில நன்மைகள் ஏற்பட்டிருந்தாலும் நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அது தடையாகவேயிருந்தது. "அடிமைத்தனம்" சமுதாயத்தின்

சாபக்கேடாகவும், முன்னேற்றமின்மைக்கு முத்திரையாகவும், சமுதாய வளர்ச்சிக்குத் தடையாகவும் இருந்தது.

**b) பெண்கள்:**

அக்காலத்தில் பெண்களின் கற்பு சிறப்புடன் விளங்கியது. ஆனால் அவர்கள் உரிமைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இந்துக்களிலும், முஸ்லீம்களிலும், பெண்கள் தங்கள் கணவர்களையோ, பிற ஆண் உறவினர்களையோ சார்ந்தே வாழ வேண்டியதிருந்தது. பெண்கள் முகத்திரை என்று சொல்லப்பட்ட "பர்தா (Budah) போட்டுக் கொள்ளும் பழக்கம் இருந்தது. பிறநாட்டுப் படையெடுப்பாளர்களிடம் இருந்து பெண்களைக் காப்பாற்றும் நோக்கத்துடனே பர்தா அணியும் பழக்கம் இந்தியாவில் புகுத்தப்பட்டது. சாதாரண கிராமத்துப் பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்வதிலேயே காலத்தைக் கழித்தனர்.

சில உயர்வகுப்புகளைச் சார்ந்த பெண்கள் கலைகளையும் அறிவியல் அறிவையும் வளர்ப்பதில் ஈடுபட்டனர். ரூபமதியும் பத்மாவதியும் (Rupamati, padmavathi) கற்றறிந்த பெண்களுக்கு எடுத்துக்காட்டாவார்கள். பாலியத் திருமணமும், உடன்கட்டை ஏறுதல் பழக்கமும் சில வகுப்பாரிடையே இருந்தது. தானமும் பிற அறச் செயல்களும் நிறைந்து சமுதாய வாழ்க்கையின் தரம் பொதுவாக உயர்ந்து காணப்பட்டாலும், மது மற்றும் மங்கயைர் மீது வெறி கொண்டு வாழ்ந்தவர்கள் அக்காலத்திலும் இருந்தனர்.

**c) முஸ்லீம்களும், இந்துக்களும்:**

டில்லி சுல்தான் ஆட்சிக்காலத்தில் முஸ்லீம்கள் பெரும் ஏகபோக வாழ்க்கை நடத்தியதாக அனேக சமுதாயச் சீர்கேடுகள் ஏற்பட்டன. பெண்களின் துணையை அதிகம் நாடிய பிரபுக்களும் முஸ்லீம்களும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி ஒழுக்கக் கெட்ட வாழ்க்கையை மேற்கொண்டனர். முஸ்லீம்கள் இந்துக்களுக்கு எஜமானர்களாகவே கருதப்பட்டனர். பல இந்துக்கள் முஸ்லீம்களின் கெடுபிடிகளின் காரணமாக இஸ்லாம் மதத்தைத் தழுவினர். மத மாற்றம் செய்வதற்கு அரசு எல்லாவித ஆதரவையும் கொடுத்து வந்தது. ஜிசியா வரி செலுத்தியவர்களுக்கு மத உரிமை கொடுக்கப்பட்டது.

இந்துப் பெண்கள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர். அலாவுதீன் காலத்தில் இந்துப் பெண்கள் முஸ்லீம் வீடுகளில் வீட்டு வேலை செய்தனர். இந்துக் கோவில்கள்

இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டன. இந்துக்களைத் தண்ணீர் எடுப்பதற்கும், மரம் வெட்டுவதற்கும் மட்டுமே பயன்படுத்தினர். பிரோஸ் துக்ளக், சிக்கந்தர், இப்ராகிம் லோடி போன்றோர் இந்து மதத்தை மிகத்தாழ்வுபடுத்தினர். பொதுவாக இந்துக்களின் நிலை மிக மோசமாக இருந்தது. அவர்கள் தலைதூக்கி நிற்க முடியவில்லை.

முகமதியர்களாக மாறிய இந்துக்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டதால் இந்து மதம் பலவீனம் அடைந்தது. இந்துக்கள், அரசியலிலும், சமூக நிலையிலும் தாழ்த்தப்பட்டதால் சமயக் கொள்கைகள் மூலம் ஆறுதல் அடைய முற்பட்டனர். தெற்கில் அமைந்த விஜயநகரப் பேரரசு இந்து மதத்தின் மேன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியது. அது இஸ்லாமிய மதத்தை தெற்கில் பரவவிடாதபடி தடுத்து நிறுத்தியது. இந்துப் பேரரசுகளான விஜயநகரமும், மேவாரும் முஸ்லீம்களின் மதக் கொள்கைகளுக்கு ஓர் எச்சரிக்கையாகவே அமைந்திருந்தன.

## II. பொருளாதார நிலை: Econonmic condition

டில்லி சுல்தானியர்கள் காலத்தில் நாடு அளவில்லாத பொருட் செல்வத்தால் புகழ் பெற்றிருந்தது. ஆனாலும் மக்களின் நிலையை உயர்த்துவற்கென்று நாடு எவ்விதப் பொருளாதாரக் கொள்கையையும் வகுக்கவில்லை. அலாவுதீன் கில்ஜியின் கடுமையான வரிகள் விவசாயிகளையும், வாணிகர்களையும் மிகவும் பாதித்தது. துக்ளக் காலத்தில் ஏற்பட்ட "பத்தாண்டு பஞ்சமும்" அவர் ஆட்சி முறையும் பொருளாதாரச் சீர்கேடுகளுக்குக் காரணமாயின.

அரசாங்கத்தின் ஆதரவும், வழிகாட்டுதலும் இல்லாமல் போனாலும், தொழிற்சாலைகளும், தொழில்களும் வளர்ச்சியடைந்தன. கைத்தொழில்களும், வாணிகமும் வளர்ச்சியடைந்தன. நாட்டுப் புறங்களிலும், நகர்புறங்களிலும் சில முக்கிய தொழிற்சாலைகள் இருந்தன. சாயத் தொழிற்சாலை, சர்க்கரைத் தொழிற்சாலை, உலோகம், செங்கல், காகிதத் தொழிற்சாலை முதலியன அவற்றில் குறிப்பிடத்தக்கவை. கிண்ணம் செய்தல், செருப்பு செய்தல், வாசனப் பொருட்கள் செய்தல், சாராயம் காய்ச்சுதல், அம்புகள் செய்தல் முதலியன சிறு தொழில்களாக இருந்தன. சிறந்த துணிகளை உற்பத்தி செய்வதில் வங்காளமும், குஜராத்தும் புகழ்பெற்றிருந்தன.

சுல்தானியர் ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளுடனும் இந்தியா தொடர்பு கொண்டிருந்தது. மலாய் தீவு, பசிபிக் கடற்கரை நாடுகள், பராசீகம், திபெத், பூடான்

ஆகிய நாடுகளுடன் வாணிபம் நடைபெற்றது. குதிரைகள், கோவேறு கழுதைகள், துத்தநாகம், அபின் மற்றும் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

பொருட்களின் விலை அவ்வப்போது மாறிக் கொண்டே வந்தது. ஏனெனில் விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. பஞ்ச காலத்தில் பொருட்களின் விலை மிக உயர்வாகவும், செழிப்பான காலத்தில் மிகக் குறைவாகவும் விற்கப்பட்டது. அவ்வப்போது நாட்டில் பணப்பற்றாக் குறையும் ஏற்பட்டது.

அக்காலத்தில் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் அதிக வேறுபாடு இருந்தது. அரசியல் நிர்வாகிகளும், செல்வந்தர்களும் செல்வச் செருக்கில் ஏகபோக வாழ்வு வாழ்ந்தனர். அதே நேரம் எளியவர்கள், விவசாயிகள் மகிவும் துன்பமடைந்தனர். வரிச்சுமைதாளாது மக்கள் துன்புற்றனர். அமிர்குஸ்ரு என்பவர், "கண்ணீர் நிறைந்த ஏழை விவசாயிகள் கண்களிலிருந்த ரத்தத்துளிகளே படிகங்களாக, அரசனின் மணிமகுடத்தில் முத்துக்களாக இருந்தன" என்று குறிப்பிடுகிறார். தைமூரின் படையெடுப்பிற்குப் பின்னர் சுல்தானியரின் பொருளாதார நிலை சீர்குலைந்து விட்டது. வியாபாரமும், விவசாயமும் நசிந்துவிட்டன. நாட்டில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டு பொருளாதார நிலை சீர்கெடத் தொடங்கியது.

### III. பண்பாட்டு வளர்ச்சி: cultural development

#### a) பாரசீக மொழி இலக்கிய வளர்ச்சி:

டில்லி சுல்தான்கள், அமிர்கள் மாநிலங்களை ஆண்டு முஸ்லீம் ஆட்சியாளர்கள், பிரபுக்கள் ஆகியோர் தாங்கள் சுவைத்து உணரக் கூடிய பாரசீக மொழி இலக்கியங்கள் வளர பெரும் ஆதரவு தந்தனர். டில்லி சுல்தான்கள் ஆதரவை நாடி பல பாரசீக இலக்கிய அறிஞர்கள் டில்லி வந்து சேர்ந்தனர். எனவே தான் அமிர்குஸ்ரு "மத்திய ஆசியாவில் புகழ் பெற்ற பல்கலைக்கழக நகரமான புக்காரவுடன் (Bukhara) அறிவுச் சூழலில் டில்லி போட்டியிடும் அளவுக்கு வளர்ந்துள்ளது" என்று கூறியுள்ளார். டில்லி, ஜலந்தர், பிரோசாபாத் போன்ற பல இடங்களில் முஸ்லீம் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன. டில்லியில் "இம்பீரியல் நூலகம்" (Imperial Library) என்ற ஒரு பெரும் நூலகம் நிறுவப்பட்டது. அமிர்குஸ்ரு தன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பால்பன் காலத்தில் டில்லி அரசவையில் நுழைந்த அமிர்குஸ்ரு அலாவுதீன் கில்ஜி, கியாசுதின் துக்ளக் ஆட்சிக்காலம் வரை இலக்கியப் பணிபுரிந்தார். பாரசீக

மொழியில் பல கவிதைகள், உரைநடைகள் இயற்றினார். இதே காலத்தில் நிஜாம்-உத்-தீன்-ஹசன் என்ற மற்றொரு கவிஞரும் இருந்தார். மௌலான மொய்தீன் உம்ரானி என்ற கல்வியறிஞர் ஹின்னஸனி தக்கிஸ், மிப்தா ஆகியவற்றிற்கு விளக்க உரைகள் எழுதினார். பெரோஸ்ஷா துக்ளக் கல்வி வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டினார். மசூதிகளுடன் இணைந்த பல கல்லூரிகளைத் தோற்றுவித்தார்.

டில்லி சுல்தான்கள் காலத்தில் பல வரலாற்று இலக்கியங்கள் பாரசீக மொழியில் எழுதப்பட்டன. ஹாசன் நிஜாமினுடைய "தாஜில் மாசிர், மின்ஹாஜ் உஸ்சிராசின் "தபிகாசிநாசிரி", ஜியாவுதீன் பரானியின் வரலாற்று நூலான, "ஷம்ஹ்-இ-ஸிராஜ்", அபிப் என்பவரின் "தாரிக்-இ-பெரோஷாகி", யாஹியா பின் அகமத்சர்ஹிந்தி என்பவரின் "தாரிக்-இ-முபாரக்ஷாகி" ஆகிய நூல்கள் இலக்கியச் சுவையுடன் கூடிய இனிய நூல்களாகும்.

**வடமொழி இலக்கிய வளர்ச்சி:**

வடமொழி (சமஸ்கிருத) இலக்கிய வளர்ச்சி டில்லி சுல்தான்கள் ஆட்சிக் காலத்தில் சற்று குன்றியதாகவே காணப்பட்டது. ஆனாலும் பல சமய நூல்களும்,சமய சார்பற்ற நூல்களும் எழுதப்பட்டன. அவற்றுள் பார்த்தசாரதி மிஸ்ரா என்பவர் "கர்மமிமாம்தா" பற்றி எழுதிய "சாஸ்திரிபீகை" குறிப்பிடத்தக்கது. பல சமஸ்கிருத நாடகங்கள் எழுதப்பட்டன. ஜெயசிங்சூரி, என்பவர் எழுதிய "ஹம்மீர்மதமர்தனம்", வித்யநாத் என்பவர் எழுதிய "பிரதாப் ரூத்ரகல்யாண்", வாமனப்பட்டபாணர் என்பவர் எழுதிய "பார்வதி பரிணயம்", கங்கநாதர் என்பவர் எழுதிய "கங்கதாசபிரதாப் விலாசம்" ஆகிய வடமொழி நாடக நூல்கள் மிகவும் புகழ்பெற்றவை. வங்காள மன்னர் ஹீசைன்ஷாலின் அமைச்சர் ரூபகோஸ்வாமி சுமார் 25 வடமொழி நூல்கள் எழுதினார். அவற்றில் விதக்தமாதவம், லலிதா மாதவம் ஆகிய நாடக நூற்கள் பிரசித்தி பெற்றவை. மேலும் பல இலக்கண நூல்களும் வடமொழியில் எழுதப்பட்டன. சில முஸ்லீம் அறிஞர்களும் சமஸ்கிருத மொழியில் புலமை பெற்றிருந்தனர்.

**c) தேசிய இலக்கியங்கள்**

சமய சமுதாயச் சீர்திருத்தங்களுக்கு தேசிய மொழிகளின் வளர்ச்சி பெரிதும் துணைபுரிந்தன. பழமைப்பற்றும், வைதீக் எண்ணமும் இலக்கியச் சுவையில் நாட்டமும் கொண்டோர். சமஸ்கிருதத்தில் தங்கள் கருத்துக்களை வெளியிடும் போது சாமானியர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் தங்கள் கருத்துக்களைப் பரப்ப

வேண்டுமென்று ஆர்வம் கொண்டார்கள். எனவே அவர்களுக்குப் புரியும்படி அவர்கள் மொழியிலேயே இலக்கியங்களை எழுதினர்.

14, 15-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பக்திசமய எழுச்சி தேசீய மொழிகளின் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது. இராமனந்தரும், கபீரும் இந்தி மொழியில் தங்கள் இனிய கருத்துக்களை எடுத்துரைத்து அம்மொழி மறுமலர்ச்சிக்கு உதவினர். நாமதேவர் மராட்டிய மொழி வளர்ச்சிக்கு காரணமாக இருந்தார். வங்காளத்து வைணவ ஆசிரியர்கள் சந்திதாஸ், வித்யாபதிதாகூர் ஆகியோர் வங்காள மொழியில் இலக்கியங்கள் பல படைத்தனர். வங்காள அரசர்கள் ஆதரவு பெற்று கிரிநிவாஸ் என்பவர் இராமநாராயணத்தையும் பரமேஸ்வரன் என்பவர் மகாபாரத்தையும் வங்காளியில் மொழி பெயர்த்து அம்மொழியை வளப்படுத்தினர்.

### d) இசையும் நாட்டியமும்

இஸ்லாமிய இசை முதன் முதலில் அராபியருடன் சிந்து பகுதியில் நுழைந்து காலப் போக்கில் இந்திய இசைக்கலையுடன் கலந்து விட்டது. இஸ்லாமின் ஒரு பிரிவான சூபி (Sufism) சமயத்தினைச் சார்ந்த துறவிகள் இந்து பக்தர்களைப் போலவே இசையில் பெரும் விருப்பம் கொண்டிருந்தனர். அவர்கள் தங்களின் வழிப்பாட்டுக் கூட்டங்களில் பாடும் முறைக்கு "கவாலி இசை" (Qawali) என்ற பெயர்.

அலாவுதீன் கில்ஜியின் அரசவையை இசைக்கலையில் தேர்ந்த பல இசை வல்லுநர்கள் அலங்கரித்தனர். அலாவுதீன் ஓர் இசைப்பிரியர் ஆவார். இந்திய, துருக்கிய, பாரசீக அதிகாரியின் கட்டுப்பாட்டில் எப்போதுமே அரசவையில் குழுமியிருப்பர். பைரவி, சராஸ்ராகம், கலுங்க்ரா, பைரான் போன்ற ராகங்களில் பக்திப்பாடல்கள் பாடப்பட்டன. அத்தகைய பாடல்கள் வழிப்பாட்டின் போதும் அரசவையிலும் பாடப்பட்டன.

முஸ்லீம் ஆட்சியின் போதிருந்த வட இந்தியப் இசை இந்திய இரானியக்கலப்பாகும். வரலாற்றுப் புகழ் பெற்ற அமிர்குஸ்ரு என்ற கவிஞர் இனிமையாகப் பாடுவதில் வல்லவராக இருந்தார். அக்கால வட இந்திய இசையில் பாரசீக இசைப்பாணி புகுத்தப்பட்டதால் நாளடைவில் வடஇந்திய இசைக்கும் தென்னிந்திய இசைக்குமிடையே வேறுபாடுகள் தோன்றின. முஸ்லீம் இசைக்கலையைச் சார்ந்த பல கருவிகள் இப்போது இந்திய இசைக் கருவிகளாயின,

உதாரணமாக "தலபா", "தில்ருபா", "சரோத்", "நகரா" போன்ற இசைக்கருவிகளைக் குறிப்பிடலாம்.

**e) கட்டிடக்கலை**

டில்லி சுல்தான்கள் கட்டிடக் கலையில் மிக்க ஆர்வம் காட்டினர்கள். அக்கலையை பெர்கூசன் என்பவர் "இந்தோ-சராசானிக்" கலை என்று குறிப்பிட்டு உள்ளார். அதாவது "இந்தியப்பாணியும் இஸ்லாமியப் பாணியும் சேர்ந்த கலவை" என்று கருத்து தெரிவித்துள்ளார். ஆனால் சர்ஜான் மார்ஷல் "இந்திய இஸ்லாமியக் கலை என்பது இடத்திற்கேற்ப சில மாறுதல்களைக் கொண்ட இஸ்லாமியக் கலை ஆகும். இது இந்துக் கலையின் திருத்திய வடிவம் அல்ல" என்று கூறினார். டில்லி சுல்தானியர் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் அனைத்துமு் இந்தக் கலப்பு முறையிலேயே கட்டப்பட்டன.

முஸ்லீம் கட்டிடக் கலையின் சிறப்பு அம்சங்களாக கீழ்கண்ட நான்கு வகைகள் உள்ளன. 1) அலங்கார வளைவுகள் (Arches) 2) அரைக்கோள வடிவத்தில் அமைக்கப்படும் ஆலயத்தின் கூரைகள் (domes) 3) தொழுகைக்கு அழைப்பு விடுக்கும் உயர்ந்த ஒற்றைக் கோபுரங்கள் (minars) 4) மசூதியின் நாற்புறங்களிலும் நெடிதுயர்ந்து நிற்கும் கோபுரங்களும் (Minarets) மற்றும் சதுரங்கள் வளைவுகள் கொண்ட சித்திர வேலைப்பாடுகளும், புனித நூலின் கருத்துக்களை அழகிய எழுத்துக்களில் பொறிப்பதும் ஆகிய நான்கு அம்சங்கள் ஆகும்.

இத்தகைய சிறப்பு அம்சங்களை துருக்கிய மன்னர்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யும் போது ஏற்கனவே இங்கு நன்கு வளர்ச்சி அடைந்த கட்டிடக் கலை ஒன்று பரவி இருந்ததைக் கண்டார்கள். எனவே தான் இருகலைகளின் சிறப்பு அம்சங்களும் இணைந்ததில் வியப்பில்லை. இப்படி இணைவதற்கு பல சாதகமான சூழ்நிலைகள் அமைந்தன. முதலாவதாக, சுல்தான்கள் இந்தியச் சிற்பிகளையும் கைவினைஞர்களையுமே கட்டிட வேலையில் ஈடுபடுத்தினர். எனவே அவர்களை அறியாமலேயே அவர்களின் இயல்பான கலை நுட்பங்கள் இஸ்லாமியக் கலையுடன் கலக்க வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டாவதாக, சுல்தான்கள் தங்கள் மாளிகைகளையும், மசூதிகளையும் இந்து, சமணக்கோவில்களை அழித்து அதிலுள்ள பொருட்களை உபயோகித்தே கட்டியதால் தங்கள் கட்டிடக் கலையை மாற்றியமைக்கும் கட்டாயம் ஏற்பட்டது. மூன்றாவதாக, சில இந்துக் கோவில்களையே மசூதிகளாக மாற்றினார்.

அப்போது அதன் மட்டக் கூரைகளை நீக்கிவிட்டு வளைவு மாடங்களை நிர்மாணித்தார். எனவே இந்தியக் கலைக்கூறுகள் அப்படியே நீடித்தன. நான்காவதாக, இந்திய, இஸ்லாமியக் கட்டிடக் கலைகளில் ஒரு குறிப்பிடத்தக்க ஒற்றுமை அம்சம் ஏற்கனவே காணப்பட்டது. அதுதான் வேலைப்பாடமைந்த அலங்கார ஜோடணைகள். எனவே தான் இருகலைகளும் இணையத் தகுந்த வாய்ப்புகள் ஏற்பட்டன.

**முக்கியக் கட்டிடங்கள்:**

டில்லி சுல்தானியக் கலைப்பணிக்கு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது "குதுப்மசூதிகள்" ஆகும். அவற்றுள் புகழ் பெற்றது குதுப்மினார் (Qutubminar) ஆகும். அது தனி நிலைக் கோபுரங்களும், அழகிய கல்வெட்டு எழுத்துக்களும், தூபிகளைத் தாங்கும் தூண்களையும் கொண்டுள்ளது. குத்புதீன் இந்த கோபுரத்தைக் கட்ட ஆரம்பித்தார். இல்துத்மிஷ் முற்றுப் பெறச் செய்தார். வின்சென்ட் ஸ்மித் கூற்றுப்படி குதுப்மினார் 27 இந்துக் கோயில்களின் தளவாடச் சாமான்களைக் கொண்டு கட்டப்பட்டதாகும். குத்புதீன் ஆஜ்மீரில் கட்டிய மசூதியும், இல்துத்மிஷ் கட்டிய "சுல்தான்காரி" என்ற சமாதியும், பால்பன் கட்டிய "சிவப்பு மாளிகை"யும் குறிப்பிடத்தக்கவை. இதே காலத்தில் கட்டப்பட்ட "ஜமாத் கானா மசூதி", அலாய் தர்வாசா" ஆகிய கட்டிடங்கள் முக்கியமானவையாகும்.

அலாவுதீன் கில்ஜி ஏராளமான கட்டிடங்களைக் கட்டியுள்ளார். "சிரி" என்ற ஓர் நகரை டில்லிக்கருகில் நிர்மானத்தார். புகழ்பெற்ற ஆயிரம் தூண்அரண்மனை அவரால் கட்டப்பட்டதேயாகும். துக்ளக் வம்சத்தினர் கட்டிய கட்டிடங்கள் வளமின்றி எளிமையாகக் காணப்பட்டன. துக்ளக் ஷா சமாதி, பிரோஷாபாத் நகர் ஆகியவை முக்கியமானவையாகும். சிக்கந்தர் லோடியின் அமைச்சர் ஒருவர் கட்டிய "மோத்தி மஸ்ஜீத்" சிறந்த கலை நுட்பங்களைக் கொண்டது.

ஜான்பூரிலுள்ள "ஷர்க்கி" வம்சத்து அரசர்கள் கட்டிய கட்டிடங்களில் இந்துக் கலையின் செல்வாக்கு மிகுந்துள்ளது. 1408-ல் கட்டி முடிக்கப்பட்ட "அடலாதேவி மசூதி" ஜான்பூர்பானிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது. வங்களாத்திலுள்ள "பாண்டுவா ஆதினாமசூதி" அழகும் கம்பீரமும் கொண்டது மற்றும் சோட்டா சோனாமதி" கௌர்நகரிலுள்ள "பாரசேனா மசூதி" கட்டிடக் கலையின் அழகு வாய்ந்தது. இதைக் கட்டியவர் மகமத்கல்ஜியாவார். ஹிந்தோலா மஹால், ஜஹாஜ்

மஹால், ஹீஷோங்கின் கல்லறை, பஸ்பஹதூர், ரூபாமதி ஆகியோரின் அரண்மனைகள் ஆகியவை சிறப்புமிக்கவை.

இவ்வாறு டில்லி சுல்தானியர் ஆட்சிக்காலத்தில் அரசியல் மற்றும் சமூக உறவுகளில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கசப்புணர்வு இருந்தாலும் இலக்கியம், கலை, பண்பாடு, ஆகிய துறைகளில் இந்து இஸ்லாமி நாகரிகங்கள் ஒன்றுபட்டு, இசைவு மனப்பாண்மையை ஏற்படுத்தி ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் மனப்பாண்மையையும் ஏற்படுமாறு செய்தன என்று நாம் அறியமுடிகிறது.

## பாபர் படையெடுப்பின் போது இந்தியாவின் நிலை
## (India on the Eve of Babur's Invasion)

பாபர் இந்தியாவின் மீது படையெடுத்த போது, இந்தியா வலிமை குன்றியதாகவும், ஒற்றுமை இழந்ததாகவும் இருந்தது. இந்தியா பல நாடுகளைக் கொண்ட உருவத்துடன் காட்சியளித்தது. பலம் பொருந்திய நிலையான ஒரு பேரரசு இல்லாத நிலை ஏற்பட்டிருந்தது. அரசியல் ஒற்றுமை காணப்படவில்லை. சிற்றரசுகள் ஒன்றுக்கொன்று பகைமை கொண்டிருந்தன. ஏதேனும் வெளித்தாக்குதல் ஏற்பட்டால் கூட்டாக நின்று முறியடிக்க அவைகளிடம் ஒற்றுமை உணர்வு இல்லை. பாபர் படையெடுப்பின் போது இந்தியாவின் அரசியல், பொருளாதார சமூக நிலை பற்றிக் காணலாம்.

### I. அரசியல் நிலை

### 1. டில்லி (Delhi)

பாபர் படையெடுப்பின் போது டில்லியில் சுல்தானிய ஆட்சி அமைந்திருந்தது. லோடி வம்சத்தைச் சேர்ந்த கடைசி சுல்தானான இப்ராகிம்லோடி டில்லியில் அரசாட்சி செய்து வந்தார். இவர் மக்களை ஆள்வதற்கு தான் இறைவனால் அனுப்பப்பட்டதாக எண்ணி ஆட்சிபுரிந்து வந்தார். ஆப்கானியப் பிரபுக்களையும், மாநிலத் தலைவர்களையும் அடக்கியொடுக்கியதின் காரணமாக, அவர்கள் அடிக்கடி கிளர்ச்சி செய்து வந்தனர். மேலும் இவர் மனிதத் தன்மையில்லாமல் குற்றம் செய்தவர்களைத் தண்டித்தார். நாட்டில் மக்கள் மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லை.

சுல்தானிய மாமாவான ஆலம்கான் லோடி டில்லி அரியணைக்கு உரிமை கொண்டாடி பல ஆப்கானியப் பிரபுக்களை தன்பக்கம் இழுத்துக் கொண்டார். பஞ்சாபின் ஆளுநர் தொளலத்கான்லோடி இப்ராகிம்லோடியின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட மறுத்து தன் இச்சையாக செயல்பட்டார். இவ்வாறு பலரின் பகைமையைக் கொண்ட டில்லி அரசு, டில்லி, ஆக்ரா, தோவாப், ஜான்பூர் ஆகிய பகுதிகளுக்கு அப்பால் விரிவடையவில்லை. இவ்வாறு 1526ல் பாபர் படையெடுத்த போது இந்தியா பல்வேறு சிற்றரசுகளாக சிதறிக்கிடந்தது. ஆட்சியாளர்கள் மீது மக்கள் வெறுப்புக் கொண்டிருந்தனர். டாக்டர் ஈஸ்வரி பிரசாத் கூற்றுப்படி, "பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா பல்வேறு சிறு நாடுகளைக் கொண்டதாக, எளிதில் அந்நியப்படைகள் இந்தியாவைக் கைப்பற்றுவதற்கு ஏற்ற சூழ்நிலையுடன் காணப்பட்டது".

**2. பஞ்சாப் (Punjab) :**

பஞ்சாப் டில்லியைச் சேர்ந்த ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. பஞ்சாபின் ஆளுநராக இருந்தவர் தொளலத்கான் லோடி ஆவார். இவர் சுல்தான் இப்ராகிம்லோடியின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட மறுத்து சுதந்திரமாகச் செயல்பட்டார். இப்ராகிம் லோடியை வெற்றி கொண்டால் டில்லி அரசாட்சியில் அமரலாம் என்ற நப்பாசையில் அதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார். அப்போது காபூலில் முகாமிட்டிருந்த பாபரின் உதவிவுடன் ஆட்சியைப் பிடிக்கலாம் என்று நினைத்து, ஒரு தூதுவர் மூலம் பாபருக்கு கடிதம் அனுப்பி இந்தியா மீது படையெடுத்து வருமாறு அழைப்பு விடுத்தார்.

**3. மேவார் (Meware) :**

சித்தூரைத் தலைநகராகக் கொண்டு மேவாரை ஆண்டுவந்த இராணாசங்கரம்சிங் (ராணா சங்கா) இரஜபுத்திர அரசர்களுள் மிகவும் வலிமை மிக்கவர். புகழ்பெற்றவர். சிறந்த போர்வீரர். ராஜதந்திரமுள்ள போர்த்தளபதி. நூறு போர்க்களங்களைக் கண்ட இவர் தனது உடம்பில் எண்பது தழும்புகளைப் பெற்றிருந்தார். ஒரு கண்ணையும், ஒரு காலையும் இழந்து ஒரு மாவீரனுக்குரிய சிறந்த இயல்புகளைப் பெற்றிருந்தார்.

இவர் டில்லியில் ஒரு இந்து சாம்ராஜ்யத்தை நிறுவ எண்ணி, தனது முயற்சியில் வெற்றிபெற இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதற்காகவே பாபரை

இந்தியாவின் மீது படையெடுத்துவர அழைப்பு விடுத்தார். "தைமூரைப் போன்று பாபரும் டில்லியைக் கைப்பற்றி, அதனைக் கொள்ளையிட்டு மீண்டும் சாமர்கண்ட திரும்பிவிடுவார். அதன்பின் டில்லியில் தனது தலைமையில் ஒரு மாபெரும் இந்துப் பேரரசை ஏற்படுத்தலாம்" என்ற தவறான எண்ணத்தில் பாபருக்கு உதவி செய்யத் தயாராக இருந்தார். இதுவே ராணாசங்கா செய்த மாபெரும் தவறு ஆகும்.

**4. மூல்தான், சிந்து, குஜராத் :**

மூல்தான் சையது சுல்தான்கள் காலத்தில் சுதந்திரம் பெற்றது. ஷாஉசேன் என்ற சிந்துவை ஆண்ட மன்னர் 1525-ல் மூல்தானைக் கைப்பற்றி சிந்துவுடன் இணைத்தார். சிந்து முகமது பின் துக்ளக் காலத்திலேயே சுதந்திரம் பெற்றுவிட்டது. குஜராத் 1401-ல் சுதந்திரம் பெற்றது, 1511-ல் குஜராத்தின் கவர்னராக இருந்தவர் முஜாபர்ஷா ஆவார். இவா ராணாசங்காவால் தோற்கடிக்கப்பட்டார் 1526-ல் குஜராத்தில் பகதூர்ஷா ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தார்.

**5. மாளவம், ஒரிஸா, காந்தேஷ் :**

பிரோஷ்ஷா துக்ளக் காலத்திலேயே மாளவம் விடுதலையடைந்தது. அது இராஜபுத்திரர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. காந்தேஷ் 14ம் நூற்றாண்டின் இறுதியில் விடுதலை பெற்றது. பாபர் படையெடுக்கும் போது முதலாவது முகமது என்பவன் காந்தேஷை ஆண்டு வந்தான். ஒரிஸா வட இந்தியா வரலாற்றில் எவ்விதப் பங்கும் கொள்ளவில்லை. ஒரிஸா முகமதியர்களால் கைப்பற்றப்படவில்லை. தெற்கே முகமதியர் ஆதிக்கம் பரவவிடாமல் ஒரிஸா ஒரு தடவையாக இருந்து வந்தது.

**6. வங்காளம் :**

பிரோஷ்ஷா துக்ளக் ஆட்சி காலத்தில் அலாவுதீன் ஹுசேன் கீழ் வங்காளம் சுதந்திரம் அடைந்தது. அலாவுதீன் ஹுசேன் சிக்கந்தர் லோடியுடன் சமரசம் செய்து கொண்டார். அவனுடைய மகன் நஸ்ரத்ஷா பாபர் படையெடுக்கும் போது வங்காளத்தை ஆண்டார். மேலும் இது தொலைதூர நாடாக இருந்ததால் வெளியாரின் படையெடுப்பை எதிர் கொள்ளாமலே இருந்தது.

**7. தக்காணத்தின் பாமினி ராஜ்யம் :**

பாமினி ராஜ்யம் 1347-ல் பாமன்ஷாவினால் அமைக்கப்பட்டது. ஆனால் பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கும் போது பாமினி ராஜ்யம் சீர்குலைந்து ஐந்து சிறுநாடுகளாக உடைந்திருந்தது. பதுல்லா இமாதுல் முக் தலைமையில்

"இமாத்ஷாஹி" அரச மரபு பீராரில் 1490-ல் ஏற்படுத்தப்பட்டது. 1492-ல் பீடாரில் காசீம்பாரீத் என்பவர் ஓர் அரசை நிறுவினார். நிஜாம்ஷாஹி அரச மரபு அகமத் நகரிலும், குதுப்ஷாஹி மரபு 1512-ல் கோல்கொண்டாவிலும் நிறுவப்பட்டது.

இந்த பாமினி சுல்தானியங்களுக்கும் விஜய நகரப் பேரரசுக்கும் எப்போதும் போர் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. மேலும் பாமனி சுல்தானியங்கள் தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொண்டிருந்தன.

**8. விஜயநரகப் பேரரசு :**

முகமது பின் துக்ளக்கின் கொடிய ஆட்சியே இந்து சாம்ராஜ்யமான விஜயநகரப் பேரரசு தெற்கே தோன்றுவதற்குக் காரணமானது. பாபர் இந்தியாவின் மீது படையெடுக்கும் போது விஜயநகரை கிருஷ்ண தேவராயர் ஆண்டு வந்தார். தென்னகம் முழுவதும் கிருஷ்ணதேவராயரின் கீழ் அமைத்து நாடு செல்வச் செழிப்புடன் விளங்கியது. பீஜப்பூருடன் அடிக்கடி போர் புரிந்து வந்தது. விஜயநகரப் பேரரசு தென்கோடியில் இருந்தால் வட இந்தியாவுடன் தொடர்பு கொள்ளாமல் அரசியலிலும் தலையிடாமல் ஒதுங்கியே இருந்தது. தென்னகத்தில் முஸ்லீம் ஆட்சி பரவவிடாதபாடி ஒரு தடையாகவே விஜய நகரப் பேரரசு விளங்கியது.

இவ்வாறு பாபர் படையெடுப்பின் போது வட இந்திய அரசுகளும் தென் இந்திய அரசுகளும் சிதறுண்டு, ஒற்றுமையில்லாமல், வலிமையற்று காணப்பட்டன. அதிர்ப்தியும் பிரிவினையும் தலைவிரித்தாடின. தங்கள் மேலதிகாரத்தை நிலைநாட்ட அடிக்கடி போரில் ஈடுபட்டிருந்தால் வலிமையிழந்து போயின. ஒற்றுமையாக நின்று பாபரை எதிர்க்கும் எண்ணமே இல்லாதிருந்தது. பாபர் இந்த நிலையை கீழ்கண்டவாறு கூறுகிறார்.

"நான் இந்தியாவை வென்றபோது ஐந்து முஸ்லீம் அரசர்கள் இரண்டு இந்து அரசர்கள் முக்கியமாகக் காணப்பட்டார்கள். இவர்களைத் தவிர எண்ணற்ற சிற்றரசுகளைக் கண்டேன்".

**II) சமூக நிலை (Social Condition)**

பாபர் இந்தியாவின் மீது படையெடுத்த போது இந்திய சமுதாய நிலையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. டில்லி சுல்தானியத்தின் "சமுதாயச் சீர்கேடுகள்" பாபரின் படையெடுப்பிற்கும் அவர் வெற்றிக்கும் காரணமாயின. டில்லி சுல்தானியர்

ஆட்சிக்காலத்தில் முகமதியர் வாழ்க்கை வசதிகளை அதிகமாகப் பெற்றிருந்த படியால் அவர்களிடையே பல சமுதாயச் சீர்கேடுகள் காணப்பட்டன. சுல்தான்களும், பிரபுக்களும் அடிமைகளை வைத்திருந்தனர். இந்த அடிமைகள் ஆண்களும் பெண்களுமாக வாங்கப்பட்டனர். இந்த அடிமை முறை சமுதாயத்தில் ஒரு சாபக்கேடாகவும், முன்னேற்றமின்மைக்கு முத்திரையாகவும் விளங்கியது.

முஸ்லீம்கள் பெரும் ஏகபோக வாழ்க்கை நடத்தி வந்ததால் அனேக சமுதாயச் சீர்கேடுகள் ஏற்பட்டன. மது, மங்கை மீது வெறி கொண்டு வாழ்ந்தவர்கள் அநேகர் உண்டு. பல முஸ்லீம் பிரபுக்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையானார்கள். முஸ்லீம்கள் இந்துக்களுக்கு எஜமானர்களாகவே கருதப்பட்டனர். இந்துக்கள் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டார்கள். இந்துக்கள் அரசியலிலும், சமூக நிலையிலும் தாழ்த்தப்பட்டார்கள். சமயக் கொள்கைகள் மூலம் ஆறுதல் பெற முற்பட்டனர். தங்கள் பலாத்காரத்தின் மூலமாகவும், அதிகாரத்தின் ஆணவப் போக்கின் வாயிலாகவும், இந்துக்களை இஸ்லாமிய மதத்தைத் தழுவச் செய்த முஸ்லீம்களுக்கு "பக்திமார்க்கம்" ஒரு பெரும் தடையாகவே இருந்தது. சாதி பேதங்களை அடிப்படையாகக் கொண்ட இந்து மதத்திற்கு புத்துயிர் ஊட்டும் முயற்சியின் விளைவாகத் தோன்றியதே பக்தி மார்க்கம். ஜாதி வேற்றுமையின் கொடுமை பக்திமார்க்கத்தினால் தணிக்கப்பட்டு இந்துக்கள் முஸ்லீம் மதத்திற்கு மாறுவது தடுக்கப்பட்டது.

### III. பொருளாதார நிலை (Economic Condition)

சிறுவயதிலிருந்தே இந்தியாவின் செல்வச் செழிப்பைக் கேட்டறிந்த பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து அதனை வெற்றி கொள்ள நினைத்தார். அவர் படையெடுக்கும் போது டில்லியை ஆண்டு வந்த சுல்தானியரின் முறைகேடான பொருளாதாரக் கொள்கையால் பொருளாதார நிலை சீர்கெட்டிருந்தது. பொருளாதார அபிவிருத்திக்காக சுல்தானியரின் காலத்தில் யாதொரு கொள்கையும் பின்பற்றப்படவில்லை. அலாவுதீன் கில்ஜியின் கடுமையான வரி விவசாயிகளையும், வணிகர்களையும் பாதித்தது. துக்ளக் காலத்தில் ஏற்பட்ட பத்தாண்டுப் பஞ்சம் பல பொருளாதாரக் கேடுகளுக்குக் காரணமானது. கம்பளித் தொழில், பட்டு நெசவு, சாயம் போடுதல், சர்க்கரை தயாரித்தல், உலோகத் தொழில், செங்கல் தயாரித்தல், செருப்பு செய்தல் முதலிய தொழில்கள் பரவலாகக் காணப்பட்டன.

பொருட்களின் விலை நிர்ணயிக்கப்படாததால், விலைவாசி பல இடங்களில் பலவிதமாக இருந்தது. பஞ்ச காலங்களில் அதிக விலைக்குப் பொருட்கள் விற்கப்பட்டன. அதிகச் செழிப்பான காலத்தில் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. அக்காலத்தில் ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் அதிக இடைவெளி காணப்பட்டது. ஏழைகள் அதிக வரிச்சுமையால் துன்பமடைந்தனர். அமிர்குஸ்ரு என்பவர் "கண்ணீர் நிறைந்த ஏழை விவசாயிகளின் கண்களிலிருந்து ரத்தத்துளிகளே படிகங்களாக, மணிமகுடத்தின் முத்துக்களாக இருந்தன". முஸ்லீம் பிரபுக்களின் ஆடம்பரச் செலவின் காரணமாக பொருளாதார மந்தம் ஏற்பட்டு நாட்டின் பொருளாதார நிலை சீர்கெடத் தொடங்கியது.

இவ்வாறு இந்தியாவில் காணப்பட்ட அரசியல், பொருளாதார சமூகநிலை பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருப்தியற்ற நிலையிலிருந்ததால் பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து மிக எளிதாக இந்தியாவில் முகலாயப் பேரரசை அமைக்க முடிந்தது.

## பாபர் - (Babur, 1526 - 1530)

**பாபரின் வாழ்க்கைக் குறிப்பு :**

ஜாகீர் உத்தீன் முகம்மது என்ற பெயர் கொண்ட பாபர் 14834ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் தேதி ஆசியாவிலுள்ள ஒரு மாகாணமாகிய பர்கானாவில் பிறந்தார். இவரது தந்தை உமர்ஷேக்மீர்ஷா என்பவர் துருக்கிய வீரன் தைமூரின் வழிவந்தவன். இவரது தாய் மங்கோலியத் தலைவன் செங்கிஸ்கானின் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவ்வாறு பாபர் செங்கிஸ்தான் தைமூர் போன்ற இரத்த வெறியாளர்களின் வழித்தோன்றலாகக் கருதப்பட்டார். இவரது பெருந்துணிவின் காரணமாகவே புலி என்ற பொருள்படும் பாபர் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தார்.

**பாபர் பர்கானா அரசின் மன்னராதல் :**

கி.பி. 1494-ல் பாபரின் தந்தை இறந்த பிறகு தனது தந்தை ஆண்டு வந்த பர்கானாவுக்கு தலைவராகி அப்பகுதியை ஆண்டார். அப்போது அவருக்கு பதினோரு வயதும் நான்கு மாதமுமே. பர்கானா ஒரு சிறு நாடாக இருந்தது. சிறுவயது முதலே தன்னைச் சுற்றிலுமுள்ள எதிரிகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் பாபர் நல்ல போர்ப் பயிற்சி பெற முடிந்தது. தனது மூதாதையரான தைமூரைப் போன்று தானும் ஓர் சிறந்த வீரனாக வர வேண்டும்

என்று எண்ணிய பாபர், தைமூரின் நாடான சாமர் கண்ட்டை கைப்பற்ற விரும்பினார். எனவே 1497, 1503 ஆகிய ஆண்டுகளில் சாமர்கண்டின் மீது போர் தொடுத்தார். சாமர்கண்டைக் கைப்பற்றி அரியணையிலமர்ந்தார்.

சாமர்கண்டில் சுமார் நூறு நாட்கள் தான் பாபர் அரசாள முடிந்தது. சாமர்கண்டில் இருந்தபோது திடீரென நோய்வாய்ப்பட்டு தனது நாடான பர்கானாவிற்குத் திரும்பினார். ஆனால் அதற்குள் பர்கானா எதிரிகளின் கையில் வீழ்ந்தது. மீண்டும் சாமர்கண்ட்டை நோக்கி வந்தபோது அதுவும் பாபரின் எதிரிகளான உஸ்பெக்குகள் வசம் வந்துவிட்டது. எனவே சாமர்கண்ட்டை கைப்பற்றும் எண்ணத்தை விட்டு விட்டு தனது கவனத்தைத் தென்கிழக்குப் பக்கம் திருப்பினார். ஓராண்டு காலம் நாடோடியாக அலைந்து திரிந்மார். இந்த இடைப்பட்ட காலத்தில்தான் தனது மூதாதையர் தைமூரைப் போல இந்துஸ்தானத்தை வெல்ல வேண்டுமென்ற திடமான திட்டத்தைத் தன்னுள் வைத்திருந்தார்.

**பாபர் காபூலின் அரசானதால் : 1504-26**

அப்போது காபூலில் பாபரின் உறவினரான அப்துல்ரஜாக் என்பவர் ஆண்டு வந்தார். அங்கு நிலவிய குழப்பமான சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு 1504-ல் காபூல் அரசரைத் தாக்கி கைப்பற்றி காபூலின் அரசரானார். காபூலின் மன்னரான பின்னர் தனது படை வலிமையைப் பெருக்கினார். தான் பெற்ற புதுநாட்டில் தனது செல்வாக்கைப் பெற அயராது உழைத்தார். 1507-ல் தனக்குரிய மீர்ஷா or இளவரசன் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்.

**பாபரும் இந்தியாவும் :**

பாபர் தனது கவனத்தை இந்தியாவின் மீது செலுத்தத் தொடங்கினார். 1505-ல் தான் பாபரின் முதல் இந்தியப் படையெடுப்பு நடந்தது. இரண்டாவது படையெடுப்பு 1507-ல் நடைபெற்றது. அப்போது தான் அவர் காபூலைக் கைப்பற்றினார். 1519-ல் தனது மூன்றாவது இந்தியப் படையெடுப்பை மேற்கொண்டு பஜௌர் என்ற இடத்தையும் ஜீலம் நதிக்கரையிலுள்ள பேரா என்ற இடத்தையும் கைப்பற்றினார். 1524-ல் தௌலத்கான் லோடியின் அழைப்பிற்கிணங்கி பாபர் நான்காவது முறையாக இந்தியாவின் மீது படையெடுத்தார். லாகூரைக் கைப்பற்றிக் கொண்டு தௌலத்கான் விரும்பாத சில ஏற்பாடுகளை செய்துவிட்டு காபூல் திரும்பினார்.

பாபரின் ஐந்தாவதும், இறுதியானதுமான இந்தியப் படையெடுப்பு 1525-ல் நிகழ்ந்தது. அது அதற்கு முந்திய படையெடுப்புகளின் தொடர்ச்சி என்றே கூற வேண்டும். அத்தருணத்தில் மத்திய ஆசியாவில் பாபரின் பேராசை நிறைவேறாததால் அவர் மனம் உடைந்திருந்தார். எனவே இந்தியப் படையெடுப்பை மிக ஆர்வத்துடன் மேற்கொண்டார்.

**பாபரின் வெற்றிகள் :**

**I) முதலாம் பானிபட் போர் : 1526 ஏப்ரல் 21**

இந்தியாவிலுள்ள அரசியல் சூழ்நிலையை நாம் அறிவோம். டில்லியிலுள்ள பிரபுக்கள் பேராசையாலும், பழிவாங்கும் உணர்ச்சியாலும் டில்லி சுல்தானியத்திற்கெதிராகக் கிளம்பினர். அவர்களுள் பஞ்சாபின் பலம் வாய்ந்த கவர்னரான தௌலத்கான் லோடி பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வருமாறு அழைத்தார். மற்றும் இப்ராகிம்லோடியின் மாமனான ஆலம்கானும் டில்லி அரியணையைக் கைப்பற்ற பாபரின் உதவியை நாடினார். இவ்வாறு தங்களுக்குள் பிணக்கு கொண்ட ஒரு கூட்டத்தினர் இந்தியாவின் மீது படையெடுக்குமாறு பாபரை அழைத்த போது பாபர் அதனை ஓர் நல்லவாய்ப்பாகக் கருதி இந்தியாவின் மீது படையெடுத்தார்.

1525-ல் பாபர் தனது ஐந்தாவதும் இறுதியுமான இந்தியப் படையெடுப்பை மேற்கொண்டார். அப்போது அவருக்கு வயது 43. ஒழுக்கமும், கட்டுப்பாடும், நல்ல பயிற்சியும் பெற்ற 12,000 வீரர்களைக் கொண்ட படையுடன் 1535 நவம்பர் மாதம் காபூலிலிருந்து புறப்பட்டார் பாபர். வழியில் பாடக்ஷன் பகுதியின் தலைவராக இருந்த தனது மகன் ஹுமாயூனையும் அழைத்துக் கொண்டு இந்தியாவின் மீது படையெடுத்தார். முதலில் அழைத்துக் கொண்டு இந்தியாவின் மீது படையெடுத்தார். முதலில் பஞ்சாபை வென்று தௌலத்கான் லோடியைப் பணியும்படி செய்தார். பிறகு டில்லியை வென்று அதன் அரியணையில் அமர்ந்திருந்த இப்ராகிம் லோடியை விரட்ட எண்ணிய பாபர் தனது பெரும்படையுடன் டில்லியை நோக்கி விரைந்தார்.

**போரின் போக்கு :**

பாபரின் படையெடுப்பை அறிந்த இப்ராகிம் லோடி ஒரு லட்சம் போர் வீரர்களைக் கொண்ட ஓர் படையைத் திரட்டினார். 1526 ஏப்ரல் மாதம் 21ம் தேதி இருவரது படைகளும் வரலாற்றுச் சிறப்புமிக்க பானிபட் சமவெளியில் சந்தித்தன. பாபர் மிகச் சிறந்த பீரங்கிப்படை வைத்திருந்தார். மேலும அவரது படைகள்

அனுபவமும் திறமையும் மிக்க ஆட்டோமான் வல்லுநர்களான உஸ்தாத் அலி, முஸ்தபா ஆகியோரின் தலைமையில் இயங்கியது.

போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. பாபரின் படைத் தந்திரங்களாலும். ஒப்பற்ற தலைமையினாலும் இப்ராகிமின் படைகள் தோற்கடிக்கப்பட்டது. பாபரின் பீரங்கிப் படைத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் லோடியின் படைகள் அங்குமிங்கும் ஓடி சிதறின போர் காலை ஒன்பது மணியிலிருந்து நண்பகல் பன்னிரெண்டு மணி வரை தான் நடந்தது. போரில் இப்ராகிம் லோடியை முழுமையாக முறியடித்தார் பாபர். கடைசிவரை வீரமாகப் போராடிய இப்ராகிம் லோடி போர்க்களத்திலேயே அவரது வெற்றிக்குச் சிறப்பான காரணங்களாகும்.

ஆனால் இப்ராகிம் லோடியோ பாபர் கூறுவது போல் "அனுபவமில்லாத மனிதராகவும், படை இயக்கங்களில் போதிய கவனம் இல்லாதவராகவும், ஒழுங்கின்றி படைகளை நடத்திச் சென்று, முன் யோசனையின்றி போரில் ஈடுபட்டார்". பானிபட் பேரில் தனது வெற்றியைப் பற்றிக் குறிப்பிடும்போது "எல்லாம் வல்ல கடவுளின் கருணையாலும் அருளாலும் இந்தக் கொடுமையான செயல் எனக்கு எளிதாகப் போயிற்று. அந்த மாபெரும் படை அரை நாளில் மண்ணைக் கவ்வியது" என்று எழுதியுள்ளார். பானிபட் வெற்றிக்குப் பின்னர் உடனேயே டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினார் பாபர். வரலாற்றாசிரியர் ஈஸ்வரி பிரசாத் கூற்றுப்படி, "பானிபட் போர் டில்லிப் பேரரசை பாபரின் கரங்களில் வழங்கியது".

**பானிபட் போரின் விளைவுகள் :**

1. லோடி வம்சத்தின் அரசியல் அதிகாரம் அகற்றப்பட்டது. இப்ராகிம் லோடியும் அவரது படைவீரர்கள் 15,000 பேர் போர்க்களத்திலேயே கொல்லப்பட்டனர்.
2. ஆப்கானிய லோடி அரசாட்சி வீழ்ச்சியடைந்தது, இந்தியாவில் முகலாயர்களின் ஆட்சிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
3. டில்லி அரியணை பாபருக்குக் கிடைத்தது. இந்திய வரலாற்றில் புதிய அத்தியாயம் ஆரம்பமானது.

**பாபரின் வெற்றிக்குக் காரணங்கள் :**

1. இப்ராகிம் லோடி ஆப்கானியப் பிரபுக்களின் பகைமைக்கு ஆளானதால் அவர்கள் உதவி செய்ய முன்வரவில்லை. இப்ராகிம் லோடிக்கு எதிராகவே அவர்கள் செயல்பட்டார்கள்.

2. இப்ராகிம் லோடியின் "திறமையற்ற படை" முக்கிய காரணமாகும். அவரது படையில் வீரர்கள் பயிற்சி பெறவில்லை. திறமையற்றவர்கள். அவர்களிடம் நாட்டுப்பற்றோ, சமயப்பற்றோ காணப்படவில்லை.
3. பாபரின் "திறமைமிக்க தலைமை" மற்றொரு காரணமாகும். பாபர் மக்களின் பிறவித் தலைவர். உறுதியான உள்ளம் படைத்தவர் சிறந்த போர் வீரர், அவர் படை நடத்துவதிலும், படை வீரர்களை நல்ல முறையில் வைத்துக் கொள்வதிலும் திறமையானவர். அவரது போர் அனுபவமே காரணமானது.
4. பாபரின் வெற்றிக்கு மற்றொரு முக்கியக் காரணம், அவர் போர்க்களத்தில் "பீரங்கிகளை உபயோகப்படுத்தியதேயாகும்". அதனை இயக்கிய சிறந்த பீரங்கி வீரர்களான உஸ்தாத் அலியும், முஸ்தபாவும் இப்ராகிம் லோடியின் படையை சின்னாபின்னமாக்கினர். இந்தியாவில் முதன்முதலாக பானிபட் போரில்தான் பீரங்கிப்படை உபயோகப்படுத்தப்பட்டது.
5. பாபரின் "கட்டுப்பாடான போர் படையும், புதிய போர் தந்திர முறைகளும்" அவரது வெற்றிக்குக் காரணமாயின. பாபரின் படைகள் ஒழுக்கத்திலும் கட்டுப்பாட்டிலும் சிறந்திருந்தன. தலைவனுக்குக் கீழ்படிதல் அவர்களது சிறந்த குணம். அப்போதைய புதிய போர் முறையான "துல்குமா" போர் முறையில் அவர்கள் சிறந்தவர்கள். எனவே எளிதில் வெற்றியடைந்தார் பாபர்.
6. பாபரின் "படைவீரர்களிடம் தியாக மனப்பான்மையும் விசுவாசமும்" காணப்பட்டது. தங்கள் தலைவனுக்காக எந்த தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பும், விசுவாசமும் ஈடுபாடுமே பாபரின் வெற்றியை எளிதாக்கின.
7. இறுதியாக "இப்ராகிம் லோடி படைத்தலைமை வகிக்கத் தகுதியற்றவர்". அனுபவமின்மை, திட்டமில்லாப் போர் முறையால் தோல்வியடைந்தார். தனது படை வீரர்களிடமிருந்து மதிப்பும், மரியாதையும் பெறவில்லை. இவரது கொடுங்கோலாட்சியின் காரணமாக ராஜபுத்திரர்கள், ஆப்கானியர்கள், இந்துக்கள் ஆகியோர் போரில் கலந்து கொள்ளாமல் விலகியே நின்றார்கள். இதனால் பாபர் எளிதாக இப்ராகிம் லோடியைத் தோற்கடிக்க முடிந்தது.

**பானிபட் போருக்குப் பிறகு பாபர் எதிர்நோக்கிய பிரச்சனைகள் :**

பானிபட் வெற்றி பாபரை டில்லிக்கும், ஆக்ராவிற்கும் மன்னராக்கியதே தவிர இந்தியாவின் மன்னராக்கவில்லை. இப்ராகிம் லோடியின் தோல்வி இந்தியாவின் தோல்வியல்ல. இந்த பானிபட் வெற்றிக்குப் பிறகுதான் பாபரின் முக்கிய வேலை

தொடங்கியது என்று கூறலாம். ஏனெனில் இப்போருக்குப் பின்னரே ஒரு பெரிய முகலாயப் பேரரசை நிறுவ வேண்டுமென எண்ணினார் பாபர். ஆனால் அந்த ஆசையை நிறைவேற்றச் செல்லும் பாதையில் பாபர் கீழ்கண்ட பல இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

1. **முதலாவதாக,** "மக்களின் எதிர்ப்புக்கு ஆளானார் பாபர். பாபரை இந்திய மக்கள் ஒரு அந்நியராகவே கருதினர். எனவே ராஜபுத்திர மக்களும், இந்துக்களும் மற்றும் ஆப்கானியர்களும் எப்படியாவது பாபரை இந்தியாவை விட்டு வெளியேற்றி விடத் துடித்தார்கள். எனவே பாபர் இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டியதாயிற்று.
2. **இரண்டாவதாக,** "ஆப்கானியப் பிரபுக்களின் எதிர்ப்புக்கு உள்ளானார் பாபர். பிரபுக்களான குஜராத்தின் முஸபர்ஷா, மாளவத்தின் முகமது அலாவுதீன் கில்ஜி, வங்காள அரசர் நஸ்ரத்ஷா ஆகியோர் தங்கள் பகுதிகளை சுதந்திரமாக ஆண்டு வந்ததுடன், இப்ராகிம் லோடியின் சகோதரர் முகமது லோடியை டில்லி சுல்தானாக அங்கீகாரம் செய்திருந்தனர். எனவே இவர்களின் எதிர்ப்பை பாபர் சமாளிக்க வேண்டும்.
3. **மூன்றாவதாக,** தனது படைவீரர்களின் எதிர்ப்புக்குள்ளானார் பாபர். பாபரின் படைவீரர்கள் மீண்டும் காபூலுக்குச் செல்ல விரும்பினர். இந்திய கங்கைச் சமவெளியின் சீதோஷ்ண நிலை பாபரின் படைவீரர்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் பாபர் தனது சொல்லாற்றலால் அவர்கள் மனதைத் தொடும்படியான வேண்டுகோள் விடுத்து அவர்களின் எண்ணத்தைக் கைவிடுமாறு செய்து வெற்றி பெற்றார்.
4. **நான்காவதாக,** பாபருக்கு மிகப்பெரிய எதிர்ப்பு "இரஜபுத்திரர்களிடமிருந்து" வந்தது. இரஜபுத்திரர்கள் முகலாயர்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்ல. அவர்கள் சுறுசுறுப்பும், துணிவும், மனிதப் பண்பும் எத்தகைய வலிமை மிக்க படையையும் எதிர்கொள்ளும் வலிமையையும் பெற்றிருந்தனர். அவர்களின் தலைவரான மேவார் நாட்டு மன்னர் ராணா சங்காவின் தலைமையில் ஒன்று திரண்டு பாபரை விரட்ட போருக்கு ஆயத்தமானார்கள்.

**கானுவாப் போர் : 1527 மார்ச் 16**

சித்தூரைத் தலைநகராகக் கொண்டு மேவாரில் சக்தி வாய்ந்த இரஜபுத்திரப் பேரரசை உருவாக்கியவர் ராணாசங்கா. இப்ராகிம் லோடியைவிடப் பலமடங்கு

வீரமும், வலிமையும், திறமையும் பெற்றவர். எனவே இவரது தலைமையில், இரஜபுத்திரர்கள் மற்றொரு வெளிநாட்டு ஆட்சி திணிக்கப்படுவதாகக் கருதி ஒன்று திரண்டனர். பானிபட் போருக்குப் பின்னர் பாபர் மத்திய ஆசியா திரும்பி விடுவார் என்று ராணாசங்கா எண்ணினர். ஆனால் பாபர் மேலும் மேலும் நாடுகளைக் கைப்பற்றி முகலாயப் பேரரசை இந்தியாவில் நிலைநாட்ட திட்டமிட்டதைக் கண்ட ராணா பாபரைத் தோற்கடித்து விரட்ட எண்ணினார்.

எனவே 120 படைத்தலைவர்களுடன் 80 ஆயிரம் குதிரைகள், 500 யானைகளுடன் ஒரு பெரும் படையைத் திரட்டினார் ராணாசங்கா. ஆஜ்மீர், சந்தேரி, மார்வார் முதலிய நாடுகளின் அரசர்களும் ராணாவுடன் சேர்ந்து கொண்டார்கள். இரஜபுத்திரர்களின் வீரத்தை அறிந்த பாபரின் படைகள் அச்சமும் நடுக்கமும் அடைந்தன. காபூல் திரும்ப விரும்பினார். ஆனால் பாபர் சிறிதும் மனங்கலங்கவில்லை. பயம் கொண்டிருந்த தனது படையினருக்கு ஊக்கம் ஊட்டினார். விலை உயர்ந்த மதுக்கிண்ணங்களை உடைத்தெறிந்து இனி மது அருந்துவதில்லை என்று சபதம் செய்தார். வீரர்களிடையே சொற்பொழிவாற்றி அவர்களுக்கு வீர உணர்ச்சியை ஊட்டினார். இதனால் கவரப்பட்ட வீரர்கள் பாபருக்காகத் தொடர்ந்து போர்புரிய குர்ஆன் மீது சபதம் செய்தனர்.

1527 மார்ச் 16ம் தேதி ஆக்ராவுக்கு 57 கி.மீ தூரத்தில் கானுவா என்ற இடத்தில் போர் நடைபெற்றது. இப்போரிலும் பாபரின் பீரங்கிப் படை பெரிதும் உதவியது. மேலும் ரெய்சின் முஸ்லீம் அரசர் சிதரடி என்பவர் கடைசி நேரத்தில் ரஜபுத்திரர்களிடமிருந்து விலகி பாபருடன் சேர்ந்து கொண்டார். பாபர் கையாண்ட "துலுகமா" என்ற புதிய உஸ்பெக் போர் முறையும் அவரது வெற்றிக்கு வழிவகுத்தது.

இரஜபுத்திர வீரர்கள் மிக்க வீரத்துடன் போரிட்டனர். பத்துமணி நேரம் நடந்த கடுமையான சண்டைக்குப் பிறகு இரஜபுத்திரர்கள் தோற்கடிக்கப்பட்டு சிதறி ஓடினர். பாபர் வெற்றி அடைந்தார். ராணா தப்பி ஓடிவிட்டார். போர்க்களத்திலேயே காசி என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார் பாபர்.

**கானுவாப் போரின் விளைவுகள் :**

இந்திய வரலாற்றின் போக்கினைத் திருப்பிய போர்களுள் கானுவாப் போரும் ஒன்றாகும். பானிபட் போரை விட இப்போர் முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. பானிபட் போர் முழு ஆட்சி அதிகாரத்தை உண்மையில் செலுத்த முடியாமல் பேருக்கு

மட்டும் சுல்தானாக இருந்த டில்லி சுல்தானின் தோல்வியைக் காட்டுகிறது. ஆனால் கானுவாப் போர் வலிமை மிக்க ரஜபுத்திரர்களின் கூட்டுப் படையின் தோல்வியைக் காட்டுகிறது. இந்த போரில் ஏற்பட்ட ரஜபுத்திரர்களின் தேல்வி, இந்தியாவில் முகலாயர்களின் ஆட்சியை நிலைநாட்ட பாபருக்குத் துணைபுரிந்தது. கானுவாப் போருக்குப்பின் டில்லி அரியணைக்குத் தீங்கு ஏற்படும் என்றோ அல்லது அதை உயிரைப் பணயம் வைத்த மீட்க வேண்டும் என்றோ அஞ்ச வேண்டிய தேவையில்லாமல் போயிற்று. இவ்வாறாக காபூலிலிருந்து இந்துஸ்தானத்திற்கு பாபரின் அதிகார வன்மை மாறியது. "பானிபட் போர் பாபரை டில்லியின் மன்னராக மட்டும்தான் உயர்த்தியது. ஆனால் கானுவா வெற்றியோ அவரை இந்துஸ்தானத்தில் மன்னராக மேலும் உயர்வடையச் செய்தது.

**சந்தேரிப் போர் : 1528, ஜுன் 28**

அடுத்து பாபர் தனது கவனத்தை மாளவத்திலுள்ள சந்தேரி மீது செலுத்தினார். சந்தேரி கோட்டை முற்றுகையிடப்பட்டது. இரஜபுத்திரத்கள் தங்கள் தலைவன் மேதினிராய் தலைமையில் ஒன்று திரண்டனர். தங்கள் உயிரைப் பணம் வைத்துப் போரிட்டனர். ஆனாலும் சந்தேரிக் கோட்டையை அவர்களால் காக்க முடியவில்லை. கோட்டையை எளிதில் கைப்பற்றிய பாபர் இரஜபுத்திரர்களை ஈவு இரக்கமற்று கொண்டு அவர்களது தலைகளை மலை உச்சியின் மீது கோபுரமாகக் குவித்தார். பாபரின் கூற்றுப்படி, "மிகுந்த படைகள் இல்லாமலும், படைபலத்தை முழுமையாகக் காட்டாமலும்" வெற்றியடைந்தார்.

**கோக்ரா போர் : 1529, மார்ச் 6**

இரஜபுத்திரர்களை வென்று வெற்றிவாகை சூடிய பாபர் இப்போது ஆப்கானியரின் எதிர்ப்பைச் சமாளிக்கத் தயாரானார். வங்காளத்திலும், பீகாரிலும், ஆப்கானியர் வலிமையுடன் இருப்பதை அறிந்தார் பாபர். இப்ராகிம் லோடியின் சகோதரரான முகமது லோடியின் தலைமையில் ஆப்கானியர் ஒன்று சேர்ந்து எதிர்த்தனர். வங்காள மன்னர் நசரத்ஷாவும் லோடியுடன் சேர்ந்து கொண்டார். 1529 மார்ச் 9ம் தேதி கங்கையும் கோக்ரா நதியும் கூடும் இடம் அருகே கோக்ரா நதிக்கரையில் இரண்டு படைகளும் மோதின. இப்போரில் ஆப்கான்கள் படுதோல்வியடைந்தனர். லோடி வம்சத்தாரின் இறுதி நம்பிக்கை அடியோட அழிந்தது. இப்போரின் விளைவாக கங்கை நதி வரையிலுள்ள பீகார் முழுவதும் பாபரின் ஆட்சியின் கீழ் வந்தது. ஆக்ரா போர் இந்திய வரலாற்றில் முக்கிய இடத்தைப்

பெறுகிறது. வருங்காலத்தில் முகலாயர்கள்தான் இந்தியாவில் தலைதூக்கி நிற்க வேண்டியவர்கள் என்பதை இப்போர் திட்டவட்டமாக நிர்ணயித்துவிட்டது.

**பாபர் பேரரசின் பரப்பு:**

இவ்வாறு பாபர் பானிபட் போர், கானுவாப் போர், கோக்ராப் போர் ஆகிய மூன்று முக்கியப் போர்களை நடத்தி வட இந்தியா ஆக்சஸ் நதியிலிருந்து வங்காள எல்லை வரையிலும், இமயமலையிலிருந்து குவாலியர் வரையிலுமான பரந்த பேரரசுக்குத் தலைவரானார். இவரது பேரரசில் பஞ்சாப், வங்காளம், குவாலியர், இரஜபுதனத்தின் பெரும்பகுதி ஆகியவை அடங்கி இருந்தது. பாபர் ஆக்ராவைத் தனது தலைநகராக்கினர். இந்தியாவுக்கு வெளியே அவரது அரசு காபூல், காந்தகார், பாடக்ஷன் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

**பாபரின் மரணம் :**

பாபர் தாம் அரும்பாடுபட்டு பெற்ற வெற்றிகளின் பலன்களை அனுபவிக்க முடியாதபடி அவரது மரணம் குறுக்கிட்டது. 1530 டிசம்பர் 26ம் தேதி தனது 48ம் வயதில் பாபர் இறந்தார். முஸ்லீம் வரலாற்றாசிரியர்கள் பாபரின் மரணத்தைப் பற்றிச் சுவையான செய்தியைப் பிணைத்துக் கூறுகிறார்கள். நோய்வாய்ப்பட்டிருந்த தனது மகன் ஹுமாயூனைக் காப்பாற்ற கடவுளிடம் வேண்டி, அதற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்தார் என்று கூறப்படுகிறது. மற்றொரு கருத்து பாபர் இப்ராகிம் லோடியின் தாயால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டார். என்பதாகும். முதலில் அவரது உடல் ஆக்ராவிலுள்ள ராம்பாக்கில் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் காபூலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவருக்கு மிக விருப்பமுடைய தோட்டம் ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் பளிங்குக் கல்லறைகள் பின்னர் ஷாஜஹான் எழுப்பினார்.

**பாபரைப் பற்றிய மதிப்பீடு**

இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவி இந்திய வரலாற்றில் நிலையான புகழைத் தேடிக் கொண்டார் பாபர். அவர் பல திறமைகளைப் பெற்றிருந்தார். பாபரின் வீரத்திற்கும், அஞ்சா நெஞ்சத்திற்கும் அவரது வெற்றிகள் நற்சான்று கூறுகின்றன. பாபர் திறமையான வீரர், தளகர்த்தர், குதிரை ஏற்றத்தில் வல்லவர், தோல்விகளையும் துர்அதிர்ஷ்டங்களையும் கண்டு அஞ்சாதவர்.

அன்புமிக்க ஒரு தந்தையாகவும், அன்புள்ள ஒரு தலைவராகவும், தாராளமாக உதவும் நண்பராகவும், கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவராகவும், உண்மை, இயற்கை இவைகளின் சிறந்த காதலராகவும் இருந்தார். இசை முதலிய கலைகளில் வல்லவராக இருந்தார். துருக்கிய பாரசீக மொழிகளை நன்கு கற்றறிந்தவர். கவிதை புனையும் ஆற்றல் அவருக்கு உண்டு. துருக்கிய மொழியில் அவர் எழுதிய மொழியில் அவர் எழுதிய "பாபர் நாமா" (துசுகி பாபரி) என்ற அவரது சுயசரிதை, மிகச்சிறந்த நூலாகும். அவை உண்மை நிறைந்தவை. ஒரு பேரரசர், சிறந்த வெற்றி வீரராகவும் சிறந்த கவிஞராகவும் விளங்கும் எடுத்துக்காட்டுகள் வரலாற்றில் மிகவும் குறைவு.

பாபர் இந்தியாவில் பல வெற்றிகளைப் பெற்றாரே தவிர தான் வென்ற பகுதிகளில் நிலையான அரசை ஏற்படுத்தவில்லை. போரிலும், அரசியலிலும் ஆழ்ந்துவிட்ட காரணத்தினால் ஆட்சி முறையில் போதுமான கவனம் செலுத்தவில்லை. நீதித்துறையிலும், நிலச்சீர்திருத்தத்திலும் பாபர் எந்தவிதமாக சீர்திருத்தமும் செய்யவில்லை. அவர் காலத்தில் புதிய சட்டங்கள் ஒன்றும் உண்டாக்கப்படவில்லை. அவரால் ஒரு வலிமை வாய்ந்த பொருளாதாரத் திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. பொது நிலையங்கள், அறநிலையங்கள் ஏதும் ஏற்படுத்தவில்லை. "பாபர் செய்து முடித்த செயல்களை விட செய்து முடிக்கப் பெறாத செயல்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை" என்று கூறப்படுகிறது.

எனினும் பாபர் இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளார். "ஏனெனில் அவரது புகழ்பெற்ற பேரனான அக்பரால் மிக விரைவில் கட்டப்பட்ட முகலாயப் பேரரசு என்னும் கட்டிடத்தை இந்தியாவில் எழுப்புவதற்கு அடிக்கல் நாட்டிய பெருமை பாபரையே சாரும்.

**திரிபாதி என்பவர் கூறுவதாவது :**

"அக்பரின் மேன்மையான ஆட்சிக்கும் சிறந்த கொள்கைகளுக்கும் வித்திட்டவர் பாபரேயாவர். பாபர் ஒரு பேரரசுக்கு அடிக்கல் மட்டும் நாட்டவில்லை. அந்தப் பேரரசு எந்தக் கொள்கையின் அடிப்படையில் இயங்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

**Prof. Rushbrook Williams என்பவர் கூறுவதாவது :**

"பாபர் எட்டு வகையான அடிப்படைத் தன்மைகளைப் பெற்றிருந்தார். நேர்மையான தீர்ப்பு, உயர்ந்த எண்ணங்கள், வெற்றிக் கலை, அரசாட்சி செய்யும்

திறன், மக்களுக்கு நன்மை செய்யும் லட்சியம், மக்களின் மனதறிந்து ஆட்சி செய்யும் ஆற்றல், படைவீரர்களின் இதயங்களைக் கவரும் ஆற்றல் நீதியின்பால் மோகம் ஆகியவையே அந்த எட்டுவகையான தன்மைகள்".

**லேன்பூல் கூறுவதாவது :**

"பாபர் மத்திய ஆசியாவையும் இந்தியாவையும் இணைக்கும் பாலமாகவும், முற்கால நாடோடிகளுக்கும் பேரரசுக்கும் இடைப்பட்ட காலமாகவும், தைமூருக்கும் அக்பருக்கும் இடைப்பட்ட குணம் உடையவராகவும் காணப்படுகிறார். முகலாயப் பேரரசை நிறுவுவதற்கு அவரது வெற்றிகள் வழி வகுத்ததால் இந்திய வரலாற்றில் அவரது பெயர் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டது.

**டாக்டர் வின்சன்ட்ஸ்மித் கூறுவதாவது :**

"அவர் காலத்திய ஆசியாவின் அரசர்களிலேயே பாபர் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகிறார். இந்திய மன்னர்களின் வரலாற்றில் பாபரின் இடம் போற்றுவதற்குரியதாக விளங்குகிறது.

## ஹுமாயூன்

பாபர் இறந்த பின்னர் அவரது மூத்தமகனான ஹுமாயூன் முகலாயப் பேரரசராக கி.பி. 1530, டிசம்பர் 29ம் தேதி பதவி ஏற்றார். அப்போது ஹுமாயூனுக்கு 23 வயது ஆகும். ஹுமாயூன் என்ற பெயருக்கு அதிர்ஷ்டம் உள்ளவன் என்று பொருள்படும். ஹுமாயூன் கி.பி. 1508-ல் காபூலில் மகிம்பேகம் என்ற ஷியா பிரிவைச் சேர்ந்த பெண்ணுக்கும் பாபருக்கும் மகனாகப் பிறந்தார். இளம் வயதில் ஹுமாயூன் அராபிக், பாரசீகம் ஆகிய மொழிகளைக் கற்று கணிதம், வான சாஸ்திரம், தத்துவம், ஜோதிடக்கலை ஆகியவற்றை அறிந்து வைத்திருந்தார். தனது தந்தையுடன் சேர்ந்து பல போர்க்களங்களைக் கண்டு போர் பயிற்சியும் பெற்றிருந்தார்.

ஆனால் ஹுமாயூன் பேரரசரான போது இருந்த சூழ்நிலையில் படைத்துறையில் பேரறிவும், அரசியல் சூழ்ச்சித் திறனும், அரசியல் ஞானமும் உடைய ஓர் ஆட்சியாளரே நாட்டிற்குத் தேவைப்பட்டார். ஹுமாயூன் இவற்றில் ஒன்றையும் பெற்றிருக்கவில்லை. பாபரிடம் காணப்பட்ட ஞானமும், ஆராயுந்திறனும், வலிய மன உறுதிப்பாடும், இடைவிடா ஊக்கமும் ஹுமாயூன் பெற்றிருக்கவில்லை. எனவே தான் ஆப்கானிய இனத்தின் சூர்வம்சத்தைச் சார்ந்த ஷெர்கான் சூர் என்பவர் ஹுமாயூனைத் தோற்கடித்து 1540-ல் டில்லி அரியணையில் அமர்ந்தார். 1540 முதல்

1555 வரை நாடோடியாகத் திரிந்த ஹுமாயூன் தனது வலிமையைப் பெருக்கிக் கொண்டு 1555-ல் இரண்டாம் முறையாக டில்லியைக் கைப்பற்றி ஆட்சியிலமர்ந்தார்.

**ஹுமாயூனுக்கு இருந்த இடையூறுகள் :**

பாபர் இறந்த போது ஹுமாயூன் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. பாபர் இறப்பதற்கு முன்பே அவரது மைத்துனரான மாதிகுவாஜா என்பவரை சிம்மாசனத்தில் அமர்த்துவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனவே பாபர் இறந்த பிறகு மூன்று நாட்கள் குழப்பமான நிலையே காணப்பட்டது. ஆனாலும் சூழ்ச்சிகளை முறியடித்து பாபர் இறந்த மூன்று நாட்கள் கழித்து அரியணை ஏறினார். இவ்வாறு வாரிசுரிமையின்படி ஹுமாயூனுக்கு கிடைத்த அரியணை ரோஜா மலர்களால் அமைக்கப்படவில்லை. முட்டிகள் நிறைந்த ஒரு அரியணையாகவே காணப்பட்டது. ஹுமாயூன் கீழ்கண்ட பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியதிருந்தது.

**1) உறுதியற்ற முகலாய அரசு :**

பாபர் பஞ்சாப், மூல்தான், பீஹார், டில்லி, ஆக்ரா போன்ற பகுதிகளை வென்று தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தபோதிலும் தனது நாட்களை போர் புரிந்து நாடுகளைக் கைப்பற்றுவதிலேயே கழித்த காரணத்தினால் தான் வென்ற பகுதிகளில் நிலையான, உறுதியான ஆட்சியை ஏற்படுத்த முடியவில்லை. இவ்விதமாக ஸ்திரப்படுத்தப்படாத, ஒழுங்குபடுத்தப்படாத ஒரு அரசையே பாபரின் மரணத்திற்குப் பிறகு ஹுமாயூன் ஆட்சி செய்ய வேண்டியிருந்தது. இப்படி குழம்பிக் காணப்பட்ட அரசில் ஹுமாயூன் பல பகைமைகளை எதிர்நோக்க வேண்டியதிருந்தது. சிற்றரசர்கள் பலர் அவருக்கு எதிரிகளாக இருந்தனர். ஹுமாயூன் அவர்களுக்கு ஓர் அந்நியராகவே காட்சியளித்தார்.

**2) ஆப்கானியர்களின் எதிர்ப்பு :**

ஆப்கானியர்கள் பானிபட் யுத்தத்திலும், கோக்ரா யுத்தத்திலும் தோற்கடிக்கப்பட்டது உண்மையென்றாலும் அவர்கள் முழுமையாக அழிக்கப்படவில்லை. மேலும் அவர்கள் முற்காலத்தில் ஆட்சியாளர்களாக இருந்த நாட்களை மறக்க முடியாதவர்களாக மீண்டும் அப்பதவியை அடைய ஆவல் கொண்டனர். ஆப்கானியர்கள் முகமது லோடி என்பவரை தாங்கள் ஒன்று சேர உதவும் ஓர் மையப்புள்ளியாகக் கருதினர். ஷெர்கான் சூர் என்ற ஆப்கானியர் வங்காளம் பீகார் ஆகிய பகுதிகள் மீது படையெடுத்த முகலாய அரசை

அழிப்பதற்கான சூழ்நிலையை எதிர் நோக்கியிருந்தார். இப்ராஹிம் லோடியின் மாமனான ஆலம்கான் என்பவர் ஹுமாயூனின் எதிரியான பகதூர்ஷாவுடன் சேர்ந்து கொண்டு ஹுமாயூனை ஒழிப்பதற்குத் திட்டம் தீட்டினார். இவ்வாறு ஆப்கானியர்களிடமிருந்து ஹுமாயூனுக்கு பலத்த எதிர்ப்பு உருவானது.

**3) இரஜபுத்திரர்களின் எதிர்ப்பு :**

பாபர் கானுவாப் போரில் இரஜபுத்திரர்களின் கூட்டுப் படையைத் தோற்கடித்த போதிலும் அவர்களின் அபாயம் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கூற முடியாது. தற்காலிகமாகவே முகலாய ஆட்சிக்கு அடங்கியிருந்த அவர்கள் முகலாய ஆட்சியை ஒழிக்க துணிந்தனர். எனவே ஹுமாயூன் வலிமையும் தேசப்பற்று மிக்க இரஜபுத்திரர்களையும் சமாளிக்க வேண்டியிருந்தது.

**4) வாரிசு சட்டத்தின் தெளிவின்மையும், சகோதரர்களின் எதிர்ப்பும் :**

பாபருக்கு ஐந்து மனைவிகள் மட்டுமே உண்டு. அவர்கள் மூலம் நான்கு மகன்கள் பிறந்தனர். முதல் மனைவியின் மகனே ஹுமாயூன் ஆவார். இரண்டாவது மனைவியின் மூலம் கம்ரான், அஸ்காரி ஆகியோர் ஆவர் நான்காவது மனைவியின் மூலம் பிறந்தவர் ஹிண்டல் ஆவார். முஸ்லீம்களுக்குள் அரசர் இறந்த பின்னர் அவரது மூத்தமகன்தான் பட்டத்துக்கு வரவேண்டுமென்ற தெளிவான வாரிசுரிமைச் சட்டம் இல்லை. எனவே தான் ஒவ்வொரு முகலாய அரசர் இறந்த பின்னும் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. பாபரின் மரணத்துக்குப் பின்பு ஹுமாயூன் அரசரானார். ஆனால் மற்ற மூன்று சகோதரர்களும் அரசுரிமை கேட்டு ஹுமாயூனுடன் போர் புரிந்தனர். எனவே ஹுமாயூனுக்கு அவரது சகோதரர்களே எதிரியாயினர். அந்த சகோதரர்களின் எதிர்ப்பையும் ஹுமாயூன் சமாளிக்க வேண்டியிருந்தது.

**5) நம்பத்தகாத படைகள் :**

ஹுமாயூனின் படையில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த வீரர்கள் இருந்தனர். அவரது படையில் துருக்கியவர்கள், உஸ்பெக்குகள், பாராசீகர்கள், ஆப்கானியர், முகலாயர்கள் இந்தியர்கள் போன்றவர்கள் இருந்தார்கள். எனவே ஹுமாயூன் தனது படைகளை பூரணமாக நம்ப முடியவில்லை. படையில் குழப்பங்களும் கலவரங்களும் அடிக்கடி ஏற்பட்டன. இந்த இடர்பாடையும் ஹுமாயூன் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

**6) நிதியின்மை :**

பாபர் தனது மகன் ஹுமாயூனுக்கு யாதொரு நிதியையும் சேர்த்து வைத்திருக்கவில்லை. அரசு கஜானாவில் செல்வம் நிறைந்திருக்கவில்லை. ஆகவே அரசு பீடத்தில் அமர்ந்த ஹுமாயூன் பணம் இல்லாததால் பல இன்னல்களுக்கு ஆளாக நேர்ந்தது.

மேற்கண்ட சூழ்நிலையில் நாட்டை ஆள்வதற்கு தகுதியும் பேராற்றலும், அரசியல் விவேகமும், படை நடத்தும் திறமையுடைய அரசனே தேவை. ஆனால் ஹுமாயூன் இத்தகைய தகுதிகளைப் பெற்றிருக்கவில்லை. வரலாற்றாசிரியர் லேன்யூல் கூறுவத போல் ஹுமாயூன் மென்மேலும் ஊக்கமுற்ற செயலில் ஈடுபடும் சக்தி இல்லாதவராக இருந்தார். அபினிபருகும் பழக்கத்துக்கு அடிமையாகி, ஆடம்பர வாழ்வில் நாட்டம் கொண்டிருந்தார். போர் புரியம் நேரத்தில் அந்தப்புரத்தில் அடைந்து கடந்து களிப்புற்றிருப்பார். எனவே தான் ஹுமாயூன் தனது ஆட்சியை இழக்க வேண்டியதாயிற்று.

**ஹுமாயூனின் படையெடுப்புகள் :**

**1) கலிஞ்சார் படையெடுப்பு 1531**

கி.பி. 1531-ல் ஹுமாயூன் பந்தல் கண்டிலுள்ள கலிஞ்சார் கோட்டை மீது பயெடுத்தார். ஏனெனில் அந்தக் கோட்டையின் ராஜா ஆப்கானியர்களுக்கு உதவி செய்து வந்தார். முற்றுகை பல மாதங்கள் நீடித்தது. ஆனால் விரைவில் அந்த ராஜாவுடன் சமாதானம் செய்து கொண்டு ஒரு பெருந்தொகையை இழப்பீடாகப் பெற்றுக் கொண்டார். இது ஹுமாயூன் செய்த ஒரு முட்டாள்தனமான செயல் என்றே மதிப்பிடப்படுகிறது. ஏனெனில் ஹுமாயூன் பந்தல்கண்ட் ராஜாவைத் தோற்கடிக்க முடியாததாலும் தனது முயற்சியில் தோல்வியடைய நேரிடும் எனக்கருதியே ஹுமாயூன் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

**2) தௌரா யுத்தம் 1532**

கலிஞ்சார் படையெடுப்பை ஹுமாயூன் கைவிட்டதற்கு மற்றொரு முக்கிய காரணம் அவர் ஆப்கானியரிடமிருந்து ஏற்பட்ட ஆபத்தைச் சமாளிக்க வேண்டியதிருந்ததாகும். முகமது லோடி என்பவரின் தலைமயின் கீழ் பீகாரைச் சேர்ந்த ஆப்கானியர்கள் ஜான்பூரைக் கைப்பற்றியிருந்தனர். எனவே ஹுமாயூன் ஆட்சிக்கு வந்தவுடன் முகமது லோடிக்கு எதிராகப் படையெடுத்தார். லக்னோவுக்கு

அருகிலுள்ள தௌரா என்ற இடத்தில் முகமது லோடியையும் அவரது ஆப்கானியத் ஆதரவாளர்களையும் ஹுமாயூன் தோற்கடித்தார்.

### 3) சூனார் படையெடுப்பு 1532

முகம்மது லோடியின் கீழ் ஒன்றுபட்ட ஆப்கானியர்களைத் தோற்கடித்த பின்னர் ஹுமாயூன் ஆப்கானியத் தலைவர்களுள் ஒருவரான ஷெர்கான் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்த சூனார் கோட்டையை முற்றுகையிட்டனார். இந்த முற்றுகையானது 1532ம் ஆண்டு செப்டம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை நீடித்தது. சூனார் முற்றுகையிலிருந்து திரும்பிய ஹுமாயூன் சுமார் ஒன்றரை ஆண்டுகாலம் ஆக்ராவிலும், டில்லியிலும் கேளிக்கைகளிலும், களியாட்டங்களிலும் வீணாகக் கழித்தார். இந்த சமுதாயத்தில் தான் குஜராத்தில் பகதூர்ஷா தன்னை நன்கு பலப்படுத்திக்கொண்டார்.

### 4) பகதூர்ஷாவுடன் போர் : (1535 - 36)

குஜராத்தை ஆண்ட பகதூர்ஷா என்பவர் 1531-ல் மாளவத்தைத் தனது அரசுடன் இணைத்துக் கொண்டார். பேரரசை கொண்ட அவர் இந்தியாவின் சக்ரவர்த்தி ஆக வேண்டும் என்று ஆசை கொண்டு நாடுபிடிக்கும் செயலில் ஈடுபட்டார். ஹுமாயூனின் எதிரியான முகமது சாமன் மிர்ஷா என்பவருக்குத் தஞ்சம் அளித்தார். எனவே ஹுமாயூன் பகதூர்ஷாவை ஒழித்துக் கட்ட விரும்பினார்.

### 5) குஜராத், மாளவம் ஆகியவற்றை ஹுமாயூன் இழத்தல் :

குஜராத்தையும், மாளவத்தையும் கைப்பற்றியது ஹுமாயூனின் பெரும் சாதனையாகும். ஆனால் அங்கு களியாட்டங்களில் ஈடுபட்டார் ஹுமாயூன். இந்த படையெடுப்புகளின் விளைவாகத் தனக்குக் கிடைத்த பெருஞ்செல்வத்தை விரயம் செய்தார். இச்சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பகதூர்ஷா மீண்டும் படை திரட்டி வந்து குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றிக் கொண்டார். இவ்வாறு ஹுமாயூன் ஒரு வருடத்தில் மிக வேகமாக இரண்டு பெரிய மாகாணங்களை வென்றவர். அடுத்த ஆண்டிலேயே அவைகளை இழந்து விட்டார்.

### 6) ஷெர்கானுடன் போர் (1537 - 39)

கி.பி. 1523ம் ஆண்டு முதல் ஷெர்கானின் அதிகாரம் வளர ஆரம்பித்தது. தனது அதிகாரத்தை வங்காளத்திலும் பீகாரிலும் வலுப்படுத்திக் கொண்டார். அவர் ஆட்சிபுரிந்த பகுதிகளின் அளவு இருமடங்காகியது. ஆட்சி முறையைச் சிறந்த

முறையில் ஒழுங்குபடுத்தினார். ஆனால் ஷெர்கானின் வளர்ச்சியைத் தடுப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் ஹுமாயூன் மேற்கொள்ளவில்லை. 1537ம் ஆண்டில் தான் ஷெர்கானுக்கெதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உணர்ந்தார்.

எனவே ஷெர்கானுக்குச் சொந்தமான சூனார் கோட்டையை 1537 ஜுலை மாதம் முற்றுகையிட்டனர். சுமார் ஆறு மாத கால முற்றுகைக்குப் பிறகு சூனார் கோட்டை கைப்பற்றப்பட்டது.

**7) சௌசாப் போர் 1539, ஜுன் 27 :**

1539ல் நடைபெற்ற இந்த சௌசா போரில் ஹுமாயூன் பெருந்தோல்வியடைந்தார். முகலாய வீரர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். ஹுமாயூன் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடி கங்கை நதியைக் கடக்க முயன்றபோது நதியில் விழுந்துவிட்டார். தண்ணீர் சுமப்பவன் ஒருவனால் காப்பாற்றப்பட்ட ஹுமாயூன் ஆக்ரா ஓடி வந்தார். ஆக்ராவுக்கு வந்த பேரரசர் தனக்கு உதவி செய்யாத தனது சகோதரர்களை மன்னித்து விட்டார். சௌசா வெற்றிக்குப் பிறகு ஷெர்கான் தன்னை வங்காள அரசராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். "ஷெர்ஷா" என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டார்.

**8) கன்னோசிப் போர் 1540**

ஆக்ரா ஓடிவந்த ஹுமாயூன் தன் சகோதரர்களான கம்ரானையும் ஹிண்டாலையும் அழைத்து ஆலோசனை செய்தார். ஆனால் அவர்கள் ஹுமாயூன் நாற்பதாயிரம் வீரர்களைத் திரட்டினார். இருபடைகளும் 1540 மே-17ம் தேதி கன்னோசியில் சந்தித்தனர். ஷெர்ஷா எதிர்பாராமல் போரை ஆரம்பித்தால் ஹுமாயூனினால் முகலாயப் பீரங்கி படையை போர்க்களத்தின் முன்னனிக்குக் கொண்டு செல்லமுடியவில்லை. முகலாயப்படை ஷெர்ஷாவினால் தோற்கடிக்கப்பட்டது. கன்னோசியும் ஷெர்ஷாவினால் கைப்பற்றப்பட்டது.

ஹுமாயூன் தப்பி ஓடி ஆக்ராவுக்கும் பின்னர் டில்லிக்கும் ஓடிய போது ஷெர்ஷாவும் அவரைப் பின் தொடர்ந்து முதலில் ஆக்ராவையும் பின்னர் டில்லியையும் கைப்பற்றினர். ஹுமாயூன் நாடிழந்து லாகூருக்கு ஓடிவிட்டார். டில்லியில் சூர்வசத்தைச் சேர்ந்த அரசாட்சி நிறுவப்பட்டது.

**ஹுமாயூனின் மரணம் 1556**

ஹுமாயூன் தான் இழந்த ராஜயத்தை மீண்டும் பெற்ற போதிலும், அவர் நீண்டகாலம் ஆட்சி செய்ய கொடுத்து வைக்கவில்லை. தனது ராஜ்யத்தை வலுப்படுத்தவோ, ஒழுங்கான ஆட்சி முறையை நிறுவவோ அவரால் முடியவில்லை. முறையாக ஆறு மாதங்கள் மட்டுமே ஆட்சி செய்ய முடிந்தது. டில்லியில் தனது தீன்பனாவிலிருந்து என்ற நூல்நிலையத்தின் மேல் அடுக்கில் குறிநூல் வல்லுநர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு கீழே இறங்கி வருகையில் படிக்கட்டுகளில் தவறி விழுந்து உயிர்விட்டார் ஹுமாயூன். ஆயுள்காலம் முழுவதும் இடறப்பட்டு வாழ்ந்த ஹுமாயூன் இடறிவிழுந்து இடற் நிறைந்த தனது உயிரை நீத்தார் என்பது வியப்பிற்குரியதாகும் ‘Human tumbled through life ad tumbeled out of it”.

**ஹுமாயூன் வீழ்ச்சிக்கான காரணங்கள் :**

நசுருத்தீன் முகமது ஹுமாயூன் எல்லா வரலாற்றாசிரியர்களும் ஒப்புக் கொண்டபடி மிகவும் கண்ணியமான மனிதராவார். அவர் ஒரு லட்சியவாதியின் மகனாகவும், சிறந்த கணவராகவும், தந்தையாகவும், சகோதரனாகவும், வாழ்ந்தார். ஆனால் தானே அவருக்கு ஒரு எதிரியாகக் காணப்பட்டார். காரணம் அவரிடம் காணப்பட்ட நல்ல குணநலன்களே அவரது வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தன.

**ஹுமாயூனைப் பற்றிய மதிப்பீடு :**

ஹுமாயூன் ஒரு பண்புள்ள மனிதர் என்று அனைவருமே ஒப்புக் கொள்கின்றனர். ஒரு மனிதருக்கு இருக்க வேண்டிய அத்தனை சிறப்பியல்புகளும் அவரிடம் காணப்பட்டன. மரணப் படுக்கையிலிருந்த தன் தந்தை கூறிய அறிவுரைப்படியே நடந்தார். எனவேதான் தனக்குத்துரோகம் செய்த சகோதரர்களை மீண்டும் மீண்டும் மன்னித்தார். ஹுமாயூன் சிறந்த அறிவாற்றல் கொண்டவர். நண்பர்களுடன் விவாதிப்பதில் அளவற்ற மகிழ்ச்சி அடைவார். அதிக இரக்க குணம் கொண்டவர். தாராளமாக பிறருக்கு உதவி செய்தார். ஆனால் அவரிடம் இருந்த குடிப்பழக்கமே அவரைக் கெடுத்தது. வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள் மற்றும் கவரைகளின் காரணமாக அவர் அளவுக்கு மீறி மது அருந்தினார். எனவே தான் ஹுமாயூன் ஒரு சிறந்த அரசனாக ஆக முடியாமல் போய்விட்டது.

ஹுமாயூன் இஸ்லாம் மதத்தில் உண்மையான பற்றுக்கொண்டவர், ஆனால் அவரிடம் மதவெறி காணப்படவில்லை. அவரது பிரதான மனைவியான

ஹமிதாபானுபேகம் ஷியா வகுப்பைச் சேர்ந்தவர். அவரது நண்பர் பைராம்கானும் ஒரு ஷியாவே. இந்துக்களை ஹுமாயூன் கொடுமைப்படுத்தவில்லை. மாறுபட்ட மதக்கருத்துக் கொண்டவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் நன்று அறிந்து வைத்திருந்தார். இவர் தீன்பனா என்ற புதிய அரண்மனையை நிர்மாணித்தார்.

ஹுமாயூன் ஒரு சிறந்த போர்வீரர் ஆவார். அவர் பல இடங்களில் தோல்வியடைந்த போதிலும் எல்லா இடங்களிலும் போர்த்திறமையுடையவர் என்பதை நிரூபித்துக் காட்டினார். போர் புரிவதில் ஹுமாயூன் எவ்விதத் தயக்கமும் பயமும் காட்டவில்லை. இதனால் தான் பல போர்களில் பங்கெடுத்துக் கொண்டார். ஆனால் தான் எடுத்துக் கொண்ட காரியங்களில் உறுதித்தன்மையற்றவராக் காணப்பட்டார்.

ஹுமாயூன் ஒரு சிறந்த நிர்வாகி அல்ல. தனது பத்தாண்டு கால அரசாட்சியின் போது நாட்டின் நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்த எந்த முயற்சியும் அவர் எடுக்கவில்லை. பாரட்டப்படத்தக்க எந்த சீர்திருத்தங்களும் அவர் செய்யவில்லை. எனவே தான் அவருக்கு மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்காமல் போய்விட்டது.

## ஷெர்ஷா 1540 - 1545

பாபர் இறந்த மூன்று நாட்களுக்குப் பிறகு 1530 டிசம்பர் 29ம் தேதி அவரது மகன் ஹுமாயூன் அரியணையேறினார். இவருக்கு இரஜபுத்திரர்களின் எதிர்ப்பும் ஆப்கானியர்களின் எதிர்ப்பும் இருந்தது. ஆப்கானிய இனத்தின் சூர் வம்சத்தைச் சார்ந்த ஷெர்கான் சூர் என்பவர் ஹுமாயூனின் ஆற்றலின்மையைப் பயன்படுத்திக் கொண்டு தன்னை வலிமைப்படுத்தி, இறுதியில் ஹுமாயூனைத் தேற்கடித்து டில்லி அரியணையில் அமர்ந்தார்.

முகலாயரின் ஆட்சியை வீழ்த்தி சூர் வம்சத்தினரின் ஆட்சியையும் ஆப்கானியரின் மாட்சியையும் இந்திய வரலாற்றில் ஏற்படுத்தியவர் ஷெர்ஷா. கி.பி. 1540-ல் அரியணை ஏறிய இவர் இந்திய பெரும் பேரரசர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் தான் ஆட்சி செய்த ஐந்து ஆண்டுகளில் சாதித்த சாதனைகள் அற்புதமானவை. தலைசிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தியவர் ஷெர்ஷா. 1519-ல் தனது தந்தையின் ஜாகீர்கட்கு சட்டப்படியான வாரிசுரிமை பெற்றார். 1525-ல்

பீகாரில் சுதந்திரமாக ஆட்சி செய்து வந்த பகர்கான் லோகானியிடம் வேலைக்கமர்ந்தார். தன் தலைவனிடம் நன்றியுணர்வுடன் நடந்து அவரது நன்மதிப்பைப் பெற்றார். ஒரு சமயம் பரீத் தனித்து நின்று ஒரு புலியுடன் போராடி அதனைக் கொன்றதால் அவரது வீரத்தைப் பாராட்டி அவருக்கு ஷெர்கான் என்ற பட்டத்தை அளித்தார் பகர்கான்.

1527-ல் பாபரிடத்தில் போர் வீரராக ஷெர்கான் வேலைக்கு அமர்ந்தார். பாபரின் கோக்ரா வெற்றிக்குப் பிறகு பீகார் முகலாயர்கட்கு கீழ்பட்ட மானியப் பகுதியானது. இச்சமயத்தில் பகர்கான் இறந்துவிட்டதால் அவரது விதவை மனைவியால் ஷெர்கான் பீகாரின் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆனால் உண்மையான அதிகாரம் ஷெர்கானிடமே இருந்தது.

**ஷெர்கான் பீகார், வங்காளத்தின் அரசராதல்**

பீகார் மாநிலம் முழுவதிலும் நல்ல சீர்திருத்தங்களைப் புகுத்தினார். ஷெர்கான் விரைவில் படைபலத்தைப் பெருக்கிக் கொண்டு 1530-ல் காசிக்கருகில் உள்ள சூனார் கோட்டையைத் தாஜ்கான் என்பவரிடமிருந்து கைப்பற்றினார். 1530 முதல் ஷெர்கானின் அதிகாரம் பெருகிவந்தது. அவர் ஆட்சிப்புரிந்த பகுதிகளின் அளவு இருமடங்காகியது.

1536, 1537-ம் ஆண்டுகளில் வங்காளத்தின் மீது ஷெர்கான் படையெடுத்தார். அதன் தலைநகர் கௌர் முற்றுகையிடப்பட்டது. முதல் படையெடுப்பின் போது அதிகமான செல்வத்தைப் போர் இழப்பீடாகப் பெற்றுத் திரும்பினார். இரண்டாம் முறை தொடுத்த போரில் கௌர் நகரைக் கைப்பற்றி வங்காளத்தின் மன்னரானார்.

**ஷெர்கான் ஹுமாயூனைத் தோற்கடித்தல் :**

ஷெர்கானின் வேகமான வளர்ச்சியைக் கண்ட ஹுமாயூன் ஷெர்கானை தோற்கடிக்கப் புறப்பட்டார். 1537-ல் ஷெர்கானால் கைப்பற்றப்பட்ட சூனார் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். பின்னர் வங்காளத்தைக் கைப்பற்ற எண்ணி கௌருக்குச் சென்றார். எல்லாப் பக்கங்களிலிருந்து ஷெர்கானால் எதிர்க்கப்பட்ட ஹுமாயூன் ஆக்ரா திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் ஷெர்கானின் படைகள் கங்கைக்கரை ஓரத்தில் அமைந்த "சௌசா" என்ற இடத்தில் ஹுமாயூனின் படைகளுடன் மோதின. ஹுமாயூன் பெருந்தோல்வியடைந்தார்.

போர்க்களத்திலிருந்து தப்பி ஆக்ரா ஓடிவிட்டார் ஹுமாயூன். வெற்றியடைந்த ஷெர்கான் வங்காளத்தின் அரசராகத் தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டார். "ஷெர்சா" என்ற பட்டத்தையும் சூட்டிக் கொண்டு, தனது பெயரில் குத்பா படிக்கும்படியும், நாணயங்களை வெளியிடும்படியும் ஆணையிட்டார்.

**ஷெர்ஷாவின் ஆட்சி முறை**

ஷெர்ஷா சிறந்த போர் வீரராகவும், திறமையுள்ள படைத்தளபதியாகவும் விளங்கியதைப் போலவே சிறந்த நிர்வாகத்தின் படைத்தலைவராகவும் விளங்கினார். ஷெர்ஷாவின் படையெடுப்புகளை விட அவருக்குச் சிறப்புத் தருவன அவருடைய சீர்திருத்தங்களேயாகும். அவருடைய ஆட்சிக்காலம் மிகக் குறுகியதாக இருந்தாலும் மாபெரும் சீர்திருத்தங்களைப் புகுத்தினார். தனது அதிகாரத்தையெல்லாம் மக்களின் நன்மைக்காகவே உபயோகப்படுத்தினார். கீன் என்ற வரலாற்றாசிரியர் கருத்துப்படி "இதற்கு முன் வந்த எந்த அரசும் ஏன் பிரிட்டிஷ் அரசு உட்பட இந்த ஆப்கான் மன்னனைப் போல தீர்க்கதரிசனத்துடன் நடக்கவில்லை. அவர் நிர்வாகம் முழுவதும் மக்களின் ஐக்கியம் என்பதின் அடிப்படையிலேயே அமைந்தது" டாக்டர். கே.ஆர். கானுங்கோ என்பவர் ஷெர்ஷா அக்பரை விட சிறந்த சீர்திருத்தவாதியாகவும், பேரரசை உருவாக்கியதில் அரும்பணியாற்றிய வராகவும் விளங்கினார் என்று கூறுகிறார். ஷெர்ஷாவின் ஆட்சி மக்களின் உரிமைகளையும் விருப்பங்களையும் தழுவிய ஒரு ஆட்சியாகவே விளங்கியது.

**1. மைய அரசு :**

ஷெர்ஷாவின் ஒரே நோக்கம் மக்களுக்கு சிறந்த நிர்வாகம் அளிப்பதுவே. எனவே நிர்வாகத்தின் ஒவ்வொரு விஷயத்தையும் மிக நுணுக்கமாகக் கவனித்தார். மத்திய அரசின் தலைவர் அரசரே, அரசில் பலவித துறைகள் ஏற்பட்டிருந்தன. ஒவ்வொரு துறையும் ஒரு அமைச்சரின் கீழ் இருந்தது. இந்த அமைச்சர்கட்கு ராணுவ அதிகாரிகள் ஆலோசனை மற்றும் உதவி செய்தார்கள். ஏதேச்சதிகாரியான, ஷெர்ஷா ஒவ்வொரு இலாகாவின் வேலையைத் தாமே மேற்பார்வையிட்டார்.

**2. பேரரசின் நிர்வாகப் பணிகள் :**

ஷெர்ஷாவின் பேரரசில் மாநிலங்கள் இல்லை. நிர்வாக வசதிக்காக தனது பேரரசை 47 பெரும் நிர்வாகப் பிரிவுகளாகப் பிரித்தார். இவை சர்க்கார் எனப்பட்டன.

ஒவ்வொரு சர்க்காரும் பல பர்கானாகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பர்கானாவும் பல கிராமங்களை உள்ளடக்கியிருந்தது.

ஒவ்வொரு சர்க்காரிலும் ஒரு ஷிக்தார்-இ-ஷிக்தாரன் முன்சீப்-இ-முன்சீப்பான் என்பவரே சிறந்த அதிகாரம் உடையவராக இருந்தார். அவர் நீதி செலுத்துவதுடன் பர்கானாக்களிலுள்ள அமீன்களையும் மேற்பார்வை பார்த்து வந்தார். ஷிக்தர் இ ஷிக்தாரன் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்து கலகங்களை அடக்கி வந்தார்.

ஒவ்வொரு பர்கானாவிலும் ஒரு அமின் ஒரு ஷிக்தார். ஒரு பொருளாளர், ஒரு இந்து எழுத்தாளர், ஒரு பாரசீக எழுத்தாளர் ஆகிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அமீன் என்பவர் வரி வசூலித்து வந்தார். ஷிக்தார் அவருக்கு வேண்டிய படை உதவியை செய்து வந்தார். பொருளாளர் கருவூலத்தைக் கவனித்தார். இரண்டு எழுத்தாளர்களும் வரவு செலவு கணக்கு எழுதினார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு முக்கடம், ஒரு சௌத்திரி, ஒரு பட்வாரி ஆகிய அதிகாரிகள் இருந்தனர். இவர்கள் அரசுக்கும் மக்களுக்குமிடையே இணைப்பாக விளங்கினர். கிராமங்களில் பஞ்சாயத்து முறை ஆட்சி நடைபெற்று வந்தது. அதிகாரிகள் தாங்கள் பணியாற்றும் இடங்களில் அதிக செல்வாக்கு அடைவதைத் தடுப்பதற்காக அரசர் அடிக்கடி அவர்களை இடம் மாற்றினார். அதிகாரிகளுக்கு ஒவ்வொரு பகுதியும் ஷெர்ஷாவின் நேரடிக் கண்காணிப்புக்கு உட்பட்டது.

**3. ஷெர்ஷாவின் படையமைப்பு :**

ஒரு பேரரசை நிறுவுவதற்கு ஒரு வலிமையும் விசுவாசமும் உள்ள இராணுவம் தேவை என்பதை ஷெர்ஷா உணர்ந்திருந்தார். எனவே படையமைப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். படை வீரர்களை தகுதி அடிப்படையில் நேரடியாகவே ஷெர்ஷா தேர்ந்தெடுத்தார். அவர்களின் ஊதியத்தை அவரே நிர்ணயித்தார். தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் 1,50,000 குதிரைப்படையும், 25 ஆயிரம் காலாட்படை, 300 யானைகளையும், ஒரு பீரங்கிப் படையையும் வைத்திருந்தார். இவர் தனது படையமைப்பில் பெரும்பாலும் அலாவுதீன் கில்ஜியின் படைமுறைக் கொள்கைகளைப் பின்பற்றினார்.

**4. நிலவருவாய்ச் சீர்திருத்தங்கள் :**

ஷெர்ஷாவின் நிலவருவாய்ச் சீர்திருத்தங்கள் இந்தியாவின் ஆட்சி முறை வரலாற்றில் மிகச்சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. பிற்கால முறைகளுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கியது. முதலில் நிலவரி நிர்ணயிக்கும் முறையை மாற்றியமைத்தார். இதன்படி பயிர் செய்யப்படும் நிலத்தில் எதிர்பார்க்கப்படும் விளைச்சலில் மூன்றில் ஒரு பாகம் நிலவாரியாக, தானியமாக வசூலிக்கப்பட வேண்டும். உழுபவர்களின் நிலங்கள் சரியாக அளக்கப்பட்டன. அவற்றைப் பற்றிய எல்லா விபரங்களும் ஆவணங்களில் குறிக்கப்பட்டன. நிலங்கள் அதன் தகுதிக்கேற்ப வகைப்படுத்தப்பட்டன. உழவர்கள் தாங்கள் பயிர்செய்யும் நிலப்பரப்பிற்கும், தானிய வகைக்கும் ஏற்பவே வரிகட்ட வேண்டியதிருந்தது.

ஷெர்ஷா வரிவிதிக்கும் போது தாராளமாகவும் வரி வசூலிக்கும் போது கண்டிப்பானவராகவும் இருந்தார். பெறப்பட்ட வரித்தொகைகளுக்கு ரசீது கொடுக்கப்பட்டது. படைவீரர்கள் கடந்து செல்வதால் ஏற்படும் பயிர் சேதத்தின் போதும், போதிய மழையில்லாததால் விளைச்சல் பாதிக்கப்பட்ட போதும் நஷ்டஈடும், வரிவிலக்குகளும் அளிக்கப்பட்டன. ஷெர்ஷாவின் நிலவருவாய்த் திட்டம், ராயத்துவாரி முறையாகும். ரயத்துவாரி முறையின் தந்தை என்று ஷெர்ஷா புகழப்படுகிறார். ஷெர்ஷாவை நிலவரித் திட்ட சீர்சிருத்த முறையில் "அக்பரின் முன்னோடி" என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

**5. நீதி நிர்வாகம் :**

ஷெர்ஷா நீதி உணர்வு நிரம்பியவர். அவரது ஆட்சியில் நீதி விருப்பு வெறுப்பின்றி அனைவருக்கும் சமமாக வழங்கப்பட்டது. பர்கானாக்களில் சிவில் வழக்குகள் அமீன்களாலும், மற்ற வழக்குகள் காஸியாலும், மீர்-இ-ஆதல்களாலும் விசாரித்துத் தீர்க்கப்பளிக்கப்பட்டன. பர்கானாக்களில் சிவில் வழக்குகளை விசாரிக்க முன்சீப்-இ-முன்சீப்பான் என்ற மேலதிகாரியும் இருந்தார். தலைநகரில் தலைமைக் காஸியும் அரசாங்க சதரும் இருந்தனர். ஆனால் எல்லோருக்கும் மேலாக அரசரே நீதி தேவனாக விளங்கி நீதி பரிபாலனம் செய்து வந்தார். தண்டனைகள் நேர்மையாகவும் கடுமையாகவும் விதிக்கப்பட்டன. நீதி நிர்வாகம் இவ்வாறு நல்ல முறையில் செயல்பட்டது.

**6. நாணயச் சீர்திருத்தம் :**

ஷெர்ஷா பதவி ஏற்ற போது நாட்டின் நாணயமுறை குழப்பத்தில் இருந்தது. பல நாட்டு நாணயங்கள் காணப்பட்டன. அவைகளின் பரஸ்பர மதிப்பு நிர்ணயிக்கப்படவில்லை. எனவே ஷெர்ஷா டாம் என்ற புதிய தங்க நாணயத்தை அறிமுகப்படுத்தினார். பழைய கலவை நாணய முறையை ஒழித்தார். நாணங்களில் பெயர்கள் தேவநாகரி முறையெழுத்துக்களில் பொறிக்கப்பட்டன.

**7. வாணிபச் சீர்திருத்தம் :**

ஷெர்ஷா வெளிநாட்டு உள்நாட்டு வாணிபத்தை ஊக்குவித்தார். இதன்மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு அடி கோலினார். மாகாணங்களின் எல்லைகளில் பொருட்களின் மீது விதிக்கப்பட்ட பல வரிகளை நீக்கினார். இரண்டு வரிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன. நாட்டில் பொருட்கள் இறக்கப்படும் போது ஒருவரியும் பின்பு அவை விற்கப்படும் பொழுது ஒருவரியுமே விதிக்கப்பட்டன. மற்ற எல்லா உள்நாட்டு வரிகளும் நீக்கப்பட்டன. இதனால் உள்நாட்டு வாணிபம் செழித்து வளர்ச்சியடைந்தது.

**8. ஒற்றர் முறை :**

ஷெர்ஷா அலாவுதீன் கில்ஜியின் ஒற்றர் முறையைப் புதுப்பித்தார். ஒற்றர்கள் மூலமாக ஷெர்ஷா இராஜ்யத்தின் ஒவ்வொரு பகுதியுடனும் தொடர்பு கொண்டார். பொருட்களின் விலைகளைப் பற்றிய அன்றாடக் குறிப்புகளும் அரசனுக்கு எட்டின. இந்த உளவுத்துறை திறமையுடன் பணியாற்றியதால் மாகாணங்ளில் பணியில் இருந்த படை வீரர்களின் மன நிறைவற்ற நிலை, ஜமீன்தார்கள் சிற்றரசர்களின் கிளர்ச்சிக்கான ரகசியத் திட்டங்கள் ஆகியவற்றை முன்கூட்டியே ஷெர்ஷா அறிய முடிந்தது. ஷெர்ஷாவின் நிர்வாக வெற்றி பெரும்பாலும் அவரது ஒற்றர் முறையின் செயல்பாட்டின் அடிப்படையிலேயே அமைந்தது.

**9. போக்குவரத்தும் சாலைகள் அமைப்பும் :**

தனது பேரரசின் வளர்ச்சிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் மக்களின் வளர்ச்சிக்காகவும், படைகள் எளிதில் செல்வதற்காகவும் ஷெர்ஷா பேரரசின் முக்கிய இடங்களை நெடுஞ்சாலைகள் மூலம் இணைத்தார். இவர் அமைத்த சாலைகளுள் நான்கு புகழ்பெற்றவை கிழக்கு வங்காளத்திலுள்ள சோனார்கானிலிருந்து ஆக்ரா, டில்லி, லாகூர் வழியாக சிந்து நதி வரை அமைக்கப்பட்ட சாலை, ஆக்ராவிலிருந்து

பர்கான்பூர் வரை ஒன்றும், மூன்றாவது ஆக்ரா, ஜோத்பூர், சித்தூர் கோட்டையை இணைத்த சாலை, நான்காவதாக லாகூரிலிருந்து மூல்தான் வரை போடப்பட்ட சாலை ஆகியவையாகும்.

## 10. கல்விச் சீர்திருத்தம்

ஷெர்ஷா இந்துக்களின் கல்வி முறையில் தலையிடவில்லை. இந்துக்களின் கல்விக்காக உதவித்தொகை வழங்கப்பட்டது. மசூதியோடு இணைந்த பகுதிகளில் முஸ்லீம் கட்கு கல்வி போதிக்கப்பட்டது. பாரசீகமும் அராபிய மொழியும் கற்பிக்கப்பட்டன. உயர்கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்விக்காக ஏராளமான தொகை ஒதுக்கப்பட்டது.

## 11. கட்டிடங்கள் :

கட்டிடங்கள் கட்டுவதில் மிகவும் விருப்பம் கொண்டவர் ஷெர்ஷா. வடமேற்கு எல்லையில் தனது பாதுகாப்பை வலுப்படுத்த விரும்பிய அவர் ஜூலம் நதிக்கரையில் சிறப்புமிக்க அரணைக்கட்டி அதற்கு "ரொட்டாஸ்கர்" என்று பெயரிட்டார். சசராமில் அவர் கட்டிய மசூதி கட்டிடம் அவரது திறனை எடுத்துக்காட்டாகும். இவரது கட்டிடங்கள் டில்லி சுல்தான்களின் கட்டிடக் கலைக்கு மேம்பட்டது என்றும் முகலாயர்களின் கம்பீரமும் வன்மையும் கொண்ட கட்டிடக் கலையின் அடிப்படையானது என்றும் கூறப்படுகிறது.

## ஷெர்ஷாவைப் பற்றிய மதிப்பீடு

ஷெர்ஷா சிறந்த தளபதியும் இராஜதந்திரியுமாவார். ஐந்தாண்டு காலத்திற்குள் வட இந்தியா முழுவதையும் வென்று ஒரு பேரரசை அமைத்த தோடல்லாமல் அப்பேரரசில் இன்றைய இந்தியா ஆட்சி முறைக்கு அடித்தளமாக விளங்குகின்ற சிறப்புமிக்க ஆட்சி முறையையும் அக்குறுகிய காலத்தில் புகுத்தினார்.

ஷெர்ஷாவினால் அமைக்கப்பட்ட நிர்வாக முறை சீர்திருத்தங்கள் பின்பு அக்பரின் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாக அமைந்தன. எனவே தான் ஷெர்ஷா "அக்பரின் முன்னோடி" என்று அழைக்கப்படுகிறார். இந்துக்களிடம் ஒரு சன்னி முஸ்லீமாக இருந்தாலும் மதவெறி கொள்ளவில்லை. இந்துக்களிடம் அன்புடனும் சமயப் பொறையுடனும் நடந்து கொண்டார். ஷெர்ஷா ஒவ்வொரு படையெடுப்பின் போதும் தனது அனுபவத்தின் முதிர்ச்சியை வெளிக்காட்டினார்.

இவரது உழைப்பு, விவேகம், நிர்வாகத் திறமை ஆகியவை வரலாற்றில் இவருக்கு சிறப்பான இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. வின்சன்ட்ஸ்மித் கூறுவது போல் "ஷெர்ஷாவின் ஆட்சி மேலும் சில காலம் நிலைத்திருந்தால் மாபெரும் முகலாய அரசர்கள் வரலாற்று மேடையில் தோன்றியிருக்கவே மாட்டார்கள்".

## அக்பர் (AKBAR, 1556 – 1605)

அக்பர் இந்திய வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் புகழ் மிக்க அரசராவார். இவர் இந்திய வரலாற்றில் அரை நூற்றாண்டு காலம் வரை ஆட்சி செய்து ஒரு தேசியப் பேரரசர் என்ற பெருமை பெற்றவர். தனது மாபெரும் வெற்றிகளின் மூலம் முகலாய ஆட்சியை உறுதியாக இந்தியாவில் அமைத்தவர் அக்பர். முகலாய நிர்வாக முறையும் நிலைநிறுத்தப்பட்டது. முகலாயப் பேரரசர்களிலே மாபெரும் மன்னராகக் கருதப்படுகிறார் அக்பர்.

**அக்பரின் வாழ்க்கைக் குறிப்பு :**

ஷெர்ஷாவினால் தோற்கடிக்கப்பட்ட ஹுமாயூன் நாடோடியாக சிந்து பிரதேசத்தில் அலைந்து கொண்டிருந்தபோது ஹமீதாபானு பேகம் என்பவளை 1541 ஆகஸ்ட் 29–ல் திருமணம் செய்துகொண்டார். அவர்களுக்கு அமர்கோட் என்ற இடத்திலுள்ள வீரசால் (Virasal) என்ற அரண்மனையை 1542, நவம்பர் 23–ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அக்பர் பிறந்தார். பகைவர்களால் சூழப்பட்டு அங்குமிங்கும் ஓடிய ஹுமாயூன், தனது மகன் அக்பரை விசுவாசமுள்ள வீரர் பைராம்கானிடம் ஒப்படைத்தார். பின்னர் பாரசீக மன்ரின் ஷாதாமஸ்ப் உதவியுடன் 1545–ல் காந்தகார் மற்றும் காபூலைக் கைப்பற்றினார்.

1545–ல் ஷெர்ஷா இறந்த பின்னர் டில்லிப் பேரரசு பலவீனமடைந்தது. ஆப்கானியர் ஆட்சியின் கீழ் அரசியல் குழப்பம் ஏற்பட்டது. ஷெர்ஷாவுக்குப் பின் பதவிக்கு வந்தவர்கள் திறமையற்றவர்கள். 1555–ல் ஹுமாயூன் நல்ல தருணம் பார்த்து இந்தியாவினுள் நுழைந்தார். பைராம்கானுடன் சேர்ந்து 1555 ஜுன் மாதம் ஆப்கானியரின் தலைவரும் டில்லி அரசருமாக இருந்தவரான சிக்கந்தர் சூரை சிர்ஹிந்த் (Sirhind) என்ற இடத்தில் தோற்கடித்து ஆக்ராவையும், டில்லியையும் கைப்பற்றினார். ஆனால் ஆறு மாத காலத்திற்குள் மரணமடைந்தார்.

ஹுமாயூன் மரணமடைந்தபோது அக்பர் பஞ்சாபில் கலனோர் (Kalanur) என்ற இடத்தில் இருந்தார். அப்போது அவருக்கு வயது 13. ஹுமாயூன் இறந்தவுடன் கலோனோரில் 1556 பிப்ரவரி 14–ஆம் தேதி மன்னராக அக்பருக்கு முடிசூட்டப்பட்டது. அக்பரின் பாதுகாப்பாளரான பைராம்கான் இப்போது அக்பரின் அரசு பாதுகாப்பாளர் (regent) ஆனார்.

**இரண்டாம் பானிபட் யுத்தம் : 1556**

ஹுமாயூன் மரணமடைந்தவுடன் அக்பர் காலோனோரில் முடிசூட்டப்பட்டார். ஆனால், பீகாரை ஆண்ட முகமது அடில்ஷாவின் தளபதி ஹெமு என்பவர் மீண்டும் டில்லியில் ஆப்கான் ஆட்சியை ஏங்படுத்த முயன்றார். தனது படையுடன் முதலில் ஆக்ராவைப் பிடித்தார். பின்னர் டில்லியின் மீது படையெடுத்து, அங்கிருந்த முகலாய ஆளுநரான டார்டிபெக்கை விரட்டியடித்தார். டில்லியைப் பிடித்தவுடன் தன்னைப் பேரரசராகப் பிரகடனப்படுத்தினார். ராஜா விக்கிரமாதித்தன் என்ற புனைப் பெயரையும் தமக்குச் சூட்டிக்கொண்டார்.

எனவே பைராம்கான் தன்னிடமிருந்த ஓர் சிறிய படையுடன் அக்பருடன் டில்லியை நோக்கி வந்தார். போர் 1556 நவம்பர் 5–ல் பானிபட் போர்க்களத்தில் நடைபெற்றது. ஆரம்பத்தில் அக்பர் தோல்வியைத் தழுவினார். ஆனால், திடீரெனப் பாய்ந்து வந்த அம்பு ஒன்று ஹெமுவின் வலது கண்ணில் பாயவே மயங்கி விழுந்தார். ஆனால், ஹெமு இறந்துவிட்டதாகக் கருதிய அவரது படைவீரர்கள் சிதறி ஓடினர். குற்றுயிராகக் கிடந்த ஹெமு அக்பர் முன்பு கொண்டுவரப்பட்ட பைராம்கானால் கொல்லப்பட்டார். ஹெமுவின் தலை காபூலுக்கு அனுப்பப்பட்டது. உடல் டில்லி கோட்டையின் முன்பு தொங்கவிடப்பட்டது.

இரண்டாம் பானிபட் போர் இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டது. இந்தியாவில் மேலாண்மைக்காக நடந்த போரில் ஆப்கானியர் தோற்றுவிட்டனர். முகலாயர் வென்றனர். டில்லியில் முகலாயர் ஆட்சி வலிமையடைந்தது.

**பைராம்கானின் எழுச்சியும் வீழ்ச்சியும் : 1556 – ‘60**

இரண்டாம் பானிபட் யுத்ததிற்குப் பிறகு பைராம்கானின் புகழ் உயர்ந்தது. தொடர்ந்து அக்பருக்குப் பாதுகாவலராக நீடித்தார். நான்கு வருடங்களில் பஞ்சாப், ஜான்பூர், அஜ்மீர், குவாலியர் ஆகிய பகுதிகளை வெற்றி கண்டார். ஆனால், தனது பதவியை தவறாகப் பயன்படுத்த முற்பட்டார் பைராம்கான். தனது அரசியல் எதிரிகள் மீது தாக்குதல் நடத்தினார். அக்பரின் யானைப்பாகன், ஆளுநர் டார்டிபெக் ஆகியோரை காரணமில்லாமல் கொன்றுவிட்டார். மேலும், தனது உறவினர்களுக்கு முக்கியப் பதவிகளை வழங்கினார். இவர் ஓர் ஷியா பிரிவினராக இருந்ததால், சன்னிப்பிரிவு பிரபுக்கள் இவரை வெறுத்தனர். எனவே பைராம்கான் அக்பரின் பாதுகாவலராக நீடித்தால் அரியணைக்கே ஆபத்தாக அமைந்துவிடும் என்று எண்ணிய அக்பரின் தாய் பேகமும் வளர்ப்புத்தாய் மாகம் அனகாவும் பைராம்கானை பதவியிலிருந்து விலகக் கூறினார். வளர்ந்துவிட்ட அக்பரும் பைராம்கான் மீது வெறுப்புக்கொண்டு ஆட்சியைத் தானே நேரடியாக நடத்த எண்ணினார்.

தனது விருப்பத்தை பைராம்கானிடம் தெரிவித்தபோது, ஆட்சியை அக்பரிடம் ஒப்படைத்துவிட்டு மெக்கா செல்லத் தயாரானார். ஆனால், பைராம்கானுக்கு உதவியாக பீர் முகமது என்பரை அக்பர் அனுப்பவே, கோபம் கொண்ட பைராம்கான் கலகம் செய்தார். ஆனால், அக்பரால் மன்னிக்கப்பட்டு மெக்கா செல்ல அனுமதிக்கப்பட்டார். ஆனால், போகும் வழியில் 1561 ஜனவரியில் ஆப்கானியன் ஒருவனால் கொல்லப்பட்டார்.

## அக்பரின் வெற்றிகள்

பைராம்கானின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பின்பும் சுமார் இரண்டு ஆண்டுகள் தனது வளர்ப்புத் தாயாகிய மாகம் அனகாவின் ஆதிக்கத்திற்குள் உட்பட்டிருந்ததாக ஆசிரியர் வின்சன்ட் ஸ்மித் கூறுகிறார். 1560 – 62 வரை உள்ள இரண்டு கால அக்பரின் ஆட்சியை ‘பெண்களின் ஆட்சி’ (Portticoat Government) என்று சொல்கிறார்.

அக்பர் தனது தாத்தா பாபரைப் போல நாடுகளைக் கைப்பற்றும் எண்ணம் கொண்டிருந்தார். தனது பேரரசை விரிவுபடுத்தும் எண்ணத்தில் 1561 முதல் 1601 வரை

தொடர்ந்து படையெடுப்புகளில் ஈடுபட்டார். தனது வலிமையெல்லாம் கொண்டு தாக்கி ஒவ்வொரு நாடாக இணைத்தார். தான் கைப்பற்றிய நாட்டின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி 'நிலையான அரசை' ஏற்படுத்தினார். தான் ஆண்ட நாற்பது ஆண்டு காலத்தில் நிலையான பேரரசை நிலைநாட்டி இந்தியாவின் ஒற்றுமைக்கு அடிகோலினார் என்றால் மிகையாகாது.

**1. மாளவம் : (Malwa)**

குவாலியர், ஜான்பூர், அஜ்மீர் ஆகியவை ஏற்கனவே இணைக்கப்பட்டன. அக்பர் 1561–ல் மாகம் அனகாவின் மகனான ஆதம்கானை மாளவத்தின் மீது படையெடுக்குமாறு பணித்தார். மாளவத்தின் மன்னரான பாஸ்பகதூர் தோற்கடிக்கப்பட்டார். மாளவம் இணைக்கப்பட்டது. முற்றுகையின் போது அரசர் மாண்டார் என்ற செய்தியறிந்த இந்து மனைவி ரூப்மதி மரணத்தைத் தழுவினாள்.

**2. கோண்ட்வானா : (Gondwana) 1564**

மத்தியப் பிரதேசத்திலிருந்த ஒரு சிறிய இரஜபுத்திர நாடு கோண்ட்வானா. அப்போது அதனை இளம் வயதினரான வீர் நாராயணனின் பகர ஆட்சியாளராக ராணி துர்க்காவதி ஆண்டு வந்தாள். 1564–ல் கோண்ட்வானாவைக் கைப்பற்ற காராவின் ஆளுநரான ஆசப்கானை அனுப்பினார் அக்பர். பேரழகியான துர்காவதி தீரமுடன் போரிட்டாள். இறுதியில் தோற்றுப்போனாள். வீர்நாராயணன் போரில் கொல்லப்பட்டார். அவமானப்படுவதைத் தடுக்க துர்காவதி தற்கொலை செய்துகொண்டாள். ரஜபுத்திர மகளிர் தங்கள் கற்பைக் காக்க ஜௌஹார் எனப்படும் தீக்குளிப்பு செய்தனர். கோண்ட்வானா அக்பரின் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

**3. மேவார் : (Mewar) 1568**

அக்பரின் போர்க்கள வரலாற்றில் 1568–ல் நடந்த சித்தூர் முற்றுகையும் வெற்றியும் முக்கியத்துவம் வாய்ந்தது. இரஜபுதன நாடுகளிலேயே வலிமையும் புகழும் நிறைந்தது மேவார் நாடு. இதன் தலைநகரமாகவும், வலிமையின் சின்னமாகவும் விளங்கியது சித்தூர். சித்தூரை ஆண்டு வந்தவர் உதய்சிங் ஆவார். மேவார் நாட்டு அரச குடும்பத்தவர்கள் அக்பரையும், அவரது வம்சத்தாரையும் தாழ்ந்த குலத்தவராகக்

கருதினார். அக்பரோ சித்தூரரையும் ரான்தம்பூரையும் வெற்றி கண்டால்தான் தனது முகலாய சாம்ராஜ்யத்தை நிறுவ முடியும் என்று நினைத்தார்.

எனவே **1567** அக்டோபர் **20–**ல் சித்தூரரை முற்றுகையிட்டார். உதய்சிங் தப்பி ஓடி காட்டிற்குள் ஒளிந்துகொண்டார். ஆனால், ஜெய்மால், பட்டா ஆகிய இரண்டு தளபதிகளின் தலைமையில் இரஜபுத்திரர்கள் தொடர்ந்து போரிட்டனர். ஜெய்மால் அக்பரின் துப்பாக்கிக் குண்டுபட்டு வீழ்ந்தாலும், இரஜபுத்திர வீரர்கள் இறுதி வரை போரிட்டனர். சித்தூர் கோட்டை வீழ்ந்தது. அழகான இரஜபுத்திர இளவரசிகள் தங்கள் வழக்கப்படி ஜௌஹார் (Jauhar) முறையைப் பின்பற்றி தீக்குளித்து மாண்டனர். வெற்றி வீரராக அக்பர் சித்தூர் நகரில் நுழைந்தவுடன் படுகொலைக்கு உத்தரவிட்டார். சுமார் முப்பதாயிரம் பேர் கொல்லப்பட்டனர். சித்தூரின் வீழ்ச்சிக்குப் பின் இரஜபுத்திர அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக அக்பருக்கு அடி பணிந்தனர்.

**4. ரான்தம்பூர், கலிஞ்சார், பிகானர், ஜோத்பூர் :**

**1569–**ல் அக்பர் ரான்தம்பூர் கோட்டையைத் தாக்கினர். அக்போட்டையின் மன்னர் சுர்ஜன்ஹரா அடிபணிந்தார். அதே ஆண்டில் கலிஞ்சாரின் தலைவர் இராஜா ராமச்சந்திர் அக்பரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டார். **1570–**ல் பிகானரை ஆண்டு கல்யாணமால் அடிபணிந்தார். மேலும், ஜெய்சால்மார், ஜோத்பூர் ஆகியவையும் இணைக்கப்பட்டன.

**5. குஜரத் வெற்றி (1573) :**

குஜரத்தின் வெற்றி அக்பரின் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டமாகும் என்று வின்ஸன்ட்ஸ்மித் கூறுகிறார். குஜரத் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கியது. செல்வச் செழிப்புடன் விழங்கியது. இதனால் அக்பர் குஜரத்தை கைப்பபற்ற முடிவு செய்தார். அப்போது குஜரத்தை ஆண்டு வந்தவர் மூன்றாம் முஸபர்ஷா என்ற திறமையற்ற அரசர். குஜரத்தில் பல தலைவர்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட கலகம் செய்து கொண்டிருந்தனர். அங்குள்ள ஒரு குழப்பவாதியான இதிமத்கான் அக்பரை குஜரத்தின் மீது படையெடுத்துவர அழைத்தான். எனவே அக்பர் தானே படைக்குத் தலைமை தாங்கி குஜரத் மீது போர் தொடுத்தார். **1573–**ல் எல்லா எதிர்ப்புகளையும் முறியடித்து சூரத்தைக் குஜரத்தில் பெரும் கிளர்ச்சிகள்

தோன்றியதால், கோபமடைந்த அக்பர் மறுபடியும் பதினொரு நாட்களில் **600** மைல் கடந்து வந்து கிளர்ச்சியாளர்களை முழுமையாக ஒடுக்கினார். குஜராத் முகலாயப் பேரரசுடன் இணைந்த மாநிலமானது.

**6. வங்காளம், பீகார், ஒரிசா :**

ஷெர்ஷா காலத்தில் பீகாரின் ஆளுநராக இருந்த சுலைமான் கராரனி (Sulaiman Kararani) என்பவர் தன் அதிகாரத்தை வங்காளத்திலும் நிலைநாட்டினார். ஆனால், அக்பரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு நட்புடன் வாழ்ந்து வந்தார். **1572–ல்** சுலைமான் கராரானி இறந்த பின் பதவிக்கு வந்த அவரது மகன் தாவூத்கான் தன்னை சுதந்திர அரசாகப் பிரகடனப்படுத்தினார். **1574–ல்** தாவுத்கானிற்கு எதிராக தாமே படையெடுத்துசூ சென்று பாட்னாவிலிருந்து விரட்டினார். அக்பரின் தளபதி முனிம்கான் துகாராய், ராஜ்மகால் ஆகிய இடங்ளில் தாவூத்கானைத் தோற்கடித்துக் கொன்றார். **1576–ல்** வங்காளமும் பீகாரும் முகலாயப் பேரரசுடன் இணைந்த பகுதியாகிவிட்டது. **1590, 1592–ஆ**ம் ஆண்டுகளில் அக்பர் தளபதி மான்சிங்கை அனுப்பி ஒரிசாவைக் கைப்பறினார்.

**7. காஷ்மீர் வெற்றி : 1586**

**1586–ல்** காஷ்மீர் மீது அக்பர் படையெடுத்தார். இதற்குக் காரணம் காஷ்மீர் மன்னர் 'யூசுப்ஊரா' தனது மக்களைக் கொடுமைப் படுத்தியதேயாகும். அக்பரின் தளபதிகளான பீர்பால், காசிம்கான், ராஜா பகவன்தாஸ் ஆகியோர் **6000** வீரர்களுடன் சென்று காஷ்மீர் மன்னரைத் தோற்கடித்தனர். காஷ்மீர் அக்பரின் பேரரசுடன் இணைக்கப்பட்டது. ஆனால், இந்தப் போரில்தான் அக்பரின் அருமை நண்பர் பீர்பால் கொல்லப்பட்டுவிட்டார்.

**8. காபூர், காந்தகார் : 1585**

காபூலும், காந்தகாரும் வட மேற்கு எல்லைப் பகுதியில் மிக முக்கியமான இராணுவ இடமாகவும், வாணிக மையமாகவும் திகழ்ந்தன. மேற்கு நாடுகளிலிருந்து வருகிறவர்கள் இப்பகுதிகளின் வழியாகத்தான் இந்தியாவினுள் நுழைய வேண்டும். எனவே, காபூர் காந்தகார் ஆகிய இந்த எல்லைப் பகுதிகளை இணைத்துகூ கொள்வது இன்றியமையாதது ஆகும். காபூர் அக்பரின் ஒன்றுவிட்ட சகோதரரான மீர்ஷா முகமது

ஹக்கீம் என்பவரால் ஆளப்பட்டு வந்தது. ஆனால், சில பிரபுக்களுடன் சேர்ந்து கொண்டு அக்பரின் மேலாண்மையை ஏற்ப மறுத்து தன்னிச்சையாக ஆண்டான். எனவே அக்பர் **1581–ல்** காபூர் மீது படையெடுத்து ஹக்கீமை தோற்கடித்து பணிய வைத்தார். ஆனால், அவனது உண்மையான சேவையை எண்ணி மன்னித்துவிட்டார். **1585–ல்** ஹக்கீம் இறந்த பின்னர் காபூர் முறைப்படி பேரரசுடன் இணைக்கப்பட்டது.

இதன்பின் ராஜா தோடர்மால், பகவன்தாஸ், இளவரசர் மூரத் ஆகியோரை அனுப்பி சிந்து, பலுசிஸ்தானம், காந்தகார் ஆகிய பகுதிகளை வென்று வர ஆணையிட்டார். **1591–லூ** சிந்துவும் **1595–ல்** பலுசிஸ்தானமும் வெல்லப்பட்டன. காந்தகார் போர் தொடுக்காமலே இணைந்துவிட்டது. ஆனால், இந்தப் போர்களில் பகவன்தாசும், தோடர்மாலும் இறந்துவிட்டனர். இவ்வாறு வட மேற்கு எல்லைப் பகுதிகள் வெல்லப்பட்டு அக்பரின் பேரரசுடன் இணைக்கப்பட்டன.

**9. அக்பரின் தக்காணப் படையெடுப்பு : 1595 – 1601**

அக்பர் இந்தியா முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வர எண்ணினார். எனவே, வட இந்திய வெற்றிப் படையெடுப்புகளுக்குப் பின்னர் நமது கவனத்தைத் தக்காணத்தின் மீது திருப்பினார். மேலும் இந்தியாவின் தென் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தைநிலைநாட்ட வந்துள்ள போர்த்துக்கீஸியர்களின் ஆபத்தையும் உணர்ந்த அவர் அவர்களின் செல்வாக்கையும், வலிமையையும் ஒடுக்க வேண்டுடுமன நினைத்தார். எனவேதான் தக்காணப் படையெடுப்புகளில் ஈடுபட்டார் அக்பர்.

a) **அகமது நகர்:** அகமது நகர், காந்தேஷ், கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகிய தக்காண நாடுகளின் சுல்தான்களிடம் தனது தூதுவர்களை அனுப்பி தமக்கு அடிபணியுமாறு கேட்டுக்கொண்டார். காந்தேஷைத் தவிர மற்ற சுல்தான்கள் முகலாயர்களின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். எனவே, தக்காணத்தின் மீது போர்த் தொடுக்க முடிவு செய்த அக்பர், இளவரசர் முரத் பைராம்கானின் மகன் அப்துர் ரகீம் ஆகியோர் தலைமையில் ஒரு படையை தக்காணத்திற்கு அனுப்பினார். அகமது நகர்தான் முதலில் தாக்கப்பட்டது. அந்த நாட்டிடின காப்பாளர் ஆட்சி செய்து வந்த சந்த்பீபி (Chand Bibi) வீரமுடனும் தன்னம்பிக்கையுடனும் முகலாயப் படைகளை எதிர்த்தார். சந்த்பீபியைத் தோற்கடிக்க

முடியாமல் **1596–**ல் சமாதான உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டு பீராரைப் பெற்றனர் முகலாயர். ஆனால், மீண்டும் அகமது நகரில் கலவரம் ஏற்படவே அக்பரே தலைமை தாங்கிச் சென்றார். **1600–**ல் இளவரசர் தன்யால் (Daniyal) மிக, எளிதாக அகமது நகரைக் கைப்பற்றினார்.

b) **காந்தேஷ் :** ஆரம்பத்தில் முகலாயர் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட காந்தேஷ் சுல்தான் மியான் பஹதுூர்ஷா இறுதியில் அடிபணிய மறுத்தார். எனவே **1600–**ல் காந்தேஷ் மீது அக்பர் படையெடுத்தார். தலைநகர் பாஹன்பூர் கைப்பற்றப்பட்டது. ஆனால் ஆசிர் கார்க் (Asirgarh) என்ற கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. மிகுந்த பொருட்செலவு செய்தபின்னரே அக்கோட்டை அக்பர் வசமானது.

இவ்வாறு அக்பரின் தென்னிந்தியப் படையெடுப்புகளினால் அவரது பேரரசின் எல்லை தெற்கில் கிருஷ்ணாவின் கிளை நதியான பீமா நதி வரை பிரிவடைந்தது. தக்காணத்தில் வெல்லப்பட்ட அகமது நகர் பீரார், காந்தேஷ் ஆகியவை மூன்று சபாக்களாகப் பிரிக்கப்பட்டு பேரரசுடன் இணைக்கப்பட்டன.

அக்பர் ஒரு சிறந்த வெற்றி வீரர். மிகச் சிறந்த இராணுவத் திறமையும் போர்வழி முறையும் அவரது ஒவ்வொரு வெற்றியிலும் காணப்பட்டன. எவராலும் வெல்ல முடிடாத பேரரசர் என்பதை நிரூபித்தார். தனது தந்தை ஹுமாயூனின் இராஜ்யங்களைக் கைப்பற்றினார். தனது வெற்றிகளின் மூலம் வலிமையான பெரிய முகலாய சாம்ராஜ்யத்தை நிறுவினார். அக்பரது பேரரசு கிழக்கே வங்காளம் முதல் மேற்கே ஆப்கானிஸ்தானம் வரையிலும், வடக்கே இமய மலை முதல் தெற்கே கோதாவரி நதி வரையிலும் பரவி இருந்தது.

### அக்பரின் இரஜபுத்திரக் கொள்கை

இந்தியாவில் நிலையானதோர் முகலாயப் பேரரசை நிறுவ வேண்டுமானால் அதற்கு ரஜபுத்திரர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம் தேவை என்பதைப் புரிந்து கொண்ட அக்பர் அதற்கேற்ப கொள்கையை வகுத்துக் கொண்டார். ரஜபுத்திரர்களின் வீர உணர்ச்சிகளையும் தேசப்பற்றையும் மட்டுமே நோக்காது அவர்களின் தகுதிகளையும் இந்திய வரலாற்றில் அவர்கள் வகிக்கும் பங்குகளைம் உணர்ந்து

நீதியின் அடிப்படையில் தனக்கும் இரஜபுத்திரர்களுக்கும் உள்ள தொடர்பை வளர்க்க அதிக முயற்சி எடுத்து வந்தார்.

**ரஜபுத்திரர்களுடன் திருமண ஒப்பந்தம் :**

**1562–ல்** ஆம்பர் நாட்டு ரஜபுத்திர மன்னர் ராஜாபார்மால் (Raja Bharmal) அக்பருக்கு அடிபணிந்தபோது, தனது மகள் ஜோத்பாயை அக்பருக்கு மணமுடித்துக் கொடுத்தார். இந்த ஜோத்பாய்தான் பின்னர் மரியம் ஜமானா என்ற பெயர் கொண்ட ஜஹாங்கீரின் தாயாவாள். **1570–ல்** பிகானர், ஜெய்சால்மர் ஆகிய நாடுகளின் அரசர்கள் அக்பரின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு தங்கள் பெண்களை அக்பருக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். அக்பரின் அந்தப்புரத்திலிருந்த இந்து மனைவிகள் பிறரால் நன்கு மதிக்கப்பட்டனர். அக்பரும் தனது இந்து மனைவிகட்கு பூரண மத சுதந்திரம் அளித்தார். அவர்களின் உறவினர்கட்கு மான்சப்ஸ் என்ற உரிமைகளை அளித்தார்.

**ரஜபுத்திரர்கட்கு உயர் பதவி அளித்தார் அக்பர் :**

முகலாயத் தளபதிகளைவிட ரஜபுத்திரத் தளபதிகளே அக்பருக்கு விசுவாசமாக இருந்தார்கள். ராஜா பகவன்தாஸ் ராஜா மான்சிங் ஆகியோர் அக்பரின் திறமைமிக்க படைத் தளபதிகளாயினர். ராஜா தோடர்மால், ராஜா பீர்பால் ஆகியோரும் உயர் பதவி வகித்தனர். தன்னுடைய ரஜபுத்திர உறவினர்களை அரச குடும்பத்தினர் போன்ற மதித்து நடந்தார் அக்பர். எனவே அக்பரின் போர் வீரர்களில் பாதிப்பேர் இந்துக்களாகவும், ரஜபுத்திரர்களாகவுமே இருந்தனர்.

**அக்பரின் மத சகிக்புத் தன்மை :**

அக்பர் தனது இந்து மனைவிகளின் தொடர்பினால் மத சகிப்புத் தன்மையை பின்பற்றினார். இந்துக்களுக்கு மத சுதந்திரம் அளித்தார். அவர்கள் தங்கள் விருப்பம்போல் கோவில் கட்டிக்கொள்ளலாம். தன்னுடைய படையெடுப்பின்போது இந்துகூ கோவில்களை இடிப்பதைத் தவிர்த்தார். **1563–ல்** இந்துக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த புனிதப் பயண வரியை (Pilgrimage Tax) ரத்து செய்தார். **1564–ல்** ஜசியா வரியை ஒழித்தார். போரின் போது போர்க் கைதிகளை அடிமைப்படுத்தி அவர்களைப் பலவந்தமாக முஸ்லீம் மதத்திற்கு மாற்றும் பழக்கத்திற்குத் தடைவிதித்தார்.

அக்காலத்தில் இந்து மதத்தின் சாபக்கேடாக விளங்கிய சதி, பாலிய விவாகம் போன்ற பழக்கங்களை ஒழித்தார். இராமாயணத்தையும், உபநிடதங்களையும் பாரசீக மொழியில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தார். இந்துக்களின் திருவிழாக்களான தீபாவளி, தசரா, ஹோலி பண்டிகைகளில் நேரடியாக கலந்து கொண்டார். இந்துக் கலைகள், எழுத்தாளர்கள், கலைஞர்களை ஆதரித்தார். அக்பரின் இந்தக் கொள்கைகளினால் இரஜபுத்திரர்களின் ஆதரவு அவருக்க் அதிகரித்தது. இந்துக்கள் தங்கள் பழைய கால கொடுமைகளை மறந்து அக்பரைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

**அக்பரின் சமயக் கொள்கை (தீன் இலாஹி) (Religious Policy of Akbar-Din-i-llahi)**

இந்தியாவில் எல்லா பிரிவினரின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்று தான் ஒரு தேசிய அரசராகத் திகழ வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவானதே அக்பரின் சமயக் கொள்கையாகும். அவரது சமயக் கொள்கை உருவாவதற்குப் பல செல்வாக்குகள் காரணமாக அமைந்தது. அக்பரின் பிறப்பு, வளர்ப்பு, செல்வாக்கு, பாரம்பரியம் ஆகியவை அக்பரிடத்தில் புதிய சமயக் கொள்கை உருவாகக் காரணமாயின. அவைகள் பின்வருமாறு :

a) அக்பர், ஹுமாயூன் நாட்டைவிட்டு இழந்து தவித்த நேரத்தில் அமர்கோட் என்ற இந்து மன்னரின் கோட்டையில்தான் பிறந்தார். அக்பரின் தாய் ஹமிதா பானு பேகமும், வளர்ப்புத் தாய் மாகம் அனகாவும் ஷியா மதப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அக்பரைச் சிறுவயது முதல் வளர்த்த பைராம்கானும் ஷியா மதப்பிரிவைச் சேர்ந்தவர். இவர்கள் அக்பரின் பொறையுடைமைக்கு வித்திட்டவர்கள்.

b) அக்பரின் ஆசான் அப்துல் லத்தீபின் போதனைகளை அக்பரிடத்தில் பொறுமை உணர்வையும், பரந்த நோக்கையும் ஏற்படுத்தின. உலக அமைதியைப் போதித்தவர் அப்துல் லத்தீப் ஆவார்.

c) அக்பரின் இந்து மனைவிகள் அவருக்கு இந்து மதத்தன் மேன்மையை எடுத்துரைத்தனர். மேலும் அறிஞர்களான ஷேக் முபாரக்குடனும் அவரின் இரு புதல்வர்களான அபுல்பெய்சி, அபுல் பெய்சி, அபுல் பாசல் போன்றோர்களுடன் அக்பர் கொண்ட தொடர்பு அக்பரது கருத்தில் மாறுதல்களை ஏற்படுத்தியது. ஏற்கனவே பக்தி

மார்க்கத்தை வளர்த்த கபீர், வல்லபர், சைத்தன்யர், நானக் ஆகியோர்களின் கருத்துக்களை நன்கு அறிவார் அக்பர்.

எனவே அக்பர் தனது ஆரம்ப கால வாழ்க்கையிலிருந்தே பல்வேறு மதக் கருத்துக்களையும் நன்கு அறிந்தவராக இருந்தார். எனவே, ஆன்மீக ஆர்வத்தையும், உயர் இலட்சியங்களுக்காக வாழும் ஆசையையும் தம் மனதில் பதித்துக்கொண்டார். பல்வேறு மதப் பிரிவுகளுக்கிடையே காணப்பட்ட சிக்கல்கள் அவர் மனதைப் பெரிதும் வாட்டின. பல்வேறு கருத்துக்களைக் கூறி சண்டையிட்டுக் கொண்டிருக்கும் சமயங்களை ஒன்றாக இணைத்து, முரண்பட்ட கருத்துக்களை ஒன்றுபடுத்தி ஒரு புதிய சமயக் கருத்தை உருவாக்குவதில் ஈடுபட்டார். ‘உண்மை’ (Truth)யை அறிந்துகொள்வதில் தீவிர விருப்பமுடையவராக இருந்தார். பதௌனி கூறுவது போல், ‘‘பதேபூர் அரண்மனைக்கருகில் ஒரு ஒதுக்குப்புறமான பாறையின் மேல் காலை நேரங்களில் தனியாக பிராத்தனை மனதுடனும் துன்பம் தோய்ந்த முகத்துடனும் பல காலை நேரங்களில் தம் நெஞ்சின் மீது முகம் படிந்திருக்குமாறு தன்னை மறந்து மூழ்கிவிடுவார் அக்பர்’’.

பல்வேறு மதங்களுடன் தொடர்பு கொண்டதின் விளைவாக உண்மை’ அறிவு ஒரு குறிப்பிட்ட மதத்தில் புதைந்து கிடக்காது. எல்லா சமயங்களிலும் பரவலாக உள்ளது என்பதை அறிந்து அக்பர் தனது வைதீக சன்னி முஸ்லீம் ம்காள்கையில் நம்பிக்கை இழக்க ஆரம்பித்தார். **1579**–ல் இஸ்லாம் சமயத்தின் மாறுபட்ட கொள்கைகளுக்கு விளக்கம் கூறும் நீதிபதி என்ற நிலைக்கு தன்னை உயர்த்திக்கொண்டார். தாம் கூறும் விளக்கங்களுக்கு குர் ஆன் அடிப்படையாக இருக்கும் என்றும் உலாமாக்களின் கருத்துக்கள் புறக்கணிக்கப்படும் என்றும் அறிவித்தார். இதன்படி **1579** செப்டம்பர் மாதம் ‘தவறு படா கொள்கை ஆணை’ (Infallibility Decree) எனப்படும் பத்திரம் ஒன்றை வெளியிட்டார். ‘மதசம்பந்தப்பட்ட கொள்கைகளில் மன்னர் தவறிழைக்கமாட்டார்’ என்ற நம்பிக்கையுடன் அந்த ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி நாட்டிற்கும், மதத்திற்கும் அக்பரே தலைவர். சமயத்தற்கு விளக்கம் கூறியதால் அக்பர் இமாம்–இ–அடில் (Imam-I-Adil) என்றழைக்கப்பட்டார். தலைமை புரோகிதர் போன்று தாமே சில நேரங்களில் ‘குப்தா’ படித்தார். ‘இந்த தவறுபடா கொள்கை ஆணையின் விளைவாக அக்பர்

இஸ்லாமிய மதத்தின் எந்த மனிரும் அடைய முடியாத உயர்நிலையினை அடைந்தார்' என்று ஸ்மித் கூறுகிறார்.

**மூன்றாம் நிலை : அக்பரின் தீன் இலாகி (Din-I-llahi)**

தனது பிற சமயங்களைப் பற்றிய ஆராய்ச்சிக்குப் பிறகு அக்பர் ஒரு புதிய சமயம் ஒன்றை உருவாக்க நேர்ந்தது. இப்புதிய மதமே 'தீன் இலாகி' எனப்படும் தெய்வீக சமயம் ஆகும். எல்லா மதங்களிலிருந்தும் சிறந்த கருத்துக்களை எடுத்துத் தொகுத்து ஆக்கப்பட்டதே தீன்இலாகி ஆகும். இதனை 1582–ல் அக்பர் தோற்றுவித்தார். பீர்பால், அபுல்பாசல், பெய்சி போன்றோர் தீன் இலாகி மதத்தில் சேர்ந்தனர். தீன் இலாகியின் கொள்கைகள் பின்வருமாறு :

1. இறைவன் ஒருவனே! அவனுக்கு அனைவரும் பக்தியுடன் தலைவணங்க வேண்டும்.
2. அனைவரும் தீண உணர்ச்சிகளை அடக்கி நல்லறத்தைச் செயல்படுத்த வேண்டும்.
3. எந்த மனிதனின் அதிகாரத்தையும் ஏற்காமல் காரணகாரிய முறைப்படி எதனையும் ஏற்க வேண்டும்.
4. அவசியமானால் சூரியன் நெருப்பு ஆகியவைகளை தெய்வத்தின் வெளிப்பாடாக வணங்க வேண்டும்.
5. அர்ச்சகர்கட்க இடமில்லை. பொது வழிபாட்டிற்கும் இடமில்லை.
6. தீன் இலாகி மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது 'அல்லாகு அக்பர்' என்று கூற வேண்டும்.
7. அவர்கள் புலால் உண்ணக்கூடாது. மது அருந்தக்கூடாது.
8. பிறந்த நாளுக்கு விருந்து கொடுப்பது மிகவும் முக்கியம்.
9. நெருப்பு புனிதமாகக் கருதப்பட்டது.
10. தீன் இலாகியில் நான்கு தகுதிகள் உண்டு. (1) சொத்தைத் தியாகம் செய்தல், (2) கௌரவம் அல்லது மதிப்பைத் தியாகம் செய்தல், (3) சமயத்தைத் தியாகம் செய்தல், (4) உயிரைத் தியாகம் செய்தல் ஆகியவையாகும்.

மேலும் இஸ்லாமியச் சமயத்திற்கு எதிரான பல ஆணைகள் அக்பரால் பிறப்பிக்கப்பட்டன. மாட்டிறைச்சி விலக்கப்பட்டது. பொது வழிபாடு நீக்கப்பட்டது. ரம்சான் நோன்பும் மெக்காவுக்குச் செல்வதும் தடை செய்யப்பட்டது. அராபிய மொழி படிப்பது குற்றம் என்று கூறப்பட்டது. குரானுக்குப் பதிலாக கணிதம், வான சாஸ்திரம், கவிதை, மருந்துவம், வரலாறு முதலியன படிக்கப்பட்டன.

**தீன் இலாகி தோல்வியடையக் காரணங்கள் :**

அக்பரால் தோற்றுவிக்கப்பட்ட தீன் இலாகி ஒரு மதமாக பிறரைக் கவர்ந்திழுக்கத் தவறிவிட்டது. மக்கள் மத்தியில் இப்புதிய மதத்திற்கு ஆதரவில்லாமல் போய்விட்டது. அக்பருக்குப் பிறகு அது மறைந்துவிட்டது. அதற்கான காரணங்கள் வருமாறு :

1. அக்பரின் முற்போக்கான கருத்துக்களை அறிந்துணரும் ஆற்றல் சாதாரண மக்களுக்கு இல்லை. எனவே தேசிய மதமான தீன்–இலாகியைப் புரிந்துகொண்டு அதைப் பின்பற்ற முடியவில்லை.

2. உலகில் மிகுந்த செல்வம் பெற்றிருந்த ஒரு பேரரசர், மிகப் பெரிய பேரரசைத் தன் கீழ் அமைத்திருந்த ஒரு வீரர் மக்களின் மதக் கோட்பாடுகளை அறிந்து, மதித்து மத உரிமைகளைப் போற்றியதன் காரணமாகத் தான் தோற்றுவித்த தீன் இலாகியைப் பரப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்களைக் கட்டாயப்படுத்தவும் இல்லை.

3. இந்தச் சமயம் இந்துக்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக முஸ்லீம்கள் கருதி இதனைப் பின்பற்றவில்லை. வெறுத்தார்கள்.

4. அக்பர் காலத்தில் மக்கள் வைதீக சமயக் கொள்கைகளை யுடையவர்கள். வேறுபட்ட பல மதங்களின் கருத்துக்களை தீன் இலாகி கொண்டிருந்ததால் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் தீன் இலாகியை அக்பர் தோற்றுவித்ததால், இது வரை முகலாயர்களை வேற்று நாட்டவராகக் கருதிய இந்திய மக்கள் அக்பரை தங்கள் தேசியத் தலைவராக எண்ணத் தொடங்கினர். எல்லாத் தரப்பட்ட மக்களால் அக்பர் மதிக்கப்பட்டதால் தனது அரசியல் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். எல்லா மக்களும் தீன் இலாகியை ஏற்றுக் கொள்ளாது போனாலும், சமயக் சண்டைகளும், மத வெறி உணர்ச்சிகளும் மறைந்துபோய் மக்கள் அனைவரும் இந்தியர்கள் என்ற அடிப்படையில் வாழ்ந்தனர்.

**அக்பரைப் பற்றிய மதிப்பீடு :**

இந்திய வரலாற்றில் ஒரு சிறப்புமிக்க இடத்தைப் பெற்றுள்ளவர் அக்பர். ஒரு சிறந்த வெற்றியாளர். வீரம் மிக்க தளபதி. கல்வியறிவு அதிகம் பெற்றிராத அக்பர், ஒளி மிக்க கருத்துக்கள் பெற்ற மனிதராகவும், குண இயல்புகளை மதிப்பிடுவதில் சிறந்த நீதிபதியாகவும் விளங்கினார். அக்பர் ஒரு சிறந்த நிர்வாகி. இவரது நிலச் சீர்திருத்தங்களும், மான்சப்தாரி முறையும் பிரபலமானவை. பல சிற்றரசுகளை வென்று ஒன்றாக இணைத்ததால் இந்திய தேசத்தின் தந்தை என்கிறார் நேரு. இவர் அரசியல் ஒற்றுமை, மத ஒற்றுமையை இந்தியாவில் ஏற்படுத்துவதில் வெற்றியடைந்தார். ‘பிறக்கும்போது அக்பர் மக்களின் அரசராகப் பிறந்தார் ; வரலாறு கண்ட பேரரசர்களில் ஒருவராக இருகூக அவருக்கு உரிமை உண்டு’ என்று கூறுகிறார் வின்ஸ்டன் ஸ்மித். இவ்வளவு பெருமைகளையும் கொண்ட அக்பரை ‘மகா அக்பர்’ என்று நாம் அழைக்கலாம் !

## ஜஹாங்கீர் (JAHANGIR, 1605 – 1627)

ஜஹாங்கீர் **1569–**ஆம் ஆண்டு ஆகஸ்ட் **30–**ஆம் தேதி அக்பருக்கும் ரஜபுத்திர இளவரசியான மரியம் ஜமானாவுக்கும் (ஜோத்பாய்) மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சலீம். சலீமிற்கு முன்னர் பிறந்த குழந்தைகள் எல்லாம் இறந்து போகவே சலீமைத் தவமிருந்து பெற்ற குழந்தை என்று அழைப்பர். அக்பர், ஜஹாங்கீரை மிகச் சிறந்தவராக வளர்க்க வேண்டுமென்று பெரும் முயற்சி எடுத்தார். சலீமிற்கு முறையான கல்வியைப் புகட்டினார். சலீம் தனது **1585–**ல் தனது பதினைந்தாம் வயதில் ராஜா பகவன் தாசின் மகளான மனுபாய் என்பவளைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களது மகனே குஸ்ரு ஆவர். ஆனால், தனது இருபத்தி எட்டாம் வயதிற்குள்ளாகச் சட்டப்படியாக மட்டும் இஇபது மனைவியரை மணந்திருந்தார். ஜஹாங்கீரின் வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அவரது சுயசரிதையும் அவரது அவைக்கு வந்த டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் எழுதி வைத்துள்ள குறிப்புகளும் உதவுகின்றன.

**ஜஹாங்கீர் பேரரசராகப் பதவி ஏற்றல் : 1605**

அக்பர் தனது மகன் சலீமை நல்ல முறையில் வளர்ப்பதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்த போதிலும், சலீம் தனது பருவத்துக்குரிய எல்லா கெட்ட பழக்க வழக்கங்களிலும் வாழ்ந்தார். காலப் போக்கில் அவர் மிகவும் ஒழுக்கம் குன்றியவராக மாறினார். மதுவில் மூழ்கி தன் சக்திகளை வீணாக்கினார். இந்துஸ்தானத்தின் சிம்மாசனத்திற்காக நீண்ட காலம் காத்திருந்து பொறுமை இழந்த சலீம் தனது தந்தைக்கெதிராகக் கிளர்ச்சியைத் துவக்கினார். 1549–ல் அக்பர் தக்காணப் படையெடுப்பை மேற்கொண்டிருந்தபோது அக்பருக்கெதிராகக் கிளர்ச்சி செய்து அலகாபாத்தைக் கைப்பற்றிக்கொண்டு தன்னைப் பேரரசராகப் பறை சாற்றினார். இதனை அறிந்த அக்பர் ஆக்ராவுக்கு விரைந்து வந்த தனது ஆருயிர் நண்பரான அபுல்பாசலை ஆலோசனைக்காக அழைத்தார். ஆனால், இளவரசர் சலீமின் சதியால் அபுல்பாசல் கொல்லப்பட்டார். இதனை அறிந்த அக்பர் மிகவும் துயரமடைந்தார்.

1605 அக்டோபர் 17–ல் அக்பர் இறந்த பின்னர் நவம்பர் 3–ஆம் தேதி சலீம், நூர்உத்தீன் முகமது ஜஹாங்கீர் பாதுஷா காசி என்ற பெயருடன் பேரரசராகப் பட்டம் சூட்டிக் கொண்டார். ஜஹாங்கீர் என்றால் ‘உலகத்தைக் காப்பவர்’ என்று பொருள்படும். அரியணை ஏறும்பொழுது தாம் முஸ்லீம் மதத்தைக் காப்பாற்றுவதாகவும் குஸ்ருவின் ஆதரவாளர்களை மன்னிப்பேன் என்றும் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

**ஜஹாங்கீரின் ஆரம்ப கால நடவடிக்கைகள் :**

ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்ததும் தன்னை எதிர்த்தவர்களுக்கு பொது மன்னிப்பு அளித்தார். சிறைக் கைதிகளை விடுதலை செய்தார். தனது பெயரால் நாணயம் வெளியிட்டார். ஆக்ரா கோட்டையிலுள்ள ஷாகுர்ஜிக்கும் யமுனா நதிக்கரையில் நிறுவப்பட்டிருந்த ஒரு கற்றூணுக்கும் இடையே புகழ்ப் பெற்ற 60 மணிகளைக் கொண்ட நீதிச் சங்கிலி (Chain of Justice)யை நிறுவி ஏழை எளிய மக்களின் குறைகளைத் தீர்க்க ஏற்பாடு செய்தார்.

ஜஹாங்கீர் ஆட்சிக்கு வந்ததும் பன்னிரெண்டு ஆணைகளைப் (Twelve ordinences of Jahangir) பிறப்பித்து அவைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று ஆணையிட்டார். அந்த ஆணைகள் பின் வருமாறு :

1. பல சுங்க வரிகளும் வணிக வரிகளும் நீக்கப்பட்டன.

2. வழிப்பறி, கொள்ளை, திருட்டு ஆகியவைகளுக்குரிய தண்டனைகள் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டது.

3. இறந்து போனவர்களின் சொத்தை அவர்களது வாரிசு பெற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டது. வாரிசுகள் இல்லாது போனால் அச்சொத்துக்களை அரசு எடுத்துக் கொண்டு, அதிலிருந்து கிடைக்கும் வருவாயை மசூதி, சாலை, பாலங்கள், கிணறுகள் அமைப்பது போன்ற பொதுப் பணிகளுக்குச் செலவிடலாம்.

4. ஒயின் போன்ற போதை தரும் எல்லா மது வகைகளும் தடை செய்யப்பட்டன.

5. குற்றவாளிகளின் காதுகளும், மூக்கும் வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

6. சொத்துக்களைப் பலவந்தமாகக் கைப்பற்றத் தடை விதிக்கப்பட்டது.

7. மருத்துவ விடுதிகள் கட்டவும், நோயாளிகளைக் கவனிப்பதற்கு மருத்துவர்களை நியமிக்கவும் ஆணையிடப்பட்டது.

8. குறிப்பிட்ட சில நாட்களில் விலங்குகள் கொல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

9. அக்பரைப் போன்று ஞாயிற்றுக் கிழமை ஜஹாங்கீர் மதிப்பளித்து அன்று விலங்குகளைக் கொல்வதற்குத் தடை விதித்தார்.

10. ஜாகீர்களையும், மான்சப்களையும் வைத்திருக்கும் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன.

11. வழிபாட்டுக்குரிய நிலங்களை (ஜமால்) தர்ம நிலையங்களுக்கும், மத குருமார்களுக்கும் கொடுத்தார்.

12. கோட்டைகளிலும், பிற இடங்களிலும் இருந்த கைதிகளை மன்னித்து விடுதலை செய்தார்.

ஆட்சியில் உறுதியாகவும் நிலையாகவும் அமர எண்ணிய ஜஹாங்கீர் தனது ஆதரவாளர்களை ஒன்று திரட்டி தனக்கு ஆதரவான ஒரு குழுவை ஏற்படுத்திக்கொண்டார்.

**குஸ்ருவின் கிளர்ச்சி :**

ஜஹாங்கீரின் அமைதியான ஆட்சி அவரது மூத்த மகனான குஸ்ருவின் கிளர்ச்சியினால் சற்று குழப்பம் அடைந்தது. ஜஹாங்கீருக்கும் அவர் மகன் குஸ்ருவுக்கும் இடையே அக்பரின் ஆட்சிக் கால இறுதியிலிருந்தே அரியணை குறித்து பகைமை இருந்து வந்தது. புகழ்ப் பெற்றவராக விளங்கிய குஸ்ருவுக்கு அவரது தாய்

மாமன் மான்சிங், மாமனாரும் அக்பரின் மாற்றாந்தாய் புதல்வருமான காளி ஆசம் அஸீஸ் கோக்கா போன்றவர்களின் ஆதரவும் இருந்து வந்தது.

ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்து ஐந்து மாதங்களுக்குப் பிறகு **1606–ல்** ஆக்ராவை விட்டு பஞ்சாபிற்குச் சென்று அங்கு கலகம் விளைவித்தார். குஸ்ருவுக்கு ஐந்தாவது சீக்கிய மதகுரு அர்ஜுன் பேருதவி புரிந்தார். மகனை அடக்குவதற்காக ஜஹாங்கீர் ஒரு படையுடன் சென்று ஜலந்தருக்கு அருகே குஸ்ருவைத் தோற்கடித்தார். தோல்வியடைந்த குஸ்ரு காபூலுக்குத் தப்பிச் செல்வதற்கு சீனஸ் நதியைக் கடக்க முயற்சி செய்தபோது சிறைப் பிடிக்கப்பட்டார். குஸ்ருவுக்கு உதவி செய்தவர்கள் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர். **1607–ல்** ஏற்பட்ட ஒரு கிளர்ச்சிக்கு குஸ்ரு காரணமாக இருந்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டதால் குஸ்ரு குருடாக்கப்பட்டார். அதன் பின் **1616–ல்** இளவரசர் குர்ரம் (ஷாஜஹான்) பொறுப்பில் வைக்கப்பட்டார். குர்ரம் **1622–ல்** குஸ்ருவை கொன்றுவிட்டு வயிற்று வலியினால் (colic) இறந்துவிட்டார் என்று பொய் கூறினார். அலகாபாத் அருகே குஸ்ரு அடக்கம் செய்யப்பட்டார்.

**சீக்கிய குரு அர்ஜுன் கொல்லப்படுதல் :**

கலகம் செய்த இளவரசர் குஸ்ருவுக்கு தாரன் தாரன் (Taran Taran) என்ற இடத்தில் அடைக்கலம் கொடுத்த ஐந்தாவது சீக்கிய குரு அர்ஜுன் பண உதவியும் செய்தார் என்பதற்காக குருவின் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல் செய்து கொண்டு அவருக்குத் தூக்குத் தண்டனை அளித்தார். பொதுமக்களால் மிகவும் மதிக்கப்பட்ட சீக்கிய மத குருவை மதமாற்றம் செய்ய முற்பட்டு அதில் தோல்வியடையவே அவரைக் கொல்ல ஆணையிட்டார் என்றும் சொல்லப்படுகிறது. சீக்கியரின் மத குருவைத் தூக்கிலிட்ட ஜஹாங்கீரின் செயல் அரசியல் விவேகமற்றச் செயலாகும். இதுவரை அமைதியை விரும்பும் மக்களாகவே இருந்த சீக்கியர்கள், இப்போது முகலாயப் பேரரசுக்கு எதிரிகளாக மாறிவிட்டனர். முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு இந்த சீக்கியர்களின் எழுச்சியும் பகைமையும் ஒரு காரணமாகும்.

## நூர்ஜஹான் (Nur Jahan, 1577 – 1645)

ஜஹாங்கீரின் வாழ்க்கையில் தோன்றிய பல நிகழ்ச்சிகளில் மிக முக்கியமானது அவர் நூர்ஜஹானைக் கண்டு, காதலித்து மணந்து கொண்டதேயாகும். நூர்ஜஹானின் இயற் பெயர் மெகருன்னிஸா (Mihr-un-Nisa) என்பதாகும். கெருன்னிஸா என்றால் 'மகளிர் குல ஞாயிறு' (Sun of Womenkind) என்று பொருளாகும். நூர்ஜஹானை **1611–**ஆம் ஆண்டு மே மாதம் ஜஹாங்கீர் திருமணம் செய்து கொண்டார். பேரழகியான நூர்ஜஹான் மணமான நாளிலிருந்து பேரரசரைத் தனது கைப்பாவையாக ஆட்டி வைத்தாள். **1611–**ஆம் ஆண்டு முதல் **1622–**ஆம் ஆண்டு வரை முகலாய பேரரசில் தன் இஷ்டப்படியே ஆதிக்கம் செலுத்தினாள். ஆனால், **1622–**லிருந்து நூர்ஜஹானின் ஆதிக்கம் எதிர்க்கப்பட்டு இறுதியில் வீழ்ச்சியடைந்தார்.

நூர்ஜஹான் பேரரசரின் மனைவியான பின்பு ஜஹாங்கீர் மீது கட்டுப்பாடற்ற செல்வாக்குப் பெற்று விளங்கினாள். அந்த செல்வாக்கை தனது உறவினர்களின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டாள். நூர்ஜஹானின் தந்தையும் சகோதரரும் அரச சபையில் முக்கியமான பிரபுக்ள்ளானார்கள். மேலும் நூர்ஜஹான் தனது முதல் கணவருக்குப் பிறந்த மகளான லட்லிபேகத்தை ஜஹாங்கீரின் கடைசி மகனான இளவரசர் ஷாரியருக்கு மணம் செய்து கொடுத்து தனது நிலையை பலப்படுத்திக் கொண்டார். தனது சகோதரனான ஆசப்கானின் மகளான அர்ஜிமந்த் பானு என்பவளை இளவரசர் குர்ரம் மணம் செய்து கொண்டதின் விளைவாக நூர்ஜஹானின் நிலை மேலும் உறுதி பெற்றது.

### நூர்ஜஹான் ஆட்சியின் முதல் பாகம் : 1611 – 1622

ஜஹாங்கீரும் நூர்ஜஹானும் கணவன் மனைவியுமாக வாழ்ந்த நாளெல்லாம் அவர்களிடையே அரசியல் கொள்கை நிலைகளிலிருது அரண்மனைச் சிற்றேவல் நிலை வரை எந்தக் கருத்து வேறுபாடும் ஏற்பட்டதில்லை. தாம் நடத்த வேண்டிய ஆட்சியில் ஓரளவு பங்கு கொள்ள நூர்ஜஹானுக்கு இடம் கொடுத்தார். ஆனால் ஜஹாங்கீரின் அளவிற்கு அதிகமான குடியால் ஆட்சிப் பொறுப்பை முழுவதுமாக தானே ஏற்று நடத்தினார். நாட்டின் அதிகாரம் செலுத்துவதற்காக நூர்ஜஹான் அமைத்திருந்த அந்தரங்க உட்குழுவில் (Junta) நூர்ஜஹானின் தாயாரான அஸ்மத் பேகம், தந்தை

மீர்ஷாகியாஸ் பெக், சகோதரர் ஆசப்கான், இளவரசர் குர்ரம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். பேரரசின் நிர்வாகம் முழுவதுமே நூர்ஜஹானின் கையில் இருந்தது. **1613–**ல் பாதுஷா பேகம் (Badshah Begam) என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். அவரது பெயரில் நாணயங்கள் வெளியிடப்பட்டது.

இந்தக் காலப் பகுதியில் நூர்ஜஹான் தனது உருவம் கொண்ட நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். தாமே அரச கட்டளைகளை (firman)யும் பிரகடனம் செய்தார். ஜரோகாக் காட்சிகளிலும் நூர்ஜஹானே பங்கெடுத்துக் கொண்டார். அவைக்கு வந்த பிரபுக்கள் நூர்ஜஹானின் முன் விழுந்து வணங்கினர். சுருக்கமாகக் கூறினால் நூர்ஜஹான் பேரரசியாகவே ஆட்சி செய்து வந்தார். இக் காலத்தில் நாட்டில் அமைதிம் செழிப்பும் நிலவியது. து.புற்றவர்களுக்கும் அனாதைப் பெண்களுக்கும் புகலிடமாக விளங்கினார் நூர்ஜஹான்.

**நூர்ஜஹான் ஆட்சியின் இரண்டாம் பாகம் : 1622 – 1627**

நூர்ஜஹானின் ஆட்சியின் இரண்டாவது பகுதியான இக் காலத்தில் நூர்ஜஹான் கையில் உண்மையான ஆட்சிப் பொறுப்பு இருந்தது. ஜஹாங்கீர் பின்னுக்குத் தள்ளப்பட்டார். எனவே நிர்வாகத்தில் தன்னை எதிர்த்தவர்கள் அனைவரையும் ஒழித்துக் கட்ட முற்பட்டாள். அரண்மனையில் ஆதிக்கப் போட்டி ஏற்பட்டது. ஜஹாங்கீரின் உடல் நலம் பாதிக்கப்பட்டபோது இந்த ஆதிக்கப் போட்டி உச்சக் கட்டத்தை அடைந்தது. பட்டத்து இளவரசரான குர்ரம்மை (ஷாஜஹான்) ஒழித்துக் கட்டிவிட்டு தனது மருமகனும் ஜஹாங்கீரின் கடைசி மகனுமான ஷாரியரை அரசனாக்கத் தீட்டினாள். நூர்ஜஹானின் சூழ்ச்சிகளை முற்றிலும் அறிந்து கொண்ட ஷாஜஹான் எதிர் நடவடிக்கைகளில் இறங்கினார். பேரரசுக்கு எதிராகக் கலகம் செய்தார் ஷாஜஹான்.

இதற்கிடையில் முகலாயப் படைத் தளபதியான முகபத்கான் நூர்ஜஹான் மீது தீராத பகைமை கொண்டிருந்தார். எனவே தனது சகோதரரான ஆசப்கானின் துணை கொண்டு மகபத்கானை அடக்க முயன்றாள். அதற்கான திட்டமும் தீட்டினாள். அரசாங்க நிதியைக் கையாடிவிட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால், மகபத்கான் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக **1626–**ல் லாகூரிலிருந்து சிறைப்பிடித்தார். ஆனால், தந்திரமாக மகபத்கான் பிடியிலிருந்து தன்னையும்

பேரரசரையும் விடுவித்துக் கொண்டாள் நூர்ஜஹான். ஜஹாங்கீர் விடுதலை அடைந்ததும் மகபத்கான் ஆதிக்கம் அடங்கியது. ஆனால், மகபத்கான் ஷாஜஹானுடன் கூட்டுச் சேர்ந்து விடவே நூர்ஜஹானின் திட்டங்கள் பலவீனமடைந்தன. இந்த இரண்டாவது ஆட்சிக் கட்டத்தில் தான் பேரரசு நிலைகுலைய ஆரம்பித்தது. கிளர்ச்சிகள், கலவரங்கள், சதிகள் போன்றவற்றால் நாட்டின் நிர்வாகம் சீர்குலைந்தது.

**நூர்ஜஹானின் வீழ்ச்சி :**

அருங் குணங்கள் பல கொண்ட நூர்ஜஹானிடம் சில குறைபாடுகளும் இருந்தன. அவரைத் தவிர வேறு யாரும் புகழ் பெறுவதை அவரால் பொறுக்க முடியவில்லை. மற்றவர்களின் உயர்வு தன்னைத் தாழ்த்திவிடுமோ என்று அஞ்சினார். ஷாஜஹானின் கலகமும், மகப்த்கானின் கலகமும் அவரது பொறாமைக் குணத்தின் விளைவுகளேயாகும். தனது கணவருக்குப் பிறகு தனது மருமகனான ஷாரியரே அரியணையில் அமரவேண்டுமென்று செயலாற்றியதால்தான் அரண்மனையில் சதித் திட்டங்களும் அதன் விளைவாக குழப்பங்களும் தோன்றின. அவரது அதிகார ஆசை உயர்குடி மக்களின்பகைமையை உருவாக்கியது. அவரது இறுதிக் காலம் இன்னல்கள் நிறைந்த காலமாக மாறுவதற்கு அவரது மனப்போக்கும் செயல்களுமே காரணமானது.

ஜஹாங்கீர் தனது உடல் நிலை திருந்துவதற்காகக் காஷ்மீர் சென்றார். ஆனாலும் உடல் நிலை தேறவில்லை. திரும்பி வரும் வழியில் லாகூருக்கு அருகே ஒரு இடத்தில் 1627 அக்டோபர் மாதம் இறந்தார். ஷாஜஹானும் ஆசப்கானும் உடனடியாக நடவடிக்கையில் இறங்கினார். நூர்ஜஹானின் ஆதிக்கத்தை ஒழித்து ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் ரூபாய் மானியமாகக் கொடுத்து அரசியலிலிருந்து விலக்கினர். ஷாரியர் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். இவ்வாறு நூர்ஜஹான் வீழ்ச்சியடைந்தார்.

**நூர்ஜஹானின் ஆட்சித் திறம் :**

நூர்ஜஹான் தனது தந்தையின் உதவியுடன் நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்தி வந்தாள். ஜஹாங்கீரின் வாழ்க்கை முறையை திருத்தி அமைத்தாள். கொடூர குணம் கொண்ட பேரரசனை தனது அன்பால் மாற்றினாள். பாசத்தோடும் அன்புடனும் ஹுமாயூனைக் கவனித்து வந்தாள். எனவே தான் மிதமிஞ்சிய குடிகாரனாக இருந்த ஜஹாங்கீர் குடியை ஓரளவுக்குக் குறைத்தார். நூர்ஜஹான் பொருளாதார

முன்னேற்றத்துக்காகப் பலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினாள். தேவையற்ற செலவுகளைக் குறைத்தாள். அவள் ஆட்சிக் காலத்தில் அரண்மனையின் மகிமை சிறப்படைந்தது. உடைகள் விசயத்திலும் அதிக கவனம் செலுத்தினாள். பாரசீக மொழி இலக்கியங்களிலும் மற்ற பிற கலைகளிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தாள். அவளது சமூகக் கலாச்சார சீர்திருத்தங்கள் பிறர் வியக்கும் வண்ணம் இருந்தன.

**நூர்ஜஹானின் குணநலன்கள் :**

நூர்ஜஹானின் குணநலன்கள் மிகவும் நுணுக்கமாக அணுகி ஆராய வேண்டிய ஒன்றாகும். இடைக்கால இந்திய வரலாற்றில் அழகும்அறிவும் இணையப் பெற்றவராக அரியணையை அலங்கரிக்கும் பேரு பெற்றவர் நூர்ஜஹான் ஒருவரே. தனது 34 வயதிலும் ஜஹாங்கீரை கவர்ந்துவிட்டார் என்றால் அவரது அழகின் சிறப்பை எவ்வாறு எடுத்துக் கூற முடியும். அத்துடன் நல்ல அறிவையும் பெற்றிருந்தார். நூர்ஜஹானின் அறிவிற்கு அப்பாற்பட்டதான எந்த அரசியல் அல்லது ராஜதந்திர சிக்கல்களும் இருந்ததில்லை. மிகச் சிறந்த அரசியல் நிபுணர்களும் அமைச்சர்களும் அவரது முடிவுகளுக்குத் தலைவணங்கினர்.

நூர்ஜஹான் ஜஹாங்கீரை உள்ளன்புடன் நேசித்தார். எனவேதான் ஜஹாங்கீர் உலகத்தை மறந்து அவளது அன்பில் மூழ்கிக் கிடந்தார். பேரரசின் ஆட்சிப் பொறுப்பை அவளை நம்பி ஒப்படைத்தார். நிர்வாகக் கடமைகளிலிருந்து வழுவினார். ஜஹாங்கீர் இது பற்றிக் கூறும்போது 'நான் அரசியலாதிக்கத்தை நூர்ஜஹானிடம் விட்டுவிட்டேன். எனக்கு வேண்டுவதெல்லாம் ஒரு புட்டி மதுவும் அரைத்துண்டு இறைச்சியும்தான்' என்று குறிப்பிடுகிறார்.

இப்படி நூர்ஜஹானிடம் பல நற்குணங்கள் இருந்தபோதிலும் அவரிடம் பல தீய குணங்களும் காணப்பட்டன. பேராசையும் செருக்கும் அவரிடம் காணப்பட்டன. ''நூர்ஜஹானின் செருக்கான தன்மையும், கீழ்த்தரமான செயல்களும் ஜஹாங்கீரை அவருக்கு அடிமையாக்கியதுடன் முகலாயப் பேரரசின் நிலையான தன்மையை அசைக்கக்கூடியத் தன்மையுடையதாக இருந்தன'' என்று டாக்டர் ஈஸ்வரி பிரசாத் மதிப்பிட்டுள்ளார். ஜஹாங்கீரை மகிழ்ச்சி நாடும் மனிதராக மாற்றியதே நூர்ஜஹான்தான். இதனால்தான் ஆட்சி முறை சீர்கேடடைந்தது. இவரது பதவி

மோகமே நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியது. **1622–ஆம்** ஆண்டு முதல் **1627–ஆம்** ஆண்டு வரை நாட்டில் ஏற்பட்ட கலகங்களுக்கும் புரட்சிகளுக்கும் நூர்ஜஹானே காரணமாவார். முகலாய வரலாற்றில் முக்கிய இடம் பிடித்த நூர்ஜஹான் **1645–ல்** காலமானார்.

**ஷாஜஹான் (SHAHJAHAN 1627 – 1658)**

அக்பர் இறந்த பின்னர் அவரது மகன் சலீம் 'நூர் உத்தீன் முகமது ஜஹாங்கீர் பாதுஷா காஸி' என்ற பெயருடன் **1605** நவம்பர் **3–ஆம்** தேதி முகலாயப் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். இவர் சிக்கல் நிறைந்த ஆட்சியாளராகக் காணப்பட்டார். இவரை ஓர் சிறந்த அரசர் என்றோ ராஜதந்திரி என்றோ கூறமுடியாது. அக்பரிடம் இருந்த அரசியல் விவேகமும் உயர்ந்த இலட்சியங்களும் இவரிடம் காணப்படவில்லை. தனது மனைவி நூர்ஜஹானிடம் அடிமைப்பட்டு ஆட்சியை ஒப்படைத்துவிட்டார். எனவே மக்களின் தேவைகளையும், காலத்தின் சூழ்நிலைகளையும் அனுசரித்து மக்களுக்காக எந்த நல்ல திட்டங்களையோ, சீர்திருத்தங்களையோ செயல்படுத்தவில்லை. இவர் **1627** வரை ஆட்சி புரிந்து மரணமடைந்தார்.

ஜஹாங்கீர் இறந்த பின்னர், அவரது இரண்டு புதல்வர்களான குர்ரம், ஷாரியார் ஆகியோருடன் பதவிக்கு வருவது குறித்து போட்டி ஏற்பட்டது. குர்ரம் என்றழைக்கப்பட்டவரே ஷாஜஹான். ஷாரியாருக்கு ஆதரவாக நூர்ஷஹான் செயல்பட்டார். ஆனால் இந்த வாரிசுரிமைப் போட்டியில் ஷாஜஹான் வெற்றியடைந்தார். அதன் பின் **1628** பிப்ரவரியில் தனது **36–ஆம்** வயதில் முறைப்படி மன்னராக ஆக்ராவில் மணிமகுடம் தரித்தார். ஷாஜஹானின் ஆட்சிக்காலம் முகலாய வரலாற்றில் பொற்காலம் என்று சொல்லப்படுகிறது. **1666–ல்** தனது **74–ஆம்** வயதில் இறந்தார் ஷாஜஹான். ஷாஜஹானின் ஆட்சியைப் பற்றி பிரெஞ்சு பயணிகளான பெர்னியர், டவர்னியர் இத்தாலியப் பயணியான மனூச்சி ஆகியோர் விவரித்துள்ளனர்.

**1. உள்நாட்டு கிளர்ச்சிகளை அடக்குதல் :**

ஷாஜஹான் பட்டம் ஏற்ற பிறகு வாரிசுப் போட்டியில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் விளைவாக நாட்டில் பல பாகங்களில் புரட்சியும் குழப்பங்களும் ஏற்பட்டது. ஆனால், ஷாஜஹான் அவைகளை வெற்றிகரமாக அடக்கினார். முதலாவதாக **1628–ல்**

பந்தல்கண்ட்டில் பீர்சிங்பந்தேலாவின் மகனான ஜுஹார்சிங் (Juihar Singh) என்பவர் பேரரசருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார். ஆனால், ஷாஜஹானின் தளபதி மகபத்கான் படையெடுத்து அக்கிளர்ச்சியை அடக்கினார். **1634–**ல் மீண்டும் அவர் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது தனது மகன் ஔரங்கசீப்பை அனுப்பி ஜுகார்சிங்கை தோற்கடித்து நாட்டை விட்டே விரட்டினார்.

இரண்டாவதாக ஒரு கிளர்ச்சி தென்னிந்திய ஆளுநரான கான் ஜஹான்லோடியால் தோற்றுவிக்கப்பட்டது. இவர் அகமது நகரின் நிஜாம் ஷாஹி மற்றும் மராட்டிய, இராஜபுத்திர வீரர்களின் துணை கொண்டு கிளர்ச்சி செய்தார். ஷாஜஹானின் படை பல்வேறு இடங்களில் அவரை விரட்டியடித்து இறுதியில் கலிஞ்சாருக்கு அருகிலுள்ள டால் சிகோண்டா (Tal Sihonda) என்ற போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

**2. ஷாஜஹானின் சீர்திருத்தங்கள் :**

ஷாஜஹான் அரியணை ஏறியவுடன் இஸ்லாமியச் சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தினார். பழமையான நாட்காட்டியை மாற்றி சந்திரனைக் கொண்டு நாட்களைக் கணக்கிடும் முறையினைக் கொண்டுவந்தார். எல்லா அரசாங்க நிகழ்ச்சிகளும் சூரியன் சந்திர ஆண்டுகளைக் கொண்டு பதிவு செய்யப்பட்டன. அரச குடும்பத்தாரை வணங்கும் முறை மாற்றப்பட்டது. குடிமக்கள் நிலத்தை முத்தமிடுவதற்குப் பதிலாக வலது கையினால் நிலத்தைத் தொட்டு அதன் பின்பகுதியினை முத்தமிட அனுமதிக்கப்பட்டனர். தனது தாத்தா அக்பரைப் பெருமைப்படுத்த ஆக்ரா நகரை ‘அக்பராபாத்’ என்று பெயர் மாற்றம் செய்தார். இவர் இஸ்லாமிய சன்னி பிரிவு கொள்கையில் தீவிர நம்பிக்கையுள்ளவராதலால் யாத்ரீகர் வரியினை மீண்டும் கொண்டு வந்தார். புதிய இந்துக் கோவில்கள் கட்டுவது தடை செய்யப்பட்டது. இஸ்லாம் மதத்தற்கு மாற்றம் செய்வது ஊக்கம் அளிக்கப்பட்டது.

**3. போர்ச்சுக்கீஸியர்களுடன் போர் : 1632**

அக்பர் காலத்தில் அரச ஆணை ஒன்றினபடி போச்சுக்கீஸியர்கள் ஹுக்ளியில் தங்கள் வாணிக மையத்தை ஸ்தாபித்து ஹுக்ளியைச் சுற்றிலும் தங்கள் நிலையை வலிமைப்படுத்திக் கொண்டார்கள். மேலும் அவர்கள் இந்திய வணிகர்கள் மீது அதிக

அளவில் வரி விதித்தனர். அத்துடன் அவர்கள் கொடுமை வாய்ந்த அடிமை வாணிபத்திலும் ஈடுபட்டனர். பல இந்து முஸ்லீம் அனாதை குழந்தைகளைக் கடத்தச் சென்று அடிமைகளாக்கி விற்றனர். பலரை கிறிஸ்தவ மதத்திற்கு கட்டாய மதமாற்றம் செய்தனர். முகலாய அதிகாரிகளின் உத்தரவை மீறியும் நடந்தார்கள். இச் செயல்களினால் கோபமடைந்த ஷாஜஹான் **1631**–ல் காஸிம்கானை வங்காள ஆளுநராக நியமித்து போர்ச்சுக்கீஸியரை அடக்க உத்தரவிட்டார். **1632**–ல் ஹுக்ளி முற்றுகையிடப்பட்டது. இப் போரில் போர்ச்சுக்கீஸியர் பணிந்தனர். சுமார் பத்தாயிரம் போர்ச்சுகீஸிய ஆண், பெண் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்டனர். ஹுக்ளி கைப்பற்றப்பட்டது. இவ்வாறு போர்ச்சுக்கீஸியரின் ஆதிக்கம் அடக்கப்பட்டது.

### 4. மும்தாஜ் மகாலின் வாழ்க்கைக் குறிப்பு :

அர்ஜ்மாண்ட் பானுபேகம் (Arjumond Banu Begam) சிறந்த அழகும் கவர்ச்சியும் உடையவர். நூர்ஜஹானின் சகோதரர் ஆசப்கானின் மகள் இவர். **1612** மே **10**–ஆம் தேதி தனது **20**–ஆம் வயதில் ஷாஜஹானை மணந்தார். பின்னர் மும்தாஜ் மகால் என்று அழைக்கப்பட்டார். இவர் ஷாஜஹானின் இரண்டாவது மனைவி. கணவரின் நண்பராகவும், வழிகாட்டியாகவும் செயல்பட்டார். ஷாஜஹானின் எல்லா முடிவுகளையும் இவரை கலந்தாலோசித்தே எடுத்தார். அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உதவினார். தனது இரக்க குணத்தாலும் பெருந்தன்மையாலும் மக்களின் மதிப்பையும் பாசத்தையும் வென்றார். இவர் பதினான்கு குழந்தைகளைப் பெற்றார். பதினான்காவது மகப்பேறின் போது வலிப்பு ஏற்பட்டு **1631** ஜுன் **17**–ல் இறந்து விட்டார். தனது அன்பு மனைவியின் நினைவாக ஷாஜஹான் தாஜ்மஹாலினை ஆக்ராவில் கட்டினார். அது உலகில் கணவன் மனைவியின் அன்பிற்கு மிகப் புனிதமான நினைவுச் சின்னமாகக் கருதப்படுகிறது.

### 5. பெரும் பஞ்சம் : 1630 – '32

ஷாஜஹான் ஆட்சியின் **4**–ஆம், **5**–ஆம் ஆண்டுகளில் தக்காணம் மற்றும் குஜரத், காந்தேஷ் பகுதிகளில் மிகக் கொடிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. இப் பஞ்சத்தில் பல ஆயிரம் மக்கள் மாண்டனர். பஞ்சத்துடன் பிளேக் நோயும் பரவியது. இக் கொடுமையான பஞ்சத்தைப் பற்றி நேரில் பார்த்த பீட்டர் முண்டி, மீர்ஜா அமீன், காஜினி

ஆகியோர் தங்கள் குறிப்புகளில் விவரித்துள்ளார்கள். ஷாஜஹான் இப் பஞ்சத்தைப் போக்க பொது சமையற் கூடங்கள் திறந்தார். அரசு கஜானாக்களிலுள்ள பொருட்கள் மக்களுக்கு வழங்கப்பட்டது.

**ஷாஜஹானின் சமயக் கொள்கை :**

ஷாஜஹான் வைதீக சன்னி பிரிவைச் சேர்ந்தவர். எனவே தான் ஷியா பிரிவைச் சேர்ந்த பீஜப்பூர் கோல்கொண்டா சுல்தான்களை வென்றார். **1633–ல்** புதிதாகக் கட்டப்பட்ட இந்துக் கோவில்களை இடிக்க உத்தரவிட்டார். காசியில் மட்டும் **76** கோவில்கள் இடிக்கப்பட்டன. யாத்ரீகர் வரியை மீண்டும் கொண்டு வந்தார். முஸ்லீம்கள் மற்ற மதங்களுக்கு மாறுவதைத் தடுக்க நடவடிக்கைகளை எடுத்தார். இந்துக்கள் முஸ்லீமாக மாறுவதை ஆதரித்தார். கிறிஸ்தவர்களை வெறுத்ததுடன் மட்டுமில்லாது அவர்களைத் துன்புறுத்தவும் செய்தார்.

**''ஷாஜஹானின் ஆட்சிக் காலம் முகலாய ஆட்சியின் பொற்காலம்''**

ஷாஜஹானின் ஆட்சிக்காலம் இந்தியாவில் முகலாய ஆட்சியின் பொற்காலம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. இவரது ஆட்சிக் காலத்தில் முகலாயப் பேரரசு பரப்பில் விரிந்தும், வலிமையில் சிறந்தும் விளங்கியது. ஆனால், பொற்காலம் என்பதில் இரு வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. இந்திய வரலாற்றாசிரியர்களும், ஐரோப்பியப் பயணிகளான எல்பின்ஸ்டோன், பர்னியர் போன்றவர்களும் பொற்காலம் என்கின்றனர். ஆனால், ஸ்மித் போன்றவர்கள் 'பொற்காலம் அல்ல' என்றும், முகலாயப் பேரரசின் அழிவிற்கான அறிகுறிகள் இவர் காலத்தில்தான் தென்படத் தொடங்கின என்றும் கருதுகின்றனர்.

**நாட்டில் அமைதி ஒழுங்கு நிலவியது :**

ஷாஜஹான் காலத்தில் நாடு மிகவும் அமைதி பெற்றிருந்தது. முகலாயப் பேரரசும், அரச பரம்பரையும் புகழின் உச்சியிலிருந்தது. இவரது முப்பது ஆண்டு கால ஆட்சிக் காலத்தில் பேரரசின் அதிகாரம் தீவிரமாக எதிர்க்கப்படவில்லை. நாடு அன்னியரால் தாக்கப்படவும் இல்லை. நாட்டின் நிர்வாக அமைப்புகள் திறமையாக செயல்பட்டன. நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை நல்ல முறையில் காணப்பட்டது.

நாட்டில் அமைதி நிலவியதின் காரணமாக வியாபாரம் பெருகியது. உற்பத்தி பெருகியது. நிலங்கள் செழிப்பாக இருந்ததால் அவற்றிலிருந்து ஆண்டிற்கு 45 கோடி ரூபாய்க்கு மேல் கிடைத்தது. இவை தவிர மாகாணங்களிலிருந்து வந்த செல்வங்கள் அரசு கஜானாவை நிரப்பியது. மேலும் ஷாஜஹான், அக்பர், ஜஹாங்கீர் ஆகியோரின் செல்வங்களையும் பெற்றிருந்தார்.

**அனைவருக்கும் சமநீதி :**

தமது மூதாதையர்கள் போன்று ஷாஜஹான் நீதி நிர்வாகத்தை செவ்வனே நடத்தி வந்தார். சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற முறையில் எல்லோரையும் ஒன்று போல நடத்தினார். இவரது ஆட்சியில் மக்கள் நியாயமான நீதியைப் பெற்றனர். ஒரு தந்தை பிள்ளைகளுடன் அன்பாக இருபூபது போல மக்களிடம் நடந்து கொண்டார் ஷாஜஹான். ஒவ்வொரு புதன்கிழமையும் மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

**அயல்நாட்டு வாணிபத்தின் வளர்ச்சி :**

ஷாஜஹான் ஆட்சிக் காலத்தில்தான் இந்தியாவிற்கும் மேற்கு ஆசிய நாடுகளுக்கும் இடையே வாணிபம் செழித்து வளர்ந்தது. ஐரோப்பிய நாடுகளுக்கும் வாணிகத் தொடர்பு இவர் காலத்தில்தான் தொடங்கியது. பட்டு, பருத்தி, கஞ்சா, மிளகு போன்றவைகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு பட்டு, பருத்தி ஆலைகளில் வேலை கிடைத்து வசதி பெருகின. பேரரசின் வருவாய் அதிகரித்து நாடு வளம் பெற்றது.

**பொதுப் பணித்துறை :**

ஷாஜஹான் பொதுமக்களின் தேவைக்காகப் பொதுப் பணித்துறை வேலைகளை செய்து முடித்தார். பல இடங்களில் சாலைகள், காலவாய்கள், பாலங்கள், அணைகள் கட்டினார். லாகூரைச் சுற்றி உள்ள நிலங்களுக்காக ராவி நதியிலிருந்து ஒரு பெரிய கால்வாய் வெட்டினார். பெரோஷா துக்ளக் காலத்தல் வெட்டப்பட்ட 'மேற்கு ஜமுனா கால்வாயை' சீர்திருத்தி அமைத்தார். இவர் வெட்டிய 'ஜூம்மா கால்வாய்' முக்கியமானது ஆகும்.

**கலை, இலக்கியங்கள் வளர்ச்சி :**

ஷாஜஹான் கலை உணர்வு நிரம்பியவர். இசை, ஓவியம், நடனம், இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தார். சிற்பமும், ஓவியமும் இவர் காலத்தில் உச்ச நிலையை அடைந்தன. அணிகலன்களில் கலை வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. வேலைப்பாடுகள் நிறைந்த பீங்கான் மற்றும் உலோக கலசங்கள் இவர் காலத்தில் புகழ்ப் பெற்றவை. ஷாஜஹான் ஒரு சிறந்த அறிஞர். பாரசீக இந்தி, சமஸ்கிருத வளர்ச்சிக்கு உதவி செய்தார். ஜினாதர் என்ற இந்து இசைாணர் ஷாஜஹானிடமிருந்து 'மகாகவிராயர்' என்ற பட்டத்தைப் பெற்றார். அப்துல் ஹமீது லகூரி என்பவர் எழுதிய பாத்ஷாநாமா (Badshanama), கஃபிகான் எழுதிய 'முன்தகபூல்' (Muntakhabul) ஆகிய கவிஞர்களான சுந்தர், சேனபதி, பூஷன், பிகாரி ஆகியோர் ஷாஜஹான் காலத்தில் புகழ்ப்பெற்ற கவிஞர்களாவார். மேலும் கணிதம், வானஇயல், மருத்துவம் ஆகியவை இவர் காலத்தில் வளர்ச்சியடைந்தன.

**கட்டிடக்கலையின் வளர்ச்சி :**

கட்டிடக் கலையைப் பொருத்தமட்டில் ஷாஜஹான் ஆட்சிக் காலம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. பிரான்ஸ் நாட்டு மன்னர் 14–ஆம் லூயியைப் போன்று ஷாஜஹான் கலையில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். ஷாஜஹான் பல நகரங்களில் பல கட்டிடங்களை எழுப்பிய போதிலும் டெல்லி, ஆக்ரா ஆகிய நகரங்களில் கட்டப்பட்ட கட்டிடங்கள் அவரது கலைத் திறனை எடுத்துக் காண்பிக்கின்றன. தனது அன்பு மனைவி மும்தாஜ் மகாலின் கல்லறையின் மீது கட்டிய கலைக்கோயில் தாஜ்மகால், அவர் கட்டிய கட்டிடங்களில் தலைசிறந்தது. இவை தவிர முத்து மசூதி, ஜும்மா மசூதி, திவானிஆம், திவானிகாஸ் போன்ற பளிங்கு கட்டிடங்களைக் கட்டி 'கட்டிடக் கலையின் இளவரசர்' என்ற பட்டத்தைப் பெற்றார். (இவருடைய கட்டிடங்களைப் பற்றிய விரிவான தகவல் 'முகலாயர் கட்டிடக் கலை' என்ற பகுதியில் காண்க).

இவ்வாறு ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் பல துறைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டு பேரரசு உன்னத நிலையிலிருந்தது. முகலாயர் காலத்தில் மிகச் செழிப்பான காலம் ஷாஜஹானின் காலமே என்று எல்பின்ஸ்டன் கூறுகிறார். மக்களின் குறைகளை

அறிந்து நேர்மையாக நீதி வழங்கினார். மொத்தத்தில் நாடு நலம் பெற்று மக்கள் அமைதியுடன் வாழ்ந்தனர். எனவே ஷாஜஹான் ஆட்சிக் காலம் பொற்காலமே !

**பொற்காலம் அல்ல!**

ஸ்மித், பர்னியர், பீட்டர்மண்டே ஆகியோர் ஷாஜஹான் ஆட்சிக் காலம் பொற்காலம் அல்ல என்கின்றனர். அவர் காலத்தில்தான் முகலாயப் பேரரசின் அழிவிற்கான அறிகுறிகள் தென்பட்டன என்கின்றனர். வெளிப் பகட்டுக்குப் பின்புறம் மக்களின் மோசமான வாழ்க்கை நிலை மறைந்திருந்தது. வெளிச்சத்திற்குப் பின்புறம் இருளே கிடந்தது என்று கூறுகின்றனர்.

**1. வரிப் பளு :**

கட்டிடக் கலையின் பிரியரான ஷாஜஹான், கட்டிடங்களைக் கட்டுவதற்காக அளவற்ற செல்வத்தை செலவிட்டார். மேலும் அவரது படையெடுப்பின் காரணமாகவும் அதிக பணம் செலவிடப்பட்டது. நிர்வாகச் செலவும் அதிகம். எனவே, அதிகப் பணம் தேவைப்பட்டதால் அதிக வரி விதித்தார். மக்கள் அந்த வரிச் சுமைகளை தாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

**2. கொடியப் பஞ்சம் 1630 – ’32 :**

ஷாஜஹான் ஆட்சிக் காலத்தில்தான் கொடிய பஞ்சம் ஏற்பட்டு, தக்காணம், குஜரத் ஆகிய பகுதிகளில் மக்கள் ஆயிரக்கணக்கில் செத்து மடிந்தனர். பிரெஞ்சு நாட்டுப் பயணிகளான பெர்னியர், டவர்னியர் ஆகியோர் மக்கள் அடைந்த துன்பங்களை எழுதி வைத்துள்ளார்கள். ‘‘மக்கள் ஒரு பிடி சோற்றுக்காக உயிரையே விற்க முன்வந்தனர். பிச்சை எடுத்தனர். ஆடுகளின் இறைச்சிக்குப் பதில் நாய்களின் இறைச்சி விற்கப்பட்டது. மனிதர்களின் எலும்புகள் மாவாக்கப்பட்டு உணவு மாவுகளுடன் கலந்து விற்கப்பட்டன. மனிதர்கள் மனிதர்களையே கொன்று உண்ணும் வறிய நிலை ஏற்பட்டது’’. இப்பஞ்சம் ஷாஜஹான் ஆட்சியில்தான் ஏற்பட்டது.

**3. ஷாஜஹானின் மத துவேஷம் :**

ஷாஜஹான் ஒரு வைதிக சன்னி முஸ்லீம், மத வெறியர் இந்துக்களிடம் துவேஷத்துடன் நடந்து கொண்டார். அவர்கள் அனுபவித்து வந்த உரிமைகளை

நீக்கினார். இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டன. எனவே இந்துக்கள் இவர் காலத்தில் தங்கள் மத உரிமைகளை இழந்து வெறுப்படைந்திருத்னர். ஷியா மதத்தினரையும் வெறுத்தார் ஷாஜஹான். எனவேதான் ஷியா பிரிவினரான பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் மீது படையெடுத்தார். இவரது இந்து மத எதிர்ப்பு, ஷியா மத வெறுப்புணர்ச்சி ஆகியவை பேரரசை அழிவை நோக்கி இழுத்துச் சென்றது.

**4. முகலாயப் படையின் ஒழுங்கின்மை :**

ஷாஜஹான், படைகளை நடத்தும் திறமையற்றவர் என்று ஸ்மித் கூறுகிறார். மிகப் பெரிய படையை அவர் நிறுவியிருந்த போதிலும் அவரது படையில் நேர்மையும், ஒழுங்கும் காணப்படவில்லை. காந்தகார், மத்திய ஆசியப் படையெடுப்பின்போது படையின் ஒழுங்கற்ற நிலையினால் தோல்வி ஏற்பட்டது. இவ்வாறு முகலாயப் படையின் திறமையின்மை பேரரசு அழிவதற்குக் காரணமானது.

**5. மாகாண ஆளுநர்களின் கொடுமையான ஆட்சி :**

நாட்டில் பொதுவாக அமைதியும் ஒழுங்கும் நிலவியபோதும், மாகாணங்களின் ஆட்சி– முறை கொடுமை நிறைந்ததாக இருந்தது. ஆளுநர்களின் கொடுமையான ஆட்சியால் மக்கள் துன்பமடைந்தனர். இதனால் மக்கள் மத்தியில் அதிருப்தியும், நாட்டில் குழப்பமும் ஏற்பட்டது. ஔரங்கசீப்பின் காலத்தில் இந்த நிலை அதிகமானது. எனவே பேரரசின் அழிவிற்கான அறிகுறி ஷாஜஹான் ஆட்சிக் காலத்தல்தான் முதலில் தென்பட்டது.

**6. வட மேற்கு, மத்திய ஆசியக் கொள்கைகளில் தோல்வி :**

உள்நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாட்டுக் கொள்கையிலும் ஷாஜஹான் படுதோல்வியடைந்தார். ஷாஜஹானின் காந்தகார் படையெடுப்பு, பால்க் படையெடுப்பு ஆகியவை படுதோல்வியில் முடிவடைந்தன. இத் தோல்விகள் முகலாயப் படையின் திறமையின்மையை வெளிப்படுத்தின. பொருட் சேதமும், ஆட்சேதமும் அதிகம் ஏற்பட்டது. இந்த நிலை இவர் காலத்தற்குப் பிறகு மிகவும் மோசமானது. எனவே முகலாயப் பேரரசு ஷாஜஹான் காலத்தில் அரசியல் ரீதியாகப் பலவீனம் அடைந்தது.

**7. மராட்டியரின் எழுச்சி :**

பேரரசின் வட மேற்கு, மத்திய ஆசியத் தோல்விகள் தக்காணத்தில் மராட்டியர்களின் எழுச்சிக்கு அடிகோலியது. ஷாஜஹானின் இறுதிக் காலத்தில் மராட்டியர் முகலாயப் பேரரசுக்கு எதிராக பெருங்கிளர்ச்சி செய்தனர். நாளடைவில் மேலும் பலம் பெற்று ஔரங்கசீப் காலத்தில் அதிவேகமாக பேரரசை எதிர்த்தனர். பேரரசு அழிவதற்கு அது காரணமானது.

இவ்வாறு ஷாஜஹான் ஆட்சிக்காலம் பல நிலைகளில் தோல்வியையே தழுவியது என்றம், பேரரசின் வீழ்ச்சிக்கான அறிகுறிகள் இவர் காலத்தில் காணப்பட்டது என்றும், எனவே இவரது காலம் பொற்காலம் அல்ல என்றும் கூறப்படுகிறது. ஆனால் உண்மை இரண்டு கருத்துக்களுக்கும் இடைப்பட நிலையில் உள்ளது என்று டாக்டர் ஸ்ரீ வத்சவா கூறுகிறார். ‘‘சில நிகழ்ச்சிகள் முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு இட்டுச் சென்றன’’, என்றும் அவர் கூறுவது முற்றிலும் சரியே !

**மதிப்பீடு :**

ஷாஜஹானின் காலம் இடைக்கால இந்தியாவின் பொற்காலமாகும். முகலாய மன்னர்களில் சிறந்தவராக மதிக்கப்படுகிறார். பெருமையும், பண்பட்ட குணமும் கொண்ட அவர், மனிதத் தன்மையிலிருந்து சிறிதும் நழுவவில்லை. ஸ்டான்லி லேன்பூல் கூறுவதாவது : ‘‘ஷாஜஹானைப் போல மக்களால் மதிக்கப்பட்டவர், விரும்பப்பட்டவர் வேறு எவரும் இல்லை’’. இவரது கருணை மக்கள்பால் அவரை ஈர்த்தது. இவர் கலை மற்றும் கட்டிடக் கலையில் பேரார்வம் கொண்டு உலகப் புகழ்ப் பெற்ற பல கட்டிடங்கள் கட்டினார். இவர் தனது மனைவி மீது வைத்திருந்த அன்பு ஈடு இணையற்றது. இவர் தனது தந்தையைப் போல பெண்களின் ஆதிக்கத்திற்கு உட்படவில்லை. மத்திய ஆசியாவிலும், வட மேற்கு எல்லையிலும் ஷாஜஹான் வெற்றி பெறவில்லையென்றாலும், அத் தோல்விக்கு ஷாஜஹானே காரணம் என்று சொல்லமுடியாது. ஆனாலும், இவரது ஆட்சிக்காலத்தில்தான் முகலாயப் பேரரசு உச்ச நிலையை அடைந்தது என்பதில் சந்தேகமில்லை.

## ஔரங்கசீப்பின் வெற்றிகள்

### 1. அஸ்ஸாம் கூச்பீஹார் கைப்பற்றப்படுதல் :

முகலாயப் பேரரசின் கிழக்கு எல்லையில் இயற்கை அரண்களோடு அமைந்திருந்தவை அஸ்ஸாம், கூச்பீஹார் ஆகிய நாடுகள். பிறப்பால் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகோம் (Ahom) என்பவர்கள். அவர்கள் **13–ஆம்** நூற்றாண்டில் இப்பகுதிகளில் குடியேறி காலப்போக்கில் இந்துக்களோடு இணைந்து இந்துக்களாகிவிட்டனர். இந்த ஆகோம்கள் அடிக்கடி வங்காளத்தின் மீது தாக்குதல் தொடுத்து கொள்ளையடித்தார்கள். ஷாஜஹானின் பிள்ளைகளுக்குள் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரைப் பயன்படுத்தக்கொண்டு காமரூபத்தின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். இதைக் கேள்விப்பட்ட ஔரங்கசீப் வங்காளத்தின் ஆளுநராகப் பணியாற்றி வந்த மீர்ஜும்லாவை இழந்து போன முகலாயப் பகுதிகளை உடனடியாகப் பெறும்படி கேட்டுக்கொண்டார்.

**1661–ல்** முப்பதாயிரம் காலாட் படையினர், பன்னிரெண்டாயிரம் குதிரை வீரர்களுடன் புறப்பட்டார் மீர்ஜும்லா. கூச்பீகார் அரசர் பீரேம் நாராயணன் ஓடிவிட்டார். ஆகோமிய மன்னர் ஜெயத்துவாஜரும் தலைநகரை விட்டு ஓடிப்போய்விட்டார். ஆனால் மீர்ஜும்லாவின் வெற்றி நிலைத்து நிற்கவில்லை. கடுமையான மழைக்காலம் தொடங்கியதால் முகலாயப் போர் வீரர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளானார்கள். மழைக்காலம் முடிந்து தொடர்ந்து போரிட்டனர். தொடர்ந்து போரிட்டு பயனில்லை என்பதை உணர்ந்து ஜெயத்துவாஜர், முகலாயர்களுடன் சமாதானம் செய்து கொண்டு ஆண்டு தோறும் கப்பம் கட்ட சம்மதித்தார்.

### 2. சிட்டகாங், சந்த்வீப் வெல்லப்படுதல் :

வங்காளத்தின் ஆளுநர் மீர்ஜும்லா **1663–ல்** உயிரிநீத்தார். சிறந்த தளபதியை இழந்த ஔரங்கசீப் கவலை அடைந்தார். நம்பிக்கையும், நேர்மையும் மன உறுதியும் கொண்ட தனது தாய்மாமனான செயிஸ்டகானை வங்காளத்தன் ஆளுநராக நியமித்தர். முகலாயர்களிடம் வலிமையான கப்பற்படை இல்லாததை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, போர்ச்சுக்கீசியரும், அரக்கானைச் (Arakan) சேர்ந்த கடற் கொள்ளையரும் வங்காளத்தன் டாக்கா வரைக்கும் உள்ள பகுதிகளில் சூறையாடி நாசம்

விளைவித்தனர். இதையறிந்த செயிஸ்டகான் பெரும் படையுடன் சென்று அரக்கான் நாட்டு மன்னரைத் தாக்கி அடிபணியச் செய்தார். கொள்ளையரின் குடியேற்றமான சிட்டகாங்கும், வங்கக் கடற்பகுதியிலிருந்த சந்தவீப் (Sandip) என்ற தீவையும் செயிஸ்டகான் கைப்பற்றினார்.

**3. வடமேற்குப் பகுதியில் உள்ள கொள்ளையரை அடக்குதல் :**

இந்தியாவின் வட மேற்கு எல்லைப் பகுதி இந்தியாவில் ஆட்சி புரிந்து வந்த எல்லா மன்னர்கட்கும் தலைவலியாகவே இருந்து வந்தது. பட்டானிய இனத்தைச் சேர்ந்த ஒரு வகை முரட்டு ஜாதியினர் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் பெருவழிக் கொள்கைக் கூட்டத்தனராகவே தொழில் புரிந்தனர். இக் கொள்ளைக் கூட்டத்தினரை அடக்குவது சிரமமாக இருந்தது. எனவே ஔரங்கசீப் தானே தலைமை தாங்கி இப்பரம்பரை பகைவர் கூட்டத்தை ஒழிக்க முடிவு செய்தார். **1667**–லிருந்து **1675**–ஆம் ஆண்டு வரை தனது கவனத்தைச் செலுத்தி தொடர்ந்து போர் புரிந்து அக்கூட்டத்தினரை அழித்து அவர்கள் பகுதிகளைக் கைப்பற்றினார். காபூலில் நிரந்தரமாக அமீர்கான் என்பவரை ஆளுநராக நியமித்தார்.

**4. மார்வார் : (Marwar)**

முகலாயப் பேரரசரன ஔரங்கசீப் தீவிர இஸ்லாமியப் பற்றுடையவர். எனவே இந்துக்களையும் இராஜபுத்திரர்களையும் வெறுத்தார். மார்வார் என்ற இரஜபுத்தர நாடு ராஜா ஜஸ்வந்த்சிங் என்பவரால் ஆளப்பட்டு வந்தது. அவர் மிகத் திறமை வாய்ந்த தளகர்த்தர். வாரிசுரிமைப் போர் ஏற்பட்ட போது ஔரங்கசீப்பிற்கு எதிராகப் போரிட்டு தர்மாட் என்ற இடத்தல் அவர் படையை சிதறடித்த பெருமை இவருக்கு உண்டு. வஞ்சகமாக அவரைக் கொல்ல நினைத்த ஔரங்கசீப், அவரோடு நட்பு கொண்டு தனக்கு ஆதரவாக இந்தியாவின் வட மேற்கு எல்லையிலுள் கைபர் கணவாயின் பாதுகாப்பிற்காக அவா தலைமையில் ஒரு பெரிய படையை அனுப்பினார். அங்கு சென்ற ஜஸ்வந்த்சிங் **1678** டிசம்பர் **20**–ஆம் தேதி இறந்து விட்டார். உடனே ஔரங்கசீப் மார்வாருக்குச் சென்று அதனைக் கைப்பற்றினார்.

ஆனால் ஜஸ்வந்த்சிங்கின் ஆதரவாளர்கள் முகலாயரின் ஆதிக்கத்தை ஒழிக்க வீருகொண்டு எழுந்தனர். ஜஸ்வந்த்சிங்கின் பிள்ளையான அஜித்சிங்கை அரச

வாரிசாக ஏற்க மறுத்துவிட்டார் ஔரங்கசீப். இராஜபுத்திரத் தலைவர்களான சம்பத்ராய், சத்ராசல் ஆகியோர் தலைமையில் ரஜபுத்திரர்கள் முகலாயர்களை எதிர்த்து கிளர்ச்சியிலீடுபட்டனர்.

**5. மேவார் வெற்றி : (Mewar)**

மார்வார் நாட்டை ஔரங்கசீப் கைப்பற்றிக் கொண்டதால் மேவார் நாட்டு ரஜபுத்திரர்கள் விழிப்படைந்தனர். மேவார் நாட்டு மன்னர் ராணா ராஜ்சிங் தனது நாட்டைக் காப்பாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். ரஜபுத்திரர்களின் போர் தங்கள் விடுதலையைக் காப்பதற்காக நடந்த தேசிய எழுச்சியாகத் தோற்றமளித்தது. இதனால் ஔரங்கசீப் மேவார் மீது படையெடுத்தார். முகலாயப் படைகளைக் கண்ட ராஜ்சிங், மோவாரை விட்டு ஓடிவிட்டார். இதனால் முகலாயப் படையினர் மேவாரின் தலைநகரான உதய்ப்பூரையும், புகழ் மிக்க சித்தூர் கோட்டையையும் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் ரஜபுத்திரர்கள் மலைகளில் ஒளிந்து கொண்டு கொரிலாப் போர்முறைகளைக் கையாண்டு முகலாயக் காவல் தளங்களைத் தாக்கினர். மார்வார் நாட்டு ரஜபுத்திரர்களும் அதே முறையில் முகலாயப் படைகளைத் தாக்கினர். இவ்வாறு ஔரங்கசீப்பின் தவறான இரஜபுத்திரக் கொள்கையால் முகலாயப் பேரரசு பலவீனமடைந்தது. முகலாயப் பேரரசின் தூண்களாக விளங்கிய ரஜபுத்திரர்களை பகைத்துக் கொண்டதால், பல கலகங்கள் ஏற்பட்டு அதன் விளைவாக முகலாயப் பேரரசு வீழ்ச்சியடையக் காரணமானது.

**6. ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கை :**

ஔரங்கசீப் தனது மூதாதையர்களான அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியோர் பின்பற்றிய தக்காணக் கொள்கையையே தானும் பின்பற்றினார். ஆனால், அவர்கள் மற்ற பிரச்சனைகளையும் கவனித்தால் முழு அளவில் தக்காணத்தல் கவனம் செலுத்தவில்லை. ஆனால், ஔரங்கசீப்போ 1682 முதல் 1797 வரை சுமார் 26 ஆண்டுகள் தக்காணத்திலேயே தங்கிவிட்டார். இதற்கு முக்கியக் காரணம், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய ஷியா நாடுகளை இணைப்பது, மராட்டியர்கள் வளர்ச்சியைத் தடுப்பது, மராட்டியர்களின் ஆதரவுடன் கலகம் செய்யும் தனது மகன் அக்பரைப் பிடிப்பது, தனது பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்துவது ஆகியவையாகும்.

a) **பீஜப்பூர் கைப்பற்றப்படல் (1686)** : பீஜப்பூரை சிக்கந்தர் ஷா என்ற சுல்தான் ஆண்டு வந்தார். அவருக்கும் ஔரங்கசீப்பிற்கும், ஔரங்கசீப் தக்காண ஆளுநராக இருக்கும்போதே பகைமை ஏற்பட்டிருந்தது. பீஜப்பூரைக் கைப்பற்ற எண்ணிய பேரரசர் கிக்கந்தர்ஷாவிற்கு செய்தி அனுப்பினார். ‘‘சுல்தான் முகலாயப் படையின் ஒரு பகுதிக்கான ஆகாரச் செலவைக் கொடுக்க வேண்டும். தக்காணத்தல் தமது பகைவர்களுக்கு விரோகமாக போரிட 6000 குதிரை வீரர்களை அனுப்ப வேண்டும் ; மராட்டியர்களைத் தாக்க செல்லும் முகலாயப் படை பீஜப்பூர் எல்லைகளின் வழியாக கடந்து செல்ல அனுமதி வேண்டும்’’, என்று ஔரங்கசீப் கேட்டுக்கொண்டார்.

இச்செய்தியைக் கேட்ட சுல்தான் சிக்கந்தர்ஷா தைரியமாக பேரரசரின் வேண்டுகோளை நிராகரித்தார். எனவே ஒரு படையுடன் தானே சென்று பீஜப்பூரை முற்றுகையிட்டார். 1686 செப்டம்பர் 22–ல் பீஜப்பூர் வீழ்ந்தது. முகலாயப் பேரரசுடன் அது இணைக்கப்பட்டது.

b) **கோல்கொண்டா கைப்பற்றப்படுதல் (1687)** : 1656–ல் ஆக்ரா சிறையிலிருந்து தப்பி வந்த சிவாஜிக்கு ஆதரவாக கோல்கொண்டா சுல்தான் அப்துல் ஹசன் (Abdul Hasen) இருந்தார். சிவாஜி இழந்த கோட்டைகளைத் திருப்பி பெறுவதற்கு உதவியாக இருந்தவரும் இவரே. இக் காரணங்களால் அப்துல் ஹசன் மீது கோபம் கொண்டார். மேலும் கோல்கொண்டாவின் இயற்கை வளங்களும், கனி வளங்களும் அந் நாட்டைக் கைப்பற்றும்படி ஔரங்கசீப்பை தூண்டின. எனவே கோல்கொண்டா மீது படையெடுத்து 1687–ல் அதை முகலாயப் பேரரசுடன் இணைந்தார்.

c) **மராட்டியர்களுடன் போர்** : இதுவரை எந்த முகலாயப் பேரரசருக்கும் இல்லாத புது எதிரியுடன் ஔரங்கசீப் போர் புரிய வேண்டியதிருந்தது. அவர்கள்தான் மராட்டியர்கள். 1662 முதல் 1680 வரை மராட்டிய வீரன் சிவாஜியுடன் ஔரங்கசீப் இடைவிடாது போர் புரிந்தார். 1680–ல் சிவாஜி இறந்த பிறகு, அவர்களை அடக்கிவிடலாம் என்று கனவு கண்டார். ஆனால் மராட்டியர்கள் சிவாஜியின் மகனான ராஜாராம் தலைமையில் 1689 முதல் 1700 வரை தொடர்ந்து போர் புரிந்தார்கள். 1700–ல் ராஜாராம் இறந்தபின் அவர் மனைவி தாராபாய் (1700 – 1707) தொடர்ந்து வீரமுடன் போரிட்டார்.

இவ்வாறு **1682** முதல் **1707–**ல் தான் இறக்கும் வரை தக்காணத்தில் தனது கவனத்தையெல்லாம் செலுத்தியதால் முகலாயப் பேரரசுக்கு பலவிதத்தில் அழிவு ஏற்பட்டது.

**"ஔரங்கசீப்பின் மதக்கொள்கை''**

ஔரங்கசீப் பழமையான கொள்கைகளையுடைய சன்னிப் பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர். தீவிர மதப் பற்றுடைய ஔரங்கசீப் முகமது நபியையும், குர்ஆனையும் தலைமேற்கொண்டு தனது வாழ்கையில் இவைகளே வழிகாட்டிகளாக அமைய வேண்டும் என்ற மனதுடைய ஏராளமான மக்களைக் கொண்ட ஓர் புதிய இந்தியாவை உருவாக்க வேண்டுமென்று எண்ணினார். பழமைக் கொள்கைகளுக்கே (Orthodox) முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று விரும்பியவர். இஸ்லாமிய மதத்தை இந்திய நாட்டின் மதமாக்கவே கடவுள் தன்னை அரசராக்கி இருப்பதாக எண்ணினார். இதனால் மதக் கோட்பாடுகளில் பல சீர்தருத்தங்களை தீவிரமாகச் செய்தார்.

**1. ஔரங்கசீப்பின் சமய சீர்திருத்தங்கள் :**

a) பேரரசர் வெளியிடும் நாணயங்களில் **'கலிமா'** என்ற இஸ்லாமிய விசுவாசப் பிரமாணத்தின் பகுதி பொறிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தினார். காரணம் முஸ்லீம்கள் அல்லாதவர் அந்த வாசகத்தைத் தொடக்கூடாது என்பதேயாகும். இந்துக்கள் பாரசீக ஆண்டு பிறப்பு தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவது தனது மதக் கோட்பாட்டிற்கு விரோதமானது என்று சொல்லி அதை நிறுத்தினார்.

b) **முகத்சீப்** (Muhatjib) என்ற சமூக கண்காணிப்பாளர்களை நியமித்து குரானில் குறிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு இசைந்து மக்கள் வாழுகின்றனரா என்று கவனிக்கும்படி செய்தார். மயக்கம் தரும் மதுவகைகள் அருந்துதல், சூதாட்டம் ஆகியவை தடை செய்யப்பட்டது. முஸ்லீம்கள் நாள் ஒன்றிற்கு ஐந்து முறைகள் தொழுகை புரிகின்றனரா என்றும், ரம்சான் பண்டிகை சமயத்தில் குறிப்பிட்ட விரதங்களை தவறாமல் பின்பற்றுகின்றனரா என்றும் கண்காணிக்கும்படி செய்தார்.

c) பேரரசருடைய பிறந்த தினத்தன்று அவர்கள் தராசில் நிறுத்தப்பட்டு அதற்குச் சமமான விலையுயர்ந்த உலோகங்களைப் பெறும் வழக்கத்தை நீக்கினார். தினந்தோறும் சூரிய உதய நேரத்தில் 'அரசர் தரிசனம்' கொடுக்கும் பழக்கத்தையும் நிறுத்தினார். அது தனிமனித வழிபாட்டுக்கு வழிவகுப்பதாக எண்ணினார்.

d) இந்திய முறைப்படி அரசாங்க அலுவலர்கள் ஒருவரை ஒருவர் காலையில் கண்டு வணங்கும் பழக்கத்தை ஒழித்து இஸ்லாமிய முறைப்படி ‘சலாம்–அலேகும்’ (Salam Alekum, Peace lie with you) என்று தங்கள் காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள கட்டாயப்படுத்தினார்.

e) அரசாங்கத்தில் வேலை செய்து வந்த ஜோஸ்யர்களை அப்பதவியிலிருந்து நீக்கினார். பெண்கள் தெய்வ வழிபாட்டுத் தலங்கட்கும், புனிதர்கள் வாழும் இடங்களுக்கும் செல்வதைத் தடுத்தார். விபசாரம் அடியோடு ஒழிக்கப்பட்டது. அதில் ஈடுபட்டிருந்த பெண்கள் மணம் புரிந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அதற்கு ஒப்புக்கொள்ளாதவர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

## இந்து மதம்

a) தீபாவளி, முகரம், ஹோலி முதலிய இந்துப் பண்டிகைகளை தடுத்து **1699–ல்** சட்டம் இயற்றினார். இறந்து போனவர்களின் கல்லறைகளில் விளக்கேற்றும் பழக்கத்திற்கு தடை விதித்தார். சங்கீதக் கலைஞர்களையும், நாட்டிய நங்கைகளையும் அரண்மனையை விட்டு துரத்தியடித்தார். நாட்டியம் சமூகக் கேடுகளுக்கு வழி நடத்தும் என்றார். இந்துக்களில் இறந்தவர்களின் சடலங்களை சில குறிப்பிட்ட நதிக்கரையில் வைத்து எரிக்கக் கூடாது என்று சட்டம் இயற்றினார். இந்துக்கள் இஸ்லாமியர் போன்று நடை உடை பாவனைகளில் தோற்றம் அளித்தல் கூடாது. இஸ்லாமியர் அணிய வேண்டிய கால்சட்டைகளின் உயரமும், தாடிகளின் நீளமும் வரையறுக்கப்பட்டது. குதிரைகளிலோ, யானைகளிலோ, பல்லக்குகளிலோ இந்துக்கள் சவாரி செய்தல் கூடாது. ஆனால், இந்த விதிகளிலிருந்து ரஜபுத்திரர்கட்கும் மராட்டியர்கட்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டது. புதிதாக இஸ்லாம் மதத்தில் சேர்ந்தவர்கட்கு அரசின் எல்லா சலுகைகளும் கிடைத்தது.

b) **இந்துக் கோவில்களை அழித்தல் :** ஆரம்ப காலத்தில் இந்துக் கோவில்களைக் கட்டவோ, பழுது பார்க்கவோ கூடாது என்று கூறிய ஔரங்கசீப் பல ஆண்டுகளில் இந்துக் கோவில்களை இடிக்கும்படியாக கட்டளையிட்டார். மதுராவில் கேசராய் ஆலயமும், காசியில் விசவநாதர் ஆலயமும், கத்தியவாரில் சோமநாதர் ஆலயமும் தரைமட்டமாக்கப்பட்டன. மேவாரில் **240** கோயில்கள் தரைமட்டமாயின.

c) **ஜஸியா வரி (Jizya) :** வரி மீண்டும் விதிக்கப்பட்டது. பேரரசர் அக்பரால் நீக்கப்பட்ட ஜஸியா வரியை ஔரங்கசீப் 1679, ஏப்ரல் 12–ல் திரும்பவும் விதித்தார். அரசின் வருவாயை அதிகரிக்கவும், இந்துக்களை இஸ்லாமியர் ஆக்கவும் அது துணை புரிந்தது. பேரரசின் எல்லைக்குள் இருந்த முகமதியரல்லாத எல்லோரும் அந்த வரியைக் கட்டாயம் கட்ட வேண்டியதாயிற்று. வரி செலுத்துபவர்கள் நேரடியாகச் சென்று, தேவையான மரியாதைகளைச் செய்து வரி செலுத்த வேண்டும். வேறு யார் மூலமாவது வரி செலுத்தக்கூடாது. அந்த வரி செலுத்தப்போகும் இந்துக்கள் கேவலமாக நடத்தப்பட்டனர்.

d) **வர்த்தக வரி :** நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய விரும்பிய ஔரங்கசீப் வியாபாரப் பொருட்களுக்கு வரி விதித்ததில் வியப்பில்லை. ஆனால் அந்த வரி இஸ்லாமியர்கட்கு 2.5 சதவிகிதமாகவும், இந்துக்களுக்கு 5.5 சதவிகிதமாகவும் விதிக்கப்பட்டது. இது தவிர அந்த வரி வசூலிப்பதிலும் இஸ்லாமியர்கட்கு சலுகைகள் வழங்கப்பட்டது. இவை தவிர இந்துக்களுக்கென்று ‘யாத்ரீகர்கள் வரி’ விதிக்கப்பட்டது. தகனம் செய்த இறந்த மனிதர்களின் தகனச் சாம்பலையும், எலும்புகளையும் கங்கை போன்ற புண்ணிய நதிகளில் கரைப்பதற்கும் வரி வசூலிக்கப்பட்டது.

e) **இந்துக்களும் அரசாங்க அலுவலர்களும் :** அரசாங்கத்தில் வேலை பார்த்து வந்த அனேக இந்துக்களை விலக்கினார். சிறிது காலத்திற்குப் பின் இந்துக்களே அரசாங்க அலுவல்களைப் பெறமுடியாதபடி செய்யப்பட்டது. உயர்ந்த அரசு பதவிகளில் எல்லாம் வந்த இந்துக்கள் இஸ்லாமியப் பணியாட்களை வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது. வேலை பார்க்கும் இந்து அலுவலர்களின் மதமாற்றம் பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

**ஔரங்கசீப்பின் மதக் கொள்கை – ஓர் மதிப்பீடு :**

இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் ஐக்கியப்படுத்தி ஒரு பெரிய முகலாயப் பேரரசை அமைக்க அக்பர் பாடுபட்டார். அவர் மதத்தை அரசியலில் இருந்து பிரித்து தனியே இயங்கும்படி செய்தார். ஆனால், ஔரங்கசீப் அரசியலையும் மதத்தையும் பிரித்து ஆட்சி செய்யாமல், இஸ்லாமியப் போதனைகளைப் பின்பற்றுகிற ஓர் அரசாங்கத்தை கட்டாயத்தின் மூலம் ஏற்படுத்த முயற்சித்தார். இதனால்தான் இவர் மத சகிப்புத் தன்மையை ஆதரிக்கவில்லை. இவரது மதத் துவேஷ கொள்கையால் இந்தயாவில் வாழ்ந்த முஸ்லீம்கள் அல்லாத எல்லா வகுப்பினராலும் இவர்

பகைக்கப்பட்டார். இவ்வாறு தனது மதக் கொள்கையால் இந்திய மக்களின் அரச பக்தியையும் ஒத்துழைப்பையும் இழந்த ஔரங்கசீப் முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பெரிதும் காரணமானார்.

## முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

## (CAUSES FOR THE DOWNFALL OF MUGHAL EMPIRE)

பேரரசர் ஔரங்கசீப் இறந்த பின்னர் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. அவரது மூத்த மகனான ஷா ஆலம் ஏற்கனவே மகுடப் போட்டிக்கென படைகளை ஆயத்தப்படுத்தி வைத்திருந்ததால் போட்டியில் வெற்றி பெற்று பகதூர்ஷா என்ற பெயரில் பட்டம் சூட்டிக் கொண்டார். இவர் அனுபவமற்றவர். இவரது ஆட்சி சிறிது காலமே நீடித்தது. **1712–**ல் பகதூர்ஷா உயிர் நீத்தார். இவருக்குப் பின் வந்த எல்லாம் முகலாய அரசர்களும் போட்டியிட்டே பட்டம் பெற முடிந்தது. அனைவரும் குறுகிய காலங்களே ஆட்சி புரிந்தனர். மகுடப் போட்டி, உள்நாட்டுப் புரட்சி, வெளிநாட்டுப் படையெடுப்பு இவற்றால் அவர்களது ஆட்சி பாதிக்கப்பட்டது. இதனால் முகலாயப் பேரரசு படிப்படியாக வீழ்ச்சியடைந்து முதலாவது மராட்டியப் பேரரசு ஏற்படுத்தப்படுவதற்கும் பின்னர் ஆங்கிலப் பேரரசு நிறுவப்படுவதற்கும் உதவியது. முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குக் கீழ்க்கண்டக் காரணங்களைக் கூறலாம்.

### 1. முகலாயப் பேரரசின் வீழ்ச்சியில் ஔரங்கசீப்பின் பங்கு : (Refer Previous Chapter)

### 2. முகலாயர்கள் அந்நியர் என்ற உணர்ச்சி :

இஸ்லாமிய மதத்தில் தீவிர பற்றுக் கொண்ட முகலாயர்கள் நீண்ட காலம் இந்தியாவில் வாழ்ந்த போதிலும், தாங்கள் இந்தியர்கள் என்று சொல்லிக் கொள்ள முன்வரவில்லை. பேரரசர்களும், பிரபுக்களும் இந்திய பழக்க வழக்கங்களையும், மொழிகளையும், கலாச்சாரங்களையும் ஒப்புக் கொள்ள மனமற்று திகைத்தனர். மாறாக பாரசீகத்திலிருந்தும் கெய்ரோலியியிருந்தும் இறக்குமதி செய்தனர். இதனால் இந்தியர்கள் மனதில் ‘இஸ்லாமியர்கள் வெளிநாட்டினரே’ என்ற உணர்ச்சி ஏற்பட்டது. உள்ளான மனதுடன் இந்தியர்கள் முகலாயப் பேரரசுக்கு ஆதரவளிக்க மனமற்றவர்களாயினர்.

**3. திறமையற்ற அரசர்கள் :**

ஔரங்கசீப்பிற்கு பின்வந்த அரசர்கள் திறமையற்றவர்கள். பகதூர் ஷா ஓர் வயது முதிர்ந்த கிழவர். அனுபவமற்றவர். நாட்டைத் திறமையாக ஆளும் கலை அவருக்குப் புதிது. அவருக்குப் பின் வந்த ஜகந்தர் ஷா ஒரு முட்டாளாகவே காட்சியளித்தார். ஓர் ஆண்டு காலமே ஆட்சி செய்தார். அவருக்கு பின்வந்த பருக்ஷயர் எல்லா முகலாய அரசர்களையும் விட கோழையாகக் காணப்பட்டார். இவர்கள் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்து சுயநலம் பிடித்த மந்திரிகள் பிரபுக்களின் கைகளில் ஒரு பொம்மையாகவே இருந்தனர். இதனால் நாட்டில் நிர்வாகம் சீர்குலைந்து முகலாயப் பேரரசு வீழ்ந்தது.

**4. முகலாய பிரபுக்களின் கெட்ட பண்பு :**

பைராம்கான், ஆசப்கான், மகபத்கான், அப்துர் ரகீம், மீர்ஜூம்லா சாதுல்லாகான் போன்ற முகலாய பிரபுக்கள் அரசியல் ஞானம் கொண்டவர்களாகவும், நேர்மை உள்ளவர்களாகவும், அரசயடம் விசுவாசம் கொண்டவர்களாகவும் விளங்கினர். பேரரசின் தூண்களாகக் காணப்பட்டனர். ஆனால், ஔரங்கசீப்பிற்குப் பின்வந்த காலத்தில் முகலாயப் பிரபுக்கள் இழிகுணம் படைத்தவர்களாக விளங்கினர். குடியிலும், ஆடம்பர வாழ்க்கையிலும் மூழ்கினர். எனவேதான் திறமையற்ற பேரரசுக்கெதிராக தோன்றிய கிளர்ச்சிகளை அடக்க முடியவில்லை. அவர்களுக்குள்ளேயே ‘இந்திய சந்ததியினர், அந்நிய சந்ததியினர்’ என்ற இரு பிரிவு ஏற்பட்டு, வலிமையிழந்து பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயினர்.

**5. முகலாயப் படையின் திறமையின்மை :**

முகலாயப் படையின் அமைப்பு குறைவுள்ளதும், பலவீனமுமாய் இருந்தது. ஆப்கானியர்கள், துருக்கியர்கள், பாரசீகர்கள், இந்தியர்கள் ஆகிய பல்வேறு இனத்தவர் இருந்தனர். அவர்கள் வெறும் கூலிப்போர் வீரர்களாயிருந்தனர். அவர்களிடம் நாட்டுப்பற்று காணப்படவில்லை. ரஜபுத்திரர்களை ஔரங்கசீப் பகைத்துக் கொண்டதால் வீரத்தோடு போர் புரியும் சமரச பக்தி கொண்ட ரஜபுத்திரர்கள் முகலாயப் படையில் சேர முன்வரவில்லை. படைத் தலைவர்கள் அரசருக்கு நம்பிக்கை உரியவர்களாகத் திகழவில்லை. இது தவிர படை வீரர்கள் பழைய போர் முறையைப் பின்பற்றினர். புதிய போர் முறைகளில் அவர்கள் பயிற்சி பெறவில்லை.

**6. மான்சப்தார் முறையின் குறைபாடுகள் :**

முகலாயப் பேரரசின் படையமைப்பு மான்சப்தாரி முறையின் அடிப்படையிலே அமைக்கப்பட்டிருந்தது. இம்முறையின் படி பிரபுக்களும், உயர் அதிகாரிகளும் குறிப்பிட்ட அளவு படை வீரர்களையும், குதிரைகளையும் வைத்து பராமரிக்க வேண்டும். அதற்கு ஆகும் செலவை அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். போர்க் காலங்களில் இக் குதிரை வீரர்களை பேரரசருக்கு உதவியாக அனுப்ப வேண்டும். ஆனால் பிரபுக்களும் உயர் அதிகாரிகளும் தங்கள் சுயநலனைக் கருதினவர்களாகவே வாழ்ந்து வந்தனர். அவர்கள் குதிரை வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டு செல்வச் செருக்குடன் பேரரசர்கட்கு விரோதமாகவே வாழ்ந்து வந்தனர். சில சமயங்களில் மான்சப்தாரி தலைவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு பேரரசருக்கு விரோதமாகப் புரட்சி செய்தனர். எனவே பேரரசு அழிவுற்றது.

**7. பொருளாதாரச் சீர்கேடு :**

ராஜா தோடர்மால் என்ற சிறந்த ரஜபுத்திர நிதியமைச்சரின் உதவியைக் கொண்டு அக்பர் நல்லதொரு பொருளாதார நிலையை அமைத்து வைத்திருந்தார். அவருகூகுப் பின்வந்த அரசர்கள் காலத்தில் நிலவரி 1.5 மடங்கு உயர்த்தப்பட்டது. இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஜஹாங்கீர் நூர்ஜஹானின் ஆடம்பரவ ாழ்வுக்கு அடிபணிந்து நாட்டின் செல்வத்தை விரயம் செய்தார். ஷாஜஹானின் அழகிய கட்டிடங்கள் அரசு கருவூலத்தைக் காலியாக்கியது. ஔரங்கசீப்பின் இடைவிடாத போர்கள் அதை வறட்சியாக்கியது. இவ்வாறு பொருளாதார நிலை சீர்கேடடைந்தது. அரச கருவூலம் திவாலாவானது. பணவலிமையில்லாத முகலாயப் பேரரசு மிக விரையில் வீழ்ச்சியடைந்தது.

**8. இலஞ்ச ஊழலும், ஒழுங்கீனமும் :**

முகலாயர் ஆட்சிக் காலத்தில் இலஞ்சமும், ஊழலும் பெருத்துவிட்டது. சட்டத்திற்குப் புறம்பாக நன்மைகள் செய்ய அனேக அதிகாரிகள் இலஞ்சம் வாங்கினார்கள். பேரரசர்கள் கூட இலஞ்சம் வாங்கியதாகச் சொல்லப்படுகிறது. தக்காணத்தில் பணிபுரிந்து வரும் படைத் தலைவரை டில்லிக்கு மாற்றுவதற்கு ஒரு இலட்ச ரூபாய் இலஞ்சம் கொடுக்கப்பட்டது. குபில்கான் எற் முகலாய அரசவை

அங்கத்தினர் ஒருவர் தமது 2.5 ஆண்டு பதவி காலத்தில் பணமாக மாத்திரம் 12 இலட்சம் ரூபாய் சம்பாதித்தார். இந்த இலஞ்ச ஊழலால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். அதிகாரிகள் தங்கள் சுயநலனைக் கருதி பேரரசின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் தீங்கிழைத்தனர். இலஞ்சமும், ஊழலும் நாட்டை ஆளும் தலவரிடமும், மந்திரிகளிடமும், அரசாங்க அதிகாரிகளிடமும் காணப்படும் எந்த ஆட்சியும் வீழ்வது நிச்சயம்.

**9. துரிதமான போக்குவரத்து இல்லாமை :**

துரிதமாக போக்குவரத்து இல்லாத அக்காலத்தில் பரந்த முகலாயப் பேரரசை ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்வது அரிது. கிளர்ச்சிகள் ஏற்பட்டபோது அச் செய்திகள் தலைநகர் சென்றடைய தாமதமானது. பகைவர்களின் படையெடுப்பைப் பற்றிய செய்திகள் கூட பேரரசருக்குத் தாமதாமாகக் கிடைத்தது. படைகளை குறிப்பிட்ட இடங்களுக்கு வேகமாகக் கொண்டு செல்ல இயலவில்லை. கிளர்ச்சி செய்யும் மாகாண ஆளுநர்கள், பேரரசின் படைகள் வருவதற்குள்ளாக தங்கள் நாட்டை சுதந்திர நாடாக அறிவித்தனர். இது வீழ்ச்சிக்கு வித்திட்டது.

**10. கப்பற் படையை கவனியாமை : (Neglect of Sea-Power)**

முகலாயப் பேரரசர்கள் ஓர் சிறந்த கப்பற்படையை அமைத்து அதை வளர்ப்பதில் அக்கறை செலுத்தவில்லை. மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்ட இந்தியாவிற்கு கடற்படை தீராத அவசியமானது என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். இதனால் கடல் வலிமை வாய்ந்த ஐரோப்பிய நாடுகள் மிக எளிதில் தங்கள் ஆதிக்கத்தை இந்தியாவில் ஏற்படுத்த முடிந்தது. இதனால் இங்கிலாந்து வியாபாரத்திலும் அரசியலிலும் தன் நிலையை உயர்த்தி முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

**11. நாதிர்ஷாவின் படையெடுப்பு :**

பாரசீக அரசரான நாதிர்ஷா 1738–ல் இந்தியாவின் மீது படையெடுத்து டில்லியைக் கைப்பற்றி இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். தன் நாடு திரும்பும்போது எழுபது கோடி மதிப்புள்ள கொள்ளைப் பொருட்களைக் கொண்டுச் சென்றார். மேலும், உலகப் புகழ் வாய்ந்த 'கோஹினூர்' வைரத்தையும், ஷாஜஹானின் அழகுமிக்க மயிலாசனத்தையும் எடுத்துச் சென்றுவிட்டார். அவருடைய படையெடுப்பினால் ரத்தக்களரி ஏற்பட்டது. முகலாயப் பேரரசின் வீழ்ச்சியை இது துரிதப்படுத்தியது.

**12. அகமதுஷா அப்தாலியின் படையெடுப்பு :**

ஆக்கானிய அரசரான அகமதுஷா அப்தாலி, நாதிர்ஷா இறந்த பின்னர், 1748, 1750 ஆகிய வருடங்களில் டில்லி மீது படையெடுத்தார். ஆனால் பஞ்சாபிலிருந்த சீக்கியர்கள் இவர் டில்லியை நோக்கிச் சொல்வதற்கு இடையூறாக இருந்தனர். இவருக்கு முகலாய படைத் தலைவர்கள் சிலர் மறைமுக உதவி புரிந்தனர். எனவே, பலமுறை வந்து கொள்ளையடிதுச் சென்றனர். இந்த இருவருடைய படையெடுப்பால் முகலாயப் பேரரசு நிலை குலைந்தது. அது பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமானது.

**13. பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் வளர்ச்சி :**

ஐரோப்பிய நாடுகளின் வருகை முகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாகும். 1600–ல் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனி தனது ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநாட்டியது. முகலாயப் பேரரசர்களிடமிருந்து பல சலுகைகளைப் பெற்றது. தனக்குப் போட்டியாக இருந்த பிற ஐரோப்பிய கம்பெனிகளை தோற்கடித்து விரட்டியது. இவ்வாறு அரசியலிலும், வியாபாரத்திலும் பிரிட்டன் வேகமாக இந்தியாவில் வளர்ந்தது. 1757–ல் பிளாசிப் போரிலும், 1764–ல் பக்சார் போரிலும் வென்று வங்காளத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். பின்னர் பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் அவர்கள் ஆதிக்கம் ஏற்பட்டது. கடலாதிக்கம் கொண்ட ஆங்கிலேயர், புதிய போர் ஆயுதங்களைக் கையாண்டு, புதிய போர் முறைகளைப் பின்பற்றி தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர். இதனால் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் வளர்ச்சியின் முன்னே முகலாயப் பேரரசு மங்கி மறையலானது.

**முடிவுரை :**

இவ்வாறு பாபரால் 1526–ல் அமைக்கப்பட்ட முகலாயப் பேரரசு அக்பரால் நிலைநிறுத்தப்பட்டு, ஷாஜகான் காலத்தில் புகழடைந்தது. சுமார் 181 ஆண்டுகள் சிறப்புடன் விளங்கி வந்தது. ஆனால், ஔரங்கசீப்பின் மறைக்குப் பின் முகலாயப் பேரரசு மேற்கண்ட பல காரணங்களால் நிலைகுலைந்தது. பேரரசின் வீழ்ச்சி தவிர்க்க இயலாதது ஆகிவிட்டது. 1761–ல் நடந்த மூன்றாம் பானிபட் போர் இந்தியாவில் முகலாயப் போரரசுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. கடைசி முகலாயப் பேரரசர் இரண்டாம் பாதுஷா ஆவார்.

## முகலாயரின் ஆட்சி முறை (MUGHAL ADMINISTRATION)

ஒரு சிறந்த ஆட்சி முறையை இந்தியாவில் நிறுவியதற்கானப் பெருமை அக்பருக்கே உரியதாகும். பாபருக்கு உள்நாட்டு ஆட்சி முறையைப் பலப்படுத்த கால அவகாசம் இல்லை. ஹுமாயூனுக்கு அதைச் செய்வவதற்கு திறமையில்லை. மிக உயர்ந்த அரசியல் மேதையான அக்பர், முகலாய ஆட்சி முறையை ஒழுங்குபடுத்தினார். அவரது ஆட்சிமுறை இந்தியப் பின்னணியில் அமைந்த பாரசீக அராபிய முறையாகும். எனவே முகலாய ஆட்சி முறை என்பது அக்பரின் ஆட்சிமுறையே ஆகும். முகலாயர்களின் ஆட்சி முறையைப் பற்றி அறிவதற்கு அபுல்பாசல் எழுதிய ‘அயினி’ அக்பரி முதாமத்கான் எழுதிய ‘இக்பால் நாமா ஜஹாங்கிரி’, நிஜாம் உதின் எழுதிய ‘துசுக்கி ஜஹாங்கிரி’ ஆகிய நூல்களும், வெளிநாட்டினர்களான சர்தாமஸ்ரோ, பெர்னியர், ஹாக்கின்ஸ், மானுக்கி, டெர்ரி ஆகியோரின் பயணக் கட்டுரைகளும் முகலாய ஆட்சி முறையைப் பற்றி அறிந்துகொள்ள உதவுகின்றன. முகலாயரின் ஆட்சி முறையின் முக்கிய அம்சங்கள் விரிவாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 1. அரசர் (King) :

முகலாய ஆட்சிமுறையில் அரசரே அரசியல், சமயம் ஆகியவற்றின் தலைவராக இருந்தார். எல்லா அதிகாரங்களும் அவரிடத்தில் குவிக்கப்பட்டிருந்தது. அரசரின் அதிகாரம் அளவில்லாதது. சட்டம் பெரும்பாலும் அவர் வாய்ச்சொல்லோயாகும். அவருடைய விருப்பத்தை எவரும் மறுத்துக் கூற முடியாது. அவரே கடவுளின் கலிஃபா. இஸ்லாமிய மரபுகளையும், இஸ்லாமிய வேத நூல்களையும் அனுசரித்து அவற்றின் விதிகளுக்கு அவர் உடன்பட்டு நடக்க வேண்டும் (அக்பர் இதற்கு விதிவிலக்கு). அமைச்சர்களின் ஆலோசனையை ஏற்றுக்– கொள்வதோ அல்லது தட்டிக் கழிப்பதோ எல்லாம் அரசனின் விருப்பத்தைப் பொறுத்தது.

தினமும் மக்களுக்கும் அரசர் தரிசனம் கொடுப்பார். அதற்கு ‘ஜரோகாதரிசனம்’ (Jharokho-I-Darshan) என்று பெயர். இந்தியாவில் முதல் ஆறு முகலாய அரசர்கள் நல்ல பொது அறிவும் ஆற்றலும் படைத்திருந்தனர். அரசர் எங்காவது பயணம் மேற்கொண்டால் அதனைப் பிரகடனப்படுத்தும் பொருட்டு ‘நகரா’ (Naggara) என்ற முரசுகளை முழங்குவர். முகலாயப் பேரரசர்கள் சரியான வாரிசுரிமைக் கொள்கைகளைப்

பின்பற்றவில்லை. எனவே பல வாரிசுரிமைப் போர்கள் ஏற்பட்டது. முகலாய அரசர்கள் தங்கள் பேரரசின் அடித்தளமாக படைபலத்தையே வைத்துக்கொண்டதால் அவர்கள் ஆட்சி வல்லாட்சியாகவே விளங்கியது.

**2. மத்திய அரசு நிர்வாகம் :**

நிர்வாகம் நடைபெறுவதற்காக மத்திய ஆட்சிமுறை பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இத்துறைகளைக் கவனிப்பதற்காக பல அதிகாரிகளை பேரரசர் நியமித்தார்.

**திவான் அல்லது வாசிர்** (Diwan or Wazir) : இவர்தான் அரசாங்கத்தின் மிக உயர்ந்த அதிகாரியாவார். அரசருக்கும், அதிகாரிகட்குமிடையே ஓர் இணைப்பு பாலமாகச் செயல்பட்டார். நிதித்துறை இவர் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

**மீர் பகஷி** (Mir Bakshi) : இவர் பல வேலைகளைக் கவனித்து வந்தார். முக்கியமாக அரசாங்க அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுக்கும் பொறுப்பு இவருடையது ஆகும். படைக்கு ஆள் திரட்டுதல், உயர் அதிகாரிகளின் பெயர் பட்டியல் தயாரித்தல், போர் நடைபெறும் முன்பு படை வீரர்கள் முழுப் பெயர்ப்பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தார்.

**தலைமைக்காஸி** (Chief Quiz) : மன்னருக்கு அடுத்தபடியாக நீதித்துறையின் தலைமை நீதிபதியாக பொறுப்பு ஏற்றிருந்தார்.

**கானிசாமன்** (Khan-I Saman) : இவர் அரச குடும்பத்தின் தேவைகளைக் கவனித்து வந்தார். அதாவது அரண்மனைத் துறைத் தலைவர் ஆவார்.

**முஹ்தசீப்** (Muhtasib) : இவரது தலைமையில் பொது ஒழுக்கக் கட்டுப்பாட்டுத் துறை அமைக்கப்பட்டிருந்தது. பொது மக்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பதே இவர் வேலை. நபிகள் நாயகத்தின் ஒழுக்க விதிகளை நாட்டு மக்கள் பின்பற்றுமாறு கவனித்துக்கொண்டார்.

**தலைமை சதர்** (Chief Sadr) : இவர் சமயம் மற்றும் அறநிலைய அமைச்சர் ஆவார். இஸ்லாமியக் கோட்பாடுகளின் பாதுகாவலர் இவரே !

**தரோகாதாக் சௌகி** (Duroga Dag Chauki) : இவர் தபால் போக்குவரத்து மற்றும் உளவுத் துறை தலைவராவார்.

இவர்கள் தவிர நாணயசாலைத் தலைவர், தணிக்கைத் துறை அதிகாரி, அரசாங்க தொழிற்சாலை கண்காணிப்பாளர், செய்தி கொண்டு வந்து தரும் செயலர் ஆகிய பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**3. மாநில அரசு நிர்வாகம் :**

முகலாயப் பேரரசு பரந்ததாக இருந்ததனால் அது பல மாநிலங்களாகப் (Sulas) பிரிக்கப்பட்டிருந்தது. அக்பர் தனது பேரரசை பன்னிரெண்டு மாநிலங்களாகப் பிரித்திருந்தார். ஔரங்கசீப் காலத்தில் இது 21 ஆக உயர்ந்தது. மாநில ஆட்சி முறை மைய அரசின் மாதிரியாகவே இருந்தது. இந்த மாநிலங்கள் சுபா என்றழைக்கப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் சுபேதார் எனப்பட்ட மாநில ஆளுநர் நியமிக்கப்பட்டார். சட்டம், அமைதி, நீதி, பாதுகாப்பு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றிருந்தார். போர்க் காலங்களில் பேரரசருக்குத் துணையாக செல்ல வேண்டியது இவரது கடமையாகும். இவர் கீழ் இருந்த திவான் ஊரியல் மற்றும் வருவாய்த் துறையின் தலைவராவார். இவர் மைய அரசுக்கு மட்டுமே பொறுவப்பானவர். **'பக்ஷி'** என்பவர் மாநில அளவில் படை வீரர்களைச் சேர்த்தல், பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டார். கொத்தவால் (Kotwal) என்பவர் முக்கிய நகரங்களில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டினார். சமூக விரோத சக்திகளை அழிப்பது இவரது கடமையாகும். இவர்கள் தவிர சதர், அமில், பிதிக்ஸி, போட்தார் போன்ற அதிகாரிகளும் இருந்தனர்.

மாவட்டங்கள் சர்க்கார்கள் என்றழைக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டங்களும் பர்கானாக்கள் என்ற வட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நிர்வாக அமைப்பின் கீழ் நிலையான ஊர்களின் நிர்வாகத்தை ஊராட்சி மன்றங்கள் கவனித்து வந்தன.

**4. சட்டமும் நீதியும் :**

முகலாயர் காலத்தில் சட்டமென்பது ஒன்று இருக்கவில்லை. எழுதி வைக்கப்பட்ட சட்டமுறைகளும் கிடையாது. சமயம் சார்ந்த சட்டங்களே நீதித் துறையின் அடிப்படையாக அமைந்தன. ஜஹாங்கீர் காலத்தில் 12 கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. ஔரங்கசீப்பின் காலத்தில் முஸ்லீம் சட்டத்தின் சாரமான ஃபாத்வா–இ–ஆலம்கிரி (Fatva-I-Alamgiri) ஒன்று தயாரிக்கப்பட்டது. நீதிபதிகள் குர்ரானின் கட்டளைகள், பாத்வாக்கள் அல்லது மிகச் சிறந்த ஜுரிகளினால் மதச்சட்டத்திற்கு கொடுக்கப்பட்ட

விளக்கங்கள், கானுக்கள் அல்லது பேரரர்களின் ஆணைகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் தீர்ப்புகளைக் கூறினார்.

முகலாய அரசர்கள் விரைவாக நீதி வழங்குவதை தங்கள் முக்கியக் கடமையாகக் கருதினர். அரசரே முக்கிய வழக்குகளைத் தீர்மானித்தார். நீதி வழுவாதவர் எனப் புகழ் பெற்றவர் ஜஹாங்கீர். மக்கள் நீதி வேண்டி மன்னரை அணுக காலத்தடை ஏற்படாதிருக்க யமுனை நதிக்கரையில் எழுப்பப்பட்ட ஓர் கற்றூணுக்கும் ஆக்ரா கோட்டைக்குமிடையே 'நீதிச் சங்கிலி' ஒன்றைக் கட்டிவைத்தார். சங்கிலி இழுக்கப்பட்டதும் எழும் மணியோசையைக் கொண்டு நீதிநாடி வருவோரின் நிலையைப் புரிந்துகொள்ளும் மன்னர், உடனடியாக நீதி கிடைக்க ஏற்பாடு செய்வார். பொதுவாக நீதி வழங்குவதில் மன்னர்கள் நடுநிலையுடன் செயல்பட்டனர். மீர் அர்ஸ் (Mir-Arz) என்ற நீதிபதிகள் பொதுமக்களின் வழக்குகளைப் பெற்று அரசரிடம் சமர்ப்பிப்பர். மன்னருக்கு அடுத்தபடியாக தலைமை நீதிபதியாக இருந்தவர் காஸி உல் காசாத் (Qaz-I-ul-Qazat) ஆவார். அனைத்து முறையீட்டு வழக்குகளையும் இவர் விசாரிப்பார். மாகாண தலைநகரங்களில் நீதிபதியாக இருந்தவர் காஸி. காஸிகள் நேர்மையாகவும், நீதியாகவும், ஒரு சார்பின்றியும் இருக்க வேண்டும் என்றும், பொது மக்களின் விருந்து மற்றும் விழாக்களில் கலந்துகொள்ளக்கூடாது என்றும் எதிர்பார்க்கப்பட்டது. முஃப்திகள் (Muftis) முஸ்லீம் சட்டங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

நகர, மாநில நீதிமன்றங்களுக்குப் முகலாயப் பேரரசரே தலைவராக இருந்தார். பேரரசரே நீதியின் ஊற்றாகவும், கடைசி முறையீட்டு மன்றமாகவும் விளங்கினார்.

**5. நில வருவாய்த் துறை அமைப்பு :**

முகலாயர்கள் காலத்தில் விவசாயம் அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக இருந்தது. எனவே விவசாயத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. நிலச் சீர்திருத்தங்களில் ஷெர்ஷா பல முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தார். மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நில வரியில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். அவை, விளைபொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவது, உழுபவர்களின் வாழ்க்கைத் திறனை உயர்த்துவது, அரசின் நிலவருவாயைப் பெருக்குவது என்பதாகும். அவர் விவசாயத்தற்குத் தேவையான நிலங்களை பொதுவான அளவு முறையைக்

கொண்டு அளந்து அவைகளை உயந்தது, நடுத்தரமானது, மோசமானது என மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். ஒவ்வொரு வகை நிலத்தின் ஆண்டு உற்பத்தி தீர்மானிக்கப்பட்டது. அதில் 1/3 பங்கு நிலவரியாக நிர்ணயிக்கப்பட்டது. வரியினை விவசாயிகள் பொருளாகவோ, பணமாகவோ செலுத்த அனுமதிக்கப்பட்டனர். இதன் மூலம் விவசாயிகள் இடைத்தரகர்கள் இன்றி நேரடியாகத் தொடர்புகொண்டனர். இதன் மூலம் ஷெர்ஷா மக்களின் அன்பைப் பெற்றார்.

ஆண்டு தோறும் நிலவரி கணக்கிடுவதில் உள்ள கஷ்டங்களையும், அசௌகர்யங்களையும் நீக்கி புதிய நிலச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அக்பர் ராஜா தோடர்மாலை **1582** திவானாக (Diwan-i-Ashraf) நியமித்தார். அவர் பல நில வருவாய் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். தோடர்மால் 'பத்து ஆண்டு நிலவருவாய் ஒப்பந்தம்' என்ற முறையினைக் கொண்டு வந்தார். இதன்படி அக்பர் ஆட்சியின் **15–**ஆவது ஆண்டு முதல் **24–**ஆவது ஆண்டுகளுக்கு இடையே உள்ள பத்து ஆண்டுகளின் சராசரி வருவாயைக் கணக்கில் கொண்டு ஆண்டுகளுக்கு தொடர்ந்து ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய நிலவரி நிர்ணயிக்கப்பட்டது. இத் திட்டம் முதலில் அலகாபாத், ஆக்ரா, ஆஜ்மீர், மாளவம், டெல்லி, லாகூர் மற்றும் மூல்தான் ஆகிய எட்டு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் விவசாயத்திற்குத் தகுதியான நிலங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன. அவை : 1) ஆண்டு தோறும் பயிரிடக்கூடிய நிலம் (போலாஜ் - Polaj), **2)** விளைச்சல் சக்தியை மீண்டும் பெறுவதற்காக உழுது விதைக்காமல் சிறிது காலம் விட்டு வைக்கப்படும் நிலம் (பிரளதி – Parauti), 3) மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் உழுது விதைக்கப்படாமல் விட்டுவிடும் நிலம் (சச்சர் – Chachar), 4) ஐந்தாண்டுகள் அல்லது அவற்றிற்கு மேலும் பயிரிடப்படாத நிலம் (பாஞ்சார் – Banjar) ஆகியவையாகும்.

பல வகையான பயிர்கள், அதன் பல வகையான நிலப் பிரிவுகள் ஆகியவையின் சராசரி வருமானத்தில் 1/3 பகுதி நிலவரியாகத் தீர்மானிக்கப்பட்டது. விவசாயிகள் வரியை விளைபொருளாகச் செலுத்த அனுமதிக்கப்பட்டனர். வரிகளைப் போதுமான கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் வசூலிக்க வேண்டுமென்றும் விளைச்சலில்லாத காலத்தில் அதட்டிக் கேட்கக்கூடாது என்றும் அரசர்கள் வரிவசூல் அதிகாரிகளுக்கு

உத்தரவிட்டிருந்தனர். வறட்சி மற்றும் பஞ்ச காலங்களில் நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டது. விவசாயிகட்கு ‘தக்காவி’ கடன் வழங்கப்பட்டு அவர்கள் துயரங்கள் நீக்கப்பட்டன. விளை நிலங்கள், மற்றும் தரிசு நிலங்களில் அதிக உற்பத்தி செய்யும் விவசாயிகட்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு வருவாய்த் துறை அமைப்பு முகலாயர் காலத்தில் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டு நல்ல முறையில் இயங்கி வந்தது.

**6. படை அமைப்பு : (மான்சப்தாரி முறை)**

முகலாயப் பேரரசு படை வலிமை என்ற அடித்தளத்தில் அமைக்கப்பட்டது என்பதால் பேரரசர்கள் படை அமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். அக்பர் இராணுவத்தினைச் சீர்திருத்தம் செய்வதை தனது முதல் பணியாக மேற்கொண்டார். 1570–ல் அவர் ‘மன்சப்தாரி’ திட்டத்தினை வெளியிட்டார். அனைத்து இராணுவ அமைப்புகளும் மன்சப்தாரி திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. ‘மன்சப்’ என்ற சொல் அரேபிய மொழியிலிருந்து வந்ததாகும். இது பதவி, கௌரவம் ஆகியவற்றைக் குறிப்பது ஆகும். எனவே ‘மன்சப்தார்’ என்பது அரசின் ஒரு பதவியினையோ அல்லது அதிகாரத்தையோ குறிப்பதாகும். மன்சப்தார்களை நியமிக்கும் அதிகாரம் அரசரிடமே இருந்தது.

முகலாயப் பேரரசில் 66 வகையான மான்சப்தார் பதவி நிலைகள் இருந்தாலும், 33 முறைகள்தான் செயல்முறையில் காணப்பட்டன. 10 முதல் இருபது வீரர்களைக் கொண்ட கீழ்நிலை மான்சப்தாரிலிருந்து 5000 வீரர்களைக் கொண்ட மன்சப்தார் வரை நிலைகள் உயர்ந்து இருந்தன. 5000 வீரர்களுக்கு மேற்பட்ட ‘மான்சப்’ பதவிகள் அரசால் கௌரவம் அளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் இளவரசர்களுக்கும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மான்சப்தாரும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரைகள், யானைகள் மற்றும் வீரர்களை தங்கள் தரத்தற்கு ஏற்ப வைத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மான்சப் பிரபுக்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட அளவு ஆட்களை படையில் சேர்த்திருக்க வேண்டும் என்பதற்காக, ஒருவருக்கொருவர் ஆட்களைக் கடன் கொடுத்து வந்தனர். தெருவில் சுற்றித் திரியும் சோம்பேறிகளையும் சேர்த்தனர். எனவே,

அக்பர் காலத்தில் மான்சப்தார் படை வீரர் பற்றிய விளக்கப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்த மான்சப்தாரிகள் தவிர தாக்கிலிஸ், அகாடிஸ் (Dalchilis, Ahadis) வேறு இருவகையான பிரிவுகளும் இருந்தன. தாக்கிலிஸ் என்பது மான்சப்தார்கள் அதிகாரத்தன் கீழ் வைக்கப்பட்டு அரசாங்கத்தால் சம்பளம் கொடுக்கப்பட்ட துணைத் துருப்புகள் ஆகும். அகாடிஸ் என்பது அக்பர் தனது பேரரசில் நேரிடையாக தனது மெய்க்காப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்ட ஓர் தனிப் பிரிவு ஆகும். இந்த அகாடிஸ் வீரர்கள் சாதாரண வீரர்களைவிட நல்ல ஊதியம் பெற்றார்கள்.

முகலாயப் படை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, கடற்படை ஆகியவையாகும். வலிமை மிக்க கடற்படை ஒன்றை முகலாயர்கள் அமைக்கவில்லை. முகலாயப்படை சக்தி வாய்ந்ததாக இருப்பினும், அதில் பல குறைகள் இருந்தன. முகலாயப் படை ஒரு தேசியப்படையாக இருக்கவில்லை. காரணம் மான்சப்தார்களுக்கு தனது விருப்பம் போல் பேர் வீரர்களை தேர்வு செய்ய உரிமை வழங்கப்பட்டதால், தங்கள் பகுதி, தங்கள் இனம், தங்கள் மதத்தைச் சேர்ந்தவர்களையே இராணுவத்தற்குத் தேர்வு செய்தனர். எனவே முகலாய இராணுவம், ஒரே மாதிரியான அமைப்பாக இல்லை. போர் வீரர்கள் தங்களது மான்சப்தார்களையே பேரரசராகக் கருதினார்கள். பேரரசர்களைவிட தங்கள் படைத்தலைவரிடமே அதிக விசுவாசம் காண்பித்தார்கள். போர் வீரர்களுக்கான ஊதியத்தை அரசாங்கம் மன்சப்தார் மூலமே வழங்கியதால் மான்சப்தார்கள் போலியான வருகைக் கணக்கை காண்பித்து அரசை ஏமாற்றினர்.

இவ்வாறு மான்சப்தாரி திட்டம் வெற்றியடையவில்லை. எனவே முகலாயப் படை அதிக எண்ணிக்கை கொண்டதும், நல்ல பயிற்சி இல்லாததும், நவீன போர்க்கருவிகள் இல்லாததுமாகவே காணப்பட்டது. முகலாயக் குதிரைப் படையில் தாக்கோ மஹல்லி (Dag-O-Mahalli) அல்லது ‘தாக்’ என அழைக்கப்படும் குதிரைகளுக்கு குறியிடும் வழக்கம் மீண்டும் கொண்டுவரப்பட்டது.

## முகலாயர் கால பண்பாட்டியல்புகள்

### 1. கல்வி

தற்காலத்தில் நிலவும் கல்விமுறை போல முகலாயர் காலத்தில் கல்வித் திட்டம் அமையவில்லை. இருந்தாலும் ஆரம்பக் கல்விக்கும், உயர்நிலைக் கல்விக்கும் ஓரளவு கவனம் செலுத்தப்பட்டது. முகலாய அரசர்கள் மசூதிகளுக்கும் மடங்களுக்கும் நிலம் அளித்ததோடு பணமும் கொடுத்து கல்விக்கு பெரும் ஊக்கம் அளித்தனர். முகலாயர்கள் காலத்தில் மசூதிகள் கல்வி நிலையங்களாகப் (மக்தப்புகள்) பணியாற்றின. அங்கே அப்பகுதியைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் ஆரம்பக் கல்வி கற்றனர். நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் இருக்கும் மாணவர்கட்கு இந்து, சமஸ்கிருத, இந்திய மொழிப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தன.

முகலாய அரசர் பலர் கல்விக்கு பெரும் ஆதரவு தந்தனர். ஹுமாயூன் கல்வியில் பெரும் விருப்பம் கொண்டிருந்தனர். பூகோளமும் வானசாஸ்திரமும் அவரது விருப்பமான பாடங்கள் ஆகும். டெல்லியில் ஒரு கல்விக்கூடம் (மதராசா) கட்ட ஏற்பாடு செய்தார். ஷெர்ஷா புராணஹில்லாவில் தான் கட்டிய இன்ப மாளிகை ஒன்றை நூலகமாக மாற்றினார். அக்பர் காலத்தில் கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தமே ஆரம்பித்தது. பதேபூர் சிக்ரி, ஆக்ரா ஆகிய இடங்களில் கல்லூரிகளைக் கட்டினார். முஸ்லீம் கல்வி முறையில் அபிவிருத்தி செய்வதற்காக பாடத் திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

ஜஹாங்கீர் கல்வியில் ஓரளவு ஆர்வம் கொண்டிருந்தார். துருக்கி மொழியில் நல்ல அறிவு பெற்றிருந்தார். பாழடைந்த மதராசாக்கள் இவருடைய காலத்தில் பழுது பார்க்கப்பட்டு மாணவர்களையும், பேராசிரியர்களையும் அமரச் செய்தார். ஷாஜஹான் காலத்தில் மாணவர்களுக்கு உதவித் தொகையும், பரிசுகளும் கொடுத்து கல்விக்கு ஊக்கமளிக்கப்ட்டது. டில்லியில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டது. பல ஆண்டுகளாக பாழடைந்து கிடந்த தாருல்பகா (Darul Baga) என்றழைக்கப்பட்ட கல்லூரியைப் பழுது பார்த்தார். ஷாஜஹானின் மகன் தாராஷிக்கோ (Darahuko) மிகப் பெரிய அறிஞர் ஆவார். அராபிய மொழி, பாரசீக மொழி, வட மொழி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார். பல புத்தகங்கள் எழுதியதுடன் உபநிடதங்கள், பகவத் கீதை, வசிஷ்ட இராமாயணம்

ஆகிவற்றை மொழிபெயர்த்துள்னர். அவர் முஸ்லீம் மகான்களின் வரலாற்றைத் தொகுத்தோடு சுஃபி தத்துவத்தைக் குறித்தும் பல நூல்கள் எழுதியுள்ளார்.

முகலாயர் காலத்தில் பெண் கல்விக்கு கவனம் செலுத்தப்பட்டது. அரச குடும்பத்தைச் சார்ந்த பெண்களும், பெரும் செல்வந்தர்களின் பெண்களும் தங்கள் வீடுகளிலே கல்வி கற்றனர். அக்காலத்தில் பள்ளிக்கூடங்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே பயின்றனர். அக்காலத்தில் பல பெண்கள் புனித நூல்களிலும், இலக்கியங்களிலும் ஆழ்ந்த அறிவு படைத்திருந்தனர். பாபரின் மகள் குல்தன் பேகம் 'ஹுமாயூன்நாமா' என்ற நூலை எழுதினாா. நூர்ஜஹான், மும்தாஜ் மஹால், ஜஹானாரா பேகம், ஜெபுன்னிசா ஆகியோர் பாரசீக அரபு இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தனர். ஔரங்கசீப்பின் மகள் ஜெபுன்னிசா (Jeb-un-Nisa) கையெழுத்துக் கலையில் வல்லவராக இருந்தார். அவரிடம் ஒரு நல்ல நூல் நிலையம் இருந்தது.

## 2. இலக்கியம்

முகலாயர் காலம் இந்திய இலக்கிய வரலாற்றில் ஒரு முக்கியமான காலம் என்று கூறலாம். முகலாயர் கால நீண்ட ஆட்சியில் இலக்கியங்கள் மகத்தான வளர்ச்சியடைந்தன. பாரசீக, இந்திய மொழி இலக்கியங்கள் கற்பனை உலகை வளப்படுத்தின. இந்தி, உருது, பாரசீகம், துருக்கி போன்ற மொழிகளின் வல்லுநர்கள் மற்றம் முகலாயப் பேரரசர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் உதவினர். அவைகளை விரிவாகக் காணலாம்.

முகலாயப் பேரரசை, ஏற்படுத்திய பாபர் பல மொழிகளில் திறமை படைத்த ஒரு எழுத்தாளரும் ஆவார். அராபிய, பாரசீக, துருக்கிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். துருக்கிய மொழியில் அவர் எழுதிய 'நினைவுக் குறிப்புகள்' (Memoirs) மிகச் சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது. 'ஆசியாவின் ஒரே ஒரு உண்மையான வரலாறு' என்று இந்த நூலைப் பற்றி எல்பின்ஸ்டன் புகழ்கிறார். ஹுமாயூன் காலத்தில் குதமீர், அடுல்லத்தீப், சேக்ஹசன் போன்ற இலக்கிய அறிஞர்கள் இருந்தனர். மன்னரின் சகோதரி குல்பதன்பேகம் 'ஹுமாயூன் நாமா' என்ற நூலை இயற்றினார். ஜாஹர் (Jauhar) என்பவர் 'தஸ்கிரத்–உல்–வாகியத்' என்ற நூலை எழுதினார்.

இந்து முஸ்லீம் கலை இலக்கியத்திற்கு அக்பரின் காலத்தை பொற்காலம் என்று கூறலாம். அவரது காலம் இங்கிலாந்து நாட்டு எலிசபெத்தின் காலத்திற்கு ஒப்பானது. எலிசபெத் காலம் ஆங்கில மொழியின் எழுத்தாளர்களும், கவிஞர்களும் புகழ் சேர்த்த மறுமலர்ச்சிக் காலமாகும். அது போலவே அக்பரின் காலமும் இந்து முஸ்லீம் இலக்கிய வல்லுநர்களால் பல அரிய நூல்கள் எழுதப்பட்ட காலமாகும். இவர்கால பாரசீக இலக்கியத் தொகுப்புகளை மூன்று பிரிவாகப் பிரித்து படிக்கலாம் : a) வரலாற்று நூல்கள், b) மொழிபெயர்புகள், c) கவிதைகள்.

a) **வரலாற்று நூல்கள் :** அக்பரின் காலத்தில் அபுல்பாசல் (Abul Fazal) என்பவர் சிறந்த இலக்கிய மேதையாகத் திகழ்ந்தார். திறந்த மொழி அறிவு படைத்தவர். வரலாற்றில் ஆராய்ச்சி மிக்கவர். இவரது முக்கிய நூல்களான அயினி அக்பரி, அக்பர் நாமா (Ain-I-Akbari, Akbarnama) அக்பரின் ஆட்சிமுறையைப் பற்றியும், சமுதாய பொருளாதார நிலை பற்றியும், அக்பரின் வெற்றிகள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இவரது சகோதரரான அபுல் பெய்சி (AbulFaizi) அராபிய இலக்கியத்தில் சிறந்த அறிஞர் ஆவார். இவர் 101 புத்தகங்கள் எழுதியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பல சமஸ்கிருத புத்தகங்களைப் பெர்சிய மொழியில் மொழிபெயர்த்துள்ளார். இராமாயணம், மகாபாரதம், கீதை ஆகியவற்றை மொழி பெயர்த்தவரும் இவரே. மேலும் இவர் எழுதியவைகளில் முக்கியமானது 'மாஸ்நாவி', 'நாலா–ஒ–டாமன்' ஆகியவையாகும். இவரது கவிதைகள் கவர்ச்சியும் இனிமையும் கொண்டவை.

நிஸாம்–உத்–தீன் என்பவர் எழுதிய தபாகாத்–இ–அக்பரி (Tabakat-I-Akbari), முல்லா தாவூத் எழுதிய தாரிகி அல்ஃபி (Tark-I-Alfi), பெய்சி சர்ஹிந்த் எழுதிய அக்பர் நாமா, அப்துல்பாகி எழுதிய 'மா–ஆசீர்–இரகமி' ஆகியவை அக்பர் காலத்தில் எழுதப்பட்ட சிறந்த வரலாற்று நூல்களாகும்.

b) **மொழி பெயர்ப்புகள் :** பேரரசரின் உத்தரவின்படி பல நூல்கள் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன. மகாபாரதம் பல அறிஞர்களால் பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. மகாபாரதம் பல அறிஞர்களால் பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, தொகுக்கப்பட்டு 'ரஜ்ம் நாமா' என்று பெயரிடப்பட்டது. பதௌனி இராமாயணத்தை மொழிபெயர்த்தார். ஹாஜி இப்ராஹிம் சர்ஹிந்தி என்பவர் அதர்வண வேதத்தை பாரசீகத்தில் மொழிபெயர்த்தார். அபுல்பெய்சி கணக்கு நூலான லீலா

விதியை மொழிபெயர்த்தார். முகமல்கான் தஜக் (Tazak) என்ற வான இயல் நூலை பாரசீகத்தில் மொழியொர்த்தார். அப்துல் ரஹீம்கானிகான் வாகியாத்–இ–பாபரி என்ற நூலை மொழிபெயர்த்தார். ஒரு சில கிரேக்க அராபிய நூல்களும் பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

c) **கவிதைகள் :** அக்பரின் ஆதரவு பெற்று பல கவிஞர்கள் இனிமையான செய்யுள்களை இயற்றினர். அவர்களில் மிகப் புகழ் பெற்றவர்கள் கிசலி (Ghizali), அபுல்பெய்சி ஆகியோர் ஆவர். மிகவும் மதிப்பு மிக்க கஸல்களை (Ghazals) நிஷாப்பூரைச் சேர்ந்த முகமது ஹுசேன் நிசிலி இயற்றினார். அதே போல ஷிராஸ் நகரைச் சேர்ந்த கசிதாக்களை (Qasidas) இயற்றினார். இவ்வாறு அக்பர் காலம் இலக்கியத்தில் மறுமலர்ச்சி காலமாகும்.

பேரரசர் ஜஹாங்கீரும் கல்வியறிஞர்களுக்கு பெரும் ஆதரஹவ அளித்தார். அவர் எழுதிய சுயசரிதை பாபரின் நினைவுக் குறிப்புகளுக்கு அடுத்தபடியாக அழகும் இனிமையும் உடையதாக விளங்குகிறது. இவரது அரச சபையில் கியாஸ்பெக், நகிப்கான், நியமதுல்லா போன்ற பல அறிஞர்கள் இருந்தனர். ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களுள் மிகச் சிறந்தவை 'மாசிரி ஜஹாங்கிரி', 'இக்பால் நாமா–இ–ஜஹாங்கீரி', 'ஜுபித்–உத்–தவாரிக்' ஆகியவையாகும்.

ஷாஜஹான் காலத்தில் அப்துல் ஹமீது லகோரி, இனாயத்கான், முகமதுசாலி, அமீன்கஸ்வினி ஆகிய மேதைகள் இருந்தார்கள். லகோரியின் பாதுஷாநாமாவும், அதே தலைப்பில் அமீன்கஸ்வினி எழுதிய நூலும், முகமது ஷாலி எழுதிய ஷாஜஹான் நாமா 'அமல்ஷாயி' என்ற நூலும் குறிப்பிடத்தக்கவை. பேரரசர் ஔரங்கசீப் தனது ஆட்சி வரலாறுகள் எழுதப்படுவதை எதிர்த்தார் என்றாலும் மறைமுகமாக பல நூல்கள் எழுதப்பட்டன.

**இந்தி இலக்கிய வளர்ச்சி :**

இந்தி மொழி இலக்கியங்களும் வளர்ச்சியடைந்தன. இந்தி இலக்கியத்தின் பொற்காலம் என்று போற்றப்படும் அளவுக்கு அக்காலத்தில் பல நூல்கள் இந்தியில் எழுதப்பட்டன. **1540–ல்** மாலிக் முகமது ஷயாஜி என்பவர் 'பத்மாவதி' என்ற புகழ் வாய்ந்த தத்துவக் காப்பியத்தை எழுதினார். இந்த நூல் மேவார் ராணி பத்மினியின்

கதையை விளக்குகின்றது. அக்பர் அவையிலிருந்த இராஜா தோடர்மால், ராஜா பகவன்தாஸ், பீர்பால் போன்றவர்கள் இந்தியில் கவிதைகள் எழுதியுள்ளனர். ரஹீக்கான் எழுதிய தோகாஸ் என்ற இருவரிக் கவிதைகள் மனிதரின் அறிவையும், அனுபவத்தையும் விளக்கின.

அக்பருடைய காலத்தில் எழுதப்பட்ட கவிதைகள் பெரும்பாலும் மதச்சார்புள்ளதாகவே இருந்தது. குறிப்பாக அவை இராமர், கிருஷ்ணர் இவர்களைப் பற்றிய அடிப்படையைக் கொண்டதாக இருந்தது. அவைகளில் புகழ் பெற்றது வல்லபசாரியாரின் சீடரான சூர்தாஸ் (Surdos) என்பவர் எழுதிய 'சூர்சாகர்' என்பவை நூறு பாடல்களைக் கொண்ட செய்யுள் ஆகும். அதில் கிருஷ்ணனின் இளமை வாழ்க்கையின் லீலைகள் விளக்கப்பட்டுள்ளது. இராம வழிபாட்டைப் பற்றி எழுதிய ஆசிரியர்களுள் மிகச் சிறந்தவர் துளசிதாஸ் ஆவார். இவர் எழுதியவற்றுள் ''இராமசரிதமானஸ்'' என்பது புகழ் பெற்ற நூலாகும். நபாஜி என்ற புலவர் 'பக்தமாலா' என்பதை எழுதினார். கேசவதாஸ் என்பவர் 'கவிப்பிரியா' என்ற அழகிய கவிதையை எழுதினார். ஔரங்கசீப் காலத்தில் இந்திக் கவிதைகள் வளர்ச்சி குறைய ஆரம்பித்தன.

முகலாயர்கள் காலத்தில் மிக அற்புதமான வைணவ இலக்கியங்கள் வங்காளத்தில் தோன்றின. இந்த இலக்கியங்கள் மக்களின் உள்ளங்களில் பக்தி, பரந்த மனப்பான்மை ஆகிய உணர்ச்சிகளை ஊட்டியதுடன், அக்காலத்தில் அம்மாகாணத்தின் சமுதாய நிலையை படம்பிடித்துக்காட்டின. பல வைணவ நூலாசிரியர்கள் சிறந்த இலக்கியங்களைப் படைத்தனர். பிருந்தாவன்தாஸ் என்பவர் 'சைதன்ய பாகவதம்' என்ற நூலையும், ஜயானந்தர் 'சைதன்யமங்கள்' என்ற நூலையும், நகாரி சக்கரவர்த்தி என்பவர் 'பக்தி ரத்னாகர்' என்ற நூலையும் எழுதினர். பல எண்ணிலடங்காத மொழிபெயர்ப்பு இலக்கியங்களும் உருவாக்கப்பட்டன. பிற்கால முகலாயர் ஆட்சியில் தொல்லைகள் மிகுந்திருந்த போதிலும் இலக்கியப்பணி தொடர்ந்து கவனிக்கப்பட்டே வந்தது.

**3. இசை :**

முகலாயர் இசைக்கலையை வளர்த்தனர். பாபர் பாடல்களை இயற்றுவதிலும் இசை கேட்டு இன்புறுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இசை, நாட்டியம் ஆகிய

கேளிக்கைகளிலேயே ஹுமாயூன் தன் வாழ்நாளைக் கழித்தார். அரசவையில் அடிக்கடி இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பச்சு (Bachu) என்ற புகழ் பெற்ற பாடகரை தனது அரசவையில் வைத்திருந்தார் ஹுமாயூன். அக்பர் பல்வேறு நாட்டையும், மொழியையும், இனத்தையும் சேர்ந்த இசை வல்லுநர்களை தனது அரசவையில் வைத்துப் போற்றினார். அக்பர் அவையில் இருந்த இந்து மதத்தைச் சேர்ந்த குவாலியர் நாட்டின் 'மியான்டான்சன்' (Tansen) என்பவர் குறிப்பிடத்தக்கவர். இவர் பல புதிய ராகங்களைக் கண்டுபிடித்தார். இந்து முஸ்லீம் இசைக் கலைஞர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு இந்துஸ்தானி இசை வளர்ச்சிக்கு பெருமை ஊட்டினர். அக்பரின் ஊழியத்தில் அமர்த்தப்பட்டிருந்த மாளவத்தின் பாஸ்பகதூர் 'இசை இந்திப்பாட்டு இவற்றின் விஞ்ஞானத்தில் அக்காலத்தில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர்' என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார்.

ஜஹாங்கீர் அவையிலும் நூற்றுக்கணக்கான பாடர்களும் ஆடல் அணங்குகளும் இருந்தனர். அவர்கள் இடைவிடாமல் அல்லும் பகலும் பல இசை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்தனர். ஜஹாங்கீர் காலத்தில் ஜகன்னாத், ஜனார்தன்பட் முதலியோர் சிறந்த பாடகர்களாக இருந்தனர். ராம்தாஸ், மகபத்ரா போன்ற பாடகர்களும் அவரிடத்தில் ஆதரவு பெற்றனர். ஷாஜஹான் காலத்தில் பாடகர்கட்கு எடைக்கு எடை தங்கமும், வெள்ளியும், வைரமும் வெகுமதி கிடைத்ததாகக் கூறப்படுகிறது. ஔரங்கசீப் காலத்தில் இசைக்கு கடுமையான தடை விதிக்கப்பட்டிருந்தது.

**4. கட்டிடக்கலை :**

**1526**–ல் முகலாயப் பேரரசு நிறுவப்பட்டதிலிருந்து இந்தியாவில் கட்டிடக் கலையில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பித்தது என்று கூறலாம். இந்தியப் பண்பாட்டிற்கு அந்நிய கலாச்சாரத்தைத் தன்னகத்தே ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இருந்தது. இந்தியப் பண்பாடு வளர்வதற்கு முகலாயர் பேருதவி புரிந்தனர். முகலாயக் கட்டிடக்கலை இந்து, முஸ்லீம் கூறுகளையும், மரபுகளையும் இணைத்திருந்த ஒரு கலையாகவே இருந்தது.

பேரரசர் பாபர் இந்தியாவில் கட்டிடங்கள் கட்டுவதற்காக கான்ஸ்டான்டி நோபிளிலிருந்து புகழ்ப்பெற்ற அல்பேனியக் கட்டிடடக் கலைஞரான சீனான் (Sinan) என்பவரின் மாணவர்களை வரவழைத்தார். அவர் கட்டிய கட்டிடங்களில்

பானிபட்டிலுள்ள 'காபூல்பாக்' மசூதியும், சம்பலில் உள்ள ஜும்மா மசூதியும் நல்ல நிலமையில் காணப்படுகின்றன. பின்னர் வந்த ஹுமாயூன் காலத்தில் கட்டப்பட்ட இரண்டு கட்டிட அமைப்புகள் தற்போது பாழடைந்து கிடக்கின்றன. அவை, ஆக்ராவிலுள்ள மசூதி, பஞ்சாபிலுள்ள பாத்பாட் என்ற இடத்திலுள்ள இசூதி ஆகியவையாகும். இவர் தீன்பனா என்ற புகழ்ப்பெற்ற அரண்மனையும் கட்டினார்.

ஷெர்ஷா மிகக் குறுகிய காலமே ஆட்சி செய்தாலும், அவருடைய ஆட்சி இந்தியக் கட்டிடட்ககலை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உருவாக்கியது. இவர் கட்டிய புரானாஹில்லா (Purana Qila) என்ற நகரக் கோட்டை 'கலைத்திறனும், அலங்காரமும்' நிறைந்த கட்டிடப் பணிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். **1545–ல்** கட்டப்பட்ட இலா–இ–குஹ்னா மசூதி அதன் அதி அற்புதமான கட்டிடக்கலைப் பண்புகளுக்காக இலா–இ–குஹ்னா மசூதி அதன் அதி அற்புதமான கட்டிடக்கலைப் பண்புகளுக்காக வட இந்தியக் கட்டிடங்களில் சிறப்பு இடத்தைப் பெறுகிறது. பீஹாரில் ஷாஹாபாத் மாவட்டத்தில் சசாரம் என்ற இடத்தின் ஓர் ஏரியில் நடுவேயுள்ள உயர்ந்த ஒரு சதுரப் பீடத்தின் மீது கட்டப்பட்ட ஷெர்ஷாவின் கல்லறை அதன் அமைப்பு கம்பீரம் ஆகிய இரண்டு கண்ணோட்டங்களிலும் இந்து முஸ்லீம் கட்டிடடக் கலையின் ஓர் அற்புதமாக விளங்குகிறது.

அக்பர் ஆட்சியிலும் கட்டிடக்கலை குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்தது. இவருடைய காலத்தில் கட்டப்பட்ட ஆக்ரா கோட்டை, பதேபூர் சிக்ரியிலுள்ள கட்டிடங்கள் ஆகியவற்றில் இந்து சிற்பிகளில் செல்வாக்கைக் காணலாம். ஆக்ரா கோட்டையில் உள்ள ஜஹாங்கிரி மகால் இவர் கட்டியதே ஆகும். இவர் ஹுமாயூனின் கல்லறையை சலவைக் கற்களால் கட்டி முடித்தார். இது பெர்சியக் கலையின் செல்வாக்கைப் பிரதிபலிக்கிறது என்றாலும், இக்கல்லறையின் அடிப்பகுதியின் திட்டம் இந்திய முறையிலேயே காணப்படுகின்றன. இது தாஜ்மகாலின் முந்தய வடிவம் (prototype) போன்று உள்ளது. ஜமா மசூதி, புலந்தர்வாசா (பொற்கதவு) ஆகிய கட்டிட அமைப்புகளையும் கட்டினார். இவரது லாகூர் கோட்டை மிக அழகு வாய்ந்ததாக இருந்தது. இக் கோட்டைச் சுவரின் உச்சியில் உள்ள யானை, சிங்கம், மயில் ஆகிய உருவங்களில் இந்து சிற்பிகளின் செல்வாக்கு வெளிப்படுகிறது. இவர் காலத்தில்

கட்டப்பட்ட அலகாபாத்திலுள்ள நாற்பது தூண்கள் உள்ள அரண்மனை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க கட்டிடங்களில் ஒன்று சிகந்தராவிலுள்ள அக்பரின் கல்லறையாகும். மற்றது நூர்ஜஹானால் ஆக்ராவில் கட்டப்பட்ட அவரது தந்தையின் இதிமத்தௌலாவின் கல்லறையாகும். இது முற்றிலும் வெள்ளைச் சலவைக்கல்லால் கட்டி, விலை உயர்ந்த கற்களால் இழைக்கப்பட்ட அலங்கார வேலைபாட்டைக் கொண்டுள்ளது.

**ஷாஜஹான் காலத்தில் கட்டிடக்கலை வளர்ச்சி :**

முகலாயக் கட்டிடக் கலையின் வளர்ச்சி ஷாஜஹான் காலத்தில் உச்ச நிலையை அடைந்தது. அவர் பல கட்டிடங்களைக் கட்டியுள்ளார். அவை ஷாஜஹானின் பெயரையும், பெருமையையும் அழியாமல் செய்துவிட்டன. ஷாஜஹானின் கட்டிடங்கள் ஆடம்பர வண்ணப்– பகட்டிலும், வளமான திறமையான அலங்கரிப்பிலும் மிக உயர்ந்தவையாகத் திகழ்கின்றன. அவருடைய கட்டிடங்களை வரிசைப்படுத்திக் காணலாம்.

a) **தாஜ்மஹால்** : **1530**–ஆம் ஆண்டு காலமான மும்தாஜ் மஹால் என்றழைக்கப்பட்ட தனது மனைவியின் நினைவாக ஷாஜஹான் ஆக்ராவில் கட்டிய தாஜ்மஹால், அவர் காலத்து கட்டிடக் கலைக்கு சிகரம் வைத்தாற்போல் உள்ளது. அழகும் கம்பீரமும் நிறைந்த தாஜ்மஹாலில் உலகத்தின் அற்புதக் காட்சிகளில் ஒன்றாக விளங்குகிறது. இதனைக் கட்டுவதற்கு பாரசீகம், அராபியா, துருக்கி, இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து புகழ்ப்பெற்ற கட்டிடக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். இதைக் கட்டும் பொறுப்பு உஸ்தாத் இசா (Ustad Isa) துருக்கிய என்ற சிறந்த கட்டிடக் கலைஞரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ராஜஸ்தானிலிருந்து கொண்டுவரப்பட்ட மிக உயர்ந்த ரக வெள்ளைப் பளிங்கு கற்களினால் இது கட்டடப்பட்டது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், இலங்கை, பாரசீகம், ஓமன் ஆகிய நாடுகளிலிருந்தும் இருபதுக்கும் மேற்பட்ட விலை உயர்ந்த கற்கள் கொண்டுவரப்பட்டன. இருபது ஆயிரம் பேர் தொடர்ந்து இருபத்திரெண்டு ஆண்டுகள் வேலை செய்தனர். இது சாதுல்லாகான் மேற்பார்வையில் கட்டப்பட்டது. ‘ஈடு இணையற்ற அறிவியல் நுட்பத்திற்கும், சாகாவரம்

பெற்ற காதலுக்கும், இல்லற அன்பு வாழ்க்கைக்கும், என்றும் நிலைபெற்று விளங்கக்கூடிய வகையில் அது நினைவுச் சின்னமாகத் திகழும், கட்டிட நிபுணத்துவத்தற்கு ஒரு மகுடமாக தாஜ்மஹால் நீடித்திருக்கும்'.

b) **மோதி மசூதி** (Moti Masjid) : இது தனது மகள் ஜகனாரா (jahanara) நினைவாகக் கட்டப்பட்டது ஆகும். ஓர் உயர்ந்த கலையின் வடிவமாகும். ஆக்ராவில் கட்டப்பட்ட மோதி மசூதி வெள்ளைப் பளிங்குக் கல்லால் கட்டப்பட்டது. தூய்மையும், செயல்திறனுமுடைய கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்தியாவில் உள்ள மிகப் பெரிய மசூதி ஆகும். இது ஆக்ரா கோட்டையினுள் உள்ளது.

c) **ஜாமா மசூதி** (Jama Masjid) : இது மிகப் பெரிய மசூதியாகும். 35 படிக்கட்டுகள் ஏறிய பின்பே இதனை அடைய முடியும். இதைக் கட்டுவதற்கு பத்து ஆண்டுகள் ஆனது. காண்பவர்கள் அதிசயித்து நிற்கக்கூடிய அழகு கொண்டது. இதற்கு 'மஸ்ஜித்–இ–ஜஹான் நாமா' என்ற பெயரும் உண்டு.

d) **மூஸம்மான்பர்ஜ்** (Musamman Barj) : இது வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது. விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டுடள்ளன. தாஜ்மஹாலிலிருந்து இதனை எளிதில் பார்க்கலாம். இதில்தான் ஷாஜஹான் கைதியாக 1666–ல் இறந்தார்.

e) **செங்கோட்டை** (Red Fort) : இது ஷாஜஹானின் இருப்பிட மாளிகையாகும். ஜமுனா நதிக்கரையில் சிகப்பு கற்களினால் 1648–ல் கட்டப்பட்டது. இது பல கட்டிடங்களைக் கொண்டது. செங்கோட்டையிலுள்ள ஷுஷ் மஹால், ரங்மஹால், மோதிமஹால், திவானி ஆம், திவானிகாஸ் ஆகியவை அதிக பொருட்செலவில் கட்டப்பட்டன. ஷாஜஹான் கட்டிய கட்டிடங்களிலே மிகவும் எழில் வாய்ந்தது 'திவானிகாஸ்' ஆகும். இதனூடே பளிங்கு கல்லினாலான நீரோடை செல்லும் அழகே அழகு. விலைமதிப்பில்லா கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதன் எழிலைப் பற்றிப்பாடிய பாரசீகக் கவிஞரின் கவிதை ஒன்று இதன் சுவர் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

''மண்ணுலகில் சுவர்க்கத்தைக் காணமுடியும் என்றால்
அது இதுதான், அது இதுதான், அது இதுதான்''.

f) **ஜஹாங்கிரின் கல்லறை** : செங்கோட்டையில் கட்டப்பட்ட ஐம்பது அரண்மனைகளில் தற்போது இருபது மட்டுமே எஞ்சி உள்து. கட்டப்பட்ட இந்த கல்லறை, ஷாஜகான் காலத்தில் நூர்ஜஹானால் மிகவும் அழகுபடுத்தப்பட்டது. இது

லாகூரிலுள்ள சதாராவில் கட்டப்பட்டுள்ளது. அழகான சிறந்த கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. இதுவும் பளிங்குக் கற்களாலேயே கட்டப்பட்டுள்ளது.

g) **மயிலாசனம்** (Peacock Throne) : ஷாஜஹான் ஆட்சிக் காலத்தில் மற்றொரு புகழ்ப்பெற்ற கலைப் பொருள் மயிலாசனம் ஆகும். **1628–**ல் முறையாக முடிசூட்டப்பட்டபின் ஷாஜஹான் மற்ற அரசர்களின் அரியணையை விட மதிப்பிலும், கலைச் சிறப்பிலும் மிகச் சிறந்த சிம்மாசனம் செய்ய விரும்பினார். **1628** முதல் **1635** வரை சுமார் ஏழு ஆண்டு காலமாக பே–பேத்தல்–கான் என்பவரின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டது. 'அச்சிம்மாசனம் தங்கக்– கால்களையுடைய ஓர் கட்டிலின் வடிவைப் பெற்றிருந்தது. எனாமலால் செய்யப்பட்ட பிரிப்பு, பன்னிரெண்டு மரக்தத்தூண்களால் தாங்கப்பட்டிருந்தது. அத்தூண்கள் ஒவ்வொன்றையும் மணிக்கற்கள் பதிக்கப்பட்ட இரு மயில்கள் தாங்கிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு ஜதை மயிலின் நடுவிலும் வைரம், மரகதம், நீலம், முத்து இவற்றால் நிரம்பிய ஒரு மரம் இருந்தது. **1739–**ல் நாதிர்ஷா இதை பாரசீகத்தற்கு எடுத்துச் சென்றுவிட்டார். இப்போது எங்குள்ளது என்று தெரியவில்லை.

ஔரங்கசீப் கட்டிடக் கலைக்கு ஆதரவளிக்கவில்லை. அவருடைய ஆட்சியில் எழுந்த சில கட்டிட அமைப்புகளும், பழைய பாணிகளின் பலவீனமாக பிரதியாகவே இருந்தன.

### 5. ஓவியக் கலை

முகலாயர்கள் காலத்தில் கட்டிடக் கலையைப் போலவே ஓவியக் கலையும் செழித்தோங்கி வளர்ந்தது. பாபர் காலத்திய ஓவியர்கள் அரசவைக் காட்சிகளை அழகாக சித்தரித்தனர். ஆறுகள், ஏரிகள், வளமான மலைகள், பூங்காக்கள் போன்ற இயற்கைக் காட்சிகளை கைத்திறமை மிக்க ஓவியர்களை வரவழைத்து வரைந்தார்.

அக்பர் ஓவியக்கலையில் அதிக அக்கரை காட்டினார். அப்துஸ் ஸமத் என்பவரை ஓவியக்கலைத் துறை தலைவராக நியமித்தார். இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் வாழ்ந்த ஓவியர்களை வரவழைத்து அவர்களுக்கு பெரும் ஆதரவளித்தார். சிறப்பாக வரைந்தவர்களுக்கு அதிக சன்மானம் வழங்கினார். அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தார். ஃபருக்பேக், தாராசந்த் ஜகனாத், சன்வால்தாஸ் முதலியவர்கள் அக்காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த ஓவியக் கலைஞர்கள் ஆவர்.

ஜஹாங்கீரும் ஒரு சிறந்த கலையார்வம் கொண்ட பேரரசர். தனது கலையுணர்வுச் சுவையை திருப்திப்படுத்தும் எந்த ஓவியத்தையும் என்ன விலை கொடுத்தும் வாங்கிவிடுவார். இவருடைய அரசவையில், முகமது நாதிர், முகமது மூராத், உஸ்தாத் மன்சூர் ஆகியோர் மிகச்சிறப்பு பெற்ற ஓவியக் கலைஞர்களாக இருந்தனர். ஜஹாங்கீர் காலத்துடன் ஓவியக்கலை சீர்குலைந்தது. ஷாஜஹான் காலத்தில் ஓவியம் வளர்ச்சியடைந்தது. அவரது மந்திரா ஆசப்கானும் அவரது மகன் தாராவும் ஓவியப் பிரியர்கள். முகமது நாதர் சாமர்கண்ட் என்பவர் ஷாஜஹான் காலத்திய முக்கியமான ஓவியர் ஆவார். ஔரங்கசீப்பின் காலத்திலிருந்து ஓவியக்கலை திட்டவட்டமான வீழ்ச்சி அடைந்தது. பல ஓவியங்களை ஔரங்கசீப் நாசமாக்கினார் என்றும் கூறப்படுகிறது. அவர் இறந்த பின்னர் பேரரசிலிருந்த பல ஓவியர்கள் ஹைதராபாத், மைசூர், வங்காளம் ஆகிய இடங்களுக்குச் சென்று குடியேறினர்.

## சிவாஜி (SHIVAJI, 1627 – 1680)

தக்காணத்தில் பல பெரிய அரசுகள் தோன்றி மறைந்துள்ளன. அவற்றுள் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய மராட்டிய அரசு மிகச் சிறந்ததொன்றாகும். இந்தியாவின் தென் பகுதியில் இஸ்லாமிய மதம், அதிகமாகப் பரவ விடாமல் தடுத்தவர்கள் மராட்டியர்கள். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமானவர்களும் இவர்களே. இவர்களின் சிறந்த தலைவராக விளங்கியவர் சிவாஜி ஆவார். மராட்டியர்களின் எழுச்சிக்கு சிவாஜிதான் காரணமாவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த மராட்டியர்களின் எழுச்சி இந்திய வரலாற்றில் முக்கியத் திருப்பத்தை உண்டாக்கியது.

### மராட்டியர்களின் எழுச்சிக்கான காரணங்கள் :

### 1. நிலவியல் அமைப்பு (Physical features) :

நிலவியல் அமைப்பு மராட்டியர்களின் எழுச்சிக்குக் காரணமாகும். மராட்டிய நாடு வடக்கிலிருந்து தெற்காக சயாத்திரி (Sayadri) மலைத் தொடராலும், கிழக்கிலிருந்து மேற்காக விந்திய சாத்பூரா மலைத் தொடர்களாலும் சூழப்பட்டிருந்தது. மேலும், கணக்கிலடங்கா மலைக்கோட்டைகள் இருந்தன. இம்மலைகளும் கோட்டைகளும்

நாட்டைப் பகைவர்களிடமிருந்து காத்துக்கொள்ள இயற்கையான பாதுகாப்பு அரண்களாக விளங்கின.

**2. மக்களின் தன்மை (Nature of the people) :**

இந்த நாட்டில் மழை குறைவு என்பதாலும், கற்கள் நிறைந்த வளமற்ற நிலமாக இருந்ததாலும் மக்களின் வாழ்க்கை மிகக் கடினமாக இருந்தது. தங்கள் அன்றாட உணவிற்கே கடுமையாக உழைக்க வேண்டியதிருந்தது. இதன் காரணமாக மராட்டியர்கள் தன்னம்பிக்கை, வீரம், விடாமுயற்சி, மனஉறுதி போன்ற நல்ல தன்னம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்கள். நேர்மையும், சமுதாய சமத்துவ உணர்ச்சியும் அவர்களிடம் காணப்பட்டது.

**3. மதப்பற்று (Religious faith) :**

மராட்டிய மக்களிடையே துக்காராம், ஏக்நாத், வாமன் பண்டிட் குருராம்தாஸ் போன்ற சமயப் பெரியோர்கள் தோன்றி மக்களிடம் பக்தியையும், சமத்துவத்தையும் போதித்தார்கள். ஜாதி, மதம், தொழிலின் சிறப்பு, சமூகத்திலுள்ள மதிப்பு இவற்றால் பயனில்லை என்று போதித்தார்கள். பல பக்தி இலக்கியங்களைப் படைத்தார்கள். பல பாடல்கள், இலக்கியங்கள் படைத்தார்கள். அவைகளில் ‘தசபோதம்’ என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இவை மக்களின் இனப்பற்றையும், ஒற்றுமை உணர்வையும் ஏற்படுத்தியது. மக்களின் வாழ்க்கை, மொழிக் கொள்கை ஆகியவற்றில் ஐக்கியம் வளர்ந்தது.

**4. போர்த்துறை அனுபவம் :**

மராட்டியர்கள் தென்னிந்திய சுல்தானியங்களின் அரசுகளின் பல பதவிகளை வகித்தார்கள். இதனால் அரசியல் மற்றும் படைத்துறை ஆகியவற்றில் அனுபவமிக்கவர்களாக இருந்தனர். சிவாஜியின் தந்தை ஷாஜி பான்ஸ்லே அக்மத்நகர் சுல்தான் படையில் பணியாற்றியவரே ! முராரிராவ், மதன் பண்டிதர், நர்சோகலே, யேசு பண்டிதர் போன்ற மராட்டியத் தலைவர்கள், அமைச்சர்கள், திவான்கள் போன்ற பதவிகளை பல சுல்தானியங்களில் வகித்தார்கள். இந்த அனுபவங்கள் அவர்களின் எழுச்சிக்குக் காரணமானது.

**5. அரசியல் விழிப்புணர்வு (Political consciousness) :**

அப்போதிருந்த இந்தியாவின் அரசியல் நிலை மராட்டியர்களின் எழுச்சிக்கு மிகவும் உதவியது. தக்காண சுல்தான்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டு வலிமையிழந்து காணப்பட்டார்கள். அவர்கள் மராட்டியர்களின் எழுச்சிக்கு எந்த இடையூறும் செய்ய வலியற்றிருந்தார்கள். அதே நேரம் இந்துக்களுக்கு எதிராக ஔரங்கசீப் பின்பற்றிய அடக்குமுறைக் கொள்கையும் போரும் ஒரு சுதந்திர மராட்டிய நாட்டை அமைக்க வேண்டும் என்ற அரசியல் விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தியது. எனவே பல பிரிவுகளாக இருந்த மராட்டியத் தலைவர்கள், தங்களின் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டார்கள்.

**6. சிவாஜியின் தலைமை (Leadership of Shivaji) :**

மராட்டியர்களின் எழுச்சிக்கு சிவாஜியின் தலைமை முக்கியக் காரணமாகும். சிவாஜிக்கு முன்னர் சுதந்திர தீபத்தை ஏற்றி வைக்க தகுந்தத் தலைவர்கள் தனது தலைமையில் ஒன்றுபடுத்தனார். தக்காண சுல்தான்கள் மற்றும் முகலாயருடன் போரிட்டு ஒரு சுதந்திர நாட்டை அமைக்கக் காரணமானார். இவரது தேசப்பற்றும், திறமையும், தலைமைத் தன்மையும், மராட்டியர்களின் எழுச்சிக்குக் காரணமானது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**சிவாஜியின் வாழ்க்கைக் குறிப்பு :**

மராட்டிய வீரரான சிவாஜி பூனா மாவட்டத்தில் பல கிராமங்களில் தலைவர்களாக விளங்கிய ‘பான்ஸ்லே’ என்ற வம்சத்தில் ஷாஜி பான்ஸ்லே என்பவரின் மகனாக 1627 ஏப்ரல்4–ஆம் தேதி ஷிவனேரி (Shivaneri) என்ற கிராமத்தில் பிறந்தார். தாயின் பெயர் ஜீஜாபாய். ஷாஜிபான்ஸ்லே தனது இரண்டாவது மனைவியான துக்காபாய் மீது அதிகப் பற்றுக் கொண்டு, சிவாஜியை தம் தாயுடன் தாதாஜி கொண்ட தேவ் என்ற பிராமணரின் பராமரிப்பில் விட்டுவிட்டு, பீஜப்பூர் சுல்தானிடம் பணியாற்றச் சென்றுவிட்டனர். கணவரால் புறக்கணிக்கப்பட்ட ஜீஜாபாய் அறிவும், பண்பும், நல்லொழுக்கமும் மிக்கவர். தனது மகன் சிவாஜிக்கு வீரத்தையும், பக்தியையும் ஊட்டினார். சிறந்த பண்புள்ளவராக உருவாக்கினார்.

குருராம்தாசும், துக்காராமும் சிவாஜியின் சிறந்த மதகுருக்கள். மராட்டியர்களை ஒன்றுபடுத்தவும், இந்து சமயத்தைப் பாதுகாக்கவும் அவர்கள் போதித்தனர். ‘‘தாயும் தாய்நாடும் சொர்க்கத்தை விடச் சிறந்தவை. கடவுள் பெயரில் நம்பிக்கையில்லாமல் வாழ்வதை விட சாவதே சிறந்தது. மதத்தைப் பாதுகாக்காமல் வாழ்வதில் பயனில்லை’’ என்று கூறினார் ராம்தாஸ். இதனால் சிவாஜியின் நாட்டுப் பற்றும் மதப்பற்றும் வளர்ந்தது. தாதாஜி கொண்ட தேவ் சிவாஜிக்குப் போர்ப் பயிற்சி, குதிரையேற்றம் ஆகிய கலைகளைக் கற்றுக் கொடுத்தார். வலிமையான படையை அமைத்தல், கோட்டைகளை எதிரிகளிடமிருந்து காத்தல், கொரில்லாப் போர் போன்றவற்றையும் சிவாஜி அவரிடம் கற்றுக்கொண்டார்.

சிவாஜி தனது இளமைக் காலத்தில் மேற்கு கடற்கரையிலுள்ள மாவல் நாட்டு மலை இன மக்களுடன் நெருங்கிப் பழகினார். மாவாலி மக்கள் முரட்டுத்தனம் வாய்ந்த சிறந்த வீரர்கள், சலியாது உழைப்பவர்கள். அவர்களுடன் மலைப் பகுதிகளிலெல்லாம் சிவாஜி சுற்றித் திரிந்ததால் மராட்டிய நாட்டின் மலைவழிகள், பள்ளத்தாக்குகளை நன்கு அறிந்திருந்தார். எனவேதான் பின்னர் சிறந்த ‘மலையெலி’ என்ற பட்டத்துடன் வீரராகத் திகழ்ந்தார்.

**சிவாஜியின் வெற்றிகள் :**

சிவாஜி தனது பன்னிரெண்டாவது வயது முதலே தந்தையின் ஜாஹீரின் நிர்வாக முறைகளைக் கவனித்து வந்ததால் நல்ல நிர்வாக அனுபவம் கிடைத்தது. தனது 19–ஆம் வயதில் போரில் இறங்கினார். அந்நியர்களின் ஆதிக்கத்திலிருந்து மராட்டிய மக்களை விடுதலையாக்கி அவர்களுக்கென்று ஒரு தனி ராஜ்யத்தை ஏற்படுத்தப் போரில் இறங்கினார்.

**1. தோர்னா கோட்டையைக் கைப்பற்றுதல் (Torna) :**

பீஜப்பூர் சுல்தானின் சீர்கேடான ஆட்சி முறையில் அப்பகுதியில் உள்ள மராட்டிய மக்கள் கடுந் துன்பமடைந்தனர். **1646–ல்** சுல்தான் நோய்வாய்ப்படவே நாட்டின் கலகங்களும் புரட்சியும் ஏற்பட்டன. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பூனாவிற்கு தென் மேற்கிலிருந்த ‘தோர்னா’ கோட்டையைத் தனது **19–ஆம்** வயதில் கைப்பற்றினார் சிவாஜி. அதன் பலனாக சுமார் இரண்டு இலட்ச ரூபாய் கிடைத்தது.

அதைக் கொண்டு தனது படையைப் பலப்படுத்திக் கொண்டார். அதேயாண்டில் ரெய்க்கார் கோட்டையைத் கைப்பற்றினாலும் அதை சிறிது காலத்தில் இழக்க வேண்டியதாயிற்று.

**ஷாஜிபான்ஸ்லே கைது செய்யப்படல்** : இவ்வாறு சிவாஜியின் அதிகாரம் வளர்வதைக் கண்டு கோபமடைந்த சுல்தான் சிவாஜியின் தந்தை ஷாஜியைக் கைது செய்து சிறையிலடைத்தார். அவரது ஜாஹிர் பறிமுதல் செய்யப்பட்டது. இதனால் சிவாஜி திகைத்தார். சுல்தானுக்கெதிராக சிவாஜி தனது நடவடிக்கைகளைத் தொடரக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், ஷாஜி விடுதலை செய்யப்பட்டார். சிவாஜியும் **1649 – '55** வரை தனது செயல்பாடுகளை நிறுத்திவைத்தார். இக் காலத்தில் தனது படைக்கு நல்ல பயிற்சி அளித்தார் சிவாஜி.

**2. ஜாவ்லி (Javali) கோட்டையைக் கைப்பற்றுதல் :**

சர்தார் சுந்தர்ராவ் என்ற மராட்டியத் தலைவர் ஒருவர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து **16–**ஆம் நூற்றாண்டிலேயே ஒரு ஜாகீரைப் பெற்று மராட்டியப் பகுதியின் வடமேற்கில் ஜாவ்லி கோட்டையை அமைத்திருந்தார். அவர் அடில்ஷா என்ற ஆளுநருடன் சேர்ந்துகொண்டு சிவாஜிக்கு எதிராகப் பல சதித்திட்டங்களை வகுத்தார். இதை அறிந்த சிவாஜி போர்க் கருவிகளை வாடகைக்கு வாங்கி போரிட்டு **1656–**ல் ஜாவ்லி கோட்டையைக் கைப்பற்றினார். இதனால் சிவாஜியின் பெயரும் புகழும் மராட்டியர் மத்தியில் உயர்ந்தன. அதிகமானபேர் இவரது படையில் சேர முன்வந்தனர்.

**3. ரெய்கார் கோட்டையைக் கைப்பற்றுதல் :**

ஜாவ்லி கோட்டையைக் கைப்பற்றிய சிவாஜி தொடர்ந்து தன் ராஜ்யத்தைப் பெரிதாக்க நினைத்தார். எனவே ரெய்கார் கோட்டையைத் திரும்பவும் தாக்கி கைப்பற்றினார். அதைத் தொடர்ந்து பூனாவிற்கு அருகிலுள்ள 'சுபா' கோட்டையைப் பிடித்தார். சுபா, பாரமதி, இந்துபூர் ஆகிய இடங்கள் பூனா மாவட்டத்தின் தென் கிழக்குப் பகுதியில் சிவாஜிக்குப் பாதுகாப்பாக விளங்கின. புரந்தர், ரெய்க்கார், கோண்டு வானா, தோர்னா, கல்யாண் ஆகிய கோட்டைகள் சிவாஜி ராஜ்யத்தில் சிறந்த மலைக்கோட்டைகளாக விளங்கின.

**4. பீஜப்பூர் சுல்தானோடு போர் (1657 – ’62) :**

இதுவரை முகலாயப் படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொண்டிருந்த பீஜப்பூர் சுல்தான் ஔரங்கசீப் மகுடப் போட்டியில் ஈடுபடுவதற்காக தக்காணத்தை விட்டுச் சென்றதால் பயமில்லாமல் வாழ்ந்தார். எனவே சிவாஜியின் மீது சீற்றம் கொண்டு அவரைத் தண்டிக்க நினைத்தார். தனது தலைமைத் தளபதியான அப்சல்கானை (Afzal Khan) ஒரு வார காலத்தில் சிவாஜியைக் கைது செய்தோ அல்லது பிணமாகவோ பீஜப்பூர் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். வீராவேசத்துடன் சென்ற அப்சல்கான் மராட்டிய எல்லைக்குள் கால் வைத்தவுடன் மக்களைக் கொன்றும், பயிர்களை அழித்தும் சேதப்படுத்தினார். பல இடங்களில் இந்துக் கோவில்களை அழித்தார். ஆனால் சிவாஜி தனது பிரதாப்கார் கோட்டையை விட்டு வெளியே வரவில்லை.

ஆனால் சிவாஜி தங்கியிருந்த மலைப்பகுதியை அடைய முடியாது என்பதைப் புரிந்து கொண்ட அப்சல்கான், தான் தங்கியிருந்த இடத்திற்கு சிவாஜியை பேச்சுவார்த்தை நடத்துவதாக அழைத்து வஞ்சகமாக கொல்ல நினைத்தார். எனவே கிருஷ்ணாஜி பாஸ்கர் என்ற மராட்டிய பிராமணர் மூலம் சிவாஜிக்குத் தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லி அனுப்பினார். அப்சல்கான் அதற்குச் சம்மதித்த சிவாஜி முன்னெச்சரிக்கையாக உள்கவசம் அணிந்து சென்றார். சிவாஜியை வரவேற்பது போல பெரிய உருவம் கொண்ட அப்சல்கான் தனது இரு கைகளாலும் அவரைத் தழுவிக் கொண்டு தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் குத்த முயன்றார். உடனே சிவாஜி தான் மறைத்து வைத்திருந்த பாக்நக் (Bagh Nagh) என்ற புலிநகம் போன்ற எஃகு ஆயுதத்தால் அப்சல்கானைத் தனது பிரதாப் போட்டையில் வைத்து கொன்றார். தலைவரை இழந்த பீஜப்பூர் படையும் சின்னாபின்னமாக்கப்பட்டது. பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான கொங்கணம் கோல்காப்பூர் மாவட்டங்களைக் கைப்பற்றினார் சிவாஜி. **1661–**ல் சிவாஜியுடன் பீஜப்பூர் சுல்தான் சமாதானம் செய்து கொண்டு அதுவரை சிவாஜி வென்ற பகுதிகளின் தலைவராக அவரை அங்கீகரித்தார்.

**5. முகலாயர்களுடன் தொடர்பு :**

பீஜப்பூர் சுல்தானின் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்த சிவாஜி அச்சமயம் தக்காணத்தின் ஆளுநராக இருந்த ஔரங்கசீப்பிடம் நட்பு கொண்டிருந்தார். சில சமயங்களில் மராட்டியப் படை ஔரங்கசீப்பிற்கு ஆதரவாக பீஜப்பூர் சுல்தானை எதிர்த்துப் போரிட்டது. ஆனால் மகுடப் போட்டியில் ஔரங்கசீப் தீவிரமாக ஈடுபட்டதைக் கண்ட சிவாஜி, தக்காணத்திலிருந்த சில முகலாயப் பகுதிகளைத் தாக்கிப் பிடித்தார். முகலாயப் பேரரசராக வந்த ஔரங்கசீப் சிவாஜியின் தந்திரத்தையும், அப்சல்கானுக்கு அவர் செய்த தீங்கினையும் கேள்விப்பட்டு சிவாஜியை அடக்குமாறு தக்காணத்தில் முகலாய ஆளுநராகப் பதவியேற்றிருந்த தனது மாமனான செயிஸ்டகானுக்குக் கட்டளையிட்டார்.

**6. சிவாஜியும் செயிஸ்டகானும் (Shayistakhan and Shivaji) :**

பேரரசின் கட்டளையை ஏற்ற செயிஸ்டகான், வீராவேசத்துடன் சென்று மராட்டியப் பகுதிகளைத் தாக்கினார். பூனாவிற்குச் சென்று சாகன் (Chahan) கோட்டையைக் கைப்பற்றினார். அதோடு நில்லாமல் கல்யாண் மாவட்டத்திலுள்ள மராட்டியரை விரட்டியடித்தார். அச் சமயத்தில் சிவாஜி தனது தகப்பனாரின் உதவியால் பீஜப்பூர் சுல்தானுடன் சமாதானம் செய்து கொண்டு, முகலாயப் படையை எதிர்த்து கடுமையாகப் போர் புரிந்தார். போர் இரண்டு ஆண்டு காலம் நீடித்தது. திடீரென சிவாஜி பூனாவிலிருந்த செயிஸ்டகானின் பாசறையை நாநூறு போர் வீரர்களுடன் சென்று 1663, ஏப்ரல் 14–ஆம் தேதி இரவு நேரத்தில் தாக்கினார். அவரது படுக்கை அறையிலேயே கொல்ல முயற்சித்தார். ஆனால், தனது மூன்று கைவிரல்களை இழந்து தப்பி ஓடிவிட்டார்.

**7. சிவாஜி சூரத்தைக் கைப்பற்றுதல் :**

செயிஸ்டகானைத் தோற்கடித்து பூனாவைக் கைப்பற்றியதால் மராட்டிய வீரர்கள் ஊக்கம் கொண்டனர். சிவாஜியின் தீரச் செயல்கள் யாவராலும் பாராட்டப்பட்டது. இதனால் சிவாஜியின் ஆசையும் அதிகமானது. 1664 ஜனவரியில் திடீரென்று மேற்கு கடற்கரையில் வாணிபத்தில் சிறந்த செல்வச் செழிப்புடன் இருந்த சூரத் நகரைத் தாக்கினார். சிவாஜியின் 4000 படை வீரர்களைக் கண்ட முகலாய ஆளுநர்,

சூரத்திலிருந்து ஓடிவிட்டார். சூரத்தைத் தாக்கி சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான கொள்ளைப் பொருட்களுடன் அங்கிருந்து திரும்பினார். இதுவும் சிவாஜியின் மற்றொரு துணிகரச் செயலாகும். 1670 அக்டோபர் மாதம் இரண்டாம் முறையாக சூரத்தைத் தாக்கினார்.

**8. சிவாஜியும், ராஜா ஜெய்சிங்கும் :**

முகலாய அரசின் மதிப்பையும், புகழையும் பாதிக்கக்கூடிய படையெடுப்புகளில் ஈடுபட்ட சிவாஜியின் செயல்களைக் கண்ட ஔரங்கசீப் அவருடைய கொட்டத்தை அடக்கும்படியாக ஆம்பர் நாட்டு அரசன் மிர்சா ராஜா ஜெய்சிங்கையும், திலர்கான் என்ற படைத் தலைவனையும், 1665–ல் தக்காணத்திற்கு அனுப்பி வைத்தார். போர் அனுபவமும் திறமையும் மிகுந்த ஜெய்சிங் மராட்டியத் தளபதிகளும், அவர்களின் குடும்பத்தினரும் தங்கியிருந்த புரந்தர் கோட்டையைத் தாக்கினார். இதில் ஏராளமான சிவாஜியின் வீரர்கள் கொல்லப்பட்டனர். இதன் பிறகு முகலாயப்படை சிவாஜியின் தலைநகரான ரொய்க்கார் கோட்டையையும் தாக்கியது. எனவே சிவாஜி 1665 ஜுன் 22–ஆம் தேதி ஜெய்சிங்குடன் புரந்தர் என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டார்.

**புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் :**

a) சிவாஜி தனது முப்பத்தைந்து கோட்டைகளில் இருபத்தி மூன்றை முகலாயப் பேரரசுக்குக் கொடுத்துவிட்டு பன்னிரெண்டு கோட்டைகளை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும்.

b) தக்காணத்தில் முகலாயப் படைகளுடன் சோந்து போர் புரிய 5000 குதிரைகள் அடங்கிய படையை சிவாஜி கொடுக்க வேண்டும்.

c) சிவாஜியின் இழப்பீட்டிற்கு ஈடாக பீஜப்பூர் ராஜ்யத்தைச் சேர்ந்த சில மாவட்டங்களில் சௌத், சர்தேஷ்முகி முதலியன வரிகளை வசூலிக்கும் உரிமை கொடுக்கப்பட்டது.

**9. ஆக்ராவில் சிவாஜி :**

புரந்தரில் உடன்படிக்கை செய்துகொண்ட பின்னர், ராஜா ஜெய்சிங்கும் சிவாஜியும் சேர்ந்துகொண்டு பீஜப்பூரைத் தாக்கினர். ஆனால், அப்படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. இதனால் சிவாஜி பீஜப்பூர் சுல்தானோடு சேர்ந்துவிடுவாரோ என்று சந்தேகித்த ஜெய்சிங், சிவாஜியை முகலாயப் பேரரசின் அரசவைக்கு வருமாறு வேண்டிக்கொண்டார். வேண்டிய மரியாதையும், நல்ல வரவேற்பும் கிடைக்கும் என்றும், உயிருக்கு ஆபத்தில்லை என்றும் ஜெய்சிங் உறுதி கூறினார். அதன்படி தனது மகன் சாம்பாஜியுடன் 1666–மே மாதம் ஆக்ராவுக்குச் சென்றார். அரசவையில் அவருக்குரிய மரியாதை கொடுக்கப்படவில்லை. மூன்றாம் நிலை பிரபுக்களின் வரிசையில் நிற்கும்படி சிவாஜி கேட்டுக்கொள்ளப்பட்டார்.

இதனால் அவமானம் அடைந்த சிவாஜி, கோபம் கொண்டு அரசவையில் வைத்தே ஔரங்கசீப்பைத் தாக்கிப் பேசிவிட்டார். எனவே சிவாஜியும் அவர் மகனும் கைது செய்யப்பட்டு ஆக்ரா சிறையில் அடைக்கப்பட்டார்கள். சுமார் மூன்று மாத காலமாகத் தன்னை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிறகும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. சிறிது காலத்தில் சிவாஜியைக் கொல்ல ஔரங்கசீப் திட்டமிட்டிருந்தார். ஆனால், சிவாஜியோ தந்திரமாக பழக்கூடை மூலம் தனது மகனுடன் சிறையிலிருந்து தப்பித்து 1666 செப்டம்பர் 22–ல் தன் நாட்டிற்குத் திரும்பி வந்தார். அவர் தப்பி வந்தது கடவுள் செயல் என்று மக்கள் அவரை வரவேற்றனர்.

**10. முகலாயப் பேரரசுடன் மறுபடியும் போர் :**

ஆக்ராவிலிருந்து தப்பி வந்த சிவாஜியை அடக்க எந்த முயற்சியும் எடுக்க இயலாதபடி ஔரங்கசீப் வடமேற்கு எல்லைப் போர்களில் ஈடுபட்டிருந்தார். சிவாஜியும் 1667 முதல் 1669 வரை தனது முழுக் கவனத்தையும் ஆட்சி முறையில் செலுத்தினார். நாட்டில் சிறந்த ஆட்சி முறையை நிறுவினார். 1667–ல் தக்காண ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்த தன்வந்த்சிங்குடன் நட்புறவு கொண்டிருந்தார். தன்வந்த்சிங் பேரரசர் ஔரங்கசீப்பிடம், சிவாஜியுடன் சமாதானம் செய்து கொள்ளும்படி கூறினார். எனவே சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன்படி சிவாஜிக்கு 'மராட்டிய மன்னர்' என்ற பட்டமும், ஷாம்பாஜிக்கு 5000 மன்சப்தார் பதவியும்

அளிக்கப்பட்டது. ஆனால், பேரரசருக்குப் கீழ்ப்படிந்த சிற்றரசராக சிவாஜி இருக்க விரும்பவில்லை.

எனவே 1670–ல் தான் புரந்தர் உடன்படிக்கைப்படி விட்டுக் கொடுத்த கோட்டைகளையெல்லாம் கைப்பற்றிக் கொள்ளப் படையெடுத்தார். 1672–ல் முகலாயர்களை சால்கர் (Salher) என்ற போர்க்களத்தில் தோற்கடித்தார். 1670 – '74–க்குள் முகலாயர்களிடமிருந்து எல்லாக் கோட்டைகளையும் மீட்டார். அதே நேரம் பீஜப்பூருக்குச் சொந்தமான ஹுப்ளி, கர்வர், அங்கோலா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார். முகலாயர்களிடமிருந்தும், பீஜப்பூரிடமிருந்தும் தாம் கைப்பற்றிய பகுதிகளில் சௌத் என்னும் வரியை வசூலித்தார்.

**11. சிவாஜி மகுடம் சூட்டிக் கொள்ளல் :**

தனது புகழின் உச்சியிலிருந்த சிவாஜி, 1674–ஆம் ஆண்டு ஜுன் 6–ல் 'சத்ரபதி' (The Lord of the Umbrella) என்ற பட்டமேற்று தனது தலைநகர் ரெய்காரில் கோலாகலமாக முடிசூட்டிக் கொண்டார். ஒரு தனி இந்து ராஜ்யம் தக்காணத்தில் தோன்றியது. ஔரங்கசீப்பிற்கு பெரும் மனக் குழப்பத்தைக் கொடுத்தது. மராட்டிய மக்களும் மற்ற இந்துக்களும் புதிதாக ஓர் விஜயநகர ராஜ்யம் தோன்றியுள்ளதாக நினைத்து மகிழ்ந்தனர்.

**12. சிவாஜியின் ராஜ்ய பரப்பு :**

முகலாயப் பேரரசின் பலப் பகுதிகளை வென்ற சிவாஜி, 1677–ல் கோல்கொண்டா சுல்தானுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு தெற்கு முகமாகப் படையெடுத்தார். ஓராண்டு காலத்திற்குள், செஞ்சிக் கோட்டை, வேலூர், தஞ்சாவூர், திருவண்ணாமலை, ஆரணி மற்றும் கர்நாடகத்தின் ஒரு சிறு பகுதியையும் கைப்பற்றினார். இவ்வாறு தென்னிந்தியாவில் முஸ்லீம்களின் ஆதிக்கத்திற்கு முடிவு கட்டினார். மொத்தத்தில் இவரது ஆட்சியின் கீழ் சுமார் அறுபது இலட்சரூபாய் வருட வருமானமுள்ள சுமார் நூறு கோட்டைகள் இருந்தன. மேற்கு கடற்கரை ஓரமான பகுதிகளும், மைசூர் ராஜ்யத்தின் பெரும் பகுதியும், துங்கபத்திரை மாவட்டத்திலுள்ள பெல்லாரியும், மராட்டிய

ராஜ்யத்திற்குள் அமைந்திருந்தன. வடக்கே கோல்காப்பூர் வரை சிவாஜி ராஜ்யம் பரவியிருந்தது.

இவ்வாறு மாவீரன் சிவாஜி, சமயக் கொள்கையாலும், சமூகக் கோட்பாடுகளினாலும் தூண்டப்பட்டு ஒரு பெரிய இந்து ராஜ்யத்தை அமைத்துப் புகழ்ப் பெற்றார். அவருடைய போர் முறையும், அரசின் தந்திரங்களும், பகைவர்களாலும் பாராட்டப்பட்டது. 'மலைஎலி' என்று சிவாஜியை அழைத்த ஔரங்கசீப் 'எலி' கடித்தாலும் மரணம் ஏற்படலாம்' என்றார். சிறந்த போர் வீரராக இருந்ததுடன் மட்டுமல்லாமல், தனது ராஜ்யத்தில் சிறப்பான ஆட்சி முறையை அமைத்து பெரும் புகழ் பெற்றார் சிவாஜி. 1680–ஆம் ஆண்டு தனது 53–ஆம் வயதில் காலமானார் சிவாஜி.

## சிவாஜியின் ஆட்சி முறை

வரலாற்றில் தோன்றிய நெப்போலியன் போன்ற சிறந்த வீரர்களில் ஒருவராகத் திகழ்பவர் சிவாஜி. போர் வீரராக மட்டுமல்லாமல் திறமையாக ஆட்சி செய்பவராகவும் இருந்தார். பிறப்பிலேயே தலைமைத் தன்மை வாய்ந்தவராகக் காணப்பட்டார். நாட்டின் படைக்கும் அலுவலகளுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதில் அவரது திறமை வெளியாயிற்று. எப்போதும் சிரித்த முகம் படைத்தவர். மக்களின் குணநலன்களை நிதானித்துக் கண்டுபிடிக்கும் திறமையுடையவர். அவருடைய நிர்வாகமும், நாட்டின் ஆட்சி முறையும் இணையற்ற திறனுடன் விளங்கின.

### 1. மைய ஆட்சி முறை (அரசர்) :

சிவாஜியின் அரசு, முகலாய அரசைப் போன்றே முடியரசாகும். எல்லா அதிகாரங்களும் சத்ரபதியிடமே குவிந்திருந்தன. ஆட்சி முறைத் தலைவராக விளங்கியவர் அரசே! மத்தய காலத்தில் ஐரோப்பாவில் ஆட்சி புரிந்த எதேட்சதிகாரிகளை போலவே விளங்கினார். ஆனால், சிவாஜி மக்களின் நலநன மனதிற்கொண்டு செயலாற்றிய ஒளியுட்டும் வல்லரசராக விளங்கினார். அவர் நினைத்ததெல்லாம் சட்டமாகியது. எல்லா நிர்வாகத் துறைகளையும் தாமே நேரில் கண்காணித்தார். நாடு முழுவதும் செயல்படவேண்டிய அரசியல் கொள்கைகளை அவரே வகுத்தார்.

**அஸ்டபிரதான் :**

நாட்டின் ஆட்சி முறையை செவ்வனே நடத்துவதற்காக எட்டு அமைச்சர்களைக் கொண்ட அஸ்டபிரதானம் (Ashta Pradhan) என்ற சபை சிவாஜிக்கு உதவியது. இது இப்போது இருக்கும் கேபினட் போன்று அதிகாரமுடையதாக இல்லை. அரசருக்கு அறிவுரை கூறுவதாகவே காணப்பட்டது. எட்டு அமைச்சர்கட்கும் தனித்தனியாக இலாக்காக்கள் கொடுக்கப்பட்டு அவைகளின் செயல்பாடுகள் பற்றி அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது. அஸ்டபிரதான அமைச்சர்களின் பணிகள் பின்வருமாறு :

**a) முதலமைச்சர் பீஷ்வா (Peshwa) :**

இவருக்கு முக்கிய பிரதானி என்று பெயர். இதர அமைச்சர்களின் அலுவல்களை மேற்பார்வையிடுவதாகவும், அரசர் தலைநகரில் இல்லாத காலங்களில் நிர்வாகத்தை நடத்துவதும் இவரது முக்கிய அலுவல்கள். அசரருடைய முத்திரைக்குக் கீழாக, இவரது பெயர் முத்திரையை வைத்தே அரசர் தலைநகரில் இல்லாத காலங்களில் தபால்கள் அனுப்பப்பட்டது. இவை தவிர நாட்டின் பொது நலன்களையும், அவற்றின் முன்னேற்றத்திற்குரிய வழிகளையும் கவனித்துக்கொள்ள வேண்டும். அமாத்தியர் என்ற நிதி மந்திரி இருந்தார். நாட்டின் வரவு செலவு கணக்குகளைச் சரிபார்த்து கையொப்பம் இடவேண்டியது அமர்த்தியரின் பணியாகும்.

**c) மந்திரி (Mantri) :**

அரசரின் அன்றாட நடவடிக்கைகளையும், அலுவல்களையும் குறித்து வைத்து அப்புத்தகங்களைப் பாதுகாப்பவர் இவரே. அரச சபை நிகழ்ச்சிகளையும் குறித்துவைத்துக் கொள்ள வேண்டும். அரசர் நடத்தும் விருந்துகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து குறிப்பிட்ட நபர்களை அழைத்தனுப்ப வேண்டும். ஏதேனும் சதித் திட்டங்கள் நடந்தாலும் கண்டுபிடித்து அரசரைக் காப்பாற்றவேண்டியது மந்திரியின் கடமையாகும்.

**d) கண்காணிப்பாளர் : சச்சீவா (Sachiva)**

இவர் உள்நாட்டு காரியதரிசி என்று அழைக்கப்படுவார். அரசரின் தபால் போக்குவரத்துகளை இவர் கவனித்து வந்தார். தபால எழுதுவதும், அதில் அரசரின் முத்திரையிடுவதும் இவரது முக்கியப் பணியாகும்.

**e) அயல்நாட்டுச் செயலாளர் : சுமந்த் (Sumant)**

அயல்நாட்டுக் காரியங்களிலும் போர், சமாதான உடன்படிக்கைகள் செய்வதிலும், அரசுக்கு ஆலோசனை கூறுவதும் இவரது பணி. அயல் நாட்டுத் தூதுவர்களை வரவேற்பதும், அவர்களை உபசரிப்பதும், அதிக பலம் வாய்ந்த செயல்களை அறிந்து, அவற்றிற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதும் இவருடைய வேலை.

**f) தலைமைத் தளபதி : சேனாபதி (Senapathi)**

படைக்கு ஆள் எடுத்தல், படையைப் பலப் பிரிவுகளாக அமைத்தல், படை ஒழுக்கத்தையும் பயிற்சியையும் கண்காணித்தல், யுத்த காலங்களில் படையை போர்முனைக்கு அனுப்புதல் ஆகியவை இவரது பணியாகும்.

**g) பண்டிட்ராவ் தானாதியக்ஷா : (Panditrao and Danadhyaksha)**

இவர்கள் சமயத் துறை தலைவர்களாக விளங்கினார்கள். மத சம்பந்தமான விழாக்களுக்கு நாட்குறித்தல், மன்னர் கொடுக்கும் தர்மத்தை பிராமணர்கட்கு பகிர்ந்து கொடுத்தல், மக்களின் சன்மார்க்க வாழ்க்கையைப் பரிசீலித்தல், சமய சன்மார்க்கக் கொள்கைகளை மீறியவர்களுக்குத் தண்டனை கொடுத்தல் ஆகிய அலுவல்களைச் செய்தனர். மத நிறுவனங்கள், படித்த அலுவலர்களின் சொத்துக்கள் ஆகியவற்றைக் கண்காணிப்பது இவர்களது கடமையாகும். மதக் கொள்கை அடிப்படையில் உண்டாகும் வழக்குகளையும் இவர்களே தீர்க்க வேண்டும்.

**h) தலைமை நீதிபதி நியாயதீட்சா (Niyayadhstsa) :**

சிவில் கிரிமினல் வழக்குகளையும், சொத்து தகராறுகளையும் விசாதித்துத் தீர்ப்புக் கூறுவது இவரது கடமையாகும்.

இவர்களைத் தவிர வேறு சில பதவிகளிலும் சில அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு இலாக்காவிற்குப் பொறுப்புள்ளவராக இருந்தார். இந்த அஸ்டபிரதானம் சிவாஜி முடிசூட்டிக் கொண்டபோது திடீரென அமைக்கப்பட்டதல்ல. மராட்டிய அதிகாரம் வளரவளர ஆரம்பம் முதலே படிப்படியாகப் பலப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வளர்ந்து வந்தன. நியாய தீட்சாகவும் பண்டிட்ராவும் தவிர, இதர எல்லா அமைச்சர்கட்கும் படையை நடத்தி போருக்குச் செல்லவேண்டிய பொறுப்பும் இருந்தது.

**2. மாகாண அமைப்பு :**

சிவாஜி தனது ராஜ்யத்தை மூன்று மாகாணமாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு அரச பிரதிநிதியையும் நியமித்தார். மாநிலங்களை பர்கானாக்களாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒரு அரச பிரதிநிதியை நியமித்தார். மாநிலங்களைப் பர்கானாக்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஆட்சியரின் ஆதிக்கத்தின் கீழ் வைத்தார். அவருடைய பொறுப்பில் ஒரு படையும் இருந்தது. ஒவ்வொரு பர்கானாவும் பல டார்பு(Tarb)களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. கிராமம்தான் ஆட்சி முறையின் சிறிய பிரிவு ஆகும்.

**3. உழவுத் தொழில் வளர்ச்சி :**

பெரும்பாலும் மலைப்பாங்கான நாட்டில் உழவர்களை ஊக்குவிப்பதற்காக சிவாஜி பல திட்டங்களைத் தீட்டினார். பயிரிடப்படும் நிலங்கள் முழுவதிலும் பயிரிடுமாறு செய்தார். நிலச்சுவான்தார்கட்கு கால்நடைகள் வாங்கவும், விதைகள் வாங்கவும் அரச கருவூலத்திலிருந்து கடனாகப் பணம் கொடுக்கப்பட்டுப் பின் பல தவணைகளில் அது வசூலிக்கப்பட்டது. இதனால் விவசாயம் விருத்தியடைந்தது.

**4. நிலவரி வசூல் முறை :**

விவசாயிகளிடமிருந்து நேரடியாக அதிகாரிகள் மூலமாக வரி வசூலிக்கும் ரயத்துவாரி முறை பின்பற்றப்பட்டது. நிலங்கள் கவனமாக அளக்கப்பட்ட பின்னரே வரியின் அளவு நிர்ணயிக்கப்பட்டது. உத்தேச விளைச்சலில் முப்பது சதவிகிதம் அரசாங்க வரியாக வசூலிக்கப்பட்டது. இந்த வரி விகிதம் பின்னர் 40 சதவிகிதமாக உயர்ந்தது. வரியைப் பணமாகவோ தானியமாகவோ கொடுக்கலாம்.

**5. இதர வரிகள் :**

மராட்டிய நாடு மலைப்பாங்கான நாடு. எனவே நிலவரியின் மூலம் நாட்டிற்குக் கிடைத்த வருவாய், மொத்த வருமானத்தில் பத்து சதவிகிதம்தான். எனவே சௌத், சர்தேஷ்முகி என்ற இரண்டு வரிகளை சிவாஜி வசூலித்தார். சௌத் என்ற வரி சிவாஜியினால் வெல்லப்பட்டு அவருக்கு அடங்கியிருந்த பகுதிகளின் நில வருமானத்தில் நான்கில் ஒரு பகுதியாக வசூலிக்கப்பட்ட வரியே ஆகும். வெல்லப்பட்ட பகுதிகளிலிருந்து வசூலிக்கப்பட்ட கப்பம் போன்றது இது. Dr.சென் என்பவர், 'இது

நெருக்கடி காலத்தில் படைத் தலைவரால் வசூலிக்கப்படும் வரி' என்கிறார். அதாவது ஒரு திருடன் தன்னைத் தாக்காதபடி அவனுக்கு விலை கொடுப்பது போலாகும் இந்த வரி. இந்த வரி அரசு படைத்துறைக்குப் போய் சேர்ந்தது.

சந்தேஷ்முகி என்பது 'பரம்பரையாக வந்த மராட்டியர்களின் முக்கியத் தலைவர் (சர்தேஷ்முக்) என்ற முறையில் சிவாஜியின் ஆட்சிமுறைக்கு உட்பட்ட பகுதியில் மேலும் பத்து சதவிகித வரி வசூலிக்கப்படும் வரியாகும்'. இந்த வரிகளால் மராட்டியர்கள் தங்கள் ஆட்சிக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலும் உட்பட்ட பகுதிகளிலும் தங்கள் செல்வாக்கை நிலைப்படுத்தி, நாளடைவில் அப்பாற்பட்ட பகுதிகளை தங்கள் ராஜ்யத்துடன் இணைத்துக் கொள்ள வசதி ஏற்பட்டது.

**6. படை அமைப்பு :**

சிறந்த போர்வீரரான சிவாஜியின் படையமைப்பு போற்றக்கூடிய ஒன்றாகும். படைமுறையில் பல புதிய சீர்திருத்தங்களைப் புகுத்தி ஒரு நிலையான வலிமை மிக்க படையை ஏற்படுத்தினார். தனது படையை கட்டுப்பாட்டுடன் நடத்த சிறந்த ஒழுக்கம் உள்ளனவாகத் திகழச் செய்தார். இந்துக்களும் இஸ்லாமியர்களும் யாதொரு பாகுபாடும் இல்லாமல் சிவாஜியின் நேரடிப் பார்வையிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சம்பளம் ரொக்கப் பணமாகக் கொடுக்கப்பட்டது. வீரதீரச் செயல்கள் புரிந்த படை வீரர்களுக்கு சன்மானம் வழங்கப்பட்டது. சம்பளத்தற்கு பதிலாக போர்வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட வருவாய் மானியத்திற்கு 'சரஞ்சமி முறை' (Saranjami System) என்று பெயர். கொள்ளைப் பொருட்களில் வீரர்கட்கும் பங்கு கொடுக்கப்பட்டது. பெண்களோ, அடிமைகளோ, நடன மாதுக்களோ படையுடன் செல்லக்கூடாது. ஒரு படைவீரன் இக்கட்டளையை மீறினால் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. போரில் பசுக்களையும், பெண்டிர்களையும், பிராமணர்களையும் கவர்ந்து வரக்கூடாது. பர்கிகிரி, முல்க்கிரி (Bargigiri, Mulkgiri) போன்ற கொரில்லாப் போர் முறைகள் படையினரால் கையாளப்பட்டன. சிவாஜியின் படையில் கீழ்க்கண்ட ஐந்து பிரிவுகள் இருந்தன.

a) **காலாட்படை** : இதில் அதிகாரிகள் தரவாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். நாயக் (Nayak) என்பவர் பத்து காலாட்படை வீரர்களின் தலைவர் ஆவார். ஐந்து நாயக்குகளுக்கு ஒரு ஹவில்தாரும் (Havildar) இரண்டு அல்லது மூன்று ஹவில்தார்களுக்கு ஒரு ஜுமல்தாரும், பத்து ஜுமல்தார்களுக்கு ஒரு ஹசாரி (Hasari)யும் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். ஏழு ஹசாரிகள் ஒரு 'சர்இநாபத்' (Sar-i-Nahat) என்பவர் தலைமையில் செயல்பட்டனர். மொத்தத்தில் ஒரு இலட்சம் பேர் கொண்ட காலாட்படை இருந்தது.

b) **குதிரைப்படை** : குதிரைப்படையில் 25 குதிரை வீரர்களைக் கொண்ட பகுதியே குறைந்த அளவு ஆகும். அதற்குத் தலைவராக ஒரு ஹவில்தாரும், ஐந்து ஹவில்தாருக்கு மேலாக ஒரு ஜுமல்தாரும், பத்து ஜுமல்தாருக்கு ஒரு ஹசாரியும் இருந்தனர். சுமார் 1,50,000 குதிரைப்படை வீரர்கள் இருந்தனர்.

c) **கடற்படை** : மராட்டிய நாடு கடற்கரைப் பகுதியில் அமைந்திருந்ததால், கப்பற்படையின் முக்கியத்துவத்தை சிவாஜி நன்கு உணர்ந்திருந்தார். கொலாபா (Coloba) என்ற இடத்தில் 200 கப்பல்களைக் கொண்ட ஒரு பெருங் கப்பற்படையை அமைத்தார். இப்படை முதலில் முகலாயக் கடற்படை கப்பல்களை கொள்ளையிட பயன்பட்டது. இந்தக் கப்பற்படை வளர்ந்து நாளடையில் ஐரோப்பியப் படைகளுடன் போர் புரிய பயன்பட்டது.

d) **யானைப்படை, ஒட்டகப்படை** : சிவாஜியின் படையில் 1220 யானைகளைக் கொண்ட ஓர் படையும், 1500 ஒட்டகங்கள் கொண்ட படையும் இருந்தன. ஆனால், இவை சுமை தூக்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. மலைப் பிரதேசங்களில் யானைப்படை அதிகமாகப் பயன்பட்டது.

e) **பீரங்கிப்படை** : சிவாஜியின் பீரங்கிப் படையும் பலம் வாய்ந்ததாக இருந்தது. அப்படைக்கான ஆயுதங்கள் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து கிடைத்தன. ''சிவாஜி எண்பது பீரங்கிகளையும், பொருத்துப் பூட்டுகளுக்கு வேண்டிய காரியத்தையும், சூரத்திலிருந்த பிரெஞ்சு இயக்குநரிடம் வாங்கினார்'' என்று ஓர்ம்(Orme) என்ற ஆசிரியர் கூறுகிறார்.

**7. கோட்டைகளின் முக்கியத்துவம் :**

சிவாஜியின் காலத்தில் மலைக்கோட்டைகள் நாட்டின் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகித்தன. சிவாஜியின் கோட்டைகள் மிகச் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்ட படைகளால் பாதுகாக்கப்பட்டு வந்தன. சிவாஜி 240 கோட்டைகளை வைத்திருந்தார். அவற்றின் ராய்கார் கோட்டை மிகச் சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு கோட்டையிலும் போதுமான நீர்வசதி, உணவு வசதி, படைப் பொருட்கள் இருந்தன. ஒவ்வொரு கோட்டையும் ஹல்தார், சப்னி, சரினாபாத் என்ற சம மதிப்புள்ள மூன்று அதிகாரிகளின் கண்காணிப்பில் வைக்கப்பட்டன. கோட்டையிலுள்ள படையினரிடம் சதித் திட்டங்கள் ஏற்பட்டுவிடாதபடி ஒவ்வொரு கோட்டைப் படியிலும் பல ஜாதிப் பிரிவினரும் இருக்க சிவாஜி வழி செய்திருந்தார்.

**8. நீதி வழங்குதல் :**

சிவாஜியின் ராஜ்யத்தல் பண்டைக்கால முறையிலேயே பஞ்சாயத்துக்கள் மூலம் நீதி வழங்கப்பட்டது. குற்றவாளிகளை வதைத்து வழக்குகளின் உண்மையை அறிந்தனர். கிரிமினல் வழக்குகள் பட்டேல் (Patel) என்ற அதிகாரியினால் விசாரிக்கப்பட்டது. இவர் தற்போதைய வட்டாட்சியர் அந்தஸ்து உடையவர். தலைமை நீதிபதி மேல்முறையீட்டு வழக்குகளை விசாரித்து தீர்ப்பு அளித்தார். ஹஜீர் மஜ்ஸில் (Hazir Majjis) என்ற சபைதான் நீதி வழங்குவதில் எல்லா அதிகாரமும் கொண்ட மன்றமாகும்.

**9. சிவாஜியின் சமயக் கொள்கை :**

சிவாஜி புராதனக் கொள்கையைக் கொண்ட ஓர் தீவிர இந்துவாக இருந்த போதிலும் மத சகிப்புத் தன்மையுடையவராகவே விளங்கினார். இஸ்லாமியர்கள் விரும்பியபடி கடவுளை வணங்க அனுமதித்தார். மசூதிகட்கு மானியம் அளித்தார். எவ்விதப் பாகுபாடும் இன்றி படைகளிலும், அரசாங்க உயர் பதவிகளிலும் முஸ்லீம்கள் சேர்க்கப்பட்டனர். ‘‘அந்தக் காலத்தில் உபத்திரவமடைந்த இந்துக்களுக்கு ஓர் நம்பிக்கையூட்டும் நட்சத்திரமாகவும், அவர்கள் நெற்றியிலிட்ட திலகத்தின் பாதுகாவலராகவும், பிராமணருடைய பாதுகாவலராகவும் சிவாஜி விளங்கினார்’’ என்று J.N.சர்க்கார் என்ற ஆசிரியர் கூறுகிறார்.

**சிவாஜியைப் பற்றிய மதிப்பீடு :**

சிவாஜி ஒரு சிறந்த வீரராகவும் தளபதியாகவும் திகழ்ந்தார். கொரிலாப் போர் முறையிலும், மலைக்கோட்டைகளைக் கட்டுவதிலும் நல்ல திறமை பெற்றிருந்தார். ஔரங்கசீப்பின் பிற்போக்குக் கொள்கையை எதிர்த்தே மராட்டியர்களின் நாட்டை உருவாக்கினார். மராட்டிய நாட்டை உருவாக்குகின்றபொழுது குறுக்கிட்ட தடைகளையெல்லாம் உடைத்தெறிந்தார். இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்று, அவரை சமய வெறியராக மாற்றவில்லை. சிவாஜியின் சொந்த வாழ்க்கை மிகவும் தூய்மையானது. அக்கால அரசர்களிடம் காணப்பட்ட ஒழுக்கக்கோட்டை சிவாஜியிடம் பாாக்க முடியாது. கற்றோரை ஆதரிக்கும் பண்பு மிகுதியாக இருந்தது.

சிவாஜி தன் மக்களின் நன்மைக்காக கடினமாக உழைத்தார். சிவாஜி திறமை மிக்க பரந்த மனப்பான்மையுள்ள நல்ல நிர்வாகி. சுக்ராச்சாரியார், கௌடில்யர் போன்றவர்களின் வடமொழி நிர்வாக நூல்களில் காணப்பட்ட கொள்கைகளின்படி அரசாண்டார். ஆனால் போர்களினால் காணப்பட்ட கொள்கைகளின்படி வென்று தமது நாட்டின் எல்லையைப் பெரிதாக்கினாரே தவிர, நிலையான மராட்டிய ராஜ்யத்தை ஏற்படுத்தினார் என்று கூறிவிட முடியாது. இவருடைய காலத்தில் போரினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். தனது 53–ஆவது வயதில் வியாதிப்பட்டு, 1680 ஏப்ரல் 4–ஆம் தேதி தனது பிறந்த நாள் அன்றே இறந்தார்.